

கண்களுக்குள்
பொத்தி வைப்பேன்...
சக்தி திருமலை

# கண்ணுக்குள் பொத்தி வைப்பேன்...

சக்தி திருமலை

அறிவு நிலையம் பதிப்பகம்
எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email: arivunilayampathippagam@yahoo.com
செல்: 9003145746

## நூல் குறிப்பு

| | |
|---|---|
| ◆ நூல் தலைப்பு | கண்ணுக்குள் பொத்தி வைப்பேன்... |
| ◆ ஆசிரியர் | சக்தி திருமலை |
| ◆ மொழி | தமிழ் |
| ◆ முதற் பதிப்பு | ஜூன், 2015 |
| ◆ உரிமை | ஆசிரியருக்கு |
| ◆ தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| ◆ நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| ◆ அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| ◆ மொத்தப் பக்கங்கள் | 476 |
| ◆ பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 210.00**

வெளியிடுவோர் **அறிவு நிலையம் பதிப்பகம்**
எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல்: 8939427929

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

# கண்ணுக்குள் பொத்தி வைப்பேன்...

## 1

சூரியவிலாஸ். காலை 6 மணி.

'ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குகா சரணம் சரணம்
குருகுகா சரணம் குருபரா சரணம்
சரணமடைந்திட்டேன் கந்தா சரணம்...!'

என்று சூலமங்கலம் சகோதரிகளின் கந்த குரு கவசம் அந்த சூரியவிலாஸையே தெய்விக அதிர்வுடன் நிறைத்துக் கொண்டிருந்தது....

பூஜையறையில் ரேணுகா பயபக்தியுடன் தன் வழக்கமான வெள்ளிக்கிழமை பூஜையில் மனதார ஈடுபட்டிருந்தார்.

அறுபதைத் தொடும் வயது என்றாலும் முகத்தில் சிறிதளவும் தொய்வில்லாமல் களை இன்னும் மிச்ச மிருந்தது.

தினமும் மஞ்சள் பூசும் முகம்... நான் உன்னை விட்டு நீங்க மாட்டேன் என்று அடம் பிடித்து நிரந்தர மங்களகரமான முகத்தை அவருக்கு அளித்திருந்தது.

இவர் சாதாரணமான பெண்மணி. ஆனால் இவர் இல்லாமல் சாதாரண வேலையும் அவ்வீட்டில் நடக்காது.

இவர் பள்ளி வாசலைக் கூட மிதிக்கவில்லை. ஆனால் இவர் இல்லாவிட்டால் இவர் மகன்களும் மகளும் பள்ளியைக் கூடத் தாண்டியிருக்க முடியாது.

இவர் கணவர் இவரை மதிக்க மாட்டார்தான். ஆனால் இவர் கணவரை யாராவது மதிக்கவில்லை என்றால் பகைத்துக் கொள்ளத் தயங்க மாட்டார்.

சுருக்கமாகச் சொல்லப் போனால், நம் வீட்டில் நம்முடனே இருக்கும் தன் கடமைகளைச் சரிவரச் செய்து, அதற்குச் சிறிதளவும் பாராட்டு வாங்காமல், கொள்ளும் பருக்கை சோற்றையும் தன் பிள்ளைகளின் நினைப்பில் உண்டு, கணவரின் ஆசாபாசங்களைத் தீர்த்து அவரின் வம்சத்தைத் தழைக்க வைத்து, சமயத்தில் அவரின் கோபத்திற்கு வடிகாலாக மாறும் நம் தாய் என்று அழைக்கப்படும் சாதாரண சம்சார யோகி தான் அவர். இந்தச் சாதாரணமானவரைப் பற்றி எதற்கு வீண்பேச்சு... வாருங்கள், அடுத்தவர்களைப் பார்க்கலாம்.

குமரகுரு தன் காலைக்கடன்களை முடித்துவிட்டு வரவேற்பறையில் காலெடுத்து வைக்க... மேஜையில் அமர்ந்திருந்த நுரை பொங்கும் காபியும் தினசரியும்... ரேணுகாவின் கைங்கர்யத்தால் தயாராக இருக்க, அதைச் சிறிதளவும் பொருட்படுத்தாமல் ஏதோ அவரின் எஜமானர் போல் கால் மேல் காலிட்டுத் தன் தினசரியை விரித்துத் தன் பணியை ஆரம்பிக்க...

ரேணுகா பூஜையை முடிக்கும் தருவாயில் இருக்க... காபியை ஒரு மடக்கு அருந்திய அவர், "டி...ரேணு... இன்னைக்கு என் ஒண்ணுவிட்ட தம்பி மகளுக்குக் கல்யாணம். ஞாபகம் இருக்கோண்ணோ... சீக்கிரம் கிளம்பு... வழக்கம் போல் ஆடி அசைஞ்சு கிளம்பினியோ நான் பாட்டுக்கு உன்னை விட்டுண்டு போய்க்கிட்டே இருப்பேன். கல்யாணம் ஆகி இத்தனை வருஷத்தில் ஒரு தடவையாச்சும் உன்னைச் சீக்கிரம் கிளப்பி... ஒரு கல்யாணம் காட்சிக்கு இழுத்துண்டு போயிடலாம்னு தான் பார்க்கிறேன். ம்ஹூம் முடியாது போல..." என்று குடிக்கும் ஒவ்வொரு மடக்கிற்கும் அவர் ரேணுகாவை ஒரு குத்து குத்திக்கொண்டுதான் குடித்து முடித்தார்.

அவர் குடித்து முடிக்கவும்... டாண் என்று பூஜையை முடித்துக் கொண்டு வந்த ரேணுகா கோப்பையை வாங்கிக் கொண்டு, "கொடுங்கோண்ணா... அப்படியே வைச்சா எறும்பு வந்திரும்..." என்று வாங்கிக் கொண்டு புன்னகையுடன், "என்னண்ணா பண்றது... ஊருப்பட்ட வேலை இருக்கோண்ணோ... முடிச்சிண்டு வர வேண் டாமா?

“இப்போ ஹரிஷ் வேற வளர்ந்துட்டான். ஒரு வயசு ஆயிடுத்து. வைஜுக்கும் வேலைக்குப் போகணும். போதாக்குறைக்கு ராதாவுக்கு வேற மூணு மாசக் கைகுழந்தை ப்ரீத்தி... திவ்யாவை வேற ஆபீசுக்குக் கிளப்பணும். வேலை முடிச்சு நிமிருவதுக்குள்ளே பகவானேன்னு இருக்கு...” என்று தன் பக்க நியாயத்தை மென்மையாக எடுத்துரைத்த அந்த அடிமையின் குரல்... குமரகுருவிற்கு எரிச்சலாக இருந்தது போலும்.

“போதும்... போதும்... ஆரம்பிச்சுடுவியே! சரி, வேலை எல்லாம் முடி. ஒரு பத்து மணிக்கா போகலாம். ஒன்பது பத்தரை தானே முகூர்த்தம். சீக்கிரமே போனா என் தம்பிக்கு இளப்பமாப் போயிடும். இழுத்தடிஞ்சிண்டு போய்த் தலையைக் காமிச்சிண்டு வருவோம்,” என்று கூறி விட்டு, தினசரியில் மூழ்க... ரேணுகாவிற்கு உள்ளூர ஒரு நிம்மதி.

“ஹப்பா... இன்னும் நாலு மணி நேரம் இருக்கோண்ணா... கடகடன்னு எல்லா வேலையும் முடிச்சுடலாம். நல்ல வேளை. சீக்கிரமே முகூர்த்தத்தை வைச்சுக் கொண்டாடாமல் இருந்தாளே...” என்று கூறி விட்டு, தன் வழக்கமான வேலையில் மூழ்கினார்.

அப்போதுதான் தன் கைபேசி மணி அடிப்பதைப் பார்த்தவர், “அச்சச்சோ... முழிச்சிட்டாளா?” என்று கைபேசியை மணியை நிறுத்துமாறு பட்டன்களால் பணித்து விட்டு, மாடிக்கு ஓடினார் ரேணுகா.

பின் சூரியவிலாஸின் ஒவ்வொரு உறுப்பினரும் அந்தக் காலை நேரத்தை வரவேற்க ஆரம்பித்தனர்.

குமரகுரு - ரேணுகா தம்பதியருக்குத் திருமணமாகி முப்பது ஆண்டுகளை நெருங்கிக் கொண்டு இருந்தனர். குமரகுருவிற்கு வயது 65. குடிசை மாற்று வாரியத்தில் வேலை செய்து ஓய்வும் பெற்று விட்டார்.

ரேணுகா பள்ளிக்கூடம் செல்லாதவர். ஆனால் அனுபவம் அவருக்கு இரண்டு பிஎச்.டிகளை வாங்கிக் கொடுத்திருந்தது. ஆனால் அதை உணராத குமர குருவிற்குத் தன் மனைவியின் அசட்டுத்தனத்தைப் பார்த்து சற்றே இளப்பம்தான். சற்று மேல் நடுத்தர வர்க்கம் என்பார்களே... அதுபோல் வசதியான குடும்பம்தான் அவருடையது.

மூத்த மகன் ரவி - மென்பொருள் பொறியாளர். மனைவி வைஜெயந்தி. மகன் - ஹரிஷ். ஒரு வயது. இளைய மகன் சேகர் - ஆர்க்கிடெக்ட். மனைவி ராதா. மகள் - ப்ரீத்தி.

மூத்த மகள் திவ்யா. வயது 24. இவளும் மென்பொருள் பொறியாளர்தான். திருமண வயது ஆகி விட்டதால் தீவிர மாப்பிள்ளை வேட்டை நடந்து வருகிறது.

இவர்களைத் தவிர, வேறு யாரும் தன் வீட்டில் இருப்பதாகக் குமரகுரு உணரவில்லை.

காலை சிற்றுண்டியின்போது...

குமரகுரு நடுநாயகமாக அமர்ந்திருக்க, மீதம் உள்ளவர்கள் அவரின் கிளை நாற்காலிகளில் அமர்ந் திருக்க... தன் பேரன் ஹரிஷை கொஞ்சிக் கொண்டே

சிற்றுண்டியை அருந்தியவர்... ரவியிடம், "ரவி... திவ்யாவுக்கு அந்த பெங்களூர் வரன் விசாரிக்கச் சொல்லியிருந்தேனே. அவாளைப் பத்தி விசாரிச்சியா?" என்று கேட்க,

அவன், "ஆமாப்பா... விசாரிச்சுப் பார்த்தேன். ஆனா அவா நம்ம அளவுக்கு வசதி இல்லப்பா. நம்ம தகுதிக்கு ஏற்பத்தானே பார்க்கணும்..." என்று கூற,

குமரகுரு, "அப்படியா! அதான் நானும் விசாரிச்சிண்டு சொல்லலாம்னு இருந்தேன். சரி, ஜாதகம் பொருத்தமில்லைன்னு சொல்லிடுவோம். வசதி பத்தி எல்லாம் பேச்செடுக்க வேண்டாம்."

ரவி, "ஆமாம்பா... நானும் நம்மளவா மேட்ரிமோனியில் ஏதாவது ஆட் கொடுத்திருக்காளானு பார்த்துண்டு தான் இருக்கேன். கூடிய சீக்கிரம் தகைஞ்சிடும்ப்பா..." என்று கூற,

திவ்யா, "என்னப்பா, இவ்ளோ சீக்கிரம்...? நான் கொஞ்சம் ஃப்ரீயா இருக்கேனே..." என்று கூற,

குமரகுரு ரவியைப் பார்க்க... அவன் வாயெடுப்பதற்குள் முந்திய சேகர், "வாயை மூடு... நோக்கு என்ன தெரியும்... பொண்ணா லட்சணமா காட்டுற பையனுக்கு கழுத்தை நீட்டு... எதிர்த்துப் பேசிண்டு இருக்காதே..." என்று அதட்ட,

திவ்யாவிற்குக் கோபத்திலும் இயலாமையிலும் மூக்குவிடைக்க... அவள், "அம்மா... பாரும்மா! அண்ணா என்ன சொல்றான்னு...?" என்று தன் தாயிடம் முறையிட,

ஆனால் ரேணுகாவோ மாடியறையையே பார்த்துக் கொண்டு இருக்க...

திவ்யா எரிச்சலாக, "அம்மா... நோக்கு வேணும்னா மாடியறையிலேயே போய் உட்கார்ந்துக்கோ... எதுக்கு இப்படி அலைபாய்ஞ்சிண்டு இருக்கே...?" என்று கத்த,

அவள் மூத்த அண்ணி வைஜு, "நீ வேற திவ்யா... பாதி நாள் அதைத்தான் அம்மா செஞ்சிண்டு இருக்கா... இப்போ முழு நேரமும் போய் உட்கார்ந்திடப் போறா..." என்று கிண்டலாகக் கூற,

இளைய அண்ணி ராதாவும், "ஆமா அக்கா... கரெக்டா சொன்னே..." என்று ஆமோதித்தாள்.

ரவி, "வைஜு... சும்மா இருக்க மாட்டே. அம்மா ஏதோ பண்ணிண்டு போறா... நம்மகிட்ட வந்து ஏதாவது சொல்றாளா...? கல்யாணம் ஆகி இத்தனை நாளில் ஒரு நாளைக்காவது அந்த ரூமை நீ எட்டிப் பார்த்திருக்கியா...? இல்ல, நானாவது அடிக்கடி போறேனா? நமக்கென்ன வந்தது... ஏதாவது செய்துட்டுப் போறாங்கன்னு விடு..." என்று கூற,

சேகர், "ஆமாமா... இனிமே என்னதான் செய்ய முடியும்...? தலையெழுத்து இப்படின்னு தெரிஞ்ச பிறகு..." என்று அலட்சியமாகக் கூற,

குமரகுருவோ, "இப்போ எதுக்கு வீண் பேச்சு, சாப்பிடுற நேரத்தில்... எல்லாம் வேலைக்குப் போற வழியைப் பாருங்கோ..." என்று கர்ஜித்துவிட்டு ஹரிஷிற்கு

ஊட்டிவிட்டுத் தானும் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு ரேணுகாவைப் பார்க்க...

அவரோ இவ்வளவு நேரம் பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் காதில் வாங்காதவர் போல், மாடியறையையே பார்த்துக் கொண்டிருக்க...

குமரகுரு எரிச்சலுடன், "டி... ரேணு... நோட்டம் விட்டது போதும். கல்யாணத்துக்குக் கிளம்புற வழியைப் பாரு. எப்போதான் நீ திருந்தப் போறியோ, நேக்கு தெரியலை...? சரி, பொங்கல் சாப்பிட்டு மந்தமா இருக்கு. டிகிரி காப்பி போட்டு எடுத்துண்டு வாடி..." என்றபடி தட்டிலேயே கை கழுவிவிட்டுச் செல்ல,

ரேணுகா சிறு புன்னகையுடன் அவரின் எச்சில் தட்டையும் மற்றவரின் எச்சில் தட்டையும் எடுத்துக் கொண்டு சிங்க்கில் போட்டு விட்டு, "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுன்னா..." என்று மனதுக்குள் கூறிவிட்டு, தன் கணவரின் கட்டளைப்படி அவருக்கு இரண்டாவது டோஸ்க்காக காப்பியைக் கொடுத்து விட்டு, ஒரு சிறிய தட்டில் மூன்று இட்லியும், நிறையச் சாம்பாரும், அளவான சட்னியும் வடையையும் வைத்துக் கொண்டு மாடியறை சென்றார்.

இதுதான் இவர்கள் குடும்பம். ரொம்ப ஒட்டுதலும் கிடையாது. விலகலும் கிடையாது. நம் நாட்டில் பெரும்பான்மைக் குடும்பங்களுள் இந்தக் குடும்பமும் ஒன்று. ஒருவித 'சிம்பயாடிக் ரிலேஷன்ஷிப்' என்பார்க்ளே, அதுபோல் தான். இந்தக் குடும்பத்துக்கு நல்லது

செய்தால், அதுவும் தனக்கு நல்லது செய்யும் என்பது மாதிரியான உறவுகளைக் கொண்டதுதான் இந்த சூரியவிலாஸ்... கூட்டினாலும் பெருக்கினாலும் அனை வரும் தத்தமக்குள் தனித்தனிதான்!

குமரகுருவின் ஒன்றுவிட்ட தம்பி முரளியின் பெண் சுவாதியின் திருமணத்திற்குப் புறப்பட்டுச் சென்ற தம்பதி யினர் அவர்கள் நினைத்தவாறே சரியாக கன்னிகா தானத்திற்குச் சென்று விட்டிருந்தனர்.

அவர்களை அன்பாக வரவேற்று மரியாதையுடன் அமர வைத்தனர் மணப்பெண் வீட்டார்.

பின்னர் கன்னிகாதானம் முடிய, செல்வி பெண்ணும் திருமதியாகப் பட்டமளிக்கப்பட, வாயார வாழ்த்தியவர்கள் வயிறார உண்ண வைத்துப் பின் மொய் வைக்கும் சடங்கு நடந்தது. அதற்குப் பெரிய வரிசையே நிற்க, பெண்ணின் தகப்பனார் முரளி குமரரிடம், "அண்ணா! பொறுமையா இருங்கோ... இப்போ மத்தவா எல்லாரும் கொடுத்திண்டு போகட்டும் அப்புறமா நம்மளவா எல்லாரும் கொடுத்திண்டு ஒரு ஃபேமிலி ஃபோட்டோ எடுத்துக்கலாம்ணா... கஷ்டமா இருந்தா மன்னிச்சுக் கோங்கோ...." என்று அன்பாக வேண்ட,

அவரைக் கெத்தாகப் பார்த்த குமரர், "இதில் என்ன இருக்கு முரளி... சீக்கிரம் முடிச்சா நன்னாயிருக்கும்... எங்களுக்கும் வேலை இருக்கோ, இல்லையோ...?" என்று, தன் பிடியை விடாமல் கூற,

முரளி சற்றே முகம் கன்றினாலும், "சரிண்ணா... இன்னும் அரை மணியில் முடிஞ்சிடும்..." என்றபடி பின்வாங்கினார்.

பின் குமரர் தன் உறவினர்களுடன் இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டின் கவலைக்கிடமான பிரச்சனைகளை ஏதோ தானே தீர்த்து வைப்பவர் போல் விவாதத்தில் ஈடுபட,

ரேணுகாவோ எதிலும் கலந்து கொள்ளாமல் தன் வீட்டு மாடியறையில் குடியிருக்கும் ஒரு உயிரினத்தைப் பற்றிய நினைப்பிலேயே உழல... அவரைக் கலைப்பவர் போல் அவரை அழைத்தது, அவர் வெகு காலம் முன்பு பரீட்சயப்பட்ட ஒரு குரல்...

"அக்கா... நன்னா இருக்கியா...?" என்று மென்மையாக அந்தக் குரல் அவரை அழைக்க,

பதறியபடி நிமிர்ந்த அவர், அந்தக் குரலுக்குச் சொந்தமானவரைப் பார்த்ததும் இன்னும் அதிர்ந்தார். காரணம், அவர் பல வருடங்கள் முன்பு, கூட வேலை பார்க்கும் பெண்ணைக் காதலித்து ஊரை விட்டே சென்ற அவரின் தம்பி குணசேகர்...

அவரைக் கண்டதும், "கு... குணா நீயா...?" என்று ரேணுகா பதற,

அந்த வார்த்தையில் கரைந்து போன குணா, "பரவாயில்லையேக்கா... இன்னும் ஞாபகம் வைச்சிண்டு இருக்கியே... நீயெல்லாம் என்னை மறந்துட்டியோன்னு

நினைச்சேன்க்கா...” என்று தளுதளுப்பான குரலில் கூற, ரேணுகாவின் கண்களின் கண்ணீரின் சரம்.

“ஏன்டா... நான்தான் இந்தக் கேள்வியைக் கேட்கணும். அப்பா அம்மாவை எதிர்த்ததோட உன் அத்திம்பேரையும் எதிர்த்துப் போய் கல்யாணம் செய்துண்டே... அம்மா அப்பா இறந்தப்போ கூட வரலை யேடா நீ... அவ்வளவு கல்நெஞ்சமாடா நோக்கு... அக்கா அக்கான்னு சேலைத் தலைப்பை விடாமல் சுத்துவியேடா... அந்தப் பாசம் எல்லாம் எங்கே போயிடுத்து. இப்படி மாறிட்டியேடா, நீ...” என்று ஆதங் கத்துடன் கூற,

கண்ணீர் வழிய அவரைப் பார்த்த குணா, “ஏன்க்கா... அப்பா, அம்மா இறந்தது தெரிஞ்சா வராமல் இருந்திருப்பேனாக்கா... எனக்கு யாருமே சொல்லலை யேக்கா... என்னைப் பாவியாக்கிட்டாளேக்கா... எல்லாரும் சேர்ந்து... நான் என்னக்கா தப்பு செய்தேன்? பிடிச்ச பொண்ணைக் கல்யாணம் செய்துண்டது தப்பா...?” என்று கத்த,

ரேணுகா, “என்னடா... சொல்றே? உன் அத்திம்பேர் தானே யாரும் வேண்டாம்... நானே ஃபோன் போட்டுச் சொல்றேன்னு சொல்லிண்டு போனார். அப்போ உன்னாண்ட சொல்லவே இல்லையா?”

என்று பதற்றத்துடன் வினவ, குணாவும் ‘இல்லை’ என்பது போல் தலையாட்டினார்.

அப்போதுதான் ரேணுகாவிற்குத் தன் கணவர் செய்த தவறு தெரிந்தது. வேண்டுமென்றே அவன் வரக்கூடாது என்றே செய்திருக்கிறார் என்று. ஆனாலும் தன் கணவரை விட்டுக் கொடுக்க மனமில்லாமல், "அவர் சொல்லலைன்னா என்னடா? கடைசிக் காலத்தில் அப்பா, அம்மா பொறுப்பை ஏத்துக்க வேண்டியது உன் பொறுப்போண்ணோ. அதைச் செஞ்சியா நீ...? நீ பாட்டில் போய் அமெரிக்காவுல உட்கார்ந்துண்டே. நீ செஞ்சது உனக்கே நியாயமா, சொல்லு?" என்று அவரைக் குற்றம் சாட்ட,

மெலிதாகச் சிரித்த குணா, "ஆமாக்கா. நான் செஞ்சது தப்புதான். துரோகம்தான். நான் அதை நியாயப்படுத்தலை. ஆனா 30 வருஷம் கழிச்சு உங்களை எல்லாம் பார்க்க வந்திருக்கேனே... அது ஏன்னு கேட்க மாட்டியாக்கா..? எனக்கு உங்க சொந்தம் வேணும்க்கா. உங்க எல்லாரையும் வேணும். அடிச்சாலும் பரவா யில்லை. எனக்கு நீங்க வேணும். அதுக்காகத்தான் வந்திருக்கேன்..." என்று கூற,

ரேணுகா தளர்ந்து போய் அவரின் தலையைக் கோதி, "ஏன்டா குணா... என்ன ஆச்சு? நீ இப்படி தளர்ந்து போய் நான் பார்த்ததில்லையேடா, கண்ணா! என்ன ஆச்சு...? உன் ஆம்படையாள் எங்கே...? குழந்தேள் இருக்கா?" என்று கேட்க,

குணாவின் கண்களில் இருந்து இன்னும் பெரிதாகக் கண்ணீர் துளிகள் விழ ஆரம்பித்தன. ரேணுகாவின்

தலைக்கோதலில் சற்றே ஆசுவாசம் அடைந்த அவர், "வைதேகி போய் 20 வருஷமாச்சுக்கா..." என்று கூற,

ரேணுகா அந்த வார்த்தையில் அவர் முகத்தில் தெரிந்த வேதனையில் அதிர்ந்து போனார்.

கும்பகோணம் தான் அவர்களின் சொந்த ஊர்.

குணா ரேணுகாவை விட ஐந்து வயது இளையவர். இதனால் ரொம்பப் பாசம் குணாவிடத்தில் ரேணுகாவிற்கு உண்டு. திருமணமாகிச் செல்லவிருந்த அவரை விடாமல், குணா படுத்திய பாட்டை இன்றும் அவரால் மறக்க முடியாது. மேலும் குமரரையும் அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. குணாவிற்குச் சிறு வயதிலிருந்தே தன் சுகம் தான் முக்கியம். அதற்காக அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான்.

தன்னுடைய இருபத்தைந்தாவது வயதில் உடன் வேலை செய்யும் வைதேகியுடன் காதல் ஏற்பட்டு விட, அதை வீட்டில் கூறியவன், தன் பெற்றோரின் மறுப்பைக் கூட பொறுத்துக் கொண்டான். ஆனால் அதற்காகக் குமரர் போட்ட கட்டளையைத்தான் அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

"ரேணு... உன் தம்பியைத் தறிகெட்டு அலையாம கட்டுப்படுத்திண்டு இருக்கச் சொல்லு. போயும் போயும் பொண்ணெடுத்த லட்சணத்தைப் பாருன்னு என்னை நாலு பேர் பேசப் போறா... நான் எல்லாம் கல்யாணத்தன்னிக்கு ராத்திரி தான் உன் முகத்தையே பார்த்தேனாக்கும்... மாசம்

1500 சம்பளம். நானே கட்டுக்கோப்பா இருந்தேன்... உன் தம்பிக்குப் பிசாத்து 700 ரூபாய் சம்பளத்தில் காதல் கேட்குதோ... சும்மா இருக்கச் சொல்லுடி...

“ஏதோ ஒரு வத்தலோ தொத்தலோ பிடிச்சுச் சீக்கிரம் கல்யாணத்தை நடத்தி வைச்சாத்தான் இவனுக்குப் புத்தி வரும்...” என்று எள்ளி நகையாட,

அப்போதைக்கு அமுக்கமாக இருந்த குணா... சடுதியில் ஒரு முடிவெடுத்து அதைச் செயல்படுத்தவும் செய்தான்.

அன்று இரவே வைதேகியுடன் ஊரை விட்டு ஓடிச் சென்று, மெட்ராஸில் திருமணத்தைச் செய்து கொண்டு வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார். விஷயம் அறிந்து தாட்பூட் என்று குதித்த குமரகுரு, இனி குணாவிடம் எந்தப் பேச்சு வார்த்தையும் இருக்கக் கூடாது என்று தன் மாமனார், மாமியாரையும் மிரட்டி வைத்தார். அதன்படி யாருமே அவரைப் பார்க்கச் செல்லவில்லை.

இளமையின் சூட்டில் குணாவும் வீம்பாகவே இருந்து, பின் தன் வேலையில் முன்னேறி அமெரிக்கா விற்குச் சென்றார்.

ஒரு வகையில், அவர் செய்ததும் தவறுதான். என்னதான் திருமணம் பிடிக்கவில்லை என்றாலும் குடும்பத்தைப் பற்றி கவலைப்படாமல், தன் சுகம்தான் முக்கியம் என்று சென்று விட்டு, இவ்வளவு வருடங்கள் கழித்து இப்போது வந்து அழுதால்... செய்த தவறு இல்லை என்றாகிவிடுமோ...?

மனதில் பல கேள்விகள் கிளம்பி வந்தாலும், தன் தம்பியின் நிலையை எண்ணி அதிர்ந்துதான் போனார் ரேணுகா.

"என்ன குணா, சொல்றே? வைதேகி..." என்று முடிக்கக் கூட முடியாமல் திணற,

குணா தலை குனிந்து கொண்டு, "ஆமாக்கா... கல்யாணமாகி 10 வருஷத்திலயே அவ ஹெப்பாட்டைடிஸ் - பி வந்து இறந்துட்டாக்கா... ரெண்டு பிள்ளைகள். என்னால் முடியலைக்கா...

படக்கூடாத கஷ்டமெல்லாம் பட்டுட்டேன். வீட்டில் பொம்மனாட்டி இல்லாத ஆம்படையான்... எவ்ளோ கஷ்டப்படுவான்னு என் நிலைமை பார்த்து கத்துக்க லாம்க்கா..." என்று கூறிக் குலுங்கிக் குலுங்கி அழ...

ரேணு, "குணா... என்னடா என்னல்லாமோ பேத்துறே! நேக்கு ஒண்ணுமே புரியலையே..." என்று அவரும் அழ ஆரம்பிக்க,

அங்கே அவர்களின் பாசக் கூடலைத் தடுப்பதற் கென்றே வந்தவர் போல் வந்து சேர்ந்த குமரர், "என்ன... அக்காவும் தம்பியும் பாசத்தைப் பிழி பிழியென்று பிழியிறேளா? என்ன நடக்குது இங்கே?" என்று கத்த ஆரம்பிக்க,

எந்த ரோஷத்தின் காரணமாகக் குணா தன் அக்காவை, அத்தானை அவமானப்படுத்தி விட்டுச் சென்றானோ, அந்த ரோஷமெல்லாம் போக... தான்

விஷமாக வெறுக்கும் தன் அக்காவின் கணவரின் கால்களில் விழுந்து, "அத்திம்பேர்... என்னை மன்னிப் பேளா? நேக்கு ஒரு குடும்பம் வேணும்... எனக்கு நீங்க, அக்கா, உங்க குழந்தேள் எல்லார் கூடவும் சொச்ச காலத்தைக் கழிக்கணும், அத்திம்பேர்... மன்னிப்பேளா அத்திம்பேர்..." என்று அவர் காலைப் பிடித்துக் கொண்டு கதற,

ஏதேதோ திட்ட வாயெடுத்த குமரகுரு கூட, அவரின் கெஞ்சலில் சற்றே தணிந்து ஒரு வெற்றிப் பார்வை பார்த்தார்.

ஆம். 30 வருடங்களுக்கு முன் தன்னை மதிக் காமல் தன் பேச்சைக் கேட்காமல் சென்ற, தன் மைத்துனனை வெற்றி கொண்டு விட்ட பெருமிதம் அவரிடம் வந்தது.

அது அவரின் ஈகோவின் வெறியைச் சற்றே தணித்தது. தவறு செய்த அனைவரும் ஒரு நாள் அதை உணர்ந்து, மற்றவரின் முன்பு மண்டியிட்டு மன்னிப்பு கேட்கத்தான் வேண்டும். அதை குணா செய்து விட்டார்.

ஆனால் குமரர் தான் தவறிழைத்த, இழைத்துக் கொண்டிருக்கும் ஒருவரிடம் அதைச் செய்வாரா?

## 2

கண்களை மூடிக்கொண்டு, தலையைப் பிடித்தவாறு அமர்ந்திருந்த குணாவைக் கண்ணெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந் தனர், குமரகுருவும் ரேணுகாவும்...

திருமணம், மற்றச் சடங்கு அனைத்தும் முடிந்து வீட்டிற்குக் குணாவை அழைத்து வந்திருந்தனர். அது மதிய நேரமாதலால் வீட்டில் அரவம் ஏதுமின்றி அமைதி யாய் இருக்க...

அவர்களின் மனக்குமுறலைக் கொட்ட அந்த நேரம் தோதாக அமைந்தது.

குமரகுரு தன் வழக்கமான சாய்வு நாற்காலியில் வசதியாக அமர்ந்து கொண்டு, தன் கம்பீரத்தை நிலைநாட்டினார்.

தன் மைத்துனரின் மேல் எவ்வளவுதான் கோபம் இருந்தாலும்... தன் கணவர் ஏன் அவனை ஏற்றுக் கொண்டார் என்பது ரேணுகாவிற்கு இன்னும் புரியாத புதிர்தான்.

ஏனெனில் அவருக்குத் தெரிந்தவரை அவர் கணவர் யாரையும் இவ்வளவு விரைவாகக் கெஞ்சியவுடன் மன்னிப்பதில்லை. ஆனாலும் தன் சந்தேகத்திற்குத் தீனி போட, இது சரியான நேரமல்ல என்பதை உணர்ந்தவர்... குணாவிடம் தன் கவனத்தைப் பதித்தார்.

ரேணுகா குணாவின் தோளை ஆறுதலாய்த் தட்டி, "உனக்கு ஏதோ பிரச்சனைன்னு தெரியுறது, குணா. அது என்னவென்று சொன்னால் தானே எங்களால் உதவ முடியும். நோக்கு... எதுவாயிருந்தாலும் சொல்லு, குணா...! நோக்கு, என்னதான் பிரச்சனை...?" என்று கேட்க,

குணா சட்டென்று நிமிர்ந்து தன் தமக்கையை உணர்ச்சி மிகுந்த கண்களுடன் நோக்கி,

"நான் தோத்துட்டேன்க்கா... என்னால் நீங்க இல்லாம இருக்க முடியலை. எந்தச் சொந்தமும் வேண்டாம். நான், என் குடும்பம் போதும்னு நினைச்சதுக்குக் கடவுள் என் இளைய மகன் மூலமா தண்டனை கொடுத்துட்டான்க்கா..." என்று கூற,

ரேணுகா, "என்னடா, என்னென்னவோ பேத்துறே... நேக்கு படபடன்னு வர்றதுடா... குழந்தைக்கு ஏதோ நோய் ஏதாவது...?" என்று தன் வெகுளிக் குணம் அப்பட்டமாகத் தலை தூக்கியபடி வினவியவரை விரக்தியுடன் பார்த்த குணாவின் முகத்தில் சிரிப்புப் பூ பூத்தது.

"நீதான் எவ்ளோ வெகுளியா இருக்கேக்கா... உன்னை மாதிரிப் பிறக்க புண்ணியம் பண்ணிண்டு வந்திருக்கணும். பகவான் உனக்குக் குழந்தையாவே இருன்னு பாக்கியம் தந்து அனுப்பியிருக்கான் போல..." என்று கூற, இப்போது குணாவின் விரக்திச் சிரிப்பு ரேணுகாவின் முகத்தில் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டது.

சிரித்த ரேணுகா, "இது பாக்கியம் இல்லடா குணா... ஒரு வகையில் சாபம்!" என்று கூற,

இப்போது குமரர் ரேணுகாவை நோக்கித் தன் தீப் பார்வையை வீச, அடங்கிப் போன அவர்... "சரி, விடுறா... நான் என்ன கேட்டுண்டு இருக்கேன்... நீ என்ன உளறிண்டு இருக்கே. ஒழுங்கா நடந்ததை எல்லாம் சொல்லப் போறியா இல்லையா...?" என்று கேட்க,

குணாவின் முகத்தில் சிறு கன்றல் தோன்றியது. அது கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகி அவரின்

நினைவடுக்குகளில் இருந்து ஒவ்வொரு நிகழ்ச்சியாக வெளிவர ஆரம்பித்தது.

தன் காதல் மனைவியான வைதேகியை மணந்து, திருமண வாழ்க்கையில் சந்தோஷமாகவே அடியெடுத்து வைத்த குணசேகரைத் துன்பத்தின் விழுதுகள் பத்து ஆண்டுகள் வரை தீண்டவே இல்லை என்றுதான் கூறவேண்டும். அவ்வளவு மகிழ்ச்சியாகத் தான் குடும்பம் நடத்தினார்.

அப்படிக் கூறுவதை விட, சந்தோஷம் ஒன்றையே குறிக்கோளாக வைத்துத் தன் வாழ்வை ஆரம்பித்தார் என்று கூறுவதுதான் சரியாக இருக்கும்.

வைதேகியிடம், "நீ நம்மளவாளே இருந்தாலும் வசதியில்லைன்னு சேர விடாமல் தடுத்தவா முன்னாடி நாம ஷேமமா வாழ்ந்து காட்டணும், வைதேகி... புரியரதா? இன்னையில இருந்து உழைப்பு மட்டும்தான் நம்ம நோக்கமாக இருக்கணும். அதுக்கு உன்னோட உதவியும் வேணும், வைதேகிம்மா!" என்று காதலுடன் கடமையும் கலந்து கேட்ட கணவனைப் பெருமிதமாகத் தான் அன்று வைதேகி நினைத்தார்.

ஆனாலும் அவரின் இந்தப் பணம் சேர்க்கும் வெறியே வைதேகியின் உயிரைக் காவு வாங்கும் என்று அவர் கனவில் கூட எதிர்பார்க்கவில்லை. திருமணமாகிப் பத்து வருடங்களில், ஒன்பது வயதிலும்... ஏழு வயதிலுமாக தங்கமான இரண்டு ஆண் பிள்ளைகள்... அடக்கமான, அழகான மனைவி இதெல்லாம் வாய்த்திருந்தும்

நிலைக்காத சாபமென்றே குணாவிற்குக் கூற வேண்டும். அப்போதுதான் ஒரு நல்ல கம்பெனியில் தான் படித்த மெக்கானிக்கலுக்கு ஏற்ற வேலை கிடைக்க... இரவு, பகல் பாராமல் உழைக்கத் துவங்கினார்.

அந்தக் கம்பெனி வளர வளர அவரும் வளர்ந்தார். வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

ஆறு மாத ட்ரெயினிங் முடிந்து அமெரிக்காவில் இருந்து வந்தவரை மரணப் படுக்கையில் கிடந்துதான் வரவேற்றார், வைதேகி.

"வைதேகி..." என்று அலறிக்கொண்டு குணா அவர் அருகில் ஓட... பிள்ளைகள் இருவரும் தங்கள் தந்தையைக் கட்டிக் கொண்டனர். நெடு நாட்களுக்கு பின் வேலைக்கார ஆயாவின் கண்காணிப்பில் இருந்து விடுபட்டு, தன் தந்தையின் அரவணைப்பிற்குள் வந்த மகிழ்ச்சியும், தன் தாய் தங்களை விட்டுப் போகப் போகிறார்.... ஏதோ ஒரு மெல்லிழை போல உள்ளுணர் வில் உணர்ந்து கொண்ட வருத்தத்தையும் கண்ணில் தேக்கி, குணாவை அவர்கள் பார்க்க...

"அய்யய்யோ... வைதேகி, இந்தப் பிள்ளைகளை வைச்சிண்டு நான் என்ன செய்வேன்? என்னம்மா ஆச்சு உனக்கு? டாக்டர் ஏதேதோ புரியாமல் பேசுறாரே... வைதேகி, என்னால் முடியலைடி. வந்துடுறி... வந்துடு...?" என்று உடைந்து போய் அழ,

வைதேகி இதழில் சிறு புன்னகையையும் கண்ணில் காதலையும் தேக்கிக் குணாவைப் பார்த்து, "என்னை

மன்னிச்சிடுங்கோண்ணா. மஞ்சள்காமாலையைக் கவனிக்காமல் அலட்சியமா விட்டுட்டேன். அதான்…” என்று தன் உருக்குலைந்த தேகத்தில் நடுக்கமும், முகத்தில் துக்கம் சேர குரலே வெளி வராமல் தளர்வாகப் பேச…

குணா, “நீ எதுக்குடி மன்னிப்பு கேட்குறே… நான்தான் பாவி. உன்னைக் கவனிக்காமல்… சே… பாவிடி…! நான் பணம், பணம்னு அலைஞ்சு என் உயிரை இழக்கப் போறேனே?” என்று அழுது புலம்ப…

அங்கே சில நேரத்திற்குத் தேம்பலையும் கண்ணீரையும் தவிர, எதன் தடயமும் இல்லை.

வைதேகி, “ஏண்ணா… குழந்தேளை நன்னாப் பார்த்துப்பேளா… நீ… நீங்கதான் கவனிச்சுக்கணும். நேக்கு வே… வேற எதுவும் வேண்டான்னா. குழந்தேள் ஷேமமா இருந்தால் போதும். அவாளைப் பெரியாளாக ஆக்கணுன்னா… பெ.. பெரியவனை இஞ்சினியர் ஆக்கணும் சி…சின்னவனை டாக்டர் ஆக்கணும்…” என்ற வாக்கியத்தை முடிக்க முடியாமல் திணற,

அவரின் தொய்வடைந்த விரல்களைப் பிடித்துக் கொண்ட குணா, “வேண்டாம் வைதேகி. இப்படி எல்லாம் பேசாதே… நீ குணமாயிடுவே… நேக்கு அந்தப் பகவான் மேல நம்பிக்கை இருக்கு…” என்று தளுதளுப்பாகக் கூற,

வைதேகியோ பதில் கூறாமல் மெலிதாகச் சிரித்தபடி அமைதியானார்.

அப்படிச் சிரித்த வைதேகி நிறைய நாட்கள் இந்தப் பூமியில் கழிக்கவில்லை... அடுத்த ஒரு வாரத்திற்குள் அவர் தன் பூலோக வாழ்வை முடித்துக் கொண்டு பூவுலகில் குடியேற... குணாவும் குழந்தைகளாலும் அடித்துக் கொண்டு அழத்தான் முடிந்ததே தவிர, வேறு எதுவும் செய்ய இயலவில்லை.

அதைக் கூறி முடிக்கும் முன்... என்னதான் கட்டுப்படுத்தினாலும் கண்ணீர் அவரின் இமைக்கரையைத் தாண்டி கன்னத்தில் இறங்குவதை அவரால் தடுக்க இயலவில்லை.

“நான் நிஜமாவே ரொம்ப துக்கிரிதான்க்கா... இல்லன்னா, சுயநலம்தான் பெரிசுன்னு உங்களை எதிர்த்துண்டு போயிருப்பேனா? இப்படிப் பொண்டாட்டியை பறிகொடுத்துண்டு அனாமத்தா பரிதவிச்சிண்டு இருப்பேனா...?” என்று கதற, தன் தம்பியின் துக்கம் அவரையும் ஆட்டுவிக்க...

ரேணுகா, “ஏன்டா... நோக்கு என்ன பைத்தியமா? அப்போவே இந்த விஷயத்தை எல்லாம் சொல்லி யிருந்தால் இவ்வளவு காலம் பிரிஞ்சு நின்னிருக்க வேண்டாமோ இல்லையோ? ஏன்டா, இப்படிச் செஞ்சே,..?” என்று ஆற்றாமையில் அவர் கடிந்து கொள்ள,

அந்தக் கரிசனம் குணாவின் அடிமனதில் சிறிதளவு இனிப்பைத் தூவ...

ரேணுகாவைப் பாசமாகப் பார்த்த குணா, “அதான் சொன்னேனேக்கா... என் சுயநலம்... ஒரு ஆணவம்....

நம்மால தனியா நிற்க முடியாதா? குடும்பம் நடத்த முடியாதான்னு? அதான்க்கா, ஒரேயடியா பிள்ளைகளைக் கூட்டிண்டு அமெரிக்கா போனேன். எங்கே வைதேகியை இழந்த மாதிரி அவாளையும் இழந்துடக் கூடாதுன்னு கண்ணுக்கு மணியா இருந்து வளர்த்தேன். அவாளும் நல்லாத்தான் வளர்ந்தா...

"அவாள் கெட்டுப் போயிடக் கூடாதுன்னு கண்டிப்பா இருந்தாலும், அதே சமயம் குழந்தேள் ஆசைப்பட்டதை என் தலையை அடமானம் வைத்தாவது செய்து கொடுப்பேன். அப்படி வளர்த்தேன் அக்கா, அவா ரெண்டு பேரையும். ஆனா..." என்று கூறி விட்டுப் பேச முடியாமல் திணற...

இப்போது நடுவில் புகுந்த குமரர், "அதான் வாய் வரைக்கும் வந்துர்த்தே. சொல்லு... ஏதோ பெரிசா நடக்கப் போய்தான் நீ அலறியடிச்சிண்டு வந்திருக்கேனு தெரி யும்... சொல்லு..." என்று ஆணவமாகக் கூற,

ரேணுகாவிற்குச் சட்டென்று அதிர்ச்சி தோன்றி னாலும், அதை மறைத்துக் கொண்டு, "ஏண்ணா... அவனே நொந்து போய் வந்திருக்கான். அவனைப் போய்..." என்று தயக்கத்துடன் கூற,

அதற்குள் குணா, "விடுக்கா.. நம்ம அத்திம்பேர் தானே! அவர் பேசாமல் வேற யார் பேசுவார்? அவர் சொன்னது மாதிரி, ஒண்ணு நடக்கப் போய்தான் அக்கா... நான் ஓடி வந்திருக்கேன்.

பணம் காசு எதிர்பார்த்து இல்லை... நிம்மதியை எதிர்பார்த்து, உறவுகளை எதிர்பார்த்து... அது இல்லாமல் தனியாவே போராடிப் போராடி நான் நொடிஞ்சு போயிட்டேன்க்கா..." என்று கூற,

ரேணுகா, "என்னடா சொல்றே... நேக்கு படபடன்னு வர்றது... நீ இப்படி எல்லாம் பேசுறவன் இல்லையே... சின்னவனால பிரச்சனைன்னு சொன்னியே... என்ன பிரச்சனை சொல்லு?" என்று கூற,

குணா, "அவன் 25 வயசு வரை தங்கமாத்தான் இருந்தான், அக்கா! மூத்தவனை மாதிரிதான்... பரம சாது. அசாத்திய மூளை... அதான், அந்தச் சின்ன வயசிலயே அமெரிக்காவில் உள்ள பெரிய ஹாஸ்பிடலில் சர்ஜனா வேலை கிடைச்சது. ஆனா அந்த வேலையில் சேர்ந்ததும்தான் அவன் குணம் கொஞ்சம் கொஞ்சமா மாற ஆரம்பிச்சது... அப்படித்தான் ஒரு நாள்..." என்று கூறி விட்டுத் தன் மகனின் செயல்களை வார்த்தைகளால் வடிக்கத் துவங்கினார்.

**அ**ந்த ஒரு நாள் வழக்கமான காலை நேரம் வழக்கமில்லாத செய்தியால் அதகளப்படத் துவங்கியது.

அன்று காலை வழக்கத்திற்கு மாறாகத் தாமதமாக எழுந்து வந்த மகனை, "என்னடா... வர வர நீ ஹாஸ்பிடல் போகிற மாதிரியே இல்லையே... என்ன ஏதாவது லீவா?..." என்று சிறு சந்தேகத்துடன் கேட்க,

அவனோ அவரை ஒரு பார்வை பார்த்து விட்டு காபி மேக்கரில் இருந்து கொஞ்சம் காபியை ஊற்றிக் கொண்டு தினசரியை எடுத்தவாறே அமர்ந்தான்.

அவனிடம் இருந்து நெடு நேரமாகப் பதில் வராமல் போக,

"உன்னைத்தான் கேட்டுண்டு இருக்கேன்... நீ என்னடான்னா ஹாயா உட்கார்ந்துண்டு இருக்கே... ஹாஸ்பிடல் போகலையா?" என்று கடுமையைப் பூசிக்கொண்டு கேட்க,

அவன், "நான் வேலையை விட்டு மூணு மாசம் ஆச்சு, மிஸ்டர் குணா... ஆனாலும் நீங்க இவ்வளவு நல்லவரா இருக்கக்கூடாது..." என்று நக்கலாகக் கூற,

"என்னடா சொல்றே... வேலையை விட்டுட்டியா? யாரைக் கேட்டு வேலையை விட்டே...? ராஸ்கல்..." என்று குணா கையை ஓங்கி விட,

அவரின் கத்தலைக் கொஞ்சமும் மதிக்காமல் ஓங்கிய அவர் கையைத் தடுத்தபடி, "நான் சொல்றது இன்ஃபர்மேஷன் தான் டாட்... ஐ அம் நாட் சீக்கிங் யுவர் டாம் பெர்மிஷன்..." என்று அசால்டாகக் கூற,

குணா, "என்ன பேச்சு பேசறடா நீ... ஒரு அப்பாகிட்ட பேசற பேச்சா இது... உன்னை வளர்ந்த பிள்ளைன்னு... மரியாதை கொடுத்து கண்டிக்காமல் வளர்த்தது தப்பாப் போச்சு..." என்று கத்த,

அவனோ சற்றும் அசைந்து கொடுக்காமல், "ஓஹ்! கமான் டாட்... இப்போ என்ன செய்யப் போறே...? சின்ன வயசில் செஞ்சது மாதிரி பெல்ட்டை எடுத்து விளாசுவியா? நான் உன் ஜுகுலாரை பஞ்சர் பண்ண எவ்வளவு

நேரமாகும்?" என்று தன் கழுத்து நரம்பை அறுப்பதைப் பற்றி அவன் எந்தவித உணர்வும் இல்லாமல் கூற,

குணா கண்ணிமைக்கக் கூட மறந்து அதிர்ந்து நிற்க...

"டேய், அப்பாவையே கொலை... ஏய், என்னடா ஆச்சு உனக்கு...? மாத்திரை போட்டியா! மாத்திரை போட்டியா, சொல்லு...?" என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கிய அண்ணனைக் கேவலமாக ஒரு பார்வை பார்த்த அவன் கிண்டலாக...

"பாரேன், உனக்குக் கூட மூளை இருக்குடி... ஆமா, மாத்திரை போட்டேன். வெளியே சொல்லாதே பட்டு... நான் உனக்கு ஒரு நல்ல சுரிதார் வாங்கித் தரேன். சமர்த்தோண்ணோ..." என்றபடி தன் பாக்கெட்டில் இருந்து opioid narcotic வகையைச் சேர்ந்த மாத்திரை இரண்டை எடுத்துத் தன் போதையை ஏற்றிக் கொள்ள...

அவனை வெறியுடன் பார்த்த அவன்... "டேய், என்னையாடா பொம்பளை மாதிரி சுரிதார் வாங்கித் தரேனு சொல்றே..." என்று பளார் பளாரென்று அடிக்க...

அவனைத் தடுத்த குணா, "வேணாம்டா... வேணாம் விடு... இவன் ஏன் இப்படி ஆனான்... போதை மாத்திரை வேற... என்னதான்டா ஆச்சு...?" என்று கதற,

அவன், "எனக்குத் தெரியலைப்பா... தெரியலை... எல்லாத்தையும் வெறுத்த மாதிரி செய்யறான். மூணு மாசமா இப்படித்தான் இருக்கான்ப்பா..." என்று கூற,.

அதற்குள் இன்னொரு போதை மாத்திரை எடுத்துக் கொண்டவன், "என்னை அடிச்சிட்டே இல்லை. ஆனால் அதுக்காக உன்னைத் திருப்பி அடிக்க மாட்டேன். ஏன்னா... நான் பொண்ணுங்க கிட்ட என் சக்தியைக் காட்டுறதில்லை... வரட்டாடி!" என்று அதே சிரிப்புடன் கூறிவிட்டுச் சென்றவன் மீது கோபம் கொள்ள முடியாமல் இயலாமையுடன்தான் பார்த்தனர் இருவரும்.

சுத்தம்... குணசேகரின் கூடப்பிறந்த இரட்டை. ஒரு சிறு துணுக்கு அளவில் அழுக்கு இருந்தாலும் தன் வீட்டைப் பத்தாயிரம் தடவை சுத்தம் செய்து விட்டே நிமிருவார் அவர்.

என்னதான் அயல்நாட்டினர் முன்னேறிய நாகரிகத்தில் திளைத்து இருந்தாலும், அடிப்படை ஒழுக்கமாகத் தம் வேலையைத் தாமே செய்வதை தீர்க்கமாகக் கடைப்பிடிப்பர்.

அதையே குணாவும் தீவிரமாகக் கடைப்பிடிப்பார்... காலை எழுந்து குளிக்கும் போது சலவைக்குத் துணிகளை வாஷிங் மெஷினில் போட்டு எடுப்பது முதல் இரவு உணவு முடிந்ததும் தட்டுகளை டிஷ்வாஷிங்கில் போடுவது வரை அவரவர் வேலையை அவரவர் தான் செய்ய வேண்டும் என்ற கண்டிப்பு அவருக்கு...

மூத்த மகன் அவர் கட்டளையை எப்போதும் மீறியதில்லை. ஆனால் தன் இளைய மகனின் தற்போதைய போக்கு அவரை சற்றே தளர வைத்ததால்...

அவனிடம் கட்டளையிட்டு பிரயோஜனம் இல்லை என்று நினைத்தவர்... அவன் அறைக்குச் சென்று... அங்கே மலை போல் குவிக்கப்பட்டிருந்த அழுக்குத் துணிகளை மூக்கைப் பொத்தியவாறே எடுத்து வந்தார்.

அறை முழுதும் குப்பென்று ஒரு வாடை... அது என்னவென்று கூட அவர் அறியவில்லை.

ஆனால் ஆற்றாமையில்... 'சே... என்ன வாடை... ஒரு டாக்டரா இவன்? பன்னி மாதிரிச் சுத்தமில்லாமல்! நகக் கண்ணில் கூட அழுக்குப் படாமல் வைச்சிருப்பானே... என்னவாயிடுத்தோ இவனுக்கு...? பகவானே...!' என்று நினைத்தபடி, வாஷிங் மெஷினில் துணிகளை ஒரு உதறு உதற... ஏதோ ஒரு ஜீன்சில் இருந்து தெறித்து விழுந்த பாக்கெட் ஒன்று அவர் கவனத்தை ஈர்க்க... அதை எடுத்துப் பார்த்தவரின் கண்கள் சிவந்து போயின.

அப்பட்டமான கோபமும், வெறுப்பும் அருவெறுப்பும் அவர் முகத்தில் முண்டியடித்தது... காரணம், அந்த ஜீன்சில் இருந்து தவறி விழுந்தது... ஆண்களுக்கான பாதுகாப்புச் சாதனம் கொண்ட பாக்கெட்!

"Amy... it was a great evening... you are so hot. and..." என்று மன்மதப் பிரதாபங்களை அந்த ஏமியானவப்பட்டவளிடம் உரைத்தபடி வந்தவனைத் தீப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார் குணா.

"Oh stop fidgeting... I said I will be there... and we are on our way to the resort and have some hot f..."

என்று முடிக்கும் போதே அவன் கன்னத்தில் பளார் பளாரென்று அறைய ஆரம்பித்தார் குணா.

அப்போது தான் இரண்டு மணியளவில் ஊர் அரவம் எல்லாம் அடங்கியபின் வந்தவன், தன் தந்தையின் அறையில் சட்டென்று கீழே விழப் போய்ப் பின் சுதாரித்து, அவரைப் பார்த்து முறைக்க...

குணா, "என்னடா முறைக்கிறே... கிராதகா... உன்னை நான் இவ்ளோ பொறுக்கியாவாடா வளர்த்தேன்... ஏதோ ஒரு பொம்மனாட்டியாண்ட போய்... சே... ஏன்டா...?

"என் பிராணனை எடுக்கவே வந்து பொறந்தியா நேக்கு... இது என்னடா கர்மம்... சொல்லுடா, இது என்ன?..." என்று அவர் காலையில் எடுத்த பாக்கெட்டை எடுத்து அவன் முகத்திலேயே விசிறி அடிக்க...

அதுவரை வாங்கிய அறைகளுக்குச் சற்றும் பொருத்தமில்லாமல் வாய் விட்டுச் சிரித்த அவன்,

"டாட்... சும்மா ஜோக் பண்ணாதே... இது கூடத் தெரியாமலா நீ ரெண்டு பேரை பெத்துக்கிட்ட... ஓஹ்! தெரியாதுதான் போல... இது பத்தி தெரிஞ்சா ஒண்ணோட நிறுத்தியிருப்பியோ...?" என்று அந்தப் பாக்கெட்டைக் காண்பித்துக் கேட்க,

குணா மறுபடியும் அவனை ஆத்திரத்தில் அடிக்கக் கை ஓங்கி விட்டுப் பின் தன்னைத் தானே அடக்கிக் கொண்டு அவனிடம் வேண்டுதலாக,

"ஏன்டா... ஏன் இப்படிச் செய்றே... உன்னை நான் எப்படி வளர்த்தேன்... நீயும் நன்னாத்தானே இருந்தே.. இப்போ என்னடான்னா வேலையை விட்டுட்ட... போதை மருந்து எடுக்கிறே... ஏதோ பொம்மனாட்டியோட... சீ...! சொல்லவே நா கூசறுதடா... வேண்டாம்டா... உங்கண்ணனுக்குத் தெரிஞ்சாத் தாங்க மாட்டான்... ஏதோ என்னோட போகட்டும்... அதான் உன்னை நிப்பாட்டி கேட்டுண்டு இருக்கேன்...

"நாம என்னதான் இந்த நியூஜெர்ஸியில் இருந்தாலும் நம்மோட வேர் இந்தியாதான்டா... கும்பகோணம் தான்... ஆச்சாரத்திற்கும் கட்டுக்கோப்பிற்கும் பேர் போனது நம்ம குடும்பம்... இதெல்லாம் விட நீ ஒரு டாக்டர்... உன்னோட ஆரோக்கியத்தையே நீ கவனிக்கலைன்னா... வேற யார் உன்னை நம்புவாங்க... உன்கிட்ட வைத்தியத்துக்கு வருவாங்க...?

"நீ ஏதோ காரணமாத்தான் இதை எல்லாம் செய்றே. ஏன்...? உனக்கு என்ன பிரச்சனை...? அதைச் சொல்லு..." என்று கண்ணீருடன் கூற, அவரின் கண்ணீர் சற்றும் அவனை அசைக்காதவாறு நிமிர்ந்தவன்...

தன் சிரிப்பு மாறாமல், "டாட்... இப்போ நீ என்ன சொன்னாலும் என் காதைத் தாண்டி மூளைக்குப் போகாது... ஏன்னா, ஆக்டிவ் கீட்டமின் உள்ளே போயிருக்கு... அதனால என்னை எவ்ளோ தூரம் வெறுப்பேத்த முடியுமோ, அதெல்லாம் இப்போவே ஏத்திக்கோ... அதுக்கப்புறம் உன்னால் முடியாது...

அப்புறம் இன்னொரு விஷயம்... நான் டாக்டர் இல்லை... எனக்கு அந்தத் தொழிலும் பிடிக்கலை... இனிமே அதைப் பத்தி பேசறது வேஸ்ட்!" என்று கூற...

குணா, "டேய்... உன் அம்மாவோட ஆசைடா அது... அந்தத் தொழிலைப் போய்... ஏன்டா... ஏன் இப்படி...?" என்று அவன் சட்டையைப் பிடிக்க...

அவனோ, "அம்மாவுக்குப் பிடிச்சது... அம்மாவுக்குப் பிடிச்சது... அம்மாவுக்குப் பிடிச்சது... கடைசி வரை அம்மாவுக்குப் பிடிச்சதைத்தான் செய்யணுமா? எனக்குப் பிடிச்சதை நான் செய்யக் கூடாதா? இனிமே எனக்குப் பிடிச்சதைத்தான் நான் செய்வேன்... அந்தத் தொழில் எனக்கு வேண்டாம்..." என்று கூறி விட்டு உளற ஆரம்பிக்க... அப்போது தான் குணாவிற்கு இன்னொன்று உரைத்தது.

அவன் சட்டையை விட்டு விட்டு, "கு... குடிச்சிருக்கியா?" என்று மெலிதாகக் கேட்க...

அவனோ பதில் கூறாமல் சிரிக்க...

குணா இயலாமையுடன், "இந்தப் பழக்கம் வேறயா? ஏன்டா மாறவே மாட்டியா? நீ எப்போதான்டா மாறுவே... சொல்லு. எப்போதான் மாறுவே...? நான் செத்தால் மாறுவியா, சொல்லு!" என்று கூர்மையான பார்வை பார்த்தபடி கேட்க...

அவன் முகத்தில் சட்டென்று ஒரு சோகம் சூழ்ந்தது. அருகில் வந்து குணாவின் கையைப் பிடித்துக் கொண்டு,

"டாட்... என்னை மன்னிச்சிடுங்க டாட்... நான் சீக்கிரம் மாறிடுறேன்... இப்படி எல்லாம் பேசாதீங்க, டாட்..." என்று கெஞ்ச... குணாவின் முகத்தில் பிரகாசம் தோன்ற...

அதைக் கவனித்தவன் கலகலவெனச் சிரித்து, "சீக்கிரமே ஸ்காட்ச்சில் இருந்து வோட்காவுக்கு மாறிடுறேன், டாட்... ஸ்காட்ச்சில் கிக்கே இல்லை..." என்று கூற...

குணா அதிர்வுடன் அப்படியே அருகில் இருந்த சோபாவில் அமர்ந்து விட்டார்.

அவரைப் பார்த்து சற்றும் பதறாமல் மாடியில் இருந்த தன் அறைக்குச் சென்றவனைப் பார்த்த குணா,

"உன்னோடது... நாக்கா, இல்ல தேள் கொடுக்காடா... எப்படி... இப்படிச் சிரிச்சுண்டே மனசை அறுத்துத் துண்டாக்கிறே... இப்படி அடுத்தவங்களைப் பொம்மையாக்கி உன் இஷ்டத்துக்கு ஆட வைக்கிறதை எப்போ நிறுத்தப் போறே... நான் இப்படிப்பட்டவன் கிடையாதே?... எது உன்னை இப்படி மாத்திச்சு... இப்படி இரும்பு மனசா மாறிட்டியேடா?

"உன்னால் ஒருத்தரோட உணர்வுகளைப் புரிஞ்சுக்கவே முடியாதாடா... நீ என்ன Psychopath-ஆ மாறிட்டியா?" என்று கம்மிய குரலில் கேட்க...

அவனோ, தன் புன்னகை மாறாமல்... "ஒருத்தன் தனக்குப் பிடிச்சதைச் செய்தால் அதுக்குப் பேர் சைக்கோபேதிசம் என்றால்... நான் அதுவாகவே இருந்துட்டுப் போறேன்..." என்று கூறி விட்டுத் தன் அறைக்குள் புகுந்து கொள்ள...

குணாவோ, "நீ உனக்குப் பிடிச்சதை செய்றதா... உன்னை நீயே ஏமாத்திண்டு இருக்கே... கூடிய சீக்கிரம் அதுக்கு விடிவு காலம் வரும்..." என்று மனதுக்குள் கூறி விட்டு அப்போதைக்கு அமைதியானார்.

ஆனால் அவர் கூறிய விடிவு காலம் இரண்டு வருடங்களாக வரவில்லை... நாளாக நாளாக... அவனின் லீலைகள் அளவிற்கு மீறிப் போக, அவனைக் கேள்வி கேட்கவும் இயலாமல் அவரே திணறித்தான் போனார்.

எதையாவது கேட்டு, அவன் வீட்டை விட்டு வெளியே போய் விட்டால் என்ன செய்வது என்றும் பயந்தார்... அவன் வீட்டில் இருக்கும் வரைக்குமாவது ஓரளவிற்குக் கட்டுக்குள் வைக்கலாம். அதையும் மீறிப் போனால் அவனை மாற்றுவது மிகவும் கடினம் என்பதால் அவனைக் கண்டிக்கப் பயந்தார்.

மூத்தவனோ, அவன் இருக்கும் பக்கம் பார்க்கவே பயந்தான்... அந்த அளவிற்கு அவன் வார்த்தைகள் அவனை ஈட்டிகளாகக் குத்திக் கிழித்தன.

அவனும், தம்பிக்கு கடவுள் விட்ட வழி என்று விட்டு விட... இப்படி அனைவரும் கைவிட... அவனின் கை ஓங்கியது.

ஒரு கட்டத்தில் அவனின் ஆட்டம் அதிகரிக்க... குணாவோ பூஜையறைக்குள் சென்று, 'கந்தா... என் மகனைக் காப்பாத்துப்பா...! சுப்பையா... நீயே சரணம்னு ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை சொல்லிண்டு

தூங்குறேனே... இப்படி என்னைத் தவிக்க விடுறியே, நியாயமா? இப்படியே போனா என் மகனை இழந் துடுவேன் போலிருக்கே கார்த்திகேயா? எனக்கு நல்ல வழி காட்டுப்பா... நான் என் குடும்பத்துக்குச் செஞ்ச துரோகம்தான் என்னைச் சுத்துதா?

'நான் என்ன பரிகாரம் செய்ய? வேலா சொல் லுய்யா...?" என்று மனமுருகி வேண்ட,

அந்தச் சிவமைந்தனின் அருள் பாலித்தது போல், அறையின் மேஜை மேல் இருந்த ஒரு அட்டை கீழே விழுந்தது.

எப்போதும் பூஜையறையில் ஒரு சிறிய மேஜை போடப்பட்டிருக்கும்... அதில்தான் கல்யாணப் பத்திரிகைகள் மற்றும் மங்கலப் பொருட்கள் வைக்கப்படும்.

குணாதான் அதை எல்லாம் எடுத்து வைப்பார். அதே போல் முரளியின் மகளின் கல்யாண பத்திரிகையையும் எடுத்து வைத்திருந்தார். முரளியும் குணாவும் மெட்ராஸில் இருந்தபோது, ஒன்றாக வேலை செய்தவர்கள்... நெடு நாள் நட்பு... அவர் இங்கே வந்த பிறகும் அவர்கள் நட்பு விடாமல் தொடரவே, தன் மகளின் திருமணத்திற்குப் பத்திரிகை அனுப்பி வைத்திருந்தார்.

விழுந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தவரின் கண்களில் கண்ணீர்... "முருகா... என்னை இந்தக் கல்யாணத்துக்குப் போகச் சொல்றியா? நான் போறேன்... நீ எனக்கு என்ன வைச்சிருக்கேனு தெரியலை. ஆனா எனக்கு நம்பிக்கை இருக்கு... நான் போவேன்..." என்று

சடுதியில் முடிவெடுத்தவர்... அவ்வாறே இந்தத் திருமணத் திற்கு வந்திருந்தார்.

அனைத்தையும் கூறி முடித்தவர், "சத்தியமா எனக்கு முரளி அத்திம்பேரோட சொந்தம்னு தெரியாதுக்கா... உங்களை எல்லாம் பார்த்ததும் ஏதோ பசு கிட்ட வந்த கன்று மாதிரி அமைதியா இருக்குக்கா... இதுக்குத்தான் அவன் என்னை இங்கே அனுப்பி வைச்சான் போல... எனக்கு இதை விட வேற என்னக்கா வேணும்? ஏதோ என் மூத்தவனுக்காவது கல்யாணம் ஆகிப் பேரன், பேத்தின்னு இருக்கலாம்னு பார்த்தேன்... அவனும் தம்பிக்கு ஆனாதான் எனக்குக் கல்யாணம்னு சொல்றான்க்கா...

"அவனுக்கு யாரு பொண்ணு கொடுப்பா? அதெல்லாம் நடக்கிற காரியமா? மூத்தவன் மட்டும் கல்யாணம் செய்துண்டா எனக்கு அது போதும்... இளையவனுக்கு விதி விட்ட வழி..." என்று விரக்தியுடன் கூறி முடிக்க...

ரேணுகா, "அப்படி எல்லாம் சொல்லாதே குணா... அவன் இப்போ நம்ம ஆத்தோட வந்து போய் இருந்தான்னா கண்டிப்பா மாறிடுவான்... நீ மூத்தவனுக்குப் பொண்ணு பாரு... நான் பேசுறேன்," என்று கூற...

இப்போது தான் வாயைத் திறந்த குமரர், "மூத்தவன் பேர் என்ன?" என்று கேட்க...

குணா, "அவன் பேர் அபிநந்தன், அத்திம்பேர்... பெரிய கம்பெனியில் ஹெச்.ஆராக இருக்கான்... மாசம்

நம்ம நாட்டு மதிப்பில் 2.50 லட்சம் சம்பளம்... என்னை விடச் சம்பளம் ஜாஸ்தி... நானே ஒன்னரை லட்சம்தான் சம்பாதிக்கிறேன்..." என்று மகிழ்ச்சியாகக் கூறினாலும், சிறு பெருமை அவரையும் மீறி எட்டிப் பார்க்க...

ரேணுகாவும் அதைக் கேட்டு மகிழ... அடுத்து குமரர் கூறியதைக் கேட்டு இருவரும் அதிர்ச்சியுடன் ஆச்சரியப் பட்டனர்.

அவர் கூறியது இதுதான்... அதாவது, "உன் மூத்த மகனை என் பொண்ணு திவ்யாவுக்கு பேசலாம்னு நினைக்கிறேன்... நீ என்ன சொல்ற?" என்று சிரிப்புடன் கெத்தாகக் கேட்க...

குணா, "அத்திம்பேர்... என்ன சொல்றேள்... நான்... எனக்கு ஒண்ணும் புரியலை... நான் எப்படி?" என்று திணற...

குமரர், "நான் ஒண்ணும் தப்பா கேட்டுடலையே... உனக்கு இஷ்டம் இருந்தால் பேசலாம். இல்ல, வேண்டாம்..." என்று கூற...

குணா பதறி, "அதுக்கென்ன அத்திம்பேர், இப்படிக் கேட்டுட்டேள்... இது என் பாக்கியம்... அப்படியாச்சும் என் இளைய மகன் இங்கே வந்து போய் இருந்து அவனுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்குமே? இதில் எனக்குப் பூரணச் சம்மதம்... அபி நான் சொன்ன பேச்சை மீற மாட்டான்..." என்று கூற...

குமரர் ஏதோ புரிந்த சிரிப்புடன், "உன் இளைய மகன் பேர் என்ன?" என்று கேட்க...

குணா, "ரகுநந்தன்... அழகான பேர்தான்... ஸ்ரீராமபிரானோட பேரை வைச்சேன்... அவன் செய்றதை எல்லாம்... சொல்லவே முடியலை. ஆனால் அந்தப் பெயரையும் மாத்தி நானி என்று வைச்சுண்டு திரியறான்..." என்று அலுத்துக் கொள்ள...

ரேணுகா, "விடுறா... போகப் போகச் சரியாகிடும்... நம்மாத்துக்குச் சொந்தமாகப் போறானோ இல்லையோ?" என்று பூரிப்புடன் கேட்க, அவருக்கும் திவ்யாவின் திருமணப் பேச்சு மகிழ்ச்சிதான்.

என்னதான் நானியைப் பற்றி உறுத்தினாலும் அபி திவ்யாவை பார்த்துக் கொள்வான் என்பது அவனைப் பற்றி குணா கூறிய போதிலிருந்தே தெரிந்தது.

என்னதான் இருந்தாலும் தன் பாசத் தம்பியே சம்பந்தியாக மாறினால் அந்தத் தமக்கைக்கு கசக்குமா என்ன?

ஆனால் அடுத்தார் போல் ஒன்றைக் கூறி ரேணுகாவை ஒட்டுமொத்தமாகக் கீழே சரித்து, அவர் தலையில் கல்லைப் போட்டார் குமரர்.

காரணம், குமரர் சிறிது நேர யோசனைக்குப் பின், "உன் இளைய மகன் ரகுநந்தனை இளைய மகள் ஜானகிக்குப் பேசலாமா?" என்று கூறியதுதான்.

அதைக் கேட்டு ரேணுகா மனம் அதிர அவரைப் பார்க்க...

குணசேகரோ, "அத்திம்பேர்... என்ன பேசறேள்...?" என்று அலறினார்.

# 3

**நா**ன் கூறியதைக் கேட்டுக் கிட்டத்தட்ட அலறிய குணாவை ஏறிட்ட குமரகுருவின் கண்களில் தெரிந்தது, என்னவிதமான உணர்வு என்பதை யாராலுமே வரையறுக்க முடியவில்லை.

அந்த அளவிற்கு அவர் முகம் ஏதேதோ உணர்வுகளைத் தாங்கி இருந்தது... அதனால் பல நிமிடங்கள் அங்கே மௌனத்தைத் தவிர வேறு எந்த மொழியும் பேசப்படவில்லை.

ரேணுகாவோ, தன் உறைந்த நிலையை மாற்றவே இல்லை... அவரின் கண்கள் குமரகுருவின் மீதே நிலைகுத்தி இருக்க... குணாவும் அதை யோசனையுடனே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரால் அந்தத் தம்பதியரின் பரிபாஷைகளை அறிய இயலவில்லை... சும்மாவா... முப்பதாண்டு தாம்பத்யம் ஆயிற்றே...!

பின் முதல் ஆளாகத் தன் மௌனத்தைக் கலைத்த குமரகுரு, குணாவை நோக்கி வெற்றுப் பார்வையை வீச...

அதை கண்டு கொண்ட குணா, "சொல்லுங்கோ அத்திம்பேர்... ஏன் இந்த முடிவு எடுத்தேள்... நான் அவனைப் பெத்த தகப்பன்... நானே அவனைக் கழிசடைன்னு ஒதுக்கிண்டு இருக்கேன்... ஆனால் நீங்க... இப்படிப் பொண்ணைக் கட்டிக்கொடுக்குறேன்னு சொல்றீங்களே, அத்திம்பேர்..." என்று அனுதாபப்பட...

அவரோ, "இல்லை குணா... நான்... எனக்கு வேற வழி தெரியலை... என் பொண்ணு... என் பொண்ணு..." என்று அந்த ஆஜானுபாகு மனிதர் உடைந்து அழ ஆரம்பிக்க...

குணா பதறி, "அத்திம்பேர்... என்ன... என்னாச்சு?" என்று அவரை ஆசுவாசப்படுத்தச் செல்ல...

ரேணுகாவோ குமரர் மீது வைத்த பார்வையை விலக்கவில்லை. அவரைச் சாந்தப்படுத்தவும் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

முகத்தை மூடிக் கொண்டு கதறியழ ஆரம்பித்த குமரரைச் சமாதானப்படுத்தத் தெரியாமல் குணா பரிதவிக்க... அவரை மேலும் தவிக்க விடாமல் அவரே சமாதானமாகி,

"குணா... நான் உன் மேல பகையாத்தான் இருந்தேன்... ஏன் உன்னைக் காலையில் பார்த்தப்போ கூட கடுமையாத்தான் பேசினேன்... அது நோக்கே தெரியும்... ஆனால் நீ இவ்ளோ தூரம்... நம்மாத்து மனுஷாளா வேத்துமை இல்லாமல் வெள்ளந்தியா எல்லாத்தையும் சொல்லும்போது, என் மனசை யாரோ அறுக்கிற மாதிரி... இல்லை, முடியலை குணா...

"எனக்கு ஜானகிக்கு மாப்பிள்ளை கேட்கிற அளவுக்குத் தகுதி இருக்கானு தெரியலை, குணா..." என்று தளர்ந்த குரலில் கூற...

குணா, "என்ன அத்திம்பேர்... என்னென்னவோ பேசறேள்... எனக்கு உங்ககூடச் சம்மந்தம் வைச்சிக்கிறதில்

பரிபூரணச் சம்மதம். அபியைத் திவ்யாவிற்குக் கல்யாணம் பண்றதில் எனக்கு ஆட்சேபனை இல்லைதான். ஆனால் நானிக்கு... அவன் நல்லவன் இல்லை, அத்திம்பேர்..." என்று அவருக்குப் புரிய வைக்கும் நோக்கத்துடன் கூற...

குமரர் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை...

"குணா, முதலில் ஜானகியைப் பத்தி உனக்குச் சொல்லிடுறேன்... அப்புறம்தான், உனக்கு நான் எத்தை தின்னா பித்தம் தெளியும் நிலையில் இருக்கேன்னு தெரியும்..." என்று கூறி விட்டு, ஒரே வினாடி அவர் மனையாளைப் பார்க்க... இப்போது ரேணுகாவின் பார்வை குற்றம் சாட்டும் பார்வையாக மாறியிருக்க...

அதன் மீது அலட்சியப் பார்வையை வீசி விட்டுத் தன் மர்மப் புன்னகையை மறைத்துக் கொண்டு, குணாவிடம் தன் முகபாவனையை மாற்றிக் கொண்டு, ஜானகியின் ஆதி முதல் அந்தம்வரை அனைத்தையும் கூற ஆரம்பித்தார்...

அதை அவர் உருக்கமாகக் கூறக் கூற... குணாவின் முகத்தில் இருந்த குழப்பம் போய்ப் பரிதாபம்தான் மேலேறியது...

கண்களில் இப்போது தன் மகனின் செய்கைகளால் உண்டான வருத்தம் போய், ஜானகியின் மீது தோன்றிய பரிதாபத்தினால் லேசான ஈரம் உண்டானது.

குமரர் கூறி முடித்துத் தன் கண்களைத் துடைத்துக் கொள்ள... குணா அவர் கையைப் பிடித்துக் கொண்டு,

"அத்திம்பேர்... ஜானகி பாவம், அத்திம்பேர்... இந்தச் சின்ன வயதில்... இத்தனை கஷ்டமா? ஆனால் அவளால் கல்யாணம் செய்துக்க முடியுமா, அத்திம்பேர்...? மனசாலயும் உடம்பாலயும் அவ துவண்டு போயிருப் பாளே... அவளைப் போய்..." என்று அவர் அந்தப் பிஞ்சின் மனசை நினைத்துத் தயங்க...

குமரரின் முகம் கண நேரத்தில் மாறியது. "குணா... என்ன இருந்தாலும் எம் பொண்ணு கல்யாணத்துக்கு லாயக்கில்லை... இந்த மாதிரிப் பொண்ணை எப்படித் தன் மகனுக்குக் கட்டி வைக்கிறது...? அதுவும் தன் மகன் கெட்டவனாகவே இருந்தாலும்... அவனுக்கு வர பொண்ணு குறையே இல்லாதவளா இருக்கணும்... அதானே நீ நினைக்கிறே? சரி, குணா... உங்கிட்ட இனிமே பேசி எதுவும் ஆகப் போறதில்லை..." என்று கைகூப்பி விடைபெற...

அவரைப் பதறிப் போய்த் தடுத்த குணா, "என்ன அத்திம்பேர்... என்னென்னவோ பேசுறேள்... நான் நானியைப் பத்திக் கவலைப்படுறதை என்னைக்கோ நிறுத்திட்டேன். என் கவலை எல்லாம் ஜானகியைப் பத்தித்தான்... இந்த மாதிரிப் பிரச்சினை உள்ளவங்க மனசளவில் ரொம்ப விரக்தியாக இருப்பாங்க... அவங் களுக்குக் கல்யாணம் செய்து வைக்கக் கூடாதுன்னு சொல்லலை...

"அமெரிக்காவில் இந்த மாதிரிப் பிரச்சினை உள்ள நிறையப் பேரை பார்த்திருக்கேன்... அவங்க கல்யாணம்

செய்துகிட்டு நல்லபடியாத்தான் வாழுறாங்க... ஆனால் அவங்க துணை... அவங்களுக்குப் பூ மாதிரி பார்த்துக்கிற துணையாகத்தான் நாம் தேர்ந்தெடுக்கணும், அத்திம்பேர்...

"நானிக்கும் அவளுக்கும் கல்யாணம் செய்து வைச்சா அவளை வார்த்தையாலேயே சவுக்கால அடிச்சுக் கொன்னுடுவான்... அவன் மனசில் ஈரமே இல்லை... அதனால்தான் அவன் டாக்டர் வேலையையே விட்டுட்டான்... அவன் வேணாம், அத்திம்பேர்... நானே ஒரு நல்ல பையனா பார்த்து அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன்..." என்று விடாப்பிடியாக மறுக்க...

குமரரால் அதற்கும் மேல் அவரை வற்புறுத்த இயலவில்லை... குணாவை விட்டுப் பிடிக்கலாம் என்று நினைத்தார்...

எப்படி இருந்தாலும் திவ்யாவின் திருமணத்திற்குப் பிறகுதான் ஜானகிக்குச் செய்ய வேண்டும்... கொஞ்ச காலம் போகட்டும்... திரி கொளுத்தியாகி விட்டது. பொறி கண்டிப்பாகக் கிளம்பும் என்றே நினைத்தார்.

அதனால், "சரி குணா... உன் இஷ்டம். ஆனா ஒண்ணு... எனக்கு என்னமோ நானிக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைச்சா சரியாகிடுவான்னு தோணுது... அதைத்தான் சொல்றேன்..." என்று கூறி முடிக்க...

குணா, "சரி அத்திம்பேர்... இப்போ அபி - திவ்யா கல்யாணம் ஏற்பாடாகட்டும்... அவன் நம்மாத்து மனுஷாளோட எப்படிப் பழகறான்... ஜானகியை எப்படிப்

பார்க்கிறான்னு பார்ப்போம்.., குறிப்பா ஜானகிக்கு அவனைப் பிடிக்குதானு பார்ப்போம்... அப்புறமா இதைப் பத்தி பேசலாம்... வந்து ரொம்ப நாழி ஆச்சு... நான் கிளம்புறேன், அத்திம்பேர்..." என்று கூறி விட்டுக் கிளம்ப...

குமரர், "இரு குணா... நாலு மணியாச்சு... காபி சாப்பிட்டுண்டு போ... இன்னும் செத்த நாழியில் எல்லாரும் வந்துருவா... ஜானகி மேலதான் இருக்கா... ஒரு தடவை பார்த்துண்டு போ..." என்று கூற...

குணா மறுதலிப்பாக, "இல்ல, அத்திம்பேர்... மனசு இப்போ ஒரு நிலையில் இல்லை... கொஞ்சம் சந்தோஷமா கொஞ்சம் பாரமா ஒரு மார்க்கமா இருக்கு... இப்போ நான் யாரைப் பார்த்தாலும் என்னால் என்னைக் கட்டுப்படுத்திக்க முடியாது... அதனால் நான் கிளம்புறேன்... ஆத்துக்குப் போயிட்டு கலந்து பேசிண்டு ஃபோன் செய்றேன்... நான் வரேன்... வரேன்க்கா..." என்றவர், அதற்கு மேல் பேசாமல் விடுவிடுவெனச் சென்றுவிட...

குமரர் இப்போது ரேணுகாவிடம் கோபமாக வந்து, "ஏன்டி... நான் அவ்ளோ பேசுறேன்... அப்படியே களிமண்ணாட்டம் நின்னுண்டு இருக்கியே... ஒரு வார்த்தை உன் தம்பிகிட்ட வாயைத் தொறந்தா... என்ன குறைஞ்சு போயிடுவியோ... ஏன்டி எனக்குன்னு வந்து வாய்ச்சே...?" என்று எரிந்து விழ ஆரம்பிக்க...

ரேணுகா எந்த உணர்வையும் காட்டாது, "நான் போய் காபி போடுறேண்ணா..." என்றபடி தன் தனி சாம்ராஜ்யமான சமையலறைக்குள் நுழைய...

குமரகுரு, "அசமஞ்சம்... அசமஞ்சம்... சே... இதுகூட குடும்பம் நடத்திச் சொச்ச காலத்தைக் கழிக்கிறது பெரும்பாடு..." என்று முணுமுணுத்தபடி சென்று, தன் வேலையில் மூழ்க,

அங்கே சமையலறையில்... பாலுடன் சேர்ந்து, ரேணுகா என்ற அசமஞ்சத்தின் உள்ளமும் செந்தணலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

இரவு உணவின் போது குமரகுரு குணாவைப் பார்த்த விஷயத்தையும் அபிநந்தனைத் திவ்யாவிற்குப் பார்த்திருந்த விஷயத்தையும் கூறினார்.

ஆனால் கவனமாக, நானியையும் ஜானகியை அவனுக்குப் பேசியதை மறைத்து விட்டார்... நேரம் வரும் பொழுது சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்தார்...

எனவே அதை மட்டும் மறைத்து, "பையன் பேரு அபிநந்தன்... ரொம்ப நல்ல குணம்... பெரிய நிறுவனத்தில் ஹெச்.ஆரா இருக்கானாம்... அமெரிக்காவில் வேலை... மாசம் இரண்டரை லட்சம் சம்பளம்... ரொம்ப நாளா விட்டுப் போயிருந்த சொந்தம்... இப்போ சேர்ந்ததும் இல்லாமல், சம்மந்தமாகவும் ஆயிடுச்சு... எல்லாரும் என்ன சொல்றேள்..." என்று தன் முடிவை முன் வைக்க...

அவரின் வார்த்தைகளை என்றுமே மீற தைரியமில்லாத, அவர்கள் மகன்கள் இன்று மட்டும் எதிர்த்து விடுவார்களா என்ன?

"எங்களுக்கென்னப்பா... திவ்யாவுக்கு இப்படி வரன் அமைய கொடுத்து வைச்சிருக்கணும்மோன்னோ... நேக்கு பரிபூரணச் சம்மதம்... என்னடா சேகர்?" என்று தன் தம்பியைக் கேட்க...

சேகரும், "ஆமாண்ணா... நேக்கும் சந்தோஷம் தான்... என்னடி திவ்யா...? காலையில் வேண்டாம் வேண்டாம்னே? இப்போ என்ன வெட்கப்பட்டுண்டு...?" என்று தன் தங்கையை வார...

அவளோ, "போங்கோண்ணா..." என்று சிணுங்கி விட்டுத் தன் அறைக்கு ஓடினாள்.

திவ்யா தான் ஆசைப்பட்டாற் போல் வாழ்வு கிடைத்து விட்டதை எண்ணி உளமார்ந்த மகிழ்ச்சியுடன் இருந்தாள்... அவள் ஆசையே அமெரிக்க வாழ்வுதான்... நம் நாட்டில் முக்கால்வாசிப் பெண்களைப் போல் தான் திவ்யாவும்... அவளுக்கென்று ஒரு ஆசை... பகலிலும் கண்களில் தெரியும் கனவுகள்... பிக்கல் பிடுங்கலில்லாத வாழ்வு... நேரத்திற்கு ஷாப்பிங்.

பார்த்துப் பார்த்துச் செலவு செய்யாமல், தன் கைக்குள்ளேயே வைத்துக் கொள்ளத் தோதான கணவன். இவைதான் அவள் கனவுகள். அபிநந்தனைத் திருமணம் செய்தால் அதில் முக்கால்வாசி நிறைவேறும் என்பதால் அப்போதே அவள் கனவில் மிதக்க ஆரம்பித்தாள்.

அவள் முகத்தைக் கண்ட வைஜுவும் ராதாவும் சற்றே பொறாமையில் புழுங்கத்தான் செய்தனர்... ஆனால் அவர்கள் பொருமலை கேட்கத்தான் ஆளில்லை.

எனவே தத்தம் குழந்தைகள் மேல் அந்தக் கோபத்தை காட்ட முயன்று அதைத் திட்ட, அதற்குத் தங்கள் கணவன்மார்களிடம் திட்டும் வாங்கிக் கட்டிக் கொள்ள... இப்படி அந்தச் சூரியவிலாஸே பரபரப்புடன் செயல்பட... அந்தப் பரபரப்பில் சற்றும் பங்கேற்காமல் உணவு முடிந்ததும் பாத்திரங்களை ஒழித்து விட்டு வந்து, ஆரவாரமின்றிக் கணவருக்காகப் படுக்கையை விரித்துக் கொண்டிருந்தார் ரேணுகா.

அவரைப் பார்த்த குமரகுருவிற்கு எரிச்சல் மண்டியது...

அவரிடம் சென்று, "இப்போ என்ன ஆயிடுத்துன்னு உன் முகரக்கட்டையைத் தூக்கி வைச்சிண்டு இருக்கே... இருக்கிற ஒரு தரித்திரம் போதாதா நம்மாத்துல..." என்று கத்த ஆரம்பிக்க...

ரேணுகாவின் முகத்தில் இப்போது விரக்திச் சிரிப்பு... "அந்தத் தரித்திரத்தை வீட்டை விட்டு விரட்டத்தான் இப்படி ஒருத்தனுக்குக் கட்டி வைக்க நினைக்கிறேளாண்ணா..." என்று கேட்க...

அவர் முகத்தில் சிறு அதிர்வு வந்தாலும், அதை வெளிக்காட்டாமல், "ஆமாம்டி, இப்போ அதுக்கு என்ன? எப்படி இருந்தாலும் நான் அவளுக்கு நல்லதுதானே செய்றேன்..." என்று தனக்காகத் தானே வாதாட,

ரேணுகாவோ அசரவில்லை... ஆனால் தன் வாதத்தைக் குரல் உயர்த்தியும் கூறவில்லை... அவர்

மென்மையாகக் கூறியதும், குமரருக்குத் தலையில் நங்கென்றுதான் அடித்தது...

அவர் கூறியது இதுதான்... "நீங்க அவளுக்கு நல்லது செய்யலைண்ணா... அவளைக் கழிச்சு விட்டால் போதும்னு நினைக்கிறேள்... இப்படித்தான் அவள் பொறந்ததில் இருந்து நினைச்சிண்டு இருக்கேள்... அதுவும் அவளுக்கு இப்படி ஒரு குறை வந்ததும்... சொல்லவே வேண்டாம்... உங்களுக்கு அவளைப் பத்தி ஏதாவது தெரியுமாண்ணா?

"இதுநாள் வரை அவ ளுமை எதுக்காகவாவது எட்டிப் பார்த்திருப்பேளா? அவளுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு உங்களுக்குத் தெரியுமாண்ணா... அவ பாவம்ண்ணா... வாயில்லாப் பூச்சி... பசிக்குதுன்னா கூட வாய் திறந்து கேட்கத் தெரியாது... அவளைப் போய் இப்படி ஒருத்தனுக்குக் கட்டி வைக்க நினைக்கிறே ளேண்ணா...

"இதுநாள் வரைக்கும் இப்படி ஒரு பொண்ணு இருக்கிறதே உங்களுக்கு ஞாபகமில்லைதானே... இப்போ மட்டும் என்னண்ணா?" என்று ஆற்றாமையில் கூறி விட்டு கண்ணீர் விட...

குமரர் இதற்கு மேல் ரேணுகாவின் பேச்சை கேட்கப் பிடிக்காமல், "ரொம்பப் பேசாதே... உன் தம்பி செய்த தப்புக்கு அவனை மன்னிச்சு அவனாண்ட சம்மந்தமும் பேசியிருக்கேன்... அதைப் பத்தி நினைச்சிப் பார்த்தியா? திவ்யாவுக்கு அபிநந்தனைப் பேசும்போது அவளுக்கும்

கேட்டுப் பார்த்தேன்... அதுக்குப் போய் இப்படி ஜங்கு புங்குன்னு ஆடுறே..." என்று கத்த...

ரேணுகா, "என்னாண்ட நீங்க நடிக்காதீங் கோண்ணா... தப்பு. அவள் பிறந்ததில் இருந்து அவளை ஒரு பொர்ருட்டா மதிச்சிருப்பேளா? இப்போ அவளுக்குத் தேடிப் போய் மாப்பிள்ளை கேட்கிறேள்னா என்ன அர்த்தம்... உங்களுக்குக் காலம் முழுக்க உங்க கைக்குள்ளேயே இருக்கிற மாதிரிச் சம்மந்தி வேணும்... ஆம்பளைப் பிள்ளைகளைப் பத்திக் கவலை இல்லை... ஆனா, பொம்பளைப் பிள்ளையைக் கட்டிக் கொடுத்தா கையைக் கட்டி நிக்கணுமே... அதுக்குத்தான் நீங்க என் தம்பியை மன்னிச்சேள்... இப்படி சம்மந்தம் பேசினேள்...

"அதுவும் இல்லாமல் வரட்சணையையும் அவ்வளவா தராமல் பகவான் விட்ட வழின்னு இருந் துக்கலாம்... அந்த வகையிலும் உங்களுக்கு லாபம்... பணத்துக்குப் பணமும் ஆச்சு... கௌரவத்திற்குக் கௌரவமும் ஆச்சு... உங்களுக்குத்தான் பொம்பளைப் பிள்ளைகள்னா எட்டிக்காயாச்சே..." என்று கூறி முடிப்பதற்குள், அவரின் கை ரேணுகாவின் கன்னத்தைப் பதம் பார்த்திருந்தது.

அடி வாங்கிய பின், சற்றும் அதிராமல் நின்றிருந்த ரேணுகா, "என்னை அடிங்கோண்ணா... என் வாயடைக்க லாம்... ஆனால் ஒருநாள் உங்க வாயடைச்சுத்தான் நிக்கப் போறேள். என் பொண்ணு நெருப்பில் விழுந்தாக் கூட சிரிச்சுக்கிட்டே நீந்திக் கரை சேருவா... அவ இந்த

ரேணுகாவோட ரத்தம். அவ வாழ்க்கை எப்பவுமே செழிப்பாத்தான் இருக்கும்... அதைப் பார்த்து நீங்க அவமானத்தில் தலைகுனியுற நாளும் வந்துண்டே இருக்கு..." என்று மானசீகமாக அவரிடம் சபதமிட...

அது புரியாத குமரர், "என்ன பார்க்கிறே... இனி ஒரு வார்த்தை பேசினே... பல்லை உடைப்பேன்... போ... போய்ப் படு... மனுஷன் பிராணனை வாங்குறதே உன் பொழப்பு..." என்று கத்தி விட்டுச் சென்று படுக்க...

அவர் அதே இறுகிய முகத்துடன் ஜானகி இருக்கும் மாடியறைக்குச் சென்றார்.

சென்றவர் தன் மனதுக்கினிய மகளின் துயில் கலையாமல்... அறைக்குள் சென்று, இன்றுதான் பிறந்த குழந்தையை பார்ப்பது போல் வாஞ்சையுடன் அவளருகில் அமர்ந்து, அவள் தலை கோத, ஜானகியிடம் சிணுங்கல் எழும்ப, சத்தமின்றித் தன் மகவை ரசிக்க ஆரம்பித்தார்.

சற்றே கருப்புதான் என்றாலும் களையான முகம்... வெடுவெடுவென உடல்... சற்றும் சதைப் பற்றின்றி எலும்புகள் எட்டிப் பார்த்தன... சாப்பிட்டால்தானே... எப்போதும் சோகம்தான்!

ஆனால் அவளாக வெளியே காட்டா விட்டாலும் கண்ணாடி போல் முகமே காட்டிக் கொடுத்து விடும்... அழகு வைக்கவில்லை என்றாலும்... கடவுள், புடம் போட்ட பொன்னாக மனத்தை தந்திருக்கிறான்... இல்லை

என்றால், இவ்வளவு பொறுமை. இந்த வயதில் வாய்த்திருக்குமோ? என்று நினைத்து நினைத்து மாய்ந்துதான் போனார் அந்தத் தாய்.

"ஏன்டி பொண்ணே... இந்தப் பாவி வயித்தில் பிறந்தே... வேற வசதி குறைவான வீட்டில் பிறந்திருந்தாலும் உன் மனசுக்கு ராணி மாதிரி வைச்சிருந்துப் பாளே... இங்க பிறந்து என்னத்தை கண்டே? இந்த ரூமைத் தவிர வேற போக்கிடம் உண்டா...? உன் வாழ்க்கையில் வெளிச்சமே வராதாடி... வராதா...?" என்று மெல்லிய குரலில் புலம்ப...

அவர் கண்களில் இருந்து ஒரு துளி கண்ணீர் அந்த கருப்பு ரத்தினப் பெண் மீது பட்டு ஒளிர ஆரம்பித்தது.

ஆனால் இனிமேல்தான் அவள் வாழ்வு தலை கீழாக மாறப் போகிறது என்பதை அவர் அறிவாரா?

## 4

அடுத்த நாள் காலையிலேயே ரேணுகாவிற்கு மனது பாரமாக இருந்தாலும் தன் வழக்கப்படி எழுந்து வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பிக்க, சிறிது நேரத்திலேயே அவரின் கைபேசி சிணுங்கியது.

வீட்டோடு இருக்கும் கட்டுப்பெட்டி மனைவிக்குக் குமரர் கைபேசி வாங்கித் தந்து, அதைக் கையாளவும் கற்றுக் கொடுத்ததுக்கு ஒரே காரணம் ஜானகிக்காகத்தான்.

சிணுங்கிய கைபேசியை எடுத்துப் பார்த்து விட்டு அணைத்தவர், ஓடியே ஜானகியின் அறைக்கு ஓடினார்... பின்னர் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு நிமிர,

அவர் வந்தது முதல் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஜானகி, "அம்மா... இன்னும் எத்தனை நாளைக்குத்தான் என்னைப் பத்திக் கவலைப்பட்டுண்டே இருப்பே..." என்று சற்றுக் கடினமாகவே கேட்டாள். ஆனால் அதைக் கண்டுகொள்ளாமல் அவர் படுக்கையில் விரிப்பைச் சரிப்படுத்திக் கொண்டிருக்க...

அவளோ விடாமல், "அம்மா... நான் உன்னாண்ட தான் கேட்கிறேன்..." என்று அதட்டலாகக் கேட்க...

அவரோ அசராமல், "ஆமா... இந்த அதட்டலும் உருட்டலும் என்கிட்ட தானே எல்லாருக்கும் செல்லுபடி ஆகும்... ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டியாம்..." என்று எகிற...

விசித்திரமாகத் தன் தாயின் எகிறல் ஜானகிக்கு வருத்தத்தை விட, மென்முறுவலைத் தான் தோற்று வித்தது.

அவள் சிரிப்பதைப் பார்த்த ரேணுகா, "என்னடி... சிரிப்பு வேண்டிக் கிடக்கு... நம்ம பொழப்பே இங்கே சிரிப்பாச் சிரிச்சிண்டு இருக்கு.., இதில் நீ வேற சிரிக்கிறியா?" என்று மேலும் ஆற்றாமையில் கத்த,

அவரின் இந்த மனக்குமுறலுக்குக் காரணம் ஏதும் தெரியாத ஜானகி திருதிருவென விழிக்க ஆரம்பிக்க...

தன் மகளின் கள்ளமில்லா முகத்தைக் கண்ட ரேணுகாவிற்கு, இன்னும் ஆற்றாமையை அதிகரிக்க... எங்கே தான் நேற்று நடந்ததை உளறி விடுவோமோ என்று பயந்து விரைவாகத் தன் வேலையை முடித்து விட்டு அறையை விட்டு வெளியேற...

ஜானகியின் தழுதழுக்கும் குரல் அவரை நிறுத்தியது... "ஏம்மா.. வரவர உனக்கு என்னைப் பிடிக்கலையா? நான் எதுக்கும் லாயக்கில்லாதவனு நினைக்கிறியா?" என்று கண்களில் கண்ணீர் தளும்பக் கேட்க...

ரேணுகா அதற்கு மேல் தன் விட்டேற்றித் தனமான போக்கைக் கைவிட்டு, ஓடி வந்து அவளை வாகாக அணைத்துக் கொண்டு,

"ஏன்டி... ஏன்டி... இப்படி எல்லாம் பேசுறே... இந்தப் பச்சாதாபம் உன்னை விட்டுப் போகவே போகாதா...?" என்று தன் மகளைக் கேட்க...

அவளோ, "பின்னே என்னம்மா... என்கிட்ட கோபம்னா என்னை அடிச்சுடு... கொன்னுகூடப் போட்டுடு... ஆனால் இப்படிப் பேசாமல் மட்டும் இருக்காதேம்மா... என்னால் தாங்கிக்க முடியாது... இந்த வீட்டில் எனக்கு இருக்கிற ஒரே ஆறுதல் நீதானம்மா... நீயும் இப்படிச் செஞ்சா... நான் எங்கேதான் போறது... சொல்லு..." என்று தேம்பலுடன் கேட்க...

அதற்கு மேல் அந்த நேசம் கொண்ட தாயால் தன் மகளைத் தண்டிக்க இயலவில்லை போலும்.

"உன் மேல் எனக்கென்னடி கோபம்... உன்னாண்ட போச்சுக்கிட்டு நான் எங்கே போறது... ஏதோ ஒரு கலக்கம்.. அதைச் சொல்லி உன்னையும் படுத்த வேணாம்னு பேசாம இருந்தேன்..." என்று தன்னையும் மீறி அந்தக் கலக்கம்... வார்த்தைகளால் சற்றே வெளிப்பட,

அதைச் சட்டென்று பிடித்துக்கொண்ட ஜானகி... "என்னம்மா, என்ன கலக்கம்... நினைச்சேன்ம்மா... உன் முகமே சரியில்லை... என்னாயிடுத்து சொல்லும்மா...?" என்று அவரை உலுக்க...

ஒரு வினாடி... ஒரே வினாடி நேற்றைய பேச்சுகளை ஜானகியிடம் கூறி விடலாமா... என்ற உந்துதல் ரேணுகாவிற்குத் தோன்றியதுதான்... ஆனால் தன் கலக்கம் அவள் மனதில் சூறாவளியாக மாறும் என்பதையும் அவர் யோசித்தார்.

இப்போதைக்கு ஜானகிக்குத் தெரிவதில் எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. மாறாக, வீண் பிரச்சினைதான். அதனால் முடிந்தவரை தான் மட்டுமே இந்த விஷயத்தைக் கையாளுவதுதான் இப்போதைக்கு நல்லது. தன்னை மீறித் தான் ஜானகியை எதுவும் தீண்ட வேண்டும்... என்று தீர்க்கமாக நினைத்தார் அந்தத் தாய்...

எனவே, "ஒண்ணுமில்லடி, அசடு... ஏதாவது பிரச்சனைன்னா சொல்ல மாட்டேனோ?" என்று ஒரு நிமிடத்தில் தன் சோக முகத்தை மாற்றித் தன் புன்னகையைக் காட்ட... அதுவே ஜானகிக்குப் போது மானதாக இருந்தது.

"போதும்மா... இது போதும்... உன் சிரிப்பைப் பார்த்துட்டா நேக்கு அது போதும்... வேற எதுவும் வேணாம்... காலம் முழுக்க நீ சிரிச்சுண்டே இருக்கணும்மா..." என்று அப்பாவியாகக் கூற,

அவள் தலையைக் கோத... "இப்படிச் சின்னப் பிள்ளையாவே இருக்கக் கூடாதுடா, ஜானு... காலம் முழுக்க என்னையே சார்ந்து இருந்திடக் கூடாது... நீ உன் காலில் நிக்கணும்..." என்று கூறி விட்டு நாக்கைக் கடித்துக் கொள்ள...

அவரைப் பார்த்து வலியுடன் சிரித்த ஜானகி... "பார்த்தியா... வாய் வார்த்தையாக் கூட உன்னால் அப்படிச் சொல்ல முடியலை... என்னைப் போய்... ஏன்ம்மா... திடீர்னு வித்தியாசமாப் பேசுறே..." என்று மென்மையாகக் கேட்க...

ரேணுகா இப்போது குரலில் ஒருவித உறுதியைத் தேக்கி... "இப்படித் தத்துப்பித்துன்னு உளறாதே... உன்னால் முடியாததுன்னு இல்லை... நீ அதுக்கு முயற்சி எடுக்கலை..." என்று கடிந்து கொள்ள...

இப்போது ஜானகி, "ஆமாம்மா... ஏன் எடுக்கணும்... இதனால் எனக்கு என்ன நடந்திடப் போகுது... ஏதாவது பலன் இருக்கா... கடைசிவரை உனக்கு மகளாவே இருந்து சொச்ச காலத்தை ஓட்டிடுறேன்... ஆனால் அதெல்லாம் முடியாது... நோக்கு... பாரமா இருந்தா சொல்லிடு... நான் எதையாவது தின்னு என் உயிரை மாய்ச்சுக்கிறேன்..." என்று கூற...

ரேணுகா அவள் வாயைப் பொத்தி, "ஜானு, இப்படி எல்லாம் பேசாதேன்னு நோக்கு எத்தனை வாட்டி சொல்றது... என்னை உயிரோட கொன்னு புதைக்காதேடி... யார் இருந்தாலும், இல்லைன்னாலும் நான் இருக்கேன்டி, நோக்கு... இந்த அம்மா இருக்கேன்... உனக்காக நான் எதை வேணா... யாரை வேணா தூக்கியெறிஞ்சிண்டு வருவேன், கண்ணம்மா...

"நான் படிக்காதவளா இருக்கலாம்... அசடா இருக்கலாம்... ஆனால் நான் ஒரு அம்மா... அந்தத் தகுதி போதாதா? என் குழந்தை உன்னைச் சிறகுக்குள் நுழைச்சிண்டு பாதுகாக்கிற கோழியாட்டம் பார்த்துக்கிறேன்... எந்தக் காரணம் கொண்டும் உன் வாழ்க்கை பாழ்படாது, ஜானு..." என்று அவளுக்கு ஆறுதல் கூற.. அவளும் சற்று நிதானத்திற்கு வந்தாள்.

பின் ரேணுகா, "சரி... அழப்படாது... அழப்படாது... கண்ணைத் துடைச்சிண்டு கண்ணில் மை வச்சிக்கோ... கஷிண்டிருக்கு பாரு... இந்தா டவல்... துடைச்சிக்கோ. நான் கீழே போய் டிபன் எடுத்து வரேன்..." என்று கூறி விட்டுச் செல்ல எத்தனிக்க...

அவரைத் தடுத்த ஜானகி... "அம்மா, நோக்கு ஞாபகம் இல்லையா? இன்னைக்குக் கிருத்திகை யோண்ணோ... விரதம் நான்... ஒரு பொழுதுதான்..."

"ஆமாயில்லை... மறந்துட்டேன்... எப்படித்தான் சரிவர எல்லா விரதமும் நாள் கிழமை தவறாம கடைப்பிடிக்கிறியோ? சரி, ஜானு... உங்கப்பாவுக்கு

இரண்டாவது காபிக்கு நாழியாயிடுத்து... தாமதமாச்சுன்னா முணுமுணுப்பார்... நான் போறேன்..." என்று கூறிவிட்டு, அவர் வெளியேற...

ஜானகி, "கடைசிவரை ஏன் கோபமா இருந்தேனு நீ சொல்லவே இல்லையேம்மா..." என்று கேட்க...

அதற்குப் பதிலாக வார்த்தைகளின்றி மௌனமான சிரிப்பையே ரேணுகா உதிர்த்து விட்டுப் போக...

முதல் முதலாகத் தன் தாயை விடுகதையெனப் புதிருடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி.

அதே நேரம் நியூஜெர்சியில்...

"உன் ஃபோட்டோ அவாளுக்கு மெயில் பண்ணிட்டேன் அபி... நீ வேணும்னா திவ்யா கூட ஸ்கைப்பில் மனம் விட்டுப் பேசிக்கோ... அவ ஃபோட்டோ காட்டினேனே... பிடிச்சுதா நோக்கு..." என்று வழக்கமான சாப்பாட்டு நேரத்தில் அவர் அபிநந்தனிடம் திருமணப் பேச்சை எடுக்க,

அவனும் சம்மதித்தாலும் ஏதோ ஒரு தயக்கம் தோன்ற...

அவர், "ஏன்டா அபி... என்ன தயக்கம் நோக்கு இன்னும்... திவ்யாவை நோக்கு பிடிக்கலையா? வேற யாரையாவது நினைச்சிண்டிருக்கியோ? அப்படி ஏதாவது இருந்தால் சொல்லு... நான் ஒண்ணும் காதலுக்கு எதிரி இல்லை... நானே காதலிச்சு ஓடி வந்துதான் கல்யாணம் செய்துண்டேன்..." என்று கூற...

அபிநந்தன், "இல்லைப்பா... நேக்கு அந்த மாதிரி எந்த விஷயமும் என் வாழ்க்கையில் நடக்கலை... எனக்குத் திவ்யாவைப் பிடிச்சிருக்கு... ஆனா..."

"என்னடா ஆனா... என்னதான் பிரச்சினை?"

"இல்லைப்பா... நேக்கு தம்பியை நினைச்சுத்தான்... அவன் கொஞ்சம் நல்லானதுக்கப்புறம் கல்யாணம் செய்துண்டு அப்புறமா...?"

"அவன் நல்லவனா மாறி... கல்யாணமா...? ஒரு பொண்ணோட வாழ்க்கையைத் தெரிஞ்சே அழிக்கச் சொல்றியா நீ...? அவனை நான் தலைமுழுகி ரொம்ப நாள் ஆயிடுத்து... சும்மாப் பேருக்குத் தான் மகனா வச்சிண்டு இருக்கேன்..." என்று எரிந்து விழ ஆரம்பிக்க...

அவரைச் சங்கடமாகப் பார்த்த அபிநந்தன், "இல்லப்பா... அப்படிச் சொல்லாதீங்கோ... என்ன இருந்தாலும் அவன் நம்ம குடும்பம்ப்பா... என்னை விட நல்லவனாத்தான் இருந்தான்... அவன் இப்படி மாறியிருக்கான்னா ஏதாவது காரணம் இருக்கும்ப்பா... அவன் எதையுமே வாய் விட்டுச் சொல்ல மாட்டான்... மனசுக்குள்ளேயே போட்டு புதைச்சிக்கிறவன்... அதான் பிரச்சனையாப் போயிடுத்து... அவனை மாத்த முடியும்னு நேக்கு தோன்றதுப்பா..." என்று அவரைச் சமாதானப் படுத்தும் விதமாகக் கூற...

குணா எதையும் கேட்கும் நிலையில் இல்லை. "இதைப் பாரு, அபி... அவன் இப்படி ஆனதுக்குக்

காரணம் அவன் மட்டும்தான்... வேற யாரும் இல்லை... நிறைய பணம்... தேவையில்லாத சேர்க்கை... அதான் அவனைத் தறிகெட்டுத் திரிய வைச்சிடுத்து... அவன்கிட்ட பேசறேன்னு போய் நாம அவமானப்பட்டதுதான் மிச்சம்... உன்னையே அவன் எப்படி அவமானப்படுத்தியிருக் கான்...? அதை எல்லாம் மறந்துட்டு உன்னால் எப்படி அவனை இன்னும் சப்போர்ட் செய்ய முடியறது?" என்று கத்த...

அவன் பதில் சொல்லாமல் விழிக்க...

குணா அவனைப் பார்த்து... "இதை பாரு, அபி... உன் தம்பி நல்லானதுக்கு அப்புறம்தான் கல்யாணம் செய்யணும்னு விரதம் இருந்தேயானா நான் எழுதி வெச்சித் தரேன். நோக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணம் ஆகாது...

"இப்போ சொல்றேன், அபி... என் அத்திம்பேரே அவரோட கடைசிப் பொண்ணுக்கு அவனைக் கேட்டார்தான்... ஆனால் நான்தான் விடாப்பிடியா மறுத்துட்டு வந்திருக்கேன்... அவன் நம்மளை விட்டு ரொம்பத் தூரம் போயிட்டான்... அவனை இழு இழுன்னு கயிறு வைச்சு இழுத்தா... அவனோட நாத்தமும் நம்ம மேலதான் தெறிக்கும்... அலை ஓய்ஞ்சு கடலில் குளிக்க லாம்னு நீ சொல்றே... அது ஓயற அலை இல்லைனு நான் சொல்றேன்... எது புத்திசாலித்தனம்னு நீயே யோசி..." என்று கூற...

அபி சற்று நேர மௌனத்திற்குப் பின்... "என்ன தான் இருந்தாலும்... அலையோட வேகத்தையாவது

குறைக்கலாமேப்பா... அதைத்தான் நான் சொல்றேன்... சரிப்பா, அதுவும் வேணாம்னா... விட்டுடுங்கோ... நான் கல்யாணம் செய்துக்கிறேன்... என் விஷயத்தை அவன்கிட்ட சொல்ல வேண்டாமோ?" என்று கேட்க...

"எதுக்குச் சொல்லணும்... அவன்தான் வந்து தூக்கி நிறுத்தப் போறானா?... அவனால் வர்றது எல்லாமே குழப்பமும் மனத்தாங்கலும்தான்... அவன் வரவே வேண்டாம்... நான் எதையாவது சொல்லிச் சமாளிச்சிக்கிறேன்..." என்று அவர் ஆற்றாமையில் கூற...

அபிநந்தன் மெல்லிய சிரிப்புடன், "என்னப்பா சொல்லுவேள்... எத்தனை பேருட்ட சொல்வேள்...? இதெல்லாம் நடக்கிற காரியம் இல்லையேப்பா... நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம்... நான் அவன்கிட்ட பக்குவமாச் சொல்லிக்கிறேன்... அவன் என்னை அவமானப்படுத்தினாலும் சரி..." என்று கூற...

அவனை வாஞ்சையுடன் பார்த்த குணா, "ஏன்டா இப்படி இருக்கே... அவனாண்ட நோக்கு கோவமே வராதா?" என்று கேட்க...

அவனோ பதில் கூறாமல் புன்னகைக்க... அதே நேரம் அழைப்பு மணி ஒலிக்க...

குணா, "அதிசயமா இருக்கே... 11 மணிக்கெல்லாம் யார் வந்துட்டார்... அந்த லூசி வேற ஒருத்தனோட போயிட்டா போல... அதான் போரடிக்குதுன்னு வீட்டுக்கு வந்திருப்பான்..." என்று கருவ...

அபி, "அப்பா... என்ன பேசுறேள்... நீங்களா இப்படி?"

குணா, "என்னடா... அபச்சாரம்தான்... நேக்கு தெரியறதுதான்... அவன் அதைச் செய்யும்போது நான் பேசப்படாதா? போ... போய் அவன் வாந்தி எடுப்பான்... அதைக் கழுவிட்டு... அவன் தெளிஞ்சா சாப்பிட வை... கூட ரெண்டு மி.மீ. கீட்டமைனும் கொடு... சமத்தாப் படுக்கப் போவான்..." என்று எரிச்சலுடன் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்று படாரென்று கதவைச் சாத்த...

அபி ஒரு பெருமூச்சுடன் சென்று கதவைத் திறக்க... குணா கூறியது சற்றும் மாறாமல், நானி அவன் கதவைத் திறந்த அடுத்த நொடி, "உவ்வ்வே..." என்று வாந்தி எடுக்க...

அபியோ சற்றும் அருவெறுக்காமல் பாதி மயக்கத்தில் இருந்த தன் தம்பியைத் தாங்கிக் கொண்டு, படுக்கையறைக்கு அவனை இழுத்துச் சென்று ஓய்வறையில் ஷவரின் அடியில் நிறுத்திக் குளிக்க வைத்து அவனும் தன்னைச் சுத்தம் செய்து கொள்ள...

நானி, "ஓ...! ஷிட்... பிளடி ஹெல்... உன்னால் நான் ஏத்தின டெக்கிலா எஃபைக்ட் எல்லாம் போச்சு... யூ..." கன்னாப் பின்னா என்று நாராசமான வார்த்தைகளால் திட்ட ஆரம்பிக்க...

அபி, தன் காதில் வைத்திருந்த பஞ்சு அவன் காதைச் செவ்வனே காப்பாற்றியது... இது இந்த இரண்டு வருடங்களில் அவனுக்குப் பழக்கம்தான்...

அவன் என்ன செய்தாலும், அவனை அவமானப் படுத்தினாலும் அவனை ஒரு தாய் போல் தாங்குவது அபிதான்...

அவனைச் சுத்தம் செய்து விட்டுப் படுக்க வைத்து விட்டுத் தன் அறைக்குச் சென்று நைட் கவுன் மாற்றிக் கொண்டு வர, அதற்குள் தன் ரத்தக் குழாயில் போதை மருந்தை ஏற்றிக் கொண்டிருந்தான் நானி.

அதைப் பார்த்ததும் பதறி... "நானி... டேய், இப்போதானே ஒரு போதை தெளிஞ்சது... அதுக்குள்ளே ஏன்டா இப்படிச் செய்றே?" என்று கூற...

நானி, "பிரதர்... நான் உன்கிட்ட பர்மிஷன் கேட்டதா ஞாபகம் இல்லையே? இது என் உடம்பு... இதுக்கு என்ன ஆகும்னு எனக்குத் தெரியும்... யு ஷட் தி ஹெல் அப்... அண்ட் கெட் அவுட்..." என்று கூறி முடிப்பதற்குள்ளே அந்த மருந்து அவனுக்குப் பிடித்தமான மாய லோகத்திற்கு அவனை அழைத்துச் சென்றது.

கொஞ்சம் கொஞ்சமாகக் கண்கள் செருகியவனைப் பார்த்த அபியின் கண்கள் நிறைய ஆரம்பிக்க... "உன்னால்தான்டா எனக்குக் கல்யாணம் செய்ய பயமா இருக்கு... கல்யாணமாகிட்டா உன்னை நான் எப்படிப் பார்த்துக்கிறது? ஆனால் அப்பாவையும் மீற முடியலை... தயவுசெய்து என் கல்யாணத்துக்குள்ளே மாறிடுடா, நானி... ப்ளீஸ்..." என்று மயங்கிய அவனிடம் வேண்டுகோள் வைக்க...

நானியோ அதையெல்லாம் உணரும் நிலையில் இல்லை என்பதை அவனிடம் இருந்து வந்த குறட்டை சத்தமே கூறியது.

அடுத்த நாள் ஒருவாறு நானி சுயநினைவில் இருக்கும் நேரம்... அபி உலகில் உள்ள எல்லாக் கடவுளையும் வேண்டிக் கொண்டு தன் கல்யாண விஷயத்தைக் கூற...

அவன் கேட்ட அடுத்த கேள்வி, "அப்படியா பையன் யாரு?" என்றுதான்.

அது புரியாமல் அபி முழிக்க... சிரித்த நானி, "என்ன பார்க்கிறே... உனக்குப் பார்த்திருக்க மாப்பிள் ளையைத்தான் கேக்குறேன்... என்ன பண்றார்?" என்று கேட்க...

அதிலிருந்த அர்த்தம் புரியத்தான் அபிக்குப் பல வினாடிகள் ஆயின. அவனிடமிருந்து வந்த இந்த ரகசிய நக்கலை உணர, அபிக்கு அறிவு இல்லை போல...

அது புரிந்த பின், "நீ இப்படித்தான் என்னை அவமானப்படுத்துவேனு தெரியும்... உனக்கும் அது புதுசு இல்லை... எனக்கும் உன்கிட்ட அவமானப்படுறது புதுசு இல்லை... என்னையும் அப்பாவையும் அவமானப் படுத்துறது, நக்கலடிக்கிறதுதான் உன்னோட முழு நேரத் தொழிலா வைச்சிருக்கே...

"ஆனாலும் நாங்க உன்னை ஒதுக்கிட முடியாது. எங்களுக்கும் மனசு இருக்கு. உன்னை மாதிரி கல்லு இல்லை..." என்று கூற,

அவனோ, "டாடி... எனக்கு ஒரு டவுட்டு. ஆமா, எல்லாரும் இந்த மனசு, மனசாட்சி எல்லாம் சொல்றீங்களே... அதெல்லாம் ஹியூமனில் எந்த அனடாமிக்கல் பொசிஷன்-ல இருக்கு. நானும் சர்ஜன் தான். ஒரு மனுஷனோட உடம்பு முழுக்க அறுத்துப் பார்த்திருக்கேன். ஆனால், இந்த மனசு மட்டும் எங்கே இருக்குன்னே தெரியலை. சொல்லுங்க டாடி... சொல்லுங்க..." என்று வாதாட,

அவனின் வாதத்தில், அபி சற்றே துணுக்குற்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "அதுதான் உணர்வுகளின் கொள்கலன், நானி... அது இல்லன்னா மனுஷன் என்னைக்கோ மிருகம் ஆகியிருப்பான். என்னை... என்னை மாதிரி வைச்சிருக்கிறது, உன்னை... உன்னை மாதிரி வைச்சிருக்கிறது எல்லாமே அதுதான். அது கடவுள் மாதிரி கண்ணிற்குத் தெரியாதுதான். ஆனால் அது இல்லாமல் உலகம் இல்லை..." என்று நியாயத்தைக் கூற,

அதை அப்படியே ஏற்றுக் கொண்டால் அவன் நானியும் இல்லை. இந்தக் கதையும் இல்லையே...!

அவனும், தன் அபிப்பிராயத்தைக் கூறினான். "எந்த ஒரு விஷயத்தையும் கண்ணால் பார்க்காமல் நம்புறவன் முட்டாள். நான் முட்டாள் இல்லை. உன்னை மாதிரித் தன்னைத் தானே மறைச்சிக்கிட்டு முகமூடி போடுறது எனக்கு அலுத்துப் போச்சு. அதான் நான் இப்படி மாறிட்டேன். சுருக்கமாச் சொன்னால் மிருகமா இருக்கிறதுதான் எனக்கு நிம்மதி தருது."

அபி, "ஏன் இப்படிப் பேசுறே, நானி... உனக்கு ஞாபகம் இருக்கா? ஹை ஸ்கூல் படிக்கும்போது ஒரு நாள் நான் ஸ்மோக் செய்தேன். அதைப் பார்த்த நீ என்னை நேரா அம்மா படத்துக்கு முன்னாடி கூட்டிட்டுப் போய், 'அண்ணா... இப்போ அம்மா படத்துக்கு முன்னாடி ஸ்மோக் பண்ணு...' என்று சொன்னே. நான் தயங்கிச் சிகரெட்டைக் கீழே போட்டுட்டேன்.

"அப்போ நீ ஒண்ணு சொன்ன... ஞாபகம் இருக்கா? 'உன்னால் அம்மா படத்துக்கு முன்னாடி கூடச் செய்யத் தகுதியில்லாத இந்தக் காரியத்தை ஏண்ணா பண்றே?'னு. அப்போ விட்டதுதான். வேற எந்தக் கெட்டப் பழக்கத்தையும் கையால் கூடத் தொட்டதில்லை. இப்போ சொல்லு... இந்த உணர்வுகளுக்குப் பேர் பைத்தியக்காரத்தனமா?

"என்னை விட இரண்டு வயசு சின்னவன் நீ... அப்போ உனக்கு இருந்த மெச்சூரிட்டி, கண்ணியம் எல்லாம் எங்கே? இப்போ... ஏன் நீ உன்னையே உணர்வில்லாதவனா, மத்தவங்க உணர்வுகளை மதிக்காதவனா மாறிட்டே?" என்று கத்த...

நானி, "ஏன்னா... இதில் எனக்கு வலி இல்லை. எல்லாருமே எனக்குக் கீழே இருக்காங்க. நான் சுப்பீரியரா இருக்கேன். எனக்குப் பிடிச்சிருக்கு. ஆனால் முன்னாடி ஐ அம் த மிஸரபிள் ஒன்... நான்தான் எல்லாத்துக்கும் இளப்பமா இருந்தேன். அது எனக்குப் பிடிக்கலை. என்னோட வாழ்க்கையை உணர்வுகள் கிட்ட சமர்ப்பிக்கிறதுக்கு எனக்குப் பிடிக்கலை.

"என்னைச் சுற்றி எல்லாரும் நல்லவன் இல்லை. அப்போ ஏன் நான் நல்லவனா இருக்கணும்? I enjoy being a rogue. Why can't I?" என்று கேட்க,

அபிநந்தனுக்கு அயர்வாக இருந்தது. என்ன சொன்னாலும் குதர்க்கமாகப் பேசுபவனை என்னதான் செய்வது? நானியைப் புரிந்து கொள்வது ரிஷிமூலம் தெரிந்து கொள்வதை விடக் கடினம்.

உணர்வுகளை எள்ளி நகையாடுபவன் அவன். அவன் ஒரு விதத்தில் கெட்டவன் என்றே கூற முடியாதுதான். ஆனால் உணர்வுகளின் அடிப்படையில் பார்த்தால்தான் அவனின் கருப்புப் பக்கங்கள் தெரிய வரும். எந்த சென்டிமெண்டுகள் எல்லாம் நம் கலாச்சாரத்தைத் தாங்கிப் பிடிக்கிறதோ, அதை ஒருவன் பிறக்கும் போதே கெட்டவனாக இருந்தால் கூட, சீக்கிரம் மாற்றி விடலாம்... அவனால் எந்தத் தீங்கும் அதிகம் ஏற்படாது. அது அவனின் ஜீன் அமைப்பு என்று சமாதானப்பட்டுக் கொள்ளலாம்.

ஆனால் நானி நல்லவனாக இருந்து அதில் அடிபட்டு ரணப்படுத்தப்பட்டு கெட்டவனாக்கப்பட்டவன், அந்தச் சமுதாயத்தால்... அதில் வீழ்ந்த அவனை மாற்றுவது கிஞ்சித்தும் சாத்தியமில்லை என்று உணர்ந்தான் அபிநந்தன்.

ஆனால் அவன் பேச்சை ஆமோதிக்காமல், "நீ சொல்ற மாதிரி நாங்க ஹிப்போகிரைட் தான், நானி... மிருகங்களை விடவே கேவலம்தான். ஆனால் ஒண்ணு,

அதுக்காக உன்னை மாதிரி எல்லாரும் பாறையா இறுகிட்டா... நாட்டில் முழுக்க மனுஷங்களை விட மிருகங்கள்தான் இருக்கும்... ஆனால் ஒண்ணு உணர்வுகள்தான் இந்த உலகத்தையே ஆளுது...

"முறைக்காதே... நான் நல்ல உணர்வுகளை மட்டும் சொல்லலை... நீ இப்போ மெத் (போதைப் பொருள்) எடுக்கிறே... தண்ணியடிக்கிற... பொண்ணுங்களோட செக்ஸ் வைச்சிக்கிறே... எதுக்காக? Euphoria.. அதுக் காகத் தானே... சில நிமிடங்களாவது தன்னை மறந்த சந்தோஷத்தில் இருக்கணும்னுதானே... அப்போ அதில் உன்னோட ஃபீலிங்க்ஸ் இல்லையா?" என்று அவனுக்குப் பதிலடி கொடுக்க,

சிறிது நேரம் அவனை உறுத்துப் பார்த்த நானி, கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தான்...

அவனை அழி புதிதாகப் பார்க்க...

"தொப்பி... தொப்பி... மனசில் என்ன பெரிய ஃப்ராய்ட் என்று நினைப்பா...? போடா, பொழப்பைப் பார்க்க... உன்னை விட மனுஷங்களோட இண்டு இடுக்கு எல்லாம் எனக்குத் தெரியும்... அன்ட் ஒன் மோர் திங்... நீ சொன்னியே Euphoria. அது உண்மைதான்... ஆனால் அதுக்குக் காரணம் ஹார்மோன்ஸ். Endorphins. வேற எதுவும் இல்லை...

"இனிமே, என்னை இந்த மாதிரி லெக்சர் எல்லாம் கொடுத்து திருத்துறதா இருந்தா முன்னாடியே சொல்லு...

பஞ்சு எடுத்துட்டு வரேன்... என்னை இனிமே மாத்த முடியாது... I have seen the damn blacker side of humans. அதனால்தான் நான் இப்படி இருக்கேன்... எனக்கு இப்படி இருக்கிறதுதான் சந்தோஷம்..." என்று கூற,

கோபமாக அவனைப் பார்த்த அபிநந்தன், "சின்ன வயசில் இருந்து என்னை விட ரொம்ப மெச்சூரிட்டி ஜாஸ்தி நானி உனக்கு... புத்திசாலித்தனத்தில் உன்னை அடிச்சிக்கவே ஆளில்லை... ஐந்து வயசிலேயே ஹியூமன் பிரெயின் பத்தி கட்டுரை எழுதினவன் நீ... உன்னை மாதிரி ரொம்ப பிராடிஜியா இருந்தாலே கஷ்டம்தான், நானி... உனக்கு எல்லாத்தையும் மெக்கானிக்கலா பார்த்தே பழகிப் போச்சு... எல்லாம் தெரிஞ்சவனுக்கு வாழ்க்கையோட சுவாரசியமே போயிடும்... அதான் உனக்கு நடந்திருக்கு..." என்று கூற,

நானி, "ஹப்பாடி... இதைப் புரிஞ்சுக்க உனக்கு இவ்ளோ நேரமா? அடடா... பாவம். என் லூசி எனக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருப்பா...? நேத்தைக்கே என்னைப் பார்க்காம வேற ஒருத்தனோட போய் ரொம்பப் புலம்பிட்டு இருந்தா? பின்னே அய்யா யாரு...? என்னை யாராவது விட முடியுமா?" என்று சிரித்தவாறு கூற,

"அடச்சே அபசாரம்... காலையில் எழுந்து என்னென்ன கண்றாவியெல்லாம் கேட்க வேண்டி இருக்கு.. ஏன்டா, நோக்கு இப்படி எல்லாம் பேச நாக்கு கூசவே செய்யாதா...?" என்று அங்கு அப்போதுதான் கண் விழித்து வந்த குணா எரிந்து விழ,

அதற்குச் சிரித்த நானி, "இதுக்கே அபச்சாரம்னு சொன்னால்... நானும் அவளும் நைட் கிளப்பில் பண்ணதைச் சொன்னா என்ன பண்ணுவேள்... சொல்லுங்கோ டாடி..." என்று அவரைப் போலவே கேட்க,

குணா பல்லைக் கடிக்க...

அபிநந்தன் சிரிப்பை அடக்கப் படாத பாடு பட்டான்.

நானி என்னதான் யோக்கியமில்லாதவனாக... தீய பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தாலும் அவனிடம் அபிநந்தனிற்கு வெறுப்பு தோன்றியதில்லை... அவன் பேசுவதில் உள்ள அறிவுப்பூர்வமான கருத்துக்களும் அவன் செயலும் சாதாரண மனிதனின் கற்பனைக்குக் கூட எட்டாத விஷயங்கள்... அவனுடன் நடந்த வாக்கு வாதத்திலேயே தெரிந்து கொள்ளலாம்.

இதனால் தன் தம்பியிடம் அவனுக்கு ரசிப்புத் தன்மைதான் தோன்றும்... இது சற்றே மிகைப்படுத்தப் பட்டதாகத் தோன்றினாலும் அதுதான் உண்மை.

பேச வந்த விஷயத்தை மறந்து வாக்குவாதம் பல இடங்களுக்குச் சென்று தடுமாறிப் போக... இப்போது குணாவும் இடையில் புகுந்து கொண்டு, "டேய் அபி... அவனை என் கண்ணு முன்னாடி இருந்து போகச் சொல்லு... சனியன்... காலங்காத்தாலே என் வாயில் விழறான்... நம்ம குடும்ப ஆச்சாரத்திற்கு இப்படி ஒருத்தன்... என்ன பாவம் செஞ்சேனோ...?" என்று ஆத்திரத்தில் கூற,

அதை எல்லாம் கண்டுகொள்ளாத நானி, "அதானே அலங்கார்த்தாலே இது என்ன...? ஆச்சாரம், அனுஷ்டானம்னு பேச்சு... சீச்சீ... ஒரு பீர், விஸ்கி இப்படி எல்லாம் போன்னா எவ்வளவு கிளுகிளுப்பா இருக்கும்... வர வர இந்த வீட்டில் உள்ளவர்களே சரியில்லை.. பகவானே...!" என்று கூற,

அவன் சட்டையைப் பிடித்த குணா, "டேய்! என் ஆத்திரத்தைக் கிளப்பினியோனோ உன்னைக் கொல்லக் கூடத் தயங்க மாட்டேன்... இப்படிக் கெட்டு அழியறவன்... ஏன்டா இந்த வீட்டில் இருக்க... எங்கேயாச்சும் போய்த் தொலைய வேண்டியது தானே... நானாவது தலை முழுகிட்டு நிம்மதியா இருப்பேனே... எங்களை விட்டும் இந்த வீட்டை விட்டும் போகாமல் ஏன் என் பிராணனை வாங்குற...?" என்று வாய்க்கு வந்த வார்த்தைகளில் அவனைத் திட்ட ஆரம்பிக்க...

உடனே அவரைத் தடுத்தான் அபி.

"விடுறா... பூனைக்கு யாராவது மணி கட்டியே தான் தீரணும்... இவனை இப்படியே விட்டா, அவன் பாட்டுக்கு ஆடிக்கிட்டே இருப்பான்..." என்று கூறி விட்டுத் திரும்ப... அதை எல்லாம் கேட்க நானி அங்கே இல்லை.

"போயிடுத்து... ஒண்ணு சொன்னால் போதுமே... போகட்டும். கூத்தடிச்சிட்டு இங்கே தானே வரணும்... பார்த்துக்கிறேன்..." என்று கூறி விட்டு அவர் உள்ளே செல்ல... அபிநந்தனோ என்ன செய்வது என்று அறியாமல் விழிக்க ஆரம்பித்தான்.

சிறிது நேரத்தில்... குணாவின் கைபேசி ஒலிக்க, அதை எடுத்துக் காதிற்குக் கொடுத்தவர், அதில் வந்த செய்தியைக் கேட்டு, "அபீஈஈ..." என்று கத்த,

ஓடி வந்த அபிநந்தன், "அப்பா... என்னாச்சு... யாருப்பா ஃபோன்ல...?" என்று பதற,

அவர், "நானி... நானி..." என்று கூற முடியாமல் திணற...

அபி, "சொல்லுங்கப்பா... என்னாயிடுத்து?" என்று அவன் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு கேட்க,

குணா, "நானிக்கு ஆக்சிடென்டாம்டா.. ஹாஸ்பிடல்ல இருக்கானாம்..." என்று கூற,

அபிநந்தன் அதிர்ச்சியில் மூச்சு விடக் கூட மறந்தான்.

## 5

**போ**ட்டது போட்டபடியே தந்தையும் மகனும் தகவல் அளித்தவர் கூறிய மருத்துவ மனைக்கு விரைந்தனர்.

போகும் வழி முழுக்க... குணா அரற்றிக்கொண்டே இருக்க, அவரை ஆறுதல் படுத்த முடியாமல் அபியே நொந்துதான் போனான்... அவர் புலம்பலில் சாராம்சம் இதுதான்.

"அய்யோ... என் மகனை நானே போன்னு சொல்லிட்டேனே...? எந்த நேரத்தில் சொன்னேனோ,

ப்ரேயடியா போயிடுவானாடா அபி? என் நாக்கில் அவ்வளவு விஷம் ஏன்டா வந்தது...? எந்தத் தவறு செய்தாலும் அவன் என் மகன்தானேடா? அது மாறாதுன்னு தெரியாத மண்டுகமாப் போயிட்டேனே... நான் பாவி...!

"டேய், அபி... அவன் குடிக்கட்டும், பொண்ணுங்களோட தொடர்பு வச்சிக்கட்டும்... ஏதானும் செய்யட்டும்... அவன் உயிரோட எனக்குக் கிடைப்பானாடா, அபி...? அவனுக்கு ஏதாவது ஆயிடுத்துன்னா, இந்த உயிரை வச்சிக்கிட்டு என்னத்தடா செய்ய...? அய்யோ நேக்கு கண்ணைக் கட்டுறதுடா அபி..."

இப்படி 40 வித புலம்பல்கள் 400 தடவைகள்... அவர்கள் கடந்த அந்தப் பதினைந்து கிலோமீட்டர்கள் முழுவதும் தொடர,

அபியே ஒரு கட்டத்தில் பொறுமை இழந்து, "அப்பா... அவனுக்கு ஆக்சிடென்ட் ஆச்சுன்னு தெரியும்... அது எந்த மாதிரி...? ஏதாவது ஆபத்தா...? என்ன பிரச்சனை...? எதுவும் தெரியாத பட்சத்தில் நீங்களும் பதற்றப்பட்டு என்னையும் படுத்தாதீங்கோ...

"அப்புறம் இன்னொண்ணு இப்படியே பேசிட்டிருந்தேள்... அவனுக்கு ஏதோ ஆகுதோ இல்லையோ, நம்ம பகவானாண்ட போய்ச் சேர வேண்டியதுதான். பேசாமல் இருங்கோப்பா..." என்று தன் மென்மையான குரலில் கடினத்தைப் பூசி அதட்ட,

குணாவோ அதற்கு மேல் பேச முடியாமல் மனதிற்குள்ளேயே புலம்பிக் கொள்ளத் துவங்கினார்...

கண்களில் கண்ணீருடன் புலம்பிக் கொண்டிருக்கும் அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும்... என்ன செய்வது இப்படியே விடுவதும் சரியில்லையே?

நடப்பது எல்லாம் ஒரு வகையில் இருந்தாலும், அபிக்கு என்னவோ... நானியின் வழக்கமான லீலையாக இருக்குமோ என்றும் அடிமனதில் தோன்றியது.

இந்த இரண்டு வருடங்களில் அவன் தொழிலைப் பற்றி, அவன் செய்த ஆராய்ச்சிகளை விட... நானியைப் பற்றி அவன் செய்த ஆராய்ச்சிகள் எண்ணில் அடங்காதவை. அதனால் அவன் நானியை எடை போடுவது எல்லாமே ஓரளவு சரியாகவே இருக்கும்...

ஆனால் தன் தந்தையின் வேதனையைப் பார்த்து இந்த விஷயம் பொய்யாக இருக்கக் கூடாது என்றும் முரண்பாடாக நினைத்தான்.

ஏனென்றால் அவன் விபத்தில் சிக்கியிருந்தால் ஏற்படும் அதிர்ச்சியை விட... அவன் ஏதாவது கேம் ஆடியிருந்தால் ஏற்படும் அதிர்ச்சியைக் குணாவினால் தாங்க முடியுமா என்பது சந்தேகமே...? இப்படியாக, குழப்பங்களுக்கும் புலம்பல்களுக்கும் நடுவில் அவர்கள் மருத்துவமனையை அடைந்து விட, அவர்கள் கார் அந்தப் பிரம்மாண்ட மருத்துவமனையின் வாயிலில் வெண்ணெய்யாக வழுக்கிச் சமர்த்தாக நின்றது.

பின் அரக்கப் பறக்க அவர்கள் உள்ளே ஓடி, வரவேற்புப் பகுதியில் ரகுநந்தன் என விசாரிக்க...

டாக்டர்களோ அவசர அவசரமாகத் தீவிர சிகிச்சைப் ...வில் இருந்து வந்து, "ஓஹ்... தென் யூ ஆர் ஹிஸ் ...லடிவ்ஸ்... ப்ளீஸ் சைன் திஸ் டாகுமென்ட்ஸ் ...ம்மீடியேட்லி... வி ஹேவ் டு ஸ்டார்ட் இம்மீடியேட் ...மென்ட் சோ அஸ் டு ஸேவ் ஹிம் ஃப்ரம் லூசிங் ...ஸ் லைஃப்..." என்று அவன் உயிருக்குப் போராடிக் ...காண்டிருப்பதாகவும், சிகிச்சைக்குச் சம்மதமென ...யொப்பமிடுமாறும் கூற... இருவருமே அதிர்ந்தனர்.

அப்போதுதான் அபி நடந்ததை உண்மை என ... ஆரம்பித்தான்...

பின், விரைவாகப் பணத்தைக் கட்டி தீவிர சிகிச்சைப் ...வில் அனுமதிக்கப்பட...

குணாவின் புலம்பல்களை இப்போது அபி ...க்கவில்லை. அவனுமே தன் தம்பிக்கு ஒன்றும் ஆகக் ...ாது என்று கந்தசஷ்டிக் கவசத்தை விடாமல் ஜபிக்க... ...ந்த நாள் மெல்லக் கரைந்தது.

மருத்துவர்களும் 24 மணி நேரங்களுக்குப் ...குதான் எதையும் கூற முடியும் என்று கையை ...ரித்துவிட, அவர்களுக்கு இன்னும் பதற்றம் அதிக ...னது.

அவன் முகத்தைப் பார்க்கக் கூட விடவில்லை... தீ...ிர சிகிச்சைப் பிரிவு என்பதால் அவனைப் பார்க்க ...ல்லை... எல்லாம் வாய்வார்த்தையில்தான் கூறுகின் ...னார்.

இப்படியாக 24 மணி நேரங்கள் யுகமாய்க் கழிய... அடுத்த நாள் மாலை வரை சாப்பாடின்றி, தூக்கமின்றி அந்த மருத்துவமனையிலேயே கழித்திருந்தனர் இருவரும்.

அவர்களின் விரதமும் முடிவுக்கு வந்தது. ஆம், ஒரு வழியாக மாலை அவன் அபாயக் கட்டத்தைத் தாண்டி விட்டான் என்று மருத்துவர்கள் கூற, நிம்மதிப் பெருமூச்சுடன் அவர்கள் தனியறைக்கு மாற்றப்பட்டிருந்த தங்கள் மகனைப் பார்க்க ஓடிச்சென்றவர்கள் அதிர்ச்சியில் கண்விழி பிதுங்கி நின்றனர்.

காரணம், அங்கு அனுமதிக்கப் பட்டிருந்தது நானி அல்ல. யாரோ ஒருவன்... இந்தியன்தான், ஆனாலும் வடக்கத்திக்காரன் போல் தெரிந்தான்.

கொஞ்சம் கொஞ்சமாக மயக்கம் தெளிந்த அவன், "ஆஹ்... மே கஹான் ஹூன்..? (நான் எங்கே இருக்கேன்?)" என்று கேட்க,

குணாவிற்கும் அபிக்கும் தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லை.

உடனே அபி தான் சுதாரித்து, அவனிடம் ஆங்கிலத்தில் விசாரிக்க ஆரம்பித்தான்.

நம் வசதிக்காக அவர்கள் உரையாடல் தமிழில்...

"தம்பி... நீ யாரு... எப்படி இங்கே வந்த...? உன் பேர் ரகுநந்தனா..?" என்று கேட்க,

ஆந்த ஆடவனோ குழப்பப் பார்வையுடன், 'இல்லை...' என்பது போல் தலையசைத்து, "நீங்க யாரு...

...துக்கு என்னைப் பார்க்க வந்திருக்கீங்க? என் பேர் ...நந்தன் இல்லை. ரஜுதேவ் கபாடியா..." என்று கூற,

இவர்களுக்குச் சிரிப்பதா அழுவதா என்றே ...ரியவில்லை.

யார் என்றே தெரியாத ஒருவனுக்கு 3000 ...லர்கள் மேல் செலவு செய்து வைத்தியம் பார்த்துச் ...ப்பாடின்றி, தூக்கமின்றி காவல் கிடந்த கொடுமையை ...னைத்து வேறு என்னதான் செய்ய முடியும்?

சரி, ஏதோ ஒரு புண்ணியம் என்று விட்டாலும், ...ப்படி விளையாட்டை நடத்தியவர்கள் யாராய் இருக்கும் ...ன்று தீவிரமாக யோசிக்க... அவர்கள் மனதில் சந்தேகம் ...த்த அடுத்த கணமே கண் முன் தோன்றிக் ...ாட்சியளித்தான் அந்த ஆபத்பாந்தவன்... வேறு யார் ...நந்தன்தான்...!

அவர்கள் முன் உதித்த அவன், சிரிப்புடன் ...வர்களைப் பார்த்துக் கொண்டிருக்க...

ஓடிச் சென்று அவன் சட்டையைப் பிடித்த குணா, "...டய்... நீயெல்லாம்...? உன் மனசு என்ன கல்லாடா...? ...ரு நாள் முழுக்கச் சாப்பாடில்லாமல், தூக்கமில்லாமல் ...னும் உங்கண்ணனும் பட்ட பாடு... நீதானே ப்ளே ...செய்தே... சொல்லுடா...! கேட்கிறேனோ இல்லையோ, ...சால்லு..." என்று கத்த,

உடனே முகத்தை மாற்றிப் பாவம் போல் அவரைப் ...ார்த்த நானி, "என்ன டாட்... இப்படிப் பேசுறீங்க...

எனக்கும்தான் ஆக்சிடென்ட் ஆச்சு, டாட்.. இதோ படுத்திருக்கானே இவனைக் காப்பாத்தத் தூக்கி என் கையில்... இதோ பாருங்க, டாட் காயம்..." என்று அவன் விரலில் போடப்பட்டிருந்த சிறிய பேண்ட்-எய்டைக் காண்பிக்க... அவர்களுக்குக் கொலைவெறி வராதா என்ன?

அபிதான் அவனிடம் வந்து, "நீ எப்போதான் மாறப் போற நானி... இப்படி மனுஷங்களை Manipulate செய்து கேம் ஆடுறதை எப்போ நிறுத்தப் போற...? சொல்லு, நாங்க எவ்வளவோ உன்னால் கஷ்டப்பட்டிருக்கோம் தான்... ஆனால், இது உனக்கே ஓவராத் தெரியலை... பணம் போனால் போகுது. ஆனால் உன்னால் அப்பா வுக்கு எவ்வளவு மனக் கஷ்டம். அந்த அதிர்ச்சியில் அவர் உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்திருந்தா என்ன செய்திருப்ப...?" என்று நடைமுறையைக் கூற,

அதற்கெல்லாம் அசைந்து கொடுத்தால் அவன் நானி இல்லையே...! அவனோ அசால்டாக, "கமான் ப்ரோ... நோ சென்டிமென்ட்ஸ்... அதுவும் என்கிட்ட...? உனக்கே நியாயமா இருக்கா...? மீ பாவம்..." என்று சிறிதும் உறுத்தாமல் உரைக்க,

குணா அவனை அறையத் துடித்த கையை அடக்கிக் கொண்டு, "ஏன்டா இப்படிச் செய்றே...? உன் தொல்லையைச் சகிச்சிக்கிட்டு நாங்க வாழ்றது நோக்குப் புடிக்கலையா...? இபபோ இப்படி வேற கேம் ஆரம்பிச்சுட்டியா...? அப்படி என்னடா நாங்க உனக்குச் செய்துட்டோம்...?" என்று கத்த,

நானி தன் சிரிப்பை சிறிதும் மாற்றாமல், "ஆமா, பா... நீங்க பாட்டுக்கு இந்த வீட்டை விட்டுப் போக வேண்டியது தானேன்னு கேட்டுட்டேள்... நேக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை. வேலையும் இல்லை... நீங்களும் போடுன்னு ஒரு நாள் வெளியே போகச் சொல்லிட்டா... என்ன செய்றது...? பெரிய ஜம்பமா நானும் கிளம்பிப் போயிட முடியாது, பாருங்கோ...?

"எனக்கு இந்தக் கௌரவம் எல்லாம் இல்லைதான்... ஆனாலும் உங்களோட பலகீனத்தை உங்களுக்கே கொஞ்சம் புரிய வைக்கலாம்னு யோசிச்சேன்... அதை நான் நினைச்சிக்கிட்டே நடந்துகிட்டு இருக்கும் போதுதான் இவன் ஒரு ஆக்சிடென்டில் மாட்டினான்... அதைப் பார்த்ததும் கணநேரத்தில் உதயமானது இந்த யோசனை...

"அதான். இவனோட எல்லா உடமைகளையும் எடுத்துட்டு, இவன் பேர் ரகுநந்தன் என்று சொல்லி, வீட்டு அட்ரஸையும் கொடுத்தேன்... பாவம் நீங்களும் நம்பிட்டீங்க. நானும் ராத்திரி முழுக்க உங்களை வாட்ச் பண்ணிக்கிட்டுதான் இருந்தேன்... ஹப்பா என்ன பீலிங்ஸ்...? நானே கண்ணில் தண்ணி வைச்சுட்டேன்... நான் இல்லாமல் நீங்க எங்கப்பா போவீங்க...? என்ன பண்ணுவீங்க? நேக்கும் போகணும்னு தோன்றது... ஆனால் எங்கே போகணும்னு தெரியலையே...?" என்று நடிகர் திலகத்தையே தன் நடிப்பிலும் உடல்மொழியிலும் தோற்கடிக்க...

குணாவும் அபியும் இயலாமையுடன் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டனர்.

இவன் எப்படிப்பட்டவன் என்று தகப்பனாலும், தனயனாலுமே வரையறுக்க முடியாத ஜீவன் ஒன்று உலகத்தில் இருந்தால் அதுதான் நானி.

மற்றவர் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல், அதை எள்ளல் செய்யும் அவர்களை, தான் வெட்டும் குழியில் விழ வைக்கும்...

சூடு, சுரணை எல்லாம் மரத்துப் போய் உலகில் உள்ள அத்தனை கெட்டப் பழக்கங்களுக்கும் அடிமை யானவன் தன் மகன் என்று கூறிக் கொள்ள யார்தான் விரும்புவார்?

ஆனால் அவனுக்கு எதிராக இத்தனை வாதங்கள் இருந்தும், அவரால் அவனை ஒதுக்க முடியவில்லை... அதுதான் வருந்தத்தக்க உண்மை.

என்னதான் இருந்தாலும் பெற்ற தகப்பனா யிற்றே...? எனவே அவன் அருகில் சென்ற அவர்,

"அப்போ நீ... நான் உன்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பிடக் கூடாதுன்னுதான் இப்படி நாடகம் போட்டே. சரியா...?" என்று ஒருவித இறுகிய குரலில் கேட்க,

அவனோ, "ஆமா டாட். இவ்ளோ நேரம் நான் அந்த மாதிரிதான் சொன்னேன்னு நினைக்கிறேன்..." என்று அதிலும் நகையாட,

குணா தன் கண்களில் விரக்தியைத் தேக்கிக் கொண்டு, "சரி நானி... இனிமே நான் உன்னை அப்படிச்

சொல்ல மாட்டேன்... நான் சாகும்வரை அந்த மாதிரி வார்த்தை என் வாயில் இருந்து வராது... இனிமே ஙங்ககூடவே தான் நீயும் இருக்கணும்... ஒரு ஷணம் கூட பிரியக் கூடாது... பத்து பைசா கூடத் தர வேண்டாம்... ஆனால் சத்தியம் பண்ணு... இனி இந்த மாதிரிச் செய்ய மாட்டேன்னுட்டு..." என்று கூற,

நானியோ அதைக் கண்டு கொள்ளாமல் தோள் களைக் குலுக்கிக் கொண்டு, "ஓ.கே. டாட்... இதை இதைத்தான் உங்ககிட்ட எதிர்பார்த்தேன்... சத்தியமெல்லாம் என்னை நம்பி நானே கொடுக்க மாட்டேன்... பை..." என்று கூறி விட்டுச் சென்றுவிட,

அபி அந்த ரஜுதேவ் சிங்கிடம், "தம்பி... நீயும் என் தம்பி மாதிரி தான்... உன் உடம்பை நல்லாப் பார்த்துக்கோ... உன்னோட கான்டாக்ட் அட்ரஸ் கொடு... உன்னோட பேரண்ட்ஸ் கிட்ட சொல்லிட்டுப் போறோம்..." என்று கூறி விட்டு, அவனிடம் இருந்து நம்பர் வாங்கி, அவன் வீட்டில் சொல்லி விட்டு, அவர்கள் தந்த பணத்தைக் கண்ணியமாக மறுத்து விட்டு... குணாவும் அபியும் வீட்டிற்கு வர,

நானி ஏற்கெனவே தனக்கு இன்று ஒரு 'டேட்' இருப்பதினால் வரத் தாமதமாகும் என்று குறிப்பெழுதி விட்டுச் சென்றிருக்க...

அதைச் சிவந்த கண்களுடன் பார்த்த குணா சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்து விட்டு அப்படியே சோபாவில் அமர்ந்துவிட,

அவர் அருகில் வந்த அபி, "அப்பா... மனசைத் திடப்படுத்திக்கோங்கோ... எல்லாத்துக்கும் உடைஞ்சு போனா அப்புறம் ஆஸ்பத்திரியிலேயே காலம் கழிக்க வேண்டியதுதான்..." என்று சமாதானப்படுத்த...

வெப்ப மூச்சை வெளியிட்டவாறு அவனைப் பார்த்த குணா, "அபி, எனக்குக் கோபம் வரலை... ஆத்திரம் வரலை... ஆனால் ஆற்றாமையா இருக்குடா... மனசு அஸ்தமனம் மாதிரி மந்திச்சுப் போயிடுமோனு நேக்கு பயமா இருக்குடா... நான் என்னடா பாவம் செய்தேன்...? இதுக்கு ஒரு முடிவே கிடையாதா...? இப்படியேதான் இருக்கணுமா? வலிக்குதுடா..." என்று தழுதழுப்பாகக் கேட்க,

அபி மென்மையாக அவரைப் பார்த்துச் சிரித்து, "கவலைப்படாதீங்கோப்பா... மாற்றம் ஒன்றே மாறாதது... இந்த உலகத்தில் எதுவுமே சாசுவதம் இல்லை... அவன் எப்படிக் கெட்டவனா மாறினானோ அதே மாதிரி நல்லவனாகவும் மாறுவான். நம்மால் முடியாட்டி வேற யாரையாவது கடவுள் அனுப்பி வைப்பார்... நீங்க எதுக்கு அலை பாயுறேள்...?" என்று கேட்க,

குணாவின் முகத்தில் மெல்லியதாய்ச் சந்தோஷக் கீற்று...

"நிஜமா அவன் மாறிடுவானாடா, அபி...?" என்று அந்த நேரத்திலும் நப்பாசையுடன் கேட்க,

அவன் நம்பிக்கையுடன் சிரித்து, "ஆமாப்பா... கண்டிப்பா அவன் மாறுவான்... நம்மால் இல்லைன்

யாலும் வேத்து மனுஷாள் மூலமாவது மாறுவான்...? அது சீக்கிரம் நடக்கும்பா..." என்று கூற,

குணா, "யாரால் இருந்தாலும் சரி... அவன் மாறினால் அதுவே போதும் நேக்கு... யாரு வந்து அவனை மாத்தப் போறாளோ...? பகவானே..." என்றபடி எழுந்து படுக்கைக்குச் செல்ல,

அபியும் அப்படியே சோபாவில் சாய்ந்த அதே நேரம்...

**செ**ன்னையில்...

"ஹக்... ஹக்..." என்று ஜானகி புரையேறி இரும ஆரம்பிக்க...

அவள் தலையில் மென்மையாகத் தட்டிய ரேணுகா, "பார்த்து... பார்த்து... யாரோ நினைக்கிறா உன்னை..." என்று சிரித்தபடி கூற,

ஜானகி விரக்திச் சிரிப்புடன், "ஆமா... உன்னைத் தவிர இந்த லோகத்தில் என்னை யாரு நினைக்கப் போறா...?" என்று கூற,

ரேணுகாவின் முகம் ஒரு நிமிடம் கறுத்து, பின்... "ஏன்டி... இப்படி விரக்தியாப் பேசுறே... எவ்வளவு வாட்டி சொல்றது இப்படிப் பேசாதேன்னு..." என்று கடிந்து கொள்ள...

அவள் பேசாமல் டி.வி.யின் பக்கம் கவனத்தைத் திருப்பி, இரண்டு இட்லிகளைத் தன் வாயில் போட ஆரம்பித்தாள்.

ரேணுகா மனதுக்குள், 'ஆமா, எது சொன்னாலும் இப்படித்தான். டி.வி.யைப் பார்க்கிறேன்னு திசை திருப்ப வேண்டியது... என்ன பொண்ணோ...?" என்று அங்கலாய்க்க,

ஜானகி டி.வி.யை விட்டு கண்களைத் திருப்பினா ளில்லை...

அந்த அறையும் டி.வி.யும் தான் ஜானகியின் உலகம்...

டி.வி. பைத்தியம் என்பதில்லை... அவள் பார்ப்பதெல்லாம் உபயோகமான நிகழ்ச்சிகள்தான்.

செய்திகள் மற்றும் கைவினைப் பொருட்கள் செய்யக் கற்றுத் தரும் நிகழ்ச்சிகள், ஆன்மிகம்... இவை தான் முக்கியமானவை... பொழுதுபோக்கிற்காக மெல்லிசைப் பாடல்களைக் கேட்பதோடு சரி... அவளுக் காகக் குமரர் அனுமதித்த ஒரே விஷயம், அந்தப் பழைய டி.வி.தான்... அந்த டி.வி. நிறுவனமே ஊத்தி மூடிக் கொண்டு போய்விட்டதுதான்... ஆனால் ஜானகிக்கு அது இல்லாவிட்டால் உலகமே இல்லை.

அவள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, கீழிருந்து வைஜுவின் அழைப்பு கத்தலாய் ஒலிக்க,

கீழே சென்று கேட்டு விட்டு வந்த ரேணுகாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது... அதைப் பார்த்த ஜானகி,"ஏன்மா, என்னாச்சு... ஏன் இப்படிக் கோபமா வர்ற?" என்று கேட்க,

ரேணுகா தன் நாடியை நொடித்தபடி, "வேறென்ன... எல்லாம் உன் மன்னிகள் தான்... திவ்யாவைப் பொண்ணு பார்க்க வர்றாளோன்னோ...? அதுக்கு நீதான் ஜாக்கெட்டில் எம்பிராய்டரி செய்து கொடுக்கணுமாம்... இது உன் பெரிய மன்னிக்கு... அப்புறம் உன் சின்ன மன்னிக்கு... நாளைக்கு அவ பியூட்டி பார்லர் போறா ளாம்... அவ வர்றவரைக்கும் நீ ப்ரீத்தியைப் பார்த்துக் கணுமாம்..." என்று எரிச்சலுடன் கூற,

அவர் எரிச்சலுக்குப் பதிலாக... ஜானகி தன் சிரிப்பையே கொடுக்க... அது மேலும் அவரை எரிச்சல் படுத்தியது.

அதனால் ஜானகியிடம் சற்று காட்டமாகவே, "ஜானு! நோக்கு கோபமே வராதா...? வாழ்க்கையில் ஒண்ணு ரெண்டு தடவையாவது நமக்காகக் கோபப்படலாம். தப்பில்லை... அப்படிச் செய்யலைன்னா உன்னை ஏறி மிதிச்சுண்டு போயிட்டே இருப்பா...?" என்று அவளுக்கு அறிவுரைக்க,

அவளோ, தன் மென்மையான சிரிப்பு மாறாமல், "அம்மா... என்னை மிதியடியா உபயோகிக்கிறாளேன்னு நீ வருத்தப்படுறே... அது நியாயம்தான்... தப்புன்னு சொல்ல முடியாது. ஆனால் நான் என்னை அப்படி யாவது உபயோகிக்கிறாளேன்னு நிம்மதிப் பட்டுக்கிறேன் அவ்வளவு தான்... என்னை உன்னால் புரிஞ்சுக்க முடியாதும்மா!" என்று கூற,

ரேணுகா, "நான் உன்னைப் புரிஞ்சுக்க வேண்டாம், ஜானு... அதுக்கு நான் முயற்சியும் செய்ய மாட்டேன்...

ஏன்னா, நீ பண்றதை என் மனசு கொஞ்சம் கூட ஒப்பல்லைடி, கண்ணம்மா... நீ ஏதோ இந்த ஓட்டை டி.வி.யில் அதை இதைக் கத்துண்டு செய்யப் பழகுறே... அதுவும் கண்ணுல ஒத்திக்கிற மாதிரி இருக்குதான்... ஆனால் அதைச் செஞ்சு தான்னு கேட்கிறதைக் கூட அவமானமா நினைக்கிறவாளுக்கு ஏன் செய்யறே...?

"அதுவும் குழந்தைகளை மத்த நேரம் உன் பக்கத்திலயே விடமாட்டா... அதுவும் உங்கப்பா இருந்தால் சுத்தம்... உன் கண்ணுலயே காட்ட மாட்டா... ஆனால் இப்போ உங்கப்பா வெளியே போயிருக்கிற நேரம் குழந்தைகளைப் பார்த்துக்க உன்னை ஏவுறா... இதெல்லாம் என்னால் ஜீரணிக்க முடியலைடி..." என்று அங்கலாய்க்க,

ஜானகி சிறு புன்னகையுடன் அவரைப் பார்த்து கொண்டிருந்தாள்.

ஜானகிக்கு இந்த மாதிரி கைவினைப் பொருட்கள் செய்வது கைவந்த கலை... எம்பிராய்டரி முதல் அலங்காரப் பொருட்கள் வரை அத்துப்படி... இதனால் அவளின் அண்ணிகள் அவர்களின் வேலையை இவளிடம் விடுவதுண்டு... மேலும் ஹரிஷையும், ப்ரீத்தி யையும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அவளுக்கு அவ்வப்போது உண்டு... இதெல்லாம் செய்வதில் ஜானு அலுத்ததே இல்லை.

ஆனால் அவளின் இந்த உதவிகளுக்கு அண்ணிகளிடம் இருந்து எந்தவித எதிர் மரியாதையும்

இருக்காது... அவ்வளவு ஏன்... அவள் அறைக்குக் கூட இதுவரை வந்ததில்லை...

எல்லாம் ரேணுகா விடு தூதுதான்... என்னதான் ரேணுகா கணவனிடம் வாயில்லாப் பூச்சியாக இருந் தாலும், தன் மகளுக்கு நடக்கும் இந்த அவமரியா தையைக் கண்டு அவர் பொங்காத நாளில்லை... ஆனால் ஜானகியோ, அவரைக் கண்டுகொள்ள மாட்டாள். மாறாக, அவளுக்கு இந்த வகையிலாவது வீட்டிற்கு உபயோகமாக இருக்கிறோமே என்று சிறு சந்தோஷமும் துளி கர்வமும் தான் இருந்தது.

ஆனால் அதெல்லாம் முட்டாள்களின் கனவு என்பதை அவள் அறிந்தாலும், வெளியே காட்டிக் கொள்ள மாட்டாள்... எனவே இப்போதும் புலம்பிக் கொண்டிருந்த ரேணுகாவை அதட்டி,

"அம்மா... தயவு செய்து உன் புலம்பலை விடுறியா...? என்னால் முடியலை... நேக்கு இது புடிச்சிருக்கு. நான் செய்யறேன்... போய் அந்த ப்ளவுஸை எடுத்து வா... அப்படியே எம்ப்ராய்டரி செய்ற பொருட்கள் கொஞ்சம் வேணும்... அதுவும் தர்றியாம்மா...? நீ கொடுத் தேனா நான் இதை முடிச்சுண்டு ப்ரீத்தி குட்டியையும் பார்த்துப்பேன்..." என்று கூற,

ரேணுகா அவளை நினைத்துக் கோபிக்கவும் முடியாமல், ஒன்றையும் செய்ய முடியாமல் தலையில் அடித்துக் கொண்டே... மகள் கேட்டதையும் செய்து விட்டே நகர்ந்தார்.

ஆனால் இப்படி ஒரு சின்னக் கூட்டுக்குள் தன்னையே சுருக்கிக் கொள்ளும் ஜானகி கூடிய சீக்கிரமே அதை விட்டு வெளியே இழுத்து வரப்படுவாள் என்று அவருக்கு மட்டுமில்லை....

யாருக்குமே தெரியவில்லை...

கேள்வி மட்டும்தானே நம்மிடம், பதில் காலத்திடம் தானே...? பொறுத்திருப்போம்..

## 6

அன்று காலையில் இருந்தே குணாவின் மனதை முந்தைய நாளின் நானியின் காரியங்கள் அரித்துக் கொண்டே தான் இருந்தது... வழக்கம் போல் தெய்வத் திடம் தன் கவலைகளைத் தொலைக்க முற்பட்டவர்... பூஜையறையில் வழக்கத்திற்கும் மாறாக நெடுநேரம் காலம் கடத்தி விட்டு அதற்கு மேலும் சரியான தீர்வு கிடைக்காததால் அபியிடம், "அபி... நான் பக்கத்தில் உள்ள பார்க் வரை போய் உட்கார்ந்துட்டு வர்றேன்... மனசே சரியில்லை..." என்று கம்மிய குரலில் கூற,

அவரைப் பரிதாபமாகப் பார்த்த அபி, "அப்பா... ஏன் இப்படி அலட்டிக்கிறேள்... இப்படியே இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்... மனசை டைவர்ட் பண்ணுங் கோப்பா... ஒண்ணு இப்படித்தான் என்று நிச்சயம் ஆனதுக்குப் பிறகு, நாம் என்ன செஞ்சாலும் எதுவும் ஆகப் போறதில்லை. நிதர்சனத்தைச் சாதாரணமா ஏத்துண்டா நமக்குக் கஷ்டம் மிச்சம்பா..." என்று கூற,

அவனைக் கண்ணீர் மல்கப் பார்த்த குணா, "ஆமாடா அபி... நீ சொல்றது எல்லாம் நூத்துக்கு நூறு நிஜம்... நானும் உன் வயசில் இப்படித்தான் சொல்லி யிருப்பேன்... ஆனா, எனக்கு வயசாயிடுத்தேடா... எனக்குப் புதுசை ஏத்துக்கிற பக்குவம் இல்லை போல... எனக்கு என் பழைய மகனே போதும்... இப்போ பார்த்தா அவன் கிடைக்கவே மாட்டான் போல இருக்கே..." என்று சிறு குழந்தையாய்க் கெஞ்ச, அபியாலும் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை.

அபி ஒரு நீண்ட பெருமூச்சுடன், "சரிப்பா... நான் வேற... எப்போ பார்த்தாலும் பேசிப் பேசி உங்க மனசை நோகடிச்சுண்டே இருக்கேன்... உங்க மனசுக்கு இப்போ தேவை நிம்மதிதான்பா... நீங்க கொஞ்ச நேரம் போய் பார்க்கில் உட்காருங்கோ... சற்றே காத்தாட உட்கார்ந்தாலே மனசு பஞ்சாட்டம் லேசாகிடும்... அப்புறமா நாம் பேசிக்கலாம்...

"இருட்டிடுத்துன்னா என்னை கூப்பிடுங்கோப்பா... நீங்க நேரங்கெட்ட நேரத்தில் தனியா வராதீங்கோ..." என்று கூறி வழியனுப்ப, அவன் கரிசனத்தைக் கூட சரிவர உணர முடியாத மரத்த உணர்ச்சிகளுடனும், தளர்ந்த நடையுடனும் செல்லும் தன் தந்தையைப் பாவமாகப் பார்த்தான் அபிநந்தன்.

'எப்படி இருந்த மனிதர்? சிறு வயதில் தங்களுக் கெல்லாம் சிம்ம சொப்பனமாக இருந்தவர்... அப்பாவின் ஒரு பேனாவை எடுக்கக் கூட யாருக்கும் தைரியம்

வராது... சிறு வயதில் அவரின் சட்டைப் பொத்தான் ஒன்றைத் தான் பிய்த்துவிட்டதால்... வாங்கிய அடிகளின் வலி இன்னும் அவன் மனதில் மாறாமல் பசுமையாய் வீற்றிருந்தது.

அப்படிப்பட்ட அப்பாவைக் கண்டாலே அலறி யடித்துப் பின் வாங்கும் தன் தம்பி இப்போது... என்ன வென்று சொல்ல...? இது யாருக்கான தண்டனை...? தம்பிக்கா அல்லது அவனின் தகப்பனாருக்கா...? நினைத்து நினைத்துத் தானும் மன அழுத்தம் தாங்காமல் ஏதாவது செய்து விடுவோமோ...?' என்று நினைத்த அபி, தன் மனதை வலுக்கட்டாயமாகத் திசை திருப்பித் தன் அலுவலக வேலைகளில் நுழைத்தான்.

அதே நேரம்... ஒருவித நடுங்கும் நடையுடன் பூங்காவிற்கு வந்து அமர்ந்த குணாவின் மனதில் இன்னதென்று சொல்ல இயலாத அளவு துக்கம் பொங்கி வழிந்தது. ஒரு நிமிடம்...

'சே... சனியன்... தலையெழுத்து... எக்கேடோ கெட்டுப் போகட்டும்... நமக்கென்ன வந்தது...? நம் காலம் முடியும் வரை கஞ்சி ஊற்றி விட்டு, விதி வந்தால் போய் விடலாம்...' என்று நினைத்தாலும், மறு நிமிடம் அவர் மனமே அவரை உலுப்பி,

'குணா... அவன் பிறந்ததில் இருந்தே இப்படி இருந்தால் பிறவிக் குணம் என்று தள்ளலாம். ஆனால், அவன் மாறியிருக்கிறான்... கேசாதிபாதம் வரை மாறியிருக்கிறான். இதற்கு யார் காரணம்...? இப்படி

அவன் தன்னையும் அபியையும் துச்சமாக மதிப்பதன் காரணம் என்ன...? அவன் தன் வாழ்நாள் கனவாகத் தன் கடும் உழைப்பின் பயனாகக் கிடைத்த வேலையை ஏன் விட்டான்...? இப்படி ஊரில் உள்ள கெட்ட பழக்கங்களை எல்லாம் ஏன் பழகிக் கொள்ளுகிறான்...? அது புரிந் தால்... அதன் காரணத்தை அறிந்து ஏதாவது முயற்சி செய்து அவனை மாற்றினால், எவ்வளவு பெரிய நல்லது நடக்கும்...?' என்று அவர் மனதின் ஓரம் உள்ள சிறிய நப்பாசைதான் அவரை இந்தளவிற்குப் புலம்ப வைக் கிறது.

'வைதேகி... உன் கிட்டே வாக்குக் கொடுத்த மாதிரிப் பெரியவனையும் சின்னவனையும், நீ நினைச்ச மாதிரியே இஞ்சினியராகவும் டாக்டராகவும் ஆக்கிட்டேன் என்ற மிதப்பில் இருந்தேனே...? என் தலையில் பாறாங் கல்லைத் தூக்கிப் போட்டுட்டானே உன் மகன்...? நீ கவலைப்படாதே வைதேகி... கண்டிப்பாக அவன் மாறுவான். நான் கெட்டவன்தான்... ஆனால், நீ தங்க மாச்சே...! உன் குணம் கொஞ்சமாவது அவனிடம் இன்னும் ஒட்டிக்கிட்டு இருக்காதா...? அந்தக் குணம் அவனை கண்டிப்பா வெளியே கொண்டு வரும். நேக்கு அந்த நம்பிக்கை இருக்கு...' என்று பலவாறு நினைத்துக் கொண்டே அமர்ந்திருந்தவரை,

"ஹாய் மேன்... குணா..." என்ற அழைப்பு திடுக் கிட வைத்தது. சட்டென்று அழைக்கப்பட்ட பெயரில் திரும்பிப் பார்த்தவர், அங்கு தன் அலுவலகத் தோழர்

வில்லியம்ஸைக் கண்டு ஆச்சரியப்பட்டார். வில்லியம்ஸ், குணாவின் நெருங்கிய நண்பர்.

ஆங்கிலேயர்தான் என்றாலும் மிகுந்த தோழமை யுடன் அனைவரிடமும் ஒன்றக் கூடியவர். எந்தக் கஷ்டம் என்றாலும் வில்லியம்ஸுடன் பகிர்ந்து கொள்ளவில்லை என்றால், குணாவால் சாதரணமாகவே இருக்க முடியாது. முந்தைய நாட்களின் நெருக்கடிகளை அவரிடம் பகிர்ந்து கொள்ளாததால்தான் மன உளைச்சல் அதிகமாக இருக்கிறதோ என்று குணா எண்ணியிருந்த வேளையில், இப்போது வில்லியம்ஸே அவரைப் பார்க்க வந்தது குணாவிற்கு மிகுந்த ஆசுவாசத்தை அளித்திருந்தது.

அவரை அழைத்தவாறு நெருங்கி வந்த வில்லியம்ஸை, வரவழைத்த சோகமான புன்னகையுடன் குணா பார்க்க,

அவரைப் பார்த்துச் சிரித்த வில்லியம்ஸ், ஆங்கிலத்தில், “என்ன மேன்... கஷ்டப்பட்டுச் சிரிக்கிறே...? என்னடா, நம்ம உயிரை எடுக்க வந்துட்டான்னா... என்று பார்க்கிற மாதிரி இல்லே இருக்கு. என்ன, ஏதாவது பொண்ணு கூட டேட்டிங் போறதுக்காகக் காத்துக்கிட்டு இருக்கியா..?” என்று அவர் தோழமையுடன் கூடிய நக்கலில் கேட்க, குணாவோ புன்னகைத்து,

“அடப்போ வில்ஸ்... நீ வர வர என் சின்ன மகன் மாதிரியே பேச ஆரம்பிச்சிட்டே...! அவன் தொல்லை தாங்க முடியாமல்தான் நானே வந்து உட்கார்ந்திருக் கேன்... இதில் நீ வேற...” என்று அலுத்துக் கொள்ள,

அவர் பதிலைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்த வில்லியம்ஸ்,

"ஓ... மை டியர் குணா... அவனைப் பத்தி என்ன கவலை உனக்கு? அவனை மாதிரி ஒரு பெர்சனாலிட்டி ரொம்ப அபூர்வம்... நான்தான் ஏற்கெனவே சொல்லி யிருக்கனே... அவனை எனக்குப் பிடிக்கும். சோ... அவனைப் பத்தி என் கிட்டே குறை சொல்லாதே..." என்று கூற, இப்போது குணா, வில்லியம்ஸை முறைத்தார்.

ஆம்! வில்லியம்ஸ் கூறுவது உண்மைதான். அனைவரும் கரித்துக் கொட்டிய போதும், வில்லியம்ஸ் எப்போதும் துணை நிற்பது நானிக்குதான். இப்போதும் அவர் அப்படியே கூற, குணா அவரிடம், "வில்லி... மறந்துட்டியா...? உங்க பொண்ணை என் கூட ஒரு நாள் டேட்டுக்கு அனுப்புவீங்களா அங்கிள்னு கேட்டான் அந்தக் கூறு கெட்டவன்... அவனுக்குப் போய் இப்பவும் சப்போர்ட் பண்ணுறே... உனக்கும் அவனை மாதிரி மறை கழண்டுடிச்சா...?" என்று கேட்க,

வில்லியம்ஸ் அதற்கும் சிரித்து, "ஆமாம்... கேட்டான் தான்... அந்த மாதிரிக் கேட்டால் உடனே கெட்டவனா...? ஒருவேளை அந்த மாதிரிக் கேட்காமல், அவனே என் பொண்ணைக் கூட்டிட்டுப் போயிருக்கலாமே...? இந்த மாதிரி வெளிப்படையாய் கேட்டான்... நான் பெர்மிஷன் தரலை... அதுக்கு மேல் தொந்தரவு செய்தானா...? அவன் ஒரு மாதிரி பெக்குலியர் கேரக்டர் குணா... அவனைப்

புரிஞ்சிக்கிட்டா இந்த உலகத்தில் பல மனிதர்களை நாம் புரிஞ்சிக்கலாம்...

"என்ன... அவங்க எல்லாரும் ஒரு முகமூடி போட்டுக்கிறாங்க... அவன் அதைக் கிழிச்செறிஞ்சிட்டான். அதான் அவனைத் தனிச்சுக் காட்டுது. தேவை இல்லாத சர்க்கரைப் பேச்சு, பூசி மெழுகல், வளைந்து கொடுத்தல், சுற்றத்தார் தன்னை என்ன நினைப்பாங்களோன்னு கவலைப்படுறது போன்ற சாதாரண குணங்கள் எதையுமே அவன் கிட்டே எதிர்பார்க்க முடியாது. இந்தக் குணங்கள் எல்லாம்தான் நான் மனுஷங்க கிட்டே வெறுக்கிறது... அதனால... காட்... அவன் ஒரு தேவதூதன் என்னைப் பொறுத்தவரை..." என்று கூற,

குணா அவரைக் கையமர்த்தி, "போதும்... போதும். கேட்கவே நாராசமா இருக்கு. இதெல்லாம் ஓவரா இல்லை... சரி... இப்போ நான் நேத்து நடந்த விஷயத்தைச் சொல்றேன்... அவன் செஞ்சது சரியா தப்பான்னு நீயே சொல்லு..." என்றவர், அந்த விபத்து நிகழ்ச்சியைக் கூற, உன்னிப்பாகக் கேட்ட வில்லியம்ஸ் முகத்தில் பெரிய புன்னகை தோன்ற, அதைப் பார்த்துப் பெருமூச்சு விட்ட குணா,

"கண்டிப்பா நீ இந்த விஷயத்திலேயும் அவனுக்கு சப்போர்ட்தான் பண்ணப் போறேன்னு உன் சிரிப்பை வெச்சே எனக்குத் தெரிஞ்சுடுச்சி... சொல்லு... அவன் பக்கம் நியாயம்னு ஒண்ணை நீ வெச்சிருப்பியே..." என்று கூற, அவர் தோளில் தட்டிய வில்லியம்ஸ்,

“கரெக்டா கண்டு பிடிச்சுட்டியே... நான் அவன் செய்தது முழுக்க முழுக்கச் சரின்னு சொல்ல வரலை... ஆனால், அவன் சொன்னது உண்மைதானே...? உங்களோட பலகீனத்தை உங்களுக்கே உணர்த்தி யிருக்கான்... அதே சமயம், அவனோட இயலாமையையும் ஒத்துக்கத்தானே செஞ்சான். அவன் கிட்டே பணம் இல்லாதப்போ என்ன செய்யறது...? இன்னொன்றையும் நீ ஒத்துக்கணும்... அவன் என்னதான் கெட்டது செய்தாலும் ஒரு உயிரைக் காப்பாத்தத்தானே செய்திருக்கான்... அவன் கிட்டே ஏதோ ஒண்ணு இருக்கு குணா...” என்று அவர் சிலாகித்துப் பேச, குணா பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கி,

“அய்யோ... போதும் வில்லியம்ஸ்... என்னால் முடியலை. அவனை நான் புரிஞ்சுக்கவே வேண்டாம்... ஏற்கெனவே மண்டை காய்ஞ்சு போய் இருக்கேன்... அபிக்குக் கல்யாணம் பேசணும்.. இவனை இங்கே விட்டுட்டுப் போக முடியாது. கூட்டிட்டுத்தான் போகணும். அங்கே போய் இவன் என்னவெல்லாம் தகராறு இழுக்கப் போறானோ...? எனக்கு அதை நினைச்சாலே பயமா இருக்கு...” என்று சராசரித் தந்தையாக வருத்தப்பட,

அவரின் மன நிலை வில்லியம்ஸுக்குப் புரியத்தான் செய்தது. அவர் தனித்தன்மை வாய்ந்தவர். மனிதர்களின் ஆழ்மனதின் எல்லை வரை உணரும் திறன் கொண்டவர், மனநலம் படித்தவர். அதனால் அவரால் நானியைத் தவறாக நினைக்க இயலவில்லை. மாறாக அவன் மீது

ஒரு பற்று எழுந்தது அவருக்கு. ஆனால், தனக்கு அறிந்தது குணாவால் அறிய முடியாது... அந்த மனமுதிர்ச்சி அவரிடம் இல்லை என்பதை உணர்ந்த அவர், தன் நண்பனின் குறை தீர்க்க முற்பட்டார்.

"சரி, குணா... இதுவரைக்கும் ஒரு பார்வையாள னாய் இருந்துதான் நான் பேசினேன். ஆனால், இனி ஒரு தீர்வுக்காகப் பேசப் போறேன்... நான் ஒரு கேள்வி கேட்பேன்... நீ பதில் சொல்வியா...?" என்று கேட்க,

குணாவும் தலையாட்ட, அவர், "சின்ன வயசில் நீ உன் பிள்ளைகள் கிட்டே கண்டிப்பா இருப்பியா...?" என்று கேட்க,

குணா, "இதென்ன கேள்வி...? யாருதான் கண்டிப்பா இருக்க மாட்டாங்க...?" என்று எதிர்வாதம் புரிய,

வில்லியம்ஸ் சிரித்தபடி, "அவங்க எல்லாம் இப்படி என் பையன் மாறிட்டான்னு புலம்பலையே... நீதானே புலம்புறே...? சொல்லு..." என்று கேட்க,

குணாவின் தலை ஒரு நிமிடம் குனிந்து பின், 'ஆமாம்...' என்பது போல் தலையாட்ட, வில்லியம்ஸ் சில நிமிடம் யோசித்துப் பின், "கண்டிப்பான்னா எப்படி...? ஆன் தி ஸ்கேல் ஆஃப் 1 டு 10 ஹறவ் மச் யு வில் மெஷர்...?" என்று கேட்க,

குணா, "நான் ரொம்பக் கண்டிப்புதான் வில்ஸ்... அதுவும் என் மனைவியோட இறப்புக்கு அப்புறம் எப்படியாவது என் பிள்ளைகளை நல்ல நிலைக்குக்

கொண்டு வரணும்னு ரொம்பக் கண்டிப்பாகத்தான் நடந்துக்கிட்டேன்... லெட்ஸ் சே 8..." என்று கூற,

வில்லியம்ஸ் தன் நாடியைத் தடவியபடி சிறிது நேரம் யோசித்து,

"குணா... உன்னை விட நான் நானியை நல்லாப் புரிஞ்சு வெச்சிருக்கேன். நானி இப்போ என்ன நிலையில் இருக்கான்னு சொல்லணுமா...? டேக் இட் அஸ் ய எக்ஸாம்பிள்... பால் சூடு பண்ண விறகடுப்பில் வெச் சிருக்கே... ஆனால், பொறுமை இல்லாமல் வெப்பத்தைக் கூட்டிக் கூட்டி ஒருவித அழுத்தத்தைக் கொடுத்திருக்கே... அதனால் ஓரளவுக்கு மேல் தாங்க முடியாமல் பொங்க ஆரம்பிச்சுருச்சு... இப்போ நீ சூட்டை அணைச்சாலும் பால் பொங்கிட்டேதான் இருக்கும். மூடி போட்டால் பாத்திரம் வெடிச்சிரும்... இப்போ என்ன பண்றது?" என்று கேட்க,

அவர் புரியாமல் விழிக்க, வில்லியம்ஸ் சிரிப்புடன் கேட்டார், "ஹ்ம்.. சொல்லு... எப்படி நிறுத்துறது...?" என்று கேட்க,

குணா, "எனக்கும் ஒண்ணும் புரியலை. நீயே சொல்லிடு..." என்று கூற,

வில்லியம்ஸ், "சோ சிம்பிள்... என்ன ஆனாலும் பரவாயில்லைன்னு விட்டு... பால் அதுவா பொங்கி வழிஞ்சு நெருப்பை அணைச்சிடும்... என்ன, புரிஞ்சுதா... உனக்கு இது இப்போ பைத்தியக்காரத்தனமாகத்தான் இருக்கும்... ஆனால், ஒரு நாள் நான் சொன்னதுதான் சரின்னு புரிஞ்சுப்பே..." என்று கூற,

குணா, "அதுக்காக அவனை அப்படியே விடுறதா...? அவனை அடக்கவே முடியாதா...?" என்று கேட்க,

வில்லியம்ஸ், "பார்த்தியா...? இன்னும் நீ அவனை அடக்கிறதில்தான் இருக்கே... விடு குணா... அவன் பாட்டுக்குப் பொங்கி வழிஞ்சு அணைஞ்சிடுவான்... ஆனால் ஒண்ணு, அவனைத் தனியா மட்டும் விடாதே... உன் கூடவே வெச்சிக்கோ... அபிக்கு எங்கே கல்யாணம் பண்றதா இருக்கே...?" என்று கேட்க,

குணா, "என் அக்கா பெண்தான் வில்லியம்ஸ்... கல்யாணமும் சென்னையிலேயே வெச்சிக்கலாம்னு இருக்கேன்... பேசாமல் வொர்க் ப்ரம் ஹோம்னு பெர்மிஷன் வாங்கிட்டுச் சென்னையில் போய்க் கொஞ்ச நாள் இருக்கலாம்னு நினைக்கிறேன்..." என்று கூற,

வில்லியம்ஸும் அந்த யோசனையை ஆமோதித் தார். "அதுதான் சரி.. இதே இடத்தில் இருக்கிறவரை அவனைக் கட்டுப்படுத்துறது கடினம்... இது அவனோட NICHE... அதாவது எல்லா மனுஷனுக்கும் உயிரினத் திற்கும் தனக்கு எல்லாவித சௌகர்யமும் தருகிற இருப் பிடம் என்று ஒன்று வைத்து இருக்கும்... நானியைப் பொறுத்தவரை இந்த ஊரு அப்படித்தான்... புது இடம், புது சூழ்நிலை அவன் கிட்டே சில மாற்றங்களைக் கொண்டு வரலாம்... இது என்னோட யோசனைதான். இதை ஒத்துக்கிறதும் ஒத்துக்காததும் உன் இஷ்டம்," என்று அதே சிரிப்புடன் கூற... அவர் கையைப் பிடித்துக் கொண்ட குணா,

"நீ என்ன சொல்ல வரேன்னு எனக்குப் புரியுது வில்ஸ்... ஒரு வகையில் அவன் இப்படி இருக்க நானும் காரணம்தான்னு நினைக்கிறேன். அதனால் இனி நீ என்ன சொல்றியோ அது மாதிரியே நான் செய்யறேன். இவ்வளவு நாள் நான் செய்த பைத்தியக்காரத்தனம் எல்லாம் போதும்... நீ வர்ற வரை நான் எப்படி இருந்தேன் தெரியுமா...? இப்போதான் என் கண்ணுக்குக் கொஞ்ச மாவது வெளிச்சம் தெரியுது," என்று நெகிழ்ச்சியுடன் கூற, அவரை ஆதூரத்துடன் பார்த்தார் வில்லியம்ஸ்.

"முடியாது... முடியாது... என்னால் சென்னைக்கு வர முடியாது... அவனுக்குக் கல்யாணம்னா அவன் மட்டும் போகட்டும்... சரி உங்களோட கெத்துக் காட்ட ணும்னா நீங்களும் போயிட்டு வாங்க... என்னை ஏன் கூப்பிடுறீங்க...? ஐ ஆம் நாட் பய்யிங் திஸ் க்ராப்..." வர மாட்டேன் என்று தலைகீழாக நின்ற நானியை அழைத்துப் போகப் படாத பாடு பட்டனர் தந்தையும் தனயனும். இன்னும் அபி - திவ்யாவின் நிச்சயத்திற்கு நான்கு நாட்கள்தான் இருந்தன. நாளை கிளம்பினால் தான் சரியாக இருக்கும். சென்னையில் குமரரின் வீட்டிற்குப் பக்கத்துத் தெருவிலேயே ஒரு வீடு பார்த்தி ருந்தனர்.

இதில் குமரகுருபரருக்குச் சற்றே வருத்தம்தான். ஆனால், குணாதான்...

"இல்லை அத்திம்பேர்... நானியைப் பத்திதான் தெரியுமே... பொம்மனாட்டிகள் இருக்கிற இடம்... அவனை

வெச்சிக்கிட முடியாது... தேரை இழுத்துத் தெருவில் விட்டுருவான்... அதுவும் இல்லாமல், மாப்பிள்ளையும் பொண்ணும் ஒரே வீட்டில் இருக்கப்படாது... தேவை யில்லாத பேச்சு... அதான்... கொஞ்ச நாள் தானே... கொஞ்சம் பொறுத்துக்கோங்க அத்திம்பேர்..." என்று கெஞ்சி ஒருவாறு சமாதானப்படுத்தித் திட்டம் போட்டு ஏற்பாடு செய்ய, இப்போது நானி அவன் வேலையைக் காட்ட ஆரம்பித்திருந்தான்.

ஓரளவிற்கு மேல் அவன் அடம் கட்டுக்கடங்காமல் போக, குணா முகம் சுணங்க, அதைத் தாங்க முடியாத அபி தன் தம்பியிடம், "டேய்... ரொம்ப ஓவராப் போனியோ... உன் அக்கவுண்டை ஃப்ரீஸ் பண்ணி உன்னாண்ட சல்லிக்காசு இல்லாமல் செய்துடுவேன். அப்புறம் உன் உல்லாசம் ஒண்ணும் கிடைக்காது. நீதான் சொன்னியே காசுக்காகத்தான் எங்க கூட இருக்கேன்னுட்டு... அதுவே இல்லாமப் போனா நீ என்ன பண்ணுவே...? என்ன பார்க்கிறே... நான் சாதுதான்... ஆனால், சாது மிரண்டால் நீ தாங்க மாட்டே... ஒழுங்கா சென்னைக்கு வந்து வாலை அடக்கிட்டு உட்காருற வழியைப் பாரு..." என்று அதட்ட,

அவனை முழுதாக ஐந்து நிமிடங்கள் கண்கள் இடுங்க முறைத்த அவன், அறைக்குள் சென்று சில மணி நேரம் பொருட்கள் அனைத்தையும் கோபத்தில் போட்டு உடைத்து விட்டுப் பின் அப்படியே தூங்கி விட்டு, எழுந்து தன் மனம் மாறி பெட்டியை அடுக்க ஆரம்பிக்க, குணாவும் அபியும் சிரிப்பை அடக்கிக் கொண்டு தங்கள் வேலையைப் பார்த்தனர்.

சூரியவிலாஸ்... ஒரு திருமண நிச்சயம் நடக்கும் வீட்டின் அத்தனை குணாதிசயங்களையும் கொண்டு திகழ்ந்தது அன்று. மிகுந்த கூட்டம் எதுவும் இல்லாமல், மிக நெருங்கிய உறவினர்களை மட்டும் அழைத்திருந்தார் குமரர். இதனால் படாடோபமின்றி அழகு மிளிரத் துவங்கியது அந்த உறவுகளின் சங்கமம். ரவியும் சேகரும் ஓடியாடி ஏற்பாடுகளைச் செய்ய, வைஜூவும் ராதாவும் பட்டுப்புடவைச் சரசரக்க, வைர அட்டிகை மினுமினுக்க உறவினர்களுடன் வாயடித்துக் கொண்டிருக்க, ரேணுகா வழக்கம் போல் தன் சமையலறை ராஜ்ஜியத்திலேயே புகைந்து கொண்டிருக்க, குமரரும் குணாவும் அரசியல் இன்ன பிற பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருக்க, மணமகளும் மணமகனும் ஒருவரையொருவர் பார்வை யால் பருகிக் கொண்டிருக்க,

அதில் தன்னந்தனியாகத் தனித்து விடப்பட்டது நானியும் ஜானகியும்தான்.

ரேணுகா காலையிலேயே, "ஜானு... நான் கூட்டிட்டுப் போறேன்... கீழே வா... உன் அக்காவோட நிச்சயம்... நீ வராமல் எப்படி...?" என்று கெஞ்சினாலும் ஜானகி அடியோடு மறுத்து,

"அம்மா... நான் வந்தா அப்பாவுக்குப் பிடிக்காது. எதுக்கு நான் அபசகுணமா...? எனக்கு நாள் கிழமையில் தனியா இருந்து பழக்கம்தான்... ஒண்ணா இரண்டா... பத்து வருஷமா இப்படித்தானே இருக்கேன்... தயவு செய்து விட்ரும்மா..." என்று கெஞ்சவும், ரேணுகாவாலும் அதற்கு

மேல் வற்புறுத்த முடியாமல், பொங்கிய கண்ணீரை மறைத்தபடி கீழே வந்தார்.

நானியின் நிலையோ வேறாக இருந்தது.

ஏற்கெனவே அவனைப் பற்றிக் குணா கூறியிருந்ததால், அவனை ஒரு பொருட்டாகவே யாரும் மதிக்கவில்லை. ரேணுகாதான் வந்தவுடன் புன்னகையுடன் காபி கொடுத்தார். அவனைப் பாசத்துடன் சிறிது நேரம் கண்ணெடுக்காமல் பார்த்து விட்டு, அவர் சமையலறைக்குள் புகுந்து கொள்ள, அதற்கு மேல் அவனை யாரும் கண்டு கொள்ளவில்லை. சும்மாவே அவனுக்கு யாரையும் பிடிக்காது, இதில் அவனால் எப்படி இவர்களிடம் பழக முடியும்...? இதனால் எரிச்சலுற்ற அவன், ஒரு யோசனை செய்தான்.

இப்படியாக நிச்சயமும் துவங்கியது. திருமணத் தேதி நிச்சயமாகாத நிலையில், அபி - திவ்யா இருவரின் ஜாதகத்தையும் தங்களுக்குத் தெரிந்த ஜோசியரின் முன்பு வைத்துப் பயபக்தியுடன் கேட்க, அந்த வரிசையில் நேர் பின்னால் அமர்ந்து கொண்டான் நானி. அவரோ அதை வைத்துக் கொண்டு விரல்களை இப்படியும் அப்படியும் எண்ணிக்கொண்டு பின்,

“இந்த ரெண்டு பேருக்கும் ஜாதகம் பேஷா இருக்கு... 10 பொருத்தம் பக்காவா பொருந்தியிருக்கு... பஞ்சாங்கப்படி அடுத்த மாசம்...” என்றபடி நிமிர, பின்னால் இருந்த நானி 1000 ரூபாய் நோட்டை அங்கும் இங்கும் காட்டி,

"அங்கிள்... அடுத்த மாசம் வேண்டாம்... அடுத்து..." என்று கூற,

ஜோசியர் கண்களில் ஆசை மின்னியது. அந்த ரூபாய் போகும் வழியில் அவர் கண்ணும் ஆட, "இல்லையில்லை... அடுத்த மாசம் இல்லை... மூணு மாசம்..." என்று நிமிர,

நானி இப்போது 1000 ரூபாயைக் காட்டி "அங்கிள்... இல்லை இல்லை.. அடுத்த முகூர்த்தம்..." என்று கிசுகிசுக்க,

இப்போது அவர் கண்கள் இன்னும் மின்னியது. ஆனால், அனைவரும் அவரின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, இந்தப் பரிபாஷையை அறியவில்லை. இதனால் ஜோசியர், "இந்தக் கிரக நிலை எல்லாம் சரி வரலை... கல்யாண ராசி மாப்பிள்ளைக்கு ஆறு மாசம் கழிச்சுதான் வருது... ஆவணி மாதம் 18 ஆம் தேதி வெச்சிக்கலாம்," என்று கூற, நானி தன் பெருவிரலை உயர்த்திக் காட்டிச் சிரித்தான்.

அனைவருக்கும் ஆறு மாதம் திருமணத்தைத் தள்ளிப் போட்டது வருத்தம்தான்... ஆனாலும் ஜோசியரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அமைதியாகினர்.

பின்னர் அவரை அவர்கள் வழியனுப்ப, மறைந்து வந்த நானியைப் பார்த்த அவர், வழிந்து கொண்டே தலையைச் சொறிய, நானி அவரிடம் வந்து கையைக் குலுக்கி, "தேங்க்ஸ் அங்கிள்... ரொம்ப தேங்க்ஸ்..." என்று கூறி விட்டுத் திரும்ப,

ஜோசியர் பதறி, “தம்பி... பணம்...” என்று கிசுகிசுக்க,

நானி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்து!, “அய்யோ அங்கிள்... அது உங்களுக்குன்னு நினைச்சுக் கிட்டீங்களா...? உங்களை எப்படி கூப்பிடுறதுன்னு தெரியலை... அதான் பணத்தை ஆட்டினேன். அதே மாதிரி நீங்களும் சொல்லிட்டீங்க... போங்க அங்கிள்... நீங்க ரொம்பக் குறும்பு...” என்று விட்டுக் குதித்துக் கொண்டு செல்ல,

ஜோசியர், “அட ஆண்டவா...” என்றபடி தலையில் கை வைத்துக் கொண்டார் அதிர்ச்சியில்.

உள்ளே வந்த நானி, ‘டேய் அபி... என்னையா அதட்டுறே... உன் கல்யாணத்தை ஆறு மாசம் தள்ளிப் போட்டாச்சு... போ.. போய் ஜொள்ளு விட்டுக்கிட்டே தூங்கு.. உனக்கு நல்லா வேணும். இந்த நானி கிட்டே வெச்சிக்காதே வம்பு...’ என்று மனதிற்குள் கருவிக் கொள்ள, அது ஒன்றும் தெரியாத அப்பாவி அபிநந்தன், நிச்சயதார்த்தத்தில் புன்னகையுடன் அமர்ந்திருந்தான்.

அதற்குள் நானிக்கு இன்னொரு பிரச்சனை ஆரம்பித்தது.

‘சே... இப்போ சரக்கு அடிச்சே ஆகணுமே... இதென்ன கசகசன்னு... சே... ஒரு ரூம் கூட ஃப்ரியா இல்லையே... டேய் நானி... நல்ல ஊரில் வந்து மாட்டினேடா... நமக்குத் தண்ணியடிக்கக் கூட ப்ரைவசி இல்லையே...!’ என்றபடி ஒவ்வொரு அறையாக நோட்டம்

விட, ஒரு அறையில் ஆள் அரவம் இல்லாதது போல் இருட்டாக இருந்தது.

'சூப்பரு... ஐ... பூட்டலை... நானி இந்த ரூம்தான் உன் பார்...' என்று நினைத்தவன், கதவைத் திறந்து உள்ளே சென்று, அந்த மெலிதான இருட்டறையில் யார் இருக்கிறார்கள் என்று கூடப் பார்க்காமல், தன் சட்டையின் அடியில் மறைத்து வைத்திருந்த பிராண்டி பாட்டிலை எடுத்து வாயில் சரித்தவன்... பின் அந்த கசப்புத் தாளாமல்,

"சே... சைட் டிஷ் கூட இல்லையே...!" என்று வாய் விட்டுப் புலம்ப,

"ம்ம்... யாரு... யார் அது...?" என்று அப்போதுதான் தூக்கத்திலிருந்து விழித்த ஜானு, நானியைக் கண்டு பதறினாள். அனைவரும் சந்தோஷத்தில் இருக்க, தான் மட்டும் இப்படியான நிலையில் இருக்கிறோமே என்ற சுயபச்சாதாபத்தில் அழுது அழுது ஓய்ந்து அப்படியே தூங்கியவள் எழுந்து பார்க்கையில், ஒருவன் கையில் பிராண்டி பாட்டிலுடன் சைட் டிஷ் இல்லையே என்று புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் யாருக்குத்தான் பதறாது...?

ஆனால், பதறியது ஜானகிதான். நானியிடம் துளியும் பதற்றமில்லை.

மாறாக, "ஹே... பியூட்டி... நீயும் இருக்கியா...? ஓ.கே. சைட் டிஷ் பிரச்சனை தீர்ந்தது..." என்றபடி அவளருகில் வர ,

"ஹே... ஹே... கிட்டே வராதே... போ... போ..." என்று நடுங்கியபடி கத்த,

நானியோ காதைப் பொத்திக் கொண்டு, "சூ... கத்தாதே... இரு..." என்றபடி அவள் கையைப் பிடிக்க,

"ஆஹ்..." என்று அதற்கு மேல் பொறுக்க முடியாமல் கத்த,

நானி அதைச் சற்றும் கண்டு கொள்ளாமல், அவள் கையின் மணிக்கட்டைப் பிடித்து நன்றாக மூச்செடுத்து முகர்ந்தான். பின், "இதென்ன கடலை மாவு வாசனையா? சோப்பெல்லாம் போட மாட்டியா நீ... நான் எப்பவும் சைட் டிஷ் இல்லைன்னா இப்படிப் பொண்ணுங்ககிட்டே வர சோப்பு வாசனையைத்தான் யூஸ் பண்ணுவேன்... அதில் வர்ற கிக்கே தனி... ஆனா பரவாயில்லை... இது கூட புதுசா நல்லா இருக்கு... மார்வெலஸ்..." என்று சிலாகிக்க, அவனிடம் இருந்து தன் கையைப் பிடுங்கிக் கொண்ட ஜானகி,

அதிர்ந்து போய் இன்னொரு தடவை கத்தி, பின் "ப்ளீஸ்... என்னை விட்டுடுங்க... இங்கே இருந்து போங்க... யாராவது பார்த்தா தப்பாப் பேசுவாங்க... என்... என்னாலே நடக்க முடியாது... நீங்களே..." என்று முடிக்க முடியாமல் அழ,

நானி சிரிப்புடன், "ம்ஹூம்... தெரியுது... நீ என்னைப் பார்த்து ஓடலை... சோ, உன்னால் நடக்க முடியாது... ஆனால், உன் காலில் அசைவு இருக்கு... அதனால் கால் உணர்ச்சியில்லாமல் இல்லை... ஆனால்,

காலை லேசா உதறினப்போ கூட வலியில் கொஞ்சம் முகத்தைச் சுருக்கினே... சோ, உன்னோட சிம்ப்டம்ஸ் எல்லாம் பார்க்கும் போது... யூ ஆர் நாட் க்ரிப்டு. யு ஷட் பி சஃபெரிங் ஃப்ரம் ட்ரௌமேடிக் நியூரால்ஜியா ஃப்ரம் ஸ்பைனல் கார்டு இன்ஜுரி... ஆம் ஐ ரைட்...?" என்று கேட்க, அவளோ அவனின் ஆங்கிலம் புரியாமல் விழிக்க,

அதற்குள் அவள் கத்திய கத்தலில், "ஜானு... ஜானு..." என்று அழைத்துக் கொண்டு ரேணுகா மாடிக்கு ஓடி வந்து கொண்டிருந்தார்.

ஜானு, "அய்யோ அம்மா... அய்யோ ப்ளீஸ்... இங்கே இருந்து போயேன்... நீ என்ன சொல்றேன்னு ஒரு மண்ணும் புரியலை..." என்று கூற,

அவனோ சிறிதும் பதறாமல், "இங்கிலீஷ் தெரியாதா...? முதுகெலும்பில் அடிபட்டதில் நரம்புகளில் கடுமையான வலி இருக்கும்... ஒவ்வொரு அணுவும் வலிக்கும்... சாகற வரை அனுபவிச்சுத்தான் ஆகணும்... அதானே.. சே தமிழில் சொல்ல நல்லா இருக்குல்ல...

"அதெல்லாம் சரி... இப்போ நீ என்னைக் காட்டிக் கொடுத்தே... உன்னை ரேப் பண்ணிட்டேன்னு ஊர் முழுக்க போஸ்டர் அடிச்சிருவேன்... சோ... உன் இஷ்டம் டார்லிங்.,." என்று அசால்ட்டாகக் கூற,

தான் கிட்டத்தட்ட பத்து வருடங்களாகப் பட்ட துன்பத்தைச் சிரிப்புடன் கூறிக் கொண்டிருக்கும் அவனைக் கொல்லும் ஆத்திரம் வந்தாலும், பார்த்த பத்து நிமிடத்தில் தன் பிரச்சினையைப் புட்டுப் புட்டு வைக்கும் அவன்

அறிவாற்றலை வியக்காமலும் இருக்க முடியவில்லை. அப்புறம் அந்த ரேப்... அந்த வார்த்தையைக் கேட்டதும் மயங்கி விழாத குறைதான்.

அதற்குள் ரேணுகா பதறிப் போய் வந்து,

“என்ன ஜானு... என்னாச்சுடா... ஏன் கத்தினே...?” என்று கேட்க,

ஜானு சட்டென்று திரும்பிப் பார்க்க, அதற்குள் பாத் ரூமிற்குள் ஒளிந்து கொண்டான் நானி.

ஜானு அப்போதே அவன் இருப்பதைக் கூறியிருந்தால், நானி அவன் வாழ்க்கையில் இருந்திருக்கவே மாட்டான்... ரேணுகாவே அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பார். அவனும் கண்காணாத இடத்திற்குப் போயிருப்பான்.

ஆனால், விதி வலியதாயிற்றே...! ஜானு, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் போராட, ரேணுகா, “சொல்லுடா... என்னடா... யாராவது வந்தாங்களா...? சொல்லு...” என்று கேட்க,

அப்போதுதான் ஜானு, “இல்லைம்மா... யாரு மில்லை... ஏதோ பூச்சி... அதான் பயந்துட்டேன்...” என்று தேம்பியபடி கூற,

நானி, பாத் ரூமிற்குள் சிரிப்பை அடக்கப் போராடிக் கொண்டிருந்தான்.

‘டேய் நானி, உனக்கு ஒரு அடிமை கிடைச்சுடுச் சுடா... இனி ஜாலிதான்...’ என்று மகிழ்ந்தான்.

ஆம்... இனி ஜானகியை நானி தன் இஷ்டத்திற்கு ஆட வைக்கத்தான் போகிறான்.

அந்த ஆட்டத்தைப் பார்க்கப் பொறுத்திருப்போம்.

## 7

"ஏதோ பூச்சி... அதான் பயந்துட்டேன்..." என்று கூறிய ஜானுவை, நம்பாத பார்வை பார்த்தார் ரேணுகா. அவள் பயப்படுவாள்தான். ஆனால், இன்று அதற்கும் மேலாய் ஏதோ ஒரு பதற்றம் அவள் முகத்தில் இருப்பதாய் ரேணுகாவிற்குப் புரிந்தது. அதனால்,

"என்ன, பூச்சியா...? அதுக்கா இப்படிக் கத்தினே...?" என்று கேட்க,

அவளோ ஒரு கணம், கூறி விடலாமா? என்றுதான் நினைத்தாள். ஆனால், நானியின் பயமுறுத்தல் அவள் நாக்கைக் கட்டிப் போட, அந்தப் பேதையால் அவள் நிலையை அவள் தாயிடம் கூற முடியவில்லை.

"ம்மாஆ... அதான் சொல்றேனோ இல்லையோ... ஒண்ணுமில்லை... இருட்டில் எதையோ பார்த்துப் பயந்துட்டேன்... அதான்..." என்று தன் பதற்றத்தை மறைத்துப் பல்லைக் கடித்துக் கொண்டு கூற,

ரேணுகாவோ அந்த இடத்தை விட்டு நகராமல், "இப்போ எதுக்கு எரிச்சல் படுறே... அதுக்குத்தான் கொஞ்சமாவது கர்ட்டனை எல்லாம் வெளிச்சம் வர்ற மாதிரி விலக்கி வைக்கலாம்னு சொன்னேன். நீதான்

வெளிச்சம் பிடிக்கலை... இப்படியே இருக்கட்டும்னு முரண்டு பிடிச்சே... அதான் கண்ட பூச்சி பொட்டெல்லாம் வர்றது... நல்லவேளை... நான் எதுக்கோ ஸ்டோர் ரூமுக்கு வந்தேன்... அதான் உன் சத்தம் கேட்டது... இல்லைன்னா இந்த மரக்கதவைத் தாண்டி உன் கீச்சுச் சத்தம் கேட்கிறதே பெரிய விஷயம்...” என்று வழக்காடிக் கொண்டிருக்க,

ஜானுவோ மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விழிக்க,

பாத்ரூமில் தன் கூடாரத்தைப் போட்டிருந்த நானியோ,

‘இந்தப் பொம்பளைங்களுக்கெல்லாம் பேசாமல் இருந்தா பொழுதே விடியாதா...? எதுக்கு வந்தோம்னே மறந்துட்டு லெக்சர் அடிச்சிக்கிட்டு இருக்கு, இந்த லேடி. ஓஹ்... இட்ஸ்... சோ... இர்ரிடேட்டிங்...’ என்று தன் பொறுமையின் அளவில் சில மில்லி மீட்டர்கள் தூரத்திலேயே நிற்க,

அந்த நினைப்பு டெலிபதி வழியாக ரேணுகாவைத் தட்டியது போலும்...

“சரி, நான் என்ன பேசினாலும் நீ உனக்குப் பிடிச்சதைத்தான் செய்வே... எனக்குத் தலைக்கு மேல் வேலை இருக்கு... கொஞ்ச நேரத்திலே பத்திரிகை வாசிக்க ஆரம்பிச்சிடுவா...? கல்யாணம் வேற ஆறு மாசம் தள்ளிப் போயிடுத்துடி... தெரியுமா நோக்கு...?” என்று இன்னும்

இங்கிருந்து செல்லும் வழி தெரியாதவர் போல் பேசிக் கொண்டிருக்க,

ஜானு இறுதியாகத் தனக்கு இருந்த தைரியத்தை எல்லாம் ஒன்று திரட்டி,

"ம்மா... நீ போய்க் கீழே உள்ள வேலையைப் பாரு... எதுக்காக வெட்டிப் பேச்சுப் பேசிண்டு இருக்கே... தெரியாமல் உன்னைக் கூப்பிட்டுட்டேன்..." என்று திட்ட,

ரேணுகா அவளை முறைத்தபடி, "சரிடி... கத்தாதே... போறேன்... கடைசியாய் கேக்குறேன்டா கண்ணம்மா... வீல் சேர்தான் இருக்கே... உன்னை நான் கீழே கூட்டிண்டுப் போகவா...? நீ அலட்டிக்கவே வேண் டாம்... உனக்கு வலியெடுக்காமல் நான் கூட்டிக்கிட்டுப் போறேன்..." என்று சிறுபிள்ளையாய் மாறிக் கெஞ்ச,

ஜானகிக்கு இப்போது தன் தாய் இவ்வளவு நேரம் பூசி மெழுகிய விஷயம் புரிந்தது. ஒருத்தரை உலகமே ஒதுக்கினாலும், பெற்ற தாய் ஒதுக்க மாட்டாள். அப்படி ஒதுக்கினால் அவன்தான் இந்த உலகத்திலேயே துர்பாக்கியசாலி...

அந்த வகையில் இந்த வீட்டில் உள்ள அனை வருமே தன்னை ஒரு பொருட்டாக நினைக்காத போதும் தன்னையும் இந்த விழாவிற்கு இணைக்கத் துடிக்கும் இந்தப் பேரிளம்பெண்ணின் வெள்ளை மனதை எண்ணி, ஜானகியின் மனமும் கண்களும் நிறைந்தாலும், இப்போது அதற்கான நேரமும் இல்லை சூழ்நிலையும் இல்லை என்பதை அறிந்தவள்... தன் தாயிடம்,

"அம்மா... நான் என் உடல் பிரச்சனைக்காகத்தான் கீழே வராமல் இருக்கேன்னு நினைக்கிறியா...? நான் வந்தால் அங்கே உள்ள எல்லோரும் முகம் சுளிப்பா... அப்புறம், அப்பா உன்னைத் திட்டுவார்... அதுவும் இல்லாமல், இது அக்காவோட நாள்... அந்த நாளில் அவதான் முதன்மையாகத் தெரியணும்னு நினைப்பா... இதெல்லாம் நோக்குத் தெரியாதா...? நான் அவாளுக்கு பாரமா இருக்கிறதே நேக்குக் கஷ்டமா இருக்கு... இதில் அவாளை தர்மசங்கடத்தில் வேற ஆழ்த்தணுமா...? சொல்லு..." என்று மென்மையான... ஆனால், உறுதியான பார்வையுடன் கேட்க,

ரேணுகா அதற்கு மேல் தன் பெண்ணுடன் வாதாட முடியாமல், அவளை ஒரு இயலாமையுடன் கூடிய வெற்றுப் பார்வை பார்த்தார். பின் அந்த அறையை விட்டு வெளியேற, அதற்கு மேல் தாங்க முடியாமல் முகத்தை மூடிக் கொண்டு கதறிக் கதறி அழ ஆரம்பித்தாள் ஜானகி.

நெடு நேரமாகப் பேச்சுச் சத்தம் ஏதும் இல்லாது போக,

"அடச்சே...! அந்தக் கால ப்ளாக் அன்ட் ஒயிட் படம் மாதிரி எவ்வளவு ட்ராமா...? எவ்வளவு எமோஷன்ஸ்... சென்டிமென்ட்ஸ்... புல் ஷிட்..." என்றபடி நானி வெளியே வர,

அந்த வார்த்தை... அவனின் அலட்சியம்... இல்லை தன் மீதே ஏற்பட்ட இயலாமை... இதில் ஏதோ ஒன்று ஜானகி மனதைக் குத்த,

துடித்து எழுந்தாள் ஜானகி. "என்னடா சொன்னே... உன்னை மாதிரிக் கேவலமானவங்களுக்கெல்லாம் எங்களோட உணர்வுகள் புரியாது... தனியா இருக்கிற பொண்ணு கிட்டே வந்து இப்படி எல்லாம் நடந்துக்கிறே... உனக்கெல்லாம் என்ன குடும்பத்தைப் பத்தி தெரிஞ்சிருக்கப் போகுது... போடா... போடா வெளியே..." என்று கத்த,

அவள் கத்தியதற்குச் சிறிதும் சம்பந்தமில்லாமல் சிரித்துக் கொண்டே பார்த்த அவன், அவள் அருகில் வந்து, மீண்டும் மணிக்கட்டைப் பிடிக்கப் போக, ஜானகி, "ஏய்... விடுடா..." என்று கத்த,

நானி, "சும்மா... கத்தாதே டார்லிங்... இனி நீ கூப்பிட்டா அந்த லேடி வரமாட்டாங்க. ஆனால், நீ இப்போ கத்தினதில் இருந்து ஒண்ணு தெரியுது... ஐ திங்... இட்ஸ் தி ஃபர்ஸ்ட் டைம் யூ ஆர் மேட் அட் சம் ஒன்?... ஆம் ஐ ரைட்..?" என்று கேட்க, அவளோ வழக்கம்போல் ஆங்கிலம் புரியாமல் விழிக்க,

கலகலவெனச் சிரித்த அவன், "நீ இப்படி இங்கிலிஷ் தெரியாமல் முழிக்கும் போதுதான் நிறைய இங்கிலீஷ் பேசத் தோணுது. அதாவது நான் என்ன கேட்டேன்னா இதுதான் முதல் தடவை நீ ஒருத்தர் கிட்டே கோபப்பட்டுக் கத்துறது...? கரெக்டா...?" என்று கூர்மையான பார்வை யுடன் கேட்க, அப்போதுதான் ஜானுவே அதை உணர்ந் தாள். ஆம்... அவன் கூறியது முழுக்க முழுக்கச் சரியே...! இதுவரை அவளிடம் யாராவது பேசியிருந்தால் தானே

அவள் கத்த...? தான் பிறந்து இந்த 22 வருடங்களில் ஒரு தடவை கூட தன் இயல்புக்கு மீறிக் கத்தியதில்லை.

அதை முதலில் உடைத்தது இவன்தான். என்ற நினைப்பே அவள் உள்ளுக்குள் ஒரு குட்டி அதிர்வை ஏற்படுத்தியது.

ஆனால், அதை வெளிக் காட்டாமல், "அதெல்லாம் இல்லை... ஏதாவது உளறாமல் முதலில் இங்கே இருந்து போ... நீ இங்கே இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு எரிச்சல் வருது. அதான் கத்துறேன். போ... போ..." என்று மறுபடியும் ஆரம்பிக்க,

அவள் மணிக்கட்டைப் பிடித்த அவன், "நான் இதை நம்ப மாட்டேன். நான் அடிச்சுச் சொல்றேன். நீ கத்துற முதல் ஆள் நான்தான்... ஏன்னா என் வாழ்க்கையில் வாங்கின முதல் டீசன்ட்டான திட்டு இதுதான். என்னை யாரும் இவ்ளோ மரியாதையாகத் திட்டினதில்லை. அது பரவாயில்லை... போகப் போக என்னைத் திட்டித் திட்டிப் பழகிக்கோ... எனக்கு இரண்டு நாள் கழிச்சுதான் ப்ளைட். தண்ணியடிக்க இனிமே இந்த ரூம்தான் வெச்சிக்கலாம்னு இருக்கேன்... அதனால் வி வில் மீட் ஆஃப்பன்... போகப் போகப் பாரு... கெட்ட வார்த்தை கூடக் கத்துப்பே... ஹ்ம்... ஒரே ஒரு தடவை..." என்றபடி மறுபடியும் அவளின் அந்தக் கடலை மாவு நறுமணத்தை நுகர, பிறந்த குழந்தையின் வியர்வை மணம் போல் அவளிடமிருந்து வந்த அந்த மெல்லிய வாசனை, அவன் நியூரான்களை மெல்லக் கட்டிப் போட்டது. "ஐ திங்... ஐ ஆம் கெட்டிங் அடிக்டட் டு

இட்... அதனால் நாம் அடிக்கடி மீட் பண்ணலாம்... பை தி வே... என் பேர் நானி... உன் பேர்...?" என்று கேட்க,

அவளோ எரிச்சலுடன், "செருப்புப் பிஞ்சிரும்... வெளியே போடா... கையை விடு..." என்று கத்த,

அவனோ தன் சிரிப்பு மாறாமல், "கொஞ்சம் பெரிய பேர்தான்... அட்ஜஸ்ட் பண்ணிக்கிறேன்..." என்று கூறிச் சிரித்து விட்டு, "ஓ.கே. இன்னைக்குள்ளே உன் பேரைத் தெரிஞ்சு காட்டுறேன். அப்புறம், இப்போதான் கொஞ்சம் கெட்ட வார்த்தை வருது. கூடிய சீக்கிரம் தேறிடுவே..." என்றவன், சிரித்தபடி அவள் மணிக்கட்டை மீண்டும் ஒரு தடவை முகர்ந்து விட்டு, அந்த அறையை விட்டுச் செல்ல,

அவன் தொடுகையைச் சற்றும் தடுக்க முடியாமல் அவள், அவன் செய்கையையும் அவன் பேச்சையும் கேட்டு, அவன் செல்வதையே பித்துப் பிடித்தவள் போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்படி முதல் சந்திப்பிலேயே அவளின் இயல்பை விட்டுச் சற்றுத் தடுமாற வைத்த அவன், இனியும் என்ன செய்யப் போகிறான்...? என்ற கவலை வியாபிக்க, ஜானகி தனக்குத்தானே 'விடு, விடு... இன்னும் ரெண்டு நாள் பல்லைக் கடிச்சிக்கோ... அப்புறமும் ஏதாவது தப்பா நடந்துண்டான்னா அம்மா கிட்டே சொல்லிடலாம்...' என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். ஆனால், அவளின் அந்த நிம்மதியும் பறிபோகப் போகிறது என்பதை அறியாமல்.

ஒரு வழியாக நிச்சயதார்த்தமும் முடிந்து, லக்னப் பத்திரிகை வாசிக்கப்பட்டு, விருந்தும் இனிதே முடிந்தது. பின் குணாவும் குமரரும் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கையில், குணா திடீரென்று,

"அத்திம்பேர்... எனக்கு ஜானகியைப் பார்க்கணும் போல இருக்கு... அவள் எங்கே... ஆளையே காணோம்?" என்று கேட்க,

அவர், "என்ன குணா, இப்படிக் கேட்கிறே... அவள் எப்படி வர முடியும்...? அவ ரூமில்தான் இருக்கா..." என்று கூற,

குணா, "என்ன அத்திம்பேர்... அதனால் என்ன... வீல் சேரிலேயாவது கூட்டிண்டு வந்திருக்கலாமே...! சொந்த அக்காவோட விசேஷம்... அவளுக்கு வரணும்னு ஆசை இருக்காதா...?" என்று கேட்க,

ரேணுகா, தன் கணவரின் சார்பாக ஊடே புகுந்து, "இல்லை... குணா... அவளுக்குக் காலையில் இருந்து தலைவலி... லேசா ஜுரம் வேற... அதான் வரலைன்னுட்டா..." என்று தன் குடும்பத்தின் நிறம், சாயம் போகாதவாறு தடுத்தார்.

அதைக் கேட்ட குணா, "அய்யோ... அப்படியா, சரி... நான் போய்ப் பார்த்துண்டு வரேன்..." என்று கூற,

அப்போது திவ்யாவுடன் பேசிக்கொண்டே அங்கு வந்த அபிநந்தன்,

"ஆமாம்பா... நான் கூட தேடிக்கிட்டுத்தான் இருந்தேன்... எங்கேப்பா ஜானகி...? திவ்யா, ஜானகியைப்

போய்ப் பார்த்துட்டு வரலாமா...?" என்று கேட்க, அவள் சற்றே தயங்கினாள்.

ஆனால், குணாவோ அதைக் காணாமல் ரேணுகாவிடமும் குமரரிடமும்,

"போகலாமா...? ஜானுவைப் பார்க்க..." என்று கேட்க,

குமரர், "இப்போது தான் ஞாபகம் வர்றது... இந்த கேட்டரிங்காரவாளுக்குப் பணம் செட்டில் பண்ணனும்... நான் போயிட்டு வந்துர்றேன்... டி, ரேணு... குணாவை அழைச்சுண்டு போ..." என்று கூறி விட்டு வெளியேற,

குணாவிற்குச் சந்தேகம் வரவில்லை என்றாலும், அபி மனதில் ஏதோ உறுத்தியது.

ரேணு, குணாவை அழைத்துக் கொண்டு செல்ல, அபி, திவ்யாவிடம்,

"ஏதாவது பிரச்சனையா திவ்யா...? ஜானகியை எல்லோரும் ஒதுக்குற மாதிரி இருக்கு..." என்று கூற,

சட்டென்று உண்மையை உணர்ந்து கொண்டு வாதம் புரியும் அவனை அதிசயமாகப் பார்த்த திவ்யா, "அது வந்து... என்ன சொல்றது அபி... எனக்கு ஒரு மாதிரி எம்பாரசிங்கா இருக்கு... அப்பாவுக்கு அவளை அவ்வளவாகப் பிடிக்காது... அதனால் நாங்களும் அவளோட தூரத்தில் இருந்தே பழகிட்டோம். அப்பாவை மீறி நாங்க எதுவும் செய்ய முடியாது. இதை வெளிப் படையாய்ச் சொல்ல எனக்கே ஒரு மாதிரிதான் இருக்கு...

“ஆனால், இதுக்கு மேலே நான் இப்படித்தான் என்று உங்களுக்குத் தெள்ளத் தெளிவாச் சொல்லிக்கிறது தான் நல்லதுன்னு நான் நினைக்கிறேன்... அதனால் ப்ளீஸ்... என்னை வற்புறுத்தாதீங்க. நீங்க வேணா போய் ஜானகியைப் பாருங்க... நான் தடுக்க மாட்டேன்...” என்று கூறி விட்டு, அவனையே கெஞ்சலாகப் பார்த்தவள் மீது சத்தியமாக அவனுக்குக் கோபம் வரவில்லை. மாறாக அவளின் வெளிப்படையான பேச்சு அவனைக் கவர்ந்தது. இது ஒன்றும் புது மாப்பிள்ளையின் மயக்கம் இல்லை. அபியும் பக்குவப்படாதவன் இல்லை.

அவன் இந்த ஒரு நாளில் திவ்யாவைப் பற்றி அக்குவேறு ஆணிவேராகப் புரிந்து வைத்திருந்தான். அவள் ஒன்றும் அசாதாரணமானவள் அல்ல. உலகத்தில் இருக்கும் அனைத்துச் சராசரிப் பெண்களின் பிரதிநிதி தான்... ஆனால், தான் சாதாரணமானவள்தான் என்று ஒத்துக்கொள்ளும் பக்குவமும் தைரியமும் அவளிடம் இருந்தது. அது ஒன்று இருந்தால் போதும்... அவள் கூடிய சீக்கிரம் தன்னவளாகித் தன் குணத்திற்கு ஒத்துப் போவாள் என்று நம்பினான் அவன். தாம்பத்தியத்திற்குத் தேவை நேசமும் புரிதலும் நம்பிக்கையும் தானே!

எனவே அவளை வற்புறுத்தாது மென்சிரிப்புடன், “இட்ஸ் ஓ.கே. திவ்யா... நான் உன்னை வற்புறுத்தலை... உனக்குப் பிடிச்சதைச் செய்ய உனக்கு எல்லா உரிமையும் இருக்கு... நான் போய் அவளைப் பார்க்கிறேன்...” என்று விட்டுச் செல்ல, அந்த ஒரு சொல் அவளை அடியோடு

சாய்க்க, அவனையே கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண் டிருந்தாள் அந்தப் புது மணப்பெண்.

அந்த நிமிடத்தில் இருந்து கடமைக்காக, ஒருவித சுயநலத்திற்காக அவள் நெய்திருந்த திருமணம், காதல் என்னும் மெல்லிய வைர ஊசியால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முதிர்ச்சியான சிந்தனை கொண்ட காதல், அவளை வழிநடத்திப் பக்குவப்படுத்தும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

பின் குணாவும் அபியும் மாடியில் சென்று ஜானகியைப் பார்க்க, அவளோ திருதிருவென்று விழிக்க, அவளைப் பார்த்த இருவரின் மனமும் இளக ஆரம்பித் தன. 'இந்தக் குழந்தை மனதிற்கா இந்த வாழ்க்கை...?' என்ற எண்ணம் எழுவதைத் தடுக்க முடியவில்லை. ஆனால், தங்கள் பரிதாபத்தைக் காட்டும் நேரம் இது வல்ல என்று உணர்ந்த அவர்கள், அவளிடம் இலகுத் தன்மையைப் புகுத்த முயன்றனர்.

எனவே குணா, ரேணுகாவிடம், "அக்கா... சொந்த மாமாவை ஏதோ வில்லனைப் போல் பார்த்து வைக்கிறா என் மருமக... நீ ஏதாவது என்னைப் போட்டுக் கொடுத்தியா...?" என்று குறும்பாகக் கேட்க,

அதைக் கேட்டுச் சிரித்த அபி, "இல்லைப்பா... அவள் என்னைப் பார்த்துத்தான் முழிக்கிறா... இந்தத் தடியனா எனக்கு அத்திம்பேருன்னு..." என்று எடுத்துக் கொடுக்க, அப்போதுதான் அவர்கள் இருவரும் யார் என்று புரிந்தது.

“அய்யோ மாமா... அத்திம்பேர்... மன்னிச்சி ருங்கோ... எனக்கு தெ... தெரியலை... த.. தப்பா எடுத்துக்காதீங்கோ... நேக்குத் தெரியலை...” என்று திக்கித் திணற, அவள் அப்பாவித்தனத்தை ரசித்த அவர்கள்,

“அய்யோ... அத்தை... என்ன வெறும் காத்துதான் வருது ஜானகிக்கு... சாப்பிடவே மாட்டாளா...? காத்தடிச்சாக் கூடப் பறந்துடுற மாதிரி இருக்கா... சாப்பாடைப் பார்க்கிறதோட சரியா...?” என்று கேலியாகக் கேட்டாலும், அவன் மனதில் அவள் ஆரோக்கியத்திற்கான அக்கறை இருந்தது. அதை உணர்ந்த ரேணுகா,

“எங்கே... பாதி நாள் சாப்பிட அடம்... பாதி நாள் விரதம்... முரண்டு வேற...” என்று கூற, ஜானகி முறைக்க,

குணா, “பாருக்கா முறைக்கிறதை... என் மருமகளுக்கு முறைக்க வேறு வருமா...?” என்று கேட்க,

ஜானகி நாணத்துடன், “மாமா...” என்று சிணுங் கினாலும், அவளுக்கு இதெல்லாம் புதிதாக இருந்தது. பல வருடங்களாகத் தாயைத் தவிர யாரையுமே பார்த்திராத அவளுக்கு, இன்று ஒருவர் மாற்றி ஒருவரின் அறிமுகம் அவளுக்குப் புத்துணர்ச்சியை அளித்தது. என்ன, நானியின் அறிமுகம்தான் வயிற்றில் புளியைக் கரைத் தாலும், அதுவும் அவளைச் சற்று இலகுப்படுத்தியது என்பதை மறுக்க முடியாதுதானே...!

பின் பொதுவாகப் பேச ஆரம்பித்தவர்கள், ஒரு மணி நேரம் ஆகியும் பேச்சை முடிக்கவில்லை. இடையில்,

"மறந்தே போயிட்டேன் பாரு... இரு, என் இரண்டாவது பையனைக் கூப்பிடுறேன்..." என்று கூறி விட்டு,

"நானி..." என்று ஒரு தடவை அழைத்ததுதான் தாமதம். அடுத்த நிமிடம் வந்து நின்றான் அவரின் உத்தம புத்திரன். அவன் வந்ததை அதிசயமாக வாயைப் பிளந்து கொண்டு பார்த்தவர்கள் மொத்தம் மூன்று பேர்.

குணாவும் அபியும் ஆச்சரியப்பட்டதற்குக் காரணமே வேறு... நானி எப்போதுமே கூப்பிட்ட குரலுக்கு வருபவன் அல்ல. இன்று கூப்பிட்டால், நாளை வந்தால்கூட அதிசயம்... ஏதோ படத்தில் வருவது போல் அரசன், "யார் அங்கே... யாரடா அங்கே...?" என்று தொண்டை கிழியக் கத்தினாலும் பணியாள் வர மாட்டார்களே... அதுபோல் தான் நானியும்... அப்படிப்பட்ட ஒழுக்க சிரோன்மணி இன்று வந்தால், யார்தான் ஆச்சரியப்பட மாட்டார்கள்...?

அவனைக் கண்டு அதிசயம் இல்லை, அதிர்ச்சிய டைந்த இன்னொரு உயிரினம் வேறு யார்...? நம் ஜானகி தான்.

'அய்யோ... இவன் நம்ம மாமா பையனா...? அவர் நல்லவராத்தானே இருக்கார்... இவன் ஏன் இப்படி இருக்கான்...? தலையையும் ஆளையும் பாரு... ஹிப்பியாட்டம்... மூஞ்சியைப் பார்த்தாலே பிடிக்கலை... கெட்டத்தனமான பார்வை...' என்று அவனைப் பார்த்து மனதில் திட்டிக் கொண்டிருக்க... அவனோ நமுட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி,

"அப்பா... கூப்பிட்டீங்களாப்பா...?" என்று மரியாதை யாகக் கேட்க, அவர் மயக்கம் போட்டு விழாத குறைதான். ரேணுகா கூட அவனைப் பற்றிய தம்பியின் பேச்சை எல்லாம் ஒரு நிமிடம் பொய்யோ என்று நினைத்து விட்டார்... அந்தளவு அடக்கம்.

குணாவிற்கோ நடப்பதெல்லாம் புதிராக இருந் தாலும், அதை மறைத்தபடி, "அம்மாடி... இவன் தான் ரகுநந்தன்... என் இரண்டாவது பையன்... மத்தபடி சொல்லிக்கிற அளவுக்கு ஒண்ணுமில்லை..." என்று அவனை மறைமுகமாகக் குத்த, அவரை முறைத்த அவன்,

"என் பேர் நானி மேடம்... அவர் சொன்னது இல்லை... எனக்கு அப்படிக் கூப்பிட்டால் பிடிக்காது," என்று முகத்தில் அடித்தாற் போல் கூற,

ஜானகி, 'ஆமா... உனக்கு எது பிடிக்கும் எது பிடிக்காதுன்னு தெரிஞ்சிக்க நான் உன் பொண்டாட்டி பாரு...' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, சட்டென்று தன் நினைப்பிற்காக மானசீகமாகத் தலையில் கொட்டிக் கொண்டாள்.

பின் தகப்பனுக்கும் மகனுக்கும் நடக்கும் மறைமுகப் போரை உணர்ந்த ரேணுகா,

"நானி... இதுதான் ஜானகி. என் இளைய பெண்..." என்று அறிமுகப்படுத்த,

அவன், "ஓ... ஜானகி... நைஸ் நேம்..." என்று கூறிக் கண்ணடிக்க, ஜானகிக்கு அப்போதுதான் அவன் தன்

பெயரைத் தெரிந்து கொள்ளத்தான் இங்கே வந்திருக்கிறான் என்று தெரிந்தது. தன் விதியை நொந்தபடி, அவள் பரிதாபமாகப் பார்த்திருந்தாள்.

குணாவின் மனநிலை வேறாக இருந்தது. நானி மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால், அவளின் பிரச்சனையை அவனே தீர்த்திருப்பான். ஆனால், இப்போதுள்ள நிலையில் அவனிடம் கெஞ்சினாலும் அவன், அவளைக் குணமாக்க மாட்டான் என்று தெரியும். அதனால் அவன் மருத்துவன் என்று கூறுவதில் பயனில்லை என்று நினைத்த குணா, "சரிக்கா... நாங்க வர்றோம்... லேட் ஆச்சு..." என்று விட்டு ஜானகியின் உச்சியைக் கோதி,

"நாங்க வரோம்டா... உடம்பைப் பார்த்துக்கோ... நல்லாச் சாப்பிடு... எதையும் நினைச்சு வருத்தப்படாதே... நாங்க இருக்கோம்..." என்று நிறைந்த வார்த்தைகள் கூறி அவளை ஆதுரத்துடன் பார்க்க, அவள் மனதும் இளகியது.

பின் அபியும், "ஆமா ஜானு... உடம்பைப் பார்த்துக்கோ... நாங்க வர்றோம்..." என்றுவிட்டு வெளியேற, நானியும் அவளை யாரும் காணாமல் கண்ணடித்து விட்டு வெளியேற, அவர்கள் பின்னோடே ரேணுகாவும் செல்ல, ஜானகியின் மனதில் மெல்லிய மகிழ்ச்சியும் அதே சமயம் பலமடங்கு பயமும் காரணமின்றி முளைத்தது.

குணா, அபி, நானி மூவரும் அவர்கள் வீட்டிற்குக் கிளம்ப, ரேணுகா சாப்பாடு பலகாரம் என ஐந்து பைகள்

நிறையத் தந்து வழியனுப்பி வைத்தார். காரில் வரும் அந்தப் பத்து நிமிடப் பயணமும் குணா, ஜானகியின் நிலைமையைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருக்க,

நானி எரிச்சலுடன், "அய்யோ முடியலை... காதில் இருந்து ரத்தம் வருது..." என்று அலுத்துக் கொள்ள,

குணா, "அதானே... நீயெல்லாம் ஒரு டாக்டர்... அதுவும் நியூரோ சர்ஜன்... வெளியே சொல்லிடாதே! நீ ஒழுங்கா இருந்தா அவளுக்கு வைத்தியம் பார்க்கச் சொல்லலாம்... எங்கே... உனக்கு வைத்தியம் பார்க்கவே ஆள் வேணும்..." என்று தன் பங்கிற்கு அலுத்துக் கொள்ள, அவன் அதை எல்லாம் கண்டு கொள்ளாமல் ஹெட் போனில் பாட்டுக் கேட்க ஆரம்பித்தான்.

அவர் எரிச்சலில் மேலும் ஏதோ கூற வர,

அபிதான் தடுத்து, "அப்பா, ப்ளீஸ்... இதை மேலும் பிரச்சனை பண்ண வேண்டாம். அவளுக்கு ஹெல்ப் பண்ணணும்னு அவனுக்காகத் தோணணும். மருத் துவத்தை விலைக்கு வாங்கலாம்... ஆனால், மருத்துவம் செய்யணும்கிற மனசை விலை கொடுத்து வாங்க முடியாது. வற்புறுத்தியும் பெற முடியாது.

"அவனுக்கு எப்போ மனசு வருதோ, அப்போ அவன் டாக்டராக வேலை பார்க்கட்டும். நம்ம கடமை அவனைப் பார்த்துக்கிறது. அதை மட்டும் நாம் செய்யலாம்..." என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், அவர்கள் வீடு வரவும் சரியாக இருந்தது.

பின்பு அங்கு பெரும்பான்மையான மௌனமே ஆட்சி செய்ய, இரவு உணவின் போதுதான் குணா அந்த யோசனையைக் கூறினார்.

வில்லியம்சிடம் பேசியதை அபியிடம் கூறிய குணா, “எனக்கென்னமோ அவன் சொல்றதும் சரின்னு தோணுறது. அபி, நானும் என் ஆபீசில் பேசிட்டேன். அவாளும் பெர்மிஷன் தந்துட்டா... உன் கல்யாணத்துக்கு இருக்கும் ஆறு மாசமும் இங்கேயே இருக்கோமே நானும் நானியும்... அக்காவுக்கும் அத்திம்பேருக்கும் ஒத்தாசை யாய் இருக்கும். இவ்வளவு நாள் பிரிஞ்சு இருந்தாச்சு... இனியாவது குடும்பத்தோட கொஞ்ச நாள் இருக்கணும்னு ஆசையாய் இருக்கு... நீ என்ன சொல்றே...?” என்று கேட்க, அவனும் அதை ஆமோதித்து,

“இதில் என்னப்பா இருக்கு...? நேக்கு இதில் பூரண சம்மதம்தான். நான் என் ஃபிரெண்டோட அபார்ட்மெண்ட் ஷேர் செய்துக்கிறேன்... அப்பப்போ வந்து பார்த்துட்டுப் போறேன். இதனால் அவன் கிட்டே சின்ன மாற்றம் வந்தால் கூட எனக்குச் சந்தோஷம்தான்...” என்று அவனும் கூற, அதைக் கேட்டபடி அங்கு வந்த நானி, கோபமுற்று,

“இங்கே என்ன நடக்குது? ஏதோ ரெண்டு நாளுன்னு சொன்னீங்கன்னு வந்தேன்... ஆனால், இதென்ன நீங்க பாட்டுக்குப் பிளான் பண்றீங்க...? எனக்கு இதெல்லாம் பிடிக்கலை. நான் கிளம்புறேன். நீங்க

என்ன வேணும்னாலும் பண்ணுங்க..." என்று தன் பெட்டி படுக்கையைத் தூக்க,

குணா, "உன்னால் இந்த ஊரை விட்டு எங்கேயும் போக முடியாது. உன் பாஸ்போர்ட், விசா, கிரெடிட் கார்டு எல்லாம் என் கையில்தான் இருக்கு. உன்னால் இங்கே இருந்து ஒரு அடி கூட நகர முடியாது," என்று சிரித்தபடி கூற,

நானி, "ஓ... கமான்... இதெல்லாம் இல்லாமல் என்னால் போக முடியாதுன்னு நினைக்கிறீங்களா? அமெரிக்கா இல்லைன்னாலும் திருட்டு ரெயில் ஏறி பெங்களூர், ஹைதராபாத்னு போவேன்... உங்களால் எப்போதுமே என்னைக் கட்டுப்படுத்த முடியாது," என்று பயமுறுத்த,

குணா அதற்கு மேல் அவனிடம் வாதாட முடியாமல், "நானி, ப்ளீஸ்... நான் இது வரைக்கும் உன் கிட்டே எதுவும் கேட்டதில்லை. இப்போ ரிக்வெஸ்ட் பண்ணிக் கேட்கிறேன்... தயவு செய்து ஒரு ஆறு மாசம் இங்கே இருக்கலாம். உனக்கென்ன, குடிக்கணுமா? பொண்ணுங் களோட சுத்தணுமா? எல்லாம் செய். நான் உன்னைத் தடுக்கவே மாட்டேன். ஆனால், நீ என் கூட இங்கே இரு..." என்று கெஞ்ச,

அபியும் வந்து, "நானி... அப்பா சொல்றதைக் கொஞ்சம் கேளுடா. அவர் என்ன சொல்றார்...? உன் சந்தோஷம் எதையும் தடுக்கலைன்னுதானே சொல்றார்... ப்ளீஸ்... எனக்காகக் கொஞ்சம் கன்சிடர் பண்ணேன்..." என்று கூற,

சிறிது நேரம் யோசித்த நானி, "ஷிட்..." என்று முணுமுணுத்து விட்டுத் தன் பெட்டிகளைக் கலைத்து விட்டுத் தன் அறைக் கதவை டமாரென்று சாத்த, அதுவே அவன் சம்மதத்தைச் சொல்லாமல் சொல்ல, குணா, அபி இருவரின் முகமும் மலர்ந்தது.

ஒரு மாதத்திற்குப் பிறகு...

'ஜிங்குனமணி ஜிங்குனமணி

சிரிச்சுப்புட்டா நெஞ்சுல ஆணி...

வெண்கலக்கிண்ணி வெண்கலக்கிண்ணி

போல மின்னும் மந்திர மேனி...'

என்று அந்தத் தொலைக்காட்சியில் தொல்லை செய்யும் பாட்டு ஓடிக் கொண்டிருக்க,

நானி வாயில் சிகரெட்டுடன் அந்தப் பாட்டைச் சிலாகித்துப் பாடிக் கொண்டிருந்தான்.

ஜானகியோ அந்தப் பாட்டின் வரிகளையும் கவர்ச்சி யையும் தாள முடியாமல் நெளிந்து கொண்டிருந்தாள்.

ஆம்...! நானி, சந்தேகமே இல்லாமல் ஜானகியின் அறையில்தான். எப்போது குணா சென்னையிலேயே இருக்க உடன்பட வைத்தாரோ, அன்றிலிருந்து தினமும் இரண்டு மணி நேரமாவது தன் அத்தையின் வீட்டிற்கு வருவதை வாடிக்கையாகத்தான் வைத்திருந்தான் அவன்.

தெரிந்து சில தடவை வருவான்... ஆனால், பல சமயம் பின் பக்கத் தென்னை மரமும், அவள் அறை

ஜன்னலும்தான் அவனுக்கு வாசலாக இருந்தது. வந்து, ஜானகியை வெறுப்பேற்றி, அழ வைத்து விட்டுத்தான் கிளம்புவான். அவனின் குடி, சிகரெட், போதைப் பழக்கம் எதையும் அவளிடம் விவரிக்காமல் விட்டு வைத்ததில்லை. ஏன், அவன் பழகிய பெண்களிடம், தான் நடத்திய மன்மதத் தாக்குதலையும்தான்.

கேட்க முடியாமல் காதைப் பொத்திக் கொண்டு, "அய்யோ... சிவசிவா... தயவு செய்து கொஞ்சம் சும்மா இரேன். நான் இன்னைக்கு விரதம் வேறே... இதெல்லாம் சொல்லாதே... நேக்குக் குமட்டிண்டு வர்றது..." என்று கெஞ்சினாலும், கதறினாலும் அவன் காதில் விழாது.

அவனைப் பொறுத்த வரை, ஜானகி ஒரு அடிமை. தன் சூத்திரங்கள் எல்லாம் செல்லுபடியாகின்ற, தன்னை எதிர்க்கச் சக்தியில்லாத அடிமை... அவ்வளவுதான்.

இப்போது கூட அவள் மறுக்க மறுக்க, இந்தப் பாட்டைப் போட்டுக் கொண்டு, வாயில் சிகரெட்டுடன் இருப்பதைக் கண்டு, "ஏய்... உனக்கு அறிவில்லை. உன்னால் நான் எத்தனை ஊதுபத்திகள் கொளுத்துகிறேன் தெரியுமா? சிகரெட்டைக் கீழே போடு... நாத்தம் குடலைப் புரட்டுகிறது..." என்று கூறியவளை மேலும் கீழும் பார்த்த அவன்,

"ஆமா... எனக்கு ஒரு சந்தேகம். நான் உன்னை இவ்வளவு தொல்லை பண்றேனே... ஏன் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்ற? என் மேல் லவ் ஏதாவது...? அப்படி எல்லாம் இருந்தால் மறந்திடு குட்டி. என்னை நம்பி

நிறையப் பேர் இருக்காங்க...'' என்று கெத்தாகக் கூற, அவனைப் புழுவைப் போலப் பார்த்த ஜானகி,

"ஓ... உனக்கு அப்படி வேற நினைப்பு இருக்கா...? நீ கெட்டவன்தான்... பொறுக்கிதான். ஆனால், இந்த வீட்டில் என்னைத் தினமும் வந்து பார்க்கிற ஒரே ஜீவன் என் அம்மாவுக்கு அடுத்தபடியாக நீதான்... அம்மா கூட அப்பா இருந்தால் மேலே வரவே மாட்டாங்க. போன்ல தான் பேசுவா... சாப்பாடு கொடுக்க வர்றதோட சரி.

"நீ மட்டும்தான் எப்போன்னாலும் திருட்டுத்தன மாகவாவது என்னைப் பார்க்க வர்றே... இது தப்புன்னு நேக்கும் தெரியறது. தப்புன்னாலும் திருட்டு மாங்காய் பறித்துச் சாப்பிடுறதில்லை...? அது மாதிரிதான் இது... ஒரு வித ஆத்ம திருப்தி. அது பல பேருக்குப் புரியாது. பத்து வருஷமாகத் தன்னந்தனியா ரூமில் இருந்து பார்... தெரியும்...'' என்று கூறி விட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொள்ள,

நானி, "ட்ராமா... ட்ராமா... கமான், ட்ராமா குயின்... நானே எங்கப்பாவோட அட்வைஸ் தொல்லை... அப்புறம் அவரோட துப்பறியும் வேலையில் இருந்து தப்பிக்கத்தான் உன் வீட்டைக் கூடாரமாக வெச்சிட்டு இருக்கேன். நீ என்னை இப்படி அழுது அழுதே துரத்திடுவே போல... ஆனால் ஒண்ணு ஜான்... நீ இப்போ நல்லா பேசக் கத்துக்கிட்டே..." என்று கூற,

ஜானகி, "வாயை மூடுறியா? முதலில் டி.வி.யை ஆஃப் பண்ணு. எரிச்சலா வருது. ஒண்ணாவது நல்ல

பாட்டுக் கேட்கிறியா நீ? சே... கேவலமான ரசனை... பொறுக்கி..." என்று திட்ட,

நானி சிரிப்புடன், "ஏன்...? இந்தப் பாட்டுக்கென்ன குறைச்சல்? அதில் வர்ற பொண்ணு, எனக்குத் தெரிஞ்ச ஸ்ட்ரிப்பர் மாதிரி இருக்கா... அதான் பார்க்கிறேன்," என்று கூற,

ஜானகி புரியாமல், "ஸ்ட்ரிப்பரா...? அப்படின்னா...?" என்று கேட்க,

நானி, "இது கூடத் தெரியாதா? பச்சைப் பிள்ளையா இருக்கியே...! அதாவது... பொண்ணுங்க பாட்டுப் போட்டு ஆடியபடி, ஒவ்வொரு டிரெஸ்ஸாகக் கழட்டிக் கழட்டிக் கடைசியில்... " என்று கூறுவதற்குள்,

"அய்யே... சீ... கர்மம். கடவுளே...! உன்னால் என்னை வாந்தி எடுக்க வைக்காமல் ஒரு நாள் கூடப் பேச முடியாதா?" என்று கேட்க,

நானி போலியாக்ப் பதறி, "ஜான்... வாந்தியா...? நான் எதுவுமே பண்ணலையே...! கையைக் கூடப் பிடிக்க விட மாட்டேன்ற... இதில் நான் எப்படி உன்னை..." என்று கூறு முன்னே... ஜானகியின் கையால் சரமாரியாகத் தலையணையால் அடி வாங்க ஆரம்பித்தான் அவன்.

எந்த அளவிற்கு ஜானகி, அவன் வருகையால் எரிச்சல் பட்டாளோ, அந்த அளவு ஜானகி தன் கூட்டை விட்டுச் சற்றே வெளி வந்திருக்கிறாள் என்பதும் உண்மைதான். அது, எந்த அளவிற்கு முன்னேறும் என்பதுதான் புரியாத புதிர்.

பின் ஒருவாறாக அடித்து ஓய்ந்தவள், “சே...! பொறுக்கி. உன்னை நினைச்சாலே ஆத்திரமாக வர்றது. நீயெல்லாம் ஒழுக்கம்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிறவன். வாழ்க்கையில் ஒரு நல்ல பழக்கம் இருக்கா உன் கிட்டே...? பண்றதெல்லாம் அயோக்கியத்தனம்...” என்று குமுற,

அவள் திட்டியதைச் சற்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் சிரித்த நானி, “நல்லது கெட்டது எல்லாம் நாம் பார்க்கிற பார்வையில்தான் இருக்கு. என்னைப் பார்த்த உடனே நீ என்னை ஜட்ஜ் பண்ணிட்டே... அதுதான் உனக்குத் தப்பாத் தெரியுது. அதனால் அடிப்படைத் தப்பு உன் பார்வையில்தான்... என் மேல் இல்லை...” என்று வாதாட,

ஜானகி, “ஆமா... எவன்தான் தன்னைக் கெட்ட வன்னு ஒத்துக்கிட்டு இருக்கான். நீயும் அப்படித்தான்...” என்று கூற,

அதைக் கேட்டுச் சிரித்த நானி, “சரி. ஒரு போட்டி வெச்சுக்கலாம். நான் இப்போ ஒரு கவிதை சொல்றேன். அதை யார் யாரைப் பத்திச் சொல்றான்னு கரெக்ட்டா சொல்லணும். அப்படிச் சொல்லிட்டா நான் சொல்றது தப்பு. உன் கண்ணோட்டம் கரெக்ட்... சரியா?” என்று கேட்க, அவளும் தலையாட்டினாள்.

“நான் உன்னுள் நுழைந்த நாள் உற்சவம்
வெளியேறிய நிமிடமோ பிரம்மோற்சவம்!

உன் அங்கங்கள் ஒவ்வொன்றையும்
உரசியவன் நான்!
உன் பனித்துளி இதழ்களில்
முதல் முத்தம் பதித்தேன் நான்!
முதல் முத்தத்தில் முக்குளிப்பில்
மூர்ச்சை அடையும் மகிழ்ச்சியில் நீ!
குளியல் என்னும் போர்வையில்
உன் ஸ்பரிசங்களின் மிச்சங்கள்
இன்னும் என் மேனியில் மாறாத மச்சமாய்...
உன் வெண் பஞ்சுத் தனங்களில்
உதடுகளை நான் உரச...
உணர்வுகளின் உச்சத்தில் நீ!
உரிமையின் வேகத்தில் நான்!"

என்று அவன் கூறி முடிப்பதற்குள், காதைப் பொத்திக் கொண்ட ஜானகி, "அய்யோ! ப்ளீஸ்... கொஞ்சம் நிறுத்துறியா? விரசமாகப் பேசுறதுக்கும் ஒரு அளவு இருக்கு..." என்று கத்தி விட, அவளைக் கூர்மையாகப் பார்த்த நானி,

"விரசமா...? இதில் என்ன விரசம்?" என்று கேட்க,

ஜானகி, "பின்னே...! ஒரு வார்த்தையாவது விரசமில்லாமல் இருக்கா? தாம்பத்யத்தை இவ்ளோ பச்சையா..." என்று அவள் கூற முடியாமல் திணற, அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்த நானி,

"தாம்பத்தியமா...? இரு, நான் மீதி உள்ள வரிகளையும் சொல்றேன்...

"உரிமையின் வேகத்தில் நான்...
இனி வேறு என்ன நான் சொல்ல...
உன் அழகைச் சொல்ல...
வார்த்தைகளும் கைவசம் இல்லை!
கலவியின் பயனாய் என்னைக் கருவுற்றுப்
பெற்ற என் தாயே!
நான் உன்னுள் நுழைந்த நாள் உற்சவம்!
வெளியேறிய நிமிடமோ பிரம்மோற்சவம்!"

என்று கூறி விட்டு அவளைப் பார்க்க, ஜானகியின் முகத்தில் அருவருப்பு மறைந்து இப்போது அதிர்ச்சிதான் இருந்தது.

அதைப் பார்த்த நானி, "என்ன பார்க்கிறே? ஒரு கரு தாயின் கர்ப்பத்தில் நுழைந்து, வெளிவருவது, ஒரு தாயோட முதல் முத்தம், குளிப்பாட்டுதல், பசியாற்றுதல் - இதை எல்லாம் ஒரு குழந்தை சொல்ற மாதிரியான கவிதை இது. இப்போ சொல்லு... தப்பு என் கிட்டேயா? இல்லை, உங்களோட பார்வையிலா?" என்று மென்மையாக, ஆனால் நக்கலான தொனியில் கேட்க,

ஜானகியிடம் இருந்து பதில் இல்லை... மாறாகக் கண்ணீர்தான் வந்தது.

## 8

தன் முன் குலுங்கிக் குலுங்கி அழும் ஜானகியையே பார்த்துக் கொண்டிருந்த நானிக்குச் சட்டென்று முகத்தில் இருந்த வெற்றிடம் போய், நமுட்டுச் சிரிப்புக் குடி கொண்டது.

எப்போதும் நானி, ஜானகியின் கட்டிலுக்குப் பக்கத்தில் இருக்கும் சிறிய நாற்காலியில்தான் அமருவது வழக்கம். ஒரு தடவை அவள் படுக்கையில் அமரச் சென்றதற்கு, ஜானகி அழுது ஆர்ப்பாட்டம் செய்த நாளிலிருந்து, அவள் படுக்கையில் அமருவதை நிறுத்தி னாலும், அந்த நாற்காலியிலும் அமர்ந்து, ஹாயாகக் காலை ஜானகியின் கட்டிலின் மேல் நீட்டா விட்டால், அவனுக்குப் பொழுது புலராது.

இப்போதும் அப்படித்தான்... தன் வழக்கமாக நாற்காலியில் அமர்ந்திருந்தவன், அவள் அழுகையைப் பார்த்துச் சிரித்துத் தன் காலால் மெதுவாக அவள் காலைச் சுரண்ட,

அந்தத் தொடுகையில் தன் காலை இழுத்துக் கொண்ட ஜானகி, “சீ...” என்று அனிச்சைச் செயலாய் அருவருக்க,

இப்போதும் நானியின் சிரிப்புக் கட்டுக்கடங்காமல் பொங்க ஆரம்பித்தது.

அவனது சிரிப்பையே உறுத்தும் பார்வையால் பார்த்த ஜானகி, “இப்போ என்ன நடந்ததுன்னு கெக்கே பிக்கேன்னு சிரிக்கிறே...?” என்று எரிந்து விழ,

நானி, “இல்லை... நான் சொன்னதை நினைச்சு ஃபீல் பண்ணி அழுதேன்னு நினைச்சேன். ஆனால், அந்தக் காரணத்தால் இல்லைன்னு தெரிஞ்சது ஜான்... அதான் சிரிப்பு வந்திடுச்சு. உன்னால் என் சின்னத் தொடுகையைக் கூட இன்னும் தாங்க முடியலையே...!”

என்று சரியாகக் கணிக்க, அவனையே சில விநாடிகள் கண் சிமிட்டாமல் பார்த்து விட்டு,

"ஆமா... எனக்கு உன் பேச்சு, செயல் எதுவுமே பிடிக்கலைதான். என்னால், நீ வாழ்கிற வாழ்க்கையை நினைச்சுக் கூடப் பார்க்க முடியலைதான். நீ என்ன வேணா நினைச்சுக்கோ... என் பார்வை, புத்தி எது வேணா தப்பா இருக்கலாம்... ஆனால், நீ இதை எல்லாம் எப்படி நியாயப்படுத்தினாலும் என்னால் ஒத்துக்க முடியாது..." என்று விட்டு, மறுபடியும் அழ ஆரம்பிக்க,

மறுபடியும் அதே அலட்சியத்துடன் நானி, ஜானகியைப் பார்க்க,

ஜானகி, "என்னோட ஒழுக்கம், என்னோட ஆச்சாரம் இதெல்லாம் என் குணம். அதுதான் என்னை நானாகக் காட்டுது. அந்த விஷயத்தையும் என்னால் உனக்காக மாத்திக்க முடியாது. நீதான், யார் என்ன நினைச்சாலும் கவலைப்பட மாட்டியே! அப்புறம் என்ன?" என்று தெளிவான பார்வையுடன் கேட்ட ஜானகி, இப்போது நானியின் கண்களுக்கு முற்றிலும் புதிதாகத் தெரிந்தாள்.

அவன் - அழும் ஜானகி, அவன் சேட்டை தாங்காமல் புலம்பும் ஜானகி, தன்னம்பிக்கை என்றால் என்னவென்றே தெரியாத ஜானகி, தன்னை எதிர்த்துச் சுண்டு விரலைக் கூட நீட்டாத ஜான்கி - இப்படிப் பல ஜானகிகளைப் பார்த்திருக்கிறான். ஆனால், 'என் பார்வை இதுதான்... அதை நான் யாருக்காகவும் மாற்றிக் கொள்ள மாட்டேன்....' என்று கூறும் ஜானகி, அவனுக்குப் புதிது.

எனவே, "ஜான்... உண்மையிலேயே நீயா? இல்லை, பேய் ஏதாவது அடிச்சிருச்சா...? என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லையே! நேத்து பார்த்த இங்கிலீஷ் படத்திலிருந்து காப்பி அடிச்சியா? அந்தப் படத்தில் வர்ற பெட்ரூம் சீனைத்தானே உன்னைப் பார்க்கச் சொன் னேன்... அதை விட்டுப் படம் முழுக்க ஏன் பார்த்தே?" என்று அவன் அதற்கும் கேலி பேச,

ஜானகிக்கு ஆயாசமாக இருந்தது. என்ன பேசினாலும், எதிரே இருப்பவரின் மனதைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டவனிடம் என்னதான் வாதம் செய்வது? ஆனாலும் அவனை அப்படியே விட விரும்பாத ஜானகி,

"ஆமா... ஏன், நான் பேசக் கூடாதா? உலகத்தில் உள்ள அத்தனைக் கெட்டப் பழக்கம்... சிகரெட்டு, தண்ணி, பொம்மனாட்டிப் பழக்கம்னு எல்லாமே உன்னிடம் இருக்கு. நீயே உன்னை நியாயப்படுத்தி நல்லவன்னு சொல்லும்போது, நான் என்னைச் சொல்லக் கூடாதா?" என்று அவன் மூக்குடைத்து விட்டதாக இறுமாந்து எழுந்த வேளையில், அந்த விடாக்கண்டன் மறுபடியும் சிரிக்க ஆரம்பிக்க,

ஜானகி எரிச்சலுடன், "சே...! அதென்ன... எதுக்கெடுத்தாலும் கெக்கே பிக்கேன்னுட்டு... தூங்கினால் கூட என் மண்டைக்குள்ளே குடையறது..." என்று சலித்துக் கொள்ள, இன்னும் அதிகமாகச் சிரித்த நானி,

"அய்யோ ஜான்... மேரி ஜான்... என்னத்தைச் சொல்ல... நீ இப்படிப் பச்சைப் புள்ளையா இருந்தால்,

என்னால் எப்படிச் சிரிக்காமல் இருக்க முடியும்? ஆமா... நான் நல்லவன்னு உன் கிட்டே எப்போ சொன்னேன்... சொல்லு!" என்று கூற,

ஜானகி, எரிச்சலில் பல்லைக் கடித்து, "டேய், கூறு கெட்டவனே... இவ்வளவு நேரம் சுரைக்காய்க்கு உப்பில்லைன்னா பேசிண்டிருந்தே... சே... உன் கிட்டே பேசுறதுக்குள்ளே நேக்கு நாக்கு வரள்றது. அய்யோ... இன்னைக்கு விரதம் வேற... யாரையும் திட்டக் கூடாது," என்று கன்னத்தில் போட்டுக் கொள்ள,

நானி, "அய்யோ... இந்தக் கொசுத்தொல்லை தாங்கலை. ஆயிரம் விரதம்... ஆயிரம் பிலீவ்ஸ்... சரி, நான் எப்போ உன் கிட்டே நல்லவன்னு சொன்னேன்...?" என்று மறுபடியும் கேட்க,

ஜானகி, "பின்னே எதுக்கு வாதம் செஞ்சே...?" என்று பொறுமையை இழுத்துப் பிடித்துக் கேட்க,

நானி, "எனக்கு ஆர்க்யூ பண்ணணும்னு தோணிச்சு. பண்ணினேன். அதுக்காக என்னைப் போய் நல்லவன்னு சொல்லிட்டியேம்மா... நான் என்ன பண்ணுவேன்? இப்படி எல்லாம் என்னை நல்லவனாக்கிச் சமாதி கட்டலாம்னு பார்க்காதே! இப்போ சொல்றேன்... நான் ரொம்பக் கெட்டவன். கெட்டவனாக இருக்கிறதையே பாக்கியமாக நினைக்கிற கெட்டவன். நான் இப்படிச் சொன்னதும் என் கேரக்டரைப் பத்தி ரொம்ப யோசிக்காதே. இது உன்னை மாதிரி முட்டாளாலே முடியாது..." என்று கூறி விட்டு, அவள் பதிலுக்குக் காத்திராமல், ஜன்னல்

வழியாகச் சிரித்தபடி வெளியேறியவனை, ஒருவித இயலாமையுடன் கூடிய பார்வை பார்த்தாள்.

அவன் நல்லவன் என்று கூறியபோது வந்த கண்ணீரின் அளவை விட இப்போது அதிகமாக அவள் கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் விழ ஆரம்பித்தன.

ஆனால், நானி என்னும் புதிரான வினாவின் விடையை அந்த முட்டாள் அப்பாவி ஜானகிதான் அவிழ்க்கப் போகிறாள் என்பதை அப்போது இருவருமே அறியவில்லை.

இப்படியாகப் பல இன்னல்கள் மற்றும் பின்னல் களுடன் நானி, ஜானகி இருவரின் உறவும் ஓரளவு சந்தேகம் வராமல் நன்றாகவே சென்று கொண்டிருந்தது. ஆனால், ஜானகிக்குத்தான் நானியின் தொல்லையைப் பொறுத்துக் கொள்ளக் கூடிய பொறுமையின் அளவு குறைந்து கொண்டே வந்தது.

இப்போது சரிக்குச் சரி அவனுடன் வாயாட ஆரம்பித்திருந்தாள் அவள். அவனோடு இருக்கும்போது மட்டும்தான் அவள் வலி, அவள் இயலாமை அனைத் தையும் மறந்திருந்தாள். ஆனால், அதை அவளே உணரவில்லை. காரணம், நானி மட்டுமே!

அந்த அளவிற்கு அவளை ஒவ்வொரு நிமிடமும் வெறுப்பேற்றிக் கொண்டும் கேலி செய்து கொண்டும் கிட்டத்தட்ட அவளைப் பைத்தியமாக்கிக் கொண்டிருந்தான். ஆனால், இவ்வளவு செய்தும், அவனைத் தவிர்க்க

வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியதே இல்லை. அது ஏன் என்று அவளுக்கும் தெரியவில்லை.

இப்படித்தான் அன்று திருமணத்திற்கு மண்டபம் பார்க்க வேண்டுமென்று அனைவரும் சென்றிருக்க, அவர்கள் சென்றிருந்த நேரம் வந்து சேர்ந்தான் நானி. அவனைப் பார்த்ததும் ஒரு பெருமூச்சு விட்டு, ஜானகி முகத்தைத் திருப்பிக் கொள்ள,

நானி, "அட... எ... என்னா ஜான்...?" என்று ஆரம்பிக்க,

ஜானகி, "இதோ பாரு... உன் மூஞ்சியைப் பார்த்தாலே தெரியறது... மூக்கு முட்டக் குடிச்சிண்டு வந்திருக்கேன்னு... தயவு செய்து போயிடு... என்னைத் தொந்தரவு பண்ணாதே..." என்று கத்த,

நானி, "ஓ... ஜான்... நான் குடிக்கிறது புதுசா...? இப்படி எல்லாம் சொன்னால் நான் மாறிடப் போறேனா? ஃப்ரீயா விடு... நீ என்ன சொன்னாலும் நான் கேட்கப் போறது இல்லை," என்று அசால்ட்டாகக் கூற,

ஜானகி, அவனிடம் பேசப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொள்ள, நானி அவள் கையை வழக்கம் போல் தொடப் போக,

ஜானகி, "சீ... கர்மம்... கடங்காரா... குடிச்சிட்டு இனிமேல் இப்படிச் செய்யாதே. நேக்குப் பிடிக்கலைன்னு எத்தனை வாட்டி சொல்றது? ஒரு தடவை சொன்னா நோக்குப் புரியாதா? என்னை ஏன் இப்படிச் சாகடிக் கிறே...?" என்று கேட்க,

நானி சிரித்தபடி சிறிது நேரம் கூர்மையாகப் பார்த்து விட்டுப் பின், "ஓ.கே... ஓ.கே... அதுக்காக மூஞ்சியை இப்படி வெச்சிக்காதே... சகிக்கலை..." என்று கூற,

ஜானகியும் குழந்தைத்தனமாய், "என் மூஞ்சி, உன் மூஞ்சியை விட நல்லாத்தான் இருக்கு..." என்று நொடித்துக் கொண்டாள். ஜானகி என்னதான் சோகத்திலும் துயரத்திலும் உழன்றாலும், அவளிடம் எப்போதுமே ஒரு விதக் குழந்தைத் தனம் இருக்கும். அவள் மனது இன்னும் இறுகாமல் இருப்பதற்குக் காரணமே அதுதான்.

அந்தக் குணம் மட்டும் இல்லை என்றால், அவளால் அந்த வீட்டில் இவ்வளவு வருடம் வாழ்ந்திருக்க முடியாது. ஆனால், அவளின் அதே முதிர்ச்சியின்மைதான் அவளின் இந்த நிலைக்கும் காரணம்.

அவளைக் கண்டு இன்னும் சிரித்த அவன், "அப்படியா? இப்போ உன் மூஞ்சியை நீயே செல்ஃபி எடுத்துப் பாரு... பயந்திருவே..." என்று நக்கலடிக்க,

ஜானகி யோசனையுடன், "செல்ஃபியா...? அப்படின்னா...?" என்று கேட்க,

அவனோ, "நீயெல்லாம் டி.வி.யில் என்ன பார்க் கிறே? செல்ஃபின்னா தெரியாமல் இந்த யுகத்திலேயே நீ இருக்கக் கூடாது. நல்லா சொல்றேன் கேட்டுக்கோ... தன்னைத் தானே போட்டோ எடுத்துக்கிறது தான் செல்ஃபி. இப்போ பாரு..." என்று கூறி, தன் ஐபோனில் தன்னைப் புகைப்படம் எடுத்துக் காண்பிக்க,

ஜானகி, “சூ... இவ்ளோதானா? இதைத் தெரியாட்டி என்ன?” என்று அலட்சியமாகக் கேட்க,

நானி, “இன்றைய இளைஞர்கள் உன்னோட இந்தக் கமெண்ட்டைக் கேட்டாங்கன்னா அடுத்த நாள் பிரளயமே உருவாகும். பஸ் ஓடாது, ரெயில் ஓடாது, எதுவுமே ஓடாது. பேஸ்புக் ட்விட்டரில் உன்னைக் கிழி கிழின்னு கிழிப்பாங்க. நானே உனக்கு பேஜ் ஓபன் பண்ணி, நீ இப்போ சொன்னதை அப்டேட் செய்வேன்...” என்று பயமுறுத்த,

ஜானகி, “போதும்... ரொம்பப் பண்ணாதே! ஆமா... எப்படித் தன்னைத்தானே போட்டோ எடுப்பாங்க?” என்று கேட்க, நானி, “நீ எப்போடா இதைக் கேட்பேன்னுதானே வெயிட் பண்ணேன்...” என்று கூறி விட்டு, அவளருகில் சென்று அமரப் போக,

ஜானகி, “ஹேய்... குடிகாரா... கிட்டே வராமல் சொல்லு...” என்று எச்சரிக்க,

நானி, “அதெல்லாம் முடியாது ஜான்... இப்போ பாரு... பாரு...” என்று அவளருகில் சட்டென்று அமர்ந்து, காமிராவை ஆன் செய்தபடி அவள் கவனத்தைத் திசை திருப்பி,

“லெட்ஸ் டேக் எ செல்ஃபி புள்ள... கிவ் மீ எ உம்மா...” என்று பாடியபடி, அவள் அசந்த நேரத்தில் அவள் கன்னத்தில் தன் முத்திரையைப் பதித்தே விட்டான் அவன்.

முத்தம்... இரு உதடுகள் மூலம் பத்துப் பைசா செலவில்லாமல் மனம் என்னும் விண்வெளியில், மனித உணர்வுகளைப் புகைப்படம் எடுக்கும் மங்கல்யாண். காதலா...? காமமா...? எந்த வகையில் சேர்ப்பது என்று இதுவரை கண்டறியாத உணர்வுகளின் கருப்புக் கண்டம்.

ஆனால், ஜானகிக்கு அது கிடைக்கப் பெற்றதோ ஒரு ஆடவனிடமிருந்து... அதுவும் அவள் வெறுக்கும் ஒருவனிடமிருந்து... அதுவும், அப்போதுதான் குடித்து விட்டு வந்தவனிடமிருந்து. அவளுக்குப் பட்டாம்பூச்சி பறக்கவில்லை. கன்னம் சிவக்கவில்லை. ஹார்மோன் நாட்டியம் ஆடவில்லை. மாறாக,

"ஆஹ்ஹ..." என்று கத்தத்தான் முடிந்தது. ஜானகி, கன்னத்தைப் பொத்திக் கொண்டு, கிட்டத்தட்ட அலற... ஆனால், பாவம்... அவள் அலறலைக் கேட்கத்தான் அங்கே யாருமே இல்லையே! கண்ணீர் முத்துக்கள் சிதற அவள் கத்த,

அவளை முத்தமிட்ட அவனோ நிமிர்ந்து, "என்னையா குடிகாரன்னு சொன்னே...? இப்போ நீயும் தீட்டுத்தான்... இப்போ என்ன செய்வே...?" என்று கேட்க,

சத்தியமாக, அவனைக் கொன்று போடும் ஆத்திரம் அவளுக்கு வந்தது.

"டேய்... ஏன், ஏன் இப்படிச் செய்றே? என் மனசைப் பத்திக் கொஞ்சம் கூட அக்கறை கிடையாதா? உன்னால் ஒரு நாள் கூட நல்லவன் மாதிரி நடிக்கக் கூட முடியாதா?

எனக்கு முடியலை... உன்னை என் தனிமைக்கு வடிகாலாய் நினைச்சேன்தான்... ஆனால், இப்போ... என்னால்... என்னை விட்டுடு நானி... போயிடு... எனக்குப் பிடிக்கலை. நேக்கு அருவருப்பா இருக்கு... போயிடு," என்று கத்த,

நானி, அவள் கூறியதை எல்லாம் கேட்டு மனம் மாறியிருந்தால்தான் அதிசயம். அவனோ, "ஜான்... ஜான்... உன் ட்ராமாவை என்னைக்குத்தான் நிறுத்தப் போறே...? இதுக்கே இப்படி அழுதால், உனக்கும் எனக்கும் கல்யாணம் செய்யறதா இருக்காங்களே... அதுக்கு என்ன செய்வே? செல்லம்... சொல்லு...!" என்று அசால்ட்டாகக் கேட்க,

ஜானகி, அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையிலும் சுக்கல் சுக்கலாக அதிர்ந்தாள்.

## 9

**தா**ன் கூறிய சேதியைக் கேட்டுக் கடந்த பதினைந்து நிமிடங்களாகக் கதறிக் கதறித் தன் நிலையை எண்ணி அழும் ஜானகியை, கன்னத்தைக் கை வைத்துத் தாங்கியபடி ஒருவித சுவாரஸ்யமான புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் நம் கதாநாயகன்.

"ஆனாலும் என்னைக் கல்யாணம் செய்துக்கப் போகிற ஆனந்தத்தில் நீ இவ்வளவு அழக் கூடாது ஜான்... நீ விடுற ஆனந்தக் கண்ணீரில் நானே மூழ்கிடுவேன்

போல..." என்று அடக்கிய சிரிப்புடன் கூறியவனை, முடிந்த மட்டும் முறைத்த ஜானகி,

"மகாபாவி... நான் ஒண்ணும் ஆனந்தத்தில் அழலை... துக்கத்தில் அழறேன். இந்த விஷயத்தில் கூட உன்னால் எப்படி விளையாட முடியுது? நிஜமாகச் சொல்லு... நீ சொல்றது பொய்தானே! அப்படி எல்லாம் இல்லைதானே! வாயைத் தொறந்தா நோக்குப் பொய்தானே வரும். அது மாதிரிதானே இது?" என்று இறுதியாய் மிஞ்சியிருந்த நப்பாசையில், கிட்டத்தட்ட உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கேட்ட ஜானகியைப் பார்த்துச் சற்றும் மனச்சாட்சியில்லாமல் அந்த வார்த்தை களை உதிர்த்தான் அவன்.

"என்ன ஜான்... இதென்ன சாதாரண விஷயமா...? கல்யாண விஷயம். இதில் போய் நான் விளையாடு வேனா? சத்தியமாக நான் கேட்டேன்... நோக்கும் நேக்கும் கல்யாணம்டி குழந்தே! நான் ஒரு நாள் உன் வீட்டுக்கு வந்தப்போ..." என்று அன்று நடந்ததைக் கூற ஆரம் பித்தான்.

ஒரு தடவை குணாவுடன் வீட்டிற்கு வந்து விட்டுத் திரும்பும்போது, தன் கைபேசியை நானி மறந்து வைத்து விட... அதை எடுக்க அவன் வர,

குமாரும் ரேணுகாவும் பேசிக் கொண்டிருக்க, அதை மறைந்து நின்று ஒட்டுக் கேட்க ஆரம்பித்தான் நானி.

குமார், "டி ரேணு... உன் பொண்ணு ஜானகியைக் கல்யாணம் செய்து கொடுக்கிறதைப் பத்தி இன்னும் பிடி

கொடுக்க மாட்டேன்றானே உன் தம்பி...'' என்று ஆரம்பிக்க,

ரேணுகாவிற்கு ஆயாசமாக இருந்தது. "ஏன்னா... இப்படி அவளைத் தள்ளி விடறதிலேயே குறியாய் இருக்கேளே... அவனைப் பத்தி என் தம்பிக்கே நல்ல அபிப்ராயம் இல்லை. நம்ம ஜானு பாவம்ணா... டாக்டர்தான் அவள் கல்யாண வாழ்க்கையிலே எந்தவிதப் பிரச்சினையும் இருக்காதுன்னு சொன்னாரே... கொஞ்சம் நல்ல பையனா... அவளைப் பாசமாகப் பார்த்துக்கிறவனா பாருங்களேன். வசதி கூட ரெண்டாம் பட்சம்தான்..." என்று கூற,

குமார் எரிச்சலுடன், "ஆமா... உன் பொண்ணு மட்டும் யோக்கியமா...? சின்ன வயசில் பண்ணினது மறக்கலைடி நான்..." என்று வார்த்தைகளில் அமிலத்தைத் தூவிக் கூற,

ரேணுகா, "பகவானே...! வேண்டாம்ணா... இப்படி அபாண்டமாகப் பேசாதீங்கோண்ணா... அவ பத்தரை மாத்துத் தங்கம். அவளைத் தப்பு சொல்றதை விட்டுடுங் கோண்ணா... என்னால் தாங்க முடியலை...'' என்று கண்ணீருடன் காதைப் பொத்திக் கொள்ள,

குமார் ஒருவிதக் குரூரச் சிரிப்புடன், "ஓஹோ... பொண்ணைப் பத்திச் சொன்னாத் தாள முடியலையோ. அவன் ஆம்பளை... கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பான். உன் பொண்ணுதான் அவனை மாத்தட் டுமே... அதான் அவ மாத்துக் குறையாத பொன் னாச்சே...!" என்று கேலி பேச,

ரேணுகா தீர்க்கமான பார்வையுடன், “அந்தத் தலையெழுத்து அவளுக்கு எதுக்குண்ணா? அவன் என் தம்பி பையன்தான்... நான் அவனுக்கு அத்தைதான். அவன் மேல் எனக்குப் பாசம் இருக்கு... நான் இல்லைங்கலை. அதுக்காக என் பொண்ணைக் கட்டிக் கொடுக்கிற அளவுக்கு நான் வக்கத்துப் போகலை. இதுநாள் வரை நான்தானே அவளைப் பார்த்துக் கிட்டேன்... நானே அவளுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன். உங்களால் முடியா விட்டால் சும்மா இருங்கோ...” என்று எதிர்த்துப் பேச, சட்டென்று தான் அமர்ந்திருந்த இருக்கையை விட்டு எழுந்த குமார்,

“வேண்டாம்டி... வீணாப் பேசி என்னைக் கொலைகாரனாக்காதே! உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவிதான். நீ அதை ஞாபகம் வெச்சிக்கோ. அபி - திவ்யா கல்யாணம் முடிஞ்சதும் கண்டிப்பா நானிக்கும் ஜானகிக்கும் கல்யாணம் பேசத்தான் போறேன். இப்படி ஆச்சா பூச்சான்னு பேசிண்டு இருந்தேன்னு வை... உன் பொண்ணுக்கு அடுத்தாப்புல உன்னையும் மாடியில் ஒதுக்கி வெச்சிடுவேன்...” என்று கூறித் தன் துண்டை ஒரு உதறு உதறிவிட்டுத் தன்னறைக்குள் செல்ல,

ரேணுகா, கையறு நிலை போல் அவரையே வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

கண்களில் சற்றும் ஈரமின்றி அவன் கூற, அந்த வார்த்தைகள் அவள் உயிர் வரை குத்திக் கிழித்தன.

அவ்வளவுதானா...? அவ்வளவேதானா அவள் வாழ்க்கை? முதலில் தன் தாய் மற்றும் தன் வீட்டை விட்டுப் பிரிந்து... இந்த - கிட்டத்தட்ட முடமான நிலையில், தனக்குத் திருமணம் என்பதே அவளால் ஜீரணிக்க முடியாத செய்தி. ஆனால், அந்தத் திருமணச் செய்தியிலும் அதிர்ச்சி, நானியுடனான திருமணம்.

சாதாரணப் பெண்ணாலேயே நானி போன்ற ஒருவனுடன் குடும்பம் நடத்துவது பற்றிக் கனவில் கூட நினைக்க முடியாத காரியம். அவளே சில சமயம், இவனுக்கு இந்த ஜென்மத்தில் எந்தப் பெண்ணோடும் திருமணம் ஆகக் கூடாது என்று பல தெய்வத்திடம் முறையிட்டிருக்கிறாள். ஆனால், அந்த துரதிர்ஷ்டசாலியே தான்தான் என்பதை அறிய வந்த அந்த நிமிடம்... அவளால் தன் வாழ்க்கையை வெறுக்காமல் இருக்க இயலவில்லை.

"ஏன்... நான் என்ன தப்பு செய்தேன்? அப்பா இன்னும் என்னை நம்பலையா? என் மேல் கொஞ்சம் கூடப் பரிதாபம் வரலையா யாருக்கும்... நான் யாரையாவது தொந்தரவு செய்றேனா? எனக்கு ஏன் இந்த நிலைமை? எனக்கு... என்னால கல்யாணம் கல்யாணம் செய்து சாதாரணமா வாழ முடியாது. என்னை... என்னை வேண்டாம்னு சொல்லு நானி...

"கடைசி வரை என்னால் உனக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. மாறா எனக்குப் பணிவிடை செய்துண்டு இருக்கணும். தயவுசெய்து ஏதாவது செய்,

நானி... நேக்குக் கல்யாணம் வேணாம்..." என்று கெஞ்ச ஆரம்பிக்க,

அவளையே சிறிது நேரம் உறுத்துப் பார்த்த நானி, "ஜான்... உனக்குக் கல்யாணம் பிடிக்கலையா? இல்லை, என்னுடனான கல்யாணம் பிடிக்கலையா?" என்று கேட்க,

ஜானகியால் எதுவும் பேச முடியவில்லை. அவளும் எப்படித்தான் சொல்லுவாள்? ஆனால் நானி விடவில்லை.

"எனக்குத் தெரியும், ஜான்... உனக்குக் கல்யாணம் பண்ணிக்கிறதில பிரச்சினை இல்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதில்தான் பிரச்சனை. அப்படின்னா, நான் ஒண்ணு சொல்றேன். உன்னைக் கல்யாணம் செய்துக்கிறதுக்காக நீ பயப்படுறது தே..." என்று இழுக்க,

ஜானகி அவனையே பார்க்க... நானியோ சிரித்து, "தேவையான சமாச்சாரம்தான். ஏன்னா... நான் ரொம்ப்ப்ப கெட்டவன்..." என்று கூற, ஜானகிக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது. ஆனாலும் பேச முடியாமல் அவனையே பார்க்க...

நானி தனக்கான போதை மாத்திரை இரண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு தொடர்ந்தான் குழறலாக...

"பாரு, ஜான். நான் நானி. என்னைப் பத்தி உனக்குக் கிட்டத்தட்ட எல்லாமே தெரியும். எனக்கு நன்மை கிடைக்காத எந்த விஷயத்தையும் நான் செய்றதில்லை. உன்னைக் கல்யாணம் செய்தா எனக்கு ப்ராஃபிட் தான்

ஜாஸ்தி. நான் நினைச்சபடி இருக்கலாம். நீயும் பெரிசா என்னை எதிர்க்க மாட்டே. அப்புறம் எங்கப்பாவோட தொல்லையில் இருந்து தப்பிச்சு இந்த வீட்டிலேயே வீட்டோட மாப்பிள்ளையா கூட ஆகலாம்.

"அப்புறம் regarding sex life... கோழி முடமா இருந்தாலும் குழம்பு ருசியாத்தான் இருக்கும். அது ஒரு கிஸ்லயே எனக்குத் தெரிஞ்சு போச்சு. அதனால் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. இதனால் உனக்கும் சந்தோஷம் தான் கிடைக்கும்..." என்று அவளையே அளவெடுத்தவாறு கூற, ஜானகி அவன் பேச்சில் கூனிக் குறுகிப் போனாள்.

பின் அவன், "சொல்லு... இவ்வளவு நன்மைகள் எனக்குக் கிடைக்கும் போது என்னால் இந்தக் கல்யா ணத்தை நிறுத்த முடியாது. யூ நோ ஒன் திங். அவர் மேரேஜ் வில் பி ஓபன் மேரேஜ். என்ன புரியலையா? வெளிநாடுகளில் இது ரொம்பப் பிரபலம். அதாவது கல்யாணத்துக்கு அப்புறமும் உனக்கு யாரையாவது பிடிச்சிருந்தா... நீ அவங்க கூட வாழலாம். எனக்கு எந்தவிதப் பிரச்சனையும் இல்லை. அதே மாதிரிதான் நானும். வெளிப்படையாய் வாழறதில் தப்பு இல்லையே...

"சோ, நான் என் முயற்சியால் இந்தக் கல்யாணத்தை நிறுத்த மாட்டேன். ஆனால் உனக்குப் பிடிக்கலைன்னா... நீ இந்தக் கல்யாணத்தை நிறுத்த உனக்கு எல்லா உரிமையும் இருக்கு..." என்று கூற, ஜானகிக்கு ஓங்கரித்துக் கொண்டு வாந்தி வரும் போல் இருந்தது.

உன் மேல் கொஞ்சம் சேற்றைப் பூசுகிறேன்... பொறுத்துக் கொள் என்பது போல் இருந்தது அவன் பேச்சு.

'இந்தக் கண்றாவிக்குப் பேர் கல்யாணமா? இப்படி ஒரு வாழ்க்கையா... தனக்கா?' என்று அதிர்ந்துதான் போனாள், அந்த அப்பாவிப் பெண்.

ஆனால் நானி அதற்கு மேலும் நிறுத்தவில்லை. "ஆனா, ஜான்... உங்கப்பா ஏதோ நீ மட்டும் யோக்கிய மான்னு கேட்டாரே? அப்படின்னா... நீயும் என்னை மாதிரி எக்செட்ரா... எக்செட்ரா ஏதாவது செய்திருக்கியா? அப்படித்தான் நினைக்கிறேன்..." என்று வார்த்தைகளைத் தரம் பார்க்காமல் அள்ளி வீச, ஜானகிக்குப் பல வருடங் களாக வலுக்கட்டாயமாக அடிமனதில் புதைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நானியால் தூர்வாறப்பட்டது.

அந்த நிகழ்ச்சிதான்... அவள் இப்படித் தன்னம்பிக்கை இல்லா எலும்புக் கூடாய் ஆக்கியது. துள்ளி விளையாட முடியாமல் படுக்கையில் சாத்தியது. துணிச்சல், தைரியம் என்றால் என்னவென்றே தெரியாத தொட்டாச்சிணுங்கியாய் மாற்றியது. இதோ, தன் முன் ஒருவன் தன்னை இவ்வளவு தூரம் அவமதித்தாலும் அவனை எதிர்த்து ஒரு விரல் கூட நீட்ட முடியாத கோழையாக மாற்றியது.

இப்படியாக அவளை அடியோடு மாற்றிய அந்த நிகழ்ச்சியை அவள் மனதில் இருந்து கிளறிவிட்ட அவனோ சற்றும் கவலைப்படாமல், "என்ன ஜான்... வெட்கமா? சரி,

கொஞ்ச நாள் அப்படித்தான் இருக்கும். போகப் போக சரியாகிடும்டா, டார்லிங். சரி, கல்யாணத்துக்கு இன்னை யிலிருந்தே ரெடியாகிக்கோ. மாமா நாளைக்கு வர்றேன்..." என்று கூறி விட்டு ஜன்னல் கதவைத் திறக்கப் போக,

ஜானகி கூறியது, அவளால் கூற முடிந்தது ஒரே வாக்கியம்தான்.

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு நான் தற்கொலை பண்ணிப்பேன்..." என்ற தீர்க்கமான வாக்கியம்தான் அவள் கூறியது.

அதைக் கேட்ட அவன் கலகலவெனச் சிரித்து விட்டு, "ஆல் தி பெஸ்ட் ஜான்..." என்று அதற்கும் கூடக் கவலைப்படாமல் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

ஆனால், அவன் சிரிப்புக்குப் பதிலாக ஜானகியின் முகத்தில் கண்ணீரும் உறுதியும் தான் இருந்தது.

இரவு 9.00 மணி.

"ஜானு, வெச்ச சாப்பாடு அப்படியே இருக்கு. சாப்பிடலையா?" என்று கேட்டார் ரேணுகா.

ஜானகி, "எனக்குப் பசி இல்லம்மா... விடு..." என்றாள், அழுகையை அடக்கி.

நானி பேசி விட்டுச் சென்றதிலிருந்து அவள் ஒரு முடிவெடுத்திருந்தாள். அதைச் செயல்படுத்தவும் நினைத்தாள்தான். ஆனால் ரேணுகாவைப் பார்க்கும் போதுதான் அவளால் உணர்ச்சிகளை அடக்க முடிய

வில்லை. எனவேதான் அவர் முகத்தைப் பார்ப்பதையே தவிர்த்தாள்.

ஆனாலும் ரேணுகா விடாமல், "இப்படிச் சாப்பிடாமல் இருந்து உடம்பைக் கெடுத்துக்காதே, கண்ணம்மா... வேணும்னா பழம் கொண்டு வரவா?" என்று கேட்க,

அவரின் கனிவான முகத்தையே கண்ணெடுக்காமல் பார்த்த ஜானகி, சின்னச் சிரிப்புடன் ஆமோதிக்க... அவள் கன்னத்தைத் தட்டி விட்டுக் கீழே சென்று பழங்களை எடுக்கச் சென்றார் அவர்.

அவர் சென்றதும் முகத்தைத் திருப்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். பின்... அவர் பழங்களை எடுத்து வந்து அதைக் கத்தியைக் கொண்டு நறுக்க ஆரம்பிக்க...

ஜானகி, "அம்மா, நீ போய் படு. ஏற்கெனவே முட்டிவலிக்கு மாத்திரை போட்டிருப்ப... தூக்கம் வரும். போய் படு. நான் சாப்பிட்டுக்கிறேன்..." என்று கூற,

ரேணுகா இடுப்பில் கை வைத்து முறைத்து, "எங்கே... நான் இப்படிப் போனதும் தட்டை மூடி வச்சிடலாம்னுதானே பார்க்கிறே. அதெல்லாம் முடியாது. இப்பவே சாப்பிடு..." என்று கூற,

ஜானு விரக்திச் சிரிப்புடன், "நீ காலையில் வந்து பாரும்மா. ஒண்ணும் இருக்காது..." என்று கூற,

ரேணுகா, "என்னடி சொல்ற?" என்று புரியாமல் கேட்க,

ஜானகி, "இல்லம்மா. தட்டில் ஒண்ணும் இருக்காது. நீ போ... நான் கண்டிப்பா சாப்பிடுறேன். அப்பா கத்தப் போறார். போம்மா..." என்று கெஞ்ச,

ரேணுகாவும் மனசே இல்லை என்றாலும், தன் பெண்ணின் பிடிவாதத்தால் அவள் உச்சியைக் கோதி விட்டு லைட்டை அணைத்து விட்டு அங்கிருந்து செல்ல... அவர் சென்றதுதான் தாமதம்... குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள் அவள்.

"அம்மா, போதும்மா. எனக்காக நீ கஷ்டப்பட்டது எல்லாம் போதும். இனிமேலும் நான் உனக்குப் பாரமா இருந்தா நான் மனுஷியே இல்லம்மா. உன்னால்தான் நான் இவ்ளோ நாள் உயிரோட இருந்தேன். ஆனால் உனக்காக அந்த உயிரையும் போக்கிக்கிறேன்ம்மா.

என்னால் நானி சொன்ன வாழ்க்கையில் வாழ முடியாது. எனக்காக நீ போராடுவே. அப்பா உன்னையும் ஒதுக்குவார். வேண்டாம்மா... இவ்வளவு பேர் கஷ்டப் படுறதுக்கு நான் ஒருத்தி செத்துட்டுப் போறேன்..." என்றபடி, தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு பழம் வெட்டும் கத்தியை எடுத்தாள்.

ஜானகிக்கு வியர்த்துக் கொட்டியது. தன் வாழ்வைப் பற்றிய துயரம் ஒரு புறம்... விரக்தி ஒரு புறம். பயம் ஒரு புறம்... என்று அவளைச் சுனாமியாகச் சுற்றி வளைக்க... அந்தச் சிறுபெண் சிக்கித் திணறித்தான் போனாள்.

"முருகா, எனக்கு இதுக்காகவாவது தைரியத்தைக் கொடு. அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தால்

கொஞ்சமாவது முதுகெலும்பு உள்ளவளா நான் இருக்கணும். முருகா போற்றி... முருகா போற்றி..." என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்தியைக் கை நரம்பிற்கு எடுத்துச் செல்ல... அவள் கை நடுங்க ஆரம்பிக்க...

"சபாஷ்டா செல்லக் குட்டி..." என்று ஒரு குரல், அவளைப் பதற வைக்க... அதிர்ந்து போய்க் கத்தியைக் கீழே போட்டாள். இருட்டில் ஒருவாறாகக் கண்களைச் சுருக்கிப் பார்க்க, அது சந்தேகமே இல்லாமல் நானிதான்.

"நீ... நீ..." என்று அவள் திணற... நானியின் முகம் இப்போது தீவிரத்தைப் பூசியது.

"நினைச்சேன்... இப்படி ஏதாவது செய்வேனு எனக்குத் தெரியும். அதான் வந்தேன். உயிரை விடுற அளவுக்கு இப்போ என்ன நடந்தது? உனக்கென்ன பைத்தியமா, ஜான்? ஏன்... ஏன்... இப்படிச் செஞ்சே?" என்று உலுக்க...

ஜானகி அதிர்ச்சியை விட, அவன் அக்கறையில் தான் வாயடைத்துப் போனாள்.

"இல்ல... அது வந்து..." என்று அவள் திணற,

"உனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலைன்னு செத்துட்டா, எல்லாம் சரியாகிடுமா? இந்தப் பைத்தியக் காரத்தனத்தை எங்கே இருந்து கண்டுபிடிச்ச? பிரச்சனையிலிருந்து ஓடிப் போறது இல்லை. எதிர்த்து நிற்கிறது தான் புத்திசாலித்தனம்..." என்று கத்த,

ஜானகிக்கு நிஜமாகவே, தான் காண்பது கனவா, இல்லை நினைவா என்று தெரியவில்லை.

நானி, "என்னடா இவன் இப்படிப் பேசறானேனு பார்க்கிறியா? என்னை யார்தான் புரிஞ்சிருக்கீங்க? தயவு செய்து, இந்த மாதிரி வேலை எல்லாம் செய்யாதே. உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்..." என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு கூற இந்த தடவை அவளால் அவனை விலக்க முடியவில்லை.

"என்னை மன்னிச்சிடு, நானி... என்னால் முடியலை. அதான்..." என்று தேம்பித் தேம்பி அழ,

நானி, "சரி, சரி... அழாதே. எதுக்கெடுத்தாலும் இது ஒண்ணு கத்து வைச்சிருக்கே. சரி, இப்போ நீ ஏதாவது சாப்பிடு. அப்போதான் தெம்பு வரும்..." என்று கூறி விட்டு, யாரும் அறியாவண்ணம் கீழே சமையலறைக்குச் சென்று, ஒரு கப் பால் எடுத்து வந்தான்.

பாலை எடுத்து வந்தவன், ஜானகியிடம் நீட்ட... அவன் செய்கையில் சற்றே நெகிழ்ந்துதான் போனாள் ஜானகி. 'சே.. நாமதான் தப்பா நினைச்சிருக்கோம். கொஞ்சம் நல்லவன்தான்...' என்று நினைத்தவள்... பசி காரணமாகப் பாலை மடமடவெனக் குடிக்க ஆரம் பித்தாள்.

பின், காலிக்கோப்பையை அவளிடம் இருந்து வாங்கியவன், அவள் அருகில் இருந்த நாற்காலியில் வழக்கம் போல அமர,

ஜானகி, "என்னை மன்னிச்சிடு, நானி... நீ சொன் னதுக்கப்புறம்தான் உரைக்குது..." என்று கூற, நானி சம்பந்தமின்றி கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தான்.

"ஏன் சிரிக்கிறே?" என்று ஜானகி கேட்டு முடிப்பதற்குள், அவளுக்குக் கண்கள் செருக ஆரம்பித்தது.

மீண்டும் சிரித்த அவன், "என்ன, தூக்கம் வருதா டார்லிங்? சும்மா இல்லை, வீரியமான தூக்க மாத்திரைகள் போட்டிருக்கேன். இப்போ நீ குடிச்சியே, அந்தப் பாலில் தான். இனி நீ ஒரேயடியாய்த் தூங்க வேண்டியதுதான்," என்று கூறி விட்டுச் சிரிக்க, ஜானகி அதிர்ந்து போய் அவனைப் பார்க்க,

அவனோ, "பின்னே... சாகணும்னா சட்டுன்னு அறுத்துக்கிட்டுச் சாகணும். அதை விட்டு, நடுங்கிக்கிட்டு இருக்கே! இதில் கூட நோக்குப் பயம். அதான், நானே சுகமான சாவுக்கு ஏற்பாடு செஞ்சேன். வலியே இல்லை... ஜாலியாய் தூங்கிக் கிட்டே போக வேண்டியதுதான்," என்று கூற,

ஜானகிக்கு மரணம் தூக்கமாக மாறி அவளை அணைக்கத் துவங்கியது. "அய்... அய்யோ... நா... நான்... உனக்கு என்னடா பாவம் செய்தேன்...? நீ... நீ நல்லாவே இரு... இருக்க மாட்டே... அ... அம்மாமா..." என்ற அழைப்பைக் கூட முடிக்காமல் அவள் தூக்கத்தை நோக்கி இழுத்துச் செல்லப்பட...

அதைக் கண்ட நானி, அவளையே தன் வழக்கமான சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

கடைசியாகக் கண்ணை மூடும்போது, அவன் மாறாத சிரிப்பைச் சபித்தபடியே கண்களை மூடினாள் அவள்.

# 10

ஜானகிக்கு ஒன்றும் புரியவில்லை. மங்கலான வெளிச்சம் அங்கும் இங்கும் நிறைந்திருக்க, வெண் பளிங்கு நிறம் அவள் கண்களைக் கூசச் செய்தது. அங்கே ஒரு பெரிய கதவு, அந்தக் கதவின் முன் நின்று தட்டிய ஜானகி,

"யாராவது இருக்கேளா...? என்னை எடுத்துக் கோங்க..." என்று அவள் கத்துகிறாள். ஏதோ ஒன்று திடீரென்று அவளைக் கீழ் நோக்கித் தள்ள ஆரம்பிக்க, ஜானகி இன்னும் பயந்தாள்.

"அய்யோ... வேண்டாம். கீழே வேணாம்... நான் இங்கேயே இருக்கேன்..." என்று தன் சக்தி தீரும் வண்ணம் கத்தினாள். அவள் குரல் அங்கு எதிரொலிக்க, அவளைக் கீழே தள்ளும் விசை நின்றது.

பின் ஜானகியிடம் ஒருவித நிம்மதி.

ஆனால், அசரீரி ஒன்று ஒலித்தது.

"நீ இங்கே இருக்க முடியாது. உனக்கு இன்னும் நேரம் வரவில்லை. கீழே செல்..." என்று அந்தக் குரல் அவளைக் கண்டிக்க,

ஜானகி, "பரவாயில்லை. என்னால் இதுக்கு மேலும் கஷ்டப்பட முடியாது. என்னை எடுத்துக்கோங்கோ... என்னால் முடியாது. அந்த நானி இல்லாத இடம் நரகமாக இருந்தாலும் நான் இருந்திடுவேன்..." என்று கெஞ்சி மன்றாட,

அந்தக் குரல் ஒத்துக்கொள்ளவில்லை.

"இல்லை... உன் ஆயுள் முடியாமல் இங்கே வருவது உசிதமல்ல," என்று மறுக்க,

ஜானகி பதறினாள். "இல்லை... என்னை இங்கே இருக்க வெச்சேள்னா, நான் நீங்க என்ன கேட்டாலும் செய்யறேன். தயவு செய்து என்னைக் கீழே அனுப்பிடா தீங்கோ..." என்று கையெடுத்துக் கும்பிட,

அந்தக் குரல் பலமாகச் சிரித்தது. "என்ன வேண்டு மானாலும் செய்வாயா?" என்று ஏளனமாகக் கேட்க,

ஜானகியும் உறுதியாக ஆமோதிக்க,

அந்தக் குரல், "அப்படின்னா... என்னைக் கல்யாணம் செய்துக்கோ ஜான்... நாம ரெண்டு பேரும் கந்தர்வ மணம் செய்துக்கலாம்..." என்று கூற,

ஜானகி விழிக்க... அந்தக் குரல் தேய்ந்து... இப்போது நானியின் முகம், ஒரு தேவதூதன் போல் மாறி, அவளுக்கு அருகில் வர,

"அய்யோ...! வேணாம். நான் கீழேயே போறேன். அவனே பரவாயில்லை... எனக்கு வேண்டாம்... வேண்டாம்..." என்று புலம்ப, அவளை யாரோ பலமாய் உலுக்க ஆரம்பிக்க,

ஜானகி இத்தனை நேரம் இருந்த மயக்கத்தில் இருந்து அப்போதுதான் வெளியே வந்து, மூச்சு வாங்க ஆரம்பித்தாள்.

"சே... கனவா...?" என்று ஆசுவாசப்படுவதற்குள், நானி அவள் முன் நின்று,

"ஜான்... என்னை இப்படி ஏமாத்திட்டியே...! நீ செத்திடுவேன்னு தாரை தப்பட்டைக்கு எல்லாம் சொல்லிட்டு வந்தேன்... பால் ஊத்துற சடங்குக்குக் கூட ரெடி பண்ணிட்டேன். இப்படிப் பொழைச்சு என் தலையில் மண்ணை வாரிப் போட்டிட்டியே என் ராசாத்தி... நான் என்னான்னு சொல்லுவேன்... ஏதுன்னு சொல்லுவேன்...?" என்று ஒப்பாரி வைக்க,

ஜானகி அவளை முறைக்க ஆரம்பித்தாள்.

சுவர்க் கடிகாரம் நான்கு முறை அடித்து ஓய்ந்து மணியைக் கூறியது.

9.30 மணிக்கு மயக்கமானவள், இவ்வளவு சீக்கிரம் எப்படித் தூக்க மாத்திரையின் வீரியத்திலிருந்து விழித் திருக்க முடியும் என்று அவள் குழம்ப,

நானியோ அவள் பார்வையிலேயே கேள்வியை அறிந்து, "என்ன... தூக்க மாத்திரை எப்படி இருந்தது? தேவலோகத்துக்கெல்லாம் போயிட்டு வந்தே போலே...! புலம்பல் எல்லாம் பலமாய் இருந்தது..." என்று நக்கலாய்க் கேட்க,

ஜானகி, தன் சக்தி எல்லாம் ஒன்று திரட்டி, "போதும்... நீ ஒரு கொலைகாரனாக இருப்பேன்னு நான் சத்தியமாக நினைக்கலை. இனி நான் உன் கிட்டே ஏதும் பேசுறதா இல்லை. உன்னை மாதிரி மனச்சாட்சி இல்லாதவன் கிட்டே என்ன பேசினாலும் பிரயோஜனம் இல்லை. போ... போ இங்கே இருந்து..." என்று கத்த,

நானி, "அட... இதென்னம்மா வம்பா இருக்கு...? நீ சாகத் துணிஞ்சவ தானே...! உனக்கு ஹெல்ப் தானே செய்தேன்...? இதுக்குப் போய் கோபிச்சிக் கிறியே...!" என்று அதிசயிக்க,

ஜானகி குழம்பினாள். ஆனாலும் விடாது, "ஆனாலும் நீ..." என்றபடி கையைத் தூக்க, அப்போது தான் கவனித்தாள், தனக்கு ட்ரிப்ஸ் ஏறுவதை. தன் அருகில் இருந்த மருந்துப் பாட்டில்களைப் பார்த்தவள், நானியைப் புரியாமல் பார்க்க,

அவன் தன் சிரிப்பை விடாது, "என்ன பார்க்கிறே... உனக்குக் கொடுத்த தூக்க மாத்திரைக்கு ரிவர்சல் மருந்தும் கொண்டுதான் வந்தேன். தூக்க மருந்து உன் ரத்தத்தில் கலக்காமல் இருக்கத்தான் fluids. நீ மயங்கின அடுத்த நிமிஷமே ட்ரீட்மெண்ட் ஸ்டார்ட் ஆகிடுச்சு..." என்றபடி அவள் கையைப் பிடிக்கப் போக, ஜானகி விலக,

நானி, "அட... பல்ஸ் பார்க்கத்தான் கற்புக்கரசி..." என்று கூறி விட்டு, அவள் நாடியைப் பரிசோதித்து விட்டுப் பின்,

"ஓ.கே. நார்மல். கண்ணைக் காட்டு..." என்று விட்டு அவள் கண்ணைப் பார்த்து, "Pupils round and reactive... PLR present... O.K..." என்று கூறிக் கொண்டே ட்ரிப்ஸைக் கழற்றினான்.

ஜானகிக்கு மண்டை குழம்பியது. பாதி மருந்தாலும்... பாதி நானியாலும்.

அவன் இரவு வந்தபோதே ஒரு பை கொண்டு வந்தது அவளுக்கு மங்கலாக நினைவு வந்தது. 'அதில் தான் இதை எல்லாம் எடுத்து வந்தானா? அப்படி என்றால், இவன் மருத்துவனா?' என்று இதுவரை அவளுக்குத் தெரியாத உண்மை தெரிய வந்தது.

"நீ... நீ டாக்டரா...?" என்று அவள் கேட்க,

அவன் முகத்தில் ஒரு மெல்லிய கருக்கலுக்குப் பின் தலை, 'ஆம்...' என்பது போல் ஆடியது.

"ஆனால்... ஏன் இப்படி...?" என்று அவள் இன்னும் புரியாமல் கேட்க,

நானி இப்போது தன் சிரித்த முகத்திற்கு மாறி, "ஹா... ஹா... சாகணும்னு போனியே... அதனால் என்ன கஷ்டம்னு காமிக்க வேண்டாம்... இப்போ பாரு... மயக்கமாவே இருக்கும். ஒரு விஷயத்திலேயும் மனசு பதியாது. தலை வலிக்கும். வாந்தி வர்ற மாதிரி இருக்கும். தலையில் பாரத்தை வெச்ச மாதிரி கனமாக இருக்கும். குறைந்த பட்சம் இரண்டு நாளைக்காவது வீரியத்தில் இருந்து வெளியே வர முடியாது..." என்று அவன் பட்டியலிட,

ஜானகி, "அதான் நான், நீ வந்து பேசினப்பவே அந்த முடிவை விட்டுட்டேனே...!" என்று கூற,

நானி, "நீ உறுதியாக இல்லையே... இப்போ இல்லைன்னாலும், என்னைக்காவது ஒரு நாள் நீ தற்கொலைக்கு முயற்சி செய்ய மாட்டேன்னு என்ன

நிச்சயம்? எப்போதுமே குழந்தைகளை நெருப்பில் விளையாடாதேன்னு சொன்னாக் கேட்காது. ஒரு தடவை சுடு பட்டாத்தான் நிப்பாட்டும். அதே மாதிரிதான் தற்கொலை எண்ணமும். ஒரு தடவை அதை முயற்சி செய்து பிழைத்தவன், அதுக்குப் பிறகு அதன் பக்கமே போக மாட்டான் அவ்ளோ சீக்கிரம்.

"ஏன்னா... உயிர் போகிற வலி அவனுக்கு நல்லாவே தெரியும். அதனால்தான் இப்படிச் செய்தேன். என்னை என்ன வேணும்னாலும் சொல்லிக்கோ, மனச்சாட்சி இல்லாதவன், ஈரம் இல்லாதவன்னு... ஆனால், அதெல்லாம் மனுஷனைக் காப்பாத்தாது. தைரியமும் தன்னம்பிக்கையும்தான் மனுஷனைக் காப்பாத்தும். நீ கொலைகாரனாகக் கூட இரு... ஆனால், தைரியமாக, 'நான் கொலைகாரன்'னு சொல்லிக்கணும். அதுதான் மனுஷனோட தனிக்குணம். அதுதான் என் குணமும்.

"நான் இதுவரைக்கும் என்னோட பலகீனங்கள் எதையுமே யார் கிட்டேயும் மறைச்சதில்லை. ஆனால், நீ அப்படி இல்லை. உன் பலகீனத்தைப் பச்சாதாபம் ஆக்கப் பார்க்கிறே. உனக்கு இருக்கிறது பெரிய குறையே இல்லை. ஆனால், நீதான் அதை எதிர்த்து நிற்கவே மாட்டேன்கிறே. இது நல்ல குணம் என்று யார் சொன்னது...?" என்று கேட்டு விட்டு நிறுத்த, ஜானகி மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவள் போல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், நானி நிறுத்தவில்லை... தொடர்ந்தான்.

"ஏன்... இப்போ சொல்றேன். நான் கூட கொலைகாரன்தான் ஒரு வகையில்... மனசாட்சியைக் கொன்னுட்டுதான் ஒரு கட்டத்தில் இருந்தேன். இதைச் சொல்ல எனக்குப் பயம் இல்லை..." என்று நிறுத்தியவன், கண்களை ஒரு நிமிடம் மூடி விட்டுத் திறந்து, "சரி விடு. இதுவரைக்கும் எல்லார்கிட்டயும் ஒரு விதச் சுய பச்சாதாபத்தில்தான் நீ பேசியிருப்ப... உங்க அம்மாவாக இருக்கட்டும்... இல்ல, யாரா வேணா இருக்கட்டும். ஆனால் என்கிட்ட இரண்டு தடவை உன்னோட குறையைப் பத்திப் பேசியிருப்பியா?

"சொல்லு... ஏன்னா என் பார்வை எப்பவுமே உன் காலுக்குப் போகாது. அதனால்தான் உன் குறையை என்கிட்ட வெளிப்படுத்திக்க நீ விரும்பலை. நான் அப்படித்தான்... என்கிட்ட சென்டிமென்ட்ஸ் எல்லாம் எதிர்பார்க்காதே. நான் மாற மாட்டேன். மாத்தவும் முடியாது. நீ இந்தக் கல்யாணத்திலிருந்து தப்பிக்கணும்னா எழுந்து நிக்கணும். அதை நினை.... நீ நடக்க ஆரம்பிச்சா பிரச்சனையிலிருந்து கொஞ்சம் வெளியே வரலாம். அப்போ நல்ல மாப்பிள்ளையே கிடைப்பாங்க. அதைப் பத்தி நினை.

"சும்மாக் கோழையாட்டம் அழுதுட்டு இருந்தேனு வை... அப்புறம் உனக்கு வாழ்க்கை என்கூடத்தான். நான் உன்னை உட்கார்த்தி வைச்சுச் சோறு போடுவேன்னு நினைக்காதே. இப்போவாச்சும் சும்மா ட்ரையல்தான் காட்டினேன். அப்புறம் கோபம் வந்தது நிஜமாவே சாகடிச் சிடுவேன்..." என்று மிரட்ட,

"நானீ..." என்று கத்தியபடி உள்ளே வந்தார் ரேணுகா. காலை தன் வழக்கமான ஐந்து மணிக்கு விழித்துத் தன் மகளைப் பார்க்க வந்தவர்... அவ்வளவு நேரம் அங்கு நடந்த உரையாடலைக் கேட்டு ஸ்தம்பித்து நின்றார்.

அவரைப் பார்த்ததும் ஜானகிக்கு அழுகை பொங்கிக் கொண்டு, "அம்மா..." என்று தாய் மடி தேடிய கன்றாய் அழைக்க,

அதைப் பார்த்த ரேணுகாவின் மனம் பாசத்தில் பொங்கினாலும்... நானியின் செயலை நினைத்துக் கொதிக்க ஆரம்பிக்க... பளாரென்று நானியின் கன்னத்தில் அறைந்தார்.

"உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் என் மகளை... என்னடா... என்ன செய்தே அவளை?" என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்க,

நானி சற்றும் அசரவில்லை. "இப்போ எதுக்கு இவ்வளவு எமோஷன்ஸ்... நீங்க மகள் என்கிற பேரில் ஒரு சீரியல் ஹீரோயினைப் பெத்து வச்சிருக்கீங்களே... தற்கொலை செய்துக்கப் போன அவளைத் தூக்க மாத்திரை கொடுத்துத் தூங்க வைச்சேன்..." என்று கூற,

ரேணுகா, "தற்கொலையா?" என்று அதிர்ந்து போய் ஜானகியைப் பார்க்க... அவள் தலை குனிய,

"இப்படி... என்னை அடிச்ச மாதிரி நாலு அடி அவளை அடிச்சு என்னவென்று கேளுங்க... ஹா..."

கன்னம் பழுத்துடுச்சுடா சாமி... ஏதோ எனக்குச் சூடு சுரணை இல்லாததால் நீங்க தப்பிச்சீங்க. இல்ல, ரணகளம் ஆகியிருக்கும். சரி, பசிக்குது. ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா?" என்று கேட்க,

ரேணுகாவும் ஜானகியும் அயர்ந்து போய் அவனைப் பார்க்க...

நானி, "ஓ.கே. ஓ.கே. பசிக்குதுன்னு தானே சொன்னேன். ஏதோ மறுபடியும் தூக்க மாத்திரை கொடுக்கப் போனேன்னு சொன்ன மாதிரி முழிக்கிறீங்க.... சரி, நீங்க இப்போ அழுது தரையை எல்லாம் நனைக்க ஆரம்பிப்பீங்க... அதுக்குள்ள நான் எஸ்கேப் ஆகுறேன்.

"ஏம்மா, பரதேவதை... நான் சொன்னதை நல்லா ஞாபகம் வைச்சிக்கோ. நடக்குறியா... இல்லை, என்னைக் கல்யாணம் செய்துக்கிறியா? இது ரெண்டில் என்னன்னு நீதான் சொல்லணும்..." என்று அவளை இக்கட்டில் மாட்டி விட்டு விட்டு, ஜன்னல் வழியாக வெளியேற, தாயும் மகளும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வையில் ஆயிரமாயிரம் அர்த்தம் பொதிந்து கிடந்தன.

**அ**ன்று இருபதாவது தடவையாக அபிக்கு அழைத்துப் பதில் வராது போக... பதற்றமடைந்தாள் திவ்யா.

நிச்சயமானதிலிருந்து அனைத்துச் சமூக வலைத் தளங்கள் மூலமாகவும் கைபேசி வழியாகவும் அவர்கள் உறவு வலுப்பெற்றுக் கொண்டுதான் இருந்தது.

எப்போதும் ஒரு தடவையாவது பேசுபவன்... அன்று தான் கூப்பிட்டும் பேசவில்லை என்பதால் குழப்பமுற்று, “என்னாச்சு? இவ்வளவு தடவை கால் பண்ணியும் ரிப்ளை இல்லையே?” என்று பதற்றமாக...

அதைப் போக்கும் வண்ணம் கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழித்து அழைத்தான் அபிநந்தன்.

ஓடிச் சென்று எடுத்த திவ்யா, “என்னப்பா... எங்கே போயிட்டீங்க? நான் பயந்தே போயிட்டேன்...” என்று தழுதழுக்க... அவள் காதலில் கரைந்துதான் போனான் அபி.

பின் ஒருவாறு சமாதானப்படுத்தி விட்டு, “இல்ல திவி... நானி பணம் போட்டு விடச் சொன்னானா... அதுக்குப் பேங்குக்குப் போனேன். அங்கே என் ஃபோனை விட்டுட்டேன். அவன் பேங்கில் இ-டிரான்சாக்ஷன் ஒர்க் ஆகலை. நானே 20 மைல் போய் பணம் போட்டு விட்டேன். அங்கே ஃபோனை வச்சிட்டு திரும்பி வந்து ஆபீசில் தான் பார்த்தேன். உடனே கால் பண்ணினேன். பேங்க்கில் வைச்சிருக்கிறதா சொன்னாங்க. அப்புறம் ஸ்விட்ச் ஆஃப் ஆகிடுச்சு போல. ஆபீஸ் முடிச்சுப் போய் வாங்கிட்டு வந்தேன்...” என்று கூற,

திவ்யாவிற்கு ஏனோ எரிச்சல் வந்தது. மற்றவர்களைப் போல் அவளுக்கும் நானி மேல் அபிப்பிராயம் கிடையாது. அவனைப் பார்த்தாலே ஓடி விடுவாள். அப்படிப்பட்டவனுக்காகச் சென்று கைபேசியை வைத்து விட்டுத் தன்னுடன் பேசாதிருந்த அபியின் மீது கோபம் வந்தது.

"அபி, இன்னும் எத்தனை நாளைக்குத்தான் அவன் வேலையை நீங்க செய்வீங்க?"

"அவனா செய்ய அவனுக்கு மனசு வருகிற வரைக்கும்..." என்று அபி பதில் கூற, அவளுக்கு இன்னும் கோபம் ஏறியது.

திவ்யா, "நான் சொல்றது உங்களுக்குச் சுயநல மாகக் கூட இருக்கலாம் அபி. ஆனால் எனக்கு இதெல்லாம் எரிச்சலா இருக்கு. அவன் வாழ்க்கையை அவன்தான் பார்த்துக்கணும். நீங்க அவரைக் கடைசி வரை சுமக்க முடியாது..." என்று கூற,

அபிக்குச் சற்றும் கோபம் வரவில்லை. மாறாக, "திவி... நீ இப்படித்தான் சொல்வேனு எனக்கு முன்னாடியே தெரியும். ஆனா, நான் அப்படித்தான் இருப்பேன். நீ இதில் தலையிடாதேனு சொல்ல மாட்டேன். ஏன்னா... அதுக்கு உனக்கு எல்லா உரிமையும் இருக்கு. ஆனால், ஒண்ணு மட்டும் சொல்றேன். எல்லாரும் தனித் தனியா வாழ ஆரம்பிச்சா... இந்த உலகம் அழிஞ்சு போயிடும்.

"ஆகாயம், தண்ணி, நிலம் இப்படிக் கூட்டாத்தானே இந்த உலகமே இருக்கு. இப்படி அதெல்லாம் தனிக்குடித்தனம் போய் இந்த நாட்டில் கடல் மட்டும்... அந்த நாட்டில் நிலம் மட்டும்னு இருந்தா... சாத்தியப்படுமா சொல்லு... நான் இப்படியே என் தம்பியைப் பார்த்துக்கவே ப்ரோக்ராம் செய்யப்பட்டு வளர்ந்துட்டேன். எனக்கு மாறுவது கஷ்டம். வேணா, இப்படிச் செய்யேன்... நான் என் தம்பிக்குச் செய்யற மாதிரி, நீ உன் தங்கையைப்

பார்த்துக்கோ. டிட் ஃபார் டட்... எப்படி?" என்று கூறி விட்டுச் சிரிக்க, அவன் கூற வருவது, அவளுக்குப் புரியாமல் இல்லை.

ஜானகியைப் பார்த்துக் கொள்ளும்படி மறைமுக மாய்க் கூறுகிறான். ஆனால் அவளால் தன் நினைப்பில் இருந்து வெளிவர முடியவில்லை. விலகியது விலகியே போய் விட்டது.

மீண்டும் அதைப் புதுப்பிக்க எண்ணாமல், அழைப்பை ரத்து செய்து சிந்தனையில் ஆழ்ந்தாள் அந்த புது மணப்பெண்.

அன்று காலை வழக்கம் போல் குணா சீக்கிரமே எழுந்து, தான் போட்ட காபியை ஒவ்வொரு சொட்டாக ரசித்துக் குடித்தபடி இருக்க... நானி இன்னும் தன் கைலியைத் தலையோடு போர்த்தியபடி குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த குணா, "தறுதலை... எப்படித் தூங்குறான் பாரு..." என்று முணுமுணுத்தபடி தினசரியில் மூழ்க,

"குணா..." என்று மென்மையாக அழைத்தபடி வந்த ரேணுகாவைப் பார்த்த குணா, லேசாக அதிர்ந்து தான் போனார்.

ஏனெனில் ரேணுகா வீட்டை விட்டு வெளியே வருவதே அதிசயம். அதுவும் இவ்வளவு காலையில் அவர் வீட்டை விட்டு வரவே மாட்டார் என்பதால் உண்டான அதிர்ச்சிதான் அது...

ஆனாலும் சட்டென்று சுதாரித்து, “வாக்கா... வா. என்ன இவ்வளவு காலையில... காபி கொண்டு வரவா?” என்று உபசரிக்க...

அதை ஒரு புன்னகையுடன் மறுத்த ரேணுகா, “குணா, நானியைக் கொஞ்சம் பார்த்துப் பேசணும். என்ன ஏதுன்னு தயவு செய்து கேட்காதேடா. கண்டிப்பா உனக்கு ஒரு நாள் சொல்றேன்... இப்போதைக்கு எனக்கு அனுமதி கொடுடா...” என்று மன்றாடும் குரலில் கேட்க,

குணா பதறி, “என்னக்கா... அனுமதி எல்லாம்? இருக்கா... ஒரே நிமிஷம்...” என்றபடி அவன் அறைக்குச் சென்று, தாறு மாறாகக் கிடந்த அவனை எழுப்பினார்.

“டேய், தறுதலை எழுந்திரு. சே, மனுசன் மாதிரியாப் படுத்துண்டு இருக்கே... அலங்கோலமா... குரங்கு கூட உருப்படியாப் படுக்கும். எழுந்திரு... எருமை மாடே...” என்று திருப்பள்ளியெழுச்சி பாடி அவனை ஒரு வழியாக எழுப்பி, “டேய், அக்கா வந்திருக்கா. உன்னாண்ட ஏதோ பேசணுமாம். நீயெல்லாம் ஒரு மனுஷன்னு உன்னைய மதிச்சுப் பேச வந்திருக்கா. போய் பல்லையாச்சும் தேச்சிண்டு வா... சே, கர்மம்... ராத்திரி என்ன கருமத்தைக் குடிச்சே... இந்த நாத்தம் நார்றது...” என்று மூக்கைப் பொத்திக் கொள்ள...

நானி, “சே... இந்த வீட்ல இனிமே தடா சட்டம் தான் கொண்டு வரணும். கொஞ்சம் கூடச் சுதந்தரமே இல்லாமல்... I will sue you dad...” என்று முணு

முணுத்தபடியே தன் காலைக் கடன்களை முடித்தான் மகன்.

இப்படியாக அவன் சற்றே தெளிந்து வர, குணா... அவனும் ரேணுகாவும் பேசிக் கொள்ள வேண்டி, தனிமை தந்து வெளியேற, நானி ரேணுகாவையே அழுத்தமாகப் பார்த்தான். அவன் பார்வையின் வீச்சைத் தாங்காமல், அதைத் தணிக்கத் தன் கண்கள் வழியாகக் கண்ணீரை வெளியேற்றிக் குளிர வைத்த அவர், சட்டென்று நானியின் கையைப் பிடித்துக் கொண்டு,

"நானி... என் பொண்ணை நடக்க வைச்சிடு நானி... உன்னைக் கல்யாணம் பண்ணக் கூடாதுன்னு நான் சொல்லலை நானி... உன்னைப் பார்த்ததுக்கு அப்புறம் தான் அவ தன்னைப் பத்தி நினைக்க ஆரம்பிச்சிருக்கா... எனக்கு அது நல்லாத் தெரியுது. உன்னால் முடியும் நானி..." என்று கெஞ்ச ஆரம்பிக்க,

நானி சிரித்தபடி, "ஹா...ஹா... நான் என்ன செய்ய முடியும், மேடம்? அவ இப்படியே இருந்து சுகம் கண்டுட்டா. அவளால் மாற முடியாது. என்னாலேயும் மாத்த முடியாது. எனக்கு அவள் குறையைப் பார்த்து, ஒரு தடவை கூடப் பரிதாபம் வரலை. எரிச்சல்தான் வருது. அவளை மாதிரி ஒரு சப்மிஸ்ஸிவ் இடியட் நான் பார்த்ததே இல்லை... என்னால் எதுவும் முடியும்னு தோணலை..." என்று முகத்தில் அடித்தாற் போல் கூற,

ரேணுகா, "அப்படிச் சொல்லாதே நானி... அவளுக்குக் கிடைச்ச அடிகள்தான் அவளை இப்படி

மாத்திடுச்சு. அவள் கால்... அந்தக் கால்தான் அவள் மூச்சே... ஒரு நிமிசம் கூட நிற்காமல் சடசடன்னு ஓடுற அந்தக் கால்கள்... அது இல்லாமல், அவள் உயிரையே கிட்டத்தட்ட இழந்துட்டா. மிச்சத்தையும் இழக்காமல் நீதான் காப்பாத்தணும்..." என்று கூற, அவன் இன்னும் நம்பாத பார்வை பார்க்க...

ரேணுகா, "நான் அவ இப்படியான கதையைச் சொல்றேன் நானி... அப்போவாவது அவ மேல் உனக்குப் பரிதாபம் வந்தாப் போதும்..." என்றபடி ஜானகியின் கருப்புப் பக்கத்தைத் திருப்ப ஆரம்பித்தார்.

## 11

அந்த மருத்துவமனையின் உள்ளே ரேணுகா பிரசவ வலியில் அனற்றிக் கொண்டிருக்க... வெளியே குறுக்கும் நெடுக் குமாக நடந்து கொண்டிருந்தார் குமரர். என்னதான் இது... மனைவிக்கு நான்காவது பிரசவமாக இருந்தாலும் உள்ளூர உதைப்பு இருக்கத்தான் செய்தது.

அதற்குக் காரணம், குழந்தை பிறப்பில் சிக்கல் இருப்பதால், சிசேரியன் தான் செய்ய வேண்டும் என்று மருத்துவர் கூறி விட்டார். அத்துடன் கர்ப்பப் பையையும் எடுத்தாக வேண்டும் என்று அறிவுரைத்தார். பணத்துக்கு ஏற்பாடு செய்வதற்குள் ஒரு வழியாகிய குமரர், "என்ன... இந்தக் குழந்தை பிறக்கும்போதே நம்மளை அலைக் கழிக்குதே..." என்று குழந்தையின் மேல் பழியைப் போட ஆரம்பித்தார். மூன்றாவது குழந்தையாகத் திவ்யா

பிறந்த ஒன்றரை வருடத்திலேயே அடுத்ததாகக் கரு வுற்றதால்தான் இந்தப் பிரச்சனை என்பது ஏனோ அவருடைய எண்ணத்திற்கு எட்டவே இல்லை.

ஏற்கெனவே திவ்யா பெண்ணாகப் பிறந்ததில் அவருக்குச் சற்றே வருத்தம்தான். எனவே, கடைசி முயற்சியான இந்தக் குழந்தையும் பெண்ணாகப் பிறந்து விடக் கூடாது என்று வேண்டாத தெய்வமில்லை. ஆனால் நடப்பது எதையும் நாம் தீர்மானிப்பதில்லையே... அந்தக் கடவுள்தானே தீர்மானிக்கிறான். அந்தக் கடவுளின் தீர்ப்பு சற்று விசித்திரமாகவே இருந்தது.

சிசேரியன் ஆரம்பித்தது. குமரருக்கு மனைவியின் உடல் நலத்தை விட, அவளுக்கு ஏதாவது ஆகி விட்டால், இந்தக் குழந்தைகளை வைத்துக் கொண்டு தான் என்ன செய்வது என்ற எண்ணம்தான் அவரை அலைக் கழித்தது போலும்...

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு மருத்துவர் வந்து, “கங்கிராஜுலேஷன்ஸ்... ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சது. தாயும் சேயும் நலம். ரூமுக்குக் கொண்டு வந்ததும் போய்ப் பாருங்க...” என்று நல் வார்த்தை கூறிவிட்டுச் செல்ல, குமரருக்கு அது பற்றி எல்லாம் தெரிவதை விட, என்ன குழந்தை என்று தெரிவதுதான் பெரும் வினாவாக இருக்க... அதைக் கேட்பதற்குள் மருத்துவர் சென்று விட, கையைப் பிசைந்து கொண்டு ரேணுகாவையும் குழந்தையையும் அறைக்குக் கொண்டு வரும் நேரம் நோக்கி எதிர்பார்த்திருந்தார்.

அறைக்குக் கொண்டு வந்ததும், அவர் உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடிச் சென்று பார்க்க... இறைவனின் தீர்ப்பு காலை உதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தது. காரணம், அது பெண் குழந்தை.

மயக்க மருந்தின் வீரியம் தீராமல், ரேணுகா இன்னும் மயங்கிப் படுத்திருக்க... தன் அடர்ந்த நிறமும் பொக்கை வாய்ச் சிரிப்பையும் எதிர்பதமாய்க் கொண்டு அந்த மழலை, "ஆ...ஊ..." என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தது.

ஆனால், அதன் சிரிப்பிற்குச் சற்றும் சம்பந்த மில்லாமல், குமரரின் கண்களில் ஏமாற்றமும் எரிச்சலும் தான் நிறைந்திருந்தது. அவரின் எண்ணம் பொய்த்துப் போன எரிச்சல்... அந்த எரிச்சல் சற்று நேரத்திலேயே அதிர்ச்சியாக மாறப் போவது, அவருக்குத் தெரியவில்லை போலும்.

அங்கு வந்த செவிலியர் ஒருவர் குழந்தையின் இதயத் துடிப்பு, நாடித் துடிப்பு அனைத்தையும் குறித்துக் கொண்டு, பின் அதைத் தூக்கி வைக்கப் போகும் வேளையில் குமரரைப் பார்த்து, "என்ன சார்... குழந்தையைத் தூக்கலையா? குழந்தை கொஞ்சம் கறுப்பா இருந்தாலும் லட்சணமா துறுதுறுன்னு இருக்கே... அழவே மாட்டேங்குறாளே... பெரிய ஆளா வருவா, பாருங்க... எனக்கே ஆசையா இருக்கு..." என்று தூக்கிக் கொஞ்சி விட்டுத் தொட்டிலில் வைக்கப் போக,

அப்போதுதான் குமரர் அதைக் கவனித்தார். "நர்ஸ்... கொஞ்சம் குழந்தை காலைக் காட்டுங்க..." என்று அதைத் தொடக் கூட விருப்பமில்லாமல் கூற,

அந்தச் செவிலியர் அவரை விசித்திரமாகப் பார்த்தபடி, குழந்தையின் காலைப் பிடித்துக் காட்ட... அதைப் பார்த்தவரின் தலை முதல் கால் வரை அதிர்ச்சி அலைகள் பரவ ஆரம்பித்தது.

காரணம், குழந்தையின் வலது காலில் 50 பைசா அளவில் இருந்த மச்சம்தான். அதை அவர் ஏதோ பேயைப் பார்ப்பவர் போல் அதிர்ந்து பார்க்க...

நர்ஸ், "ஏன் சார்... அப்படிப் பார்க்கிறீங்க? மச்சம்தானே! ரொம்ப அதிர்ஷ்டக்காரி சார்... சரி, நான் வேற வார்டுக்குப் போகணும்... நான் வரேன்..." என்று சிரிப்புடன் கூறி விட்டு, இறுதியாகக் குழந்தையைச் சற்றுக் கொஞ்சி விட்டு வெளியேற,

குமரர் அவள் கூறியதைக் கண்டு கொள்ளாமல், அந்தக் குழந்தையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

**அ**ன்று ரேணுகாவை வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று மருத்துவர் கூறியிருக்க, குமரகுரு கவுண்டரில் பணத்தைக் கட்டி விட்டு வர, குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தார் ரேணுகா.

"இப்போ போய் பால் கொடுத்துண்டு இருக்கே... பணத்தைக் கட்டிட்டேன். வீட்டுக்குப் போகலாம் கிளம்பு.

இப்போ கிளம்பினா பத்து நிமிஷத்தில் தாம்பரம் போய் ட்ரெயினில் ஏறிடலாம். பேங்க்குக்கு வேற போகணும்..." என்று அழைக்க,

ரேணுகா, "சித்த இருங்கோண்ணா... பாவம், குழந்தை அழறா. ஒரு பத்து நிமிசம்..." என்று கெஞ்ச,

குமரகுரு, "சே... ஒரு காரியம் நினைச்ச மாதிரி நடக்காதே. உன் மக பொறந்த நேரம்... எல்லாம் நான் வாங்கி வந்த வரம்..." என்று தன் மகள் பிறந்து, முதன் முறையாகக் குமரர் அவளை அவதூறு பேச, அந்த வார்த்தைகளின் தாக்குதலில் ரேணுகா அதிர்ந்து போய் விழித்தார்.

"ஏண்ணா... என்ன சொல்றேள்... அவ என்ன பண்ணுவா? உங்களுக்கு என்ன... கிளம்பணும், அவ்ளோதானே? வாங்கோ, போகலாம்..." என்று கூறி விட்டுக் கிளம்ப எத்தனிக்க...

அவளைக் கையமர்த்திய குமரகுரு, "போதும்... போதும். நீ பால் கொடுத்துட்டே வா. அப்புறம் கிடந்து அழும். ஆணா பொறக்கும்னு நினைச்சேன். பொண்ணா வந்து பொறந்துடுத்து, செலவுக்குன்னு..." என்று அலுத்துக் கொள்ள, ரேணுகாவால் பொறுக்க முடியவில்லை.

இத்தனை வருடத் தாம்பத்தியத்தில் அவரைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திருந்தார்தான். இந்தக் குழந்தை ஆணாகப் பிறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டதை யும் அறிந்திருந்தார்தான். ஆனால், அதற்காக இப்படி

அவதூறு பேசுவார் என்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

"ஏண்ணா... ஆணா, பொண்ணானு நம்ம கையிலயா இருக்கு? கடவுள் கொடுத்தது... படிச்சவர் தானே. நீங்களே இப்படிச் சொன்னா எப்படி? நம்ம ரெண்டு பேர் மூலமா வந்த, குழந்தையை நாமளே வெறுக்கிறது முட்டாள்தனம்..." என்று தன் வாழ்வில் முதன் முறையாக அன்று எதிர்த்துப் பேச,

அவளை உறுத்துப் பார்த்த அவர், "என்னடி... என்னையே எதிர்த்துப் பேசுறியா? நீ பேசலைடி. இந்தக் குழந்தைதான் உன்னைப் பேச வைக்கிறது... இவ சாதாரணமானவ இல்லடி... எங்கம்மா ஒருத்தி இருந்தாளே, சீதம்மா... அவதான் வந்து பிறந்திருக்கா... காலில் பாரு, அவளுக்கு இருந்த அதே மச்சம். ஜாடை கூட அவளேதான். அவள மாதிரி மிதுன ராசி, திருவாதிரை நட்சத்திரம்.

"நான் எவளை விஷம் மாதிரி வெறுத்தேனோ, அவளே வந்து நேக்குப் பிறந்திருக்கா தண்டனையா..." என்று வார்த்தைகள் ஒவ்வொன்றையும் தரம் பார்க்காமல், கடித்துத் துப்ப ஆரம்பிக்க, அவரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஈட்டியாகத் தாக்க, இமைக்கவும் மறந்து அமர்ந்திருந்தார் ரேணுகா.

**சீ**தம்மா - குமரகுருவைப் பெற்ற தாய்... அவரை ஒரு பெண்மணி என்று கூறுவதை விட, ஒரு அஷ்டாவதானி என்று கூறலாம். அவருக்குத் தெரியாத

வேலைகளே இல்லை. மற்ற பெண்களைப் போல் அடுப்படி மட்டுமே கதி என்று இல்லாமல், கர்நாடக சங்கீதம், பரதம், கைவேலை என்று அனைத்திலும் தேர்ச்சி பெற்றவர்.

கறுப்பானாலும் களையான நிறம். மாசு மருவற்ற சிரிப்பு. கால்களில் சக்கரம் கட்டாத குறையாக அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருப்பார். படிப்பில் அவ்வளவாக ஆர்வமில்லைதான். ஆனால் அந்தக் காலத்தில், இதைப் பற்றி ஒரு பெரிய விஷயமாகக் கருதவில்லை. முக்கியமாகப் பெண் என்பதால்... அவரைப் பெற்றோர் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினர்.

இப்படியாகத் தன் இளவயதிலேயே பெரியவர்களின் ஆச்சரியத்திற்கு... இளையவர்களின் பொறாமைக்கு ஆளான ஒரு அசத்தல் பெண்மணி அவர்...

தன் 16ஆவது வயதில் குமரகுருவின் தந்தை பாலதேசிகருக்குத் திருமணம் செய்து வைக்க, அன்றில் இருந்துதான் அவருக்குக் கண்டம் ஆரம்பித்தது.

பெண் சுதந்திரம் என்பது இந்தக் காலத்திலேயே கேலிக்குரிய விஷயமாக இருக்கும்போது, அந்தக் காலத்தில் எம்மாத்திரம்?

அவர் பெற்றோர் சீத்தம்மாவைப் பொக்கிஷம் போல் பேணியிருக்க... பாலதேசிகரும் அவர் குடும்பத்தினரும் அவரைக் கட்டுக்குள்ளேயே வைக்க நினைத்தனர்.

“சீத்தம்மா... இரண்டு மூட்டை துணியையும் துவைச்சுப் போட்டிரு...”

"சீத்தம்மா... சும்மா அந்தத் தம்புராவை மீட்டுறதை விட்டுட்டு வந்து எண்ணெய்க் கத்திரிக்காய் பொறியலும், பாவற்காய் பிட்ளையும் செஞ்சு வைச்சுடு. பாவம், பாலா ஓய்ஞ்சு போய் வருவான்."

"சீத்தம்மா... தினமும் வீட்டை மொழுக முடியாதா? செவ்வாய், வெள்ளி மட்டும் கழுவினாப் போதுமா? வீட்டில் தரித்திரம் தலைவிரிச்சாடாது...?"

இப்படி எத்தனை பேர், எத்தனை வேலை சொன்னாலும், முகம் சுணங்காமல் செய்தாலும்... தன் விருப்பம், தன் திறமையையும் அவர் ஒளித்து வைத்துப் பதுக்குபவர் இல்லை.

"நீங்க போய் சற்றே கண் அசருங்கோண்ணா... நான் போய்க் கொஞ்ச நேரம் சௌந்தர்ய லஹரி பாடிண்டு வர்றேன். மனசு விசனமாவே இருக்கு..." என்று புன்னகை மாறாமல் அனுமதி வாங்கி,

"பக்கத்து வீட்டுக் கமலா மகளுக்குப் பரதம் கற்றுக் கொடுக்கக் கேட்டிருக்கா... நானும் சும்மாதானே உட்கார்ந்துண்டு இருக்கேன்... போயிட்டு வரேண்ணா..." என்று பணிந்து சென்று, தன் உரிமையையும் விட்டுக் கொடுக்காமல் இருப்பதில், அவருக்கு நிகர் அவர்தான். இதுதான் பெண்ணுரிமை, அவரைப் பொறுத்தவரை. குடும்பத்தை மீறி ஒரு பெண்ணிற்கு எதுவும் இல்லை. பெண்களால் அப்படி இருக்கவும் முடியாது. ஆனால் குடும்பத்தினர் தன் உரிமையையும் சம அளவுகோலாகப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கமே அவர்களின் சுதந்திரம் என்பது...

ஆனால் அவரின் இந்தச் சிறு நிலைநாட்டலும், அவரின் புகுந்த வீட்டாருக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அவரைத் தூற்ற ஆரம்பித்தனர். வீட்டினரின் எரிச்சல் பாலதேசிகருக்கும் நோயெனப் பரவத் துவங்கியது.

"சீத்தம்மா... நீ இப்படி பாட்டு, பரதம்னு சுத்தறது நல்லா இல்லை. வீட்டோட செய்யறது வேற... அதை விட்டுண்டு இப்படித் தம்பட்டம் அடிச்சிண்டு..." என்று அவர் வார்த்தைகளை அள்ளித் தெளிக்க...

சீத்தம்மா புன்னகையுடன், "ஒருத்தன் தன் திறமையைப் பூட்டி வைச்சிக்கிறது, பாவம்ண்ணா... 'கல்வி கரையில கற்பவர் நாள் சில'ன்னு கேள்விப் பட்டிருப்பேளே? நான் என்ன... வீட்டு வேலையை விட்டுட்டா செய்யறேன்... எல்லா வேலையும் முடிச்சிட்டுத் தானே செய்யறேன். இதில் தப்பென்ன? இதில் நேக்கு ஒரு ஆத்ம திருப்திண்ணா... தயவுசெய்து தடுக்கா தீங்கோ..." என்று தீர்க்கமாகக் கூற, அந்தக் குரலிலேயே அடங்கினாலும், தேசிகருக்கு உள்ளுக்குள் கனன்று கொண்டே இருந்தது.

இதற்கிடையில் குமரகுரு பிறந்து விட, சீத்தம்மாவை இன்னும் கட்டுக்குள் அடக்கத் துவங்க... அவர் சற்றே எதிர்க்கத் துவங்க... குடும்பம் போர்க்களம் ஆகியது.

குமரகுருவைச் சீத்தம்மா என்னதான் பாசத்தை ஊட்டி வளர்த்தாலும், அவருக்குத் தன் தாயிடம் ஒரு ஒட்டுதலே வரவில்லை. தன் தந்தையார் மற்றும் பாட்டியின் உபதேசம் அவர் மூளையை வியாபித்தது.

எப்போதுமே, உண்மையை விட, இட்டுக் கட்டும் செய்திகள் மிகவும் நம்பக் கூடியதாகவும், நெஞ்சைத் தொடும் படியாகவும் இருக்கும். அதே போல்தான் சீத்தம்மாவின் விஷயத்தில் நடந்தது.

நான் நல்லவள்தான்... செய்வதும் நல்ல விஷயம். நான் ஏன் கவலைப்பட வேண்டும் என்று சீத்தம்மா இருக்க...

குமரகுரு, அந்த நேர்மையைத் திமிர் என நினைக்க ஆரம்பித்தார்.

அவரின் திறமையைத் தம்பட்டம் என நினைக்க ஆரம்பித்தார்.

அவர் வழிகாட்டுதலை அடக்குமுறையாக நினைத்தார்.

இதனால், தன் தாயின் அளவில் அடங்காத திறமையையும் அருமையையும் அறியாமல், தன் தந்தையின் மூளைச் சலவையில் அவரை விட்டு விலகி நின்றார் குமரகுரு.

ஒரு நாள் வார்த்தை முத்திப் போய் பாலதேசிகர், "சே... நீயெல்லாம் பொம்மனாட்டியா? லோகத்திலேயே நோக்கு ஒருத்திக்கு மட்டும்தான் திறமை இருக்கோ? கத்துக் கொடுக்கிறேன்னு பேர் பண்ணிண்டு என்ன கண்றாவியைச் செஞ்சிண்டு வரேயோ? இதைப் பாரு, இதெல்லாம் விட்டுண்டு இருக்கிறதா இருந்தா சரி. இல்லையோ, இந்த வீட்டை விட்டுப் போயிட்டே இரு..." என்று தன் பிரம்மாஸ்திரத்தை வீச,

சீத்தம்மா அழவில்லை. ஆர்ப்பாட்டம் செய்ய வில்லை. ஒரு வார்த்தை தவறாகப் பேசவில்லை. முகத்தில் அதே புன்னகைதான்... மாறவில்லை.

மெல்ல நடந்து, தன் 12 வயது மகனிடம் சென்றார். மனம் குருதியில் துடித்தாலும் வாஞ்சை முகத்தில் கூத்தாடியது.

தன் மகன்... பிறந்தது முதல் தாய்ப்பாலைத் தவிர, வேறு எதற்கும் தன்னைத் தேடாத மகன்... மற்றவர் கொட்டிக் கொட்டி குழவியாக்கிய தன் மகன்... ஒரு தடவை கூட 'அம்மா...' என்று ஆசையுடன் விளிக்காத தன் மகன்... குமரகுருவின் உச்சியில் ஆழ்ந்த முத்தம் பதித்தார் சீத்தம்மா.

அவர் கேட்டது ஒரே கேள்விதான், "சின்னா, அம்மா கூட நீ வருவியா?" என்பதுதான்.

ஆனால் அந்தக் கேள்வி முடிக்கும் போதே, அவன் தன் தந்தையிடம் ஓடிச் சென்று, தன் பதிலை மறைமுகமாகக் கூற... அவர் தன் மகனையே பார்த்தார். அந்தப் பார்வை அந்த வயதிலேயும் குமரகுருவின் அடிவயிற்றைப் பிசைய வைத்தது.

"சின்னா... உன் அப்பாவுக்கு அம்மா வேசியா இருந்திருந்தால் கூட இவ்வளவு கோபம் வந்திருக்காது. ஆனால், திறமைசாலியா இருந்தது, பாவமாத் தெரி யறது... நீ வரலைன்னாலும் அம்மா உன் கூடவே தான் இருப்பேன். இந்த வீட்டில் இல்லைன்னாலும் அம்மா

உன்னைப் பார்த்துண்டே இருப்பேன். அப்படியே செத்துப் போயிட்டாலும் நோக்கு மகளாப் பிறப்பேன். அவளை யாச்சும் பாசமாப் பார்த்துக்கோ..." என்று கண்ணீருடன் கூறி விட்டுச் சென்றவர்தான்... அதன் பிறகு அவர் என்ன ஆனார் என்று யாரும் அறியவில்லை.

சீத்தம்மாவின் கதை முற்றும் போடப்பட்டு விட்டது, அந்தக் குடும்பத்தில். ஆனால், அன்று அவரின் குமுறல், துக்கம் எதுவும் குமரகுருவை இம்மியளவும் அசைக்க வில்லை. மாறாக, "சே... எவ்வளவு திமிர்? கொஞ்ச மாச்சும் பதறுறாளா பார்... திமிர் பிடிச்ச ராங்கி..." என்று, தன் பாட்டியின் புலம்பல்தான் அவரை அசைத்தது.

இப்படியான ஆதிக்க வட்டத்திலேயே வளர்ந்த அவரின் மனநிலையும், அதை ஒத்து இருந்ததில் அதிசயம் எதுவும் இல்லையே...!

'நீ எதுவாக ஆக நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய்...' என்று ஒரு கூற்று உண்டு. அதே போல் தன் தாயை அடக்க வேண்டும், அடக்க வேண்டும் என்று நினைத்து, இப்போது தன் மனைவியையும் மதிக்காமல் அடக்குமுறையைக் கடைப்பிடித்தார் குமரகுரு.

தன் தாயை... பிறந்தது முதல் வெறுத்துக் கொண்டிருந்தவருக்கு ஒருவித 'பொயடிக் ஜஸ்டிஸ்' என்பார்களே, அதுபோல அவரின் மறுபிறப்பாகத் தனக்கு ஒரு பெண் பிறந்தால்... அதுதான் அந்தக் குழந்தையின் விஷயத்தில் நடந்தது.

இனி அவளின் நிலை என்ன?

# 12

"டுரு... ட்ரு... ட்ருஊஊஊ... பீங்க்... பீங்க்... அம்மா, இந்தா வடகம் பாக்கெட். கடை அண்ணாச்சி எனக்கு ஒரு சாக்கித் தந்தாரே... சாப்பிட வாம்மா..." என்றாள் கெஞ்சலாக.

தன் கற்பனை காரில் இருந்தபடி கொஞ்சிய தன் 12 வயது மகள் ஜானகியை ஆதுரத்துடன் பார்த்த ரேணுகா, "இது இன்னைக்கு எத்தனையாவது சாக்கி... ஒழுங்கா கொண்டு போய் அலமாரியில வைச்சி நாளைக்குச் சாப்பிடு. ஏற்கெனவே பல் சொத்தை இருக்கு..." என்று நியாயமாய்க் கூற,

ஜானகியும், "வெவ்வெவ்வே..." என்று சிணுங்கியபடி, தன் தாயின் அருகே அடுப்படியில் நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

அதற்குள் அங்கு வந்த 14 வயது திவ்யா, "ஜானு... நாளைக்குக் கல்சுரல்ஸ் டான்ஸுக்குத் தாவணி கட்டிண்டு போகணும். ப்ளவுஸ் பீஸ் டெய்லர் ஆன்ட்டிகிட்ட கொடுத்தேனோ இல்லையோ... அதைப் போய் வாங்கிண்டு வா. அப்படியே பக்கத்தில் உள்ள மார்க்கெட்டில் ரோஸ் பவுடரும் வாங்கி வந்துடு..." என்று கட்டளை பிறப்பிக்க...

ஜானுவும் பணிவாக, "ம்ம்... சரிக்கா. இதோ வந்துடுறேன்..." என்று கூறி விட்டு, "ட்ரு... ட்ருஊஊஊ...." என்றவாறே தன் காரை உயிர்ப்பிக்க...

ரேணுகா, "திவ்யா, உன் வேலையை நீ பார்க்க வேண்டியதுதானே... இல்லை, இந்த வீட்டில் இருக்கானே...

உன் அண்ணன். அவன் ஆம்பளதானே. அவனை அனுப்பு. அதை விட்டுண்டு யாருக்கு என்ன வேலைன் னாலும் அவளையே ஏவுறேளே? கிட்டக்கன்னாலும் பரவாயில்லை. அது கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் நடந்து எப்படிப் போறது?" என்று ஆற்றாமையில் கூற,

அதற்குள் வந்த மூத்தவன் ரவி, "ஏம்மா... நேக்கு காலேஜில் நாளைக்கு இன்டெர்னல் எக்ஸாம். நான் எப்படிப் போறது? சேகருக்கு ரிவிஷன் எக்ஸாம். ப்ளஸ் டூ வேற... அவனும் நானும் ஃபர்ஸ்ட் மார்க் எடுக்கணும்கிற எய்மில் இருக்கோம். இவளுக்கு என்ன? எப்பவும் லாஸ்ட் ரேங்க். படிச்சா என்ன... படிக்காட்டா என்ன? இவ போகக் கூடாது. நாங்க போகணுமா?" என்று வாக்குவாதம் செய்ய... ஜானகி மிரள மிரள விழித்தாள்.

ரேணுகா, "ஏன்டா, நீங்களும் உங்க அப்பாவை மாதிரிப் படிப்பு, வேலை, சம்பளம் வைச்சுத்தான் ஒருத்தரை எடை போடுவீங்களா? அவ உங்க தங்கச்சிடா. அந்தப் பாசம் உங்களுக்கு வரவே செய்யாதா?" என்று அதட்ட,

ரவி, "இதைப் பாரும்மா. ஸ்கூல் படிக்கிற வரைக்கும் இவளால் நான் பட்ட அவமானம் கொஞ்ச நஞ்சமில்லை. நான் ஸ்கூல் ஃபர்ஸ்ட். ஆனால் இவளோ பார்டர். இதைப் பார்த்து எவ்ளோ பேர் என்னைக் கிண்டல் பண்ணி யிருக்காங்க தெரியுமா? ஏதோ காலேஜ் வந்ததில் இருந்து தான் கொஞ்சம் நிம்மதியா இருக்கேன். திரும்பவும் ஆரம்பிக்காதீங்கோ..." என்று கூறி விட்டு சட்டென்று உள்ளே செல்ல,

ஜானகியும், "அம்மா, ஏம்மா சண்டை போடுற? நான் போய் வாங்கிட்டு வந்துடுறேன்..." என்றவாறே தன் காரில் பறக்க...

ரேணுகாவை ஒரு பார்வை பார்த்து விட்டு, திவ்யாவும் உள்ளே சென்று விட... தன் மகளின் எதிர் காலத்தை எண்ணி முதன் முறையாக விசனப்பட்டார் ரேணுகா.

ஜானகி படிப்பில் சற்று மந்தம்தான். ஏற்கெனவே அவள் மேல், பிறந்ததிலிருந்து எரிச்சலாக இருந்த குமரகுருவிற்கு அவளின் இந்தப் பலகீனம் சாக்காகக் கிடைக்க, ஒவ்வொரு தேர்வின் போதும், அவளைக் கூடத்தில் நிற்க வைத்து மற்ற சகோதரர்களின் முன்பு அவமானப்படுத்த, அவர்களும் இவளை ஒரு வேண்டாத பொருளாகப் பார்க்க ஆரம்பித்தனர்.

வளர்ந்து வரும் இக்காலத்தில் சகோதரர்களைக் கூட ஒருவித லாபக் கணக்கு இருந்தால்தான் மனிதர்கள் மதிக்கின்றனர். இப்படி எவ்வித லாபமும் இல்லாத ஜானகி, அவர்களைப் பொருத்தவரை மனுஷியாகத் தெரிய வில்லை போலும். ஆனால் ஜானகியிடம் இருந்த சுறு சுறுப்பு, பம்பரமாக வேலை செய்யும் திறமை எல்லாம் அவர்களுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது. அப்படியே சீத்தம்மாவின் குணங்களைக் கொண்டிருந்தாள் அவள்.

இந்த வயதிலேயே அடுப்படி வேலை அனைத்தும் அவளுக்கு அத்துப்படி. தோட்ட வேலை, கைவேலை அனைத்திலும் நாசூக்கு. மாதமானால் மளிகை லிஸ்ட்

போடுவதிலிருந்து மாசக் கடைசி பால் கணக்கு வரை தாய்க்கு உதவியாக இருந்து செய்வதில் அவளுக்கு நிகர் அவள்தான். அப்படி ஒரு துறுதுறு குழந்தை அவள்.

ரேணுகா கூட, "உனக்குக் கடவுள் காலை வைக்கிறதுக்குப் பதிலா சக்கரத்தை வச்சுட்டான் போல? அஞ்சு கிலோ மீட்டர் கூட அசாத்தியமாப் போயிட்டு வந்திட்டியேடி, என் ராஜாத்தி..." என்று திருஷ்டி முறிப் பாள். ஏனோ அவளுக்கு, மற்ற பிள்ளைகளை விடத் தன்னையே சுற்றிக் கொண்டு திரிகிற ஜானகியின் மேல் பிரியம் ஜாஸ்தி. ஏனோ தன்னையே அவளிடம் பார்ப்பது போல் தோன்றும். அதனாலேயே அவளை விட்டுத் தர மாட்டார்.

"மா... நேக்கு பயமா இருக்கும்மா..." என்று நூறாவது முறையாகக் கூறிய ஜானகியைப் பாவமாகப் பார்த்தார் ரேணுகா.

ஒவ்வொரு தடவ காலாண்டு, அரையாண்டு தேர்வு விடுமுறை முடியும் போதும் ஜானகிக்குக் காய்ச்சல் வராத குறைதான்.

எல்லாவற்றிற்கும் காரணம் குமரகுருவின் சிகிச்சை தான். மதிப்பெண் குறைந்தால் ஆத்திரத்தில் திட்டுவது, இயற்கைதான். தந்தைமாரின் கடமையும் கூட. ஆனால், அவளைத் திட்டுவதற்காகவே அவர் மதிப்பெண்ணை வைத்து ஆடுகிறார் என்று ரேணுகாவிற்குத் தோன்றியது.

ஏதோ தீவிரவாதச் செயல் புரிந்த குற்றவாளி போல் அவளை நிற்க வைத்து, அவர் கேட்கும் நாராசமான

வார்த்தைகளை ரேணுகாவாலேயே கேட்க முடியாது என்றால் பிஞ்சு ஜானகி எம்மாத்திரம்?

ரேணுகாவைப் பொறுத்தவரை, ஒருவரின் படிப்பு மட்டும் அவரின் அறிவாற்றலைத் தீர்மானிக்காது என்பதுதான். ஒவ்வொருவரும் படிப்பாளியாக இருந்தால், இந்த உலகமே ஒருதலைப்பட்சமாகத்தான் இருந்திருக்கும். ஐந்து விரல்களும் ஒன்றில்லை. அதே போல்தான் மனிதர்களும். ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு திறமை. அந்தத் திறமையை வெளிக்கொண்டு வருவதுதான் பள்ளிகளின் கடமை.

ஆனால், அது தவறாக உபதேசிக்கப்பட்டு, பள்ளிகள் எல்லாம் இப்போது படித்ததை ஒப்பிக்கும் எந்திரங்களை உற்பத்தி செய்வதில் தான் முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்பது அவரின் எண்ணம். அவர்களையும் தப்பு சொல்ல முடியாது. பெற்றோர்களும் அதைத்தானே எதிர்பார்க்கின்றனர். ஆனால், ரேணுகா இதிலிருந்து மாறுபட்டவர். எனவே தான் அவர் ஜானகியை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டார்.

ஜானகி பயந்ததைப் போல் இந்த தடவையும் மதிப்பெண் குறைந்து விட, குமரகுரு சலங்கை கட்டி ஆட ஆரம்பித்தார்.

“நீயெல்லாம் ஏன் தண்டத்துக்கு ஸ்கூலுக்குப் போறே...? என் காசைச் செலவழிக்கவா? போ... போய் உங்கம்மா முந்தானையையே புடிச்சுட்டு சுத்து... அதுக்குத் தான் லாயக்கு. இப்படியே உன் அம்மா கொடுக்கிற

சோத்தைத் தின்னுட்டு அப்படியே இருந்துடலாம்னு பார்க்கிறியோ...? உதவாக்கரை... உதவாக்கரை. உன் அண்ணாங்க, அக்காவெல்லாம் எப்படிப் படிக்கிறா... நீ மட்டும் எப்படித் தப்பிப் பொறந்தே?" என்று ஒவ்வொரு சொற்களும் ஈட்டிகளாகத் தாக்க... கண்களில் நீர் வழிய, குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள் ஜானு.

அவளுக்குத் துணையாக ரேணுகா, "ஏண்ணா... பாவம்ண்ணா... இப்படியா பேசுவேள்..." என்று நடுவில் புக,

குமரகுரு, "நீ வாயை மூடு. எல்லாம் நீ கொடுக்கிற செல்லம்தான். இனிமே, அவ குறைவா எடுத்தாளோ படிச்சது போதும், பாத்திரம் கழுவுன்னு வேலைக்காரியாப் போட்டுருவேன்..." என்றபடி ஜானகியிடம் திரும்பி, "படிப்பு மட்டும் இல்லன்னா நாயை விடக் கேவலம்தான் நீ... எதிர்காலத்தில் பிச்சைதான் எடுக்கணும்..." என்று கத்தி விட்டு உள்ளே செல்ல...

ஜானகியின் சகோதரர்கள் அவளை ஏளனமாகப் பார்த்து விட்டுப் போக, ஜானகி, "அம்மா..." என்று கத்தியபடி, தன் தாயின் தொடையைக் கட்டியபடி அவர் புடவையில் முகம் புதைத்து, "ம்மா... நேக்கு வரமாட் டேங்குதும்மா... நான் என்ன செய்ய? நான் வீட்டிலேயே இருந்துடறேன்ம்மா... படிப்பு வேண்டாம். படிப்பு வேண் டாம். உன் கூடவே இருக்கேன்ம்மா... என்னைப் பிச்சை எடுக்க விட மாட்டேதானே...? சொல்லும்மா...!" என்று கதறும் தன் 12 வயது மகளை ஆற்ற வழி தெரியாமல்,

கண்ணிர் வழிய நின்றிருந்தாள், அந்த நிராயுதபாணி தாய்.

இப்படியாக மேடும் பள்ளமுமாகச் சென்று கொண்டிருந்த ஜானகியின் வாழ்வில் அணுஉலை வெடித்தது. அந்த விபத்துதான் அவள் வாழ்வையே தரிசாக்கியது. துள்ளித் திரிந்த அந்தப் பதுமையை முடமாக்கியது. அதுவும் அவளின் 13ஆம் வயதிலேயே...!

"கதறி மனமுருகி நான் அழைக்கவோ
இதர மாதருடன் நீ கழிக்கவோ
இது தகுமோ, இது முறையோ
இது தர்மம் தானோ?
குழல் ஊதிடும் பொழுது
ஆடிடும் குலைகள் போலவே
மனது வேதனை மிகவொடு
அலைபாயுதே கண்ணா...
என் மனமிகு அலைபாயுதே...!"

என்று சின்னச் சிரிப்புடன் கன்னத்துக் குழியுடன், பச்சை நிறத் தாவணியும் பொன்னிற பாவாடையுமாக முகமெல்லாம் மகிழ்ச்சியுடன் லயித்துப் பாடிக் கொண் டிருந்த ஜானகியைக் கண்ணெடுக்காமல் பார்த்துப் பூரித்திருந்தார் ரேணுகா.

அப்போது வந்த பாட்டி ஒருவர், "டி... ரேணு, உன் மகளால்தான் நவராத்திரியே களை கட்டுது போ...

துறுதுறுன்னு என்னமா வேலை செய்யறா... உன் மூத்த மவ கூடக் கொஞ்சம் தத்திதான். இது உன்னை மாதிரி சுட்டி... சுத்திப் போடு..." என்று கூற, ரேணுகாவிற்கு உச்சியே குளிர்ந்து போயிற்று.

இரண்டு மாதம் முன்புதான் பூப்பெய்தியிருந்தாள் ஜானகி. அந்த மினுமினுப்பு, முதிர்ச்சி அனைத்தும் அவள் முகத்தில் நர்த்தனமாடிக் கொண்டிருந்தது.

ஆனால் குமரகுரு அதற்கும், "சே... அதுக்குள்ள உட்கார்ந்துட்டாளா? தேவையில்லாத தண்டச் செலவு..." என்று முணுமுணுக்காமலும் இல்லை. ஆனாலும் ரேணுகா விடாப்பிடியாக நின்று சடங்கு நடத்தித் தன் மகளுக்கான அத்தனை சாங்கியத்தையும் ஒன்று விடாமல் முடித்தார். அதை நினைத்துப் பார்த்தவர் மனம் சற்றுக் கனத்தாலும்... இப்போதுள்ள மனநிலை அதைப் பின்தள்ளியது.

ஜானகிக்கு எந்தச் சுபகாரியம் வந்தாலும் அத்தனை குஷி... ஒவ்வொரு விழாவையும் பூஜையையும் விரும்பி எதிர் நோக்குவாள். அதிலும் நவராத்திரி மிகவும் பிடிக்கும். ஒன்பது நாட்களும், அந்தக் கலர் கலர் பொம்மைகளும், அதில் சொல்லப்படும் செய்தியும், சுண்டல் மணமும், பாட்டும் சங்கீதமும்... அவளை வேறு உலகத்திற்கே இட்டுச் செல்லும். அதே போல்தான் இந்த நவராத்திரியிலும் குதூகலித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் அவள் ஓடியாடிக் கொண்டாடும் கடைசிப் பண்டிகையும் அதே நவராத்திரிதான் என்று அவளுக்குத் தெரியவில்லை.

அன்று விஜயதசமி. கடைசி நாள். கூட்டமும் அதிக மாக வந்திருந்தது.

ரேணுகா, அதைச் சமாளிக்க முடியாமல் திணற, ஜானகி தன்னால் இயன்ற உதவியைச் செய்து கொண்டிருந்தாள். அப்போதுதான் ரேணுகா ஜானகி யிடம், "ஜானு, மேல ஸ்டோர் ரூமில் மைசூர் அண்டா இருக்கோண்ணோ... அதை எடுத்து வந்து சக்கரைப் பொங்கலை அதில் வைச்சுப் பக்கத்தில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குக் கொண்டு போய் கொடுத் துண்டு வா..." என்று கூற,

ஜானுவும், "சரிம்மா... இதோ வந்துடுறேன்..." என்றபடி துள்ளிக் குதித்து ஓடிச் சென்றாள், அந்தப் பொன்மான்.

சிறிது நேரம் கழித்து குமரகுரு யாரையோ அறிமுகப்படுத்த வேண்டுமென்று அழைக்க, ரேணுகாவும் சென்றார்.

பதினைந்து நிமிடங்கள் கழிந்த பிறகுதான் ஜானுவின் ஞாபகம் வர, 'இவளை ஆளையே காணோமே... ஸ்டோர் ரூமில் இவ்ளோ நேரம் என்ன செய்யறா?' என்றபடி யோசிக்க... அதற்குள் மேலே, 'நங்க்...' என்று ஏதோ உருளும் சத்தம் கேட்க,

"ஜானு... ஜானு... என்ன சத்தம்?" என்றபடி ரேணுகா ஓட, குமரகுருவும், "ஏன் இவ இப்படிக் கத்துறா?" என்றபடி பின்னால் செல்ல... அங்கே நடந்த காட்சியைப் பார்த்து இருவரும் அதிர்ந்து போய் சிலையாகினர்.

காரணம்... அவர்கள் வீட்டில் இருந்து நான்கு வீடுகள் தள்ளியிருக்கும் அட்வகேட் தினேஷின் மகன் விவேக் மேல் படுத்திருக்க... அவன் கீழே கிடந்தாள், அவர்கள் மகள் ஜானகி.

“ஜானகி...” என்று குமரகுரு கத்த... பதறிப் போய் இருவரும் எழுந்தனர்.

விவேக்கிற்கு 17 வயதிருக்கும். ஸ்கூலைக் கூட முடிக்கவில்லை. அப்படி இருக்கையில் அவனும் ஜானுவும் ஒரே ரூமில் அதுவும் அந்த நிலையில் பார்த்தால்... குமரகுருவிற்குக் கோபம் கண்ணை மறைத்தது. நல்ல நிலையிலேயே அவரால் ஜானுவிற்குச் சாதகமாக யோசிக்க முடியாது. இப்போது மட்டும் முடியுமா, என்ன?

அவர்கள் இருவரையும் பார்த்ததும் விவேக் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடி விட, ஜானகி எழுந்து, “அம்மா... விவேக்... விவேக் அண்ணா...” என்று திணற,

ரேணுகா, “என்னடி... என்னடி ஆச்சு? அழாதேடா கண்ணா!” என்று பதற, அவள் விவரம் கூறுவதற்குள் அவள் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துக் கூடத்திற்கு இழுத்து வந்தார்.

“அப்பா... அப்பா... வலிக்குதுப்பா...” என்று மகள் கதற,

“ஏண்ணா... அவ என்னாச்சுன்னு சொல்லட்டும்... அவசரப்படாதீங்கோ...” என்று மனைவி அறிவுரைக்க,

அது ஒன்றும் காதில் விழாத செவிடனாகி இருந்தார் குமரகுரு.

அங்கே உற்றார், உறவினர் கூட்டமாய்க் கூடியிருக்க... அவள் கன்னத்தில் அவர் பளார் என்று அறைய, சுருண்டு விழுந்தாள் ஜானு.

"ஏண்டி... வயசுக்கு வந்து இரண்டு மாசம் ஆகலை... அதுக்குள்ள ஆம்பளை சுகம் கேட்குதா? உன்னை எல்லாம் வீட்டோட போட்டிருக்கணும்டி... ரோட்டோட அலைய விட்டதுதான் இப்படித் திரியுறே... சே! என் குடும்ப மானத்தையே குழி தோண்டி புதைச்சிட்டியேடி, பாவி..." என்று தன் பெல்ட்டைக் கழற்றி, விளாசு விளாசென்று அடிக்க ஆரம்பிக்க...

ரேணுகா நடுவில் விழுந்து தடுக்க... அவருக்கும் தாராளமாகவே அடிகள் விழுந்தன.

தன் மகள், மனைவியை இப்படி அனைவரின் முன்பும் அடிக்கிறோமே, என்று கூட அவருக்குத் தோன்றவில்லை. அந்த அளவிற்கு ஆத்திரம்.

ஜானகி, "அப்பா... நான் ஒண்ணும் பண்ணலைப்பா. அந்த அண்ணாதான் ஏதோ பேசினாங்க..." என்று கூறுவதற்குள், அடிகளின் வீரியத்தில் தளர்ந்து போனாள்.

"அம்மா, நான் ஒண்ணும் பண்ணலம்மா... சொல்லும்மா...! அண்ணா, அக்கா... நீயாவது சொல்லேன். நான் பாத்திரம் எடுக்கத்தான் போனேன்..."

என்று தன் பக்கம் பேச... கெஞ்ச... பாவம், அந்தப் பசலையை நிரபராதி எனக் கூற யாருமே முன்வர வில்லை.

குமரகுரு, "அவனைத் தெரியாதுன்னா... அவன் உள்ளே வந்ததுமே கத்தியிருக்க வேண்டியதுதானே... இல்லை, வெளியிலயாவது வரணும். அதை விட்டுண்டு அவனோட கொஞ்சிக்கிட்டு இப்போ சால்ஜாப்பு காட்டுறியா? இனிமே, நீ இந்த வீட்டில் இருக்கக் கூடாது. வெளியே போ. போடி நாயே..." என்று தரதரவென இழுத்து வந்து, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார்.

ரேணுகா, "அய்யோ வேண்டாம்னா... அவ பச்சை மண்ணு. எங்கேண்ணா போவா?" என்று கெஞ்ச,

குமரகுரு அவளை வெறுப்பு உமிழும் பார்வை பார்த்து விட்டு உள்ளே சென்று விட, ரேணுகா தன் மகளைத் திரும்பிப் பார்க்க, அதற்குள் அவளைக் காணவில்லை. வீட்டைத் தாண்டி ரோட்டிற்குச் சென்றிருந்தாள்.

"அடிப் பாவி... போகாதடி... மெயின் ரோடு. ராத்திரி வேற... போகாதே..." என்று கூறும்போதே அந்த விபரீதம் நடந்து விட்டிருந்தது.

அவர்கள் இருந்தது, மெயின் ரோட்டிற்குப் பக்கமான ஜனநெருக்கடி அதிகமுள்ள ஏரியா. மற்ற நேரத்திலேயே அங்கே டாங்கர் லாரிகளும், வேன்களும் அவசரகதியில் வந்து கொண்டிருக்குமானால்... இரவு என்றால் கேட்கவே வேண்டாம்.

ரேணுகாவின் குரலில் ஜானகி கண்ணீர் முகத்துடன், “அம்மா...” என்றபடி பக்கவாட்டாகத் திரும்பிப் பார்க்க, அங்கே வந்த வேன் அவளைப் பின்புறமாக இடித்துத் தூக்கி எறிந்தது. தூக்கி எறியப்பட்ட ஜானகியை விட ரேணுகாவின், “ஜானூஉஊஉஊ...” என்ற குரல்தான் அந்தப் பகுதியையே கிடுகிடுக்க வைத்தது.

மருத்துவமனையில் ஒரு வாரம் கழிந்திருந்தது. ஜானகி படுக்கையே கதி என்று கிடக்க... ரேணுகாதான் அவளைக் கண் இமை காப்பது போல் பார்த்துக் கொண்டார். இந்த ஒரு வாரத்தில் கிட்டத்தட்ட ஐந்து ஆபரேஷன்கள் நடந்து விட்டன.

மருத்துவர் கூறியதாவது, “உங்க பொண்ணு பொழைச்சதே மறுபிறப்பும்மா... வேன் டிரைவர் கொஞ்சம் வேகத்தைக் குறைச்சிருக்கான். அதனால்தான் அவ்வளவா சேதாரம் இல்லை. அதுவும் இல்லாமல்... நல்ல வேளை தூக்கி எறியப்பட்டது மணல் திட்டுல. அதான் காப்பாத்த முடிஞ்சது. ஆனாலும் முதுகுத் தண்டில் பலமான அடி... அடிபட்டு 24 மணி நேரத்தில் உணர்ச்சி வரலைன்னா கம்ப்ளீட் இன்ஜூரி சொல்லுவோம். அவளுக்கு வந்திருச்சு. அதனால் இன்கம்ப்ளீட்தான். ஆனாலும் கவனமாப் பார்த்துக்கணும். இனிமே அவளுக்குப் ப்டுக்கைதான் எல்லாமே. தப்பித் தவறி வேலை செஞ்சா... வலி கொன்னுடும்...” என்று கூற,

ரேணுகா, “டாக்டர்... அவ பெண் குழந்தை. இனி மேல் நடக்கவே முடியாதா? நாளைக்குக் கல்யாணம் காட்சின்னு...” என்று தன் பரிதவிப்பை வெளியிட,

டாக்டர் சிரித்தபடி, "வீல் சேர் யூஸ் பண்ணலாம்... கொஞ்ச நாள் கழிச்சு நடக்கக் கூட ட்ரை பண்ணலாம். கல்யாணத்துக்கு அவளுக்கு எந்தவிதப் பிரச்சனையும் இருக்காதுன்னு என்னால் உறுதியா சொல்ல முடியாது. ஆனால் ட்ரை பண்ணலாம். பிற்காலத்தில் குழந்தை கூடப் பெத்துக்க சான்ஸ் இருக்கு. ஆனால் அவளுக்கு இருக்கிற ஒரே பிரச்சனை வலிதான்... அதுக்கு நான் சில பிசியோதெரபி சஜஸ்ட் பண்றேன். மருத்துவம் இப்போ வெல்லாம் முன்னேறிட்டு வருது... கவலைப்படாதீங்க..." என்று அங்கும் இல்லாமல், இங்கும் இல்லாமல் கூற... ரேணுகா நொடிந்தார்.

அதற்குள் அங்கு வந்து அவர் கூறியதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த குமரகுரு, "சனியன், தண்டச் செலவு. இவ பொறந்ததில் இருந்தே எனக்கு நேரம் சரியில்லை. மான ரோஷமில்லாமல் இன்னும் ஏன் உயிரோட இருக்கோ?" என்று ஆரம்பிக்க, ரேணுகா மௌனமாக அவரைப் பார்த்தார்.

அன்று ஜானகி அடிபட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையிலும் மனம் உருகாது நின்றிருந்த, தன் கணவனின் காலில் விழுந்து, தன் மகளை ஆஸ்பத்திரியில் சேர்த்த நிகழ்ச்சி ஞாபகம் வந்தது.

"சரி... சரி. அழுது ஆர்ப்பாட்டம் செய்யாதே. பெத்த கடனுக்கு இதைச் செஞ்சு தொலைக்கிறேன்..." என்று வேண்டா வெறுப்பாக, அவளுக்குச் செலவு செய்த கணவனிடம் இனியும் போராடுவது வீண் என்று அன்று முதல் வாக்குவாதம் செய்வதை விட்டு விட்டார்.

ஒரு வழியாகச் சிகிச்சைகள் அனைத்தும் முடிந்து ஜானகியை அழைத்து வந்ததும், குமரகுரு... "டி... ரேணு... இவ செஞ்ச காரியத்துக்கு வெட்டிப் போட்டிருக்கணும். அதை விட்டுட்டு வீட்டுக்கு அழைச்சுண்டு வந்திருக்கேன். ஏன் தெரியுமா? இந்தக் குமரகுருவைப் பார்த்து யாரும் நாக்கு மேல பல்லைப் போட்டுப் பேசிடக் கூடாது. சனியன் எனக்குப் பொறந்து தொலைச்சதுக்குச் சாப்பாடு போடுறேன். ஆனால், அவ என் கண்ணு முன்னாடியே படக் கூடாது.

"மேல இருக்கே, ஒரு ரூம்... அதிலேயே வைச்சிக்கோ. பணிவிடை வேணாலும் செய்துக்கோ. ஆனால், உன்னைத் தவிர வேற யாராவது என் பேச்சை மீறி அவளோட சொந்தம் கொண்டாடினா அவ்வளவுதான். அவங்களும் வீட்டை விட்டுப் போகலாம்..." என்று கூறிவிட்டு உள்ளே செல்ல, வேறு நினைப்பே இன்றி ரவி, சேகர், திவ்யா மூவரும் அவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டனர்.

அன்றிலிருந்து அந்த அறையும் ரேணுகாவும்தான் அவள் உலகம்.

நிறையத் தடவை ரேணுகா, "ஜானு, பிசியோக்கு சொல்லவா? நீ இப்படியே இருக்கிறதைப் பார்க்க முடியலைடி... துறுதுறுன்னு நீ ஓடியாடுறதைக் கடவுள் இப்படிச் செஞ்சுட்டானே..." என்று அங்கலாய்த்தாலும், ஜானகியின் பதில் மௌனம்... மௌனம்... மௌனம் மட்டுமே!

இப்படியாக, ஒரு கூட்டுக்குள் தன்னைச் சுருக்கிக் கொண்ட ஜானு, அதை விட்டு வெளியே வரவில்லை.

இன்றுவரை... காலை எழுந்தவுடன் ரேணுகா வீல் சேரில் அமர வைக்க... அவளே சென்று குளித்து விட்டுக் காலை கடன்களை முடித்து விட்டு வருவாள். இரவும் அதே... அவள் அந்த நவராத்திரியோடு சரி, வேறு எந்தச் சுபகாரியத்திலும் பங்கேற்கவில்லை..."

என்று ஜானகியின் கறுப்பு தினங்களைக் கூறி முடித்த ரேணுகா, தன் எதிரில் நின்றிருந்த நானியையே நப்பாசையுடன் பார்க்க...

அவனோ, "சரி. இப்போ நான் அதுக்கு என்ன செய்யணும்னு நினைக்கிறீங்க?" என்று சற்றும் நோகாமல் கேட்க,

ரேணுகா, "என்ன நானி... உனக்குக் கஷ்டமாவே இல்லையா?"

நானி, "இதில் நான் கஷ்டப்பட என்ன இருக்கு? அவ முடிவை அவளே தேடிக்கிட்டா...! நான் என்ன ஹீரோவா? அவ மேல் தப்பில்லன்னு நிரூபிச்சு, அவளை வெளிக் கொண்டு வர...?" என்று நக்கலாகக் கேட்க,

ரேணுகா, "இல்லை நானி... உன்னை ஹீரோவா நினைக்கல. கடவுளா நினைக்கிறேன்... கிட்டத்தட்ட பத்து வருஷமா யாரையுமே தன்னோட ஒட்ட விடாமல் இருந்தவ... அதுவும் ஒரு ஆணால் பாதிக்கப்பட்டவள்... உன்னோட அருகாமையைத் தொடர விட்டிருக்கா... அதுவும் எனக்குத் தெரியாமல்...

"அப்படின்னா, அவ உன்னை நம்புறானு அர்த்தம், நானி. அந்த நம்பிக்கையை அவளுக்குச் சாதக மாக்கிக்கப் பார்க்கிறேன்... இதுவும் சுயநலம்தான் நானி... என் பொண்ணை எல்லாரும் திரும்பிப் பார்க் கணும்னு நினைக்கிற சுயநலம். அவ முன்னேறணும்னு நினைக்கிற சுயநலம்..." என்று கூற முடியாமல் அவர் குரல் தழுதழுத்தது.

நானி, "நான் ஒண்ணு கேட்டா... மறைக்காமல் பதில் சொல்வீங்களா?" என்று கேட்க,

ரேணுகா, "சொல்லு நானி..." என்று கூற,

நானி, "அந்தப் பையன் கூட உண்மையாவே தப்பா நடக்கல. அதாவது ஜானகி தப்பு பண்ணலைன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்? இதுவரைக்கும் அவகிட்ட இதுபத்திப் பேசினீங்களா?" என்று கேட்க,

ரேணுகா, "நீ நடுநிலையா இருக்கே நானி... சொல்றேன். இதுவரைக்கும் ஒரு வார்த்தை கூட நான் அந்த விஷயத்தைப் பத்தி அவகிட்ட கேட்கலை. எனக்கு நம்பிக்கை இருக்கு, நானி... எம்பொண்ணு தப்பு பண்ணியிருக்க மாட்டா..." என்று உறுதியாகக் கூற, நானி எள்ளலாகச் சிரிக்க...

ரேணுகா, "புரியுது. உனக்கு இதெல்லாம் கேலி யாகத்தான் தெரியும். ஆனால் நான் திறந்தே சொல் றேன். யோசிச்சுப் பாரு. அந்தப் பிரச்சனையப்பக் கூட, அவ அந்த விவேக்கை அண்ணானுதான் சொன்னா.

ஸ்டோர் ரூம் கதவு சாத்தலை. திறந்தேதான் கிடந்தது. தப்பு செய்யறவா இப்படி வெள்ளந்தியாக வேலை செய்ய மாட்டா... அந்தப் பையனும் அவன் அம்மா, அப்பாவும் இந்த விஷயம் தெரிஞ்சதுமே ஊரை விட்டுப் போயிட்டா. அதனால் அவாளாண்ட எதுவும் பேசலைதான்.

"என் ஆத்துக்காரருக்கு ஜானகி மேல் குத்தம் சொல்லணும்... அவ்ளோதான். அந்தப் பையனை அவரும் கண்டுக்கலை. அவ பாவம், நானி... இப்படி ஒரு சூழ்ச்சி வலையில் மாட்டிச் சின்னாபின்னமாகிட்டா...!" என்று கூற, நானி எதுவும் பேசவில்லை.

ரேணுகா தொடர்ந்தார். "எப்பவுமே ஒரு அப்பா தன் குழந்தையோட பலத்தைத்தான் நேசிப்பார். ஆனால் தாய் மட்டும்தான் குழந்தையை... அதோட பலகீனத் தோட ஏத்துப்பா. ஏதாவது வீட்டில் போய் பாரு, மகன் குடிக்கிறதோ... சிகரெட் பிடிக்கிறதோ அப்பாவுக்கு வேணா தெரியாமல் இருக்கலாம். ஆனால் அம்மாவுக்குத் தெரி யாமல் இருக்காது. என் ஜானகிக்கு அழகில்லை. படிப் பில்லை. அதிர்ஷ்டமும் இல்லை. ஆனாலும் அவதான் என் தேவதை. அவ பலகீனத்தையும் நான் ஏத்துக் கிறேன்..." என்று கூற,

நானி அந்த வார்த்தைகளில் அதிர்ந்துதான் போனான். பல ஆண்டுகளுக்கு முன் தவறிப் போன தாயின் முகம், அவன் ஞாபகக் கிடங்குகளில் இருந்து தூசு தட்டி எழுப்பப்பட்டது.

"அவ பலகீனத்தையும் ஏத்துக்கிறேன்..." என்ற அந்த வார்த்தைகள் அவன் காதுகளில் ரீங்காரமிடத்

துவங்க... தன் தாய் இருந்திருந்தால் தான் இப்படி மாறியிருக்க மாட்டோமோ என்று தன் வாழ்வில் முதன் முறையாகத் தவித்துப் போனான்.

'தானும் ஜானகி போலத்தானே... அவளுக்கு உடலளவில் ஊனம் என்றால் எனக்கு மனதளவில் ஊனம்... இருவரும் ஒன்றுதானே...

ஒரு பெண் தன்னை இப்படிச் சிந்திக்க வைத்து விட்டாளே?' என்ற எண்ணம் அவன் மனதில் முகாமிட... அவன் உள்ளம் கொதித்தது.

மனதின் எண்ணங்கள் சுனாமி அலையாகத் தாக்க... அப்படியே பிரம்மை பிடித்தவன் போல் அவன் நிற்க...

அவனை உலுக்கிய ரேணுகா, "நானி... என்னாச்சு... என்னாச்சு?" என்று பதற,

அவன் ஒரு முடிவுக்கு வந்தவனாய்க் கூறினான். "இனிமே ஜானகி விஷயம் நான் பார்த்துக்கிறேன். ஆனால் நான் என்ன செஞ்சாலும் நீங்க கண்டுக்கக் கூடாது. நான் செய்யறது உங்களுக்குப் பிடிக்காமல் கூட இருக்கலாம். அதுக்காகச் சும்மா நொய் நொய்னு கேள்வி கேட்டால்... நீங்களே பார்த்துக்கோங்கன்னு போய்க்கிட்டே இருப்பேன். என்ன சொல்றீங்க?" என்று கூற,

ரேணுகா கண்ணீர் மல்க ஆமோதித்தார்.

தன் மகளின் எதிர்காலத்தின் பசுமைத் துணுக்கு அவர் கண்களை நிறைத்தது.

சூரியவிலாஸ்...

வழக்கம்போல் மாடியறையில் இருந்தபடி சுவர்க் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி. அப்படியே அந்த வினாடிமுள் பின்னோக்கிச் சென்று தன் குழந்தைப் பருவம் வராதா, என்ற ஏக்கம் அவள் மனதில் ஆறாக ஓடியது.

அந்தக் குழந்தைப் பருவம் ஞாபகம் வந்ததும், அந்த நவராத்திரியும் ஞாபகம் வர, உடனே தலையை உலுக்கி அந்தச் சிந்தனையைக் கலைக்க...

"நீ ஏன் கத்தலை?" என்ற நானியின் குரல் சட்டென்று அவளைப் பதற வைக்க...

அவளும் திரும்பிப் பார்த்து, "நீயா! என்ன... என்ன சொன்னே?" என்று கேட்க,

நானி இப்போது ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்து, "நீ ஏன் கத்தலை...?" என்று அதே கேள்வியை மறுபடியும் கேட்க,

ஜானகி, "நீ என்ன சொல்றேனு சத்தியமாப் புரியலை..." என்று மீண்டும் கூற,

நானி சிரித்தபடி, "அதான் உன்னை ஒரு வேன் இடிச்சுதே 13 வயசில்... உங்கம்மா சொன்னாங்க, அவங்கதான் கத்தினதா... அதுவும் இல்லாமல் உன் முகத்தில் அதிர்ச்சியே இல்லைன்னும் சொன்னாங்க. அப்ப நீ ஏன் கத்தலை?" என்று விடாக்கண்டனாய்க் கேட்க, ஜானகியின் முகத்தில் சலனமே இல்லை.

நானியோ, "டார்லிங்... உனக்கே தெரியும், எனக்குப் பொறுமை ரொம்பக் கம்மி... கொஞ்சம் சீக்கிரம் சொன்னால் நல்லா இருக்கும்..." என்று கூற,

ஜானகி நிமிர்ந்தாள். தீர்க்கமான பார்வையுடன் அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் சற்றே திடுக்கிட்டான் அவன். ஆளை ஊடுருவும் பார்வை அது...

அவன் பார்த்துக் கொண்டே இருக்க, ஜானகி மெல்ல சிரித்து... "முன்னாடியே அந்த வேன் இடிக் கும்னு தெரிஞ்சுதானே ரோட்டுக்குப் போனேன். அப்புறம் ஏன் அதிர்ச்சியடையணும்...?" என்று மென்மையாகக் கேட்க,

நானி, "என்ன?" என்று வினவ,

ஜானகி, "எல்லாரும் என்னைப் பயந்தாங்குள்ளி... தைரியமே இல்லன்னு தானே நினைச்சீங்க... நான் தைரியசாலிதான். வேணும்னேதான் நான் அந்த வேன் முன்னாடி போனேன்... படுக்கையில் விழணும்.... எழுந்து நடக்கவே கூடாதுன்னு ஆசைப்பட்டேன்... வாழ்க்கையில் முதல் தடவையாக நான் ஆசைப்பட்டது நடந்தது...

"என்ன பார்க்கிறே... இது நானே எனக்கு ஆசைப்பட்டு கொடுத்துக்கிட்ட தண்டனை. நானி தண்டனை... நீ சொன்னியே, நான் நடந்தால் என் பிரச்சனை தீரும்னு... இல்லை, என் கால் நடக்கக் கூடாது... நடக்கக் கூடாது..." என்று பெருங்குரலெடுத்துச் சிரிக்க... தன் வாழ்வில் முதன் முறையாக நானி ஜானகியைப் பார்த்து அதிர்ந்து போய் அமைதியானான்.

13

தன்னுடைய இந்த நிலைமைக்குக் காரணம் தான்தான் என்று கூறிப் பெருங் குரலெடுத்துச் சிரிக்கும் ஜானுவை நானி அதிர்வுடன் பார்த்திருந்தது சில கணங்களே...

அதற்குள் அவனுடைய அக்மார்க் குணம் தலை தூக்க,

"ஓஹோ... நானும் ரௌடிதான்னு சொல்றே... சரி ஒத்துக்கிறேன். நீ ரௌடியாவே இருந்துட்டுப் போ..." என்று அடக்கிய சிரிப்புடன் கூற,

ஜானகி அவனைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தாள்.

"நான் கோழைதான். நான் இல்லைன்னு சொல்லலை... ஒருத்தனைக் கோழையா இருக்க வைக்கிறதும்... தைரியசாலியா மாற்றுவதும் அவன் சூழ்நிலைதான்... அந்தச் சமயத்தில் எனக்கு வந்த தைரியம்தான் நான் எனக்கே கொடுத்துக்கிட்ட தண்டனை..." என்று கண்ணீரை உகுக்க,

நானி, "இரு... இரு. நான் சொல்றேன்... நீ அந்தப் பையனை லவ் பண்ணியிருக்க... கரெக்டா...! பப்பி லவ்வோ, குப்பி லவ்வோ... சொல்வாங்களே, அது மாதிரி இருக்கலாம்... அப்புறம்ம்ம்... அப்படியே எசகு பிசகாகி உங்க அப்பா பார்த்து உன்னை விளாசித் தள்ளிட்டார்... அதான், நீ அந்த முடிவு எடுத்தே... எப்புடி? இதை வைச்சு நான் ஒரு டி.வி. சீரியலே எடுக்கலாம்னு யோசிக்கிறேன்...." என்று தன் வழக்கமான தொனியில் கூற,

ஜானகியின் முகத்தில் இப்போது கண்ணீருக்குப் பதிலாக மெலிதான புன்னகை... அது வலியின் வெளிப்பாடாய் வந்த விரக்திப் புன்னகை என அவள் முகமே காட்டிக் கொடுத்தது.

"துரியோதனன் நகர்வலம் போன கதைதான்... நீ பேசுறதைக் கேட்டா தோணுது..." என்று கூற,

நானி, "வாட்... துரியோதனன்...?" என்று ஸ்டைலாகக் கேட்க,

ஜானகி, "தர்மரும் துரியோதனனும் நகர்வலம் போனாங்களாம்... துரியோதனன் போயிட்டு வந்து, நாட்டில் எல்லாருமே கெட்டவர்கள்னு சொன்னாராம்... அதே தர்மர் போயிட்டு வந்து, நாட்டில் எல்லாருமே என் கண்ணுக்கு நல்லவராகத் தெரியுறாங்கன்னு சொன் னாராம். என் கதை உன் பார்வைக்குத் தப்பாத் தெரியுது... ஆனால், நடந்த விஷயம் என் மனசாட்சியைத் தவிர வேற யாருக்கும் தெரியாது..." என்று கூற,

நானி, "அடடா... அம்மா தாயே... சொல்ல வேண் டிய ஃப்ளாஷ்பேக்கைக் கொஞ்சம் சீக்கிரம் சொல்லு. எனக்குச் சாயந்திரம் ஒரு டேட் இருக்கு. நான் அதுக்கு வேற ஃப்ரெஷ் ஆகணும்..." என்று அலுப்புடன் கூற,

ஜானகி, "நான் ஏன் உன்கிட்ட சொல்லணும்... நீ யாரு? என் கதையை எங்கம்மா வந்து உன்கிட்ட சொல்லியிருக்கலாம்... அதே மாதிரி நானும் சொல்ல ணும்னு இல்லையே? நீ யாரு எனக்கு?" என்று எதிர்க்க,

நானி, "அடிப் பாவி. பூனை மாதிரி இருந்துட்டு இப்போ இந்தப் பேச்சு பேசுறே! கிளிக்கு றெக்கை முளைச்சிடுத்து... சரிம்மா சொல்லாதே. நீ சொன்னேனா, ஏதோ என்னால் முடிஞ்ச உதவி செய்யலாம்னு பார்த்தேன்..." என்று விஷமத்துடன் கூற,

ஜானகி, "உன்கிட்ட இருந்து எந்த உதவியும் எனக்கு வேண்டாம். நான் இப்படியே கடைசி வரைக்கும் இருந்துட்டுப் போறேன். எனக்கு இதுதான் வேணும்... இதுதான் பிடிச்சிருக்கு..." என்று கூற,

நானி, "டார்லிங்... டார்லிங்... இதை இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். அப்பாடா! எங்கே நீ... நான் எழுந்து நடக்கணும், ராக்கெட் சயன்டிஸ்ட் ஆகணும்னு ஏதாவது சொல்லிடுவியோனு பயந்துட்டே இருந்தேன். சரி, கல்யா ணத்தை எப்போ வைச்சிக்கலாம்?" என்று கூற,

ஜானகி பதறிப் போய், அவன் சட்டையைப் பிடித்து, "ஏன்டா... ஏன்டா இப்படி என்னைத் தீ மேல் நிக்க வைக்கிறே... நான் உனக்கு என்ன செஞ்சேன்? ஊன மான பொண்ணுன்னா உன்னை மாதிரி பொறுக்கிக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாமா? ஏன், அவளால் தனியா வாழ்க்கையைச் சந்திக்க முடியாதா? இல்லன்னா... அவளுக்கு நல்லவனைக் கல்யாணம் பண்ணிக்கத் தகுதி கூட இல்லையா? போடா... போ. இனிமே என் மூஞ்சிலயே முழிக்காதே, போ..." என்று கதற,

நானி அவளைப் பார்த்துச் சிரித்தபடி, அவள் கையைத் தொடப் போக... அதைச் சட்டென்று இழுத்துக் கொண்டாள் அவள்.

அதைக் கண்டு இன்னும் புன்னகைத்த அவன், "ஜான்.. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னா அது உன் கையில்தான் இருக்கு. என்னை இதை விடக் கேவலமா கூடத் திட்டிக்கோ. ஆனால் உன் வாழ்க்கை எப்படி இருக்கணும்னு நீதான் முடிவு செய்யணும். என்னால் அதுக்குச் சில உதவிகள் செய்ய முடியும். ஆனால் நான் நீயாக முடியாது..." என்று கூறியவன், மௌனமாக இருந்தவளையே பார்த்தபடி,

"சும்மா... இந்தச் சினிமாவில் வர்ற மாதிரி பாசத்தைப் பொழிஞ்சு பொழிஞ்சு திருத்துறதெல்லாம் எனக்கு வராதுடா டார்லிங்... நான் ஹீரோவே கிடையாது. கடைஞ்செடுத்த வில்லன்... அது உனக்கே தெரியும். ஒரு வில்லன் இவ்வளவு தூரம் இறங்கி வர்றதே பெரிசு. புரியுதா? நீ கேட்டியே, ஒரு நல்லவனைக் கல்யாணம் பண்ணிக்கிற தகுதி கூடக் கிடையாதானு? அந்தத் தகுதியை எப்படி வளர்த்துக்கலாம்னு யோசி. அதைத் தான் சொல்றேன்.

"இல்லையா... இப்படித்தான் இருப்பேன்னா எனக்கு ரொம்ப வசதி. உன்னைக் கல்யாணம் பண்ணிட்டு, குழந்தை குட்டியைப் பெத்துக்கிட்டு மாமனார் வீட்டோட செட்டில் ஆகிடுவேன். இதில் நீ எந்த முடிவு எடுத்தாலும் சரி! என்ன... நீ இரண்டாவது முடிவெடுத்தால் நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன்... வரட்டாடா டார்லிங்... மாமனுக்கு நல்ல சேதி சொல்லணும்... நாளைக்கு

வரேன்...” என்றபடி இரண்டு போதை மாத்திரையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியேறினான்.

அவன் கூறியதைக் கேட்டு, அவனை எந்த வகையில் சேர்ப்பதென்றே புரியாமல் குழம்பிப் போனாள் ஜானகி. ஆனால், கண்களில் கண்ணீர் மட்டும் குழம் பாமல் வடிந்த வண்ணம் இருந்தன.

அடுத்த நாள் மாலை, ஜானகி வீட்டில் அனைவரும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் சென்றிருக்க... அவள் மட்டும் தனிமையே துணையாக இருந்தாள்.

அப்போதுதான், “மாமாவுக்குக் குடும்மா... குடும்மா... அடி ஒண்ணே ஒண்ணு...” என்றபடி உள்ளே நுழைந்தான் நானி.

அவனைப் பார்த்துச் சட்டென்று கழுத்தைத் திருப்பிக் கொண்ட ஜானுவைப் பார்த்து,

“நாணமோ... இது நாணமோ...?” என்று மீண்டும் பாட,

ஜானகி, “சே... உன் முகத்தைப் பார்த்து நாணம் வந்துட்டாலும்... எரிச்சல்தான் வருது...” என்று கத்த,

நானி, “என்னடா இது... சவுண்டெல்லாம் தூள் பறக்குது. வீட்டில் யாருமில்லை போல...” என்று கேட்க,

“இல்லை. அவா பார்த்தசாரதி கோவிலுக்குப் போயிருக்கா...” என்று கூற,

நானி, “ஹே... ஹே... ஜாலி...” என்று கத்த,

ஜானகி அவனைப் புரியாமல் பார்க்க...

நானி மர்மமாகச் சிரித்தபடி,

"மாருகோ மாருகோ மாருகயி...'

'ஆஹா வந்திருச்சு, ஆசையில் ஓடி வந்தேன்...'

'வாடி என் கப்பக்கிழங்கே..."

என்றபடி அவளை அணைக்கப் போக, ஜானுவோ சற்றும் பதறாமல் இந்தத் தடவை மறைத்து வைத்திருந்த தடிமனான புத்தகத்தைத் தூக்கி அவன் தலையில் அடிக்க...

"ஆஆஆ..." என்று அலறினான் நானி. "அடிப் பாவி... என் பொண்ணு, பாவம் பாவம்னு உங்கம்மா வாய்க்கு வாய் சொன்னாங்க. நீ இப்படி ரவுடியா இருக்கியேடி..." என்று வாய்விட்டு கூற,

அந்தப் புத்தகத்தை எடுத்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு, "பின்னே... இப்படி நாராசமாப் பழைய பாட்டு பாடிண்டு கடுப்பேத்தினா என்ன பண்றது? சரி, இப்போ ஏன் இங்கே வந்த...?" என்று கேட்க,

நானி, "ஏதோ டி.வி.யில் கேட்ட பாட்டைப் பாடலாம்னு வந்தா ஓவரா சீன் போடுறே... என்ன கேட்டே? நான் ஏன் வந்தேன்னா? நோக்கு தெரியாதாடி குழந்தே... உன் முடிவு என்ன? காலா... இல்ல கல்யா ணமா?" என்று கேட்க ,

ஜானகி அந்தக் கேள்வியில் தடுமாறி மௌனமாக...

நானியோ விடாமல், "காலா... இல்ல கல்யாணமா? காலா... இல்ல கல்யாணமா?" என்று ராகம் போட்டு பாட ஆரம்பித்தான்.

அது கிட்டத்தட்ட 20 தடவைக்கு மேல் தாண்ட... ஜானகி காதைப் பொத்திக் கொண்டு, "போதும்... போதும்... போதும்..." என்று கத்தினாள்.

நானி இப்போது நிறுத்திச் சிரிப்புடன், "எனக்குத் தெரியும்... எனக்குத் தெரியும்... டார்லிங்... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னுதான் முடிவெடுப்ப... ஐ நோ... என் மேல் உனக்கு ஒரு க்ரஷ் இருக்குன்னு தெரியும். சரி... இப்போ என்ன...? அண்ணன் கல்யாணத்துக்கெல்லாம் வெயிட் பண்ண வேண்டாம். சீக்கிரமா நம்ம கல்யாணத்தை வைச்சிக்கலாம்... வேணா, இப்போவே முதலிரவுக்கு ரிகர்சல் வைச்சிக்கலாம்... லைட்டை அமர்த்துலே..." என்றபடி, அவளை நெருங்கியவன்... அவளின் நடுங்கும் உதடுகளின் வரையறையை விரல்களால் அளவெடுக்க...

ஜானகி, "அய்யோ... என்னை விடு. எனக்குப் பிடிக்கலை... என்னை விடு..." என்று அவனைத் தள்ளி விட்டு, "வேண்டாம், நானி... நான் செத்துடுவேன்... நீ எனக்கு வேண்டாம். உன்னை என் வாழ்க்கை முழுசும் என்னால் சகிச்சுக்க முடியாது. நானேதான் என் வாழ்க்கையை முடமாக்கினேன்... ஆனால், அதனால் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு நான்... நான்..." என்று தயங்க,

நானி, "நீ..." என்று கூர்மையாகக் கேட்க,

ஜானகி, "நான் நடக்கறேன்... நடக்கறதால் கொஞ்சமாவது எங்கப்பாவோட எண்ணத்தில் மாற்றம் ஏற்படும்னா நான் நடக்கறேன். நான் நடக்கறதால எங்கம்மா சந்தோஷப்படுவாங்கன்னா நான் நடக்கறேன்... இந்த வீட்டில் என் பேரையாவது யாராவது தெரிஞ்சுக்கு வாங்கன்னா நான் நடக்கறேன்... கடைசியா, நீ என் வாழ்க்கையை விட்டுப் போவேன்னா நான் நடக்கறேன்..." என்று கூறிய அவளையே புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் நானி.

அவர்களிடம் இருப்பது பிடிப்பு - வெறுப்பு இரண்டும் கொண்ட உறவு... இருவருக்கும் இருவரும் வேண்டும், ஆனால் வேண்டாம்.

என்னதான் ஜானகி தன் வடிகாலாக நானியைச் சார்ந்திருந்தாலும் அவளால் நானியைத் தன் வாழ்க்கைத் துணையாக எண்ணிப் பார்க்க இயலவில்லை. அதுதான் அங்கே நடந்தது.

நானி, "என்ன ஜான்... இப்படி என் ஆசையில் மண்ணள்ளிப் போட்டுட்டே... சரி... விடு. இப்போ உன் மனசில் உள்ளது என்னன்னு நீயே தெரிஞ்சுக்கிட்டியா? இப்போதான் நீ யோசிக்க ஆரம்பிச்சிருக்கே, ஜான்... இது ஒரு ஸ்டெப் உன்னைத் தூக்கி நிறுத்தியிருக்கு. உனக்கு உள் மனசில் ஆசை இருக்கு, நீ நடக்கணும்னு. ஆனால் உன் மனசை நீயே மறைச்சி வைச்சிருந்தே இல்லையா...?" என்று கேட்க,

ஜானகி அதிர்ந்தாள். 'ஆம். இவன் கூறுவதும் உண்மைதானே... எப்படித் தன் மனதில் உள்ளதை அப்படியே படம் பிடித்துக் காட்டி விட்டான்? இவன் எண்ணம்தான் என்ன?' என்று பலவாறாகக் கற்பனை ஓட,

நானி, "அட போதும்... ரொம்ப என்னைப் பத்தி யோசிக்காதே... உனக்குப் புரியாது... ஏன், எனக்கே என்னைப் பத்திப் புரியாது. சரி, அதை விடு பேபி... உன் ஃப்ளாஷ்பேக் சொல்லு. நேத்தெல்லாம் சஸ்பென்ஸ்ல நாலு லார்ஜ் உள்ளே போனதுதான் மிச்சம். பிடி கிடைக்க மாட்டேங்குது. ப்ளீஸ்டா, ஜான்... சொல்லு..." என்று கெஞ்ச,

ஜானகி, "உனக்கு நேரம் போகறதுக்கு நான் கதை சொல்லணுமா?" என்று எரிச்சலுடன் கேட்க,

நானி, "ஆமா. பின்னே... உன் மூஞ்சியை எவ்ளோ நேரம்தான் பார்க்கிறது... அதான் நீ பேசுறதையாவது கேட்கிறேன்..." என்று கூற,

ஜானகி பல்லைக் கடிக்க...

நானி, "ஜான்... உன் ஃப்ளாஷ்பேக் ரொம்பப் பயமா இருக்குமா?" என்று கேட்க,

ஜானகி, "ஏன் கேட்குறே...?" என்று கேட்க,

நானி, "இல்லை... பயமா இருந்தா ஒரு க்ரிப்புக்கு உன் இடுப்பைப் பிடிச்சுப்பேன். அதான் கேட்டேன்..." என்று நக்கலாக அவள் இடையைத் தொடப் போக,

அவன் கையை முறுக்கிய ஜானகி, "சே... பொறுக்கி... பொறுக்கி. இதைப் பாரு, ஏதாவது சில்மிஷம் பண்ணே...

உன்னைக் கொலை பண்ணிடுவேன்... என்னைப் பத்தி உனக்கு நல்லாத் தெரியும்..." என்று மிரட்ட,

நானி, "அடடா... பயமுறுத்திரிங்களாக்கும்... 13 வயசில உன்னை ஒருத்தன் கட்டிப் பிடிச்சானே அவனை என்ன செஞ்சியாம்...? எல்லாருக்கும் நானி மட்டும்தான் இளப்பம்..." என்று சிலுத்துக் கொள்ள,

ஜானகி அவனை அடிபட்ட பார்வை பார்த்தாள். "உன்னால் அடுத்தவங்க மனசைக் கஷ்டப்படுத்தாமல் பேசவே முடியாதா? ஆமா, அவனை ஒண்ணும் செய்யலை... எனக்குத் தைரியமும் இல்லை... அவனை ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் என்னையே அடிச்ச எங்கப்பாக்கிட்ட என்னால் என்ன சொல்ல முடியும்? ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு வெளியில் இருந்து கூடத் தேவையில்லை... ஆனால் வீட்டில் ரொம்ப முக்கியம்...

"அவன் என் வீட்டில் வந்து எங்கிட்ட தப்பா நடந்துக்கிட்டான். ஆனால் அதைக் கூட எங்கப்பா கண்டிக்கலை... இதை விடவா வெளியே உள்ளவன் ஆபத்தானவன்?" என்று கேட்க,

அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் உண்மை யானது என்பதை நானி உணர்ந்தான்.

ஜானகி, "அன்னைக்கு என்ன நடந்ததுன்னு நான் சொல்றேன்... என்னை நீ நம்பணும்னு இல்லை... தயவு செய்து வேற ஒரு பொண்ணுகிட்ட போய் இப்படித் தப்பா நடக்காதே... அதுக்குத்தான்..." என்றபடி தன் வாழ்வில் மறைக்கப்பட்ட விஷயங்களைக் கூற ஆரம்பித்தாள்.

"எங்கப்பாவுக்கு என்னைச் சின்ன வயசில் இருந்தே பிடிக்காது... அதுக்கு என்ன காரணம்னு தெரியலை... ஆனால் அண்ணாங்க அக்காகிட்ட எல்லாம் பாசமாத்தான் இருப்பார். ஆனால் எனக்கு அம்மா, அம்மா, அம்மாதான் எல்லாம்... என்னை எனக்காகவே நேசிச்சவ அம்மா... அவகிட்ட நான் எதையுமே மறைச்சதில்லை... ஆனால் மறைச்ச ஒரே விஷயம்... அதுதான்..."

நானி, "எது...?" என்றான்.

ஜானகி ஒரு நிமிட மௌனத்திற்குப் பின், "பரதம்..." என்று கூற,

நானி ஒரு நிமிடம் அதிசயித்தான்.

"என்ன பரதமா? யூ மீன் டான்ஸ்..." என்று கேட்க,

ஜானகி, "ஆமா... சின்ன வயசில் இருந்தே எனக்குச் சுறுசுறுப்பு ஜாஸ்தி... என்னை நினைச்சு நான் பெருமைப் பட்ட ஒரே விஷயம் அதான். கடைசியில் அதுதான் எனக்கு எமனாயிடுத்து.

"ஒரு நாள் மளிகைக் கடைக்குப் போயிட்டு வந்திட்டு இருந்த சமயத்தில், சின்னப் பசங்க கிரிக்கெட் விளையாடிண்டு இருந்தா... அப்போ பால் ஒரு வீட்டின் காம்பவுண்ட் தாண்டி விழ, அது உயரமா இருக்க... அவா என்கிட்ட வந்து பால் எடுத்துத் தரச் சொன்னா... நான் கொஞ்சம் உயரமா இருந்ததால் சீக்கிரம் தாண்டிட்டேன்... அப்போ பால் எடுத்து நிமிர்ந்தப்போதான் ஜன்னல் வழியா அதைக் கவனிச்சேன்..." என்றவள் அந்த நினைவுகளில் மூழ்கினாள்.

"தித்தித்தை... தித்தை... தகதிமி..." என்ற ஜதி கட்டைகள் ஒலிக்க, அங்கே சிறு குழந்தைகள் அழகாய்த் தங்கள் பிஞ்சுக் கைகளில் அபிநயம் பிடித்து ஆட, நளினி அலுக்காமல் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். நளினி விவேக்கின் தாய். நாட்டியத்தில் பலவிதப் பட்டங்கள் பெற்றவர். சிரித்த முகத்துடன் களையான அழகுடன் அவர் நடனம் கற்றுக் கொடுக்கும் அழகே தனியாகத் தெரிந்தது...

அந்த இடமே அவளுக்கு ஏதோ தேவலோகம் போல் தெரிய, ஒரு நிமிடம் அதிசயித்துப் போனாள் அவள்.

ஒவ்வொரு ஜதியும் அவளை வேறு ஒரு உலகத்திற்கு இட்டுச் சென்றது.

இதுதான் உன் உலகம் என்று ஏதோ ஒரு அசரீரி அந்த 13 வயதுப் பெண்ணின் காதிற்குள் ஒலித்தது. பல வருடங்களாக முயற்சி செய்தும் படிப்பின் மீது வராத விருப்பம், தன் காதலன் போல் சற்று முன் பார்த்த நடனத்தின் மீது தோன்ற பிரம்மை பிடித்தாற்போல் நின்றவளை யாரும் பார்க்கவில்லை.

நளினி நடனத்தை முடித்து விட்டு, "ஸ்டூடண்ஸ், இன்னைக்குப் போதும்... நாளைக்கு ஆறு மணிக்குச் சரியா வந்திடணும்..." என்று முடிக்க,

அப்போதுதான் அந்த மாயலோகத்தில் இருந்து வெளி வந்தாள் ஜானு... பல வருடங்களாக அவள் முகத்தில் தெரியாத திருப்தி இந்தப் பத்து நிமிடத்தில் தோன்றியது.

அந்த பாலை சிறுவர்களிடம் தந்து விட்டு, அந்தச் சயனத்திலயே வீடு வந்து சேர்ந்தாள் அவள்... அவளின் மாற்றத்தை ரேணுகாவால் கூடக் கணிக்க இயல வில்லை... அன்று இரவு முழுதும் ஜானுவும் உறங்க வில்லை.

அடுத்த நாள் அவளை அறியாமலே கால்கள் அந்த வீட்டை நோக்கிச் சென்றது. மீண்டும் நளினியின் நடனம், அவள் கண்களை நிறைக்க... கொஞ்சம் கொஞ்ச மாக அவளுக்குப் பரதத்தின் மேல் பிடிப்பு வர ஆரம் பித்தது. பல நாட்கள் ஜன்னல் வழியாகவே நின்று நளினியின் சிஷ்யையாக மாறினாள் அவள்... அவர் நடத்திய பாடங்களை தன் வீட்டுக் குளியலறையில் நின்று பயிற்சி செய்தாள். அபிநயம் பிடித்து வீட்டு வேலை செய்ய ஆரம்பித்தாள்...

அவள் உலகம் முழுதும் நடனமாடியது... ஆனந்த தாண்டவம் முதல் ருத்ர தாண்டவம் வரை அத்துப்படி யானது.

அது ஒரு வகையில் அவளை உவகையில் ஆழ்த்தியது. ஏனென்றால் படிப்பை விட இந்தத் திறமை அவளைத் தனித்து காட்டியது. வளைந்து ஆடும் உடல் அவளைக் களைப்பில் ஆழ்த்தினாலும் அவள் ஆத்மா திருப்தி கொண்டது... ஆனால் இதைத் தாயிடமோ தந்தையிடமோ கூற அவள் தாழ்வு மனப்பான்மை தடுத்தது.

"அம்மாக்கிட்ட சொன்னா... அப்பாக்கிட்ட சொல்லிச் சேர்த்துவிடச் சொல்லுவா... அப்பா திட்டி அடிப்பார்...

வேண்டாம். நான் இப்படியே கத்துக்கிறேன்..." என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டாள் அந்தச் சிறுமி..

இப்படியாக ஒரு மாதம் செல்ல... அவள் நடனத்தில் மூழ்கியே விட்டாள்... தன் கால்களைத் தன் சொத்தாகப் பரிசாக நினைத்தாள். மதிப்பெண் குறைந்ததால் தன் சகோதரர்கள் கிண்டல் செய்தாலும் மனதிற்குள், 'உங்களுக்கெல்லாம் தெரியாத பரதம் எனக்குத் தெரியும்...' என்று சிறுபிள்ளைத்தனமாய்ப் பெருமைப்பட்டுக் கொள் வாள்.

அப்போதுதான் நவராத்திரி வந்தது. விஜயதசமி அன்று அவள் ஸ்டோர் ரூமிற்குச் செல்ல அப்போதுதான் விவேக் வந்தான்... அவள் அவனைக் கண்டு அதிர,

அவனோ, "ஜானு... நீ எங்கம்மாவோட கிளாசை ஜன்னலில் இருந்து பார்த்து நடனம் கத்துக்கிறது எனக்குத் தெரியும்... உனக்கு டான்ஸ்னா ரொம்ப பிடிக்குமா?" என்று கேட்க,

ஜானகி, "இல்லை... அது வந்து..." என்று தயங்க,

விவேக், "பதட்டப்படாதே... நான் உன்னை ரொம்ப நாள் பார்த்துக்கிட்டு இருக்கேன், ஜானு... எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. நான்... நான் உன்னை லவ் பண்றேன் ஜானு..." என்று கெஞ்சலாகக் கூற,

ஜானகி இதயம் தொண்டை வழியாக் குதித்து விடும் போல் அதிர்ந்து போனாள்.

"அண்ணா... என்ன சொல்..." என்று பதற,

விவேக், "அண்ணானு கூப்பிடாதே ஜானு... நான் அடுத்த வருஷம் காலேஜ் போயிடுவேன்... எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு ஜானு.. என்னை லவ் பண்றியா? அப்புறம் ஜன்னல் வழியா இல்லை, நீ சாதாரணமாவே கத்துக்கலாம் எங்கம்மா கிட்ட இருந்து...": என்று கூற,

ஜானகி, "அண்ணா... இல்லண்ணா... நான்... நான்..." என்று திணறி விட்டுப் பின்னால் செல்ல,

விவேக், "ஏய், என்னடி ஓவரா பண்றே... லவ் பண்ணுவியா மாட்டியா? சும்மா... அண்ணா அண்ணானு வெறுப்பேத்தாதே... நல்லா 18 வயசுப் பொண்ணு அளவுக்கு வளர்ந்திருக்கே... பாப்பா மாதிரி சீன் போடுறே... உன்னைப் பார்த்ததில் இருந்து எனக்கு வெறியே வந்திருச்சு... ஒழுங்கா நான் சொல்றபடி கேளு... இல்லை, உன் பேரை நாஸ்தி பண்ணிருவேன்..." என்று உரும,

ஜானகி தன் பலத்தை எல்லாம் கூட்டி, "அண்ணா, இல்லண்ணா நான் டான்ஸ் கத்துக்கத்தான் வந்தேன். வேற எதுக்கும் இல்லண்ணா... ப்ளீஸ்ண்ணா... வேணாம்... ஆஆஆ..." என்று கெஞ்சியபடி பின்னால் செல்ல... அங்கே இருந்த பாத்திரம் தடுக்கி மல்லாக்க விழ,

விவேக், "ஹா... ஹா... நீ வாயால் சொன்னாக் கேட்க மாட்டே..." என்று கூறிவிட்டு, அவனும் அவள் மேல் விழ...

"அம்மாஆ..." என்று அவள் கத்த வாயெடுக்க... அதைச் செய்யவிடாமல் அவள் வாயைக் கையால்

பொத்தி வைத்தான் அவன்... அப்போதுதான் எங்கிருந்தோ வந்த பூனை பாத்திரத்தைத் தள்ளிவிட அந்தச் சத்தம் கேட்டு கீழே இருந்த குமரரும் ரேணுகாவும் வர...

அங்கே நடந்ததைத் தப்பிதமாக எடுத்துக் கொள்ள... ஜானகியும் மரண வேதனை அனுபவித்தாள். அவளை இந்தக் கதிக்கு ஆளாக்கியவனை ஒரு வார்த்தை கூட யாரும் கேட்கவில்லை. எப்போதோ ஓடி விட்டிருந்தான். அந்தச் சிறுமிக்கோ தான் நடனம் கற்றுக் கொண்டதை கூறினால், தந்தையின் கோபத்தை இன்னும் அதிகரித்தது போல் ஆகிவிடுமே என்று திணற... ஜானகி அந்த விஷயத்தில் குற்றம் சாட்டப்பட்டாள்...

வாயுள்ள பிள்ளையாக இருந்திருந்தால் ஜானகி அன்று பிழைத்திருப்பாள்... ஆனால் அவளைப் புரிந்து கொள்ளாமல் குமரர் வீட்டை விட்டு வெளியே தள்ள... அப்போதுதான் அவளுக்கு ஒருவித குருட்டுத்தனமான தைரியம் வந்தது. தன் பிரச்சனை அனைத்திற்கும் காரணம் தான் என்பதை விடத் தன் கால்கள் என்று அர்த்தம் கொண்டாள் அந்தச் சிறுமி.

"இந்தக் கால்... இந்தக் காலால் தானே நான் அந்த வீட்டுக்குப் போனேன்... இந்தக் காலால் தானே நான் நடனம் கத்துக்கிட்டேன். இந்தக் காலால் தான் எனக்கு இவ்ளோ பிரச்சனையும்... எனக்குத் தேவையில்லை. நான் செத்தாலும் பரவாயில்லை. நான் 'காலோட இருக்கக் கூடாது. அசிங்கம்... ஜானகி அசிங்கம்டி... நீ... போடி... போ... நீ இருக்க வேண்டாம்... அந்த வேனில் விழு, போ..." என்று மனசாட்சி உலுக்கித் தள்ள,

தன் தாய் தன்னைப் பார்த்து, "ஜானூஊஊ..." என்று கத்தியதைப் பார்த்த அவள்... "அம்மா..." என்றழைத்து, மனதுக்குள் 'நான் அசிங்கம்மா... நான்..." என்று கூறி முடிப்பதற்குள் அந்த வேன் அவளைப் பின்புறம் இடித்துக் கீழே சாத்தியது.

பழைய நினைவுகளில் இருந்து வெளியே வந்த அவள், "நான் செத்திருந்தா கூடச் சந்தோஷப்பட்டிருக்க மாட்டேன். இந்த ஊனம் எனக்கு அவ்ளோ ஆறுதலா இருந்தது. எங்கப்பா என்னை வீட்டுக்குள் சேர்த்துக்கிட்டார். எங்கம்மா என் கூடவே இருக்கா. இது போதாதா? வாழ்க்கையில் சில விஷயங்களை நாம் கத்துக்காமல் இருக்கிறது நல்லது. அதை நான் போகப் போகப் புரிஞ்சுகிட்டேன்.

"நானெல்லாம் எதுக்கும் லாயக்கில்லை... அதான் என் அப்பா உனக்குக் கட்டி வைக்க யோசிச்சிண்டு இருக்கார். அதில் தப்பில்லை. ஆனால் என்னால் உன்னை ஏத்துக்க முடியலை. நான் நடக்கணும்னு நினைக்கிறது எனக்காக இல்லை... உன்னைக் கல்யாணம் பண்ணிக்க கூடாதுன்னுதான். இது தப்புதான். ஆனால் முடியலை, நானி... என்னை மன்னிச்சிடு... என்னை மன்னிச்சிடு..." என்று கதறி அழ,

அவ்வளவு நேரம் கன்னத்தில் கை வைத்து அவள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த நானி இப்போது எழுந்து சிரித்து விட்டு, வழக்கம்போல் ஜன்னல் வழியாக வெளியேறினான்.

அடுத்த நாள் மாலை குமரகுரு லயன்ஸ் கிளப் மீட்டிங் சென்று இருக்க, பெண்கள் அனைவரும் அதே

காலனியில் இருக்கும் வீட்டில் நடக்கும் சத்தியநாராயணா பூஜைக்குத் தயாராகினர். ஒரு வழியாகப் புறப்பட்டு கிளம்ப, ரேணுகா தன் கைபேசியில் ஒருவரை அழைத்து,

"ஹலோ... நாங்க கிளம்பிட்டோம். வீட்டில் ஒரு இரண்டு மணி நேரத்திற்கு இருக்க மாட்டோம். அதுக்குள்ள வந்திடு..." என்று தகவல் பரிமாறப்பட்ட ஐந்தாவது நிமிடம்... ஜானகியின் அறைக்குள் நுழைந்த நானி அவளைக் குண்டுக்கட்டாகத் தூக்கி வீல்சேரில் அமர வைக்க,

"ஹே... என்ன பண்றே? நானி... ஏய் விடு... விடு..." என்று கத்த, அவனோ அதை எல்லாம் கேட்காமல், அவளைக் காரில் அமர வைத்து, வீல்சேரைத் தூக்கி டிக்கியில் போட, ஜானகி கன்னாபின்னாவென்று கத்த ஆரம்பித்தாள்.

"டேய்... என்னை எங்கேடா கூட்டிட்டு போறே... உனக்கு அறிவிருக்கா? ஏற்கெனவே எங்கப்பாகிட்ட எனக்கு நல்ல பேர்... உன்னால் வேற என் பேர் கெடணுமா? கொஞ்சமாவது அறிவிருக்கா?" என்று அவள் கத்த,

நானி, "ஆமா... உலகத்தில் எந்த அப்பாவுக்குத்தான் தன் மகனை, மகளைத் திட்டாமல் பொழுது விடிஞ் சிருக்கு... அப்பாகிட்ட நல்ல பேர் வாங்குற குழந்தைகளே இந்த உலகத்தில் இல்லை. புரிஞ்சிக்கோ. வேணா எங்க வீட்டில் வந்து பாரு..." என்று கூற,

ஜானகி, "டேய் நானி... எனக்குப் பயமாருக்கு நானி... வேண்டாம் நானி. என்னை வீட்டுக்குக் கொண்டு

போய் விட்டிரு நானி..." என்று புலம்ப, அதை எல்லாம் அவன் கேட்பதாக இல்லை.

ஒருவழியாக அவன் ஒரு இடத்தில் வண்டியை நிறுத்த... ஜானகியால் இறங்கி ஓட முடியாத நிலையில் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் சாவகாசமாக வீல்சேரை எடுத்து வந்து அவளை அமர வைத்து அழைத்துச் செல்ல... அப்போதுதான் அவள் அந்த இடத்தைப் பார்த்தாள்.

பார்த்தவளின் மனம் ஒரு கணம் அமைதியில் நிலைத்தது.

பச்சைப் பசேலென்று பசுமை சூழ்ந்த அந்த அமைதியான இடம் ஒரு யோகாப் பயிற்சி நிலையம்.

## 14

பல வருடங்களாக அந்த நான்கு சுவர்களே வாழ்க்கை என இருந்தவளுக்கு, இந்த இடம் அவளை அதிசயிக்க வைத்து அமைதியுற வைத்தது என்று கூறினால் அது மிகையாகாது. வெளியுலகம் என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்தவளுக்கு, அந்த இடம் கிட்டத்தட்ட சொர்க்கலோகம் போல்தான் இருந்தது.

எங்கும் எதிலும் அமைதி. சிறிய குடில் போன்ற இடத்தைச் சுற்றி அமைந்த பசுமைத் தோட்டம் என அந்த இடம் அவள் மனதைக் கொள்ளை கொண்டது.

"நானி... இது யோகா கத்துக் கொடுக்கிற இடமா?" என்று ஜானகி சிறுகுழந்தையின் ஆச்சரியத்துடன் கேட்க,

நானி, "இல்லை... பைத்தியக்கார ஹாஸ்பிடல்..." என்று நக்கலாகக் கூற,

ஜானகி... "சே... உன்கிட்ட போய்க் கேட்டேன் பாரு..." என்று தலையில் அடித்துக் கொள்ள,

அவள் இருந்த வீல்சேரை நகர்த்தியபடி வந்தவன், "உனக்கு ரொம்ப வாய் ஜாஸ்தியாப் போச்சு. நீயே உருட்டிக்கிட்டு வா..." என்று சடாரென்று தள்ளிவிட, அவள் ஒரு கணம் அதிர்ந்து போனாலும், அவனைப் பற்றி முன்னயே அறிந்திருந்ததால் ஏற்கெனவே கையைச் சேரில் வைத்தபடி இருந்ததால் உடனே சுதாரித்துப் பிடித்துக் கொண்டாள்.

"உனக்குக் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லையா? முடியாதவளைப் போய்..." என்று கூறும் போதே சுயபச்சாதாபத்தில் குரல் தழுதழுக்க,

நானி, "இப்படி ஆக நீதானே காரணம். வேணும்னு தானே வண்டியில் போய் விழுந்தே. அப்புறம் என்ன? எல்லாத்துக்கும் துணிஞ்சுதான் ஆகணும். என்கிட்ட பரிதாபத்தை எல்லாம் எதிர்பார்க்காதே. ஏற்கெனவே இந்த இடம் எல்லாம் எனக்குப் பிடிக்கலை. இதில் நீ வேற..." என்று முகத்தில் அடித்தாற் போல் கூற, ஜானகி அதிர்ந்து போய் அவனை பார்த்துக் கொண்டிருக்க...

அதற்குள் வரவேற்பறையில் இருந்தவர்கள் அவனிடம் ஏதோ விசாரிக்க, அவனும் ஏதோ கூற... அவர்களை உள்ளே அனுமதித்தனர்.

அதற்குள் ஜானகி அங்கே ஒலித்துக் கொண்டிருந்த, 'ஓம்' என்ற ப்ரணவ மந்திரத்தில் ஐக்கியமாகியிருக்க...

அவள் முன்பு கையை ஆட்டிய அவன், "என்ன கனவு கண்டாச்சா... போலாமா?" என்று கூறி விட்டு, அவளைத் தள்ளி... இல்லை இல்லை... சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு போக,

அவன் கையைத் தட்டி விட்ட ஜானகி, "சே... விடு. நானே வரேன்..." என்றவள், அவளே வீம்பாகத் தள்ளிக் கொண்டு செல்ல, அவளுக்கு முன்னால் சிரித்தபடி சென்றான் நானி.

ஜானகிக்கே ஆச்சரியமாக இருந்தது. காரில் வரும்வரை இருந்த பதற்றம் போய் இப்போது அவளிடம் ஒரு ஆர்வம் வந்திருந்தது. அறிந்துகொள்ளும் ஆர்வம். என்னதான் நடக்கிறது என்ற துறுதுறுப்பின் வழியாக வந்த ஆர்வம்.

அவளும் அவனும் அந்த அலுவலக அறைக்குள் நுழைய, அங்கே புன்னகை முகத்துடன் இருந்தார் வித்யா சுவாமிநாதன். அந்த யோகா மையத்தின் நிர்வாகி. யோகாவைத் தன் மூச்சாக நின்று கற்றவர். அதைப் பல பேரின் நன்மைக்காக உபயோகப்படுத்த வேண்டும் என்று அந்த மையத்தில் நிறுவியவர். அமைதி, சாந்தம், புன்னகையை மட்டுமே அணிகலன்களாகக் கொண்டு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர். இதற்கெல்லாம் மேலாக ஜானகியின் வாழ்க்கையை மாற்றும் துருப்புச் சீட்டை வைத்திருப்பவர்.

அவரைப் பார்த்ததுமே ஜானகியின் உள்ளிருந்த சிறு அலைப்புறுதலும் இல்லாது போக, ஏதோ மாயம் நடந்ததைப் போல அவரையே பார்த்துக் கொண்டிருந் தாள் அவள்.

நானி, "ஹாய்... நான் நானி... இது ஜானகி. ரேணுகாங்கிறவங்க உங்ககிட்ட பேசி..." என்று கூறும் போதே, வித்யாவிடம் முறுவல் தொடங்கியது.

"ஆமா... ஆமா... ரேணுகாம்மா பேசினாங்க. ஜானகியைப் பத்தி எல்லாம் சொன்னாங்க..." என்று கூற, நானி அதற்கு ஒன்றும் பேசாமல் அமைதியாகிவிட...

அவர் ஜானகியிடம், "ஜானகி... இது உங்களுக்குப் புதுசாத்தான் இருக்கும். ஆனால் உங்கம்மா உங்களுக்காக ஏற்பாடு செஞ்சது இது... இது, உங்களுக்காக நாங்க செய்யக்கூடிய விஷயம் இல்லை. நீங்களாகவே மனசு வந்து செய்ய வேண்டிய விஷயம். அதனால உங்களுக்குச் சம்மதம் என்றால்தான் நாங்க எங்க வேலையைச் செய்ய முடியும்..." என்று மென்மையாகக் கூற,

ஜானகிக்கு ஏனோ அவர் முகத்தைப் பார்த்தாலே உள்ளம் ஒரு வகையான அமைதியில் திளைக்க ஆரம்பிக்க, ஏனோ அவரின் மென்மையான அணுகுமுறை அவளுக்குப் பிடித்திருந்தது.

'இதைச் செய்...' என்று அதிகாரமாக ஏவப்பட்டே செய்து பழக்கப்பட்டவளுக்கு, "இதைச் செய்ய முடியுமா?" என்ற அவரின் கேள்வி அதிசயமாக இருந்ததில் ஆச்சரியம் இல்லையே!

ஜானகியும், "இல்லம்மா... ஆனால் என்னால் முடியாதே... எனக்கு வலி..." என்று முடிக்க முடியாமல் தடுமாற,

வித்யா, "வலி... வலின்னு வலியைக் கண்டு ஓடிக்கிட்டே இருந்தால், அது நம்மளைச் சாப்பிட்டுடும், ஜானகி...

என்னதான் வலி பார்த்துடுவோமேன்னு நின்னால்தான் அது உன்னைக் கண்டு பயப்படும்..." என்று கூற,

ஜானகி ஏதும் கூறுவதற்குள்... நானி, "சாரி... நானும் சும்மா இருக்கணும், இருக்கணும்னுதான் நினைக்கிறேன். முடியலை... இதனால் என்ன செய்ய முடியும்...? அவளுக்கு லம்பார் இஞ்ஜுரி... இதைச் செய்யறதால் அவளுக்கு என்ன பயன் கிடைக்கப் போகுது? தேவையில்லாத ஸ்ட்ரெயின் தான். ஹவ் இட் இஸ் மெடிக்கலி ரிலவன்ட்...? இல்லை, சும்மாப் பணம் பிடுங்குறதுக்கா...?" என்று தன் குணம் தலைதூக்கக் கேட்க,

ஜானகி அதிர்ந்து, "நானி... சும்மா இருக்க மாட்டே... உன் வாயை வைச்சிக்கிட்டு கொஞ்ச நேரம் சும்மா இரு..." என்று அதட்ட,

நானி, "ஏன்... நான் கேட்டதில் என்ன தப்பு...? உங்கம்மாதான் வற்புறுத்தி உன்னை இங்கே கூட்டிட்டு வரச் சொன்னாங்க... பட், எனக்கு இதில் கொஞ்சம் கூட நம்பிக்கையில்லை. விருப்பமும் இல்லை..." என்று கூற,

வித்யா சிரித்தபடி, "விடு ஜானகி... இவர் கேட்டதில் என்ன தப்பு...? பாருங்க, நானி... நான் ஒண்ணும் 100% குணமாக்குவேன்னு சொல்லலை... எங்களால அவளோட ரணத்தை எதுவும் செய்ய முடியாது... ஆனால் அவளோட வலியைத் தாங்குகிற சக்தியைத் தர முடியும்... உடல் வலிமையை விட அவளோட மனவலிமையை அதிகப் படுத்த முடியும்... அதைத்தான் சொல்றேன். யோகா, தியானம் எல்லாமே அவ மனசுக்குத்தான். உடம்புக்கு இல்லை. மனம் ஒழுங்கா இருந்தா... உடம்பு அது பேச்சைக் கேட்கும்..." என்று கூற,

நானி, "இதெல்லாம் சுத்த ஹம்பக்... இந்த மனம் என்ற கான்செப்டே எனக்குப் புரியாத ஒண்ணு. உடல் மட்டும்தான் உண்மை. இட்ஸ் ஆல் த மேட்டர் ஆஃப் சிம்பதெட்டிக் அண்ட் பாராசிம்பதெட்டிக் நியூரான்ஸ்... மத்ததெல்லாம் ஜஸ்ட்..." என்று கூறி முடிப்பதற்குள்,

ஜானகி, "மேடம்... நான் ஒத்துக்கிறேன்... இதை நான் செய்றேன்... என்ன வலிச்சாலும் சரி... நான் செத்தே போனாலும் சரி. நான்... நீங்க என்ன சொல்றீங்களோ கேட்கிறேன்..." என்று உறுதியாகக் கூற,

வித்யா சிரித்தபடி, "ஒண்ணும் அவசரமில்லை. நல்லா யோசி, ஜானகி. நீ எனக்குப் பொண்ணு மாதிரிதான். அதனால உன் நல்லதுக்காகவும்தான் சொல்றேன். போயிட்டு நல்லா யோசிச்சுச் சொல்லு..." என்று கூற,

ஜானகி, "இல்ல மேடம்... இதில் யோசிக்க எதுவுமே இல்லை. என் நல்லதுக்காகத்தான் சொல்றீங்க... இதில் யோசிக்க என்ன இருக்கு...? நீங்க என்ன சொல்றீங்களோ சரி..." என்று கூற,

நானி, "ஜான்... நான் சொல்றதை..." என்று நடுவில் வர,

ஜானகி, "வாயை மூடு... இனிமே ஏதாவது பேசினே... அவ்ளோதான்..." என்று அதட்ட,

அவனும் வாயை மூடிக் கொள்ள...

ஜானகி வித்யாவிடம், "ஆனால் மேடம்... நான் எப்படிக் கத்துக்கிறது...? என்னால் தினமும் இப்படி வர முடியாதே..." என்று தயங்க,

வித்யா, "இதுக்கு எதுக்குக் கவலை ஜானகி...? நாங்க வெளிநாட்டில் இருக்கிறவங்களுக்கும் ஸ்கைப் வழியாகக் கத்துக் கொடுக்கிறோம்.... நீங்க அது வழியாக ரிஜிஸ்டர் பண்ணிக்கோங்க... ரிஜிஸ்ட்ரேஷன் இலவசம் தான்..." என்று கூற,

ஜானகி, "ஸ்கைப்பா... அப்படின்னா...?" என்று கேட்க,

"ஹாஹாஆஆ..." என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான் நானி.

ஜானகி அவனை முறைக்க... நானி, "ஸ்கைப்-னா என்னானு உனக்குக் கிளாஸ் அப்புறம் எடுக்கிறேன்... ஆனா, என் உதவி இல்லாமல் உன்னால் எதுவும் செய்ய முடியாது... ஞாபகம் வைச்சிக்கோ..." என்று கூற,

ஜானகி அதைக் கண்டு கொள்ளாமல், வித்யாவிடம்... "மேடம், ஃபீஸ்..." என்று கேட்க,

வித்யா, "நாங்க இதைப் பணத்துக்காகச் செய்யல, ஜானகி. நம்ம நாட்டில் தோன்றிய கலையை உலகம் முழுதும் சேர்க்கணும், அதுக்குத்தான். அதனால் நாங்க இலவசமாகவும் கொடுக்க முடியாது. நீங்க இந்தக் கோர்ஸ் எடுத்து ஏதாவது முன்னேற்றம் இருந்தால் மட்டும் பணம் கட்ட ஆரம்பிச்சா போதும், ஜானகி. அதுவரைக்கும் இலவசம்தான்..." என்று கூற,

ஜானகி நெகிழ்ந்து போய் பார்க்க...

நானி, "முன்னேற்றம் வந்தும் இல்லைன்னு பொய் சொன்னா...?" என்று இடையில் புகுந்து கேட்க,

வித்யா தன் புன்னகை முகம் மாறாமல் சிரிக்க...

ஜானகி எரிச்சலுடன், "மேடம்... இந்தப் பைத்தியத் திற்கும் இங்க ஏதாவது கோர்ஸ் இருக்கா...?" என்று கேட்க,

வித்யா, "உங்க ரெண்டு பேர் ஜோடிப் பொருத்தமும் அழகு. எப்போ கல்யாணம்...?" என்று கேட்க,

நானி முந்திக் கொண்டு, "கூடிய சீக்கிரமே..." என்று கூற,

ஜானகி, "அய்யோ... அதெல்லாம் இல்லை, மேடம்... இவனைப் போயாவது கல்யாணமாவது...? இவனைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னுதான் நான் எப்படியாவது நடக்கணும்னு நினைக்கிறேன்..." என்று கூற,

வித்யாவிற்கு ஏதோ புரிந்தும் புரியாமலும் இருக்க...

"சரி, ஜானகி... நீங்க ரெஜிஸ்டர் பண்ணிட்டுப் போங்க... இன்னும் ரெண்டு நாளில் கிளாஸ் ஆரம் பிச்சிடும். சி.டி.யும் வாங்கிக்கோங்க... தினமும் ஒரு மணி நேரம் கிளாஸ்..." என்று மேலும் சில விபரங்களைக் கூற,

அவர்களும் எல்லா வேலையும் முடித்து விட்டு வந்து காரில் ஏறி அமர...

நானி ஆரம்பித்தான். "இதெல்லாம் நடக்கிற காரியமா? பிசியோ மூலமாகவே உன்னோட பிரச் சனையைக் குணப்படுத்துறது கஷ்டம். இதில் யோகா அது இதெல்லாம்..." என்று கூற,

ஜானகி, "நான் ஒண்ணுமே செய்யாமல் தோற் கிறதை விட ஏதாவது செய்து தோற்கிறது எனக்குச் சந்தோஷம்தான், நானி... நீ கவலைப்படாதே... இது உனக்கும் எனக்கும் நடக்கிற போட்டி இல்லை. என்

அப்பாவுக்கும் எனக்கும் நடக்கிறது... அவர் முன்னாடி வாழ்ந்து காட்டணும்கிற வெறி...

"என் அக்கா கல்யாணத்தில் நான் எல்லா வேலையையும் ஓடி ஓடிச் செய்யணும்... இந்த வருஷ நவராத்திரிக்கு நான் எழுந்து நிக்கணும்... அதுதான் என் ஆசை... இதில் ஒண்ணும் தப்பில்லையே..." என்று கேட்க,

நானியே வாயடைத்துத்தான் போனான். அது, அவன் முதன் முதலில் பார்த்த ஜானகி அல்ல... இப்போது தெளிவாகச் சிந்திப்பவள்... தனக்கு என்ன தேவை என்று தெரிந்து கொண்டவள்... தேவையில்லாமல் உணர்ச்சி வசப்படுபவள் இல்லை... ஆழ்ந்து யோசித்துச் சூழ்நிலைக்கு ஏற்ப தன்னைச் செதுக்குபவள்... என்று உணர்ந்து கொண்டான் நானி.

ஒரு வழியாக, ரேணுகா கூறிய இரண்டு மணி நேரங்களுக்கு முன்பே அவர்கள் வந்து சேர்ந்துவிட, அவர்களைக் காண மேலே வந்த ரேணுகாவின் முகத்தில் பதற்றம் அதிகரிக்க...

ஜானகி, "அம்மா... நான் ஒத்துக்கிறேன்மா... நான் யோகா கத்துக்கிறேன்... உனக்குப் பிடிச்சது நான் எது வேணா செய்யறேன்மா..." என்று தழுதழுத்தவாறு கூற,

"ஜானு..." என்று ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டாள் ரேணுகா.

இருவரின் கண்களிலும் கண்ணீர் பெருக, அந்தத் துளிகள் ஒவ்வொன்றும் அவள் இதுவரை பட்ட துன்பங்களைத் துடைக்க ஆரம்பித்தன.

ஆனால் யோகா ஒன்றும் ஜானகிக்கு மயிலிறகைப் போல இலகுவாக இல்லை... ஒவ்வொரு நொடியும் உயிர் போய் உயிர் வந்தது... இவ்வளவு நாட்களாகப் பயந்து பயந்து தான் செய்த அனைத்தையும் ஒரே சமயம் செய்வது போல் இருந்தது, யோகாசனம்...

மென்மையாகக் கற்றுத் தந்தாலும் அவளால் நரம்பைச் சுருட்டிக் கொண்டு எழும் வலியைத் தாள முடியவில்லை... முதுகைக் கழற்றி வைத்து விடலாமா என்னும் அளவு வலித்தது.

ஏற்கனவே பலமிழந்த முதுகுத் தண்டு, தன் வலிமையை இழந்து துவள, வலி என்னும் அசுரன் அவளை ஆக்கிரமித்தான்.

மத்சயாசனா எனப்படும் மீன் போல் உடலைச் சுருக்கிப் பத்மாசனமிட்டு முதுகுத்தண்டை வளைத்துச் செய்யப்படும் ஆசனம்.

பிதலாசனா எனப்படும் பூனை போல் கைகளையும் கால்களையும் கொண்டு நின்று தலையைத் தொங்கப் போட்டுச் செய்யப்படும் ஆசனம்.

பகாசனா எனப்படும் கொக்கு போல் கைகளை மட்டும் ஊன்றிக் கால்களையும் முதுகையும் அந்தரத்தில் நிப்பாட்டும் ஆசனம்... இது உடலின் தடுமாற்றம் குறைத்து ஸ்திரத் தன்மையை அதிகரிக்க...

புஜங்காசனா எனப்படும் பாம்பு போல் தரையில் குப்புறப் படுத்து முதுகை 180 டிகிரி வரை வளைக்கும் ஆசனம்.

இப்படியாகப் பல்வேறு ஆசனங்கள் அவளுக்குப் பயிற்றுவிக்கப்பட்டன. அந்த ஒரு மணி நேரத்தைக் கடத்தி விட்டாலும், அவளால் அன்று முழுதும் ஏற்படும் வலியை வார்த்தைகளால் கூற முடியாது.

'போதும்... போதும்...' என்று உடல் அழுதாலும்,

'இல்லை... இல்லை... விடாதே,' என்று மனம் சண்டையிட்டுக் கத்த, ஜானகி இன்னும் உருகிப் போனாள்.

ஸ்கைப்பின் வழியாக, ஜானகிக்குக் கற்றுக் கொடுக்கும் போது உடன் இருந்தாலும் நானி எதையும் கண்டு கொள்ளமாட்டான்.

"ஜான்... தினமும் உனக்காக உங்கம்மா ஜுஸ் வைக்கிறாங்களே... அதுக்குப் பதிலா பீட்சா, பர்கர் மாதிரி வைக்கச் சொல்லேன்... எனக்கு ஜுஸ் போர் அடிக்குது..." என்று அவளை வெறுப்பேற்றும் வேலையைச் செவ்வனே செய்து வந்தான்.

"ஜான்... இதெல்லாம் தேவையா? பேசாமல் என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ..." என்று கூறி, அவள் முறைப்பையும் திட்டையும் பெற்றுக் கொள்வான்.

இதுதான் நானியின் வேலையாக இருந்தது... ரேணுகா கூட, அவள் படும் பாடைப் பார்க்க இயலாமல் அந்த அறைக்கே வர மாட்டார்... ஆனால் நானியோ, அதைக் கண்டு சிறிதும் பாவப்பட்டதில்லை.

ஒரு நாள் வலி தாளாமல் இரவு முழுதும், "அம்மா வலிக்குதும்மா... அம்மா... முதுகு வலிக்குதும்மா... அம்மா முடியலைம்மா..." என்று அனத்திக் கொண்டிருக்க...

மனம் தாளாமல் ரேணுகா, "கண்ணம்மா... வேண்டாம்டி... போதும். இதெல்லாம் வேண்டாம்... நீ இப்படித் துடிக்கிறதை என்னால் பார்க்க முடியலை... விட்டுடு... நீ நடக்காட்டி என்ன... என் கூடவே இருந்துட்டுப் போ..." என்று கட்டிக் கொண்டு அழ,

ஜானகி ரேணுகாவைப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் மறைந்தது... முகத்தில் என்றுமில்லாத உறுதி வந்தது.

"ஏம்மா... என்னை நீயும் ஒண்ணுத்துக்கும் லாயக்கில்லாதவனு நினைச்சுட்டே இல்ல... நான் கோழைதான்... ஆனா உறுதியில்லாதவள் இல்லை... நான் அழறதால தானே நீ இப்படி நினைச்சுட்டே... இனிமே நான் அழ மாட்டேன்... செத்தாலும் அழ மாட்டேன்... நான் நடப்பேன்... வலியைத் தாங்குவேன்..." என்று உறுதி பூண்டாள்.

அன்றிலிருந்து அவள் தன் வலி எதையுமே ரேணுகாவிடம் கூறுவதில்லை... வலியைச் சாதுர்யமாகக் கையாண்டாள். அதிலிருந்து தப்பிக்க எண்ணாமல் உணர ஆரம்பித்தாள்.

உணர உணர... வலி இன்னும் விகாரமானது. ஆனால் அதையும் தாங்கினாள்...

ஒரு நாள் தன் பயிற்சியை முடித்துவிட்டு வலி தாளாமல் அழுகை வர, ஜானகி அரும்பாடு பட்டு அழுகையை அடக்கிப் பல்லைக் கடித்துக் கொண்டு கட்டுப்படுத்த ஆரம்பிக்க... தவறிப் போய் நாக்கு கடிபட்டு ரத்தம் வர ஆரம்பித்தது.

அப்போது அருகில் சிப்ஸைக் கொறித்துக் கொண்டிருந்த நானி... "ஏய்... ஏய்... வாயைத் திற. ரத்தம் வருது... நாக்கை விடு..." என்று பதறிப் போய் உலுக்க,

அவள் விடாமல் தலையைச் சிலுப்ப...

நானி, "வாயைத் திறன்னு சொல்றேனில்ல..." என்று கேட்டுப் பளாரென்று அவள் கன்னத்தில் அறைய, ஒரு வழியாக அவள் வாயைத் திறக்க... அவள் நாக்கு காப்பாற்றப்பட்டது.

"உனக்கென்ன பைத்தியமா? லூசு... விட்டா நாக்கு துண்டாகி யிருக்கும்..." என்று கூறி விட்டு, யாருக்கும் தெரியாமல் வழக்கம் போல் கீழே சென்று குளிர்சாதனப் பெட்டியில் இருந்து ஐஸ் கட்டியை எடுத்து வந்து நாக்கில் தடவுமாறு கூற,

அவள் மறுக்க, "சே... எதுக்கெல்லாம் அடம் பிடிக்கிறதுன்னு விவஸ்தை இல்லை..." என்றபடி, திமிற திமிற அவள் வாயைத் திறக்க...

ஜானகி, "வேண்டாம்..." என்பது போல் சைகை செய்து, அந்த ஐஸ் கட்டியை வாங்கித் தானே தடவ ஆரம்பிக்க, எரிச்சல் சற்றே மட்டுப்பட்டாலும் பேச முடியவில்லை.

நானி, "ஆமா... கடிச்ச கடிக்கு நல்லாப் பேச இன்னும் ரெண்டு நாளாகும்..." என்று நக்கலாகக் கூற, முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந் தவனுக்கு அவள் முகத்தில் இருந்து ஏதோ ஒன்று

உறுத்த... அவளிடம் சென்றவன், "ரொம்ப வலிக்குதா...?" என்று கேட்க,

அவளோ, அவன் முகத்தைப் பார்க்க விரும்பாமல் குனிய, நானி தன் சட்டைப் பையில் இருந்த, தன் போதை மாத்திரையை எடுத்து, . "இது 'நார்கோடிக் அனால்ஜெசிக்' தான்... நான் உன்னை வெறுப்பேத்த சொல்லலை. உன் வலியைத் தாங்க முடியலைன்னா... அதைத் தவிர்க்க வழி சொல்றேன்... இதை எடுத்துக்கோ. வலி குறையும்... இந்த ஒரு தடவை மட்டும்..." என்று அன்று வரை இல்லாத மென்மையுடன் கூற, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி.

அவள் பார்வையின் அர்த்தம் புரியாமல் நானி அவளிடம் மாத்திரையை நீட்டி, "எடுத்துக்கோ ஜான்... உன்னால் தான் வலியைத் தாங்க முடியலையே...." என்று கூற,

ஜானகியின் பார்வையில் உறுதி வந்தது... அதைவிட அதிகமாகக் கம்பீரம் தோன்றியது...

அவனைப் பார்த்தவள் அந்த மாத்திரையை வேண்டாம் என்று விலக்கித் தன் நாக்கின் ரணத்தையும் மீறி, "வ... வலியைக் கண்டு ஓட மாட்டேன்.... வலிக் கட்டு...ம்... தாங்கிக்...கிறேன்..." என்று தன் வலியை முடிந்த அளவிற்குக் கட்டுப்படுத்தி, ஒருவித நிமிர்வுடன் கூற, அவள் நிமிர்வைப் பார்த்து ஒரு கணம் வெட்கிக் கூனிக் குறுகிப் போனான் நானி.

அந்த உறுதி அவனிடம் இல்லாத ஒன்று... எது இல்லாததால், அவன் இந்தப் போதைகளுக்கு

அடிமையானானோ அந்த உறுதி... வேண்டாம் என்று கம்பீரத்துடன் பார்த்த அவள் பார்வை... அவன் அடிவயிற்றில் மின்னல் தெறிக்க வைத்தது.

அந்தக் கணம்... அதே கணத்திலிருந்து ஜானகி அவனை வெல்லாமல் வெல்ல ஆரம்பித்தாள். முற்றிலும் புதியவளாக மாற ஆரம்பித்தாள். நானியையே அதிர வைத்தாள்.

## 15

வலி... மரண வலி... அது நானி, ஜானகி இருவருக்குமே பொதுதான்... ஆனால் அவர்கள் இருவரும் கையாண்ட விதம்தான் வேறு.... ஒருவரின் விதம் மற்றவருக்கு அதிர்ச்சியை அளித்ததுதான் உண்மை.

ஜானகிக்கு நானியின் போதைப் பழக்கமும், அவனின் மற்ற தீய பழக்கங்களும் சகிக்க முடியாமல் போனதென்றால்...

நானிக்கு ஜானகியின் இந்த வலியை ஸ்திரத் தன்மையுடன் ஏற்கும் மனப்பான்மை அதிர்ச்சியை அளித்தது.

ஆணியடித்தாற் போல் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த நானியைப் புரியாமல் நோக்கியவளை, வலி தன்னைக் கவனி என்று அறிவிப்பு விடுக்க...

"அம்மாஆ..." என்று வாய்விட்டே அனற்றத் துவங்க,

நானி இப்போது தன் நினைவுகளில் இருந்து மீண்டு, தன் சுயத்தையும் மீட்டெடுத்து,

"இந்த வலி தாங்கிக்கிறதுக்கு இதைச் சாப்பிட்டால் என்ன? இதை எடுக்கிறவங்க எல்லாரும் ப்ளெஷர்க்காக எடுக்கிறது இல்ல... புரிஞ்சுக்கோ. இதைப் போதைன்னு பார்த்தா போதை. மருந்துன்னு பார்த்தால் மருந்து..." என்று தன்னைத் தானே மறைமுகமாக நியாயப்படுத்த முயல, அவனின் முயற்சி அறிந்து அவனைத் தன் கூர் விழிகளால் அளவெடுத்த ஜானகி தன் நாவின் வலியை யும் மீறி,

"இ... இதை... நீ என... எனக்குச் சொல்றியா? இ..இல்லை... உனக்கே சொல்லிக்கிறியா?" என்று மீண்டும் அவனைச் சொற்களால் தாக்க,

நானிக்கு என்றும் இல்லாத கோபம் வந்தது.

"F##.. it... you are making me go mad woman... mind your tongue..." என்று கத்த ஆரம்பிக்க,

ஜானகி இப்போது தலை தாழ்த்தி அவனைப் பார்த்து... "நீ இப்ப... இப்படியெல்லாம் அதிர மாட்டியே திடீர்னு என்ன?..." என்று அவனை மறுபடியும் கொக்கியில் மாட்ட,

அவளின் ஒவ்வொரு வார்த்தையும் சாதாரணமாகத் தோன்றினாலும் என்னவோ அவனைத் துகள் துகளாகச் சிதறடித்தது.

நானி, "டேம்ன் இட் ஷிட்... இங்கேயே நாக்கைக் கடிச்சுட்டு சாவு... எனக்கு உன்னைக் கண்டாலே வெறுப்பா வருது..." என்றபடி, அவள் இடத்தை விட்டுச் சென்று ஜன்னல் வழியாகக் குதித்து வெளியேறினான்.

அவன் செல்வதை என்றும் இல்லாத ஒரு ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ஜானகிக்கு அவனின் பேச்சு இந்த தடவை எரிச்சல் அடையச் செய்யாமல், அவனின் இந்த தடால் மாற்றம் அவளின் வலியையே மரத்துப் போகச் செய்ததுதான் உண்மை.

அன்று இரவு...

தன் மகளின் ரணப்பட்ட நாக்கிற்கு மயிலிறகால் மருந்து தடவிக் கொண்டு இருந்தார் ரேணுகா. அவரின் உதடுகள் எதுவும் பேசவில்லை என்றாலும், கண்கள் அதன் வேலையாய்க் கண்ணீரை உகுத்துக் கொண்டு தான் இருந்தன.

அவர் ஒவ்வொரு தடவை இறகால் வருடும் போதும், "ஸ்ஸ்ஸ்... ஆஆ..." என்ற அவளின் முனகல் மனதைத் தாக்கினாலும் அவரால் வாய் விட்டுக் கூற முடியவில்லை.

ஏற்கனவே அவளை யோகாவை நிறுத்தச் சொல்லி வாங்கிக் கட்டிக் கொண்டவராயிற்றே...

ஜானகி ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்கமுடியாமல், "போதும்மா... இப்போ பரவாயில்லை. நீ எதுக்கு இப்படி அழறே...? இப்போ தண்ணீர் பிரச்சனை எதுவும் இல்லையே... நீ அழுது கண்ணீரை நிரப்ப?" என்று சற்றே அழுத்தமாகவும் நக்கலாகவும் கேட்க,

ரேணுகா இப்போது நிமிர்ந்து, "ஏன்டி, நான் உன்னை ஏதாவது சொன்னேனா? அழக்கூட நேக்கு உரிமையில்லையா? வர வர அவங்கூடச் சேர்ந்து நீயும் நானி மாதிரியே ஆகிட்டு வரடி... சாட்டை மாதிரி வர்றது

ஒவ்வொரு வார்த்தையும்..." என்று தன் மனக்குமுறலை கொட்ட,

ஜானகிக்கே சட்டென்று தான் அந்த உணர்வு தோன்றியது. தன்னிடம் நானியின் குணங்கள் தலை தூக்குகிறதோ என்று... அந்த எண்ணத்தை உடனே கலைத்தவள்...

"பின்னே வராதா? நீதானே வலியப் போய் அவனைக் கூட்டிட்டு வந்தே... அவன் மேல் உனக்குத் தான் அபார நம்பிக்கையாச்சே... அதான் அவன் பாட்டுக்கு தைரியமா வரான், போறான்... அப்போ அந்தக் குணங்கள் எல்லாம் வராமல் என்ன செய்யும்...?" என்று கேட்க,

ரேணுகா, "நீ... என் அண்ணன்... ஏன், நானியே அவனைப் பத்தித் தப்புத் தப்பா சொன்னாலும் என்னால் அவனைத் தப்பா நினைக்க முடியலைடி... அது நோக்குப் புரியாது... உங்கப்பா மாதிரி ஊருக்கு நல்லவன் வேஷமும், வீட்டில் சர்வாதிகாரி முகமும் காட்டுறவர் கூட வாழ்ந்து வாழ்ந்து நொந்து போன எனக்குத்தான் தெரியும்... அவன் கெட்டவனோ நல்லவனோ, இரட்டை வேஷம் போடலையே... அது போதாதா?" என்று கேட்க,

ஜானகிக்கு அவர் கூறியதில் இருக்கும் உண்மை புரிந்தாலும்... வேண்டுமென்றே, "என்னம்மா... விட்டால் அவனை எனக்குக் கல்யாணமே செய்து வச்சிடுவ போல..." என்று பரிகாசத்திற்குக் கேட்டாலும் உள்ளர்த்தம் தொனிக்கக் கேட்க...

"நோக்கு அவனை ஏத்துக்கிற மனசு இருந்தால் நான் கண்டிப்பா குறுக்கே நிற்க மாட்டேன், ஜானு...

கெட்டவனா இருந்தாலும் உனக்குப் பிடிச்சிருந்தா அவனை நீ கண்டிப்பா மாத்திடுவேனு நேக்கு நம்பிக்கை இருக்கு... ஆனால் நோக்கு தான் பிடிக்கலையே..." என்று தாய்ப் பசு ஒரு படி மேலே போய்த் தன் கன்றையே பதம் பார்க்க...

அதை உணர்ந்த ஜானகி, தன் தாயின் புத்திக் கூர்மையை வியந்தாலும், "நான் எழுந்து நடக்கணும்னு நினைக்கிறது... இந்த வலியைத் தாங்கறது... ஒவ்வொரு நாளும் ரண வேதனை அனுபவிக்கிறதே அவனைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னுதான்... அதை மறந்துடாதேம்மா..." என்று தன் நிலையை அறிவுறுத்த,

ரேணுகா, "அப்போ நீ அவனைத் தள்ளி நிறுத் துறதா இருந்தால்... அந்த விவேக்கைப் பத்தின உண்மை எல்லாத்தையும் அவன்கிட்ட எதுக்குச் சொன்னே? அதை நீ என்கிட்ட கூடச் சொல்லையே..." என்று கேள்விகளை வீச,

ஜானகி பதறிப் போனாள்... தன் தாய் கேட்ட கேள்வியால் மட்டுமன்றி, விவேக்கின் விஷயம் தெரிந்தால்... அவள் நடனம் கற்றுக்கொண்ட விஷயம் அனைத்தும் தெரிந்து, தாயைத் தர்மசங்கடப் படுத்திவிடுமே என்ற எண்ணத்தாலும், தான்... தன் மகளின் நியாயமான ஆசையைக் கூட நிறைவேற்ற முடியவில்லை என்று சங்கடப்படுவாரே என்றும் அவளுக்குத் துயரமாக இருக்க,

ரேணுகா அவளை உற்று நோக்கிச் சில வினாடிகள் பார்த்து விட்டு, "கவலைப்படாதே... நானி என்கிட்ட எந்த விஷயத்தையும் சொல்லலை... ஆனால் நீ விவேக்கைப் பத்தியும் அன்னைக்கு நடந்த சம்பவம்

பத்தியும் எல்லாத்தையும் அவன்கிட்ட சொல்லிட்டேனு மட்டும் சொன்னான்... என்கிட்ட சொல்ல முடியாததைக் கூட உன்னால் அவன்கிட்ட சொல்ல முடியுதுன்னா... அது தான்டி எனக்கு ஆச்சரியமா இருக்கு..." என்று கூற,

ஜானகி, "ஏன்னா... அவனுக்கு உணர்வுகள் கிடையாது... அவன்கிட்ட சொல்றதும், இதோ இந்தச் சுவத்துக்கிட்ட சொல்றதும் ஒண்ணு. அதான்..." என்று தன் பொறுமை பறந்து கத்த..

ரேணுகா, "சரி சரி... கத்தாதே. இப்படியே எல்லாத்தையும் நியாயப்படுத்த முடியாது, ஜானு... இப்படி நியாயப்படுத்துற குணமும் நானிக்கிட்ட இருந்துதான் வந்ததா?" என்று அவளை வெறுப்பேற்ற,

ஜானகி, "நானி... நானி... நானி... உனக்கு அவனை விட்டால் வேற பேச்சே கிடையாதா? போம்மா... போயிடு இங்கே இருந்து..." என்று கத்த,

ரேணுகா, "அப்படியெல்லாம் போக முடியாது... கேழ்வரகுக் கூழ் எடுத்து வரேன். குடி... இன்னைக்கு டிபன் எதுவும் வேண்டாம். நாக்கு ரணப்பட்டிருக்கோ இல்லையோ... கூழ் குடிச்சா ஜில்லுன்னு இருக்கும்.." என்று கூறி விட்டு, அவளை ஒரு பொருட்டாகவே மதிக்காமல்... கதவைத் திறந்து வெளியே செல்ல, அவரைக் கையாலாகாத பார்வை பார்த்தாள் ஜானகி.

**நா**னி ஜானகியிடம் கத்திவிட்டு, விடுவிடுவென வீட்டிற்கு வர...

அவனை எரிச்சலுடன் எதிர் கொண்ட குணா, "ஏன்டா என் பிராணனை வாங்கவே எனக்கு வந்து

பொறந்தியா? நீ அங்கே இருந்தாத்தான் கெட்டுக் குட்டிச் சுவராகிடுறனு இங்க கூட்டிட்டு வந்தா... நீ இங்கேயும் அழிச்சாட்டியம் பண்றியா? எங்கேதான்டா போறே... நேரத்துக்கு வீட்டுக்கு வர்றதில்லை. சாப்பிடுறதில்லை... இப்போ எங்கே போய் ஊர் சுத்திண்டு வர்றே... ஊதுடா... ஊது. தண்ணியடிச்சுட்டு வந்ததானே... ஊதுன்னு சொல்றேன் இல்லை..." என்று தன் விசாரணையை ஆரம்பிக்க,

நானிக்கு இருந்த எரிச்சலில் என்ன செய்திருப் பானோ... ஆனால் அதை எல்லாம் அடக்கி, "என்னப்பா.... என்ன கேட்டே?" அமைதியாகக் கேட்க,

குணா, "காது கேட்காத அளவுக்குப் போதையாடா? ஊதுன்னு சொன்னேன்..." என்று விடாப்பிடியாக நிற்க,

நானி அவரை ஒரு வெற்றுப் பார்வை பார்த்து, "உனக்கென்ன... ஊதணும் அவ்ளோதானே?" என்றவன், தன் பாக்கெட்டினுள் இருந்த குட்டி பீர் பாட்டிலை எடுத்துக் கடகடவென வாயில் கவிழ்க்க ஆரம்பித்தான்... குணாவின் கண்முன்னேயே...!

கவிழ்த்தவன், "ஊதணும்னு தானே கேட்டே... இந்தா ஊதிட்டேன்..." என்று, "உஃப்ஃப்..." என்று குணாவின் முகத்திலேயே ஊத,

"அடப் பாவி... கர்மம்... சீ...! டேய்... உன்னை..." என்ற அவர் வெகுண்டெழ,

அதை எல்லாம் கவனிக்காமல், "இந்த நிமிஷம் வரைக்கும் நான் குடிக்கலை... நீதான் குடிக்க வைச்சே... தப்பு உன் மேலதான்... பயந்து பயந்து தெரியாமல் குடிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை... நான் வேணும்னா

உன் கண்ணு முன்னாடியே குடிப்பேன்..." என்று கூறி விட்டுத் தன் முன் கண்ட பொருட்கள் அனைத்தையும் கீழே போட்டு உடைத்து விட்டுச் சென்ற மகனைப் புரியாமல் பார்த்திருந்தார் குணா.

உள்ளே தன் அறையின் உள்ளே இருட்டை வியாபிக்க வைத்து, வெளிச்சத்திற்கு விடைகொடுத்த நானி, தன் படுக்கையில் மல்லாக்க விழ, அவனின் மனதுள் நினைவுகள் குதியாட்டம் போட்டன.

“இல்லை... நான் தப்புப் பண்ணிட்டேன்... தப்புப் பண்ணிட்டேன்... அய்யோ, முடியலையே... என்னால் ஒரு உயிர் போச்சே... கொன்னுட்டேனே... என்னால் தாங்க முடியலையே... ஆண்டவா... நான் கேவலம். நான் அசிங்கம்..." என்று ஒரு குரல் கேட்டது.

பின், “இப்போ... நீ உன்னை மறக்கணும்... அதுக்கு நீ இதைச் சாப்பிடு..." என்று ஒரு குரல்.

“ரெஜி... ஐ நீட் யூ... பேட்லி... பிசிக்கலி..." என்று போதையின் உச்சத்தில் இருந்த குரல்...

“யூ... ஸ்டேலியன்... ஐ திங்க் ஐ ஆம் ஃபாலிங் ஃபார் யூ... இதை எல்லாம் மறைச்சு எப்படி அப்பாவி மாதிரி நடிச்சே..." என்று இன்ப உறவின் உச்சத்தில் திளைத்த ஒரு பெண்ணின் குரல்....

இப்படி அனைத்துக் குரல்களும் தலையினுள் யுத்தம் செய்ய...

“நோ... நோ... நோ...." என்று கத்தியபடியே இயலாமையும் விரக்தியும் ஒன்றுகூட... படுக்கையில்

விழுந்த அவனிடம் தூக்கம் கருணை காட்டாமல் கண்ணா மூச்சி ஆடியது.

இந்தச் சிறு நிகழ்வு நானிக்குள் நடத்திய மாயம் என்ன? பதில் அவனிடம் மட்டுமே!

“இப்போ எதுக்குத் திடீர்னு அவளை வெளியே அழைச்சிண்டு போகணும்... இத்தனை வருஷமா உள்ளே தானே இருந்தா... இப்போ என்ன?” என்று அடுத்த நாள் காலை அதிகாரமாக ஒலித்தது, குமரகுருவின் குரல்.

ரேணுகாவோ, “இல்லண்ணா... அவளும் எவ்ளோ நாள்தான் வெளியே போகாமல் இருப்பா... நாலு சுவத்துக்குள்ளேயே இருந்தால் அவளுக்குப் பைத்தியம் பிடிக்காதோ...?” என்று மென்மையாகக் கேட்க,

குமரகுரு, “என்னடி நக்கலா? அவளை வெளியே அனுப்பித் தானே அந்த விவேக்கோட சல்லாபிச்சுண்டு இருந்தா? பிஞ்சிலேயே பழுத்தவளாயிச்சே அவ...” என்று நாக்கைச் சாட்டையாக வீச, காதைப் பொத்திக் கொண்ட ரேணுகாவிற்கு அவரை எதிர்த்துப் பேச நாக்குத் துடித்தாலும் இப்போது அது புத்திசாலித்தனம் இல்லை என்பதை உணர்ந்து,

“ஏண்ணா இப்படிப் பேசறேள்... அரசல் புரசலா எல்லோருக்கும் சந்தேகம் வருது... நேத்துக் கூட குணா கேட்டான்... ஏன் ஜானு வெளியவே போறதில்லைன்னு... இதைக் கிண்டப் போய் உண்மை எல்லாம் வெளியே வந்தா பிரச்சனை தானேண்ணா... அதான் சொல்றேன்... வீல் சேரில் வைச்சு கூட்டிண்டு பக்கத்தில் உள்ள பார்க்குக்குப் போயிட்டு உடனே வந்துடுறேன்...” என்று

கெஞ்ச, நெடுநேர வாக்குவாதத்திற்குப் பின் ஒரு வழியாகச் சம்மதித்தார் குமரகுரு.

"சரி. போனோமா வந்தோமான்னு இரு... அவளைத் தனியே விடாதே..." என்று ஆயிரம் அறிவுரைக்குப் பின் அவளை அனுப்பினார் அந்த தந்தை.

"அம்மா... எப்படி அப்பாவைச் சம்மதிக்க வைச்சே... என்னால் நம்பவே முடியலை..." என்று ஜானு வீல் சேரில் அமர்ந்தபடி ரேணுவைக் கேட்க,

"அதை விடுடி... எவ்ளோ நாள்தான் திருட்டுத் தனமாப் போறது... அதான் உங்கப்பாவே அனுப்பும்படி பேசினேன்... பொய் சொல்லித்தான். இன்னைக்கு அந்தப் பெரிய ஹாஸ்பிடலில் இருக்கிற ஆர்த்தோ டாக்டர் கிட்ட அப்பாயின்ட்மென்ட் இருக்குல்ல... வித்யா முயற்சி எடுத்து செய்ததாச்சே... எப்படி விட முடியும்?" என்று கூற, அதை ஜானுவும் ஆமோதித்தாள்.

ஆம்.... வித்யா இப்போது ஜானகிக்கு யோகா கற்றுக் கொடுப்பவராக மட்டுமன்றி, அவளின் நலம் விரும்பியாகவும் மாறிப் போனார்... அவளின் முயற்சியும் திடமும் அவரை விரும்ப வைத்தது... அதனால் புகழ் பெற்ற நியூரோ மருத்துவரிடம் சிகிச்சை பெற ஏற்பாடு செய்திருந்தார். அதற்குச் செல்லத்தான் இந்த ஏற்பாடு!

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, அங்கு காரில் வந்து சேர்ந்தான் நானி. எப்போதும் போல் அன்றி, அவன் முகத்தில் பொலிவு கம்மியிருந்ததைப் பார்த்த ரேணுகா, "ஏன் நானி... வாடிப் போயிருக்கே...? ஏதாவது பிரச்சனையா?" என்று கேட்க,

ஜானகி பல்லைக் கடித்து, "அவனுக்கென்ன பிரச்சனை... அவனால்தான் எல்லாருக்கும் பிரச்சனை..." என்று அலுத்துக் கொள்ள, அவளை ரேணுகா அதட்டினார்.

நானி, "விடுங்க... என் டார்லிங்... என்னைச் சொல்லாமல் வேற யாரைச் சொல்லுவா?" என்று தன்னை மீட்டுக் கிண்டலடிக்க,

ரேணுகா திருதிருவென முழிக்க...

ஜானகி, "பார்த்தியா... பார்த்தியாம்மா? என்னமோ அவனை ஆஹா ஓஹோன்னு புகழ்ந்த... இப்போ என்ன சொல்றே? உன் முன்னாடியே எப்படிப் பேசுறான்...?" என்று கத்த ஆரம்பிக்க,

நானி, "ஓஹ்... நோ... ஆரம்பிச்சுட்டாளே... மேடம், இப்போ நீங்க வந்தா தான் போய் அந்த டாக்டரைப் பார்க்க முடியும்... உங்களுக்கு டிரைவர் வேலை பார்த்தே என் ப்ரோக்ராம் எல்லூம் கெடுது..." என்று அலுத்துக் கொள்ள,

ஒரு வழியாக இருவரையும் கிளப்பிவிட்ட ரேணுகா, "நீங்க இரண்டு பேரும் போயிட்டு வாங்க... நான் பிள்ளையார் கோவிலில் அன்னதானம் ஏற்பாடு செய்திருக்கேன்... இவளுக்கு ஒரு விடிவுகாலம் வந்தா வேண்டியிருந்தேன்... அதை இப்போ செய்றதுதான் முறை..." என்றபடி கோவிலுக்குக் கிளம்ப, இருவரும் மருத்துவமனைக்கு விரைந்தனர்.

**த**ன் முன் இருந்த எக்ஸ்ரே, ஸ்கேன் அனைத்தையும் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்த மருத்துவர்

ஆகாஷ், "நோ ப்ராப்ளம்... இது இன்கம்ப்ளீட் இன்ஜூரி தான்... ஒண்ணும் பயப்படுற அளவுக்கு இல்லை... உணர்ச்சிகள் இருக்கிறதால வலிச்சாலும் சீக்கிரம் குணமாகிடலாம்... பத்து வருஷம் முன்னாடி எப்படியோ.... இப்ப உள்ள மெடிக்கல் வசதிகளில் இந்தப் பிரச்சனை ஒண்ணுமே இல்லை... உங்களோட யோகாப் பயிற்சி நல்லாவே முன்னேற்றம் காட்டுது, ஜானகி... நீங்க கொஞ்சம் முன்னாடியே வந்திருந்தா இன்னும் சீக்கிரம் குணமாகி யிருக்கலாம். ஆமா, தனியாவா வந்தீங்க?" என்று கேட்க,

ஜானகிக்கு அதுவரைக்கும் அவர் பேசியது எல்லாமே நம்பிக்கையை மலையளவு விதைக்க... நானியை வெளியே நிற்க வைத்து விட்டு உள்ளே வந்தவளுக்கு, அவனை அழைக்க ஒரு மாதிரி இருந்தது. ஆனாலும் வேறு வழியின்றி, "வெளியே... இருக்கார் டாக்டர்..." என்று திக்கித் திணறிக் கூற,

ஆகாஷ், "உங்க ஹஸ்பெண்டா?" என்று கேட்க,

ஜானகி பதறி, "சே...சே... இல்லை... இல்லை..." என்று கூற,

ஆகாஷ் சிரித்து விட்டு, "ஓ.கே. நர்ஸ்... அவரை உள்ளே வரச் சொல்லுங்க..." என்று செவிலியருக்குக் கட்டளை பிறப்பிக்க...

சிறிது நேரத்திற்குப் பின் உள்ளே வந்து, "என்ன முடிஞ்சுதா? எனக்கு booz பார்ட்டி இருக்கு... ஐ அம் ரன்னிங் அவுட் ஆஃப் டைம். முடிஞ்சா... பணத்தைக் கட்டிட்டுப் போய்க்கிட்டே இருப்பேன்..." என்று கத்தியபடி வந்தவனைத் தர்மசங்கடமாக ஜானகி பார்க்க,

ஆகாஷோ, “வாவ்... ரகுநந்தன் சார்! நீங்களா... என்னை ஞாபகம் இருக்கா? இரண்டு மூணு வருஷம் முன்னாடி பிரின்ஸ்டனில் நியூரோ ஆன்காலஜி பத்தி கான்ஃபரன்ஸ் நடந்துதே... நீங்க கூட ஒரு பேப்பர் ப்ரெசன்ட் பண்ணீங்களே... நான் கூட வந்து பேசினேனே... சார், என்ன பேப்பர் சார்? நான் என் ரிசர்ச்சுக்குக் கீதை மாதிரி உங்க ஆர்ட்டிக்கிள் தான் சார் வைச்சிருக்கேன்... உங்களைப் பார்பேன்னு நினைச்சுக் கூட பார்க்கலை, சார்... உங்களை எப்படியாவது கான்டாக்ட் பண்ணணும்னு அமெரிக்காவில் உள்ள எல்லா ஹாஸ்பிடல்லயும் தேடினேன் சார்... நீங்க ரிசைன் பண்ணிட்டீங்கன்னு சொன்னாங்க...” என்று அடுக்கிக் கொண்டே போக,

ஜானகி, “ஆஆஆ...” என்று வாயைப் பிளந்து பார்க்க,

நானியே அவனை வெற்றுப் பார்வை பார்த்தபடி ஒன்றும் பேசாமல் இருக்க... ஆகாஷ் தொடர்ந்தான்.

ஜானகியிடம், “ஜானகி... சாரை உங்களுக்கு நல்லாத் தெரியுமா? இவர் இருக்கும்போது என்கிட்ட ஏன் வந்தீங்க...? அவர் ஒருத்தரே பத்து டாக்டருக்குச் சமம்... மனுஷ மூளை, நரம்பு அனைத்தையும் கரைச்சுக் குடிச்சவர்... பார்த்தே டையகனைஸ் பண்ணிடுவார்... கொலம்பியா மாகாணமே இவர் ஒருத்தரை நம்பித்தான் இருந்தது, யு.எஸ்.ல...” என்று கூற, ஜானகிக்கு மயக்கம் வராத குறைதான்.

ஆனால் அதைக் கொஞ்சம் கூட கண்டுகொள்ளாத நானியோ, அவளிடம் திரும்பி இதுவரை அல்லாத கடின

முகத்துடன், "எனக்கு வேலை இருக்கு. நான் போறேன்... நான் ஐந்து நிமிஷம்தான் வெயிட் பண்ணுவேன்... வந்து சேரு..." என்று கூறி விட்டு விடுவிடுவெனச் செல்ல,

ஆகாஷ் அதிர்ந்தாலும் வெளியே காட்டாமல், "ஜானகி, எனக்கு அவரைப் பத்திக் கொஞ்சம் தெரியும்... நீங்க கவலைப்படாதீங்க. போங்க... நான் வித்யாம்மா மூலமா விசாரிக்கிறேன்... ட்ரீட்மென்ட்ஸ் சொல்றேன்... அதைத் தவறாமல் செய்தாலே போதும்... அதுவும் இல்லாமல் ரகு சார் வேற இருக்கார்... வேற என்ன வேணும்..." என்று கூறி விட்டு, அவளை அனுப்பி வைத் தான்.

செவிலியர் அந்த நாற்காலியைத் தள்ளிக் கொண்டு வர, அவன் கூறிய ஐந்து நிமிடங்களுக்கு முன்னரே காருக்குள் வந்து அமர்ந்த ஜானகிக்கு, அன்றுவரை நானியைப் பார்த்துத் தோன்றாத பயமும் சிறு மரியாதை யும் அன்று தோன்றியது...

ஆனால் பேச முடியாமல் நாக்கு சதி செய்ய... "நானி..." என்று அவன் கோபத்தைப் பார்த்துப் பயந்து அவள் திணற,

அவனோ அவளை முறைத்தான்... அவன் பார்வை அவளை நடுங்க வைக்க...

மறுபடியும், "நானி, ஏதாவது பேசு... இப்படிப் பார்க்காதே. பயமா இருக்கு..." என்று கூற,

"உன் சைஸ் என்ன...?" என்று கேட்டான் அவன்.

அவள், "என்ன?" என்று பதறிக் கேட்க,

அவனோ சிரிப்பை அடக்கி, "உன் சைஸ் என்னன்னு கேட்டேன்?" என்று கூற,

ஜானகிக்கு வந்த ஆத்திரத்தில், "டேய்... நீயெல் லாம்..." என்று பல்லைக் கடிக்க... நானி கலகலவெனத் தன் கோபத்தை மாற்றிச் சிரிக்க ஆரம்பித்தான்.

நானி இப்படித்தான். அவன் எப்போதும் மாறுவ தில்லை. மாற்றவும் முடியாது. உணர்வுகள் அவனுக்கு எட்டாக் கனி என்று ஜானகி அன்று நினைத்தாள். ஆனால் நானியின் கடந்த காலம் தெரிய வந்தால்... ஜானகி அவனை ஏற்றுக் கொள்வாளா?

## 16

"மெதுவா... மெதுவா... காலை மெதுவா எடுத்து வைங்க..." என்று ஆகாஷ் மென்மையாக ஜானகியை ஊக்குவிக்க,

ஜானகியோ, "இல்லை... டாக்டர்... எனக்குப் பயமா இருக்கு... காலை ஊன்னாலே வலிக் குது..." என்று தயங்க,

ஆகாஷ், தன் புன்னகை மாறாமல், "ஜானகி... பயப்படாதீங்க... பிசியோ, யோகா எல்லாம் கிட்டத்தட்ட இரண்டு மாசம் எடுத்திருக்காங்க... உங்களால் தாங்க முடியும்... இது நீங்க எழுந்து நடக்கிறதுக்காக இல்லை. ஒரு சின்ன ஒத்திகைதான்... முயற்சி பண்ணுங்க..." என்று கூற,

அவர் குரலில் இருந்த மென்மையில் பதற, அவள் மனம் சற்றே அமைதியுற்றுத் தன் பயத்தை மீறிக் காலைத் தரையில் பதிக்க,

'சுரீர்...' என்று வலி அவள் முதுகுத்தண்டைப் பதம் பார்க்க,

"ஆஆ..." என்று தன்னை மீறி வாய் விட்டுக் கத்தி விட்டுக் காலை மடக்கிக் கொண்டாள்.

பக்கத்தில் இருந்த ரேணுகா, தன் முகத்தை மறைத்தவாறு கண்ணீரைக் கட்டுப்படுத்தப் போராட,

அதைப் பார்த்த ஆகாஷ், "அம்மா... நீங்க கொஞ்சம் வெளியே இருங்க..." என்று அப்போதும் அமைதியாகக் கூற,

ஜானகிதான் எரிச்சலில், "ஏம்மா இப்போ அழறே...? இதுக்குத்தான் நானியைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கணும்... நான் உயிர் போற மாதிரிக் கத்தினால் கூடக் கூலா இருப்பான்... இன்னைக்குன்னு பார்த்தா அவன் எங்கேயோ ஊர் சுத்தப் போகணும்... உருப்படாதவன்... அவனையெல்லாம்.." என்று வலியில் தன்னை மீறி ஏதேதோ கூற,

ஆகாஷ் ஒரு வித ஆச்சரியத்துடன், "ஹ்ம்... அப்படித்தான் ஜானகி... அப்படித்தான்..." என்று கூச்சலிட,

ஜானகி திடுக்கிட்டு ஆகாஷைப் பார்க்க, அவரோ, "இப்போ கீழே பாருங்க ஜானகி... காலை ஊனிட்டீங்க... ஆனால், உங்களுக்கு வலி தெரியலை," என்று சிரித்த படி கூற,

ஜானகிக்கோ அப்போதுதான் உரைத்தது.

"ஆமாம், டாக்டர். எனக்கு வலி ஒரு நிமிஷம் தெரியவே இல்லை..." என்று ஆச்சரியமாகக் கூற,

ஆகாஷ் புன்சிரிப்புடன், "எல்லாத்துக்கும் நம்ம மூளைதான் காரணம். அதுதானே வலியை உணர வைக்குது. அதை நம்ம மனசு மறைச்சா வலி தெரியாது. உங்க வலி, மூளைக்கும் மனசுக்குமான போராட்டம்... உங்களை மீறி மனசில் உள்ளதை - அதாவது ரகு சாரை திட்டினீங்களே... அதுதான் உங்களுக்கு வலி தெரியலை," என்று கூற,

ஜானகி மௌனமானாள். அதைப் பார்த்த ரேணுகா, சிரிப்பை அடக்கி இப்போது ஆகாஷிடம், "அப்போ அவ மனசில் நானி இருக்கான்னு சொல்றேளா டாக்டர்?" என்று கிண்டலாகக் கேட்க,

ஜானகி, "ஏம்மா.. அதெப்படிம்மா நோக்கு இப்படி யெல்லாம் யோசனை வர்றது...? நீ அவனை பத்திப் பேசாமல் ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டியா?" என்று எரிச்சலாகக் கேட்க,

ரேணுகா, "நான் எங்கேடி பேசினேன்...? நீதானே பேசினே...?" என்று கூற,

ஆகாஷ், "பரவாயில்லை ஜானகி... இதென்ன தப்பு...? நம்ம மனசில் குப்பையாக எல்லாத்தையும் போட்டு அடைச்சாத்தான் புழுக்கமா இருக்கும். அதை வெளியே கொட்டிட்டாப் பிரச்சனை இல்லை. உங்களுக்கு ரகு சாரைக் கன்னாபின்னாவென்று திட்டணும்னா திட்டுங்க.... அது உங்களை லேசாக்கும். ஆனால், என் முன்னாடி திட்டாதீங்க... ஏன்னா அவர் எனக்கு மெண்டர் மாதிரி... என் குரு... ஒரு ஜீனியஸ்... சத்தியமா அவரை மாதிரி ஒரு டாக்டரைப் பார்க்க முடியாது," என்று கூற,

ஜானகி, "ஆமாமா... பெரிய டாக்டர்தான்... அதான் இப்படித் தறுதலையாச் சுத்துறான்..." என்று கருவ,

ரேணுகா, "ஜானு... இதென்ன பேச்சு...?" என்று அதட்ட,

ஜானகி, "பின்னே என்னம்மா..? ஒரு டாக்டருக்கான ஏதாவது லட்சணம் இருக்கா அவன் கிட்டே...? ஏன், அவனா எனக்கு உதவி செஞ்சானா? நீதானே போய் அவனைக் கெஞ்சினே...? அப்போ கூட என்னை ஹாஸ்பிடல், யோகா சென்ட்டர்னு கூட்டிட்டுப் போறது வர்றது மாதிரி உதவிதானே செஞ்சான். மருத்துவ ரீதியா எதுவும் செய்யலையே...? இப்படிக் கல் நெஞ்சம் உள்ளவனை எப்படிம்மா டாக்டருன்னு சொல்றது...?" என்று குமுறினாள்.

ஆகாஷ் இப்போது, "ஜானகி... நீங்க என் பேஷன்ட் என்பதைத் தாண்டி ஒரு பேமிலி ஃப்ரெண்ட் மாதிரிதான் பழகுறேன். இப்போ சொல்றேன்... ரகு சாரால் இப்படி மாற முடியாது... அப்படி மாறினால் அதுக்குப் பின்னாடி ஒரு காரணம் இருக்கணும்... அவர் டாக்டருக்குப் படிக்கலை... டாக்டராகவேதான் பிறந்தார். ஒரு prodigee அவர். கண்டிப்பாக அவரால் உங்களைப் பார்த்து சாதாரணமாகப் போயிருக்க மாட்டார்..." என்று அவனுக்குத் துணை நிற்க,

ரேணுகா, அப்போதுதான் யாரும் அறியாத உண்மை ஒன்றைக் கூற ஆரம்பித்தார்.

"ஜானு... அவன் ஒண்ணும் உன்னைப் பார்த்துட்டு அப்படியே போகலை... உனக்குக் கொஞ்சமாவது நடக்க

முடியும்கிற நம்பிக்கை தந்ததே யோகா... அது நானி சொன்னதுதான்..." என்று கூற,

ஜானகி, "என்ன...?" என்று ஒருவிதமான ஆச்சரி யத்தில் கேட்க,

ரேணுகா, "ஆமாடி... நான் பிள்ளையார் கோயிலில் உட்கார்ந்து உன்னை நினைச்சு அழுதுண்டு இருந்தேன் ஒரு நாள்... அப்போ..." என்றபடி அவர் நினைவுகள் அவ்விடத்திற்குச் சென்றது.

"பிள்ளையாரப்பா... என் மகளுக்கு இப்படி எல்லாப் பாதையையும் அடைச்சு வைக்கிறியே... அவ அப்பா அவளை இப்படி ஒரு பொருட்டாவே மதிக்காமல் காலில் போட்டு மிதிக்கிறாரே... அவள் கடைசி வரை இப்படியே அந்த நாலு சுவத்துக்குள்ளேதான் இருக் கணுமா? அவ காலில் நின்னு அவ நிரூபிக்கணும்... அதுக்கு வழி காட்டு கடவுளே...!" என்று மானசீகமாக வேண்டிக் கொண்டிருக்க,

"இந்தச் சர்க்கரைப் பொங்கல் நல்லா இருக் குமா?... இல்லை மோதகம் நல்லா இருக்குமா...?" என்றபடி பிரசன்னமானான் நானி..

அவனைப் பார்த்துப் பதறி, "நானி... நீயா...? கோயிலுக்கா...?" என்று ரேணுகா ஆச்சரியப்பட,

நானி, "ஏன், நாங்க கோயிலுக்கு வரக் கூடாதா..? சாமி கும்பிட வரலைன்னாலும் பிரசாதத்துக்குக் கண்டிப்பா வருவோம்... இந்தாங்க, எடுத்துக்கோங்க..." என்றபடி அவரிடம் தொன்னையில் பொங்கலையும் மோதகத்

தையும் வைத்து நீட்டப் போய்... பின்பு கையைப் பின் இழுத்தவனை ரேணுகா புரியாமல் பார்க்க,

நானி குறும்புடன், "ஔவையே... உனக்குச் சுட்ட மோதகம் வேணுமா... இல்லை சுடாத மோதகம் வேண்டுமா...?" என்று கேட்க,

ரேணுகா ஒரு நிமிடம் திடுக்கிட்டுப் பின் உணர்ந்து, அதுவரை இருந்த கலக்கம் மாறி, அவன் கேட்ட கேள்வியில் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்.

பின் அமைதியுற்று, "பிள்ளையார் கோயிலில் முருகன் எப்படி...?" என்று கேட்க,

நானி, "நானும் அவனும் அண்ணன் தம்பிதானே ஔவையே... அவ்வப்போது வீடுகளை மாற்றிக் கொள்வோம். இப்போது கூறு... சுட்ட மோதகமா..? சுடாத மோதகமா...?" என்று கேட்க,

ரேணுகா, "சுட்ட மோதகம்னா கீழே போட்டுத் தருவியா...? அப்போ எனக்கு வேணாம்... சுடாததே கொடு..." என்று கூற,

நானி, "அப்பாடி... எங்கே சுட்டது வேணுமோன்னு நினைச்சுப் பயந்துட்டேன்... எங்க பாஷையில் சுட்டதுன்னா திருடிக் கொடுக்கிறது... அதான் திருடி தர்ம அடி வாங்க வெச்சிருவீங்களோன்னு நினைச்சேன்..." என்று கூறி விட்டு அவளிடம் பிரசாதத்தைக் கொடுக்க,

அவன் குறும்பையும் புத்திசாலித்தனத்தையும் எண்ணி, வியக்காமல் இருக்க முடியவில்லை. 'எப்படி

இருந்த மன நிலையைச் சில வினாடிகளில் மாற்றி விட்டானே...?' என்று நினைத்தவர்,

"உன் கிட்டே ஏதோ இருக்கு நானி... அதான் என்னால உன்னை வெறுக்க முடியலை. ஆனால், என் பொண்ணுக்காக நீ உதவறேன்னு சொன்னியே நானி... அதை மட்டும் இப்படிக் கண்டுக்க மாட்டேங்கறியே...? அவ எதிர்காலமே இதுதானா..?" என்று தழுதழுத்தக் குரலில் கேட்க,

நானி, "அவளோட இந்தப் பிரச்சனைக்கு அவ தானே காரணம். அப்படின்னா சிகிச்சையும் அவ கிட்டே தான் இருக்கு..." என்று கூற,

ரேணுகா, "என்ன...? அவதான் காரணமா? அது விபத்து நானி..." என்று கூற,

நானி அப்போது, தான் உளறி விட்டோம் என்று உணர்ந்து பேச்சை மாற்ற, "விபத்தென்றாலும் இத்தனை வருஷமா அடைஞ்சு கிடந்தது அவதானே...! அவ நினைச்சிருந்தால் அதை விட்டு வெளியே வந்திருக்க முடியாதா...?" என்று கேட்க,

ரேணுகா அமைதியானார். பின் நானி, "அவ பிரச்சனை உடல் சம்பந்தப்பட்டதில்லை... மனசு சம்பந்தப்பட்டது. அதுக்குத்தான் நான் ஒரு வழி கண்டு பிடிச்சிருக்கேன்..." என்று கூற,

ரேணுகா பரபரப்புடன், "என்ன நானி...? சொல்லு... கண்டிப்பா நான் எப்பாடுபட்டாவது அவளைச் செய்ய வைக்கிறேன்..." என்று கூற,

நானி, "நீங்க செய்ய வேண்டாம்... அவளே செய்வா... அவளே முன்வந்து நான் இந்தச் சிகிச்சையை ஏத்துக்கிறேன்னு சொல்லுவா..." என்று கூற,

ரேணுகா, "அப்படி என்ன செய்யணும் நானி..?" என்று வினவ,

நானி, ஒரு மர்மச் சிரிப்புடன், "யோகா..." என்க,

ரேணுகா, ஒரு நிமிடம் ஆச்சரியமாக அவனை நோக்கினார்

நினைவுகளில் இருந்து வெளியே வந்த ரேணுகா,

"இப்படித்தான் உன்னை யோகா பண்ண வெச்சான். அவனே எல்லா ஏற்பாடையும் செஞ்சான்... ஆனால், என் பேரில். நீயே சொல்லு... நீயா முன் வந்து தானே அதைச் செய்யப் போனே...?" என்று கேட்க,

ஜானகிக்கு, அன்று எரிச்சலில் தானே யோகா செய்யப் போகிறேன் என்று கூறியது நினைவு வர, வாயடைத்துப் போனாள்.

அதை எல்லாம் கேட்ட ஆகாஷ், "பாருங்க ஜானகி... இதில் இருந்தே தெரியலை... அவருக்குள் இருக்கிற மருத்துவன் ஒளிஞ்சிருக்கான். ஆனால், உயிரற்றுப் போகலை. அது அவரால் முடியாது. நீங்களும் போகப் போகப் புரிஞ்சுப்பீங்க..." என்று கூறி விட்டு,

சில மருந்துகள் எழுதிக் கொடுத்து, அவர்கள் இருவருக்கும் விடை கொடுக்க, தாயும் மகளும் மருத்துவ மனையை விட்டு வெளியே வந்தனர்.

முதன் முதலாக ஜானகிக்குள் நானியைப் பற்றிய எண்ணங்கள் அருவருப்பை விதைக்காமல், ஆச்சரியத்தை உண்டாக்கின.

அந்த ஆச்சரியம், நாளாக ஆக வேர்ப் பிடித்து வளர்ந்து, அவனைப் பற்றிய ஆர்வத்தை விதைத்தன.

அவளின் அந்த ஆர்வம், நானியையே ஆட்டிப் படைக்க ஆரம்பித்தது.

இப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஜானகி சிறு சிறு எட்டுகளில் இருந்து, ஐந்து நிமிடங்கள் பத்து நிமிடங்கள் தொடர்ச்சியாக நடக்கும் அளவுக்குப் பழகியிருந்தாள். முதன் முதலாக அவள் நடக்கத் துவங்கிய கணம், அவளால் என்றும் மறக்க முடியாது.

“அம்மா... நான் நடக்கிறேன்மா... என்னை விடும்மா. நான் நடக்கிறேன்மா...” என்றபடி அவர்கள் எப்போதும் செல்லும் பூங்காவில், ஒரு தடவை ரேணுகாவின் பிடியை மீறி நடந்து விழப் போக, அவர் பிடிக்க,

அவரை விலக்கிய ஜானகி, “பரவாயில்லைம்மா... விழுந்தாலும் பரவாயில்லை... நடக்கிறேன். வலி இப்போ அவ்வளவா இல்லை...” என்றபடி எட்டுக்களை வைக்க, அவளின் நம்பிக்கையும் சிகிச்சையும் அவள் நரம்புகளில் உயிரூட்டி, அவளுக்குப் பலத்தைக் கொடுக்கச் சிறிது சிறிதாக முன்னேறி அவள் பல எட்டுக்களை வைக்க,

“அம்மா... அம்மா... நான் நடக்கிறேன்மா. நான் நடக்கிறேன்மா...” என்று உற்சாகக் கூச்சலிட்ட மகளைக் கண்ணெடுக்காமல் பார்த்த ரேணுகாவைக் கட்டிக் கொண்ட ஜானகி,

"அம்மா... இது கனவில்லைம்மா... நான் நடக்கிறேன்... நடக்கிறேன்... ஜெயிச்சிட்டேன்..." என்றபடி கண்ணீர் வழிய கூறிய மகளைக் கட்டிக் கொண்டார் அந்தத் தாய். ஒரு வயதுக் குழந்தையாய் அவள் எட்டு வைத்தபோது கூட இந்த அளவிற்கு மகிழவில்லை அவர். ஆனால், எந்த ஊனம் தன் மகளின் வாழ்வையே இருட்டடிக்க வைத்ததோ... அது இன்று விலகியபோது, ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்தார் அவர்.

மகிழ்ச்சியின் உச்சத்தில் தாயும் மகளும் அப்படியே நிலத்தில் அமர்ந்து விட்டனர். ரேணுகா, "ஆமாடி கண்ணு... நீ ஜெயிச்சிட்டே... உன்னைப் பிடிச்ச பீடையெல்லாம் போயிடுத்துடி... நீ இனிமே ஜெயிக்கப் போறேடி, ராஜாத்தி..." என்று அவளைத் தன் மடியில் சாய்த்துக் கொள்ள, ஜானகிக்குள் இருந்த பழைய கோழை அந்தக் கணத்தில் இறந்து போய்ப் புதிய ஜானகி, தன் தயக்கம்... நம்பிக்கையின்மை என்ற பனிக்குடத்தை உடைத்து ஜனிக்க ஆரம்பித்தாள்.

இப்படியாகப் பல இன்னல்களைக் கடந்து, இப்போது ஜானகி முன்னேறி வர, அந்த முன்னேற்றத்தை உணர்ந்தவர், அந்தக் குடும்பத்தில் ரேணுகாவைத் தவிர யாருமிலர்.

வைஜூவும் ராதாவுமாக அவ்வப்போது "இப்போதெல்லாம் எந்தத் துணி கொடுத்தாலும் சட்டுன்னு தைச்சுத் தர மாட்டேன்றாளே ஜானகி... என்னாயிடுத்து...? எல்லாம் இந்தப் பார்க்குக்கு கூட்டிட்டுப் போறதாலேயோ..?" என்று குறைப்பட்டதுதான் மிச்சம்.

ரேணுகாவும் இப்போது, 'அவா இப்படி இருக்கிறதும் நல்லதுதான். ஜானகியோட ரொம்ப ஒட்டும் உறவா இருந்தால் என் மகளுக்கு ஒரு முன்னேற்றமும் வந்திருக்காது...' என்று மனதைத் தேற்றிக் கொண்டார்.

இப்படியாகக் குடும்ப உறவு இருக்க, ஜானகிக்கு நானியுடனான உறவு சற்றே மாற்றம் கண்டிருந்தது.

அதாவது அவன் அவளைக் கடுப்பேற்றுவதற்குப் பதிலாக, அவள் அவனைக் கடுப்பேற்றும் வேலையைச் செவ்வனே செய்தாள்.

ஒரு நாள் ரேணுவும் ஜானகியும் பூங்காவில் பயிற்சி மேற்கொண்டிருக்கும் வேளையில் அங்கு வந்த நானி,

"வாவ்... ஜான் நடக்க ஆரம்பிச்சுட்டியா? பரவாயில்லையே...! இந்த யோகா மண்ணாங்கட்டி எல்லாம் ஒண்ணுமே இல்லைன்னு நினைச்சேன்... ஓ... நோ... இப்போ என்னை யார் கல்யாணம் பண்ணிப்பா...?" என்று வெறுப்பேற்ற, இப்போது ஜானகி அசரவில்லை.

"நானி, இந்த உலகம் இன்னுமா உன்னை நம்பிக்கிட்டு இருக்குன்னு நினைக்கிறே..." என்று நக்கலாகக் கேட்க,

நானி, சடாரென்று ரேணுகாவைப் பார்க்க, அவரோ அசடு வழிந்து, "ஹி... ஹி... கமலா... ஏ... கமலா... ஒரு நிமிஷம்... எதிர் வீட்டுக் கமலா மாதிரி இருக்கு... நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்..." என்று இல்லாத கமலாவைத் தேடிப் போக,

ஜானகி, அவனைப் பார்த்து மர்மச் சிரிப்புச் சிரிக்க, நானி,

"இதிலென்ன இருக்கு... உன் வாழ்க்கையை நீயே தான் தேர்ந்தெடுக்கணும்... எப்போப் பார்த்தாலும் மத்தவங் களைச் சார்ந்து ஒட்டுண்ணியாகவும் கைப்பொம்மை யாகவும் இருக்கக் கூடாது. அதான் அப்படி செஞ்சேன்..." என்று கூறிக் கொண்டே அருகில் வர,

ஜானகி, "சரிப்பா... சரி. நான் உன் கிட்டே ஒண்ணும் கேட்கலை..." என்றபடி ஒரு எட்டு வைக்கச் சற்று பலம் கூடி வராத கால் என்பதால் தடுக்கி விட, "ஆஆ..." என்று அனிச்சையாக ஜானகி அருகில் நானியின் தோளைப் பிடிக்க, அவனோ ஆபத்பாந்தவனாய்க் காப்பாற்றி விட்டால் நானி இல்லையே... எனவே பட்டென்று விலகித் தட்டி விட்டான்.

"ஆ... அம்மா..." என்றபடி புல் தரையில் விழுந்தாள் அவள். புல் தரையாதலால் பலமாக அடிபடாமல் இருக்க, நிமிர்ந்து பார்த்த ஜானகி, "ஏன்டா... நீயென்ன மன்மதனா...? பிடிச்சா என்ன குறைஞ்சிடுவியா? தட்டி விடுறே...?" என்று கத்த,

நானி நக்கல் சிரிப்புடன், "இதைப் பாரு... இந்த மாதிரி எந்த சப்போர்ட்டும் என் கிட்டே எதிர்பார்க்காதே... அதுக்கு நான் ஆளில்லை. விழுந்தா பரவாயில்லை... விழு. ஆனால் நீயாத்தான் எழுந்துக்கணும்..." என்று கூற,

ஜானகிக்கு அது புரிந்தாலும், தன் கோபத்தை விட்டுக் கொடுக்காமல், அங்குள்ள இருக்கையில் அமர்ந்து அவனை முறைத்தாள்.

பின் நானி அவளருகில் அமர்ந்து, "சரி... நடக்க ஆரம்பிச்சுட்டே...! அடுத்த விஷயம் எப்படிச் செய்யப் போறே...?" என்று கேட்க,

ஜானகி, "என்ன?" என்று எரிச்சலுடன் கேட்க,

நானி, "தகிட ததிமி... பரதநாட்டியம் ஜான்... நீதான் நாட்டியப் பேரொளி ஆச்சே...!" என்று குறும்பாகக் கூற,

ஜானகிக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை.

"நானி, தயவுசெய்து அதைப் பத்திப் பேசாதே... நடக்க ஆரம்பிச்சுட்டேன்... கொஞ்ச நாள் கழிச்சு எங்கப்பா கிட்டே போய் நிப்பேன்..." என்று கூற,

நானி, "நின்னு... அப்புறம்...?" என்று கேட்க,

ஜானகி, "அப்புறம்... அப்புறம்..." என்று தயங்கினாள். அப்புறம் என்னவென்று அவளுக்கே தெரியவில்லை.

நானி, "அப்போ உங்கப்பா உன்னை ஏத்துப் பாரா..? என் மகள் நல்லவள்னு தலையில் தூக்கி வெச்சுப்பாரா? கம் ஆன் கேர்ள்... நீ உன்னை நிரூபிக் கணும்... அதுக்கு, நீ விட்டதைக் கத்துக்கணும்... அவர் முன்னாடி ஒரு சாதாரணமா நிற்கக் கூடாது. சாதிச்சுட்டு நிக்கணும்..." என்று கூற,

ஜானகி, "என்னைக் குழப்பாதே நானி... இந்த விஷயத்தில் நீ எப்படி என்னைக் குழப்பினாலும் நான் ஒத்துக்க மாட்டேன்... நான் கெட்டதுக்குக் காரணமே அதுதான்... அதை எப்படி நான்...?" என்று தயங்க,

நானி பெருமூச்சுடன், "சரிம்மா... உன் இஷ்டம்... வேற என்ன..? நீ நிற்கிறேன்னாலும் உங்கப்பா எனக்குத்தான் கல்யாணம் பண்ணி வைப்பார்... அதை விட எனக்கு ரொம்ப வசதி..." என்று அவளைப் பதம் பார்க்க,

ஜானகி, என்னதான் இப்போது மாறியிருந்தாலும், அவளால் அவனைத் திருமணம் செய்து கொள்ளும் விஷயத்தை மட்டும் இது நாள் வரை ஜீரணிக்க முடியவில்லை. அவள் வளர்ந்த சூழ்நிலை, அவளின் மனப்பான்மை அப்படி. உலகில் அனைவருக்கும் பிடித்த விஷயம் என்பது இந்த உலகத்தில் இல்லையே...!

ஒருவருக்குப் பிடிக்காத பாகற்காய் மற்றவருக்குப் பிடிப்பதும், ஒருவருக்கு உயிரான ஆப்பிள் மற்றவருக்கு விஷமாய்க் கசப்பதும் நிதர்சனம்தானே...! அதேதான் ஜானகியின் நிலையும்... அவனை எதிரியில் இருந்து சக மனிதனாய் இப்போது பார்க்க முடிந்தது. ஆனால், துணையாய் எண்ணிப் பார்க்க அவளால் முடியவில்லை. எனவே அவன் அவ்வாறு கூறியதும் காதைப் பொத்திக் கொண்ட ஜானகி,

"ப்ளீஸ்... இப்படி பேசாதேயேன்... நீ விளையாட்டுக்குச் சொன்னாலும், ஒரு மாதிரி இருக்கு... என்னால் அதை நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை..." என்று கெஞ்ச,

நானி, "அப்போ... நான் சொன்ன வழிதான் இருக்கு... உங்கப்பா, நானே இல்லைனாலும் என்னைப் போல் ஒரு உதவாக்கரையைத்தான் உன் புருஷனாக்கு வார்..." என்று அசால்ட்டாகக் கூற,

ஜானகி யோசித்தாள். இதிலிருந்து வெளி வர முடியாது. அதிலும் நானியை மீறி எதுவும் செய்ய முடியாது என்பது அவளுக்குத் தெரிந்தது. எனவே, இருமுனை கத்தியாக்கினாள்... அவனையும் தன் நிலை யில் நிப்பாட்ட வேண்டுமென்று நினைத்தாள். அது

இரு வகையிலும் பயன்படுமே என்று நினைத்தாள். எனவே ஜானகி, "உன் இஷ்டத்துக்கு எல்லாரையும் ஆட்டுவிக்காதே நானி... நீ கூடத்தானே டாக்டர் தொழிலை விட்டே...? அதைத் திருப்பிச் செய்... நான் பரதம் கத்துக் கிறேன்..." என்று கூற ,

நானி, தன் வழக்கம் போல் பேச்சை மாற்றியபடி,

"ஜான்... உன் சைஸ் என்ன?" என்று கேட்க,

ஜானகி அவனை உறுத்து விழித்தாள். ஆனால், அவனோ கண்டு கொள்ளாமல்,

"பேச்சை மாத்தாதே... நீ ஏன் இப்படி மாறினே...? அதைச் சொல்லு... நீ சொல்லாமல், நீ சொன்னதை நான் செய்ய மாட்டேன்..." என்று விடாப்பிடியாக நிற்க,

அவனோ அதைக் கண்டு கொள்ளாமல், "ஒரு 36 இருக்குமா? ரொம்ப ஒல்லியா இருக்கியே... மிஸ் இந்தியாக்கு ட்ரை பண்றியா...?" என்று அப்போதும் மாற்ற,

ஜானகி, "இப்போ என்ன...? உனக்கு என் சைஸ் தெரியணும்... அதானே...! 38... போதுமா? அவ்ளோ ஒல்லி இல்லை... கூடவே என் செருப்பு சைஸ் சொல்லவா? ஏழு... அதாலே அடி வாங்காமல் ஒழுங்கா உன்னைப் பத்திச் சொல்லு..." என்று படபடவெனப் பேசிய ஜானகியைப் பார்த்து இரண்டாம் முறையாக அதிசயித்துப் பார்த்த நானி, முகம் லேசாகச் சுருங்கி,

"நான் மனுஷனே கிடையாது... பிறகெப்படி டாக்டராகிறது...? உயிருக்குயிராய் பிடிச்சதை விட்டு விலகி நிக்கிறது கொடுமை ஜான்... அந்தக் கொடுமை உனக்கு

வேண்டாம்..." என்று கம்மிய குரலில் கூறி விட்டு நடக்க ஆரம்பித்தவனைப் பார்த்து, ஸ்தம்பித்து நின்றாள் அவள்.

அவள் கண்களில் இருந்து ஒரு துளிக் கண்ணீர் அவளே அறியாமல் அவனுக்காய்ச் சிந்தியது. அது தோழமையா அல்லது அவளுக்கே தெரியாமல் முளை விட்ட காதலாலா?

## 17

"டிரிங்..." என்று கடிகார அலாரம் விடாமல் அலறிக் கொண்டிருக்க, எழுந்து அதை அணைத்து வைத்து விட்டு உறங்கி னான் அவன்.

அதைக் காணாமல் கண்டு கொண்ட அவன் தந்தை மாணிக்கவேல்,

"ஆமாம்... வெட்டியா இருக்கிற பயலுக்கு அலாரம் வைக்கிறதே கேவலம்... அதுவும் 9 மணிக்கு அலாரம் வைக்கிறது அதை விடக் கேவலம்... அதை விடக் கேவலம், அதை அணைச்சு வெச்சுட்டு மறுபடியும் கவுந் தடிச்சுப் படுக்கிறது..." என்று கத்த,

அவனின் தாய் கல்பனா வந்து, அவன் போர்த்திக் கொண்டு சுகமான தூக்கத்தில் இருந்த அவன் பின்னால் தட்டி, "டேய்... எழுந்திருடா. இன்னைக்கு ஞாயிற்றுக் கிழமை. அவர் வீட்டில் இருக்கிற நேரம் இப்படிப் பண்றியேடா...? அவர் கத்துறதிலேயும் தப்பில்லைடா... எழுந்திரிடா... டீ போடுறேன்..." என்று கெஞ்சிக் கொண் டிருக்க, ஒரு வழியாக எழுந்து சோம்பல் முறித்தான்.

அதற்குள் மாணிக்கம், "ஆமா... இவனுக்கு ட ஒண்ணுதான் குறை... தண்டச் சோறு... வெட்டியா இருந்தா லும் குசும்புக்குக் குறைச்சல் இல்லை..." என்று ஆரம் பிக்க,

கல்பனா, "ஏங்க காலங்காத்தால கரிச்சுக் கொட்டுறீங்க... விடுங்க..." என்று வக்காலத்து வாங்க,

மாணிக்கம், "நீ தான்டி அவனைக் கெடுக்கிறது... பயபுள்ள இவன் அண்ணன் மாடா உழைக்கிறான்... இவனைப் பாரு... பி.பி.ஏ, படிச்சுட்டு வெட்டியா இருக்கான். ஒரு வேலைக்குப் போறானா? அந்தக் கிளாஸ் இந்தக் கிளாஸ்ன்னு காசைத் தண்ணியாக்கினதுதான் மிச்சம்..." என்று அலுத்துக் கொள்ள,

"வேலையில்லாப் பட்டதாரி...

தொட்டுப் பார்த்தா ஷாக்கடிக்கும் வேற மாறி..." - என்று வேணுகானம் காற்றில் மிதந்து வர, அதைப் பாடியது வேறு யாருமல்ல.. அவனேதான்.

"டேய்... என்ன, நக்கலா...? கண்ட சினிமாவைப் பார்த்துட்டு வந்துட்டு பெரிய இவனாட்டம் பாடறியா..? ஆன்னா ஊன்னா அப்பாக்களைக் கிண்டல் செய்யும் கூட்டம் போட்டுற வேண்டியது... இல்லை திட்ட வேண் டியது. நாங்க சொல்றதில் உள்ள ஆதங்கம் எங்கே புரியுது உங்களுக்கு...? நீ சம்பாதிச்சு எனக்கு வீடும் உங்கம்மாவுக்கு நகையும் போடச் சொல்லிக் கேட்க லைடா... உன் வாழ்க்கையை நீ பார்த்துக்கிற அளவுக்கு உனக்குத் தெம்பு வேணும்... அதுக்குத்தான்..." என்ற அவரின் குரலில், கோபத்தை விட ஆற்றாமை தான் அதிகம் இருந்தது.

அவன் ஒன்றும் கூறாமல் காலைக் கடன்களை முடித்து விட்டு, "அம்மா... டீ..." என்று கெத்தாகக் கேட்க,

மாணிக்கம் தலையில் அடித்துக் கொண்டார்.

"இதெல்லாம் எங்கே உருப்பட்டு... என்னத்தைக் கிழிக்கப் போகுது..." என்று அலுத்துக் கொள்ள,

கல்பனா, "விடுங்க... சின்னப் பையன். விளையாட்டுத்தனம் ஜாஸ்தி.... இப்போ என்ன... 23 வயசுதானே ஆச்சு... அடுத்த குருப் பெயர்ச்சியில் அவனுக்கு வேலை கிடைச்சிடும்..." என்று தனக்குத் தெரிந்த சமாதானத்தைக் கூற,

மாணிக்கம், "நல்லா சமாதானப்படுத்த மட்டும் செய்... அவனுக்குப் புத்தி சொல்லாதே. சரி... அன்னைக்கு ஏதோ இன்டர்வியூ போயிட்டு வந்தானே... அது என்னாச்சுன்னு கேளு..." என்று மனைவியின் வாயிலாக மகனுக்குக் கேள்வியைப் படைத்தார் மாணிக்கம்.

பெரும்பாலான வீடுகளில் இப்படித்தான். அப்பாக்கள், தங்கள் பிள்ளைகளிடம் வெளிப்படையாகப் பேசுவது என்பதே கிடையாது. தாய் மட்டுமே பாலம். அப்படியே நேரடியாகப் பேசினாலும் திட்டுவதற்காக மட்டுமே...!

ஆனால், இப்பேச்சுக்களுக்கு எல்லாம் கதாநாயகனான அவனோ ஏதேதோ நினைத்தபடி அவர் அருகில் வந்தான். அவர் ஏறிட்டுப் பார்க்க,

"அப்பா... இதுநாள் வரைக்கும் உங்க ஆசைக்காக நான் ஏதோ வேண்டா வெறுப்பாகத்தான் வேலை தேடிட்டு

இருந்தேன்... ஆனால், எனக்குப் பிடிக்கலைப்பா... இது எனக்குச் சுமையா இருக்கு... என் வாழ்க்கை இது இல்லைப்பா... எனக்குப் பிடிச்ச... எனக்கு வர்ற ஒன்றைத் தான் செய்யப் போறேன்..." என்று அன்று வரை இல்லாத உறுதியுடன் கூற,

அவன் கூறியதைப் பார்த்து அதிர்ந்த மாணிக்கம், கல்பனாவிடம்,

"மறுபடியும் ஆரம்பிச்சுட்டியாடா... உன்னை எல்லாம் உட்கார வைச்சுச் சாப்பாடு போட்டா திமிரெடுத்துதான் அலைவே... டேய், உனக்குப் பிடிச்சது எல்லாம் உன் வயித்தை நிறைக்காதுடா. பணம்... பணம்தான் உன் வயித்தை நிறைக்கும். பெரிய இவனாட்டம் வியாக்கியானம் பேசுறதை விட்டுட்டு, வேலை தேடுற வழியைப் பாரு..." என்று கர்ஜிக்க,

அவனோ, "இல்லைப்பா... எனக்குப் பிடிக்க லைப்பா... உங்களுக்காக இவ்ளோ நாள் என்னை நானே சுருக்கிச் சுருக்கிக் கடைசியில் ஒண்ணுமே இல் லாமல் போயிடுவேன் போல இருக்கு... என் கனவும் லட்சியமும் வேறப்பா... என்னை நீங்க என்ன நினைச் சாலும் சரி..." உறுதியாகக் கூற,

மாணிக்கம், கல்பனாவிடம், "பார்த்தியாடி... உன் மகன் பேசுறதை! இவனை என்னதான் செய்யுறது...? இவன் அண்ணன் ராத்திரி பகல் பார்க்காமல் வேலை செய்யறான்... அதை நினைச்சுப் பொறுப்பு இருந்தா இவன் இப்படிச் செய்வானா?... எல்லாம் திமிருடி..." என்றவர், அவனிடம் திரும்பி,

"கடைசியாகக் கேட்கிறேன்... உன்னால் வேலைக்குப் போக முடியுமா, முடியாதா?..." என்று கேட்க,

அவனோ, "இல்லைப்பா... என்னால முடியலை... உங்களுக்காகத்தான் நான் இவ்வளவு நாள் செஞ்சுட்டு இருந்தேன். என்னமோ கட்டின பொண்டாட்டிக்குத் துரோகம் செய்யுற மாதிரி இருக்குப்பா... என் மனசில் ஒட்டவே மாட்டேங்குது... அதான்பா இந்த முடிவு..." என்று உறுதியாக நிற்க, மாணிக்கம் அவனை உறுத்து விழித்து, "என் பேச்சைக் கேட்டு இந்த வீட்டிலே இருந்தா இரு... இல்லை, வீட்டை விட்டு வெளியே போயிட்டே இரு..." என்று கூறி விட்டு, அவனை ஏளனமாக முறைத்தார்.

அவரின் பார்வை அர்த்தத்தைப் புரிந்து கொண்டவன் போல்,

"என்னப்பா... பயமுறுத்துறீங்களா? வீட்டை விட்டுப் போறது எனக்கு ஒண்ணும் புதிதல்ல.. 18 வயசிலேயே வீட்டை விட்டுத் துரத்தினவர்தானே நீங்க... அப்புறமா நீங்களே வந்து கூப்பிட்டீங்க... இப்போ அந்த மாதிரிக் கூப்பிடாதீங்க... நான் என் சொந்தக் காலில் நின்னு ஜெயிச்சுட்டுத்தான் வருவேன்..." என்று கூற,

இடையில் கல்பனா புகுந்து, "டேய்... திரும்பவும் இப்படித் தத்துப்பித்துன்னு உளறாதேடா... அவர் சொல்றது கோபமாகச் சொன்னாலும், அவர் சொல்றதில் என்னடா தப்பு...? உன் நல்லதுக்குத்தானே சொல்றோம்... அவசரப்பட்டு முடிவெடுக்காதேடா..." என்று மன்றாட, அவன் பதில் கூறும் முன் மாணிக்கம் அவன் பெட்டியை எடுத்து வந்து, வெளியே போட்டார்.

அதைப் பார்த்ததும், "என்னங்க... வேண்டாம்ங்க... என்ன இது...? இதெல்லாம் தப்புங்க..." என்று ஏதேதோ சமாதானம் சொல்லியும் அவர் ஏற்கவில்லை. அதைப் பார்த்துச் சிரித்தவன், "நீ ஏம்மா கவலைப்படுறே? ஒருநாள் நான் ஜெயிச்சுட்டு வருவேன்... அப்போ அவரே என்னை வீட்டுக்குள்ளேயே அழைச்சுப்பார்... அந்த நாள் வரும்..." என்று கூற,

மாணிக்கம், "பெட்டியைப் போட்டு அரை மணி நேரமாச்சு... இன்னும் என்ன கல்பனா உன் மகன் பேசிக்கிட்டு இருக்கான்...? போகச் சொல்லு..." என்று கர்ஜிக்க,

அவனும் கல்பனாவிடம், "அம்மா... வெறும் வயிறாப் போறேன்... ஒரு நாள் ஜெயிச்சு திரும்பி வருவேன்மா... திரும்பி வருவேன்..." என்று அந்தத் 'திரும்பி வருவேன்...' என்றதில் அழுத்தத்துடன் கூற, கல்பனா திருதிருவென விழிக்க, மாணிக்கம் அவன் சென்றதும் படால் என்று கதவைச் சாத்தினார்.

"டேய் மச்சான்... எங்கப்பா வழக்கம் போல் என்னை வீட்டை விட்டுத் துரத்திட்டாருடா..." என்று அந்த நடைபாதைப் பெஞ்சில், தன் கைபேசியில் சத்தம் போட்டு கூறிக் கொண்டிருந்தவனின் பக்கத்தில் அமர்ந்தான் நானி.

"என்னடா பண்றது...? சரி விடு... இதெல்லாம் எப்பவும் நடக்கிற விஷயம்தானே... சரி மச்சி... என் கிட்டே பேலன்ஸ் இல்லை. நான் வைக்கிறேன். முடிஞ்சா 10 ரூபாய் டாப் அப் பண்ணிடு..." என்று கூற,

அதற்குள் மறுமுனை வைத்து விட்டது போலும்.

"வைச்சிட்டானா..? வைச்சிட்டானா..? அதானே, 10 ரூபாய் கேட்டா தலை தெறிச்சு ஓடிருவானுங்களே.... கஞ்சப் பசங்க..." என்று திட்டியவாறு கைபேசியை அணைத்தவனைப் பார்த்துச் சிரிப்பை அடக்கும் வழி தெரியாமல் அடக்கினான் நானி.

'பரவாயில்லையே...! இந்த உலகத்துலே நம்மளை மாதிரி நிறையப் பேர் இருக்கானுங்க போலவே...' என்று அசட்டு நிம்மதி தோன்ற, அவனிடம் சென்று நின்றான் நானி.

அவனை நிமிர்ந்து பார்த்த அவன் முகத்தில் கேள்வி இருக்க,

"ஹாய்... என் பேர் நானி. எனக்கு உங்களைப் பத்தி எல்லாமே தெரியும்... உங்களால் எனக்கு ஒரு உதவியாகணும்... செய்ய முடியுமா...?" என்று அவன் முன் கை நீட்டிக் கேட்க,

ஏற்கெனவே எரிச்சலில் இருந்தவனிடம் அவன் தலையும் புரியாமல் வாலும் புரியாமல் பேசவும், "யோவ்... நான் ஏற்கெனவே எரிச்சலில் இருக்கேன்... ஓடிப் போயிடு. காலங்காத்தாலே அப்பா கிட்டே திட்டு வாங்கிட்டு பெட்டியைத் தூக்கிட்டு வந்து உட்கார்ந் திருக்கேன்... வந்துட்டான் டிஸ்கஷனுக்கு..." என்று ஒருவித அலட்சியத்துடன் புலம்ப,

நானி கையை மடக்கித் தன் புன்னகை மாறாமல், "இது உன்னால் செய்ய முடியுற உதவிதான் தம்பி..." என்று குறும்பாகக் கூற,

அவனோ, "இப்போதைக்கு என் கிட்டே இருக்கிறது சட்னியான கிட்னிதான்... ஓஹ்... கிட்னி திருட வந்தவனா நீ..." என்ற எகத்தாளமாகக் கூற,

நானி பொறுமை இழந்து, "டேய்... நான் சொல்ல வந்ததைக் கேட்க மாட்டியா? உங்கப்பா உன்னை வீட்டை விட்டு அனுப்பினதில் தப்பே இல்லை... உன்னை மாதிரி அறுந்த வாலை எல்லாம், யார் வீட்டில் வெச்சிருப்பா...? ஒரு உதவி கேட்கணும்னுதானே சொல்றேன்... பெரிய இவனாட்டம் பேசுறே...?" என்று படபடவெனப் பொரிய, ஒரு வழியாக அமைதியானவனிடம் சிறு குற்ற உணர்ச்சி யும் தோன்றியது.

"என்ன உதவி...? சீக்கிரம் சொல்லுங்க...!" என்று கூற,

நானி, "ஒரு பொண்ணுக்குப் பரத நாட்டியம் சொல்லித் தரணும்..." என்று கூற, அதைக் கேட்டுக் கிட்டத்தட்ட அதிர்ந்தே போனான் மற்றவன்.

அவன் அதிர்ச்சியைப் பார்த்து, நானியின் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது. இப்போது மறுபடியும் நானி, அவன் முன்பு கை நீட்டி,

"ஹாய்... ஐ ஆம் நானி..." என்று அறிமுகப்படுத்த,

அவனோ இப்போது எரிந்து விழவில்லை. எள்ளி நகையாடவில்லை. மாறாக, மரியாதையுடன் அவன் கையைப் பற்றிப் பதிலுக்குக் குலுக்கி,

"ஹாய்... ஐ ஆம் நட்ராஜ்... அலைஸ் நட்டு..." என்றான்.

"எப்படி சார் உங்களுக்கு என்னைப் பத்தித் தெரியும்...? டான்ஸ் சின்ன வயசிலேயே என் கூடப் பிறந்த பொறப்பு மாதிரி சார்... என் தாத்தாதான் சார் கத்துக் கொடுத்தார்.. அவர் பேர்தான் எனக்கு வைச்சாங்க நடராஜ்னு... இப்போ அவர் இல்லை... பரதம் மொத்தத் தையும் கத்துக்கிட்டேன். அதுமட்டுமில்லை சார் ஹிப் - ஹாப், டாங்கோ, சால்சா கூடத் தெரியும் சார்... கத்துக்கிறதை விட கத்துக் கொடுக்கிறதுதானே சார் புண்ணியம்... யாருக்கு சார் கத்துத் தரணும்...?" என்று அவன் விவரங்கள் கேட்க ஆரம்பிக்க, நானியும் கூறிக் கொண்டே வந்தான்.

நானியும் நட்டுவும் பிறகு இயல்பாகப் பேச ஆரம்பித்திருந்தனர்.

ஆறடி உயரத்தில், வெளிர் நிறத்தில், நெடுநெடு உடல் வாகுடன் நாட்டியக்காரர்களுக்கே உள்ள தேகத்துடன் இருந்தான் நட்டு. வாய் லொடலொடவென விடாமல் வார்த்தைகளை அரைத்துக் கொண்டிருந்தது. அவன் சுறுசுறுப்பும் பேச்சும்தான் அவனை நானிக்கு ரசிக்க வைத்தது.

நானி, "நட்டு... எனக்கு உன்னைப் பத்தி எப்படித் தெரியும்னு இப்போ முக்கியமில்லை. உன்னை மாதிரி டான்சை உயிரா நினைக்கிறவதான் அந்தப் பொண்ணு... கிட்டத்தட்ட முடமாவே ஆகி, இப்போ அதிலிருந்து பீனிக்ஸ் பறவை மாதிரி எழுந்து வந்திருக்கா... அவளை ஜெயிக்க வைக்கிறது உன் பொறுப்பு..." என்றபடி அவளின் கடந்த காலத்தை அவனிடம் கூற ஆரம்பிக்க,

கேட்டு முடிந்தவனின் முகம் இருண்டு போயிருந்தது.

"சார்... அவங்களோட மொத்த வாழ்க்கையையும் என் கிட்டே ஒப்படைக்கிறீங்களே சார்... இதை நம்பித் தானே சார் அவங்க இருக்காங்க... நான் ஒரு ஃபெயிலியர் சார்... இப்போதான் தைரியம் வந்து, என் கண்ணை நோக்கிக் காலெடுத்து வெச்சிருக்கேன்... என்னை நம்பி..." என்று தயங்க,

நானி சிரித்தபடி, "அவங்கம்மா என்னை நம்பி ஒரு பொறுப்பை கொடுத்தாங்க நட்டு, அவளை நடக்க வைக்கணும்னு... நான் அதுக்குத் தூண்டுகோலாத்தான் இருந்தேன்... அவளே நடக்க ஆரம்பிச்சிட்டா... அவங்க என்னை நம்பித் தந்தபோது நான் உன்னை நம்பித் தர மாட்டேனா...?" என்று கூறிவிட்டுப் பின், "எனக்கு நம்பிக்கை இருக்கு... அவ வாழ்க்கையே உன்னை நம்பித்தான் இருக்கு என்ற பயம் உனக்கு இருக்கில்லை.. நீ கண்டிப்பா அவளை ஜெயிக்க வைப்பே... உலகத்தில் பாதி பேர் ஃபெயிலியராத்தான் வாழ்க்கையைத் துவக்கு றாங்க... ஆனால், ஃபெயிலியரா செத்தாத்தான் தப்பு..." என்று கூற,

நட்டு இப்போது நம்பிக்கையுடன், "கண்டிப்பா என்னால் முடிஞ்சதைச் செய்யறேன் சார்... எனக்கே என் மேலே நம்பிக்கை இல்லாதப்போ, என்னை நம்பி இவ்ளோ பெரிய பொறுப்பைக் கொடுக்கிறீங்க... அதைக் கண்டிப்பா நிறைவேத்துவேன் சார்... பணத்துக்காக இல்லை சார்... இது ஒரு வாய்ப்பு..." என்று நெகிழ்ச்சி யாகக் கூற,

நானி, "ஓ... நோ... சென்டிமென்ட்ஸ் வேண்டாம். டு யுவர் பெஸ்ட் அன்ட் லீவ் தி ரெஸ்ட்.." என்று புன்னகையுடன் கூறி விட்டு,

"ஆமா... வீட்டை விட்டு வந்துட்டியே... எங்கே தங்குவீங்க...? சாப்பாட்டுச் செலவெல்லாம்..." என்று கேட்க,

நட்டு கலகலவெனச் சிரித்து, "இதில் என்ன சார் சந்தேகம்... வீட்டில்தான்..." என்று கூற,

நானி, "என்ன சொல்றே நட்டு...?" என்று புரியாமல் கேட்க,

நட்டு, "அதை ஏன் சார் கேட்கிறீங்க... எங்கப்பாவுக்கு டான்ஸ் என்றாலே பிடிக்காது. ஆனா ஊன்னா கோபம் வந்தா வீட்டை விட்டுப் போன்னு சொல்லிடுவார்... இது இரண்டாவது தடவை... முதல் தடவையே எனக்கு ட்ரெயின் ஆகிடுச்சு..." என்றவன், "எங்க வீட்டுக்கு வாங்க சார்... காட்டுறேன்.." என்று கூறி விட்டு, நானியைப் பக்கத்தில் இருந்த தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

முன் பக்கத்தில் அப்போதுதான் கன்னாபின்னா வென்று கத்தி விட்டு மாணிக்கம் சென்றார் என்பதால், யாரும் அறியாமல் பின்பக்கம் சென்று கிச்சன் ஜன்னல் பக்கத்தில் நின்று கொண்டு,

நானியிடம், "நீங்க கொஞ்சம் மறைஞ்சு நில்லுங்க சார்... உங்களைப் பார்த்தா என் அம்மா ஜெர்க் ஆகிக் கத்திடுவாங்க..." என்றவன், உள் நோக்கி,

"அம்மா.. தாயே... நான் நட்டு வந்திருக்கேன்...

"நான் நட்டு வந்திருக்கேன்..." என்று குரல் கொடுக்க,

"தறுதலை.... தண்டச்சோறு.. வந்துட்டான்.. உங்கப்பா சொல்றதில் ஒரு தப்பு இல்லைடா... குசும்பு ஜாஸ்திதான் உனக்கு... பெரிய இவனாட்டம் போனே... இப்ப எதுக்குடா வந்தே?" என்று கத்தியபடி வந்தாலும், தட்டில் பொங்கலையும் சட்னியையும் வைத்துத்தான் எடுத்து வந்தார்.

"இதில் வேற எதிர்நீச்சல் படத்திலே வர்ற நாகேஷ் மாதிரி, நட்டு வந்திருக்கேன்... போல்ட்டு வந்திருக் கேன்னுட்டு... சாப்பாடு வேணும்னு கேட்கக் கூட கௌரவம்..." என்று முணுமுணுத்தபடி அவனிடம் கொடுக்க, அதை வாங்கிச் சாப்பிடத் துவங்கிய நட்டு,

"சாப்பிடும்போது திட்டாதேம்மா... அதான் நான் போகும்போதே "திரும்பி வர்றேன்..." என்று சிக்னல் காமிச்சுட்டுத்தானே போனேன். சரி கொடவுன் சாவி கொடு... நான் அங்கேதான் தங்கப் போறேன்..." என்று கூற,

"முருகா, தலையெழுத்து... 18 வயசிலேயே தெளிஞ்சவன்டா நீ... இந்தா நீ கேட்பேன்னுதான் எடுத்து வைச்சேன்..." என்றபடி அவனிடம் சாவியைக் கொடுத்து விட்டு,

"டேய்... ரொம்ப கஷ்டமாக இருந்தால் வந்துருடா... உங்கப்பா எப்படியும் ஒரு மாசத்தில் மனசு மாறிடுவார். அதுக்கு முன்னாடி கஷ்டமாக இருந்தால் வந்திரு... கோபத்தில் பேசாமல் இருக்காதே..." என்று கூற,

நட்டு, "மூடிய ரைஸ் மில் நம்ம கிட்டே இருக்கிறது எவ்வளவு பெரிய வசதி. அப்பாக்குத்தான் நான் தேங்க்ஸ்

சொல்லணும். நீ கவலைப்படாதேம்மா... எனக்கு யார் மேலேயும் கோபம் இல்லை. நான் எங்கே போகப் போறேன்...? டோண்ட் வொர்ரி... பி ஹேப்பி..." என்று அவரைத் தேற்ற,

அவன் தலையைக் கலைத்து விட்ட கல்பனா, "உன் வெள்ளை மனசுக்கு நீ நல்லா வருவேடா... இதுவும் நல்லதுக்குத்தான்... உனக்குப் பிடிச்ச விஷயத்தை நீ செய்யப் போறே... கண்டிப்பா ஜெயிப்பே பாரு..." என்று கூற,

நட்டு நெஞ்சில் கை வைத்துத் தலை கவிழ்ந்து, "நன்றி தாயே... தங்கள் வாழ்த்துக்களுக்கு நன்றி..." என்று கூற,

"போடா போக்கிரி... கிளம்பு... உங்க அப்பா இப்போ தான் கத்திட்டுப் போறார்... கொஞ்ச நாள் அவர் முகத்தில் முழிக்காதே..." என்று கூற,

நட்டுவும், "சரிம்மா... நான் கிளம்புறேன்..." என்று கூறிவிட்டுச் செல்ல எத்தனிக்க, கல்பனாவும் உள்ளே செல்ல, உள்ளிருந்து சிரித்தபடி வந்தான் நானி.

"அம்மா கிடைக்கிறதே பொக்கிஷம்தான் நட்டு..." என்று கூறியவன், எதையோ நினைத்து முகம் சுருங்கிய பின், "சரி, நட்டு... உங்க கொடவுன் அட்ரஸ் எனக்கு அனுப்பிடுங்க... நாளைக்கே நான் அவளைக் கூட்டிட்டு வரேன்..." என்று கூற,

நட்டு, "சரிங்க சார்... கண்டிப்பா நாளைக்கே ஆரம்பிக்கலாம்..." என்று கூறி விடை பெற, நானியும் கிளம்பினான்.

ஜானகி, நட்டு இவ்விரண்டு பேர் வாழ்க்கைச் சக்கரமும் ஒரே அச்சாணியில்தான் சுழல்கிறது. அந்த அச்சாணி அவர்களின் சக்கரத்தைப் பலப்படுத்துமா? இல்லை பலவீனப்படுத்துமா?

18

"அங்கிள்... ஏக்கு உன்னைப் பிச் சிருக்கு... நானும் பெய்ய டாக்டர் ஆவேன்..."

"அங்கி... தெதி பியர் பாரு..." என்ற இரண்டு வயது மழலையின் குரல் அவன் செவியை நிறைக்க,

"ஸ்வாதீ..." என்று பதறி அடித்தபடி எழுந்தான் நானி.

அவன் கத்தலைக் கேட்டுப் பதறி ஓடிவந்த குணா,

"என்னடா... ஏன் கத்தினே...?" என்று அவனருகில் வந்து நின்று கேட்க,

அதற்குள் தன் சுயநினைவிற்கு வந்த நானி, "இல்லை... இல்லை... கனவு..." என்று முனக, அதுவரை தன் மகனை அதுமாதிரி உணர்ச்சிகரமான நிலையில் பார்த்தறியாத குணாவோ அவன் அருகில் அமர்ந்து ஆதரவாக,

"நானி... நீ எதையோ மனசில் பூட்டிப் பூட்டி வைச்சுக் குமையுற... அதைச் சொல்லு..." என்று அமைதியாகக் கேட்க,

நானி ஒன்றும் பேசவில்லை. ஆனால், அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பதிலாகக் குணா, "பாரு நானி... என்னைப் பாரு... அப்பா கிட்டே என்ன தயக்கம்...? சொல்லு..." என்று மறுபடியும் கூற,

அதைக் கேட்ட நானியோ, "நான் சொல்ல வந்த நேரத்தில் நீங்க கேட்கலை... நீங்க கேட்ட நேரத்தில் சொல்லியும் ஏதும் ஆகப் போறதில்லை..." என்று விரக்தியாகச் சிரித்தபடி எழ,

அந்த இரண்டு வருடங்களில், முதன் முறையாகத் தன் மகனைப் பார்த்து ஆடித்தான் போனார் குணா.

அன்று மாலை வழக்கம் போல் பூங்காவில் நடைப் பயிற்சி மேற்கொண்டிருந்தனர் ஜானுவும் ரேணுகாவும். அப்போது அங்கே வந்து சேர்ந்த நானி, அவசரமாக ரேணுகாவிடம் வந்து,

"உங்க பொண்ணை நான் கொஞ்சம் கிட்னாப் பண்ணிக்கிறேன்..." என்று கூறி விட்டுச் சட்டென்று ஜானகியை அலேக்காகத் தூக்கிக் கொண்டு போய்க் காரின் உள்ளே தள்ள,

"அம்மா... அம்மா... டேய்... என்னை விடு... நானி, எனக்குப் பயமா இருக்கு..." என்று ஜானகி கத்துவாள் என்று நானி எதிர்பார்த்திருக்க, அவள் அப்படி ஒன்றுமே கூறாமல் காரில் உட்கார்ந்தபடி,

"அம்மா... டாடா. வந்துர்றேன்..." என்று தன் அன்னையிடம் விடை கொடுத்தபடி இருக்க, அதற்கேற்ப ரேணுகாவும் சிரித்தபடி கையசைக்க,

நானி அதிர்ந்து, "ஏய்... உன்னை டெம்போ வெல்லாம் வெச்சுக் கடத்துறேன்... நீ என்னடான்னா

கொஞ்சம் கூடப் பயப்படாமல் டாடா காட்டிட்டு இருக்கே? வர வர உங்களுக்கு நானின்னா பயமே இல்லாமல் போச்சுடி... இரு வெச்சிக்கிறேன்..." என்று புலம்ப,

ஜானகி, "அடச்சீ... வெச்சிக்கிறேன்... தைச்சிக்கி றேன்னு அசிங்கமாப் பேசாதே... புலம்பாமல் வண்டியை ஓட்டு... ஒரு தடவை ரெண்டு தடவை செய்தால் பயப்படலாம்... இதையே பொழைப்பா வெச்சிண்டு இருக்கே... பயமெல்லாம் மரத்துப் போச்சு..." என்று கூற,

நானி இப்போது கூர்மையான பார்வையுடன், "ஓஹோ... அப்படின்னா... நாம் எதுக்காகப் போறோம்னு உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே...?" என்று கேட்க,

ஜானகி, இல்லை என்பது போல் தலையாட்ட,

"அப்படின்னா இன்னும் நானியைப் பத்தி முழுசா புரிஞ்சுக்கலைன்னுதான் அர்த்தம். அது அவ்வளவு சுலபமும் இல்லை. என்னைப் பத்தி எனக்கே சரியாத் தெரியாது..." என்று கூற,

ஜானகி தலையில் அடித்துக் கொண்டு, "இதெல்லாம் ஒரு பெருமையா? ஆமா... அன்னைக்கு என்ன ரொம்ப கவலையா பேசிண்டு இருந்தே... செத்த நாழியில் எனக்கு நீயா அதுன்னே சந்தேகம் வந்துச்சு... ஆமாம், உனக்குப் பிடிச்ச விசயம் என்ன... மருத்துவத் தொழில்தானே... அதை ஏன் விட்டே..?" என்று கேட்க,

நானி ஒன்றும் பேசாமல் ரோட்டிலேயே தன் கவனத்தைப் பதித்து இருக்க,

ஜானகி, "அப்படியே கவனமா இருக்கிறதா காமிக்காதே... உன் மனசில் உள்ளதை நீயா வாயைத்

திறந்து சொன்னால்தான் தெரியும்... நாங்க ஒண்ணும் தேவ புருஷர்கள் இல்லை... அப்படியே படம் பிடிச்சுப் பார்க்க..." என்று அவன் வாயைக் கிளறப் பார்க்க, நானியைத் தோற்கடிக்க அவளால் முடியுமோ...?

நானி பதிலுக்கு, "நீயும்தான் மூணு மாசம் முன்னாடி வரை உனக்கு என்ன நடந்துச்சுன்னு வெளியே சொல்லாமல் இருந்தே... நான் அதை வெளிக் கொண்டு வரலை... அதே மாதிரி என் வாயிலிருந்து வாங்கறது உன் சாமர்த்தியம்..." என்று நக்கலாகக் கூற,

ஜானகி, "நான் உன் கிட்டே இருந்து உண்மையை வாங்குறேனா இல்லையா பாரு... அப்போ தெரிஞ்சுப்பே இந்த ஜானகியைப் பத்தி..." என்று கூற,

நானி, "பார்ப்போம்... என் கிட்டே இருந்து உண்மையை எப்படி வாங்கறேன்னு...." என்று பதிலுக்குச் சவாலாகவே பேசினான்.

ஆனால், பாவம் அவனுக்குத் தெரியவில்லை... இன்னும் பதினைந்து நாட்களில் நாமே அவளிடம் கூறப் போகிறோம் என்று...!

இப்படியாக வேடிக்கைப் பேச்சுப் போய்க் கொண்டிருக்க, சட்டென்று ஞாபகம் வந்தவளாய், "ஆமா... நாம் இப்போ எங்கே போறோம்...?" என்று கேட்க,

நானி கலகலவெனச் சிரித்து, "பரவாயில்லையே... சீக்கிரம் கேட்டுட்டே... சொல்றது என்ன, பார்க்கவே செஞ் சிக்கோ..." என்றபடி வண்டியை நிறுத்த, அவளும் கீழே இறங்க, அவன் காரைச் சுற்றியபடி அவள் அருகில் வந்து, "எனி ஹெல்ப் ஜான்....?" என்று சிரித்தபடி கேட்க,

அவளோ, "வேண்டாம் சாமி... விழுந்தாலும் பரவா யில்லை, நானே விழுறேன்... நீ தள்ளி விட்டு விழ வேண்டாம்..." என்று கூறியபடி மெதுவாக நடக்க ஆரம் பித்தாள்.

அந்தக் கொடவுனைப் பார்த்து அவளுக்குச் சற்றுப் பயமாகவே இருந்தது.

"நானி, இதென்ன...? எனக்குப் பயமா இருக்கு..." என்று பயப்பட,

நானி ஒன்றும் கூறாமல், சிரிப்பை அடக்கியபடி ஷட்டரைத் தூக்கி விட்டு உள்ளே செல்ல, "ஹாய்... வாங்கோ... வாங்கோ..." என்றபடி மேலிருந்து தொபுகடீர் என்று குதித்த நட்டுவைப் பார்த்துப் பதறி,

"நானீ..." என்று அவன் பின்னே ஒளிந்து கொள்ள,

நட்டு அதைப் பார்த்துக் கலகலவெனச் சிரிக்க,

நானி, அவளை இழுத்துப் பிடித்து அவள் காதோரம்,

"சே... என்ன சான்ஸ்.... இதுக்காகவே உன்னைப் பயமுறுத்தலாம் போலயே... எனக்குப் பிடிச்ச கடலைமாவு வாசனை.... எவ்வளவு நாளாச்சு...?" என்று அவளை முகர,

"ச்சீ..." என்றபடி அருவருத்து விலகி நின்றாள் அவள்.

அதைப் பார்த்து நட்டு, "என்ன சார்... ரொம்பப் பயந்தவங்களா இருக்காங்களே...? நமக்கு ஒத்து வருமா?" என்று கேட்க,

நானியும் மர்மச் சிரிப்புடன், "ஒத்து வராட்டி என்ன... ஒத்துக்க வெச்சிருவோம்... இதென்ன பெரிய விஷயமா...?" என்று கேட்க,

நட்டு, "நீங்க சொன்னா சரிதான் சார்..." என்று கூற,

இப்படி இவர்கள் இருவரும் மறைமுகமாவே பேசிக் கொள்ள, ஜானகிக்கு உள்ளூரக் கிலி பிடித்தது.

"நீங்க ரெண்டு பேரும் எதைப் பத்திப் பேசுறீங்க... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு..." என்று நடுங்கியபடியே கூற,

நானி, "ம்ம்... உன்னை அரேபியா ஷேக்கிற்கு விற்கலாமா இல்லை ஆப்பிரிக்கா நீக்ரோவிற்கு விற்க லாமான்னு பேச்சு..." என்று நமட்டுச் சிரிப்புடன் கூற,

ஜானகிக்கு நிஜமாகவே பயம் தொண்டையை அடைக்கக் கண்களில் நீர் விழவா வேண்டாமா என்று கேள்வி தொக்கி நிற்க,

நட்டுதான் முதலில் பாவப்பட்டான்.. "சார், பாவம்... ரொம்பப் பயப்படுறாங்க... சின்னப் பிள்ளையா இருக்காங் களே...?" என்று ஆதரவாகக் கூறுவது போல் தோன்றி னாலும், முகத்தில் விஷமம் தொக்கித்தான் நின்றது.

இப்போது நானி, ஜானகியிடம், "இப்போவாவது இந்த நானியைப் புரிஞ்சுக்க முடியாதுன்னு ஒத்துக் கிறியா...?" என்று நக்கலாகக் கேட்க,

ஜானகி, அவனை முறைக்க, அந்தப் பார்வை ஆயிரம் கெட்ட வார்த்தைகளைச் சொல்லாமல் சொல்ல, நட்டு அதைப் பார்த்துச் சற்றே ஆச்சரியப்பட்டுத்தான் போனான்.

"சார்... செமையா எக்ஸ்பிரஷன் கொடுக்கிறாங் களே... மனசை அப்படியே படம் பிடிச்சுக் காட்டுதே... என் வேலை சுலபம்தான் போல..." என்று அவளுக்காகப் பரிந்துரைக்க,

ஜானகிக்கு ஏதோ புரிந்தது போலவும் புரியாதது போலவும் இருந்தது.

அவள் பார்வை துயரமாக மேலெழும்ப, நானி அதற்கு மேல் அவளை வருத்த வேண்டாம் என்று நினைத்தோ என்னமோ அவள் தலையில் தட்டி, "பார்... இவர்தான் உன் டான்ஸ் மாஸ்டர்... உனக்கு நடனம் கத்துக் கொடுக்கப் போறவர்... காலைத் தொட்டு நமஸ்காரம் பண்ணிக்கடி குழந்தே..." என்று புதிரை விடுவிக்க,

ஜானகிக்கு ஆறுதல், ஆவேசம், அசூயை போன்ற அனைத்து 'அ' உணர்வுகளும் வரிசையாக வெளிவர ஆரம்பித்தது.

அவனை உறுத்துப் பார்க்க, நானியோ, "என்ன பார்க்கிறே...? நான்தான் அன்னைக்கே சொன்னேனே... நீ டான்ஸ் கத்துக்கிட்டுதான் ஆகணும்... வேற வழி யில்லை..." என்று கூற,

ஜானகி, "உன் இஷ்டத்துக்கு நான் எதுக்கு ஆடணும்? எனக்குப் பிடிக்கலை நானி, விடு..." என்று செல்ல எத்தனிக்க, அவள் கையைப் பிடித்துத் தடுத்த நானி, "இதோ பாரு... வாழ்க்கையில் எல்லோருக்கும் இரண்டாம் வாய்ப்பு கிடைக்கிறதில்லை... உனக்குக் கிடைச்சிருக்கு... உனக்குள்ளே இருக்கிற நடனம்தான் உன்னை நடக்க வெச்சிருக்கு... அதை ஞாபகம்

வெச்சிக்கோ... இல்லைன்னா நீ இவ்ளோ சீக்கிரம் சரியாகியிருக்க முடியாது.

"ஆடின காலும் பாடின வாயும் சும்மா இருக்காதுன்னு சொல்லுவாங்களே... அது இதனால் தான்... உனக்கு என்னைப் பத்தி நல்லாத் தெரியும்... அப்புறம் உன் இஷ்டம்..." என்று கூறி விட்டு, வெளியே சென்று ஷட்டரைத் திறந்து விட்டு, வெளியே சென்று அமர்ந்து விட, ஜானகி அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

ஏதோ முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் குழந்தை போல், அவள் அடம் பிடித்து நின்றிருந்ததைப் பார்த்த நட்டுவிற்குப் பாவமாக இருந்தது. ஏனோ தெரியவில்லை, அவளைப் பார்த்ததும் அவனுள் ஒரு தோழமையுணர்வு தோன்றியிருந்தது. அதனால் அவள் அருகே சென்று,

"ஜானகி... உன்னை எனக்குப் புரியுது... உலகத்தில் ஊனமில்லாதவங்க, ஊனப்படாதவங்க யாருமே இல்லை. அதுக்காக நீ உன்னையே தாழ்த்திக்கிறது தப்பு... நடனம் ஒரு தவம், ஒரு புதையல். அதனாலே ஜெயிச்சவங்கதான் உண்டு. வீழ்ந்தவங்க இல்லை.

"பரதம் என்று இல்லை... எந்த ஒரு கலையுமே அப்படித்தான்... அதுவால் எப்பவாவது நமக்கு நன்மைதான் உண்டாகும்... நான் இவ்வளவு சீரியஸாகப் பேசுறது, இதுதான் முதல் தடவை. அது கூட உனக்காகத்தான் ஜானகி... யோசி..." என்று புத்தியுரைக்க,

அவளோ நின்ற இடத்தில் அப்படியே நிற்க,

நட்டு, "இதைப் பாரு... நான் எப்பவும் மனசு சரியில்லைன்னா இந்தப் பாட்டுதான் கேட்பேன்... எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டுதான்... ஆனால், தீவிர பக்தன் எல்லாம் கிடையாது. ஆனால், இந்தப் பாட்டைக் கேட்டால் எனக்கு அப்படியே உலகத்தையே ஜெயிச்சிட்ட உணர்வு வரும்... உனக்கென்னடா மடையா குறைச்சல் என்று யாரோ தலையில் தட்டுற மாதிரி இருக்கும். அதுதான் தெய்விக உணர்வா... தெரியலை.

"இதைக் கேளு... உனக்குள்ளே இன்னும் பரதம் இருந்தால், உன்னால் இந்தப் பாட்டைக் கேட்டு அமைதியாக இருக்க முடியாது," என்று கூறிக் கொண்டே அங்கு வைத்திருந்த எம்.பி. 3 ப்ளேயரில் அந்த சி.டி.யைப் போட, அது கீதமாக ஒலித்தது.

குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா!
கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா...
கண்ணுக்கு தெரியாமல் நின்றாலும் எனக்குக்
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா!
வேண்டியதைத் தந்திட வெங்கடேசன் நின்றிருக்க
வேண்டியது வேறில்லை மறை மூர்த்தி கண்ணா!
மணிவண்ணா! மலையப்பா! கோவிந்தா, கோவிந்தா!

என்ற எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மாவின் குரல், அந்த லயம், அந்த பாவம், அந்த அறையை மட்டுமில்லை அவள் மனது முழுவதும் நிறைந்தது.

அந்த வார்த்தைகள், அந்தக் குரல், அவளை ஏதோ செய்ய, கால்கள் அந்தத் தாளத்திற்கு ஏற்பத் தன்னை அறியாமலே துடிக்க, அவள் அதை அடக்க வழி தெரியாமல் தரையோடு தரை வைத்து அமிழ்த்தினாள். ஆனாலும் முடியவில்லை... தரையோடு வைத்து அழுத்தியதால், வலி காலில் இருந்து முதுகெலும்பு வரை சுரீரென்று தைத்தது. ஆனால், அதை விடாமல் அழுத்த, அதைப் பார்த்த நட்டு,

"உன்னால் முடியாதுன்னு எனக்குத் தெரியும் ஜானகி... நீ என்ன நினைக்கிறியோ அதைச் செய்..." என்று கூற,

ஜானகிக்கு அந்த சமயம் நினைவில் வந்தது, நானி... நானி... அவன் மட்டுமே... எனவே கணமும் தாமதிக்காமல் அவனிடம் ஓடினாள்.

கதவின் பக்கத்தில் இருந்த படிக்கட்டில் அவன் அமர்ந்திருக்க,

அவன் காலடியில் சென்று அமர்ந்து, "நானி... எனக்கு முடியலை... நானி, பயமா இருக்கு... நானி... என்னாலே முடியுமா நானி...? நான்... நான்... எனக்குக் கால் எதுவோ பண்ணுது நானி... வலிக்காதா நானி...?" என்ற பல கேள்விகளுடன் அவன் முகம் பார்க்க,

நானி, தன் புன்னகை மாறாமல் கூறியது ஒன்றே ஒன்றுதான்.

"என் கிட்டே கேட்காதே... உனக்குள்ளே கேளு. இந்தக் கதவுக்கு அந்தப் பக்கம் ஒரு வாழ்க்கை, இந்தப் பக்கம் ஒரு வாழ்க்கை உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கு

ஜான்... அந்தப் பக்கம் போனால் இப்போதைக்கு வலி... வேதனை எல்லாம்தான் இருக்கும். ஆனால், உனக்குன்னு ஒரு அடையாளம் உண்டாக்கிக்கலாம். இந்தப் பக்கம் நீ வந்தால் நான் உன்னைக் கண்டிப்பாக வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறேன்... ஆனால், அவ்வளவு தான்... அத்தோடு உன் வாழ்க்கை முடிஞ்சிடும்..." என்று கூற,

ஜானகி நிமிர்ந்தாள். அவனை ஒரு பார்வை பார்த்தாள். அவள் கண்களில் இப்போது குழப்பமில்லை... பயமில்லை... தெளிவாக இருந்தது அவள் பார்வை... அலை பாயவில்லை. உள்ளே சென்றாள். அவள் சென்றதும் நட்டு அதிர்ந்து பாட்டை நிறுத்தியிருக்க, அவனருகே சென்றவள் பாட்டை மறுபடியும் ஓட விட்டு,

அவனிடம், "நான் உங்க கிட்டே நடனம் கத்துக்கிறேன்... என்ன ஆனாலும் பரவாயில்லை... என் முடிவிலிருந்து நான் பின் வாங்க மாட்டேன்... இது சத்தியம்..." என்று கூற,

நட்டு, அவளை மரியாதையுடனும் ஒருவித ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்க... ஜானகி அவனைப் பார்த்த பார்வையில் தீர்க்கமிருக்க... அவள் முடிவை அவள் வாயாலேயே அறிந்த நாணியின் பார்வையில் அமைதி இருக்க... பின்னணியில் அந்த மாயக் கண்ணனின் பாட்டு தன் முழு வீரியத்துடனும் லயிப்புடனும் ஒலித்து மாயங்கள் புரிந்து கொண்டிருந்தது.

திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா!

உன்னை மறை ஓதும் ஞானியர் மட்டுமே காண்பார்
உன்னை மறை ஓதும் ஞானியர் மட்டுமே காண்பார்!
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா!
குன்றின் மேல் கல்லாகி நிற்கின்ற வரதா!
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா!
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா!
மணிவண்ணா! மலையப்பா! கோவிந்தா கோவிந்தா!

அந்த மாயன் அவர்கள் மூவரின் வாழ்விலும் ஒளி புரிவானா?

## 19

"அம்மா... நான் உன்னிடம் சொல்லாமல் இருந்தது தப்புதான்மா... என்னை மன்னிச்சுடு... ஏன்மா என் மேல் கோவிச்சுக்கிற...?" என்று அந்த நாளில் நூறாவது முறையாகக் கெஞ்சிக் கொண்டிருந்தாள் ஜானகி.

நட்டுவிடம் நடனம் கற்றுக் கொள்ளப் போவதாகக் கூறிய ஜானகி, அன்று, அந்த நவராத்திரி அன்று, விவேக் தன்னிடம் தவறாக நடந்து கொண்ட காரணத்தையும் கூறி விட, அப்போதிலிருந்து முகம் மாறிக் கனன்று கொண்டிருந்தார் ரேணுகா.

ஜானகியும் தன்னால் முடிந்தவரை சமாதானப் படுத்த,

திரும்பி அவளை ஒரு பார்வை பார்த்த ரேணுகா, "ஏன்டி, அந்த நானி கிட்டேயும் நட்டு கிட்டேயும் நீ பரதம் கத்துக்கிட்டது... விவேக் தப்பா நடந்துக்கிட்டது

எல்லாத்தையும் சொல்ல முடியறது... ஆனால், பெத்த அம்மா கிட்டே சொல்ல முடியலை இல்லை... என் மேல் நோக்கு இருக்கிற நம்பிக்கை இவ்ளோதான் இல்லை..." என்று ரேணுகா வெகுண்டு கேட்க,

ஜானகி பதிலுக்கு அவரைக் கெஞ்சலாக ஒரு பார்வை பார்த்து, "அம்மா... நானா ஒண்ணும் நானி கிட்டே சொல்லலை... அவனாகத்தான் என் வாயைப் பிடுங்கினான். அவன் தான் நட்டு கிட்டேயும் சொன்னான். இதை நான் எப்படிம்மா என் வாயாலே சொல்றது...? என்... என்னால் முடியலைம்மா..." என்று அன்றைய நாளின் நினைவுகளில், அவள் குரல் தழுதழுக்க அவளைப் பார்த்த ரேணுகாவின் தாய் மனம், சற்றே இளகினாலும்,

"சரி, விவேக் பத்திச் சொல்ல வேண்டாம்... விடு... ஆனால், உனக்குப் பரதம் தெரியும்னு ஏன் சொல் லலை...? நீ முன்னாடியே என்னிடம் சொல்லியிருந்தால் என் தலையை வெட்டிப் போட்டாலும் உங்கப்பா கிட்டே போராடி உன்னைக் காப்பாத்தி இருப்பேனே... இப்படி உன் தலையில் மண்ணை வாரிப் போட்டுட்டியேடி பாதகி..." என்று ஆற்றாமையில் குமுற, அவரைக் கூர்மையாய்ப் பார்த்த ஜானகி,

"அம்மா, எனக்கு அப்போ அந்த அவப் பெயரை விட அப்பா கிட்டே நான் பரதம் கத்துக்கிறேன்... அதுவும் யாருக்கும் தெரியாமல் கத்துக்கிறேன்னு சொன்னால் அவர் என்னைக் கேவலமா பேசுவாரோன்ற நினைப்பு தான்மா ஜாஸ்தி இருந்தது... ஏற்கெனவே அண்ணனும் அக்காவும் என்னை அசட்டையா நடத்துவா... இதில் இந்த விஷயம் தெரிஞ்சா என்னைக் கிண்டல் பண்ணியே

சாகடிச்சிடுவாம்மா... இது சிறுப்பிள்ளைத்தனமா கூட தோணும்மா... ஆனால், அந்தச் சமயத்தில் எனக்கு அதுதான்மா பயம் கொடுத்தது..." என்று கூற,

அவளை ஆதுரத்துடன் பார்த்த ரேணுகாவிற்கு இப்போது கோபம் ஜானகியின் மீது இல்லை... தன் குடும்பத்தினரின் மீதுதான்.

ஒரு அட்டை போல் ஜானகியின் தன்னம்பிக்கையையும் சுயமரியாதையையும் உறிஞ்சி உறிஞ்சித் தன்னைப் பெரியவர்களாகக் காட்டிக் கொண்டவர்கள் மீது தான் கோபப்பட்டாள் அந்த தாய். ஒரு மனிதனின் தன்னம்பிக்கையைத் தகர்ப்பது அவனை உயிரோடு புதைப்பதற்குச் சமம். அதைத்தான் அவர்கள் செய்திருந்தார்கள். அதற்கு கிடைத்த விலை ஜானகியின் பத்து வருட சிறைவாசம்.

தன் மானத்தை விடத் தன் தந்தை மற்றும் உடன் பிறந்தவரின் கேலியையும் கிண்டலையும் கண்டு ஒரு 13 வயதுப் பெண் பயந்திருக்கிறாள் என்றால், எந்தளவிற்கு அவர்கள் இவளை மிதித்திருக்க வேண்டும் என்று எண்ணிய ரேணுகாவிற்கு, ஜானகியின் மீது இருந்த கோபம் எல்லாமே பரிதாபமாக மாறி, அந்தத் தாய்மை உணர்வு மேலோங்க அவளை அணைத்துக் கொண்டவர்,

"என்னை மன்னிச்சுடு ஜானு... நானும் உங்கப்பா மாதிரி புரியாமல் பேசிட்டேன்... நீ உன் பாட்டி சீதம்மாவே தான்... அதான் அவரோட குணமும் கலையும் உன் கிட்டே வந்திருக்கு... அவர், அவரோட அம்மாவையே ஒதுக்கி வெச்சதுக்கு நீதான் பதிலடி தரணும்னு எழுதியிருக்கு ஜானு... நீ ஜெயிப்பே... எதைப் பத்தியும் கவலைப்படாமல்

கண்ணை மூடிண்டு உன் காரியத்தைச் செய்... அந்தப் பழனி முருகன் உனக்கு வழி காட்டுவான்..." என்று கண்ணீர் மல்க வாழ்த்த, அதற்கு மேல் என்ன வேண்டும் அந்த மகளுக்கு...!

அவளும் தன் தாயின் தோளில் ஆதரவாகச் சரிய, எதிர்காலம் அவளை இரு கைகள் கொண்டு வரவேற்றது.

இப்படியாக ஆரம்பிக்கப்பட்ட ஜானகியின் நடனப் பயிற்சி, நாளொரு வண்ணமாக முன்னேறத் துவங்கியது.

நட்டுவுடனான வகுப்பு அவளுக்கு இலகுவாகத் தான் சென்றது. இடையில் சிறிது சண்டையிட்டாலும் மண்டையைப் பிய்த்துக் கொள்ளும் அளவு வாக்கு வாதத்தில் மூழ்கினாலும், இருவரின் இடையிலும் மெலிதான நூலிழை போன்ற தோழமை இழையோட ஆரம்பித்தது..

நட்டுவிடம் எவ்வித பெரிய மனுஷத்தனமும் எதிர்பார்க்க முடியாது. பைஜாமா ஜிப்பாவுடன் அமர்ந்து தித்தித்தை தித்தித்தை என்று ஜதிக்கட்டை கூறுவது அல்ல அவனது வகுப்பு. சாதாரண ஜீன்ஸ் பனியனுடன் அவனுக்குத் தோன்றுவதைக் கற்றுத் தருவதை மட்டுமின்றி, கூட சேர்ந்து ஒவ்வொரு அபிநயத்திற்கும் விளக்கம் கொடுத்தபடியும் ஆடுவான்.

அதனால் அவளுக்கும் கற்றுக் கொள்ள இலகுவாக இருந்தது. ஏற்கெனவே நடனத்தில் கொஞ்சம் அறிவிருந்ததால், அவள் விரைவாகவே கற்றுக் கொள்ளத் துவங்கினாள். ஆனால், முழுதாகச் சரியாகாத அவள் கால்களும் முதுகுத்தண்டும் வலியெடுக்க ஆரம்பிக்க, அப்படியே

சோர்ந்து விடுவாள். முன்னைப் போல் வலி இல்லை என்றாலும் அவ்வப்போது சுரீரென்று தைக்கும் வலியைத் தந்து கொண்டிருந்தது அவளின் ரணம். அப்படி அவள் சோர்ந்து போகும் போதெல்லாம்...

"இதைப் பாரு... டான்ஸ் கத்துக்க விடாமுயற்சி, உழைப்பு எல்லாம் வேணும்னு நான் சொல்ல மாட்டேன். கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்தாலே போதும். நாட்டியத்திற்குக் கால்கள் எவ்வளவு முக்கியமோ அதே அளவு முகத்தில் இருக்கும் எக்ஸ்பிரஷனும் முக்கியம். நீ உன் காலுக்குப் பிரஷர் கொடுக்கிறதை விட்டுட்டு, உன் எக்ஸ்பிரஷனில் முக்கியத்துவம் கொடு... அது உனக்கு ஈசியா வரும்..." என்று கூற,

அவளும் அதன்படியே தன் முகவுணர்ச்சிகளில் முக்கியத்துவம் கொடுக்க, அவளின் நடனம் இன்னும் மெருகேறியது. நடனம்... அவள் உயிராய் நினைத்த நடனம்... அவளை நடக்க வைத்ததோடு மட்டுமின்றி ஆடவும் வைத்தது. மறுபடியும் அந்த மகிழ்ச்சி நிறைந்த 13 வயதுச் சிறுமியாக அந்த மாய லோகத்தில் நுழைந்தாள் ஜானகி. கூடவே அவளின் பாதுகாவலனாக நட்டுவும் இருந்தான்.

நாட்கள் சென்றது... கொஞ்சம் கொஞ்சமாக நாட் டியத்தைப் பயிலத் துவங்கினாள் அவள். இவை யெல்லாமே ஜானகி தன் உலாவலுக்காக வாங்கியிருந்த ஒரு மணி நேரத்தில்தான் அடக்கம். அந்த ஒரு மணி நேரத்தை வீணாக்காமல், உருப்படியாகவே இருவரும் உபயோகித்திருந்தனர்.

ஆனால், நட்டுவோ சும்மா இல்லாமல் சில நேரங்கள் மைக்கேல் ஜாக்சனின் பாட்டுக்களைப் போட்டு ஆடிக் கொண்டிருப்பான்... அது அவனின் பொழுது போக்கு. அவனால் ஒரு விஷயத்தை மட்டுமே நெடு நேரம் செய்ய முடியாது. அதனால் அவன் இப்படித் திசை திருப்ப...

எரிச்சலுற்ற ஜானகி, "இதைப் பாரு... பரதம் கத்துக் கொடுக்கிறதைத் தவிர மத்த எல்லாத்தையும் செய்யுறே நீ...வர வர... இப்படி வலிப்பு வந்த மாதிரி ஆடறதை நிறுத்திட்டு வந்த வேலையைப் பாரு..." என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூற, அவனோ சட்டை செய்யாமல்

"ஹலோ... இதுவும் ஒரு வகையில் பரதம்தான்மா... என்ன... அதைவிட பீட் ஜாஸ்தி... எல்லாத்துக்கும் அடிப்படை நம்ம நாட்டுப் பரதம்தான்... இங்கிலீஷ்காரன் வேற பேர் வெச்சிட்டான். அதுக்காக இது அசிங்கமா..? எனக்கு இரண்டும் ஒண்ணுதான்... முடிஞ்சா பார்த்து கத்துக்கோ... இல்லை, ஓடிப் போ...." என்று எகத்தாள மாகக் கூற,

ஜானகி, "சே... எனக்கு வந்து சேர்றது எல்லாம் இப்படித்தான் இருக்கு. அந்த நானியும் இப்படித்தான் எடக்கு மடக்காப் பேசுவான்... இப்போ நீயும் அந்த லிஸ்ட்டில் சேர்ந்துட்டே..." என்று புலம்ப,

நட்டு, "ஆமா... நானி சாரை எங்கே வர வர பார்க்கவே முடியலை... எங்கே போயிட்டார்...? உன்னை சேர்த்ததோட தொல்லை விட்டுதுன்னு போயிட்டாரா..?" என்று கிண்டலாகக் கேட்க,

ஜானகிக்கும் அதே சந்தேகம்தான். அவனை அவள் பார்த்தே பல நாட்கள் ஆகியிருந்தன. ரேணுகா விடமும் தொடர்பில் இல்லை. அவன்தான் அடிக்கடி காணாமல் போய் விடுவானே...! அதே போல் தான் இருக்கும்... வந்து விடுவான்... என்று நினைத்தவள், அவன் பேச்சை ஒதுக்கிப் பயிற்சியில் ஒன்றிப் போனாள்.

பயிற்சியில் இருந்தாலும் ஜானகியை மருத்துவ மனைக்கும் அழைத்துச் சென்று வந்தார் ரேணுகா. இப்போது சற்றுச் சிரமமே இல்லாமல் அவளால் வேகமாக நடக்க முடிந்தது... ஆட முடிந்தது... ஆனால், அதனால் பின்னால் எதுவும் ஆபத்து வந்து விடக் கூடாதே என்று நினைத்த ரேணுகா, ஆகாஷிடம்,

"டாக்டர்... இவளுக்கு ரொம்ப வேலை கொடுக்கிற தால் எந்தப் பிரச்சனையும் வந்துடாதே...! எனக்குப் பயமா இருக்கு டாக்டர்..." என்று தன் பயத்தை வெளியிட,

ஆகாஷ் சிரித்தபடி, "கவலைப்படாதீங்கம்மா... ஜானகிக்கு இருக்கிற பிரச்சனை சரியாகக் கூடியதுதான்... லம்பர் இன்ஜுரி என்கிறதால் அவங்க அத்லெட் வேலை களில் கூட ஈடுபடலாம்... அதுவும் இல்லாமல் சின்ன வயசிலே தான் அடிபட்டதால் குணமடையறதில் எந்தப் பிரச்சனையும் இருக்காது... அதுவும் இல்லாமல் அவங்க டான்சர்... அதனால் அவங்களோட உடம்பு அதுக்கேற்ப வளைஞ்சு கொடுக்கும்... வேணும்னா குஷன் பெல்ட் ஒண்ணு சஜஸ்ட் பண்றேன்... அதை யூஸ் பண்ணா, பிரிக்ஷன் குறையும்..." என்று ஒரு பெல்ட்டை எழுதித் தந்தவர்,

ரேணுகாவிடம், "நீங்க கொஞ்சம் வெளியே இருங் கம்மா... கொஞ்சம் டெஸ்ட் பண்ண வேண்டியிருக்கு..." என்றவர், ரேணுகா வெளியே சென்றதும் ஜானகியின் மூட்டுக்களை சோதனை செய்ய, அவள் வலியால் அலறுவாள் என்று ஆகாஷ் எதிர்பார்க்க, அவளோ அமைதியாக இருக்க,

ஆகாஷ், "வாவ்... பெட்டர் இம்ப்ரூவ்மென்ட் ஜானகி... இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. உங்க ளோட இந்த முன்னேற்றம் எல்லாருக்குமே ஒரு படிப்பினையா இருக்கும். பெரிய டான்சரானதும் எங்களை மறந்திடாதீங்க மேடம்..." என்று புன்சிரிப்புடன் கூற,

ஜானகி, "கிண்டல் பண்ணாதீங்க டாக்டர்... நீங்க தான் நான் இப்படி நடக்கவே காரணம்... உங்களை மறப்பேனா..?" என்று நன்றியுடன் கூற,

அவள் மூட்டுக்களைப் பரிசோதித்து விட்டு அவன் மேலெழும்ப, ஏதோ தட்டி அவன் பர்ஸ் கீழே விழ, அதைக் கவனிக்காமல் அவன் செல்ல,

"டாக்டர்... உங்க பர்ஸ்..." என்று தரப்போகும் போது, அது விரிந்து, அதனுள் இருந்த அவனின் குடும்பப் படம் தெரிந்தது.

அதைப் பார்த்தவள் அதிர்ந்து, "டாக்டர்... இது... இந்த ஃபோட்டோ..." என்று திணற,

ஆகாஷ், "இதுதான் என் குடும்பம் ஜானகி... இது என் அப்பா மாணிக்கம், அம்மா கல்பனா..." என்று கூற,

ஜானகி, "இது..." என்று புகைப்படத்தில் அவன் பக்கத்தில் நின்றவனைக் கேட்க,

ஆகாஷின் முகத்தில் மெலிதான வருத்தம் பரவியது. அந்த வருத்தம் வலியாய் மாறி அவன் முகத்தைச் சுருக்கியபடி,

"இதுதான் என் தம்பி ஜானகி... பெயர் நட்ராஜ்... நட்டுன்னு கூப்பிடுவோம்... உன் கிட்டே சொல்றதுக்கு என்ன ஜானகி... எங்கப்பாவிற்கும் இவனுக்கும் ஏழாம் பொருத்தம்.. ஒருநாள் சண்டையில் வீட்டை விட்டு வெளியே அனுப்பிட்டார். பாவம்... என்ன பண்றானோ ஏது பண்றானோ தெரியலை... எனக்கு இப்போதைக்கு இருக்கிற ஒரே கவலை இதுதான்..." என்று தன் மனக்குமுறலைக் கொட்ட, ஜானகி ஒன்றும் பேசவில்லை.

ஆனால், ஆகாஷ் தொடர்ந்தான். "செம டாலண்ட் ஃபெலோ ஜானகி... உன்னை மாதிரிதான், டான்ஸ் என்றால் உயிர்... எங்க தாத்தாவோட வளர்ப்பு... இப்போ எங்கே இருக்கானோ, என்ன பண்றானோ...? எங்கே கஷ்டப்படுறானோ...? பசி தாங்கவே மாட்டான். ஆனால், இப்போ அவன் இல்லாமல் ஒரு கவளம் சோறு கூட இறங்கலை ஜானகி. கொஞ்ச நாள் பார்த்துட்டு போலீஸில் புகார் கொடுக்கலாம்னு இருக்கேன்..." என்று கண்களில் நீர் மல்கக் கூறிக் கொண்டிருக்க, அதற்குள் ரேணுகாவும் உள்ளே வர,

ஜானகி அவளை ஒரு பார்வை பார்த்து, "அதுக்கு அவசியமில்லை டாக்டர்... அவர் பத்திரமாதான் இருப் பார்..." என்று விட்டு, ரேணுகாவை இழுத்துக் கொண்டு விடைபெற,

ஆகாஷ் ஒரு குழப்பப் பார்வையுடன் புரிந்தும் புரியாமலும் விடை கொடுத்தான்.

ஜானகி கோபத்தில் விரலில் உள்ள அனைத்து நகங்களையும் கடித்துத் துப்பிக் கொண்டிருக்க, ரேணுகா அவளை உலுக்கி,

"ஏன்டி... திடுதிப்புன்னு வந்துட்டு நானியைக் கூப்பிடுன்னு சொல்றே... எதுக்கு...? கேட்கிறேனோ இல்லையோ... சொல்லு," என்று கேட்க,

ஜானகி அலுப்புடன், "அம்மா நான் சொல்றேனோ இல்லையோ... நான் கேட்கிறதைச் செய்... அவனைப் போனைப் போட்டுக் கூப்பிடு... நேக்கு அவனிடம் கொஞ்சம் கணக்குத் தீர்க்கணும்..." என்று கூற, அவள் முகத்தில் இருந்தே விஷயம் சற்றே அத்தியாவசியம் என்பதை உணர்ந்து, அவள் கூறியபடி நானியை அழைத்தார்.

அவர் அழைத்து அடுத்த பத்தாவது நிமிடம், தன் வழக்கப்படி ஜன்னல் வழியாக ஜானகியின் அறைக்குள் தன் வழக்கமான ஹிப்பி ஸ்டைல் முடியைச் சிலுப்பியபடி வெளுத்துப் போன டீ சர்ட்டும் ஜீன்ஸுமாய் கித்தாப்பாக,

"ஹாய் ஜான்... என்னைப் பார்க்காமல் உன்னால் இரண்டு வாரம் கூட இருக்க முடியலையா..?" என்றபடி உள்ளே நுழைந்தவனைச் சுட்டெரிக்கும் பார்வையுடன் பார்த்த ஜானகியைக் கண்டு ரேணுகா குழம்ப, அவளோ "அம்மா... நீ கொஞ்சம் வெளியே இரு..." என்று கடினக் குரலில் கூற, அதற்கு மேல் அவளிடம் வாதிக்க விரும் பாமல், வெளியே சென்று யாரும் வராமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு ஜானகியைப் பத்தி நன்றாகத் தெரி யும். கோபம் வந்தால் கண்மண் தெரியாமல் வரும்

அவளுக்கு... என்ன செய்கிறோம் என்றே தெரியாது. ஆனால், அதன் ஆயுட்காலமும் குறைவுதான். ஆனால், அதன் வீரியம் ஜாஸ்தி... சுனாமி போல் ஆளை விழுங் கிடும். அதை உணர்ந்தவராதலால் ஒதுங்கிப் போனார்.

உள்ளே... நானி, "ஜான்... மேரி ஜான்... என் மேல் உனக்கு எவ்ளோ ஆசை...? நான் வரலைன்னு உனக்கு இவ்ளோ கோபமா..?" என்று தன் வழக்கமான நக்கலுடன் தொடங்கியவனை இடுங்கிய கண்களுடன் பார்த்த ஜானகி, "உனக்கு நட்டுவை எப்படித் தெரியும் நானி...?" என்று கேட்க,

நானி, "அதான் சொன்னேனே... பார்க்குக்குப் போயிருந்தேன். அங்கேதான் பார்த்தேன்..." என்று தன் வழக்கமான பொய்யைக் கூற,

ஜானகி ஒருவித விரக்தியுடன், "இன்னும் எவ்ளோ தடவை பொய் சொல்லுவே நானி... நட்டுவை உனக்கு எப்படித் தெரியும்...? உண்மையைச் சொல்லு..." என்று கூற,

நானி இப்போது அலட்சியத்துடன், "சே... இதென்னா கேள்வி... எங்கப்பாவோட தொல்லையைக் கூடச் சகிச்சிக்கலாம் போல... நான் வரேன், பை..." என்று கூறி விட்டுக் கிளம்ப எத்தனிக்க,

ஜானகி, "நட்டு, ஆகாஷோட தம்பிதானே..." என்ற ஜானகியின் கேள்வியில் அவன் நடை தயங்கியது.

பின் ஜானகி அதே இறுக்கத்துடன் தொடர்ந்தாள். "உனக்கு எப்படித் தெரியும் நானி... நான் சொல்லட்டா...

எல்லாத்துக்கும் காரணம் உன் குறுக்குப் புத்தி..." என்று கூற, அவன் திரும்பி,

"என்ன பேசுறே... என்ன குறுக்குப் புத்தி... ஆமாம், அவன் ஆகாஷோட தம்பிதான். தெரிஞ்சுதான் செஞ்சேன். வீட்டை விட்டு வெளியே வந்து தெருவில் நின்றான். நான்தான் அவனுக்கு உன்னை அறிமுகப்படுத்தி வெச்சேன்.. இதில் என்ன தப்பு...?" என்று கூற,

ஜானகி, "இருக்கலாம் நானி... அதுவும் காரணமா இருக்கலாம். ஆனால், நீ என்ன செஞ்சேன்னு சொல் லட்டா... அன்னைக்கு உன்னை டாக்டர் கண்டுபிடிச்சு, உன்னைத் தர்மசங்கடப்படுத்தின மாதிரி அவருக்கும் ஏதாவது வீக் பாயின்ட் இருக்கான்னு தேடியிருக்கே...! அவரோட தம்பியைப் பத்தி தெரிய வந்திருக்கு... சரியான நேரத்தில் போய் கைக்குள்ளே போட்டுக்கிட்டே... அவனை வீட்டுக்குப் போக விடாமல் இருக்க, எனக்கு டான்ஸ் கத்துக் கொடுக்கிற வேலை கொடுத்து வெச்சிக்கிட்டே... சரியா...? ஆகாஷை இப்போ நிம்மதியில்லாமல் ஆக்கிட்டே... அதுக்குத்தானே..." என்ற தன் குரல் உயராமல் கேட்ட ஜானகியை அதிர்ந்து போய்ப் பார்த்தான் அவன்.

அவள் கூறுவதும் உண்மைதான். நானி என்ன தான் ஜானகியின் நல்லதற்காகச் செய்ததாகக் காட்டிக் கொண்டாலும், உள்ளூர அவன் நட்டுவைத் தேர்ந்தெடுத் ததற்குக் காரணம் அதுவே. ஆனால், அதை ஒப்புக் கொள்ளாமல், "லூசு மாதிரிப் பேசாதே. அவன் அம்மா வுக்கு அவன் இருக்கிற இடம் தெரியும். சாப்பாடெல்லாம் அவன் வீட்டில்தான் சாப்பிடுறான்..." என்று கூற,

ஜானகி, "ஆனால், அது ஆகாஷுக்குத் தெரியாதே... அவருக்கு மனக்குழப்பம்தானே மிச்சம். நீ இந்தப் பொறுப்பைக் கொடுக்கலைன்னா கூட நட்டு அவங்க வீட்டைத் தேடிப் போறதுக்கு வாய்ப்பு இருக்கு. ஆனால், இப்போ அதுக்கு வாய்ப்பே இல்லையே...! ஏன் நானி... ஒரு சின்ன விஷயம்... அவர் உன் கடந்த காலத்தைப் பத்தி தெரிஞ்சவர். அதனால் அவரை இப்படித் தண்டிக்கணுமா, சொல்லு...? வெளியே இருந்து பார்க்கிறவங்களுக்குத் தப்பாத் தோணாது...? ஆனால், உள்ளுக்குள் எவ்வளவு பகை இருந்தால் நீ இப்படிச் செய்திருப்பே..." என்று ஜானகி எரிச்சலுடன் கேட்க,

நானி ஏதோ கூற வாயெடுக்க, அவனைத் தடுத்த ஜானகி, "நிறுத்து நானி... நீ எதுவும் சொல்ல வேண்டாம். எனக்கு இந்தக் கொஞ்ச நாளிலேயே உன்னைப் பத்தி நல்லாத் தெரியும். சொல்லப்போனா என்னை விட உன்னைப் பத்தி நல்லாத் தெரியும். நீ ஒரு காட்டு மிராண்டி. அன்பைக் காட்டவே தெரியாத காட்டு மிராண்டி...

"உன்னை எல்லோரும் கேவலமாகப் பேசுறதில் தப்பே இல்லை நானி... நீ ஒரு கல். சாதாரணக் கல் இல்லை, பாறாங்கல். யார் உன் மேல் அக்கறை எடுத்தாலும் நீ இப்படித்தான் செய்வியா? அப்படி நீ செஞ்சா, நீ எல்லாம் மனுஷனே இல்லை. சத்தியமாச் சொல்றேன்... நீ சிகரெட், தண்ணி, பொண்ணுங்க, போதை மருந்து - இப்படி எல்லாத்துக்கும் அடிமையா இருந்தே... அப்போ கூட நான் இவ்ளோ வெறுக்கலை...

"என்னைச் சாகடிக்கப் பார்த்தே... அப்போ கூட நான் இவ்ளோ வெறுக்கலை. என்னை வார்த்தைகளால் அசிங்கப்படுத்தினே... அப்போ கூட இவ்ளோ வெறுக்கலை. ஆனால், எப்போ உனக்காக அக்கறை எடுத்துக்கிட்ட ஒரு மூணாவது மனுஷனுக்குக் கெட்டது செய்ய யோசிச்சியோ, உன்னைப் பார்க்கவே, ஏன் உன் பக்கத்தில் நிற்கவே வெறுப்பா இருக்கு நானி... போயிடு... போயிடு..." என்று கத்த ஆரம்பிக்க,

வெளியே நின்ற ரேணுகா பதறி உள்ளே வந்து, "ஜானு... ஏன் இப்படிக் கத்துறே...? கீழே எல்லாரும் இருக்காங்க..." என்று கூற,

ஜானகி அவரிடம் திரும்பி, "அவனைப் போகச் சொல்லும்மா... அவனைப் போகச் சொல்லு... எனக்கு வெறுப்பா இருக்கு... போகச் சொல்லு..." என்று கத்த,

நானி, அவளை அடிபட்ட பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். அதுவரை நானியிடம் அப்படி ஒரு விரக்தியை ரேணுகா பார்த்ததே இல்லை. அதைப் பார்த்து அவர் அதிர்ந்து நிற்க, ஜானகி,

"நல்ல வேளை... உன்னைப் பெத்த புண்ணியவதி போய்ச் சேர்ந்துட்டா... இல்லை, உன் மேல் அக்கறை காட்றான்னு அவளையும் கொன்னு போட்டிருப்பே... அதெல்லாம் தெரிஞ்சோ என்னமோ அவ இதையெல்லாம் பார்க்காமல் போய்ச் சேர்ந்துட்டா... சத்தியமாச் சொல்றேன், நீயே கொல்லலைன்னாலும் உன்னை மாதிரி ஒரு பையனைப் பெத்ததுக்கு நாண்டுகிட்டு போய்ச் சேர்ந்துருப்பாளாக்கும்..." என்று கூற,

ரேணுகா, அவளைப் பளாரென்று அறைந்து, "ஜானு... வாயைக் கழுவுடி... என்ன பேசுறே நீ...? அவன் என்ன செஞ்சான்னு அவனைப் போய்..." என்று கூறிக் கொண்டு திரும்பிப் பார்ப்பதற்குள் நானி சென்று விட்டிருக்க, ரேணுகாவிற்கு ஜானகியைச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதும் என்றானது.

"உனக்கு ஏன்டி இப்படிக் கோபம் வருது...? கீழே யாருக்காவது கேட்டதுன்னா மானம் போயிருக்கும். பாவம்டி... அவன் மூஞ்சி சுருங்கிப் போயிடுத்து. உங்கப்பாவோட குணம் நோக்கு அப்பப்போ வந்து தொலைஞ்சுடுது. வார்த்தையெல்லாம், பகவானே..." என்று புலம்ப, ஜானகி அவன் சென்ற பிறகு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. 'சாப்பிடப் பிடிக்கவில்லை...' என்று கூறி விட்டு, ரேணுகாவின் வற்புறுத்தலின் பேரில் பால் மட்டும் குடித்து விட்டுப் படுத்து விட்டாள்.

அன்று இரவு... தட்தட் என்று ஜன்னல் ஓரத்தில் அந்தப் பக்கத்திலிருந்து சத்தம் கேட்கத் தன் அரைகுறைத் தூக்கத்தில் இருந்து எழுந்த ஜானகிக்கு அந்தச் சத்தம் பரிட்சயமாகத்தான் இருந்தது. தன் படுக்கையில் இருந்து விழித்து, ஜன்னல் அருகில் சென்றவள்,

"போயிடு நானி... உன் மூஞ்சியைப் பார்க்கவே பிடிக்கலை... இனிமே என்னைத் தொந்தரவு பண்ணாதே... நீ யாரோ, நான் யாரோ..." என்று கூற,

நானியின் குரல், குழறலாக அந்தப் புறம் கேட்டது.

"நீ துழக்கிறியா...? இல்லை உடைக்கவா...?" என்று குழறலாக அவன் உரைக்க, அவன் கூறியது புரியவே

அவளுக்கு ஐந்து நிமிடங்கள் ஆக, அதற்குள் தான் கூறியதைப் போல் நானி கதவை உடைக்க எத்தனிக்க,

ஜானகி, "ஏய்... ஏய்..." என்று கத்தியபடி ஜன்னல் கதவைத் திறக்க, முழுப் போதையிலிருந்த நானி, தாவி உள்ளே நுழைய, ஜானகி லேசாகப் பதறி, "குடிச்சிருக்கியா?" என்று கேட்க,

அவன், "ஆமா... ஒண்ணு ரெண்டு இல்லை... மூணு ஃபுல் அடிச்சேன்... அப்போ கூட நீ பேசினதை மறக்க முடியலைடி..." என்றவன், தன் சட்டைப் பையில் இருந்து இரண்டு போதை மாத்திரைகளை எடுத்துத் தன் வாயில் திணித்துக் கொண்டான். அதைப் பார்த்து ஜானகி முகத்தைத் திருப்பிக் கொள்ள,

நானி, "ஓஹோ பிடிக்கலையா..? யாருக்குத்தான் என்னைப் பிடிச்சது...?" என்று கூற,

ஜானகி, "ஆமா... அப்படியே பார்த்ததுமே பிடிக்க இவரு பெரிய மன்மதர். அப்படியே ஒருத்தர் அக்கறை எடுத்துக் கிட்டாலும் அவரை ஓட ஓட விரட்டுறது..." என்று சலித்துக் கொள்ள,

நானி, "ஏய்... ரொம்பப் பேசாதே... என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்...? நான்... நான்..." என்று திணற,

ஜானகி, "என்ன... என்ன பிரச்சனை உனக்கு...? உனக்கு நீதான் பிரச்சனை நானி... அதை புரிஞ்சுக்கோ..." என்று எகிற,

நானி "ஏய்... நீ ஏன்டி எங்கம்மாவைப் பத்திப் பேசினே... உனக்கு என்ன உரிமை இருக்கு...?" என்று கத்த,

ஜானகி, "ஆமா... அப்படித்தான் பேசுவேன்... நான் சொன்னதில் என்ன தப்பு...? உங்கம்மா இப்போ இருந்தாங்கன்னா, கண்டிப்பா உன்னால தற்கொலை பண்ணிப்பா... அவர் மட்டுமில்லை... எந்த உயிரும் உன்னால் பிழைக்காது. நீயெல்லாம் நல்ல வேளை டாக்டரா நீடிக்கலை... நீ ஒரு டாக்டரே இல்லை..." என்று அழுத்திக் கூற,

"நோ... நோ... நோ..." என்று கிட்டத்தட்ட கதறிக் கொண்டு விழுந்த நானியைப் பார்த்துச் சற்றே அதிர்ந்து தான் போனாள் ஜானகி.

அரை மணி நேரமாக அவன் அசையாமல் இருக்க, அவன் தோளை லேசாகத் தட்டிய ஜானகி,

"நானி..." என்று மென்மையாக அழைக்க,

அவள் குரல் கேட்டு எழுந்த நானியின் கண்களில் இருந்து விழுந்த கண்ணீரைக் கண்டு அதிர்ந்த ஜானகி,

"நானி... நீயா அழற...? என்ன..." என்று கேட்க,

நானி, "என்னால முடியலையே... இப்படி அழுதுடக் கூடாது, உடைஞ்சிடக் கூடாதுன்னுதானே நான் இப்படி மாறினேன்... என்னைக் கடைசியில் இப்படி மாத்திட்டியேடி... நான் உனக்கு என்ன பாவம் பண்ணேன்...? ஐ ஆம் எ மிஸ்ஸரபிள் பேத்தடிக் ஜெர்க்..." என்று கத்திய அவன் நினைவுகள், ஜானகியின் பலனால் பின்னோக்கிச் செல்ல ஆரம்பித்தன...

22 வருடங்களுக்கு முன்பு...

"ஸ்டூடன்ட்ஸ்... இன்னைக்கு ட்ராயிங்க் கிளாஸில் ஏதாவது ஹியூமன் ஆர்கன் வரையணும்... ஓ.கே... உங்க

கண்ணு, காது, மூக்கு எது வேணாலும் வரையலாம்... முடிஞ்சளவு ட்ரை பண்ணுங்க... ஓ.கே..." என்று அந்த ஒன்றாம் வகுப்பு ஆசிரியை இனிமையாய்க் கூற, அந்தச் சிறார்கள் தங்கள் பிஞ்சுக் கைகளில் க்ரேயான்களும் கலர் பென்சில்களும் கொண்டு தங்கள் ஓவியத்தைத் தீட்ட ஆரம்பித்தனர்.

விண்மீன் போன்ற கண்களும், முட்டைக் கண்களும், இலை போன்ற காதுகளும், மிளகாய் மூக்குகளும் காகிதங்களில் உற்பத்தியாக, அந்தப் பிஞ்சுக்கை வண்ணத்தை ரசித்தபடி அந்த ஆசிரியை நடை போட்டார்.

வகுப்பு முடியும் நேரமாக...

ஆசிரியை, "ஸ்டூடன்ட்ஸ்... ப்ளீஸ், சப்மிட் யுவர் பேப்பர்ஸ்..." என்று கூற, ஒவ்வொரு குழந்தைகளும் வந்து கொடுக்கத் துவங்கினர்.

அவர்கள் தந்ததும், இறுதியாக எல்லாப் பேப்பரையும் பார்த்த அந்த ஆசிரியை, ஒரு பேப்பரைப் பார்த்தும் அதிர்ந்து போனார்.

நடுங்கும் விரல்களால் அவர் எடுத்துப் பார்க்க,

அதில் மனித முளையின் அத்தனை நுணுக்கங்களும் வரையப்பட்டிருந்தது. சிறு சிறு பிழைகள் இருந்தாலும், மூளையின் அமைப்பு அச்சு அசலாக இருக்க, அந்த ஆசிரியை அந்த ஓவியத்தில் இருந்த பெயரைப் பார்த்து விட்டு, அந்த மாணவனை அழைத்தார்.

"ரகு... ரகுநந்தன்... கம் ஹியர்..." என்று அவர் அழைக்க,

தயங்கித் தயங்கி அடியெடுத்து வைத்து நடந்து வந்தான், ரகுநந்தன் என்ற நம் நானி.

அந்த ஆசிரியை அவன் கையைப் பிடித்து, "கம் வித் மீ..." என்று கூறி,

அவனை அழைத்துக் கொண்டு ஆசிரியர் அறைக் குச் சென்றார்.

அங்கே பன்னிரண்டாம் வகுப்பு உயிரியல் ஆசிரியை மேரியிடம் அந்தப் பேப்பரைத் தந்தவர், "மேரி மிஸ்... இதைக் கொஞ்சம் பாருங்களேன்..." என்று கூற, அவரும் வாங்கிப் பார்த்தவர் அதிர்ந்து போனார்.

"என்ன லீனா..? இது யார் வரைஞ்சது...? ப்ரெயின் டையாகிராம்..." என்று கேட்க,

லீனா, ரகுவை அவர் முன் நிற்க வைத்து, "இந்தப் பையன் வரைஞ்சது மிஸ்..." என்று கூற,

மேரி அதிர்ந்து, "என்ன... என்ன விளையாடு றீங்களா லீனா மிஸ்...? ட்வெல்த் படிக்கிற பிள்ளைகளே திணறும்... இந்தக் குழந்தைக்கு மூளைன்னா என்னன்னே தெரியாது... அதுவும் நுணுக்கமா வரையறதாவது..." என்று சொல்லி விட்டுச் சிரிக்க,

லீனா, "மிஸ்... நான் ஏன் பொய் சொல்லணும்? ட்ராயிங் கிளாசில் வரையச் சொன்னது... இந்தப் பையன் வரைஞ்சதுதான் இது..." என்று கூற, மேரிக்கு வியர்த்தே கொட்டி விட்டது.

மேரி மிஸ், ரகுவை அழைத்து, "குட்டி... இது எப்படிடா உன்னால் வரைய முடிஞ்சது...? மூளையைப்

பத்தி உனக்கு எப்படித் தெரியும்...?" என்று மென்மையாகக் கேட்க,

ரகு, "தெதியலை மிஸ்... தோணுச்சு... இப்பதித் தான்... இதுக்கும்னு தோணிச்சு..." என்று மழலை மாறாமல் கூறிய அவனிடம், மேரி மிஸ் விவரங்கள் கேட்க, அவனோ, இப்படித்தான் இருக்கும் என்று தோன்றிய விஷயத்தைக் கூற, அவர் இமைக்க மறந்தார்.

"நமக்கு ரண்டு பக்கம் இதுக்கு மிஸ்... அதனால ரண்டு பக்கம் ப்ரெயினில் இதுக்கும்... நம்ம பார்க்கிறது எல்லாம் ப்ரெயினில்தான் ஸ்டோர் ஆகும், இல்லை மிஸ்... அதான் சுதுக்கி சுதுக்கி (சுருக்கி சுருக்கி) வதைஞ்சேன்... நாம நதக்கிறோம் (நடக்கிறோம்) இல்லை மிஸ்... அது வேத ப்ரெயினா இருக்கும் மிஸ்... அதான் தோணி தோணி வதைஞ்சேன் மிஸ்..." என்று ஒவ்வொன் றாய் அடுக்க, அவர் ஆடிப் போனார்.

பின் அவனிடம், "சரிடா கண்ணா... நீ கிளாசுக்குப் போ..." என்றவர், லீனாவிடம், "வாவ் லீனா... இட்ஸ் மார்வெலஸ்... அவன் வரைஞ்சது எல்லாமே யூகத்தில் தான்... இப்படி இருக்கும்னு... ஆனால், அவனுக்குள் ஒரு இன்ஸ்டிங்க்ட் இருந்திருக்கு பாரேன்..." என்று கூற,

லீனா, "ஆனா மிஸ்... அவன் வரைஞ்சது எல்லாம் உண்மையா..? நீங்க சயன்ஸ் டீச்சர். அதனால் உங்களுக்குத் தெரியும்னுதான் வந்தேன்..." என்று கேட்க,

மேரி மிஸ், "சின்னச் சின்ன தப்புகள்தான் லீனா. ஆனால், சரிதான். இதோ அவன் சொன்னானே இரண்டு பக்கம்... அதுதான் செர்ப்ரெல் ஹெமிஸ்பெர்ஸ்... சுருக்கி

வரைஞ்சதா சொன்னானே... அதுதான் நம்ம ஞாபகத்தை ஸ்டோர் பண்றது, கைரி அன்ட் சுல்சி.. நம்மளோட பாடி பேலன்ஸ் பண்றது அவன் பாஷையில் நடக்க வைக்கிறது, செரிபுல்லம். இதோ இங்கே போட்டிருக்கானே வால்... அதுதான் முகுளம் மெடுல்லா ஓப்ளோகட்டா..." என்று ஒவ்வொன்றாய் அடுக்க,

லீனா அவன் அறிவை நினைத்து மூச்சு விடவே மறந்தார்.

"எப்படி மிஸ்... இவனுக்கு எப்படி இது தெரிஞ்சது...?" என்று புரியாமல் குழம்ப,

மேரி, "அவன் ஒரு பிராடிஜி லீனா... குழந்தைகள் பிறக்கும் போதே சில விசேஷ அறிவுடன் பிறக்கும். அது மாதிரிதான் இவன். நீ இதைப் பிரின்சி கிட்டே காமி... நாம் அவன் அம்மா கிட்டே பேசுவோம்..." என்று முடிவெடுத்தனர் இரு ஆசிரியைகளும்

## 20

"என்ன மிஸ்... என்ன சொல்றீங்க...?" என்று புரியாமல் கேட்ட வைதேகியைப் புன்னகையுடன் பார்த்த லீனாவும் மேரியும், அன்று பள்ளியில் நடந்ததை இன்னும் விவரமாக அவரிடம் கூறினர். ரகுநந்தனின் தாய்க்கு அவனைப் பற்றிக் கூறுமாறு பிரின்சியும் கூறியதால், அவனைப் பற்றிய செய்திகள் வைதேகிக்குத் தெரிவிக்கப் பட, தன் மகனை அந்த சின்னஞ்சிறு வயதிலேயே சான்றோன் எனக் கேட்ட தாய் அகமகிழ்ந்து போனாள்.

லீனா, "இதை நாங்க ஏன் உங்க கிட்டே சொல்றோம்ன்னா, உங்க பையனைப் பற்றிய உண்மை உங்களுக்குத் தெரியணும்னுதான்... இப்போதைக்கு சும்மா சொல்லத்தான் செய்யறோம்... அவனை இதுக்குன்னு ஒதுக்கி வெச்சு மன ரீதியா அவனுக்கு அழுத்தம் கொடுக்காதீங்க. அவன் எப்பவும் போல இருக்கட்டும். சின்னக் குழந்தைதானே...! அதான் சொல்றோம். தப்பா எடுத்துக்காதீங்க..." என்று நியாயமாகக் கூற,

அதை வைதேகியும் ஆமோதித்து, "இதில் தப்பா நினைக்க என்ன மிஸ் இருக்கு...? என் பையன் இப்படி ஒரு அபூர்வமானவன்னு சொன்னதுக்கு ரொம்ப நன்றி. என்ன இருந்தாலும் அவன் என் மகன் தானே...! அது மாறாதே..." என்று கூற, அவரைப் பெருமிதத்துடன் பார்த்த லீனாவும் மேரியும், ரகுநந்தனை அவரிடம் விட்டு விட்டு நகர,

அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றே புரியாத ரகு, மருண்ட பார்வையுடன் தன் தாயின் முந்தானை மடிப்பில் ஒண்ட, அவனைத் தூக்கி உச்சி முகர்ந்த வைதேகி, "செல்லக் குட்டி... என்ன பயம் உங்களுக்கு...? அம்மா இருக்கேன்டா உங்களுக்கு... நீங்க வளர்ந்து பெரிய டாக்டர் ஆவீங்களாம்... அம்மாவுக்கு ட்ரீட்மெண்ட் பண்ணுவீங்களாம்... போலாமா வீட்டுக்கு...?" என்று தன் மகனைக் கொஞ்சியபடி வீட்டிற்குக் கூட்டிச் செல்ல, தன் தாயின் தோளில் கோழிக்குஞ்சு போல் தஞ்சமடைந்தான் அந்த மழலை.

பாவம், அந்தத் தாய்க்குத் தெரியவில்லை... அவன் தனக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பிக்கும் முன்னரே அவர்

இவ்வுலகத்தை விட்டுச் செல்லப் போவதை... நினைப்ப தெல்லாம் நடந்து விட்டால், இந்தப் பூமி நிலைக்காது அல்லவா?

இப்படியாக ஆரம்பித்த நானி என்னும் ஜீவியின் பயணம், வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டை எட்டியது. இப்போது நானிக்கு ஏழு வயது. பள்ளியில் அப்போதே அவன் அறிவைப் பற்றித் தெரிய வர, அவனைத் தெரியாதவரே அந்தப் பள்ளியில் இல்லை என்றானது.

நானி, இயல்பிலேயே அமைதி... மகா அமைதி. யாரிடமும் பேசுவது என்பதே அரிது. அப்படியே பேசினாலும் குரலே வெளியில் வராது. அத்தனை மூளையும் தேர்வுத் தாளில்தான் கொட்டும். அசாத்திய மூளை. வயதிற்கு மீறிய விஷயங்களை அறிந்து வைத்திருப்பான். அதெல்லாம் அவனுக்கு எவ்வாறு தெரிய வந்தது என்று பார்த்தால், அந்த ஈசனும் அறியான். அதே சமயம் அவன் எவ்வளவு புத்திசாலியோ அந்த அளவிற்கு நாசூக்கானவன். சிறு விஷயம் கூட அவனை துவளச் செய்து விடும். இப்படி இரு வேறு துருவங்களைக் கொண்டவன் அவன். இப்படியாக நகர்ந்து கொண்டிருந்த நானியின் வாழ்க்கை, ஒரு திருப்புமுனையை எட்டியது.

அன்று பள்ளி முடிந்து வந்ததில் இருந்து தன் அண்ணனுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடிக் கொண் டிருந்தான் நானி.

"அண்ணா... அண்ணா... நான் போய் தண்ணி குடிச்சுட்டு வர்றேன்..." என்று கூறி விட்டு மைதானத்தில் இருந்து வீட்டை நோக்கி நடக்க,

ஒன்பது வயது அபி, “இரு... இருடா... இரண்டு பால் தான்... நான் வர்றேன்...” என்று கத்தி விட்டு, கூறியபடியே தன் ஆட்டத்தை முடித்து விட்டு வர,

சகோதரர்கள் இருவரும் பேசிக் களித்தபடியே வீடு வந்து சேர்ந்தனர். வீடு வாசலை அடையும் முன்னரே “ம்மா... ம்மா...” என்று கத்தியபடி அவர்கள் வர, வைதேகியின் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது.

குணா வேலை விஷயமாக வெளிநாடு சென்றிருக்க, அந்த மூவருமான உலகம் அவர்களுக்குக் கூடாக அமைந்தது. அந்த இரு சிட்டுக்களுடன் அந்த தாய்ப் பறவை இருந்த கூடு சொர்க்கலோகமாக நிலைத்திருக்க, அது பறிபோகும் நாளும் நெருங்கியது போலும்.

துள்ளிக் குதித்து வந்த குழந்தைகளைக் கண்டு கொண்ட வைதேகி,

“சே... என்னடா இது... போ... போய் கை கால் அலம்பிண்டு வா... போ...” என்று அதட்ட,

தாய் சொல்லைத் தட்டாமல் செய்த மகன்கள் இருவரும் சிறிது நேரத்தில்,

“அம்மா... பசி... பசி...” என்று ஒன்றன் பின் ஒன்றாகத் தாய்ப் பசுவை அழைக்க,

வைதேகி தோசைகளைச் சுட ஆரம்பித்தார். மூன்று தோசைகளைச் சுட்டு நிமிரும் வேளை உடம்பில் ஏதோ அசௌகரியம் ஏற்பட, வாந்தி வரும் போல் இருந்தது... ஒரு நிமிடத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்ட வைதேகிக்கு இது போன்ற சோர்வுகள் கடந்த ஒரு

மாதமாகவே தொடங்கியிருக்க, அவரோ அதை அலட்சியப் படுத்திக் கொண்டிருந்தார்.

அபிக்கும் ரகுவிற்கும் தோசைகளைச் சுட்டு சாப்பிட வைக்க ஆரம்பிக்க, முதலில் சாப்பிட்டு முடித்த அபி, தன் வீட்டுப் பாடங்களை எழுத ஓடி விட, தன் தாயின் மடியில் அமர்ந்து அவளைக் கொஞ்சியபடி தோசைகளை ஊட்டச் சொல்லி வாங்கினான் இளையவன்.

மடியில் அமர்ந்தபடி சிற்றுண்டி அருந்திக் கொண் டிருந்த மகனுக்கு ஊட்டி விட்டு எழுந்த வைதேகி, சமைய லறைக்குச் செல்ல அவள் பின்னோடே சென்ற அவன் முகம் குழப்பத்தைத் தாங்கியிருக்கப் பாத்திரங்களை ஒதுக்கி விட்டு நிமிர்ந்த வைதேகி, ரகுவின் முகத்தைப் பார்த்து ஏதோ சரியில்லை என்பதைக் கண்டறிந்து,

"ரகு கண்ணா... என்னடா... என்ன ஆச்சு... ஏன் அம்மாவையே பார்த்துக்கிட்டு இருக்கே... ஏதாவது வேணுமா..?" என்று கேட்க,

ரகுவோ, இல்லை என்பது போல் தலையசைத் தாலும், தன் தாயின் கண்களை விட்டுப் பார்வையை விலக்கவில்லை.

அவனின் சந்தேகப் பார்வையைப் பார்த்துக் குழம்பிய வைதேகி, "என்ன ரகு... என்னாச்சு...?" என்று அழுத்திக் கேட்க,

ரகு, "அம்மா... உனக்கு ஏதோ உடம்பு சரியில் லைம்மா... உடம்பு சரியில்லைம்மா..." என்று சொல்லும் போதே கண்களில் கண்ணீர் மழை பொழிய ஆரம்பித்தது, அந்த ஏழு வயதுச் சிறுவனுக்கு.

வைதேகிக்கு முதலில் வந்தது சிரிப்புத்தான். தன் மகனின் மென்மையான மனம் அவருக்குத் தெரியும் தானே...! அதனால் அவன் தலையைக் கலைத்து,

"குட்டிப்பா... எனக்கு என்ன உடம்பு சரியில்லை..? அம்மாவுக்கு லேசா தலைசுத்தல்டா... அதான் டையர்டா இருக்கு... வேற ஒண்ணும் இல்லை... போ... போய் ஹோம் வொர்க் பண்ணு..." என்று அனுப்பி வைக்க,

அவனோ, "இல்லைம்மா... உன் கண் யெல்லோவா இருக்கு... நார்மலா இல்லைம்மா... நான் படிச்சிருக் கேன்... நீ வாம்மா, டாக்டர் கிட்டே போகலாம் வாம்மா..." என்று விடாப்பிடியாகத் தன் கையைப் பிடித்து இழுக்கும் மகனை என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினார். அவர் அவனை அதட்டினாலும், அவன் விடவில்லை. என்றும் போலன்றி இன்று அழுது ஆர்ப்பாட்டம் செய்யும் மகனைக் கவலையோடு பார்த்தார் அவர். அவரின் கையையே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்க, வைதேகியின் மனதிலும் ஏதோ ஒரு உறுத்தல்.

'ஒரு வேளை... குட்டி சொல்றது உண்மையா இருக்குமோ...?' என்று எண்ணி இருவரையும் பக்கத்து வீட்டம்மாவைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு விட்டுத் தான் மட்டும் தனியாக மருத்துவ மனைக்குச் சென்று பரிசோதனை செய்ய, ரகுநந்தனின் சந்தேகம் பூர்த்தியானது. வைதேகிக்கு ஹெப்படைட்டிஸ் பி என்னும் மஞ்சள் காமாலை நோய் முற்றிய நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது. வீட்டு வேலை, அலட்சியம் இவற்றால் அவர் தன் உடல் நிலைக்கு முக்கியத்துவம் தராமல்

இருக்க, நோய் அவரின் ஏழு வயது மகன் மூலமாகத் தான் வெளியுலகத்திற்கு வந்தது.

கண்டறியப்பட்டும் கூட மூன்று மாதத்திற்குக் குணாவிற்குத் தெரியப்படுத்தவில்லை அவர். வேலைக்கு இருந்த பெண்மணியைத் துணைக்கு வைத்துக்கொண்டு சமாளிக்க, நோய் எந்த மருத்துவத்திற்கும் வளைந்து கொடுக்காமல் வளர்ந்து, சிரோசிஸ் எனப்படும் நிலைக்குச் சென்று, அதற்கு மேல் தாமதிக்க முடியாது என்று குணாவிற்குத் தெரியப்படுத்த, அவர் வந்து ஒரு மாதத் திற்குள் வைதேகியின் பூலோகப் பதவி முடிவிற்கு வந்தது.

சாகும் தருவாயில் கூட வைதேகி கூறியது இது தான்...

"குணா... எ...எனக்கு இந்த நோய் வந்தது கூட சந்தோஷம்தான்... எ... என் மகன்தானே முதலில் நோயைக் கண்டு பிடிச்சான்... அ... அவனோட முதல் பேஷண்ட் நான்தான்... இல்லை... இ... இந்த பாக்கியம் வேற யாருக்குக் கிடைக்கும்... அவனை எப்படியாவது டாக்டர் ஆக்கிடுங்க... குணா... இது... இதுதான் என் ஆசை... அபியைப் பத்திக் கவலை இல்லை... ஆனா ரகு ரொம்ப நாசூக்கு... அவனுக்கு... சின்ன விஷயம் கூடத் தாங்க முடியாது... ரெண்டு பேரையும் பார்த்துக்கோங்க..." என்று குணாவிடம் கூற அவரின் துரதிர்ஷ்டமோ, இல்லை நானியின் துரதிர்ஷ்டமோ... அவர் பேச்சில் பிற்பாதி குணாவின் மூளைக்கு எட்டவே இல்லை போலும்.

அந்த மென்மையான குழந்தையைக் கையாளுவது பற்றி வைதேகி கூறியது, அவர் மனதில் பதியவே இல்லை. டாக்டர் ஆக்க வேண்டும் என்று கூறியது மட்டும்

தான் பதிந்தது... அதுதான் பிற்காலத்தில் பிரச்சனைக்குக் காரணம்...

இவ்வாறு கூறிய 24 மணி நேரத்தில் வைதேசி தவறி விட, அனைவரிலும் மிகவும் உடைந்து போனது, தாயின் முந்தானையில் வாசம் செய்த நானிதான்.

தன் தாயின் இறப்பைப் பற்றிக் கூறி உடைந்து அழும் நானியை, அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி. அவனைத் தேற்றக் கூடத் தோன்றாமல் சிலை போல் அவள் நின்றிருக்க,

"நான்தான் காரணம்... நான்தான் பார்த்துச் சொன்னேன்... இல்லைன்னா எங்கம்மா என் கூடவே கொஞ்ச நாள் இருந்திருப்பாங்க... என் மேலேதான் தப்பு..." என்று அவன் புலம்ப ஆரம்பிக்க, அவனை நெருங்கிய ஜானகி,

"எப்படி இருந்தாலும் ஒரு நாளைக்குத் தெரிஞ்சுதான் இருக்கும் நானி... இதில் உன் தப்பு என்ன..? அந்த வயசிலேயே உன் புத்திசாலித்தனத்தை உங்கம்மா பெருமையாகத்தானே நினைச்சாங்க... நீ எந்தத் தப்பும் பண்ணலை..." என்று மென்மையாகக் கூற, அவளைச் சட்டென்று நிமிர்ந்து பார்த்த நானி,

"அதனால்... அதனால்... எங்கம்மாவைக் காப்பாத்த முடிஞ்சதா..? சொல்லு... எவ்ளோ நாள் பெட் பேன் வைக்கும் போது கூனிக் குறுகியிருக்காங்க தெரியுமா..? மருந்தோட வீரியம் தாங்காமல் வாந்தி, மயக்கம்னு கஷ்டப்பட்டிருப்பாங்க தெரியுமா...? ஒண்ணு மட்டும்

ஞாபகம் வெச்சிக்கோ... மனுஷனுக்கு வாழ்க்கை எப்படி இருந்தாலும் சாவு நிம்மதியாகவும் கண்யமாகவும் இருக்கணும்... அது ரெண்டுமே எங்கம்மாவுக்குக் கிடைக்கலை... அவங்க என்ன தப்பு பண்ணாங்க...?

"இதே நான் சொல்லாமல் இருந்திருந்தாலும் அவங்க செத்திருப்பாங்கதான். ஆனால், அது அவங் களுக்கே தெரியாமல் இருந்திருக்கும்... இந்த மாதிரிச் சாவை எதிர்பார்த்துக் காத்துக்கிட்டு இருக்கிறது நரகம் தெரியுமா...? அதை நான்தான் எங்கம்மாவுக்குக் கொடுத்தேன். நான் டாக்டரா இருக்கவே லாயக்கில் லைன்னு அப்போவே எனக்கு உறுத்திக்கிட்டு இருந்தது... என்னைச் சுத்தியுள்ளவங்க டாக்டர் டாக்டர்ன்னு சொல்லும்போது எனக்குக் குற்றவுணர்ச்சிதான் வந்தது. ஆனால், யாருமே புரிஞ்சிக்கலை. ஏன், எங்கப்பா கூட..." என்று கூறி விட்டுக் கடந்த காலத்தில் மூழ்கினான்.

"ஏன்டா... மாடல் டெஸ்ட்ல குறைவா மார்க் வாங்கியிருக்கியாமே...? என்ன, திமிரா...? உன்னை டாக்டராக்கணும்னு படாத பாடு பட்டுத் தேசம் விட்டுத் தேசம் வந்து உழைச்சிண்டு இருக்கேன்... நீ என்னடான்னா இப்படி அலட்சியமா இருக்கே...? கொழுப்பெடுத்துத் திரிஞ்சுண்டு இருந்தேன்னு வை... உன்னை போர்டிங் ஸ்கூலில்தான் சேர்ப்பேன்... அப்புறம் உன் இஷ்டம், முடிவு பண்ணிக்கோ..." என்று அதட்ட, அவரின் ஒவ்வொரு வார்த்தையும் அந்த 14 வயது விடலையின் மனதை ரண மாக்கியது. இறுதியாகத் தன் தைரியம் முழுவதையும் தேக்கி,

"இல்லைப்பா... நேக்கு உடம்பு சரியில்லை... வைரஸ் ஃபீவர்... சோ கேன் னாட் ஏபிள் டு கலெக்ட் மை செல்ஃப்... அடுத்த தடவை நல்லா பண்றேன்பா... ஆனா, டாக்டர் ஆகலைப்பா நான்... எனக்கு என்னமோ நான் சூட்டாக மாட்டேன்னு தோணறது... ஐ ஆம் வெரி சென்சிடிவ்... ஐ டோன்ட் திங் ஐ வில் ஃபிட்... ஐ மே ஹேவ் தி கெப்பாசிட்டி பட் நாட் தி கரேஜ்..." என்று கூறி முடிப்பதற்குள் அவன் கன்னத்தில் பளாரென்று அறை விழ, சுருண்டு விழுந்தான் நானி. அதைப் பார்த்துப் பதறிய அபி,

"அப்பா... என்னப்பா இது..." என்று கத்திக் கொண்டே தன் தம்பியைத் தாங்க,

குணா, ருத்ரமூர்த்தி அவதாரத்துடன் நின்றிருந்தார்.

"என்னடா துளிர் விட்டுப் போயிடுத்தோ...? என்ன தைரியம் இருந்தால் என்னான்ட வந்து எனக்கு முன்னாடி நின்னு கூலா இப்படிச் சொல்லுவே...? என்னைப் பார்த்தா கிறுக்கன் மாதிரி இருக்கிறதா..? ராப்பகலா வேலை செஞ்சு குருவி சேர்க்கிறாப்ல சேர்த்து இந்த அமெரிக்காவில் காலூணியிருக்கேனாக்கும்... என்னை ஏப்பை சோப்பைனு நினைக்காதே... உங்க அம்மா ஆசை உன்னை டாக்டர் ஆக்கிறது. நீ செஞ்சேதான் தீரணும், உன்னால் முடியாட்டாலும்..." என்று கர்ஜித்து விட்டு உள்ளே சென்று கதவைச் சாத்த, முகத்தை மூடிக் கொண்டு அழும் தன் தம்பியின் தோளை ஆதரவாகத் தடவிக் கொடுத்த அபி,

"ஏன்டா இப்படிப் பண்ணுறே.. அப்பா கோபம்தான் உனக்குத் தெரியுமே... அவர் கோபப்படுறதிலேயும்

அர்த்தம் இருக்குடா... நீ டாக்டராகலைன்னா வேற யார் டாக்டர் ஆகிறது...? சின்ன வயசிலே இருந்து இந்த ஒரு விஷயத்துக்குத்தான் அவர் கிட்டே இருந்து திட்டு, அடின்னு வாங்கிண்டு இருக்கே... அதை விட்டுத் தள்ளுடா... டாக்டராகித்தான் பாரேன்..." என்று கூற,

அவனைக் கண்ணீர் நிறைந்த கண்களுடன் பார்த்த ரகு, "இல்லைண்ணா... நான் அறிவாளியா இருக்கலாம்... ஆனா எனக்கு மன தைரியம் இல்லைண்ணா... என் மனசுக்குத் தோண்றதைச் சொல்றது கூடத் தப்பாண்ணா... அம்மா இறந்ததில் இருந்து என் மனசுக்குள்ளே குடைஞ்சுக்கிட்டே இருக்கு... இது வரைக்கும் எத்தனை அடி வாங்கியிருப்பேன்... அப்படி இருந்தும் சொல்றேன்னா என்னைப் புரிஞ்சுக்க மாட்டாரா?

"சரிண்ணா... இப்போ சொல்றேன்... இனிமே எந்த விஷயத்தையும் யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன்... என் கஷ்டம் இனி என்னோட மட்டும்தான்... உங்களுக்கு என்ன...? நான் டாக்டராகணும்... அவ்ளோதானே... ஆகிறேன்... இந்த ரகு டாக்டர்தான்... எழுதி வெச்சிக் கோங்க... இதுதான் நான் என் கஷ்டத்தை உங்க கிட்டே வெளிப்படையாச் சொல்ற கடைசி நாள்..." என்று சூளுரைத்து விட்டுச் சென்ற தம்பியைக் கேள்விக் குறியுடன் பார்த்தான் அபிநந்தன்.

ரகு, தன்னைப் பற்றித் தானே சுய அலசல் செய்து கூறியது எவ்வளவு உண்மை என்று அவர்களுக்குப் புரிய வாய்ப்பில்லை,

ஆனால், ரகு, தான் கூறியதைச் செய்தான்.

ஆம்... அவன் மருத்துவனானான்.

அமெரிக்காவில் இருந்த மிகச் சிறந்த மருத்துவ மனையில் வேலையும் கிடைத்தது. அவன் வாழ்வே தலை கீழாக மாறும் வண்ணம், பிள்ளையார் சுழியும் இடப்பட்டது.

## 21

தனக்கு மருத்துவம் வேண்டாம் என்று நினைத்த நானி, ஒன்றும் படிப்பிலோ வேலையிலோ சோடை போகவில்லை. பிறப்பிலிருந்தே அவனுக்குக் கிடைத்த அபூர்வ அறிவு, அவனைச் சோடை போகவும் வி வில்லை. அதுதான் அவனை உயர்ந்த நிலைக்கு இழுத்துக் கொண்டு வந்தது.

அவன் படிக்கும்போதும் சரி, வேலையிலும் சரி... ஒவ்வொரு இறப்பின் போதும் அவனுக்கு உள்ளூர குத்திக் குடையும்தான்... அவனின் மனத்தைக் குத்திக் கிழிக்கும்தான். ஆனாலும் அதை எல்லாம் படிக்கற்களா மாற்றி, முடிந்தளவு கடந்து வந்தான் அவன். ஒரு சின்ன விஷயம் கூட அவனை மிகவும் பாதிக்கும் என்பதை அறிந்த அவன் உடன் இருந்த நண்பர்களும், ஆசிரியர்களும், அவன் குணத்தை அறிந்தே அவனை வழி நடத்திச் சென்றனர்.

"I think its ganglioma. not a normal lymphoma. I am very well sure sir... the ultra sound guided biopsy would reveal it..." என்று மென்மையாகக் கூறிய அந்த 25 வயது நானியை, அந்த அறையிலிருந்த டீனைத் தவிர அனைத்து ஜாம்பவான்களும் வெறுத்தனர்.

அவன் கூறியவுடன், டீன் பயாப்சிக்குத் தெரிவிக்க உடனே அங்கிருந்த அனுபவமிக்க மருத்துவர் ஒருவர் எழுந்து, ஆங்கிலத்தில் கத்த ஆரம்பித்தார். அவர் கூறியதன் மொழியாக்கம் இதுதான்.

"மிஸ்டர் ஆண்டர்சன்... இந்தச் சின்னப் பையன் சொன்னதுக்காக நீங்க எங்களோட அனுபவத்தை எடை போடுறீங்களா...? இவன் வந்ததில் இருந்து எங்களுக்கு இந்த ஹாஸ்பிடலில் மரியாதை குறைஞ்சுப்போச்சு... அவன் ஒரு நியூரோ சர்ஜன்... இன்னும் இன்டர்னஷிப்பில் தான் இருந்துட்டு இருக்கான்..... ஆனால், நாங்க இந்த ஃபீல்டில் 25 வருடம் இருக்கிற ஆன்காலஜிஸ்ட்.. காங்கிலியோமா எல்லாம் எவ்ளோ ரேர் தெரியுமா...? இலட்சத்தில் ஒருத்தருக்குத்தான் வரும்... எங்களுக்குத் தெரியாதா? ஒரு சின்னப் பையன் பேச்சைக் கேட்டு எங்களை அவமதிக்கிறீங்க..." என்று கத்த,

டீன் எனப்படும் அந்த மருத்துவ மனையில் முதல்வரான 50 வயது ஆண்டர்சன், "கமான் கைஸ்... இந்த டிபார்ட்மென்டல் ரைவல்ரி உங்களுக்குக் குறையாதா...? அவன் நியூரோவா இருக்கலாம்... ஆனால், அவனுக்கு எல்லா விஷயத்தைப் பற்றியும் அறிவு இருக்கு... அதனால் ஒரு வாய்ப்பு கொடுத்தா என்ன...?" என்று கூற,

முன்னர் பேசியவருக்கு ஆதரவாக வேறு துறையில் இருந்து ஒருவர் எழுந்து,

"நான், டாக்டர் டேமியன் சொன்னதை ஆதரிக்கிறேன் சார்... ஆங்கோவில் மட்டுமில்லை... போன வாரம் மெடிசின் பேஷன்ட் ஒருத்தருக்கும் நீங்க இவன் கிட்டேதான்

ஒபீனியன் கேட்டீங்க... அப்படி என்ன சார் இவன் கிட்டே இருக்கு..?" என்று கத்த, கூடவே நானியைப் பற்றி மற்ற துறையினரும் கோபமாகக் கத்த ஆரம்பித்தனர். அறிவாளி என்பதால் தங்களை விட பல மடங்கு இள வயதான நானியின் வருகை அவர்களுக்கு எரிச்சல் ஊட்டியது. அதன் விளைவு தான் இந்தச் சண்டை.

இப்படியாக ஒவ்வொருவரும் வாதாட ஆரம்பிக்க, நானி மட்டும் அமைதியாக இருந்தான். அவன் மனமோ உலைக்கலனாகக் கொதித்துக் கொண்டிருந்தாலும் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூறவில்லை. எப்போதும் போல மௌனம்தான். ஒரு கட்டத்தில் வாக்குவாதம் உச்சத்தை எட்ட,

ஆண்டர்சன், "ஸ்டாப் இட்... ஸ்டாப் கைஸ்... சின்னக் குழந்தை மாதிரி ரியாக்ட் பண்ணாதீங்க... எல்லாத்துக்கும் ஒரு வரையறை இருக்கு... அதைத் தெரிஞ்சுக்கோங்க..." என்று கர்ஜிக்க, ஒரு வழியாக அந்த அறை அமைதி யானது. அவரோ நானியைப் பாவமாகப் பார்த்தார். எதிலும் ஒட்டாது இருந்த அவனது மனநிலை, அவரை உறுத்தியது.. எனவே,

"டாக்டர் நானி..." என்று அழைத்தார்.

அவர்களுக்கு, அவனது ரகுநந்தன் என்ற பேர் அழைக்கக் கடினமாக இருந்ததால், தங்கள் இஷ்டத்திற்குச் சுருக்கிய பேர்தான் நானி. போகப் போக அதுவே நிலைத்து விட்டது. நானி, அவர் குரல் கேட்டு நிமிர,

ஆண்டர்சன், "நானி... நீங்க வேற ஏதாவது சொல்ல விரும்புறீங்களா...?" என்று கேட்க,

அவனோ சிரித்தபடி, “அது கங்லியோமா சார்... இன்னும் இரண்டு நாட்களில் சர்ஜரி வெச்சிக்கலாம்... நான் போய் அதற்கான ஏற்பாடுகளைப் பார்க்கிறேன்...” என்று கூறி விட்டுச் செல்ல, அதைக்கண்டு மற்றவர்கள் மட்டுமல்ல ஆண்டர்சனே அயர்ந்துதான் போனார்.

“எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்றான்..? பார்த்தா லிம்ஃபோமா மாதிரிதானே இருக்கு...” என்று அவர் மண்டையைப் பிய்த்துக் கொள்ள, அவர் உத்தரவிட்ட பயாப்சிக்கான முடிவுகள் வர, அங்கிருந்த அனைவரும் ஆவலாக அதை எதிர்பார்த்திருக்க, அதைப் படித்து முடித்த ஆண்டர்சனின் முகத்தில் மெல்லிய புன்னகை பூத்தது. தன் உடன் இருந்தவர்களைப் பார்த்து,

“நம்ம பேஷண்ட் இலட்சத்தில் ஒருத்தர்...” என்று கூற,

அவர்கள் புரியாமல் விழிக்க,

ஆண்டர்சன் கடினமான பார்வையோடு, “amoiling stl "..start the treatment atleast now... you experienced gentlemen...” என்று குற்றம் சாட்டும் குரலில் கூற, அவர்கள் தலை குனிந்தபடி ஒருவர் பின் ஒருவராக அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர்.

இப்படித்தான் ஆரம்பித்தது நானியின் வேலை. வேலையில் சேர்ந்த ஒரே மாதத்தில் ஆண்டர்சனிற்கு நானியின் மேல் அளவு கடந்த நம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக வந்தது. இப்படித்தான் நியூரோ சர்ஜன் ஆனவன், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினான். நியூரோ ஆன்காலஜி பற்றிய செமினாரில் கலந்து கொண்டான். இன்னும் பல துறைகளில் கால் பதிக்க ஆரம்பித்தான்.

ஆனால், இவ்வளவும் இருந்தும் நானியின் தோழர்கள் தனிமையும் புத்தகங்களும் அவனின் நோயாளிகளும்தான். அதைத் தவிர வேறு எதைப் பற்றியும் நினைக்கவில்லை. தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவன். சிறு வயது நிகழ்விற்குப் பின், தன் தமையனிடமும் தந்தையிடமுமே வரையறையுடன் தான் பழகி வந்தான். ஆனால், அப்படிப்பட்டவனுக்கும் மெல்லிய காதல் சாரலாய் விழ ஆரம்பித்தது, ரெஜினாவைப் பார்த்து.

ரெஜினா சார்லஸ்... அவனின் கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்தவள்... 25 வயது இளம்பெண்... அவன் வேலை செய்யும் அதே மருத்துவ மனையில் மகப்பேறு மருத்துவர்... அழகிய பெண்களுக்கான அத்தனை சாமுத்ரிகா லட்சணத்தையும் கொண்டவள்... ஆங்கிலோ இன்டியன் ஆதலால், சற்றே இந்திய நிறமும் சேர்ந்து தன் சுண்டியிழுக்கும் கண்களால் ஆண்களைக் கட்டிப் போடுபவள்... பார்க்க இந்தியத் தோற்றம் என்றாலும் அமெரிக்க மண் அவளின் குணத்தில், தன் வாசத்தைப் பதித்திருக்கும்... அப்படியாகப்பட்டவளிடம் அமைதியான நானி காதல் வயப்பட்டது எட்டாவது அதிசயமே.

காதல் என்றால் உடல் வியர்க்க, நடை தயங்க, கடிதம் கொடுத்து தெரிவிக்கப்பட்ட காதல் அல்ல... நானி, தன் மனதிற்குள்ளேயே சிறு சிறு துளிர் விட்டு வளர்த்த காதல்...

'அவங்களைப் பார்த்தால் சந்தோஷமா இருக்கு... அப்போ இது காதலா...?' என்று நானி தனக்குத் தானே

கேள்விகளை அடுக்கித் தன்னுள் கண்டுபிடித்த காதல், என்று நினைத்திருந்தாலும்...

உண்மையில், தன் தாயின் இறப்பிற்குப் பிறகு வறண்டு போன அவன் வாழ்க்கையில், ஹார்மோன்கள் பசுமை பரப்புவதற்காக உருவாக்கிக் கொண்ட காதல்தான் அவனுக்கு ரெஜினாவின் மீது வந்திருந்தது.

நானிக்கோ நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. இதுவரை அவளிடம் பேசியதே இல்லை என்பதில்லை. ஆனால், அவளுடன் ஒன்றாகப் பயணம் என்பது அவனுக்கு லேசான கிலியை அளிக்க,

அவன் பதற்றத்தைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்த ரெஜினா, "ஹா...ஹா... கமான் மேன்... சும்மா சொன்னேன்... விட்டா என் மேல் அட்டெம்ப்ட் டு ரேப் கேஸ் போட்டுடுவே போல... உன்னைக் கூட்டிட்டுப் போய் நான் என்ன பண்றது...? நீ ஒரு அம்மாஞ்சி... உனக்கு சொல்லிக் கொடுக்கிறதுக்குள்ளே விடிஞ்சிரும்..." என்று அவன் மனதைச் சிறுகச் சிறுக உடைத்து விட்டுத் தன்னுடன் வேலை செய்யும் ராபர்ட்டை அழைத்துக் கொண்டு காரில் ஏற... அவர்கள் இருவரும் இதழ் மாற்றி இதழ் சண்டை இட ஆரம்பிக்க, அதைப் பார்த்த நானி பதறிப் போனான்.

ராபர்ட்டின் கைகள் ரெஜினாவின் மேனியெங்கும் கொஞ்சி விளையாட ஆரம்பிக்க, நானியின் உடல் கூசிப் போனது. அவனுக்கு ரெஜினாவின் அமெரிக்கப் பண்பாடு தெரியும்தான்... ஆனால், இன்று அவன் கண் முன் னாடியே இதெல்லாம் நடக்கவும், அவனால் தாங்க முடியவில்லை. அந்த இடத்தை விட்டு ஓடி வந்தவன்,

தாங்க முடியாமல் காரை எடுத்துக் கொண்டு தன் வீட்டுக்குள் நுழைந்து கழிப்பறையில் அமர்ந்து அழ ஆரம்பித்தான்.

அவள் செயலை விட அவள் கூறிய வார்த்தைகள் அவன் மனதைத் தாக்க, அன்று அவன் மனதில் இரண்டாவது தடவையாக வலியை உணர்ந்தான். முதல் வலி தாயின் மரணம் உண்டாக்கியது என்றால், இரண்டாவது வலி காதலின் மரணம் உண்டாக்கியது.

என்னதான் நானி தவறான பெண்ணைக் காதலித்தாலும், அவன் காதல் தவறானது இல்லையே. ரெஜினாவைப் பற்றி முன்னரே அறிந்திருந்தாலும் அவனால் அவளை ஒரேயடியாகத் தூக்கி எறிய முடிய வில்லை. அவளே அவனை வெறுத்தாலும், அவனால் அவளை வெறுக்க முடியாத நிலையில் இருந்தான்.

இப்படியாக இரண்டு மாதங்கள் அமைதியாகச் சென்றது. ஒரு நாள் ரெஜினாவே அவனைத் தேடி வந்தாள். ஏதோ கோப்புகளைப் பார்த்துக் கொண்டிருந் தவன், அவளைப் பார்த்ததும் பதறி எழ, அவனைப் பார்த்து எரிச்சலுற்ற ரெஜினா,

“இப்போ எதுக்குப் பதறுறே...? நான் ஒண்ணும் பேய் இல்லை...” என்று கத்த,

நானி, “இல்லை... அது... அது வந்து...” என்று தயங்க,

ரெஜினா, “இதைப் பாரு... எனக்குச் சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது...? ஆர் யூ இன் லவ் வித் மீ...?” என்று கேட்க,

நானிக்கு வியர்த்தது. சட்டென்று பதில் சொல்லத் தயங்க,

ரெஜினா, "என்ன பேச மாட்டேன்றே... கேட்கிறே னில்ல... பதில் சொல்லு..." என்று வற்புறுத்த,

நானி ஒரு வழியாக, "ஆம்..." என்பது போல் தலையாட்டினான்.

ரெஜினா, "நினைச்சேன்... உன் பார்வை சரியில்லை யேன்னு நினைச்சேன்... சரி... வென் ஆர் யூ கோயிங் டு மீ...?" என்று தாம்பத்தியத்தை காபி குடிக்கப் போவது போல் சாதாரணமாகக் கேட்க, நானி உண்மை யிலேயே அதிர்ந்து,

"ரெஜினாஆஆஆ... நான் அதுக்காக... அப்படி... நினைக்கலை..." என்று திணறினான். அவனால் அப்படிப் பட்ட உறவை நினைத்தும் பார்க்க முடியவில்லை.

ரெஜினா முகத்தில் இப்போது புன்னகை அரும் பியது. "நீ வெர்ஜினா...?" என்று கேட்க,

நானிக்கு இன்னும் அதிர்ச்சிதான். என்னதான் மருத்துவனாக இருந்தாலும், அவனும் சாதாரண இளைஞன்தானே... ஆனாலும் தன் தயக்கத்தை விழுங்கி, "ஆம்..." என்பது போல் தலையசைக்க,

அவனைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்த ரெஜினா, "ஆனால், நான் வெர்ஜின் இல்லை... நானி.. அது உனக்குத் தெரியுமா...?" என்று கேட்க,

அவனும் சிறிது நேரத் தயக்கத்திற்குப் பின், "ஆம்..." என்பது போல் தலையாட்ட,

ரெஜினா, "தெரிஞ்சும் எப்படி என்னை லவ் பண்றே...?" என்று கேட்க,

நானி, "எனக்கு உன்னோட வெளிப்படையான குணம்தான் பிடிக்கும் ரெஜி... நான் இப்படித்தான்... யாருக்கும் நான் பதில் சொல்லத்தேவையில்லைன்னு இருக்கிற பெண் நீ... சில சமயம் உன்னோட செயல்கள் கஷ்டப்படுத்தினாலும், உன்னை நான் நிறைய வாட்டி அட்மயர் பண்ணிருக்கேன்..." என்று தன் வாழ்க்கையில் முதன் முறையாக அவ்வளவு பெரிய வாக்கியத்தை அவளிடம் பேச, அவளோ சிறிதும் சலனமின்றி,

"அப்போ, அதுக்குப் பேர் காதல் இல்லை நானி... உன் கிட்டே இல்லாத ஏதோ ஒண்ணை நீ என் கிட்டே ரசிக்கிறே.... அது எப்படிக் காதலாகும்...?" என்று கேட்க, நானி அதிர்ந்து போனான். ரெஜி தொடர்ந்தாள்...

"அப்படியே காதலாக இருந்தாலும், எனக்கு நீ வேண்டாம் நானி... நீ ரொம்ப நல்லவன்... அதனாலே தான் சொல்றேன், நீ எனக்கு வேண்டாம்... என்னை நீ லவ் பண்ணா உனக்கும் சந்தோஷம் இருக்காது, எனக்கும் சந்தோசம் இருக்காது. சுத்தத் தங்கத்தில் நகை செய்ய முடியாது நானி... அதே மாதிரிதான் நீயும்... வேற ஒரு நல்ல பொண்ணு உனக்குக் கிடைப்பா... வெயிட் பண்ணு..." என்று கூறி விட்டு, மின்னல் போல அவள் சென்று விட, தன் சக்தி முழுவதும் இழந்து போய் அமர்ந்து விட்டான் நானி.

அவள் வேண்டாம் என்று கூறியது கூடப் பரவாயில்லை. அதைக் காதலே இல்லை என்று கூறியதைத்தான் தாங்க முடியவில்லை. அந்த மருத்துவ

மனையில் யாரையுமே பார்க்க முடியாமல் உடனே கிளம்பி வீட்டுக்கு வந்து விட்டான். அமைதியாக யோசித்தால், ரெஜினா கூறியதில் இருந்த உண்மை அவனுக்கு விளங்கியிருக்கும். அவன் அவள் மேல் வைத்திருந்தது ஒரு வித ரசிப்புத்தன்மைதான்... காதல் அல்ல என்பது. ஆனால், அன்று அவன் உணர்ந்தது எல்லாம் அவளின் புறக்கணிப்புதான்... வலிதான்.

வீட்டிற்கு வந்தவன், நேராகச் சென்றது தந்தையின் அறைக்குத்தான்.

அழுது அழுது கண்கள் சிவந்து முகம் வீங்கி வந்த மகனைப் பார்த்துக் குணா அதிர்ந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அறைக்குள் வந்தவன் மண்டி யிட்டு அவர் காலைப் பிடித்துக் கொண்டு,

“அப்பா... நான் ஹாஸ்பிடல் போகலைப்பா... எனக்கு வேண்டாம்ப்பா... எனக்கு அசிங்கமா இருக்குப்பா... நான் மட்டும் தனியா இருக்கேன்பா... நான் புத்திசாலின்னு கூட வேலை செய்யறவங்களுக்குப் பிடிக்கலை... நல்லவன்னு சில பேருக்குப் பிடிக்கலை... நான் தனியா இருக்கேன்பா... நான் வைராக்கியமா இருந்தேன்பா, உங்க கிட்டே என் கஷ்டத்தைச் சொல்ல மாட்டேன்னு... ஆனால், என்னால் முடியலைப்பா. எனக்குச் செத்துடலாம் போல் இருக்குப்பா... நான் போகலைப்பா...” என்று கதற ஆரம்பித்தான் நானி.

ஆனால், குணாவோ அசையவில்லை. “உனக்கு என்னதான்டா பிரச்சனை.... நேக்கு உன்னோட இதே வாதனையாப் போயிடுத்து. இதைப் பாரு, உங்கம்மா ஆசை... இதை செஞ்சுதான் ஆகணும்...” என்று கூற,

நானி, "என் ஆசையும் கொஞ்சம் யோசிங்கப்பா... யாருமே என்னை ஒரு பொருட்டா மதிக்காத இடத்தில் என்னால் எப்படிப்பா இருக்க முடியும்...? எனக்கு நெஞ்சே வெடிக்கிறாப்பல இருக்குப்பா... செத்துடலாம் போல இருக்குப்பா..." என்று கூற,

குணா சற்றும் தயங்காமல் அவன் முகம் பார்த்தபடி, "சாவு... செத்துப் போனாலும் பரவாயில்லை. ஆனால், ஒரு டாக்டராகத்தான் செத்துப் போகணும்..." என்று கூற, நானி இப்போது வாயடைத்துப் போய் எழ,

அவனைத் தரதரவென இழுத்து வந்து அறையின் வெளியே விட்ட குணா,

"சின்ன வயசில் நீ இதே விஷயத்துக்கு அழுதே... ஞாபகம் இருக்கா? அதுக்கு பெல்ட்டை எடுத்து விளாசின மாதிரி இப்பவும் விளாச நேக்கு ஒரு நிமிஷம் போதும்... தோளுக்கு மேலே வளர்ந்துட்டியேன்னு பார்க்கிறேன்... போடா... போய்த் தொலை. என் கண்ணு முன்னாடி நிற்காதே..." என்று கூறி விட்டு, அவன் முகத்திற்கு எதிராகக் கதவைச் சாத்தினார்.

கதவை அடைத்தவர், 'எல்லாம் நல்ல குணம் தான்... அப்பப்போ வேதாளம் முருங்கை மரம் ஏறிடும்... நேக்கா தெரியாது என் மகனைப் பத்தி... எல்லாம் கையில் காசு பார்த்தா சரியாகிடும்... சீக்கிரம் ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கணும்... தன்னை நம்பி ஒருத்தி வந்தால் தான் இந்த விளையாட்டுத்தனம் போகும்...' என்று அவர் தந்தையாய் கணக்கு போட,

கதவின் இந்தப் புறம்... அந்த வார்த்தைகளில், அந்தச் செயலில் ஸ்தம்பித்து நின்றான் நானி. ரெஜினா

காயப்படுத்தியதை விட அவனின் மனம் இன்னும் புண்பட்டது. மரத்துப் போன நெஞ்சைக் கிளறி விட்டது குணாவின் சொற்கள். அன்றுதான் அவன் மாற்றத்திற் கான முதல் அஸ்திவாரம் தோண்டப்பட்ட நாள்.

பின்னாளில் நடந்த இரு நிகழ்ச்சிகள் அவனின் ரணப்பட்ட மனதைக் குத்திக் கிளறிப் பழுத்துச் சீழ்ப்பிடிக்க வைத்து, இப்போதைய நானியை ஜனிக்க வைத்தது.

"அங்கி... அங்கி.." என்று அந்த இரண்டரை வயது மழலை அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, விட மாட்டேன் என்று அடம் பிடிக்க, அதன் தாய் வேணி,

"ஸ்வாதி.... டாக்டர் அங்கிளை விடு... சட்டை கசங்கப் போகுது..." என்று அதட்ட,

நானி சிரித்து, "இருக்கட்டும் மேடம். சின்னப் பொண்ணுதானே... என்ன மேடம், இந்த மாசமும் வந்துட்டீங்களா...? என்ன பிரச்சனை...?" என்று கேட்க,

ஸ்வாதி கலகலவெனச் சிரித்தாள். ஸ்வாதி, தமிழ்நாட்டில் இருந்து சென்று அமெரிக்காவில் வேலையில் இருக்கும் சிவா - வேணி தம்பதியரின் மகள். அழகுக் குழந்தை... சைனா பொம்மை போல் இரட்டை ஜடையுடன் பால் நிறத்தில் மழலையில் கொஞ்சும் அழகே தனிதான்... கடந்த இரண்டு மாதமாக அந்த அழகியிடம் தான் சரணடைந்திருந்தான் அவன். 'வாரா வாரம் சளி, ஜுரம் என்று வந்து கொண்டிருந்த ஸ்வாதியைத் தற்செயலாக ஒருநாள் அவன் பார்க்க, அதுவே வழக்கமாகி, அவள் வரும்போதெல்லாம் இவனைப் பார்க்காமல் செல்வதில்லை என்றானது.

வேணி, "தெரியலை டாக்டர்... தினமும் மூச்சுப் பிரச்சனை இருக்கு. ஒரு வருஷமா ரொம்பக் கஷ்டப்படுறா. சளி, ஜுரம் வந்தால் போக மாட்டேங்குது..." என்று கூற,

அவன் கூறுவதற்குள் அங்கே நுழைந்த டாக்டர் ஜூலியன், நானியைப் பார்த்து எரிச்சலுடன், "நீ எதுக்கு இங்கே வந்தே... பீடியாட்ரிக்ஸ்லயும் மூக்கை நுழைக்கப் போறியா? இதைப் பாரு... நான் மத்தவங்களை மாதிரி இல்லை... என்கிட்ட உன் வேலையை வெச்சிக்காதே..." என்று ஆங்கிலத்தில், தான் ஒரு டாக்டர் என்பதையும் மறந்து கீழிறங்கி மிரட்ட,...

நானிக்கு அதிர்ச்சி எதுவும் இல்லை... அவனுக்குப் பழகியிருந்தது.

ஆனாலும் விடாமல், "டாக்டர்... இவளுக்கு ஏதாவது இம்யூன் டிஃபிசியன்சி இருக்கானு செக் பண்ணுங்க... அடிக்கடி வராளே... என் மேல உள்ள பகையை அப்புறம் வைச்சிக்கலாம்... எதுவும் ஆகிடாது. குழந்தையோட நலனைப் பாருங்க..." என்று அறிவுரைக்க,

ஜூலியன், "இதைப் பாரு எனக்குத் தெரியும்... 2 வயசுக் குழந்தைக்கு எப்படி இந்தப் பிரச்சனை வரும்... என்னத்தைப் படிச்சியோ நீ... என் விஷயத்தில் தலையிடாமல் உன் வேலையை மட்டும் பாரு. நான் எக்ஸ்ரே எல்லாம் பார்த்துட்டேன். ஜஸ்ட் மைல்ட் நியுமோனியா தான்..." என்று கூறி விட்டுத் தன் வேலையைத் தொடர,

நானி, "டாக்டர், எக்ஸ்ரே வேண்டாம்... பிளட் டெஸ்ட் எடுக்கலாமே...." என்று கூற,

ஜூலியன், "ஷட் அப். அண்ட் கெட் அவுட்..." என்று கத்த ஆரம்பிக்க, அவனும் வேறு வழியின்றி வெளியே வந்தான். ஆனால் ஸ்வாதி முழுமையாகக் குணமடைய வில்லை. சென்ற ஒரே வாரத்தில் மறுபடியும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டாள்.

இம்முறை நிலைமை மிகவும் மோசமானதாக இருந்தது. குழந்தை மூச்சு விடவே சிரமப்பட்டாள். நெஞ்சுக் கூடு மேலும் கீழும் அபாயமாக இறங்க, உடனே சுவாசப்பை பொருத்தப்பட்டது.

அவளைக் காண வந்த நானிக்கு மனதை அறுத்தாலும் வெளியே காட்டாமல், "குட்டிம்மா... என்ன பண்றீங்க... ஊசி போட்டாங்களா...?" என்று விசாரிக்க,

ஸ்வாதி, "ஆமா... ஃபைவ்..." என்று ஐந்து விரல் களைக் காண்பிக்க அவனுக்கே பாவமாகத்தான் இருந்தது.

"அங்கி... எனக்கு உன்னைப் பிச்சிருக்கு... நான் பெய்ய டாக்டராவேன்..." என்று கூற, அவன் உடல் தூக்கிப் போட்டது.

"அங்கி... தெதி பியர் பாரு...?" என்று தன் பொம்மையைக் காட்ட அவனுக்கு மனதை அறுத்தது.

வேணியும் சிவாவும் என்ன ஏதென்றே தெரியாமல் தங்கள் குழந்தையைக் கண்ணும் கருத்துமாகத் தான் பார்த்து வந்தனர்.

சிவா, "ஸ்வாதிக்கு என்ன பிரச்சனை டாக்டர்... எதுவுமே சொல்ல மாட்டேங்கிறாங்களே?" என்று கேட்க, அவனோ மெலிதாகப் புன்னகைத்தபடி வெளியேறினான்.

அந்த மழலையின் நிலை மனதை ஆட்டிப் படைக்க, அவன் அப்படியே பூங்காவில் அமர... அவன் தோளை ஆதரவாக ஒரு கரம் தட்டியது.

நிமிர்ந்து பார்க்க... அது ஆன்டர்சன் என்று தெரிய, உடனே எழுந்து நின்றவனை அமரச் செய்த அவர், "என்ன யங் சேப்... என்ன பிரச்சனை? முகம் ஒரு மாதிரி இருக்கு..." என்று கேட்க,

நானியோ பதில் கூறாமல் சிரிக்க...

ஆன்டர்சன், "எல்லாத்தையும் மனசுக்குள் போட்டு புதைச்சிக்கக் கூடாது, நானி... சொல்லு!" என்று ஊக்குவிக்க,

ஏனோ நானியால் இன்னதென்று கூற இயல வில்லை. அவரிடம் சொன்னால், அவர் தான் கூறியதைக் கேட்பார்தான். ஆனால் ஜூலியன் மனதில் தன்னைப் பற்றிய தவறான எண்ணம் வந்து விடும். எனவே ஜூலியனிடமே பேசி விடுவோம் என்று நினைத்த நானி,

"இல்லை டாக்டர்... இது சின்ன விஷயம்தான்... நானே பார்த்துக்கிறேன். முடியாத பட்சத்தில் உங்ககிட்ட வரேன், உதவிக்கு..." என்று கூற,

ஆன்டர்சன் மெல்லிய சிரிப்புடன் அவன் தோளைத் தட்டி விட்டு நடக்க ஆரம்பித்தார்.

"நான் அன்னைக்கே சொன்னேன், என் விஷயத்தில் தலையிடாதே. என் பேஷண்டிற்கு என்ன மாதிரி ட்ரீட் மெண்ட் கொடுக்கிறதுன்னு எனக்குத் தெரியும்... யூ கெட் அவுட்..." என்று வழக்கம் போல் ஜூலியன் கத்த...

நானி அதிர்ந்தே போனான்.

"ஜூலியன்... உங்களுக்குத் ஸ்வாதியோட நலனை விட நான் சொன்னதைச் செய்யக் கூடாதுங்கிற ஈகோ தான் அதிகமா இருக்குல்ல... ப்ளீஸ், ஜூலியன். உங்க ளைக் கெஞ்சிக் கேட்கிறேன். அவளைக் காப்பாத்துங்க..." என்று கூற,

ஜூலியன் இறங்கவே இல்லை. "உன் வயசு என் அனுபவம்... அவளுக்கு சி.ஓ.பி.டி. தான்... வேற ஒண்ணும் இல்லை. லங் ட்ரான்ஸ்ப்ளேன்டேஷன்-க்கு சொல்லி யிருக்கேன்..." என்று அதிலேயே விடாப் பிடியாக இருக்க,

நானி எரிச்சலில், "நோ... நோ... நோ... ஜூலியன்... அவளுக்கு வேற எந்த ப்ராப்ளமும் இல்லை. ஒரு பிளட் டெஸ்ட் எடுத்துப் பாருங்க... உங்களுக்கே புரியும்... அவளை உடனே ஐசோலேஷனிற்கு மாத்தணும்... அவ ஜெனரல் வார்டில் இருந்தா இன்னும்தான் மோச மாவாள்..." என்று கூற,

ஜூலியனிற்கு வந்த கோபத்தில், "நான் இவ்ளோ சொல்றேன்... இன்னும் அதிலயேதான் இருக்கியா?"

தன் மேஜையில் இருந்த பேப்பர் வெயிட்டை எடுத்து வீச, அது அவன் நெற்றியைப் பதம் பார்த்தது.

"அம்மாஆஆ..." என்று வலி தாங்காமல் நானி அலறிவிட, அங்கு ரவுண்ட்ஸ் வந்து கொண்டிருந்த ஆண்டர்சன், அவர்களின் வாக்குவாதத்தைக் கேட்டபடி வெளியே நின்றவர், அவன் குரல் கேட்டு உள்ளே வர... நானியின் தலையில் இருந்து ரத்தம் ஊற்றிக் கொண்டு இருந்தது.

மயக்கம் தெளிந்து எழுந்தான் நானி. ரத்தப் போக்கின் காரணமாக ஏற்பட்ட மயக்கம் அவனுக்கு இப்போதுதான் தெளிந்திருந்தது. அவன் அருகில் கவலை யோடு நின்றிருந்த ஆண்டர்சனைப் பார்த்துச் சிரிக்க,

அவர், "அப்போ நான் கேட்டப்பவே என்ன நடந் ததுன்னு சொல்லியிருக்கலாம்ல... இப்போ பாரு, நான் ஜூலியனை வேலை நீக்கம் செய்துட்டேன். ஆனா..." என்று தயங்க,

நானி, "ஆனா என்ன டாக்டர்...?" என்று கேட்க,

ஆண்டர்சன், "ஸ்வாதி கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் ரொம்ப சீரியஸ் ஆகி ரெஸ்பிரேட்ரி ஃபெய்லியரில் இறந்துட்டாள்..." என்று தயக்கத்துடனே கூற,

நானி, "என்ன?" என்று அதிர்ந்து போனான்.

ஆண்டர்சன், "ப்ளீஸ், காம் டவுன் நானி... காம் டவுன்... எனக்கு உன் மனநிலையைப் புரிஞ்சுக்க முடியுது. ஆனா மரணத்தை நம்மால் தடுக்க முடியாது... அவள் விதி முடிஞ்சது. நம்மால் முடிஞ்ச ட்ரீட்மெண்ட் கொடுத் தோம். அதுக்கு மேல் தெய்வம் தான் மனசு வைக் கணும்..." என்று கூற,

நானி, "இல்லை... இல்லை... இல்லை... அவளைக் காப்பாத்தியிருக்கலாம்... சீக்கிரமே ட்ரீட்மெண்ட் ஸ்டார்ட் பண்ணியிருந்தால் காப்பாத்தியிருக்கலாம். உங்க எல்லோ ரோட ஈகோவாலதான் அவ இறந்துட்டா. இதென்ன ஹாஸ்பிடலா...? சீ... சுடுகாடு. பிணத்துக்குக் கூடக்

கொஞ்சம் ஈரம் இருக்கும்... உங்க மனசில் வஞ்சமும் ஆங்காரமும் தான் இருக்கு...

"உங்களோட ஈகோவுக்குப் பலி இரண்டரை வயசுக் குழந்தை. அய்யோ எரியுதே... அம்மா, என்னை ஏம்மா இந்தச் சாக்கடைக்குள்ள தள்ளினே... என்னையும் உங்க கூடவே கூட்டிட்டுப் போயிருக்கலாமே... ஸ்வாதி... அவளைப் பார்க்கணும்... நான் பார்க்கணும்..." என்று எழப் போக,

அவனைத் தடுத்த ஆண்டர்சன், "அவங்க போயிட் டாங்க நானி... ப்ளீஸ், நீ சொல்றதெல்லாம் எனக்குப் புரியுது... ஆனா கொஞ்சம் நிதானமா யோசி..." என்று கூறியதெல்லாம் கேட்காமல், நானி ஓடிப் போய் ஸ்வாதி யின் படுக்கையின் பக்கத்தில் நின்றான்.

அங்கே அவள் இல்லை... மண்டியிட்டு அந்தப் படுக்கையின் அருகிலேயே அமர்ந்திருக்க... அங்கு வந்த செவிலியர் ஒருவர், "டாக்டர்... ஸ்வாதி இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாளாம்... அவங்க அம்மா, அப்பா கொடுத்துட்டுப் போனாங்க..." என்று கூறி விட்டு, ஒரு பார்சலைக் கொடுக்க...

நானி அதைப் பிரித்துப் பார்க்க... அதனுள் சிரித்துக் கொண்டிருந்தது அவளின் உயிரான டெடி பியர்.

நானிக்கு அதைப் பார்த்ததும் அடக்க முடியவில்லை. முகத்தை மூடிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ,

ஆண்டர்சன், "நானி... இப்படி சென்சிடிவ்வா இருந்தால் உன்னால் இந்த வேலையில் நீடிச்சு இருக்க முடியாது. மரணம் நம்ம வாழ்க்கையில் ஒரு பகுதி... உன் மனசைத் திடப்படுத்திக்கோ..." என்று அறிவுரைக்க,

நானி, "மரணம் என்னைப் பாதிக்கலை... அதைத் தவிர வேற வழியில்லைன்னா மரணம் கூட ஒரு சிறந்த சிகிச்சைதான்... ஆனால் ஸ்வாதி விஷயத்தில் அப்படி இல்லை. நாம நினைச்சிருந்தால் காப்பாத்தியிருக்கலாம். அவளுக்கு இருந்தது, எஸ்.சி.ஐ.டி. எதிர்ப்புக் குறைபாடு. அதுதான் வேர். அதை விட்டுட்டு நோயை மட்டுமே குணப் படுத்தினதால் வந்த வினை..." என்று அடுக்கிக் கொண்டே போக ஆண்டர்சன் அதிர்ந்தார்.

சிறிது நேரத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட அவளின் எலும்பு மஜ்ஜை... ரத்த மாதிரிகளை ஆராய, அதுவும் அந்த நோயை உறுதி செய்ய,

ஆண்டர்சன், "சாரி நானி... எனக்கே அசிங்கமாத் தான் இருக்கு... மன்னிச்சுடு..." என்று கூறிவிட்டு நிமிர அதைக் கேட்க நானி அங்கே இல்லை... அந்த டெடி பியரும்தான்...

ஒரு வாரம் நானி மருத்துவமனைக்கே வர வில்லை... ஆண்டர்சன் தான் வர வேண்டாம் எனக் கூறி யிருந்தார்... கொஞ்சம் கொஞ்சமாக ஸ்வாதியின் நினைவு களில் இருந்து அவன் வெளியில் வந்ததே கடினமான விஷயம்தான்.. அதைப் பற்றி வீட்டில் இருந்த யாரிடமுமே அவன் கூறவில்லை. அவனுக்கு அவனே மருந்தானான்.

ஆனாலும் ஒரு வழியாகத் தன்னைத் தானே தேற்றி மருத்துவமனைக்கு வந்தவனுக்கு அடுத்ததாக ஒரு கண்டம் காத்திருந்தது.

"ப்ளீஸ், நானி... இவனை நீ காப்பாத்திதான் ஆக ணும். நம்மளை நம்பித்தான் எஃப்.பி.ஐ. அவனை

இங்கே அழைச்சுட்டு வந்திருக்காங்க... நம்ம மறுத்தா பெரிய பிரச்சனை ஆகிடும்..." என்று கூற,

நானி, "டாக்டர்... அவன்... ஒரு சைக்கோ. சின்னக் குழந்தைகளை ரேப் பண்ணி... ஷிட்... சொல்லவே நாக்கு கூசுது... அவனுக்குச் சிகிச்சை கொடுத்தால் அதைப் போல் பாவம் இந்த உலகத்திலேயே இல்லை..." என்று கூற,

ஆன்டர்சன், "நானி... நாம சபதம் எடுத்துட்டுத் தானே வரோம். விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுக்கக் கூடாதுன்னு. ப்ளீஸ், நானி... இந்தச் சர்ஜரியை நீ செஞ்சு தான் ஆகணும்... நீதான் இதில் எக்ஸ்பெர்ட். ஸ்ட்ரோக் வந்ததில் மூளையிலிருக்கும் ரத்தக் குழாயில் லேசா ப்ளீடிங் இருக்கு... நல்லவேளை கோமாவுக்குப் போகலை. சீக்கிரமா சர்ஜரி வைச்சிக்கிட்டா அவனைக் காப்பாத்திட லாம். இன்னைக்குச் சாயந்திரம் சர்ஜரி வைச்சிக்கலாம்னு சொல்லியிருக்கேன்... ப்ளீஸ், நானி... இது போலீஸ் கேஸ். அதான்..." என்று கூற,

நானி, "டாக்டர்... எனக்கே சிரிப்பா இருக்கு... நான் வேணும்னு நினைச்ச ஒரு குழந்தைக்கு என்னால் சிகிச்சை கொடுக்க முடியலை... ஆனால் நான் வெறுக்கிற, வாழவே உசிதமில்லாத ஒருத்தனைக் காப்பாத்தச் சொல் றீங்க... இதுக்காகவா நான் மெடிசின் படிச்சேன்... சரி... இதில் நான் மறுத்து என்னாகப் போகுது... ஓ.கே. டாக்டர்..." என்று கூற,

ஆண்டர்சனுக்கு மகிழ்ச்சி, வருத்தம் இரண்டும் அலை மோதியது... ஆனாலும் அதை நானியிடம் காட்ட வில்லை.. அவரால் நானியின் மனதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அவன் மனதை பக்குவப்படுத்துவதும்

அவசியம் என்று நினைத்தவர், அவனை இவ்வேலையில் இணைத்தார். ஆனால் அதுதான் பெருந் தவறாகிப் போனது.

"நர்ஸ்... பி.பி. லெவல் பார்த்துட்டே இருங்க... அப்புறம் பிளட் சுகர் லெவலும் மெயிண்டெயின் ஆகட்டும். சுகர் குறைஞ்ச மாதிரித் தெரிஞ்சா டெக்ஸ்ரோஸ் கொஞ்சம் கனெக்ட் பண்ணுங்க..." என்று கூற,

"டாக்டர்... நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..." என்று அழைத்தான் மார்ட்டின்.

மார்ட்டின் ஒரு சைக்கோ... 5 வயது முதல் 10 வயது குழந்தைகளைக் கடத்தி வைத்து பாலியல் வன்புணர்ச்சி செய்து கொலை செய்தவன்... அவனையும் காப்பாற்ற காவல்துறை எடுத்த முயற்சிதான் நானியை எரிச்சல் அடையச் செய்ய...

இப்போது மார்ட்டின் அழைத்ததும், எரிச்சலை அடக்கி, "என்ன..?" என்பது போல் பார்க்க,

மார்ட்டின், "நான் பிழைச்சிடுவேன் தானே... எனக்கு ஒண்ணும் ஆகாதே..." என்று கேட்க,

நானிக்குச் சிரிப்புதான் வந்தது. "நீ பிழைக்க மாட்டேனு சொல்றதுக்கு எனக்கும் ஆசைதான்... ஆனா பார்ப்போம்.. சர்ஜரியில் என்னாகுதுன்னு.." என்று தன்னை மீறிக் கூறிவிட,

மார்ட்டின், "ஹாஹா... டாக்டர்... நான் கொலைகாரன் தான் சைக்கோதான்... உங்களுக்கு என்னைப் பிடிக்காததில் ஆச்சரியம் இல்லை... ஆனால் நான் சொல்றேன். உங்கள் கையில் வந்தவரைக் காப்பாற்றாமல்

இருக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். உங்களைப் பத்தி கேள்விப்பட்டிருக்கேன்..." என்று கூற,

நானி முகத்தைத் திருப்பி, "சே.. வாயை மூடு... சின்னக் குழந்தைகளை... சே... அதுங்க உன்னை என்னடா செஞ்சது... உன் உயிர் வெல்லக்கட்டியா இருக்குல்ல.. சத்தியமா சொல்றேன், நீ செத்துப் போறதுதான் நல்லது..." என்று கத்த ஆரம்பிக்க,

மார்ட்டின் சிரித்தான். "எல்லாக் கொலைகாரனுக்கும் ஒரு நியாயம் இருக்கு டாக்டர்... சின்னக் குழந்தைகள் எதிர்க்காது. ஏதோ கடவுள் என்கிற ஒரு உணர்வு வரும் பாருங்க... அதுதான்... அதுக்கு அடிமையாகித்தான் நான் எல்லாத்தையும் செஞ்சேன். இதில் தப்பென்ன இருக்கு..." என்று கேட்க,

நானிக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

மார்ட்டின் தொடர்ந்து, "உங்க முகமே சொல்லுது நீங்க அப்பாவின்னு... அதனால் எந்தப் பேச்சும் இல்லாமல் என்னைக் காப்பாத்திடுங்க, டாக்டர்... காப்பாத்தணும். சரியா...?" என்று கூறிக் கொண்டே செல்ல,

நானி அங்கிருந்து ஓடிச் சென்று, தன் அறையில் வாஷ்பேஷினில் குடலே வெளியில் வரும் அளவிற்கு வாந்தி எடுத்தான். கிட்டத்தட்ட பத்து நிமிடங்கள் வயிற்றைக் காலி செய்தவுடன் எழுந்து மண்டியிட்டு அமர்ந்தவனின் உதிரம் கொதிகலனாகக் கொதித்தது.

**மா**லை 4.00 மணி... 6 மணிக்கான ஆபரேஷனிற்கு ஏற்பாடுகள் முழு வீச்சில் நடந்து கொண்டிருந்தன.

நானி, தன் மன நிலையை ஓரளவு சமனப்படுத்தியி ருந்தான்... அப்படிக் கூறுவதை விட மறக்க வைத்திருந் தான். அதனால்தான் ஓரளவு நடமாட முடிந்தது.

ஏதோ கையெழுத்து இடுவதற்காக ஒரு காவலர் கீழே செல்ல, மார்ட்டினிற்குச் சில மருந்துகள் வாங்க அவனுக்குத் துணையிருந்த இன்னொரு காவலரும் சென்றிருந்தார். ட்ரான்ஸ்மீட்டர் எனப்படும் கண்டறிதல் கருவி அவனிடம் பொருத்தப்பட்டிருப்பதால், எங்கே தப்பிச் சென்றாலும் பிடித்து விடலாம்.

எனவே அவர்கள் கூடவே இருக்க வேண்டும் என்பதில்லை. அவன் ஒரு அறையில் இருக்க, அதன் பக்கத்து அறையில் நானி சில கோப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அருகில் இருந்த அறையில் ஏதோ சத்தம் கேட்க, அவன் ஓடிச் சென்று வாசலில் நிற்க, அங்கே,

சி.சி.டி.வி. கேமராவை உடைத்தபடி ஒருவன் நின்றிருந்தான்.

"என் 5 வயசுப் பொண்ணைக் கற்பழிச்சுக் குழி தோண்டி புதைச்ச உனக்கு ராஜ வைத்தியமா...? நீ உயிரோடவே இருக்கக் கூடாது. இப்போதான் என் மகள் ஆத்மா சாந்தி அடையும். ஜெனி... இது உனக்காகத்தான் மகளே..." என்றபடி தன் பாக்கெட்டில் இருந்து ஏதோ ஒரு மாத்திரையை எடுத்தான்.

"இல்லை... இல்லை..." என்ற மரண பயம் மார்ட்டின் கண்களைத் தெறிக்க வைக்க, அங்கே நின்ற நானியைப் பார்த்தவன்,

"டாக்டர்... காப்பாத்துங்க... காப்பாத்துங்க.." என்று கத்த,

நானி அவனையும் மார்ட்டினையும் மாறி மாறிப் பார்த்து,

அவனைக் கொல்ல வந்தவனிடம், "செய்..." என்று கூறினான். அவன் மனதுதான் மரத்துப் போயிருந்ததே. அந்தச் சமயத்தில் அவன் மருத்துவனாக அல்ல... சாதாரண மனிதனாகத்தான் முடிவெடுத்தான். அவ்வாறு கூறியவுடன், கொல்ல வந்தவன் சயனைட் மாத்திரையை எடுத்து அவன் வாயில் தள்ள,

"நோ... நோ..." என்றபடி அவன் ஒரே நிமிடத்தில் மரணத்தைத் தழுவினான்.

வந்தவன், "ஹா... ஹா... ஜெனி... சந்தோஷமாக இருக்கேன் ஜெனி... உன்னைக் கொன்னவன் செத்துட் டான்... செத்துட்டான்..." என்று அங்கேயே உட்கார்ந்து புலம்ப ஆரம்பித்தான். பித்துப் பிடித்தாற் போல் சிரித்தான்.

நானியின் முகத்திலும் ஒரு விதச் சிரிப்புப் பூத்தது. நான் வேலைக்குச் சேர்ந்ததில் இருந்து சாதித்த வெற்றியை அவன் அன்றுதான் உணர்ந்தாற்போல் இருந்தது அந்தச் சிரிப்பு.

அப்போது அங்கு வந்த ஆன்டர்சன், கண நேரத்தில் அனைத்தையும் கவனத்தில் பதித்தார். பித்துப் பிடித்தாற்போல் ஒருவன் சிரித்திருக்க... நானி ஒரு பக்கம் புன்னகைக்க... நடுவில் பிணமாகக் கிடந்த மார்ட்டினைப் பார்த்தவர், என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்து,

"நானி... வா... வான்னு சொல்றேனில்லை..." என்று அவனை இழுத்து வந்தார்.

அவன் அங்கே நின்றால், போலீஸ் அவனையும் கைது செய்து விடும் என்று அவருக்குத் தெரியும். அந்தத் தகப்பனையும் அழைக்க, அவனோ...

"எனக்கு இனிமே ஒண்ணுமில்லை டாக்டர்... நான் சரணடையத்தான் போறேன். டாக்டர் பேரை நான் வெளியே சொல்ல மாட்டேன்... போங்க..." என்று கூற, அவனை நன்றியுடன் பார்த்தபடி நானியை இழுத்து வந்தவர், தன் அறைக்குள் வந்ததும் அவனை ஓங்கி ஒரு அறை அறைய,

அப்போதுதான் சுயநினைவிற்கு வந்தவன், "டாக்டர், நான்... நான் அவனைக் கொன்னு... என்னை விடுங்க... நான் சரணடையணும்... விடுங்க... விடுங்க..." என்று கத்த,

ஆண்டர்சன், "நானி... உன் எதிர்காலமே போயிடும். அவன் சாக வேண்டியதுதான்... அதான் போயிட்டான். இதில் எந்தத் தப்பும் இல்லை... சும்மா இரு..." என்று அடக்க,

நானி, "அய்யோ... டாக்டர், ஒரு உயிர்... அவன் நல்லவனோ கெட்டவனோ... ஒரு உயிர் டாக்டர்... எனக்குள்ளே இவ்ளோ குரூரமா...? என் கண் முன்னாடி அப்படின்னா... நான் டாக்டர் இல்லையே... அய்யோ... நான் மிருகம்... நான் மிருகம்... நான் ஜெயிலில்தான் இருக்கணும். விடுங்க..." என்று திமிர,

ஆண்டர்சன், "நீ செஞ்சது டாக்டராத் தப்புதான்... மனுஷனாத் தப்பில்லை... இப்போ நீ ஜெயிலுக்குப்

போனா உன் வாழ்க்கையே போயிடும். நினைச்சுப் பாரு... ஒரு இஞ்செக்ஷன் போடுறேன்... நல்லாத் தூங்கு... சரியாகிடும்..." என்று அவன் திமிரத் திமிர, மயக்க மருந்தைச் செலுத்த, அவன் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அதற்குள் எல்லாம் நடந்து முடிந்து விட்டிருந்தது. கொன்றவன் சரணடைந்ததால், காவல்துறை அதற்கு மேல் நோண்டவில்லை. நானியின் பேரும் வெளிவர வில்லை. ஆனால், நானியால்தான் அந்தக் கொலையில் இருந்து வெளிவர இயலவில்லை.

"ஒரு உயிர் போயிடுச்சே, என் கண்ணு முன்னாடி... நான் டாக்டர் இல்லை... இல்லை..." என்று அவன் மனது அனற்ற ஆரம்பிக்க, ஆன்டர்சன்தான் அவனை அடக்க வழியின்றி நொந்து போனார்.

"நான் தப்புப் பண்ணிட்டேன்... தப்புப் பண்ணிட் டேன்... அய்யோ... முடியலையே...! என்னால் ஒரு உயிர் போச்சே...! கொன்னுட்டனே...! என்னால் தாங்க முடியலையே...! ஆண்டவா...! நான் கேவலம்... நான் அசிங்கம்..." என்று அவனாகவே புலம்ப ஆரம்பிக்க,

ஆன்டர்சன் ஒரு முடிவுக்கு வந்தார்.

"நான் ஒரு வழி சொல்றேன், கேட்கிறியா...?" என்று கேட்டவர், அவனிடம் போதை மாத்திரைகளைக் கொடுத்து,

"இப்போ நீ உன்னை மறக்கணும்... அதுக்கு நீ இதைச் சாப்பிடு... இது தப்புதான்... ஆனால், நானே சில சமயம் இதோட உதவியில்தான் வாழுறேன்.. டாக்டர்ன்னா என்ன, அவனும் மனுஷன் தானே...! உன்னைப்

பொறுத்தவரை இது போதை இல்லை... மருந்து...” என்று கொடுக்க,

சற்றும் தயங்காமல் அதை உட்கொண்டான். அவனைப் பொறுத்தவரை அந்த வலியில் இருந்து வெளியில் வர வேண்டும். அவ்வளவுதான். அதை எடுத் தவனுக்கு எல்லாம் மாயமாகியது. அந்த மாயலோகம் அவனை வரவேற்றது. அதில் அவன் குற்றவாளியாக இல்லை... அது அவனுக்குப் பிடித்தது.

அமைதியாக எழுந்து தள்ளாடியவாறே நடந்து சென்றான். ஆன்டர்சனின் கண்களில் நீர் தளும்பியது. அந்த நேரத்தில் அவர் செய்தது சரியே... ஆனால், நானியால்தான் அதை விட்டு வெளியே வர இயல வில்லை. அவனின் நாசூக்கான மனம் கெட்டிப்பட ஆரம் பித்தது. மென்மையான குணம் மாற ஆரம்பிக்க, ஏதோ ஒரு கிளப்பிற்குச் சென்று முதன் முறையாக மது பானத்தின் துணையை நாடினான்.

ஒவ்வொரு துளியும் விஷமாகக் கரித்தாலும், ஏதோ ஒரு சாந்தியை அளித்தது. போதை மாத்திரையுடன் சேர்ந்து மதுபானமும் அவன் மதியை மயக்கிய வேளை, ரெஜினா வந்தாள்.

“ஹேை... நானி... இங்கே... நீயா...? நீ குடிப்பியா...? என்னாச்சு மேன்...?” என்று உண்மையான கவலையுடன் கேட்க,

நானி பேசவில்லை. மயங்கிய மதியை, அவளது வதனமும் மயக்க, ரெஜி அவனை உலுக்கி, “நானி... உன் முகமே சரியில்லை... என்னாச்சு...?” என்று விசாரிக்க, அவளை இறுக்கியணைத்தான் நானி.

"ரெஜி... ஐ... நீட் யூ... பிசிக்கலி... பேட்லி... ப்ளீஸ் டேக்... மீ..." என்றவனுக்கு அவள் பதில் கூறும் முன், அவள் இதழ்களைச் சிறை செய்தான் அவன். அந்த முத்தத்தில் சத்தியமாகக் காதல் இல்லை... எதிலிருந்தோ தப்பிக்கும் அவசரம்தான் இருந்தது.

"ஐ... நீட்... யூ..." என்று புலம்பிக் கொண்டே அங்கிருந்த ஹோட்டலின் அறைக்கு அவளை இழுத்துச் சென்றான்.

ரெஜினாவால் அவனை வேண்டாம் என்று தள்ள முடியவில்லை. அவனின் உடல் வேகவேகமாக அவள் மேல் நிழலாகப் படர ஆரம்பிக்க, உணர்ச்சிகளின் வேகத் திற்கு இருவருமே அடிமையானார்கள். உணர்ச்சிகளில் ரெஜினா மூழ்க, துக்கம், குற்றவுணர்வு, சுயப்பச்சாதாபம் போன்ற உணர்ச்சிகளில் நானி மூழ்க, அங்கே தாம்பத்தியம் கரும்புச் சக்கையாகக் கடித்து மென்று துப்பப்பட்டது.

ஒரு வழியாக அனைத்தும் முடிய, ரெஜினா களைப்பால் உறங்க, நானிக்குப் போதை தெளிய ஆரம்பித்தது. ஒன்றன் பின் ஒன்றாக அவன் செய்த அத்தனை தவறுகளும் ஞாபகம் வர, துடித்துப் போனான். எழுந்தவன் தன் மேல் படர்ந்திருந்த ரெஜினாவைத் தள்ளிப் படுக்க வைத்தபடி குளியலறைக்குள் வந்தவன், கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான்.

"அய்யோ...!" என்று பெருங் குரலெடுத்து அழத் துவங்கினான்.

பெண்கள் மட்டும்தான் கற்பிழந்தால் அழுவார்களா என்ன..? அங்கே ஓர் ஆண்மகனும் கதறினான். கிட்டத்

தட்ட மூன்று மணி நேரம் அமுதவனின் மனம் இறுக ஆரம்பித்தது. அதுதான் அவன் கடைசி அழுகை. இனித் தான் எதற்காகவும் அழுவதில்லை என்று உறுதி பூண்டவன், மருத்துவத் தொழிலையும் விட்டு விடுவதாக ஆன்டர்சனிடம் தெரிவித்தான்.

அவர் கொடுத்த போதை மாத்திரைகளை எடுத்துக் கொண்டவனுக்கு, எல்லாம் சரியாகத் தோன்ற ஆரம் பித்தது.

ஆன்டர்சன், அவனைத் தண்டனை பெற வைத் திருந்தால் அவனுக்கு இந்த நிலை வந்திருக்காது. எனவே நானியே தனக்குத் தண்டனை கொடுக்க ஆரம்பித்தான். ஆம்... போதைக்கு அடிமையானான். மது, மாதுக்கும் அடிமையானான். மருத்துவத்தையும் விட்டான். இதைத் தான் தண்டனையாக நினைத்தான். மேலும் உறக்கம் கலைந்த ரெஜினா முன் போலன்றி, இப்போது அவனை ஏக்கத்துடன் பார்த்து,

"யூ... ஸ்டேலியன்... ஐ திங் ஐ ஆம் ஃபாலிங் ஃபார் யூ.. இதை எல்லாம் மறைச்சு எப்படி அப்பாவி மாதிரி நடிச்சே...?" என்று கேட்க, அவனால் ஒரு விரக்திச் சிரிப்பைத்தான் உதிர்க்க முடிந்தது.

ரெஜி, "ஓ.கே. அடுத்த டேட் எப்போ வெச்சிக் கலாம்...?" என்று கேட்க,

நானி நக்கலாக, "ஏன்...?" என்று கேட்க,

ரெஜினா, "ஐ லைக் இட் மேன்... இப்போ நீயும் இப்போ என்னை மாதிரி பேட் பாயாகிட்டே இல்லை..." என்று கூறிச் சிரிக்க,

நானி, "ஆமா ரெஜி... நான் பேட் பாய் தான்... தட்ஸ் வை யூ ஆர் நோ லாங்கர் அட்ராக்டிவ் டு மீ..." என்று கூறி விட்டுத் தன் சட்டையை மாட்டிக் கொண்டு, அறையை விட்டு வெளியேற, ரெஜினா ஒருவித அதிர்வுடன் அவனைப் பார்க்க,

நானியோ அதைக் கண்டு கொள்ளாமல் சிரித்தபடி வெளியேறினான். ஆம்... நானி மாறி விட்டான்.

## 22

தன் கடந்த காலத்தைப் பற்றிக் கூறி முடித்தவன், முன்போல் அழவில்லை. மிச்சம் மீதி இருந்த போதை தெளிந்து, கண்கள் நிர்மலமாக ஜன்னல் பக்கத்தில் தெரிந்த வெளியுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. ஆனால், அவன் உணர்ச்சிகளின் மிகுதியில் இருக்கிறான் என்பதை நடுங்கும் அவன் கைகளே காட்டிக் கொடுத்தது. உடல் மார்கழிப் பனியில் சில்லிட்டுப் போயிருக்கக் கைகள் நடுங்கிக் கொண்டிருக்க, கண்கள் மட்டும் விரக்தியின் உச்சத்தில்.

மெல்ல மீண்டவன், "இதைத்தான்... இந்த மாதிரி நான் ஆகிடக் கூடாதுன்னுதான் எனக்கு நானே முகமூடி மாட்டுக்கிட்டேன். என்னை நாலு பேர் திட்டுறதைக் கூட என்னால் தாங்கிக்க முடியும்... ஆனால், பரிதாபப்படுறதை என்னால் தாங்கிக்க முடியாது. என்னடா இவன் இப்படி ஒரு கையாலாகாதவனா இருக்கானே என்று என்னைக் கேவலமாப் பார்க்கிறதுக்கு... சே... இவனா அப்படின்னு

அருவருக்கிறது எவ்வளவோ பரவாயில்லை..." என்று மெல்லிய குரலில் கூற,

அதை ஜானகி கண்ணுற்றிருந்தது ஓரிரு நிமிடங்களே. அவனை ஒரு நிமிடம் நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் சட்டென்று ஒரு மாற்றம் வந்து,

"இப்போ நீ என்ன சொல்ல வர்றே...? மேற்கூறிய காரணங்களினால் ரகுநந்தன் நானியாகி விட்டான்... அது தானே... சரி, இப்போ அதுக்கு என்ன பண்ணணும்...? நீ நல்லவன்னு நான் ஒத்துக்கணுமா...? சரி ஒத்துக்கிறேன்..." என்ற ஜானகியின் குரலில் இருந்தது நக்கலா... இல்லை வேறு எதுவுமா என்று ஆனானப்பட்ட நானியாலேயே கண்டு பிடிக்க இயலவில்லை.

அவளையே அவன் உறுத்துப் பார்க்க,

"இதைப் பார் நானி... இப்பவும் சொல்றேன்... இப்போ நீ செய்துட்டு இருக்கியே... அதுவும் கையாலாகாத் தனம்தான். அவன், எவனோ ஒருத்தன்... வாழத் தகுதியே இல்லாதவன்... அவன் செத்தான்னு மாறினேன்னா, இதில் என்ன அர்த்தம்...?" என்று கேட்க,

நானி, "நான் அவன் செத்துப் போயிட்டானேன்னு ஒண்ணும் கஷ்டப்படலை. அவன் நல்லவனோ கெட்டவனோ... ஒரு உயிர்... ஒரு டாக்டரா என் கண்ணு முன்னாடி ஒருத்தனோட உயிர் போறதில் நான் சந்தோஷப்பட்டிருக்கேன்னா... நான் டாக்டரா இருக்கவே தகுதியில்லைன்னு அர்த்தம். இரண்டாவது காரணம், ஒரு பக்கம் நான் காப்பாத்தணும்னு நினைச்ச ஸ்வாதியைக் காப்பாத்த அனுமதியளிக்காமல், ஒரு கேவலமான

சைக்கோவைக் காப்பாத்த என்னை வற்புறுத்திய அதே தொழில் மேலே இருந்த வெறுப்பு ஒரு புறம்.

"ஒரு சாதாரண மனுஷனா ஒருத்தன் அந்த சைக்கோவைக் கொலை பண்றான். ஆனால், நான் வைத்தியம் பார்த்துக்கிட்டு இருக்கேன்... இதுக்காகவா நான் டாக்டருக்குப் படிச்சேன்... அந்த விரக்தி ஒரு புறம்... இதே ஆன்டர்சன் என்னை ஜெயிலுக்குப் போக வெச்சிருந்தா நிம்மதியாப் போயிருப்பேன்... அதையும் செய்ய விடாமல் என்னை வாழ்நாள் முழுக்கக் குற்றவுணர்ச்சியில் இருக்க வெச்சிட்டார்... இதெல்லாம் சேர்ந்து நான் உயிரோட இருக்கிறதே பெரிய விஷயம். இதை மூளை கொண்டு பார்த்தால் புரியாது... மனசு சொல்றதைக் கேட்டாத்தான் புரியும். இட்ஸ் ய கைன்ட் ஆஃப் எமோஷனல் ட்ராமா டாம்ன் இட்..." என்று கத்த,

ஜானகி, "எனக்கு இந்த மாதிரி தஸ்ஸு புஸ்ஸுன்னு இங்கிலீஷ்ல எல்லாம் பேச வராது நானி... நான் எட்டாங் கிளாஸ்தான்... அதனால், நான் செஞ்ச முட்டாள் தனத்தைக் கூட ஏத்துக்கலாம். ஆனால், நீ செஞ்ச முட்டாள்தனம்தான் இருக்கிறதிலேயே பெரிசு. சரி, நான் ஒத்துக்கிறேன்... உன்னோட நுணுக்கமான உணர்வுகளை என்னால் புரிஞ்சுக்க முடியுது...

"அன்னைக்கு இருந்த சூழ்நிலையில் யார் மேலேயும் தப்புச் சொல்ல முடியாது... நீ அந்தக் கொலைக்கு ஒத்துழைச்சதோ... ஆன்டர்சன் உன்னைத் தடுத்ததோ... ஏன்... உனக்குப் போதை மருந்து தந்தது கூட என்னைக் கேட்டாத் தப்பு இல்லைதான். ஏன்னா அவர் அதைத் தரலைன்னா நீ தற்கொலைக்கு முயற்சி செஞ்சிருப்பே...

அவ்வளவு ஏன்... நீயும் ரெஜினாவும்... சேர்ந்தது கூட எனக்கு அவ்வளவா குத்தலை..." என்றவளுக்கு, ஏனோ தொண்டை அடைத்தது.

கமறியபடி, "ஆனா நீ உனக்குக் கிடைத்த பரிசை, வரமான டாக்டர் தொழிலை விட்டே இல்ல... அதுதான் முட்டாள்தனம். வாழ்க்கையில் எல்லாமே நமக்கேத்த மாதிரி, நாம நினைச்ச மாதிரி நடக்காது நானி... இந்தப் பூமியில் இருக்கும் புல் பூண்டில் இருந்து நாம எல்லாரையும் படைச்சது கடவுள்... வருஷா வருஷம் பூகம்பம், சுனாமி, எரிமலை, கொந்தளிப்புன்னு பல ஆயிரம் பேர் இறக்கிறாங்க... அதுக்காகக் கடவுள், 'அய்யய்யோ... நான் தப்புப் பண்ணிட்டேன்'னு படைக்கிறதை நிறுத்திடுறாரா..? சொல்லு...

"அதே மாதிரிதான் மருத்துவத் தொழிலும்... எல்லாருக்குள்ளேயும் ஒரு கெட்டவன், ஒரு சைக்கோ ஒளிஞ்சுக்கிட்டுதான் இருக்கான். உன் விஷயத்தில் அவன் ஒரு நிமிஷம் வெளியே வந்து தலையைக் காமிச்சுட்டான்... நீ ரொம்ப நல்லவனா இருந்ததால்தான் உன்னால் தாங்க முடியலை... நீயே சொல்லு... உங்கம்மா உயிரோட இருந்தா, நீ இப்படி இருக்கிறதைப் பார்த்துச் சந்தோஷப் பட்டிருப்பாங்களா...?" என்று கூர்மையான பார்வையுடன் கேட்க,

நானி நிமிர்ந்து, "என்... என் அம்மாவைப் பத்திப் பேசாதே..." என்று கூறும் போதே... அதே 7 வயதுப் பையனாகவேதான் ஜானகி கண்ணிற்குத் தெரிந்தான்.

ஜானகி, "நான் முன்னாடி பேசின மாதிரி உங்கம்மாவைப் பத்தி பேசலை... நல்லா யோசிச்சுப்

பாரு... ஒவ்வொரு தடவை உங்கம்மாவைப் பத்திப் பேசும் போதும் உன்னால் தாங்க முடியலைன்னா ஒரு வகையில் நீ உங்கம்மாவுக்கு சரியானதைச் செய்யலைன்னுதான் அர்த்தம்..." என்று நிறுத்த,

நானியின் கண்கள் செவ்வானமாய்ச் சிவந்து போனது.

அதைப் பார்த்த ஜானகி தொடர்ந்தாள். "என்னை இம்சை பண்ணி தொல்லை பண்ணி... அழ வைச்சு... தற்கொலைக்கு முயற்சி செய்ய வைச்சு... ஏன் சாவோட விளிம்புக்கே போக வைச்சு, வாழ்க்கையே வெறுக்க வைச்சு என்னை நடக்க வைச்சவன் நீ. ஆனா... நீ இப்படி ஒரு அற்ப விஷயத்துக்கு வாழ்க்கையைத் தொலைச்சுட்டு நிக்கிறே...

"இந்தச் சினிமாவில் வர்ற மாதிரி ஹீரோ பறந்து பறந்து சண்டை போடுற மாதிரிக் காமிச்சு, டூப் போட்டு எடுப்பாங்களே... அது மாதிரி இருக்கு எனக்கு இப்போ... இது வரைக்கும் என்னை ஹீரோ... இல்லை, இல்லை, வில்லன் மாதிரி வெறுப்பேத்தி அழ வைச்சதெல்லாம் உன் டூப்பா...?" என்று தலையசைத்துக் கேட்க,

அதற்கு மேல் அவனால் நிற்க முடியவில்லை. ஆரம்பத்தில் இருந்தே அவளின் வார்த்தைகள் ஒவ் வொன்றும் அவனை ஈட்டியாகக் குத்திக் கொண்டிருக்க, அவனால் அதற்கும் மேல் தாங்க இயலவில்லை.

அவளை ஒரு பார்வை பார்த்தவன், தலையைப் பிடித்துக் கொண்டு ஒரு நிமிடம் மூச்சை ஆழமாகச் சுவாசித்து இழுத்து விட்டுப் பரபரவென ஜன்னல் வழி

யாக வெளியேற, ஜானகி அவனைப் பார்த்தபடி நிற்க, அவளின் இதழ் கடையில் மெல்லிய சிரிப்பு குடி கொண்டது.

**"நீ** எதுக்காக அவன் மனசை இப்படி கஷ்டப் படுத்துறே ஜானு... அவன் பாவம்... தாயில்லாப் பிள்ளை. மனசு தடுமாறித் தப்பான வழியில் போயிட்டான். அவனை இப்படியா விமர்சிக்கிறது...? எனக்கென்னமோ நீ அவனைப் பத்தி எல்லாத்தையும் சொன்னபோது அவன் மேலே கோபமே வரலை..." என்று காலை சிற்றுண்டி எடுத்து வந்தபோது விவரம் கூறிய மகளைக் கடிந்து கொண்டார் ரேணுகா.

அவரைப் பார்த்துச் சிரித்த ஜானகி, "அப்போ கடைசி வரை அவன் இப்படியே இருக்கணும்னு ஆசைப்படுறி யாம்மா... அவன் டாக்டராகி நாலு பேருக்கு உதவியா இருக்க வேண்டாமா..?" என்று கேட்க,

ரேணுகா, "உனக்கென்னடி வந்தது... அவன் மாறும் போது மாறுவான்... நீ எதுக்கு அவனைப் போட்டுப் படுத்துறே...?"

ஜானகி, "ஆமா, படுத்துறேன்... அதுக்கென்ன இப்போ... அவன் மட்டும் என்னை என்னவெல்லாம் செஞ்சான்...? உனக்கும் தெரியும்தானே... சரி, அம்மா... மாமா கிட்டே இதெல்லாம் சொல்லிண்டு இருக்காதே. அவர் கஷ்டப்படுவார். தெரியும் போது தெரிய வரட்டும்..." என்று எச்சரிக்கையுடன் முடிக்க,

ரேணுகா, "நான் ஏன்டி அவன் கிட்டே சொல்லப் போறேன்...? அவன் பாடு அவன் மகன் பாடு...

நமக்குன்னு எல்லை இருக்கோ இல்லையோ...? பாவம்டி... அந்த பிள்ளையை ரொம்பத் துவைச்சு எடுக்காதே..." என்று மீண்டும் அதே வேண்டுதலை வைக்க,

ஜானகி, "அம்மா... நீயா பேசுறே...? அவன் என்னைப் படுத்தினதை விடவா நான் படுத்துறேன்... நான் ஒண்ணுமே செய்யலைம்மா... ஆனாலும் நீ அவனுக்கு ரொம்பத்தான் வக்காலத்து..." என்று நொடிக்க,

ரேணுகா சிரித்தபடி, "இருக்காதோ பின்னே... அவன் என் அண்ணன் மகனாக்கும்... என் மகளோட திறமையை வெளியே கொண்டு வந்தவனாக்கும்... நான் வக்காலத்து வாங்காமல்... அவனுக்குன்னு ஒருத்தி வந்தா, அவன் மாறிடுவான்..." என்று ஜானகியை ஆழமாகப் பார்த்தபடி கேட்க,

ஜானகி, அவரின் லீலை புரிந்து, அவரைக் குறும்பாகப் பார்த்தபடி,

"மாறுவான்... மாறுவான்.." என்றாள் நகைத்து.

**அ**ன்று மாலை வழக்கம்போல் நடன வகுப்பிற்கு வந்தவள், என்றும் இல்லாத தெய்விகச் சிரிப்புடன் வளைய வர, நட்டுவே ஒரு கணம் குழம்பித்தான் போனான்.

"ஆமா... உன் பேர் ஜானகிதானே... அவளோட ஆவி ஏதும் இல்லையே...?" என்று சற்றுப் பயத்தைப் பூசியபடி கேட்க,

ஜானகி, "ஷ்ஷ்... ஆமா, அவ ஆவிதான்... இப்போ என்னடா செய்வே..?" என்று கேட்க,

நட்டு, "அதானே பார்த்தேன்... எங்கடா நீ மாறிப் போயிட்டியோன்னு... இப்போதான் நீ ஜானு... ஆனால்,

உன்னை விட ஒன்பது மாசம் பெரியவன் நான்... என்னை வாடா போடாங்கிறது தப்பு... சொல்லிட்டேன்..." என்று கூற,

ஜானகி, "ஆமா... பெரிய ஒன்பது மாசம்... நீதான் மெச்சிக்கணும்..." என்று கூறிச் சிரிக்க, நட்டு போலியாகப் பயந்தபடி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு, "இப்படி யெல்லாம் என்னைப் பயமுறுத்தாதேம்மா... நீ எரிஞ்சு விழுந்தாக் கூடப் பரவாயில்லை... சிரிக்க மட்டும் செய் யாதே..." என்று கூற,

ஜானகி, "சீ, போ..." என்று கூறி விட்டுத் தன் வகுப்பைத் தொடர்ந்தாள்.

சிறிது நேரம் கழித்து வந்த நட்டு, "ஜானு... பேப்பரில் ஒரு நியூஸ் வந்திருக்கு பார்த்தியா...? ஆல் இந்தியா லெவலில் பரத நாட்டியக் கலைஞர்களுக்கான போட்டி நடக்குது... இது ரியாலிடி ஷோ எல்லாம் இல்லை... வெறும் மூணு நாள் போட்டிதான்... இதில் கலந்துக்கிட்டு ஜெயிச்சா பெரிய பேர்... நிஜமாவே ரொம்ப மரியாதையான விழா இது... இதில் உன் பேரும் சேர்க்கப் போறேன்..." என்று கூற,

ஜானகிக்கு முதன் முதலாகப் பயப்பந்து உருண்டது வயிற்றில். அவள் முகத்தைப் பார்த்தே அவள் பயத்தை அறிந்தவன், "பயப்படாதே ஜானு... உன்னால் கண்டிப்பா முடியும்... இதென்னா சும்மா முயற்சிதானே... ஜெயிச்சா லும் தோற்றாலும் கவலை இல்லை... ஆனால், கலந் துக்கோ... இதில் கலந்துக்கிட்டு கொஞ்சம் பேர் வாங் கிட்டாலே நீ பாப்புலர்தான்..." என்று கூற,

ஜானகி, "என்னால் முடியுமா நட்டு...? எனக்குப் பயமா...?" என்று கூறுவதற்குள்,

நட்டு, "முடியுதோ முடியலையோ... நீ கலந்துக்கிறே... அவ்வளவுதான். நாம் இதில் கலந்துக்கிறோம். டெல்லி போறோம்..." என்று கூற,

ஜானகி, "டெல்லியா...? அய்யோ... முடியவே முடியாது நட்டு... எங்கப்பாவுக்குத் தெரியாமல் இவ்வளவு நாள் தப்பிச்சதே பெரிய விஷயம்... இது கண்டிப்பா... வேலைக்கு ஆகாது..." என்று பதற,

நட்டு, "இதைப் பாரு... சாத்தியப்படுமா இல்லையான்னு போகப் போகப் பார்த்துக்கலாம்... ஆனால், அதுக்காகப் பயிற்சிகளில் நீ முழுமூச்சோட இரு... நான் ரேணுகா ஆன்ட்டி கிட்டே பேசுறேன்..." என்று கூற,

ஜானகி, அரை மனதிலும் அரை மனதாய்த் தலையாட்ட,

நட்டு, "தட்ஸ் மை கேர்ள்..." என்று அவளை மெச்சி அவளை ஊக்குவிக்கும்படி பேச, கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்குள் இருந்த பதற்றமும் நம்பிக்கையின்மையும் போய்ச் சிறிது தன்னம்பிக்கை தலை தூக்க, அவளது புதிய குணமான குறும்பும் தலை தூக்கி,

"நட்டு... எனக்கு வெஸ்டர்ன் டான்ஸ் கத்துத் தர்றியா...? எனக்கு ஆசையா இருக்கு..." என்று கூற, நட்டுவிற்கு ஒரு நிமிடம் மயக்கம் வராத குறைதான்.

"சான்ஸே இல்லை... நீ ஜானகியா இருக்க சான்ஸே இல்லை... என் ஜானு இல்லை நீ... அய்யகோ... இதென்ன சோதனை...? என் கட்டுப்பெட்டி, துர்வாச

முனிவர் எரிச்சல் சிகாமணி ஜானுவா இவள்... நெவர்..." என்று நடிகர் திலகம் ரேஞ்சிற்கு ஆரம்பிக்க,

ஜானகி சிரித்தபடி அவன் தலையில் கொட்ட, அங்கே நட்பு என்னும் மலர்த்தோட்டம் மணம் வீச ஆரம்பித்தது.

**ஜா**னகியின் வாழ்வில் மெல்லிய விடியல் கோடாய் ஆரம்பித்த அதே நேரம்...

அன்று இரவு...

ரேணுகாவின் கைபேசிக்குக் குணாவின் அழைப்புக் கதறலாக வந்தது.

"அக்கா... நேக்கு ரொம்பப் பயமா இருக்குக்கா... நானி காலையில் வந்து அவன் ரூம் கதவை அடைச்சிக்கிட்டவன் இன்னும் திறக்கலை... சாப்பிடக் கூட வரலை... ஜன்னல் வழியாப் பார்த்தா கட்டிலில் படுத்துக் கிட்டுத்தான் இருக்கான். ஆனால், கதவைத் திறக்க மாட்டேன்கிறான்... விட்டத்தையே வெறிச்சுண்டு இருக்கான். நான் இன்னும் என்னவெல்லாம் பார்க்கணுமோ கடவுளே!" என்று பலவாறாகப் புலம்பிவிட்டுப் போனை வைக்க,

அதைக் கேட்ட ரேணுகா, ஜானகியிடம் கூற,

அவளின் முகத்தில் மர்மப் புன்னகை பூத்தது.

அவளைப் பொறுத்தவரை நானியின் மாற்றத்திற் கான முதல் படி... அவன் யோசிக்க வேண்டும்... தன்னைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். குணா சொல்வதில் இருந்து பார்த்தால், அவன் சிந்திக்க ஆரம்பித்து விட்டான். அது தான் ஜானகியின் வெற்றியின் முதல் படி.

இன்று முதல் ஆட்டம் நானியினுடையது அல்ல... ஜானகியினுடையது.

இந்தப் புதுவிதமான ஆட்டத்தில் முடிவில் இருவரும் ஜெயிக்க வேண்டும். அதுதான் பந்தயம்.

எப்படி ஜெயிக்கப் போகிறார்கள், பார்ப்போம்.

## 23

"ஹா... ஹா..." என்று வாய் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்த நட்டுவைப் பார்த்த ஜானகி, புரியாமல்,

"இப்போ எதுக்கு இப்படிச் சிரிக்கிறே...? நான் சொன்னது எல்லாம் புரிஞ்சுது இல்லை... தயவு செய்து உன் வீட்டுக்குப் போ... உன் அப்பாவும் அண்ணா வும் பாவம்... அவங்களைப் போட்டுப் படுத்தாதே... நானி ஏதோ விளையாட்டுக்கு இப்படிச் செய்துட்டான்.. நீயும் அது மாதிரியே இருக்காதே..." என்று பேச்சுவாக்கில் அன்று நடந்த விஷயத்தைக் கூறி விட, நட்டுவிடம் எந்தவித உணர்ச்சிப் பிரதிபலிப்பும் இல்லை.

அவன் பதிலுக்கு ஜானகியிடம், "நானி சார் செய்தது தப்பா இருக்கலாம் ஜானு... ஆனால், கெட்ட விஷயம் இல்லையே... அவர் என்னை நம்பித் தந்த ஒரே ஒரு காரியம்... அதை முடிக்க என்னால் முடிஞ்சதை நான் செஞ்சிட்டுத்தான் போவேன்... சரியா...? இப்போ நான் போனா என் அப்பாவுக்குப் பிள்ளையா, அண்ணனுக்குத் தம்பியா சந்தோஷமா இருக்கலாம்... பெத்த பாவத்துக்கு, கூடப் பிறந்த பாவத்துக்கு என்னை ராஜா மாதிரி உட்கார்த்தி வெச்சுச் சோறு போடுவாங்க... ஆனால்,

எனக்குப் பிடிக்கலை ஜானு. எவ்வளவு வருஷம் ஆனாலும் சரி, நான் ஜெயிச்சுட்டுத்தான் எங்க வீட்டுக்குப் போவேன்..." என்று குரலைக் கூட உயர்த்தாமல், சிரித்துக் கொண்டே கூற,

ஜானகிக்கு அவன் புதிதாய்த் தெரிந்தான். இவ்வளவு நாட்கள் சக வயதுத் தோழனாய் மட்டுமே அவனைப் பார்த்துக் கொண்டிருந்த ஜானு, அன்று முதல் அவனின் லட்சியம்... நடனத்தின் மேல் அவனுக்கு இருந்த அபரிமிதமான காதல்... அனைத்தும் சேர்ந்து அவனை ஆசானாகப் பார்க்க ஆரம்பித்தாள்.

டெல்லியில் நடக்கும் நடனப் போட்டிக்கான ஆயத்தம் அனைத்தையும் அவனே செய்தான். ஆனால், ஜானகிக்கு எந்தவித அழுத்தத்தையும் அவன் அளிக்கவில்லை.

"சும்மா ஜாலியா சேர்ந்து ஆடு ஜானு... நம்ம ஆட்டத்தையும் நாலு பேர் பார்க்கப் போறாங்களேன்னு நினைச்சுட்டுப் போ... சிரிப்புதான் வரும்.. டென்ஷனாகாது..." என்று அவன் கூற, ஜானகி சற்று நேரம் முறைக்க முயன்று... தோற்றுச் சிரிக்க ஆரம்பித்தாள்.

ஆனாலும் அவளுக்கு அழுத்தம் தரவில்லை என்பதற்காகப் பயிற்சி அளிக்காமல் இருக்கவில்லை. ஒவ்வொரு ஜதியையும் தாளமும் அவள் நன்றாக ஆடும் வரை சற்றும் பிறழலின்றி ஆடும் வரை மறுபடி மறுபடி ஆட வைத்தான். ஜானகியும் ஒன்றும் சாதாரணப்பட்டவள் இல்லையே... அவளுக்கு உயிரே நடனம்தானே... அவளும் தன் வலி, ஓய்வு அனைத்தையும் மறந்து, அந்த உலகத்திலேயே லயிக்கத் துவங்கினாள்.

“நமக்குப் பிடிச்ச வேலையைச் செஞ்சா... வேலை வேலையா இருக்காது... பொழுதுபோக்கா இருக்கும்னு சொல்லுவாங்க இல்லை நட்டு... அது எவ்ளோர் உண்மை... இப்போப் பாரு... எனக்கு வலி வருதா இல்லையான்னே தெரியலை... உடம்பே லேசான மாதிரி இருக்கு...” என்று அவள் கூற,

நட்டு, “ஹலோ மேடம்... அதுக்குன்னு அந்தப் பெல்ட்டைப் போடாமல் இருக்காதே.... அப்புறம் பிரச்சனை ஆகிடப் போகுது... உன் உடம்பும் ரொம்ப முக்கியம்... சுவர் இருந்தால்தான் சித்திரம்...” என்று பெரிய மனுஷத் தனமாய்க் கூற,

ஜானகி வியந்து, “நட்டு... நீ கூடப் பொறுப்பாப் பேசுறே... அதிசயமா இருக்கே...?” என்று கூற,

நட்டு, “எல்லாம் என் தலைவர் நானி சார் கத்துக் கொடுத்த பிலாசபிதான்... அவர்தான் என் குரு...” என்று கூற,

ஜானகி, “ஆரம்பிச்சுட்டியா..?” என்று ஆயாசமாகக் கேட்டவள்... ஏனெனில் அந்த அளவிற்கு நானியின் தீவிர பக்தனாகி இருந்தான். நிதமும் அவனைப் பற்றிய பேச்சுக்களைக் கேட்ட ஆயாசம் அவள் குரலில் தெரிய,

நட்டு, “ஆமா... பின்னே... அவரைப் பத்திப் பேசலைன்னா எனக்கு வேலை ஓடவே மாட்டேன்றது... சரி, விடு... நீ எப்போ அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறே...?” என்று கேட்க,

அப்போதுதான் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்த ஜானகிக்கு, அவன் கேட்ட வாக்கில் புரையேறி, கிட்டத்தட்ட கண்ணில் நீர் வரும் அளவிற்கு ஆனது.

நட்டு பதறி, “ஏய் பார்த்து... பார்த்து...? என்ன இது...?” என்று கேட்க,

ஜானகி, “இப்போ நீ என்ன கேட்டே...?” என்று சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு கேட்க,

நட்டு குறும்புச் சிரிப்புடன், “நானி சாருக்கும் உனக்கும் எப்போ டும் டும் டும்னு கேட்டேன்... ஏன், கேட்கக் கூடாதா... ? அவரும் நீயும் நல்ல ஜோடி தெரியுமா? உனக்காக அவர் என் கிட்டே வந்து பேசும் போது, அவர் கண்ணில் தெரிஞ்ச அன்பும் கனிவும் வேற எந்தச் சமயமும் நான் பார்க்கலை... நான் பார்த்த வரை அவர் உன் மேல் இருக்கிற அன்பை உன் கிட்டே மட்டும் தான் காட்டாமல் படுத்துறார்... அவர் மனசில் நீ இருக்கேன்னு தோணுது...” என்று கூற,

ஜானகிக்குள் இரு வேறுபட்ட உணர்வுகள் தாண்டவ மாடியது. கள்ளத்தனம் பூசிய நெஞ்சம், சாயத்தை உதற ஆரம்பித்தது. ஆம்... நானி எப்போது தன் கடந்த காலத்தைக் கூறினானோ, அப்போதில் இருந்தே ஏதோ ஒரு பூப்போன்ற உணர்வு அவள் மனதுள் மலர ஆரம்பித்திருந்தது. தன் கடந்த காலத்தைக் கூறி அழும் அவனை மடியிலிட்டுச் சமாதானப்படுத்த வேண்டும் போல் தோன்றிய அவள் உணர்வுகளை அடக்க, அவள் படாத பாடு பட்டது அவளுக்கு மட்டும்தான் தெரியும். வேறு ஒரு பெண்ணைத் தீண்டியதாக அவன் கூறியபோது, அவனை இழுத்து அறைந்து,

“ஏன்டா எனக்குத் துரோகம் செய்தே...?” என்று சினிமாவில் வரும் கதாநாயகியைப் போல் கேட்க வேண்டும் எனும் அளவிற்குக் கோபம் வந்தது.

இந்தத் துன்பத்திற்கெல்லாம் காரணமான நாணாவை, "ஏன் மாமா இப்படிச் செஞ்சீங்க... உங்களால் தான் என் நானி இப்படி ஆகிட்டான்..." என்று கூறும் ஆத்திரம் வந்து, அவளைக் கலவரப்படுத்தியது.

ஆனால், இதை எல்லாத்தையுமே மூடி வைத்து மறைத்து விட்டாள் ஜானகி. கல் நெஞ்சையே உருக்கும் நானியின் கடந்த காலம், அவள் பூமனதை உருக்காதா என்ன?

இத்தனைக்கும் நானியின் அனைத்து ரகசியங்களும் ஜானகிக்குத் தெரியும். அவனைப் பற்றியும் அவளுக்குத் தெரியும். அவனைப் பற்றிக் கேட்டுத் தெரிந்ததும், தானும் அழுது அவன் மேல் பரிதாபத்தைக் காட்டினால் அவன் இன்னும் உடைந்து போகவும் அல்லது தன்னை விட்டு விலகிப் போகவும் வாய்ப்பு உண்டு. அதனால்தான் அவனின் தன்மானத்தைச் சிறிது கிள்ளி விட்டாள். நானி அவளுக்குத் தந்த அதே சிகிச்சை தான். ஆனால், இதெல்லாம் தான் ஏன் செய்தோம்...? இது எந்த வகையான உணர்வு என்று அவளால் இன்று வரை வகைப்படுத்த முடியவில்லை. தன் உள் மனதில் தனக்குத்தானே பல சமயம் அவன் மேல் தனக்கு இருக்கும் இந்த அன்பிற்குப் பேர் என்ன? என்று கேட்க,

அவளுக்குக் கிடைத்த பதில் மௌனம் மட்டுமே... இப்போதும் நட்டு கேட்கையில், அவ்ள் மௌனமாக இருக்க,

நட்டு, அவளைப் பார்த்தபடி, "என்ன ஜான் அமைதியாகிட்டே...? நான் சொல்லவா...? இன்னும் உன் மனசு

அவர் மேலே உனக்குக் காதலா இல்லையான்னு பதில் சொல்லலை... சரியா...?" என்று கேட்க,

அவனை ஆச்சரியமாக ஏறிட்ட ஜானகி, "இது... இது உனக்கெப்படி...?" என்று திணற,

நட்டு, "எனக்குத் தெரியும் ஜானு... இது ஒண்ணும் சினிமா இல்லை. கன்னம் சிவந்து கால் கட்டை விரலில் கோலம் போட்டுக் கண்டு பிடிக்க... நான் நானி சாரைப் பத்திப் பேசும் போது, உன் கண்ணே காட்டிக் கொடுத்து விடும்... அதான் நான் இன்னைக்கு அந்தப் பேச்சை ஆரம்பிச்சேன்... சொல்லு... நான் சொன்னது உண்மை தானே...?" என்று கேட்க,

ஜானகி, "எ... எனக்குத் தெரியலை நட்டு... அவனைப் பத்தித் தெரியாத வரைக்கும் அவனைத் திட்டிட்டு, இப்போ அவனைப் பத்தித் தெரிஞ்சதும் காதல் அது இதுன்னு சொல்றது எனக்கே அபத்தமா இருக்கு. எனக்கே இப்படின்னா அவனுக்குச் சொல்லவே வேண்டாம்... நான் இப்படி எல்லாம் உளறினா அவன் கேவலமாப் பார்ப்பான். அதுவே போதும், நான் சிறுகச் சிறுகச் சாகிறதுக்கு... என்னால் இன்னொரு தடவை என் வாழ்க்கையில் அடிபட முடியாது... முன்பாவது உடல் வலி... தாங்கிட்டேன்... இந்த வலியையும் என்னால் தாங்க முடியாது நானி... சே... சாரி..." என்று விட்டு நாக்கைக் கடித்து, "நட்டு..." என்று முடிக்க, அந்தத் தர்மசங்கடத்தில் அவள் கண்களில் இருந்தும் துளி கண்ணீர் சிதறி விழுந்தது.

நட்டு சிரித்து, "பார்த்தியா... உன்னால் ஒரு வாக்கியத்தைக் கூட நானி இல்லாமல் முடிக்க முடியலை...

ன் வாழ்க்கையை எப்படி நானி இல்லாமல் நடத்தப் போற...?" என்று பொட்டில் அடித்த மாதிரிக் கேட்க,

ஜானகி பதறிப் போய் அவனைப் பார்த்தாள். அவன் கூறியது முழுக்க முழுக்க உண்மையே. அவளால் இனி நானி இல்லாத ஒரு வாழ்வை வாழ முடியுமா என்பது சந்தேகமே. அந்த அளவிற்கு அவனின் லீலைகளுக்கு அடிமையாகி இருந்தாள் அவள். அவளைப் பார்வையாலேயே அளவெடுத்த நட்டு,

"ஜானு... இங்கே பாரு... அழுது எதுவும் ஆகப் போறதில்லை... நீ அவரைக் காதலிக்கிறேன்னு நான் சொல்லலை... ஆனால், அவர் இல்லாமல் உன்னால் இருக்க முடியாது... அது நிஜம்தானே...?" என்று கேட்க,

அவள், அவனைப் பார்த்துக் கண்ணீருடன், "ஆம்..." என்பது போல் தலையாட்ட,

நட்டு, "அப்புறம் என்ன...? பிரேக் அவுட்... அவரைக் கல்யாணம் பண்ணிக்கோ... உனக்கு என்ன பயம்... அவர் கிரிட்டிசைஸ் பண்ணுவாருன்னுதானே...? செஞ்சா செய்யட்டும். கல்யாணத்துக்கு அப்புறம் பூரிக்கட்டையால் நிமிர்த்தி எடுத்திடு..." என்று அசால்டாகக் கூற, ஜானகி அவனை அதிர்ச்சியாகப் பார்க்க, நட்டு கலகலவெனச் சிரிக்க,

ஜானகி ஒரு பெருமூச்சுடன், "இல்லை நட்டு... எனக்குக் கொஞ்சம் டைம் வேணும்... என்னால் இந்த விஷயத்தில் சட்டுன்னு முடிவு எடுக்க முடியாது. முதலில் அவன் ஒரு டாக்டர் ஆகணும்... அப்புறம்தான் மத்தது...

இது நான் அவனுக்குச் செய்ற நன்றிக் கடன். அவனை முன்னைப் போல் ஒரு டாக்டராக... என்னால் முடிஞ்ச ஒரு சின்ன உதவியாவது செய்யணும்..." என்று கூற,

நட்டுவே அந்தப் பதிலில் நெகிழ்ந்துதான் போனான்... அவனைப் பொறுத்தவரை... நானி, ஜானகி இருவருமே பெயரில்தான் ராமனையும் சீதையையும் கொண்டிருந்தார்களே தவிர, அவர்கள் சிவனும் பார்வதியும் ஒன்றாகக் கூடிய அர்த்த நாரீஸ்வரர் அவதாரம் தான். ஒருவர் இல்லாமல் ஒருவர் இல்லை... ஆனால், அதை அவர்கள் இருவரும் உணரவில்லை... அவர்கள் நாளும் வரும் என்று நினைத்தவன், குறும்புத்தனம் மேலோங்க, "உன் கடமை உணர்ச்சியை நான் பாராட்டுறேன் மகளே... கண்டிப்பாக நீ எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவாயாக," என்று ஆசீர்வதிக்க,

ஜானகி சிரித்துக் கையால் வாய் பொத்தி, "சரிங்க குருவே..." என்று கூற,

நட்டு நடராஜ நந்தாவாக மாறித் தெய்விகச் சிரிப்புச் சிரித்தான்.

இப்படியாக வாழ்க்கை, தெளிந்த நீரோடையாகச் சென்று கொண்டிருந்தது.

அப்போதுதான் ஒரு நாள் நட்டு, "ஜானு... அந்தப் போட்டிக்குப் போறவங்க டி.நகரில் உள்ள ஆபீசில் பேர் ரிஜிஸ்டர் பண்ணணுமாம்... மூணு நாள் கழிச்சு புதன் கிழமையில் போய் ரிஜிஸ்டர் செய்து நேம், கார்டெல்லாம் வாங்கிட்டு வருவோம்... சரியா..?" என்று கூற,

தலையாட்டிய ஜானகி, "ஆனா நட்டு... போட்டி எப்போ இருக்கும்...? இன்னும் 20 நாளில் அக்காவுக்குக் கல்யாணம்... எனக்குப் பயமாக இருக்கு... மாட்டிடு வோம்னு. ராத்திரி எல்லாம் தூக்கமே வர மாட்டேன்றது நட்டு... வெளியேதான் தைரியமா இருக்கேன்.." என்று கலக்கத்துடன் மொழிய,

நட்டு, "விடு ஜானு... மாட்டினா என்ன..? தலையை எடுத்துருவாங்களா...? நான் ஒரு வீடு பார்த்துத் தர்றேன்... தங்கிக்கோ. இதெல்லாம் ஒரு மேட்டரா...? நானெல்லாம் இல்லை...?

"ஆனால், நீ அதை யோசிக்காதே... நீ இந்தப் போட்டியில் ஜெயிச்சா... அதை நினைச்சுப் பாரு... எவ்ளோ பெரிய சாதனை.... அதில் மனசை வை..." என்று பலவாறாக அவளைச் சமாதானப்படுத்தினான்.

பின் அவனே, "அப்படியே உன்னைத் துரத்தி னாலும்... நானி சாரை இதான் சாக்குன்னு கல்யாணம் பண்ணிக்கிட்டு செட்டில் ஆவியா...? அதை விட்டுட்டுப் புலம்பிட்டு இருக்கே..." என்று கேலி செய்ய,

ஜானகி, "நட்டு... தயவு செய்து என்னை வெறுப்பேத் தாதே...! அவனைப் பார்த்தே பல நாள் ஆச்சு... நானே எரிச்சலில் இருக்கேன்..." என்று வாய் தவறி, அவள் மனதில் இருந்த ஏக்கத்தைக் கூற,

அவளை இன்னும் கேலி செய்ய ஆரம்பித்தான். பின், "நீ கொஞ்ச நாள் பார்க்காததுக்கே எரிச்சலாகிறே... நானெல்லாம் என் ஆளைப் பார்த்து பல வருஷம் ஆச்சு..." என்று பெருமூச்சுடன் கூற,

ஜானகி சட்டென்று எழுந்து, "ஏய்... என்ன சொல்றே? உனக்கு ஆளா? பொய் சொல்லாதே...!" என்று கூற,

நட்டு அவளை முறைத்துப் பின் தன் சுட்டு விரலைத் தன் முன்னையே நீட்டி, "இந்த அவமானம் உனக்குத் தேவையாடா? சொல்லு... உனக்கு உன் வாய்தான்டா எதிரி..." என்று கூற,

ஜானகி உற்சாகத்துடன், "ஏய் சொல்லு... சொல்லுடா. உன் ஆளு யாரு...? அவ பேர் என்ன...?" என்று ஊக்க,

நட்டு, "அய்யோ ஜானு... அவளை நான் ஒரு வாட்டி தான் பார்த்திருக்கேன்... அவ பேர் சுகன்யா. அது மட்டும் தான் தெரியும். அவளை நான் பார்த்ததே ஆக்சிடென்டில் தான்..." என்று விட்டு, அந்த நிகழ்ச்சியைக் கூற ஆரம்பித் தான்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு...

ஒரு நியூ இயர் ஈவ் தினம்.

நட்டு வழக்கமான இளைஞர்களைப் போல் மெரினா பீச்சில் பாட்டு, கூத்து, கும்மாளம் எனப் புத்தாண்டை வரவேற்கக் கிளம்ப,

மெலிதான போதையும் அவனை ஆட்டுவித்தது. அவன் பொதுவாகக் குடிக்க மாட்டான்தான். ஆனால், நண்பர்கள் வற்புறுத்தலால் அன்று அருந்தியிருந்தான்.

சரியாக 6 மணிக்கு, பைக்கில் பீச்சை நோக்கிச் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தான்.

அப்போதுதான் ஒரு வளைவில் இருந்து ஹாரன் அடித்துக் கொண்டே வந்த ஸ்கூட்டியை மதிக்காமல்

அவன் கடக்க... அந்தச் சமயம் பார்த்து அந்த ஸ்கூட்டியும் வர, எதிர்பாராது மோதியது நட்டுவின் பைக்.

"ஆஆ..." என்றபடி நட்டுவும் அவன் பின்னிருந்த நண்பனும் விழ,

நல்ல வேளை... அவள் உடனடியாகப் பிரேக்கை அழுத்தியதால் அவன் தப்பித்தான்... வண்டியில் இருந்து கீழ விழுந்தவனை எழுப்ப வந்த அவள், அவன் கன்னத்தில் பளாரென அறைய, நட்டு அதிர்ந்து போய்ப் பார்க்க, அவன் போதை தெளிந்தது.

"ஏய், சுகன்யா...? என்ன பண்றே...?" என்று அவள் பின்னால் அமர்ந்திருந்த தோழி கத்த,

அவளோ, "நீ சும்மா இரு. குடிச்சுட்டு ஓட்டுறவங் களை இப்படி அறையணும்னு ரொம்ப ஆசை... இன்னைக்குத்தான் அதுக்கான வாய்ப்பு கிடைச்சது..." என்று கூறி விட்டு அவனைப் பார்த்தவள், அவன் அகன்ற விழிகளைப் பார்த்துச் சுட்டு விரலை நீட்டி,

"ஏன்டா... ஏன்டா இப்படிக் குடிச்சு உங்க உடம்பை யும் கெடுத்து... மத்தவங்க உயிரையும் எடுக்கிறீங்க... உங்களை மாதிரி ஆளுங்களை நிக்க வைச்சு.... சரி... சரி. சுகன்யா, கூல் டவுன் பேபி..." என்று தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திய அந்தச் சுட்டிப் பெண், நட்டுவின் மனதில் நங்கூரத்தை வீசினாள்.

அவளின் மாநிறமும், கொழுகொழு கன்னமும், பெரிய மை விழிகளும், இளஞ்சிவப்புச் சுரிதாரும் அவளைத் தேவதையாக அவனுக்குக் காட்டியது.

பின் அவனிடம், "சரி தம்பி... அக்கா ஏதோ கோபப்பட்டு அடிச்சுட்டேன்... மனசில் வெச்சிக்காதே... உனக்கு எப்படியும் போதையில் இப்ப நடந்தது ஒண்ணும் ஞாபகம் வராது. அப்படி வந்தாலும் மறந்திரு... சரியா...? அங்கே உருளுது பாரு உன் பிரெண்டு... அதை அள்ளிப் போட்டுட்டுப் போ... அப்புறம் நான் சொன்னதை ஞாபகம் வெச்சிக்கோ... மறந்திரு..." என்று ஞாபகத்தையும் மறதியையும் முரண்பாடாகக் கூறிவிட்டுத் தன் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு விருட்டென்று சென்ற அந்த முரண்பாட்டு மூட்டையை, நட்டுவால் எந்தச் சூழ்நிலையிலும் மறக்க முடியவில்லை.

**அ**வன் கூறி முடித்தவுடன், வயிற்றைப் பிடித்து விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள் ஜானகி.

"அடப்பாவி... நீ இப்படியெல்லாம் அடி வாங்கியிருக்கியா...? ஆனால், அவ அடிச்சதும் நல்லதுதான்... அதுக்கப்புறம் குடிச்சிருக்க மாட்டியே...?" என்று கேட்க,

நட்டு சிரிப்புடன், "பின்னே... அதுக்கப்புறம் பாட்டிலைப் பார்க்கும்போது அவ அடிதான் ஞாபகம் வரும். அதுக்கப்புறம் எங்கே...? ஆனால், அவளை அதுக்கு மேல் பார்க்கவே இல்லை... ஆனால், அவ தான்டா உன் பொண்டாட்டின்னு அப்பவே என் மனசில் ஒரு அசரீரி சொல்லிச்சு... அது நடக்குதா பார்ப்போம்..." என்று கூற,

ஜானகி தலையில் அடித்துக் கொண்டு, "அடப்பாவி... நீ அவளைப் பார்த்த கொஞ்ச நேரத்தில் அவ வண்டி நம்பரைப் பார்த்திருந்தா, இன்னேரத்துக்கு அவளைப் பிடிச்சிருக்கலாம்..." என்று கூற,

நட்டு ஒரு பெருமூச்சுடன் "ம்ஹூம்.. அந்தச் சமயத்தில் எங்கே தோணிச்சு.. அப்படியே மனசில் பி.ஜி.எம். தான்.

"என்னவளே அடி என்னவளே
என் இதயத்தைத் தொலைத்து விட்டேன்!
எந்த இடம் அது தொலைந்த இடம்?
அந்த இடத்தையும் மறந்துவிட்டேன்!"

என்று பாடியவாறே ஜானகியைப் பற்றிச் சுழற்ற, அவளும் அவனுடனே சுழன்றாள். இது அவர்களுக்குள் சாதாரணம் தான்... தொடுகை எப்போதுமே அவர்களுக்குள் எல்லை மீறாது. ஆனால், அப்போதென்று பார்த்து வந்து சேர்ந் தான் நானி.

அவர்களின் நடனத்தையும் பாட்டையும் பார்த்து, அது அவர்களின் காதல் நடனம் என்று நினைத்ததுதான் முட்டாள் தனம்.

**அ**தைப் பார்த்ததும் நானியின் மனதில் லேசான தணல் பரவியதுதான். ஜானகியிடம் தனக்குக் கிடைக்காத உரிமை நட்டுவிற்கா என்ற உரிமைப் போர் புகை விட்டது தான்... ஆனால், அதெல்லாம் நீடித்தது சில வினாடிகளே.

'சே... உன்னைப் பத்தி நீயே மறந்துட்டியா நானி... நீ எவ்வளவு கேவலப்பட்டுப் போயிட்டே... உனக்கு ஏன் ஜானகி மேல் அவ்வளவு உரிமை...? அவளைப் படுத்தின துக்கு அவ உன்னை இது வரைக்கும் வெறுக்காததே பெரிய விஷயம்... இதில் இந்த மாதிரி எண்ணத்தை எல்லாம் விதைக்காதே...! ஜானகிக்கு நட்டு தான் கரெக்ட்...' என்று தனக்குள் துவங்கிய முதல் கிளர்ச்சியை, முளை யிலேயே கிள்ளி விட்டான் அந்த முட்டாள்.

அவர்களை அவன் பார்த்துக் கொண்டிருக்க, அதை முதலில் கவனித்தவன் நட்டுதான். ஜானகியை விட்டவன்,

"நானி சார்... உங்களுக்கு நூறு... இல்லை யில்லை... இரு நூறு ஆயுசு... இப்போதான் உங்களைப் பத்திப் பேசிட்டு இருந்தோம்..." என்று கூற,

நானி அதுவரை பிடித்து வைத்திருந்த பொறுமை யும் சொல்லிக் கொண்டிருந்த புத்திமதியும் மறந்து போய்,

"எப்போ நினைச்சீங்க...? டான்ஸ் ஆடுறதுக்கு முன்னாடியா, பின்னாடியா..?" என்று கேட்டு விட, நட்டுவும் ஜானகியும் ஒருவரையொருவர் கள்ளப் பார்வை பார்த்துக் கொண்டனர். நட்டு அவள் காதில்,

"ஓஹோ... உங்க சாருக்கு உரிமைப் பிரச்சனை போல..." என்றவன், நானியிடம்,

"அதென்ன பாஸ் அப்படிக் கேட்டுட்டீங்க... எப்பவும் உங்க நினைப்புதான்..." என்று ஜானகியைக் குறும்பாகப் பார்க்க, அவள்,

"வாயை மூடு..." என்று பல்லைக் கடித்துக் கூறி விட்டுப் பின் சுதாரித்து,

"நானி... வாயேன் வெளியே போகலாம்..." என்றபடி வெளியே நடந்தாள். நானியும் இருண்ட முகத்துடன் அவளைப் பின் தொடர,

'ஹர்ரே.... ஏதோ நம்மாலே முடிஞ்ச உதவி... நாராயணா...! ம்ஹும்... முதலில் சீனியருங்க சேரட்டும். அப்புறம் நாம சுகியைத் தேடுவோம்... சுகி... சுகி... எங்கேடி

இருக்கே..? உன்னைத் தேடித் தேடியே கிழவனாகிடுவேன் போலிருக்கே...'

'என்னவளே... அடி என்னவளே...!' என்று கனவில் மூழ்க ஆரம்பித்தான்.

**வெ**ளியே வந்த நானியும் ஜானகியும் நடந்து, பக்கத்திலிருந்த பூங்காவிற்கு வந்து, கடந்த பதினைந்து நிமிடங்களாக மௌனம் காக்க, ஜானகி பொறுமையிழந்து,

"இப்படி என் மூஞ்சியைப் பார்க்கத்தான் வரச் சொன்னியா..?" என்று கேட்க,

நானி, "ஓஹோ... உனக்கு அவ்ளோ வேலையா...? சரி போ... போய் டூயட் பாடு..." என்று வெடிக்க,

"ஆமா... நான் டூயட்தானே பாடினேன்... உன்னை மாதிரி ரெஜினா ஜிஜினான்னு சுத்தவா செய்யறேன்...?"

அவள் கூறியதும் நானியின் முகம் இருள, அதைப் பார்த்த ஜானகிக்குத் தன் மேலயே வெறுப்பாகத்தான் இருந்தது. ஆனாலும் அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. நானியைப் பார்த்ததுமே அவள் உருகி விட்டாள்தான். துவண்டு போன அவன் முகம், அவள் அடிவயிற்றைக் கிளறியது. ஆனாலும் எங்கே தன் பலகீனத்தைக் கண்டு கொள்வானோ என்றுதான் அவள் அவனுக்குப் பிடி போட்டாள். அந்த் இரு காதலர்களும் காதலை உணராமல், தங்கள் இணையைக் காயப் படுத்துவதில்தான் குறியாய் இருந்தனர்.

ஜானகி, "ஏன் என்னைப் பார்க்க வரலை..? உனக்கு அவ்ளோ தூரம் ஆகிடுச்சா...?" என்று ஆரம்பிக்க,

நானி, "ஆமா... வந்துட்டா மட்டும்... அப்படியே கூப்பிட்டு வைச்சுப் பிரியாணி போட்ருவே..." என்று சாட,

ஜானகி, "ஏன் போட மாட்டேனா... ஆனா வெஜிடபிள் பிரியாணிதான்...?" என்று முகத்தை அழுத்தமாக வைத்தபடி கூற, நானிக்குச் சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டு,

"ஆமா... ஏதோ போட்டியில் கலந்துக்கப் போறியாமே...? என்னவோ செய்... ஆனால், என் பேரைக் காப்பாத்து... எப்படியும் நீ சொதப்பத்தான் போறே..." என்று கெத்தாகக் கூறினாலும், அதில் இருந்த மறைமுக வாழ்த்தை அறிந்த ஜானகி,

"என்னைப் பத்தித் தெரியாத விஷயம் உன் கிட்டே இருக்கா என்ன...? சரி, நான் உன் பேரைக் காப்பாத்துறது இருக்கட்டும்... நான் அன்னைக்குச் சொன்னதை யோசிச்சியா...?" என்று கேட்க,

நானி பொறுமை போய், "இதான்... இதுக்குத்தான் வராமல் இருந்தேன். அதைப் பத்தித் தயவு செய்து பேசாதே... எனக்கு என் கடந்த காலத்தைப் பத்தி நினைக் கவே பிடிக்கலை..." என்று கத்த,

ஜானகி அமைதியாக, "நான் உன் கடந்த காலம் மொத்தத்தையும் நினைக்கச் சொல்லலை... உன்னோட டாக்டர் தொழிலை மட்டும்தான் நினைச்சுப் பார். கடவுள் உன்னைத் தேர்ந்தெடுத்து, இவ்ளோ புத்திசாலியாக்கினது எதுக்கு நானி...? இப்படிக் குடிச்சுப் போதைக்கு அடிமை யாகிப் பொண்ணுங்களோட..." என்று தயங்கி விட்டு, "இவ்வளவு நாள் நீ சொன்னதை நான் கேட்டேன்... இனி

நான் சொல்றதைத்தான் நீ கேளேன்..." என்று கனிந்த குரலில் கூற, நானிக்குச் சற்று நேரம் வைதேகியே வந்து கூறுவது போல் இருந்தது.

ஏதோ ஒரு மோன நிலையில் மூழ்கியவன், சட்டென்று ஜானகியின் கைகளைப் பிடித்தான். ஒவ்வொரு விரலும் ஒவ்வொரு வெண்டைகளாய் அவன் வருடி விட, ஜானகி ஒரு கணம் அதிர்ந்தாள். ஆனால், தட்டி விட வில்லை... அவள் ஒன்றும் ஆண் தொடுகையை அறியா தவள் அல்ல... ஆனால், அந்த வருடல் அவளுக்கு ஆயிரம் முத்தமிட்டது போல் உள்ளுக்குள் மின்சாரத்தைப் புகுத்த, அவள் உடல் ஒரு வினாடி உலுக்க,

நானி, சட்டென்று சுயநினைவிற்கு வந்து, அவள் விரல்களை விட்டான்.

'சே...' என்று இருந்தது ஜானகிக்கு.

ஆனால், நானியோ தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தான்.

'இன்னைக்கு என்னாச்சு எனக்கு...? ஏன் இப்படி ரெஸ்ட்லெஸா இருக்கேன்...' என்று தன்னையே நொந்து கொண்டவன், ஜானகியின் கேள்விக்குப் பதிலாக,

"அந்த வரம் இன்னும் என் கிட்டே இருக்குன்னு நினைக்கிறியா...? ஜான்... போதையிலேயே இருந்து எப்பவோ மூளை மழுங்கிடுச்சு. இனிமே என்னால் டாக்டரா இருக்க முடியாது..." என்று கூற,

ஜானகி மெல்லிய சிரிப்புடன், "என்னைப் பார்த்த துமே என் பிரச்சனை என்னவென்று சொன்னதை மறந்துட்டியா...? நீ விட்டாலும் அது உன்னை விடாது.

கண்டிப்பா வெளியே வரும்..." என்று கூறிக் கொண் டிருக்கும் போதே, அந்தப் பூங்காவைத் தாண்டி உள்ள பிளாட்பாரத்தை ஒட்டியிருந்த குடிசைப் பகுதியில் ஒரே களேபரமாக இருந்தது.

"ஆத்தா... இப்போ நீ என் கூட வர்றியா...? இல்லை அந்த கம்மனாட்டி கூட இருக்கப் போறியா..? இவனை யெல்லாம் என் கூட பெத்தியே..? பொண்டாட்டி தாசன். நீ வா ஆத்தா... உன்னை வைச்சுக் காப்பாத்துறேன்..." என்று இளையவனுக்கும்... அந்த வீட்டு மூத்தவனுக்கும் ஏதோ சண்டை நடக்க,

அந்தத் தாயோ அப்படியே அமர்ந்திருந்தார்.

மூத்தவன், "ஏய் மாரி... பேசாம குந்திக்கிட்டு இருக் கிறவளை ஏன்டா ஏத்தி விடுறே... ஆத்தா நீ இங்கேயே இரு... அவன் கூவிக்கினு கிடக்கட்டும்..." என்று மூத்தவன் கத்த,

"ஆத்தா இப்போ நீ வரப்போறியா இல்லையா..? இல்லை இவன் கூடவே இருன்னு தலையை முழுகிக்கினு போய்டுவேன்..." என்று பதிலுக்குச் சண்டையிட,

அந்தத் தாயின் முகத்தில் எந்தவிதப் பிரதிபலிப்பும் இல்லாமல் இருக்க,

இளையவன், "ஆத்தா... உனக்கின்னா உன் மூத்தப் பிள்ளைதான் உசத்தியா...? கடைசியா கேக்குறேன்... வர்றியா இல்லையா?" என்று கேட்க,

அவர் அப்போதும் பேசாமல் இருக்க, அவரை இருவரும் வாக்குவாதம் முத்தி உலுக்க ஆரம்பிக்க,

அந்த சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தனர் நானியும் ஜானகியும்.

அந்தப் பெண்மணியையே பார்த்த நானி, திடீரென்று ஓடிச் சென்றான்.

ஜானகி, "ஏய்... நானி... இரு... எங்கே போறே...? அங்கே போய் ஏதும் பிரச்சனை பண்ணாதே..." என்று கத்திக் கொண்டே பின்னாடி போக,

நானி ரோட்டைத் தாண்டிச் சென்று அந்தப் பெண்மணியின் அருகில் செல்ல, அந்த மகன்கள் இருவரும் இப்போது நானியைப் பார்த்து முறைத்தனர்.

"யோவ்... இன்னாய்யா எங்காத்தாவைச் செய்யுறே? என்னா... கண்ணெல்லாம் நோண்டுறே... அண்ணாத்தை கேளு..." என்று இளையவன் உசுப்ப

நானியோ அதை எல்லாம் கண்டு கொள்ளாமல்,

"பாட்டி... ஏதாவது பேசுங்க..." என்று கூற, அவனைப் பார்த்த அந்தப் பெண்மணி "தமழ்ழ்ழ்பி..ழ்" என்று குழற,

நானி, "ஓ.கே... ஓ.கே... விடுங்க... யோவ் ஒரு கிளாஸ் தண்ணி தாங்க..." என்று இளையவனைக் கேட்க,

அவன் முறைக்க, நானி, "யோவ்... ஆத்தா ஆத்தான்னு உயிரை விடுறீங்களே... அவ உயிரோட இருக்கணுமா வேண்டாமா... எடுத்துட்டு வாங்கய்யா...?" என்று திட்ட,

அவர்கள் பதறிப் போய் எடுத்து வந்தனர். நானி அந்தப் பெண்மணியைக் குடிக்க வைக்க, அவரால் அதை விழுங்கக் கூட முடியவில்லை. துப்பி விட்டார்.

நானி அவரின் மக்களிடம், "யோவ்... உடனே 108க்குப் போன் பண்ணுங்க... உங்கம்மாவுக்கு ஸ்ட்ரோக் வர ஆரம்பிக்கப் போகுது... இனிஷியல் ஸ்டேஜ்... சீக்கிரம் போனைப் போடுங்கடா..." என்று கூற,

அவர்கள் மட்டுமின்றி ஜானகியே அதிர்ந்தாள்.

அவர்கள் முழிப்பதைப் பார்த்த நானி, "யோவ் உங்கம்மா செத்தாப் பரவாயில்லையா..? போனைப் போடுங்கய்யா..." என்று கத்த,

அவர்கள் உடனே கைபேசியை எடுத்து அழைக்க, அடுத்த பத்தாம் நிமிடம் வந்த ஆம்புலன்ஸ் அவர்களை ஏற்றிச் சென்றது.

நன்றியோ விசாரிப்போ எதுவுமே கூறக்கூட இயலாதவர்களாய் அதிர்ந்து போய் அந்த இருவரும் இருக்க, ஆம்புலன்சில் வந்த மருத்துவரும் அது ஸ்ட்ரோக் என்பதை உறுதி செய்தார், வெகு பிரயத்தனத்துடன்.

ஆனால், நானியோ, இரு சோதனைகளில் சொல்லி விட்டான்.

சிலையாகிப் போன இருவரால் செய்ய முடிந்தது, நானியின் கையை ஒரு நிமிடம் பிடித்துக் கொண்டு கண்ணீருடன் நின்றதுதான். அதற்குள் மருத்துவர் அழைக்க, இருவரும் தங்கள் தாயுடன் ஆம்புலன்சில் நுழைந்தனர்.

நானியையும் ஜானகியையும் அந்தக் குடிசைவாழ் மக்களே ஒரு நன்றியுடன் பார்க்க, ஜானகி மெல்ல நானியிடம்,

"மழுங்கிடுச்சுன்னு சொன்னே... இன்னும் பிரகாச மாகத்தானே இருக்கு..." என்று கூற,

அப்போதுதான் நானிக்கே தான் செய்தது ஞாபகத்தில் பதிந்தது. பதறிப் போய் அவளைப் பார்த்த நானிக்கு, அப்போதுதான் புரிந்தது, தன்னால் மருத் துவத்தை விட முடியாது என்று.

அவன் பார்வையில் இருந்தே, அவன் அதிர்வில் இருந்தே அவன் மனதைப் படித்த ஜானகிக்கு முகத்திலோ வெற்றிப் புன்னகை.

அவள் ஆட்டத்தில் அடுத்த வெற்றி நானியின் முடிவில்... இனி நானியின் முடிவு என்ன?

## 24

அன்று காலையில் இருந்தே ஜானகிக்கு மனதை அலைக்கழித்துக் கொண்டே இருந் தது. முந்தைய நாள் தான் கூறியதற்கு நானியின் மனநிலை என்ன என்பதுதான் அது.

'அவன் யோசித்து நல்லதொரு முடிவு எடுத்திருப் பானா..? இல்லை... மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறி இருக்குமா...?' என்று பலவாறான சிந்தனையில் அவள் மூழ்க,

ரேணுகாதான் அவளை வெளியே இழுத்து வந்தார்.

"ஜானு... நீ ஏன் இப்படிக் குழம்பித் தவிக்கிறே... கண்டிப்பா அவன் மாறுவான். விடு. இந்த ஒரு வாய்... இந்த இட்லியைப் பிச்சுப் போடுடி..." என்று அவளை ஊக்கினார்.

தாய் அறியாத சூல் இல்லை என்பது போல், ரேணுகாவிற்கு ஜானகியின் மனதில் சிறு சலனம் வந்திருப்பது புரிந்துதான் இருந்தது. ஆனால், எங்கே தான் பேசப் போய் தன் மகள் இல்லை என்று சாதித்து விடுவாளோ என்று எண்ணிய அவர், கொஞ்சம் அடக்கியே வாசித்தார்.

ஆனால், ஜானகி வெளியே சாதாரணம் போல் காண்பித்தாலும் உள்ளுக்குள் சிறிது குழப்பத்தோடுதான் இருந்தாள்.

அந்தக் குழப்பத்தில் மூழ்கியவள், நானியின் கைபேசிக்கு அழைக்க, அதுவோ உயிரற்றுப் போயி ருந்தது.

சிறிது நேரம் அங்கும் இங்கும் நடந்தவள், ஒரு முடிவிற்கு வந்தவளாய்,

ரேணுகாவிடம், "அம்மா... மாமா வீடு எங்கே இருக்கு...?" என்று கேட்க,

அதைச் சற்றும் எதிர்பாராத ரேணுகாவே அதிர்ந்து தான் போனார்.

அங்கே அவனது வீட்டில் குணா காலையிலேயே தன் நண்பரைக் காண, நங்கநல்லூர் வரை சென்றிருக்க, தன் வழக்கம்போல் விட்டத்தையே பார்த்துக் கொண்டு கட்டிலில் படுத்திருந்தான் நானி.

வாழ்வில் முதன் முறையாக, அவன் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வின் மேல் ஒருவித சலிப்புத் தோன்ற ஆரம்பித்திருந்தது. எதற்கோ பயந்து

ஓடப்போய், இறுதியில் தானே மாறி விட்டோமே என்று எண்ணினான்.

நேற்று அந்த சகோதரர்கள் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விடுகையில், வெகு நாளைக்குப் பிறகு ஒரு உயிரைக் காப்பாற்றியதில் சிலிர்த்துப் போனது தான் உண்மை. தன் காதலியைத் தழுவிச் சங்கமித்த சுகம் கிடைத்ததுதான் உண்மை. அந்தச் சந்தோஷத்தை எந்த மதுவும் மாத்திரையும் அவனுக்குத் தந்ததில்லை.

ஜானகி சொன்னது போல், தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமோ என்று கூட எண்ணினான். ஆனாலும் அவனால் சட்டென்று மாற முடியவில்லை. மறுபடியும் மதுபாட்டிலை எடுத்துக் கவிழ்த்தான்.. போதையில் மரக்கவும் மறக்கவும் எத்தனித்தான். இப்படிப் பலதரப்பட்ட யோசனைகளில் காலம் விரைவாய்ப் பயணிக்க, அவனின் வீட்டில் அழைப்பு மணி கீதமாய் ஒலித்தது.

"இங்கே எதுக்கு வந்தே...?" என்று குரலில் சற்றுக் கடுமையுடனே கேட்டான் நானி. அந்த கடுமையைத் தன் கடைக் கண்ணால் உதறிய ஜானகி.

"இதுதான் உன் வீடா... ம்ஹூம்... நல்லா இருக்கு... ஆனால், நீட்டா இருக்கே... மாமாதான் கவனிப்பார் போல. நீயெல்லாம் எங்கே இவ்ளோ சுத்தமா வைச்சிருக்கப் போறே..." என்று சல்சலத்தபடியே உள்ளே வந்தாள் அவள்.

அவனோ எரிச்சலில், போதையின் உச்சத்தில், "நீ கிளம்பப் போறியா..? இல்லையா..? யாராவது பார்த்தா

பிரச்சனை ஆகிடும்..." என்று குழறினாலும் அழுத்தமாகக் கூற, அவனை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்துக் கலகல வெனச் சிரித்த ஜானகி,

"ஓஹோ... நீ அவ்வளவு நல்லவனா...? அப்போ நடு ராத்திரி நீ என் ரூமுக்கு வந்தியே... அது பரவா யில்லையா...?" என்று கிண்டலாகக் கேட்க,

நானி பல்லைக் கடித்துக் கோபத்தை அடக்கினான்.

ஜானகி விடவில்லை. "குடிச்சிருக்கே போல... என்ன... நேத்து நடந்த விஷயம் உன்னை ரொம்பப் படுத்துதா...?" என்று கேட்க,

நானி, "ஏய்... நேத்து நடந்த விஷயத்தைப் பத்தி நான் எதுவும் பேச விரும்பலை. என்னை விடு. நான் இப்படியே இருந்துட்டுப் போறேன்..." என்று கூறி விட்டுத் தன் அறைக்கு விடுவிடுவெனச் செல்ல, அவன் பின்னாடியே நாய்க்குட்டி போல் சென்ற ஜானகி,

"அப்படியெல்லாம் உதறிட முடியாது கண்ணா. நான் ஒண்ணு கேட்கவா...? நேத்து அந்த ரெண்டு ஏழைப் பசங்களும் உன் கையைப் பிடிச்சுக் கண்ணீர் விட்டாங் களே... அது கொஞ்சம் கூடவா உன்னை அசைக்கலை? இல்லைன்னு சொல்லாதே. அது சுத்தப் பொய்... உனக்கு ஏன் இது புரிய மாட்டேன்றது நானி... கடவுள் உன்னைப் படைச்சதே நாலு பேருக்கு உதவி செய்யத்தான். ஆனால், நீ அதைச் செய்யாமல் உன்னையே மழுங்கடிச்சுட்டு... எனக்கு உன்னை நினைச்சாலே வெட்கமா இருக்கு நானி..." என்றவளின் குரலில் கடுமை ஏறியது.

"நானும் கூடப் பத்து வருஷமா பூட்டிக்கிட்டுத்தான் இருந்தேன்... என் திறமையை நான் வெளிக்காட்டாமல் இருந்தது பிரச்சனை இல்லை... ஏன்னா, என் திறமை எனக்கு மட்டும்தான் உபயோகம். ஆனால், உன் தொழில் ஒரு உயிரைக் காப்பாத்துறது.... அதை நீ செய்ய மலன்னா எப்படி...?" என்று அவனைக் கூர்ப் பார்வை பார்த்தபடி இன்னும் பேசிக் கொண்டே இருக்க,

நானி, "போதும்... போதும்... போதும்... ஜஸ்ட் ஸ்டாப் இட்..." என்று யாரும் எதிர்பாராத வேளையில் கத்தினான் நானி.

ஜானகி அதிர்ந்து போக,

நானி, தன் கைபேசியை எடுத்து உயிர்ப்பித்தான். நம்பர்களை அழுத்திக் காத்திருந்து,

"ஜெஸ்சி... நானி... ஸ்பீக்கிங்... என் வீட்டுக்கு வார்றியா...? எதுக்கா...? போன வாட்டி நீ எதுக்கு உன் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனியோ அதுக்குத்தான்..." என்று உரையாட,

ஜானகி அதிர்வு மாறி, இப்போது சிரிப்புடன் பார்த்தாள். அவள் சிரிப்பதைப் பார்த்து நானி இப்போது அதிர, அவன் கைபேசியைப் பிடுங்கியவள்,

"போன் வயர் பிஞ்சு ஒரு வாரம் ஆச்சு நானி... ஹா...ஹா... நீ இப்படி எல்லாம் செய்து என்னை வெறுப்பேத்தலாம்னு பார்க்கிறியா..? முதலில் நம்பரை டயல் பண்ணிக் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணணும்... பாவம், உனக்கு நடிக்கக் கூட..." என்று முடிப்பதற்குள்,

அவள் கழுத்தைப் பிடித்துத் தரதரவென இழுத்துச் சுவற்றில் அழுத்தியபடி நின்றான் நானி.

அவன் கண்களில் இதுவரை இல்லாத கோபத் தையும் ஆங்காரத்தையும் பார்த்தாள் ஜானகி.

"ஏன்டி... ஏன்டி... என் வாழ்க்கையில் வந்தே... நீ வர்ற வரைக்கு நிம்மதியா இருந்தேன்... உன்... உன்னைப் பார்த்ததில் இருந்துதான் என் வாழ்க்கையில் குழப்பமே... என்னைத்தான் உனக்குப் பிடிக்காதே... அப்புறம் ஏன்டி என்னை மாத்தணும்னு நினைக்கிறே...? சுத்திச் சுத்தி வர்றே...? இல்லை... இனிமேலும் பொறுத்துப் போக மாட் டேன்... உன்னைக் கதறடிக்கிறேன்... நானின்னா யாருன்னு உனக்கு இன்னும் தெரியலை இல்லை..." என்றவன் போதை தலைக்கேற, குடித்து விட்டு, அவளின் பட்டு இதழ்களை அவனின் முரட்டு இதழ்களால் மூடினான்.

அவள் கண்கள் நிலைகுத்தி இருக்க, அவள் இதழ்களை காயப்படுத்த அதை முத்தமிட்டவன், அதன் மென்மையில், அதன் இனிமையில் மயங்கித்தான் போனான்.

'நானி, மயங்கித் தொலைச்சிடாதேடா... அவளைக் கொஞ்சம் பயமுறுத்து... அவ உன்னை வெறுக்கணும்... அதுக்குத்தான் இந்த ஷாக்...' என்று அவன் மனச்சாட்சி கூப்பாடு போட, அதைக் காது கொடுத்துக் கேளாமல் அவள் இதழ்களைச் சிறைப்படுத்தியவன், அவளுள் அடைக்கலமாக ஆரம்பித்தான்.

"ம்ஹ்ம்... ம்ஹ்ம்..." என்று முனக ஆரம்பித்த ஜானகி, அவனைப் பதறித் தள்ளி விடுவாள் என்றுதான்

எதிர்பார்த்திருந்தான் நானி. ஒரு தடவை கன்னத்தில் முத்தமிட்டதற்கே உட்கார்ந்து அழுதவளாயிற்றே அவள்.

ஆனால் நடந்ததோ வேறு... அவன் அழுத்தத்தில் முனகிய ஜானகியின் விரல்கள், அவன் தலைமுடிக்குள் நுழைந்து இன்னும் அழுத்தமாகச் சிறை செய்து அதற்கு மேல் நிற்காமல் அவன் கையை எடுத்து அவள் இடையில் வைக்க... அங்கே முத்தத் தீயைத் தணிக்க இருவரும் வியர்வையும் உற்பத்தியாக, அவளின் இடையை அவன் கரம் அளவெடுத்ததும்தான் புரிந்து போய்ப் பதறி விலகினான் நானி.

அவன், அவளைப் பார்க்க... அவள் அவனைப் பார்க்க... அங்கே வார்த்தைகளுக்கு இடமில்லாது போனது. அவன், அவளை இப்போது கோபம் போய் ஏக்கத்துடன் பார்க்க, அவளோ அவன் கண்ணைப் பார்க்க முடியாமல் திரும்பி நின்றாள்.

வெட்கம்... அவன் இதுவரை பார்த்த பெண்களிடம் அறியாதது. அதை ஜானகி தர, அவனே அதிர்ந்துதான் போனான். மெல்ல நெருங்கியவன் அவளை அணைக்க, அவளோ சிலிர்த்துப் போனாள். அவளின் ஒவ்வொரு இதயத் துடிப்பும் அவனுக்குத் தெளிவாகக் கேட்க, அவனின் மேல் அவளுக்கு இருந்த காதலும் அதன் வழியே அவனுக்குக் கேட்டது.

"ஜானு..." என்றபடி அவளைத் தூக்கிக் கொண்டு அப்படியே படுக்கையில் கிடத்த, அவளோ கண்மூடிக் கிடக்க, அவளின் எதிர்ப்பே இல்லாத ஆதரவு அவனை இன்னும் பித்தனாக்கியது.

"ஜானு... ப்ளீஸ்... என்னை நிறுத்து... என்னைத் திட்டு... அடி... இப்படி என் கிட்டே மயங்காதே... நான் கெட்டவன்..." என்று அவனது உதடுகள் பேசினாலும், விரல்கள் அவளின் பொக்கிஷங்கள் அனைத்திலும் ஆராய்ச்சியை ஆரம்பிக்க,

"போதும் நானி... இதுநாள் வரை நான் தயங்கினது எல்லாம் போதும்... உன் மேல் நான் வைச்சிருந்த காதல் என்னைக் கொல்லுது நானி... இது தப்புதான்... ஆனால், நீ எனக்கு வேணும்... உன் மேல் நான் பைத்தியமா இருக்கேன்டா... நீ கெட்டவன்னா நானும் கெட்டவளா இருக்கேன்... நான் எப்படி மாறினேன்னு எனக்கே தெரியலை... ப்ளீஸ் நானி... என்னை எடுத்துக்கோ நானி..." என்று அவள் உளறியபடி இருக்க,

"ஜானு... ஜானு..." என்பதை விட, அவன் என்ன கூறுவது என்றே தெரியவில்லை. அவன் உதடுகள் அவள் மேனியெங்கும் பூக்கோலம் போட, அவளைப் பெண்ணாய் உணர வைத்துக் கொண்டிருந்தான். ஆனால், அப்போதுதான் ஜானகி அதைக் கூறினாள்.

ஜானகி அவன் கண்களைப் பார்க்க முடியாமல், "என் மேல் உனக்குக் காதல் இல்லைன்னா கூடப் பரவாயில்லை... என்னை ஒரு போதையா நினைச்சிக்கோ... நீ பல பெண்கள் கூட இருந்தியே... அந்தப் பெண்களில் ஒருத்தியா என்னை நினைச்சிக்கோ... இனிமே எப்போவெல்லாம் உனக்குப் போதை தேவைப் படுதோ என்னை எடுத்துக்கோ... ஆனால், இந்த மாத்திரை, குடி, எல்லாம் விட்டுட்டு, டாக்டராகிடு நானி... ப்ளீஸ் நானி... நீ பணம் தர வேண்டாம்... பதிலுக்கு உன்

வீட்டே இருந்து எனக்கு அதுதான் வேணும்...” என்று கண்களில் நீர் நிறைய, உதடுகள் துடிக்க, அவமானத்தில் முகம் சுருங்க, உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவன் மனதில் ஈட்டியாகப் பதம் பார்க்க...அவ்வளவு நேரம் இருந்த மோன நிலை மாறிப் பதறி அவளை விட்டு எழுந்தான் நானி.

காதலைச் சொன்ன அதே கணத்தில் தன்னை விலை மகளாக நினைத்துப் பார்க்கச் சொன்ன ஜானகி, அவனைத் துடிக்க வைத்தாள். நானியின் காதலை அவள் உணரவே இல்லை. மாறாக அவனை மாற்ற அவனுடன் ஒன்றுவதாக அவள் கூறிய வார்த்தைகள், அந்த ஆண் மகனை உயிரோடு கொன்றது.

‘என்ன வார்த்தை கூறி விட்டாள் பாவி... அந்தப் பெண்கள் மாதிரி இவளை நினைக்கணுமா... சே... ஜானு ஒரு வார்த்தையில் கொன்னுட்டியேடி... என்னை டாக்டராக்க நீ இப்படியா இறங்கி வரணும்... உன்னை தேவதை மாதிரி வைச்சிருக்கேன்டி...’ என்று மனதில் குமுறியவாறே அவன் வியர்வையில் நனைந்த தலையை உலுக்க, அதில் விழுந்த துளி அவளைக் கூச வைக்க, கூடவே எழுந்த ஜானகி குழப்பத்துடன் அவன் தோளைத் தட்டி, “நானி...” என்று மெதுவாக அழைக்க,

நானி அவளை அடிபட்ட பார்வை பார்த்து, “வெளியே போ...” என்று கர்ஜிக்க,

ஜானகி புரியாமல், “நானி...” என்று மறுபடியும் அழைக்க,

அவன், “வெளியே போகப் போறியா, இல்லையா?” என்று அவன் கத்தியது வீடு முழுவதும் எதிரொலித்தது.

அப்போதுதான் வீடு வந்து சேர்ந்த குணா, நானியின் அறையிலிருந்து வந்த சத்தத்தைப் பார்த்து, "ஏய்... என்னடா... யாரு கிட்டே சத்தம் போடுறே...?" என்றபடி வர, அங்கே கசங்கிய புடவையில் கண்களில் கண்ணீருடன் நின்றிருந்த ஜானகியைப் பார்த்து அதிர்ந் தார்.

"ஜானு... நீ எங்கே இங்கே...?" என்று அவர் விசாரிப்பதற்குள் அவமானத்தில் கூனிப் போய், அங் கிருந்த அழுகையை அடக்கிக் கொண்டு ஓடினாள் ஜானகி..

அவள் நடக்க ஆரம்பித்ததை இன்று வரை அறியாத குணா, அதிர்ந்து போய்ப் பார்க்க, நானியின் கண்கள் சீற்றம் குறையாமல் சுட்டெரித்தது.

"அக்கா... என்னதான்க்கா ஆச்சு...? எனக்கு ஒண் ணுமே புரியலை. அவன் என்னடான்னா என்னைக்கும் இல்லாத திருநாளா நரசிம்ம அவதாரம் எடுத்து நிக்கிறான். ஜானு நடக்கிறா...? அழுதுண்டே வீட்டை விட்டுப் போறா? நேக்கு ரொம்ப மனசு குழப்பமா இருக்குக்கா..." என்று, தன் வீட்டிற்கு வந்த தமக்கையிடம் கூறிக் கொண்டிருந்தார் குணா.

ரேணுகாவிற்கு அரசல் புரசலாக ஏதோ புரிந்தது தான். தன் மகளின் ஏதோ இழந்தது போல் பார்வையும், அவ்வப்போது அழுகையும் அந்தத் தாய்க்கு எதையோ உணர்த்தியதுதான்... ஆனால், அவரால் ஓரளவிற்கு மேல் அழுத்திக் கேட்க இயலவில்லை. ஆனால், அவருக்கு ஒன்று மட்டும் புரிந்தது... ஜானகியால் இனி நானி இல்லாமல் இருக்க முடியாது என்பதுதான் அது.

அதனால் தன் தம்பியிடம் அனைத்தையும் கூறத் துவங்கினார். ஒன்று விடாமல் கூறினார். நானியும் ஜானகியும் சந்தித்ததில் இருந்து, அவள் நடந்ததில் இருந்து, இப்போது இருதலைக் கொள்ளி எறும்பாகத் தன் காதலை உள்ளுக்குள் வைத்துத் தவிப்பது வரை அனைத்தையும் கூறினார். அதைக் கேட்டு குணாவின் மனம் நெகிழ்ந்தது.

"அக்கா... நான்... நானியாலயா... ஜானு இப்படி... என்னால் நம்பவே முடியலைக்கா..." என்று கூற,

ரேணுகா இப்போது தன் தம்பியைக் கண்ணெடுக்காமல் பார்த்தார்.

"குணா... நான் ஒண்ணு சொல்லவா...? அவன் இப்படி ஆனதுக்குக் காரணமே நீதான்டா... எல்லாத்திலேயும் சரியா இருந்த நீ... ஒரு சின்னப் பையன்... அதுவும் புத்திசாலிப் பையனை வளர்க்கத் தெரியாமல் தோத்துட்டேடா..." என்று மெல்லிய குரலில் கூற,

குணா அதிர்ந்தார். "என்னக்கா சொல்றே...?" என்று பதறிப் போய்க் கேட்க,

ரேணுகா, நானியின் கடந்த காலத்தையும் ஒரு பெருமூச்சுடன் கூறி முடித்தார்.

"நீ.. நானியை டாக்டராக்கணும்னு நினைச்சது தப்பில்லைடா... ஆனால், அவன் மனசை அதுக்குத் தயார்ப்படுத்தலை... அதான் இந்தப் பிரச்சனை. என் பொண்ணுக்குத்தான் அப்பா பாசம் கொடுத்து வைக்கலைன்னா, நானிக்கும் கொடுத்து வைக்கலை..."

என்று சாதாரணம் போல் கூறினாலும், அவரின் குரலில் குற்றச்சாட்டு இருந்தது.

குணா, "அக்கா... நான்... நான் தப்புப் பண்ணிட் டேனா...? நான்... நான் காரணமா...? இவ்ளோ நாள் அவனைக் கன்னாபின்னான்னு திட்டிட்டு இருந்தேனே... அதுக்கெல்லாம் நான்தான் காரணமாக்கா...?" என்று அதிர்ந்துதான் போனார் அவர்.

குணா ஒன்றும் குமரகுரு போலில்லை. அவருக்கு அபிமேல் எவ்வளவு பாசமோ அதேபோல் நானியிடமும் இருந்தது. ஆனால், அவரின் பயமும் தடுமாற்றமும்தான் அவரை நானியிடம் மூர்க்கத்தனமாக இருக்க வைத்தது. அது புரிந்தபோது, அவர் பதறித்தான் போனார்.

தன் தமக்கை தன்னை நோக்கிச் சுட்டு விரலை நீட்டியதும் புலம்ப ஆரம்பித்த குணா கண்களில் நீர் வழிய ஆரம்பிக்க, அவரை ஆசுவாசப்படுத்த ஆரம்பித்தார் ரேணுகா.

"விடுடா... நீயென்ன என் புருஷன் மாதிரியா செஞ்சே... ஏதோ ஒரு பயம்... அதான் இப்படிச் செஞ் சிட்டே... விட்டுத் தள்ளுடா... இதை நான் சொல்லக் கூடா துன்னுதான் நினைச்சேன்... ஆனால், ஏதோ தோணித்து... அதான் சொல்லிட்டேன்..." என்று சமாதானப்படுத்த,

அவர் முகம் அப்போதும் தெளியவில்லை. சரி, விட்டுப் பிடிப்போம் என்று எண்ணி,

"குணா... நல்லா யோசி குணா... உன் மேல் தப்பு இல்லை.. நீ உணராமல் செஞ்சது. அதை எப்படித்

திருத்தலாம்னு யோசி. அதை விட்டுட்டு உடைஞ்சு போயிடாதே..." என்று கூறி விட்டுக் கிளம்பினார்.

பல வருடங்களாக நடத்தப்பட்ட வழக்கில், தானே குற்றவாளி என்று அறியப்பட்ட குணா, அப்படியே ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தார்.

"இப்போ.., என்னதான் உனக்குப் பிரச்சனை...? இப்படியே பிரமை பிடிச்ச மாதிரி எவ்ளோ நாள்தான் இருக்கப் போறே...?" என்று பொறுமை இழந்து கேட்ட நட்டுவைப் பார்க்காமல், வெளியே தன் பார்வையைப் பதித்தாள் ஜானகி.

ஏதோ ஒரு வேகத்தில் நானியிடம் தன்னை ஒப்படைக்க முடிவெடுத்து விட்டாள்தான். ஆனால், அவன் வெளியே போ என்று கூறிய ஒரு வார்த்தைதான் அவளைக் கனவுலகில் இருந்து வெளியே வர வைத்தது. தான் எவ்வளவு பெரிய பிழை செய்ய இருந்தோம் என்ற குற்றவுணர்ச்சியும் நானியின் கோபமும் அவளை அவமானத்தில் குறுக வைத்தது. இரண்டு நாட்களாக யாரிடமும் பேசவில்லை. சாப்பிடவில்லை... தூங்கவும் இல்லை.

ரேணுகாவைப் பார்த்தாலே குற்றவுணர்ச்சியில் அழுகை வந்தது. அதனால் அவரையும் தவிர்க்க, நட்டுவையும் தவிர்க்க... அதற்குத்தான் நட்டுவின் அர்ச்சனை ஆரம்பித்தது.

தான் கத்தியும் தன்னிடம் கவனத்தைப் பதிக்காத ஜானகியைப் பார்த்துக் கோபம் வரவில்லை நட்டுவிற்கு. அவளுக்கு ஏதோ பிரச்சினை என்று தெரிந்தது. ஆனால்,

அதைத் தெரிந்து கொள்ள அவன் விரும்பவில்லை. மாறாக வெளிக் கொண்டு வர விரும்பினான். அதனால்,

"ஜானு... இன்னைக்கு தி.நகர் போய் ரிஜிஸ்டர் பண்ணணும்... ஞாபகம் இருக்கா...? உனக்கு என்ன பிரச்சனை இருந்தாலும் பரவாயில்லை... தூக்கி ஓரமா வைச்சிட்டு வா..." என்று கூறி, அவளை வற்புறுத்தி இழுத்துச் சென்றான்.

ரேணுகாவிடமும் கூறிக் கொண்டு அவர்கள் இருவரும் செல்ல, அங்கே பதிவு ஆரம்பிக்க நேரம் பிடித்தது. அதற்குள் அவர்களுக்கு ஒரு கண்டமும் ஆரம்பித்தது.

"ரேணு... டி ரேணு..." என்று கத்தியவாறே வீட்டிற்குள் நுழைந்தார் குமரகுரு.

வைஜூவும் ராதாவும் வந்து பார்க்க, ரேணுவும் சமையலறையில் இருந்து வந்தார்.

உள்ளுக்குள் உதறல்தான். பின்னே...! முதன் முறையாக ஜானகியை வெளியே அனுப்பி வைத்திருக்கி றாரே...? அவளை எங்கேனும் பார்த்து விட்டாரோ..? என்று அவர் கலக்கமுற்று வர... ஆனால், வழக்கத்திற்கு மாறாகப் புன்னகையுடன் வர, ரேணுகாவிடமும் ஆசுவாசம்.

"ரேணு... வைஜ்... திவ்யா... கல்யாண இன்விடேஷன் பிரிண்ட் ஆயிடுத்து... சாமி முன்னாடி வைச்சு எடுத்துண்டு வாங்கோ..." என்று கூற, ரேணுகாவும் மகிழ்ச்சியுடன் வைத்து எடுத்து வந்தனர்.

திவ்யாவும் அழைப்பிதழைப் பார்த்து வாட்ஸ் அப்பில் அபிக்கு அனுப்பி ஸ்கைப்பில் உரையாடிக்

கொண்டிருக்க, இருவருக்கும் திருமணம் கூடி வரும் பூரிப்பு தோன்றியது.

ரவியும் சேகரும் ஆபீசில் இருந்து வந்து அழைப் பிதழைப் பார்வையிட,

குமரகுரு அப்போதுதான் குண்டைத் தூக்கிப் போட்டார்.

"ரேணு... பார்த்தசாரதி கோயிலுக்குப் போய் இன்விடேஷனை வைச்சு அர்ச்சனை பண்ணிண்டு வரலாமா...? நேக்கு ரொம்ப நாள் ஆசை... எல்லாரும் ரெடியாகுங்கோ...? டி ரேணு... உன் பொண்ணையும் ரெடியாகச் சொல்லு... வீல் சேரில் வைத்தாவது உருட் டிண்டு போறேன்..." என்று கூற,

ரேணுகா அதிர்ந்தார். "ஏன்னா... அவ எதுக்கு...? நாம மட்டும் போயிட்டு வரலாமே...?" என்று தயங்கிக் கூற,

குமரகுரு எரிச்சலுடன், "எதுக்குடி... அப்புறம் உன் தம்பி... அப்புறம் பார்க்கறவா எல்லாம் உன் பொண்ணை ஏன் ஒதுக்கி வைக்கிறேன்னு கேட்பா... நான் அவளைப் பத்திச் சொல்ல முடியுமா என்ன..? அது மட்டுமில்லை... உன் பொண்ணுக்கு இப்போவாவது நல்ல புத்தி வரட் டுமே...!" என்று கூற,

ரேணுகா, "அவளுக்கெல்லாம் வேண்டாம்... உங்களுக்குத்தான் தேவை..." என்று முணுமுணுக்க,

"என்ன... என்ன சொன்னே...?" என்று கேட்க,

"இல்லைங்க... அது வந்து..." என்று அவர் தயங்குவதைக் கூடப் பொருட்படுத்தாமல்,

குமரகுரு, “இப்போ அவளை இழுத்துண்டு வர்றியா...? இல்லை, நான் செய்யவா...?” என்று கத்த,

ரேணுகா ஓடியே சென்று நட்டுவிற்கு அழைக்க, அழைப்பு எடுக்கப்படவில்லை. அவருக்கு வியர்த்துப் போனது.

‘அய்யோ... இப்ப நான் என்ன செய்யறது...? பழனியாண்டவா... இவர் சும்மாவே அவளைக் கரிச்சுக் கொட்டுவாரே... இது தெரிஞ்சா என்னாகுமோ...?’ என்று நினைத்தாலே அவரது நெஞ்சைச் சுருக்கென்று குத்தியது.

‘நான் போய் சொன்னால் கூட யோசிக்க மாட்டாரே...? அய்யோ... இன்னைக்குன்னு பார்த்தா இவருக்கு இப்படித் தோணணும்...” என்று நினைத்தவரைக் கலைத்தது குமரகுருவின் குரல்.

“என்ன... எல்லாரும் ரெடியா...? பொழுது சாயறதுக்குள்ளே போயிட்டுத் திரும்புவோம்...” என்று முதல் அலாரத்தைக் கொடுக்க,

ரேணுகா நடுங்கிய படியே கிளம்பினார். அதற்குள் வந்த அவர், “என்னடி... இன்னும் நீயே கிளம்பலையா...? போய் உன் பொண்ணை கூட்டிண்டு வா. மசமசன்னு நிக்காதே...! அவளாலே லேட்டாயிடுத்து... அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்...” என்று கர்ஜித்து விட்டுச் செல்ல,

ரேணுகாவிற்கு சக்தியெல்லாம் வடிந்தது.

‘போச்சு... இன்னைக்கு அவ்ளோதான். என் பொண்ணு சாதிச்சுட்டுதான் இந்த மனுஷன் முன்னாடி

ஆக்கணும்னு நினைச்சேன்... எல்லாம் போயிடுத்து. அவளுக்குத் தலையெழுத்து இப்படின்னா யாராலே மாத்த முடியும்...?' என்று அழுகை வரும் போல் இருக்க,

அதற்குள் கீழே ஒரே கூச்சல் கேட்க,

“அம்மாஆஆ...” என்று திவ்யாவின் குரலும் கூடவே,

“அய்யோ திவ்யா...” என்ற வைஜுவும் ராதாவும் கத்தும் குரல் கேட்டுப் பதறிப் போய் ஓடி வந்தார் ரேணுகா.

அங்கே மாடிப்படியில் இருந்து உருண்டு கொண் டிருந்தாள் திவ்யா.

“திவ்யா...” என்று அரண்டு போய்க் கத்தினார் ரேணுகா.

வீட்டில் இருந்த அனைவரும் ஓடிச் சென்று திவ்யாவைத் தூக்க, தலையில் அடிபட்டதால்... ரத்தம் வரவில்லை என்றாலும் நன்றாக வீக்கம் வைத்திருந்தது.

அவள் வலியில் முனகி மயக்க நிலைக்குச் செல்ல,

“அய்யோ... இன்னைக்குப் போயா என் பொண்ணுக்கு இப்படியாகணும் பகவானே...” என்று ரேணுகா கதற,

“சும்மா இருடி... அபசகுனமா...” என்று குமரகுரு அடக்க, ரவியும் சேகரும் சேர்ந்து திவ்யாவை உடனே மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர்.

சரியாக 7 மணிக்கு வந்து சேர்ந்தாள் ஜானகி. வீட்டில் யாராவது பார்த்து விடுவார்களோ என்று பயந்து பயந்து, நானியின் வழக்கம் போல் பின் கட்டில் ஏணி வைத்து ஜன்னல் வழியாகக் குதித்தாள்.

அவள் வந்ததும் அறிந்த ரேணுகா ஓடிச் சென்று, "வந்துட்டியா ஜானு... நான் பயந்தே போயிட்டேன்டி... இன்னைக்கு என்ன நடந்துதுன்னு தெரியுமா...?" என்று நடந்ததைக் கூற,

ஜானகி பதறினாள். "அய்யோ... என்னம்மா சொல்றே..? அக்காவுக்கு அடி பலமா...? நீயென்னம்மா இங்கே உட்கார்ந்துண்டு இருக்கே... வா, போய்ப் பார்த்து வரலாம்..." என்று கூற,

ரேணுகா, "நானாடி போகமாட்டேன்னு உட்கார்ந் திருக்கேன்... உங்கப்பாதான் எல்லோரும் வந்தா அக்கம் பக்கம் இருக்கிறவா அபசகுனமாயிட்டதா சொல்வா... நாங்களே போயிட்டு வரோம்னு சொன்னார்... ஆனா ஒண்ணு ஜானு... இன்னைக்கு உன் அக்காவால் தான் நீ தப்பிச்சே..." என்று கூற,

ஜானகி, "என்னம்மா இப்படிச் சொல்றே... அக்கா வுக்கு ஒண்ணும் இல்லைதானே..." என்று பதறித்தான் போனாள்.

ரேணுகா, "இல்லைடி... உன் அண்ணன் போன் பண்ணான். வீக்கம் வத்த ஊசி போட்டிருக்காம்... விழுந்த அதிர்ச்சிதானாம்... வீட்டுக்குக் கூட்டிண்டு வரலாம்... சாரி உடுத்தி நடந்ததில் கால் வழுக்கியிருக்கும் போல. அவ வரட்டும், திருஷ்டி சுத்திப்போடணும்..." என்று கூற,

ஜானகியும் அமைதியானாள்.

ரேணுகா, "ஆமா... நீ போன காரியம் நல்லபடியா முடிஞ்சதா...?" என்று கேட்க,

"ம்ம்... முடிஞ்சதும்மா.. நல்ல கூட்டம். நேக்குதான் பயமா இருக்கும்மா... அவ்ளோ பேரில் தேறுவேனான்னு..." என்று பயத்துடன் கூற, அவள் தலையைக் கோதிய ரேணுகா,

"விடுறி... ஒண்ணும் பயப்படாதே... நீ ஜெயிச்சாலும் ஜெயிக்காட்டியும் என் பொண்ணுதான்..." என்று வாஞ்சையுடன் கூற, தன் தாயின் மடி சாய்ந்தாள் அந்த செல்வமகள்.

திவ்யாவை வீட்டிற்கு அழைத்து வந்திருந்தார்கள்.

இப்போது வீக்கம் கூட வற்றியிருந்தது. ஆனால், சோர்வாக இருந்தாள்.

குமரகுரு, "ரேணு... அவளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுத்துட்டு மாத்திரை கொடு... சரியா...? டையர்டா இருக்கா... நல்லாத் தூங்கட்டும்..." என்றபடி ஆணைகள் பிறப்பித்துச் செல்ல, திவ்யாவை அழைத்துக் கொண்டு அறைக்குச் சென்றார் ரேணுகா.

"பார்த்து நடக்கக் கூடாதா திவி... இப்போ பார்... வலி குறைஞ்சதா...?" என்று கேட்டுக் கொண்டே அவளைப் படுக்க வைத்துத் திருஷ்டி சுத்தி விட்டுப் பின் உணவை ஊட்டினார்.

"இனிமே சாரி உடுத்த என்னைக் கூப்பிடு... நான் கட்டி விடுறேன். நீ ஒழுங்காக் கட்டாமல் தத்தக்கா பித்தக்கான்னு நடந்துதான் விழுந்துட்டே..." என்று சலசலவெனப் பேசிக்கொண்டிருந்த தன் தாயையே கண்ணிமைக்காமல் பார்த்த திவ்யா,

"நான் மட்டும் ஒழுங்கா நடந்திருந்தால் நீயும் ஜானுவும் அப்பா கிட்டே மாட்டியிருப்பேளேம்மா..." என்று தலை சாய்த்துப் புன்னகையுடன் கேட்க,

அதுவரை ஊட்டிக் கொண்டிருந்த ரேணுகாவின் கை, அப்படியே அந்தரத்தில் அதிர்ச்சியில் நின்றது.

## 25

**தி**வ்யாவை அதிர்ச்சியுடன் பார்த்தபடி ரேணுகா இருக்க, அவரைப் பார்த்து அவள் சிரித்தாள்.

"என்னம்மா... அதிர்ச்சியா இருக்கா...? எனக்கு எல்லாமே தெரியும்... ஜானகிக்கு நானி உதவி செஞ்சது... ஜானு நடக்க ஆரம்பிச்சது... எல்லாமே தெரியும். தினமும் ஜானு அந்த... அவர் பேர் என்ன...? நட்டு கிட்டே பிராக்டிஸ் போறதை நான் பார்த்துக்கிட்டு தான் இருந்தேன். இன்னைக்கு அப்பா கோயிலுக்குக் கூப்பிட்டதும் நீ புலம்பினதைக் கேட்டேன்... அதான் ஒரு சின்ன டிராமா..." என்று சிரிப்புடன் கூற,

ரேணுகா, அவள் கையைப் பற்றி, "உனக்கென்ன பைத்தியமா திவி... ஏதாவது படாத இடத்தில் பட்டு ஏதாவது ஆகியிருந்தால், உனக்கு என்ன ஆகியிருக்கும்? கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணு..." என்று தாயாய் பதைபதைக்க,

திவ்யா, "அதெல்லாம் கவனமாகத்தான்மா இருந்தேன்... தலையில் அடிபடாமல் பார்த்துட்டுதான் விழுந்தேன்... என் தங்கச்சிக்கும் என் அம்மாவுக்கும் நான்

மாறந்ததில் இருந்து என்னத்தை செஞ்சு கிழிச்சேன்... லாஸ்ட் இதையாவது செய்ய முடிஞ்சதே..." என்று கூற,

ரேணுகாவின் கண்கள் நீரில் நிறைந்தன. திவ்யா நிறுத்தாமல் தொடர்ந்தாள். "அம்மா... நீ என்னை வெறுத்துடலையேம்மா... நான் உன்னையும் ஜானுவை யும் கண்டுக்கலைன்னு... நேக்கு இதெல்லாம் தப்புன்னே தெரியலைம்மா... ஒரு மாதிரி சுய நலமாவே வாழ்ந் துட்டேன். அபி கூட கொஞ்சம் கொஞ்சமா பழகப் பழகத் தான்மா... நானே மாறினேன்.

"அவர் தம்பி மேல் அவருக்கு இருந்த அன்பு... என்ன கெட்டவனாக இருந்தாலும் அவன் என் தம்பிங்கிற உரிமை.. அதெல்லாம் இந்த ஆறு மாசமா எனக்குப் பாடம்... முதன் முதலில் ஜானு நடக்கிறதைப் பார்த்தப்போ எனக்குள்ளே ஒரு சாட்டையால் அடிச்ச மாதிரி வலிம்மா... எங்க இருந்தோ வந்த ஒருத்தன் என் தங்கச்சிக்கு செஞ்சதைக் கூட நான் செய்யலையேன்னு..." என்று கூறி விட்டுக் கதறிக் கதறி அழும் மகளை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டார் ரேணுகா.

"இல்லைடா... இல்லைடா கண்ணு... அப்படி யெல்லாம் சொல்லாதேடா... உங்கப்பா வளர்த்த விதம் அப்படி... அதான்... இதில் உன் தப்பு என்னடா...?" என்று அவளைச் சமாதானப்படுத்த,

திவ்யா, "என்னையும் ஜானகி மாதிரி மாத்துவி யாம்மா... என் மேலயும் அன்பு வைப்பியாம்மா... நேக்கும் நீ வேணும்மா... என்னை வெறுத்துடலையே..." என்று ஆசையாகக் கேட்க,

அதற்கு மேலும் அவள் கேட்டதைத் தராமல் இருக்க, அவர் என்ன கல் மனுஷியா?

அங்கே, பிறந்து பல வருடங்களுக்குப் பின் தன் மகளைக் குழந்தையாக ஏற்றுக் கொண்டார் அந்தத் தாய். சில நிமிடங்கள் உணர்ச்சிக் கொந்தளிப்பிற்குப் பின் திவ்யா,

"அம்மா... இனி ஜானுவுக்கு எந்த உதவின்னாலும் என் கிட்டே கேளு... நான் செய்யறேன்... சரியா...? இனி நீ மட்டுமில்லை, நானும் அவளுக்கு அம்மாதான்..." என்று கூற, அதை ரேணுகாவும் ஏற்றுக் கொண்டார்.

பின், "எனக்கு ஜானு கிட்டே பேசணும் போல இருக்கும்மா... அவள் ஏதோ போட்டியில் சேரப் போறா இல்லை... அதுக்கு என் வாழ்த்தைச் சொல்லணும்..." என்று கூற,

ரேணுகா, "இப்ப வேண்டாம் திவி... உங்கப்பா பார்த்தா வம்பு...' நாளைக்குப் பக்கத்தில் உள்ள பார்க்குக்கு வா... நான் அவளையும் கூட்டிண்டு வரேன்... நீ எப்பவும் போல இரு... அப்படி மாறினா உங்கப்பா விற்கும் சந்தேகம் வரும்..." என்று கூற, அவளும் அதற்குச் சம்மதித்தாள்.

அடுத்த நாள் மாலை வழக்கம்போல் பார்க்குக்குச் செல்ல...

அங்கே ஜானகியும் திவ்யாவும் சந்தித்தனர். சகோதரிகள் இருவரும் ஒருயிராகிக் கொஞ்சிக் கொண்ட பின்தான் அங்கே வார்த்தைகளுக்கு இடம் வந்தது.

"அக்கா... என்னை மன்னிச்சிரு... என்னால்தானே நீ கீழே விழுந்து..." என்று சொல்ல முடியாமல் அவள் திணற, அவளை ஒரு சிரிப்புடன் நிறுத்திய திவ்யா, "அய்யோ... போதுமே... என்னை எல்லாரும் ஒரு தியாகி மாதிரி ஆக்கிடுவீங்க போலிருக்கே... உனக்கு நான் எதுவுமே செய்ததில்லை ஜானு... இது ஒண்ணையாவது செஞ்சேனேன்னு சந்தோஷப்பட்டுக்கிட்டு இருக்கேன்... இன்னொரு தடவை இந்த விஷயத்தைப் பத்திப் பேசினா... உன்னை... அவ்ளோதான்..." என்று போலியாக மிரட்ட,

ஜானகி சிரித்தாள். பிறகு திவ்யா, "ஜானு... உன் போட்டி எப்போ நடக்கப் போகுது...?" என்று விவரங் களைக் கேட்க,

ஜானகி முகம் கூம்பியது. ரேணுகாவும் திவ்யாவும் குழப்பத்துடன்,

"என்ன ஆச்சு ஜானு... சொல்லு... ஏதாவது பிரச்சனையா...?" என்று கேட்க,

ஜானகி, "என் தலைவிதிதான் அக்கா பிரச்சனை... இன்னைக்குத்தான் அந்த போட்டியோட தேதி அறிவிச் சாங்க... எப்போ தெரியுமா...? எப்போ முடியுது தெரி யுமா...? கரெக்டா உன் கல்யாணத்துக்கு முந்தின நாள். நான் எப்படிக்கா போக முடியும்...?" என்று வருத்தத்துடன் கூறிய குரல் தழுதழுத்தது.

திவ்யா, "பூ.. இவ்ளோதானே...? ஏன் இதில் என்ன? பிளைட்ல ஏறி வந்துரு... மூணு நாலு மணி நேரம்தானே ஆகும்..." என்று கூற,

ரேணுகா இப்போது, "அதெப்படி திவி... மூணு நாள்... அதுவும் கல்யாணத்துக்கு முன்னாடி இவ இல்லாமல் எப்படிச் சமாளிக்கிறது...? வீட்டுக்கு உறவுக் காரங்க எல்லாம் வந்து கேட்டா என்ன பண்றது...?" என்று கூற,

திவ்யா, "அய்யோ அம்மா... இவ்ளோ தூரம் வந்துட்டு இந்தச் சின்ன விஷயத்துக்காக நிறுத்தணுமா..? எப்படியும் அப்பா திருப்பதி போகப் போறதா இருக்கார்... அவர் கல்யாணத்துக்கு முந்தின நாள் எப்படியும் மண்டபத்துக்குப் போயிடுவார்... அண்ணா அண்ணி யெல்லாம் சொல்லவே வேண்டாம்... ஜானகி எப்படி இருப்பான்னே தெரியாது. உறவுக்காரங்கதானே... அதை விடு... ஜானகிக்குப் பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல்ன்னு ஏதாவது சொல்லிச் சமாளிச்சிடலாம்..." என்று கூற,

ஜானகி, "இல்லைலக்கா... இது சரிப்பட்டு வரும்னு தோணலை... எனக்குப் பயமா இருக்கு..." என்று கூற,

திவ்யா, "ஏய்... கல்யாணம் எனக்குத்தானே...! உனக்கு இல்லையே... நான் செய்யற அட்டகாசத்தில் உன்னைப் பத்தியே யாருக்கும் ஞாபகம் வராத அளவுக்குப் பார்த்துக்கிறேன்... இதில் நான் எக்ஸ்பெர்ட்..." என்று கூறிக் கண்ணடிக்க,

ரேணுகாவுக்கும் ஜானகிக்கும் மெலிதாக நம்பிக்கை வந்தது... அதனால் முகத்தில் புன்னகையும் வந்தது.

"அபி... நான்தான்டா... எல்லாத்துக்கும் காரணம் நான்தான்டா... என்னாலேதான் அவன் இப்படியா

கிட்டான்... பாருடா... வீட்டுக்குக் கூட வரலை... இரண்டு நாளாச்சு... உன் கல்யாணம் வேற நெருங்கிட்டு இருக்கு..." என்று புலம்பிக் கொண்டே இருந்த தன் தந்தையைச் சமாதானப்படுத்த முடியாமல் தவித்தான் அபிநந்தன்.

அவனுக்கே அவர் கூறியதும் அதிர்ச்சிதான். "என்னப்பா... என் கிட்டே கூடவா அவனுக்கு இந்த விஷயத்தை எல்லாம் சொல்லணும்னு தோணலை... படிப்பு, வேலைன்னு நானும் சுயநலமா இருந்துட்டேன் போலப்பா... சே... என்னை நினைச்சா எனக்கே கேவலமா இருக்குப்பா..." என்று கூற,

"தாய் இருந்து வளர்க்காத பிள்ளை, தறிகெட்டுத் தான் போகும்கிறது உண்மையாகிடுச்சுடா... அம்மா இருந்தால் அவனுக்கு இந்த நிலை வந்திருக்காதேடா... அவனோட மனநிலை என்னவென்று கூடத் தெரியாமல் நான் மோசமா...?" என்று அவர் இன்னும் உடைய,

அபி, "அப்பா... நீங்க வருத்தப்படாதீங்கப்பா... எல்லார் மேலயும் தான்பா தப்பிருக்கு... நீங்க இப்படிக் குமையாதீங்கோ... பி.பி. வேற இருக்கு..." என்று கரிசன மாகப் பேச,

குணாவோ, "அவனை ரெண்டு நாளா காணோ மேடா... எனக்கு வயித்திலே புளியைக் கரைக்கிறது. ஒண்ணும் பிரச்சனையாகிருக்காதேடா..." என்று நப்பாசையுடன் கேட்க,

அபி சிறிது நேர யோசனைக்குப் பின் "அப்பா... டென்ஷன் ஆக வேண்டாம். என் பிரெண்டோட அண்ணன் அங்கே டி.எஸ்.பி.யா இருக்கார்... நான் அவன் கிட்டே

சொல்லிக் கொஞ்சம் விசாரிக்கச் சொல்றேன்... இப்படியே புலம்பிண்டு சாப்பிடாமல் இருக்காதீங்கோ... நடக்கணும்னு இருக்கிறது நடந்துதான் தீரும்... சரியா? மாத்திரை எல்லாம் ஒழுங்கா எடுத்துக்கோங்கோ... நான் வைச் சிடுறேன்... நைட் கூப்பிடுறேன்..." என்று விட்டு வைத் தவன், தன் நண்பனிடம் விஷயத்தைக் கூறி நானியைத் தேடும் வேலையில் ஈடுபட்டான்.

"**த**கிடத... தா... தகிட... தா.." என்று எம்.பி.3 பிளேயர் கத்திக் கொண்டிருக்க,

வியர்வை பூப்பூத்து உடலை நனைக்க, கடந்த அரை மணி நேரமாக விடாமல் ஆடிக் கொண்டிருந்தாள் ஜானகி.

அவளைக் கண்ணெடுக்காமல் பார்த்திருந்த நட்டு,

"இப்படி விடாமல் ஆடுறதாலே என்னாகப் போகுது... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ..." என்று நூறாவது முறையாகக் கூறினான். ஆனாலும் விடாமல் அவள் ஆடிக் கொண்டிருக்க,

நட்டு, "யார் ஞாபகத்தில் இருந்து தப்பிக்க இப்படி பைத்தியம் மாதிரி ஆடிக்கிட்டு இருக்கே..?." என்று கேட்க,

ஒருகணம் நிறுத்தி அவனை ஒரு முறை முறைத் தவள், மறுபடியும் ஆட ஆரம்பிக்க, நட்டு, "ஜானு... இப்படி விடாமல் ஆடினா பிரச்சனை... வலிக்கும்... கொஞ்சம் சும்மா இரு..." என்று கத்த,

அவள் விடாமல் ஆட, அவளை இழுத்து நிறுத் தியவன், "சொன்னா கேட்க மாட்டே... அவர் போனது போனதுதான்... அதை ஏத்துக்கோ... இல்லை மறந்திரு...

அதுக்காக உன்னை நீயே வருத்திக்காதே...!" என்று கடிந்து கொள்ள,

ஜானகியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

"அவன் இன்னும் மாறலை நட்டு... இன்னும் அவன் மாறலை... நான் முதன் முதலில் பார்த்த நானிதான்... அதே அன்புன்னா என்னவென்றே தெரியாத நானி தான்... அதான் போயிட்டான்... ஒரு வார்த்தை கூடச் சொல்லிட்டுப் போகக் கூட அவனுக்குத் தோணாமல் போயிட்டான்... அவனுக்காக இறங்கிப் போய் அசிங்கமா... எனக்குச் செத்துடலாம் போலிருக்கு..." என்று கதறி அழுபவளை அடக்கியவன்,

"ஜானு... அவர் நிலைமை என்னன்னு..? அவர் மனசில் நீ கண்டிப்பா இருப்பே... ஆம்பளைங்க பொண் ணுங்க மாதிரி வெளிப்படையாகக் காட்ட மாட்டாங்க... புரிஞ்சுக்கோ..." என்று சமாதானப்படுத்த,

அவனை வெகுண்டு பார்த்த ஜானகி, "வாயை மூடு நட்டு... அவனைப் பொறுத்த வரை நான் டைம் பாஸ் தான்... எங்கே என்னால் அவனோட சல்லாப வாழ்க்கை பாதிக்கப் படுமோன்னுதான் போயிட்டான். அவன் டாக்டராகணும்னுதானே ஆசைப்பட்டேன்... அதைக் கொஞ்சம் கூட..." என்று அவள் ஆரம்பிக்க, அவளைத் தடுத்த நட்டு,

"வேண்டாம் ஜானு... அதை விடு... அவர் கண்டிப்பா கிடைப்பார். அவரையே நினைச்சு உன்னைப் பலவீனப் படுத்திக்காதே...!" என்று தன்மையாகக் கூற,

ஜானுவின் முகத்தில் இப்போது விரக்திச் சிரிப்புத் தோன்றியது.

"அவன் ஒண்ணும் தொலைஞ்சு போகலை... தன்னையே அவன் தொலைச்சிக்கிட்டான்.... அவன் கிடைக்க மாட்டான்..." என்று கூறி விட்டு, தன் நடனப் பயிற்சியை ஆரம்பித்தாள் சளைக்காமல்.

**நா**ட்கள் நகர்ந்தன... ஜானகி, டெல்லி செல்ல வேண்டிய நாளும் வந்தது.

இன்னும் மூன்று நாட்களில் திவ்யாவின் திருமணம்... அதை விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறதே என்ற சஞ்சலம் ஒரு புறம்... குமரகுருவிற்குத் தெரிந்தால் என்னாவது என்ற பயம் ஒரு புறம்... போதாக் குறைக்கு நானியைப் பற்றிய தவிப்பு ஒரு புறம்... என்ற கால் மனதாகவே இருந்தவளைத் திவ்யாவும் நட்டுவும் ரேணுகாவும் தேற்றுவதற்குள் ஒரு வழியாகினர்.

வீண் சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக ரேணுகாவும் திவ்யாவும் வீட்டிலேயே வழியனுப்பி வைக்க, ஜானகி முதன் முறையாகத் தனியாகத் தன் உலகம் நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தாள். நட்டுதான் உறுதுணையாகக் கூடவே வந்தான். ஏர்போர்ட்டில் காத்திருக்கும் வேளையில் அவள் மனம் முழுக்க நானியின் நினைவே.

அவனால்தானே அவளுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்தது... ஒரு தடவையாவது அவன் தன்னைப் பார்க்க வருவான் என்று நினைத்திருந்தவளுக்கு, ஏமாற்றம்தான் கிடைத்தது. அதனால் வந்த குமுறலை மறைத்தபடி அவள் வேடிக்கை பார்க்க,

அங்கே யாரோ ஒருவரின் தலை அவளைக் கண்டவுடன் சுவரின் பக்கமாக மறைய, திடீரென்று ஜானகிக்குள் ஒரு மின்னல்.

"நானி... நட்டு... நானி... அதோ..." என்றபடி, அது ஒரு விமான நிலையம் என்று பாராமல் ஓடத் துவங்க,

நட்டு, "ஜானு... நில்லு... எங்கே ஓடுறே...?" என்று கத்திக் கொண்ட அவள் பின்னால் ஓட,

ஜானகி ஓடியே சென்று அந்தச் சுவரின் பக்கம் நின்றவனைத் திருப்ப, அதுவோ நானி இல்லை... வேறு ஒரு ஆள்.

தர்மசங்கடத்துடன் கண்ணீரும் சேர்ந்து கொள்ள, "சாரி... நான் வேற ஒருத்தர்ன்னு நினைச்சு..." என்று மெல்லிய குரலில் கேட்க,

அவனும், "இட்ஸ் ஓ.கே. மிஸ்..." என்றபடி நாகரிகமாக நகர,

அவளருகில் வந்த நட்டு, "உனக்கென்ன பைத்தியமா...? அறிவில்லை... அவர் இங்கே வந்தா இப்படி மறைஞ்சுட்டா இருப்பார்... வர வர நீ சரியே இல்லை ஜானு... இப்படியே போனா, நீ கீழ்ப்பாக்கத்தில் தான் போய் அட்மிட் ஆகணும்... வா, ப்ளைட் கால் வந்திருச்சு," என்றபடி அவளை இழுத்துக் கொண்டு செல்ல,

ஜானகி, கண்ணீருடன் அங்கும் இங்கும் பார்த்தபடி ஏமாற்றத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவர்கள் செல்வதைப் பார்த்த ஒரு உருவம், தன் மறைவிடத்தை விட்டு வெளியே வந்து, விரக்திச் சிரிப்புடன் நின்றது.

டெல்லி மாநகரம்...

இரண்டு நாட்கள் போட்டி முடிந்திருந்தது. இது மூன்றாவது நாள்...

இந்த இரண்டு நாட்களும் ஜானகி ஆகா ஓகோவென்று ஒன்றும் பாராட்டுக்களைப் பெறவில்லை... சுமார் ரகம்தான்.

என்னதான் அவள் பயிற்சி எடுத்திருந்தாலும் அவளது பயம் அவளை முன்னேற விடாமல் தடுக்க, அவளின் கட்டுப்பெட்டித்தனம் அவளின் எல்லைகளை விட்டு வெளியேற விடாமல் தடுத்தது.

"இப்படி ஆடினா அசிங்கமா இருக்குமோ... இதில் கொஞ்சம் வெஸ்டர்ன் வருதோ..." என்ற அவளின் கட்டுப்பாடுகள்தான் அவளைக் கீழே நிறுத்தின.

இன்று மூன்றாவது நாளின் ஆரம்பத்தில்...

பல நடனக் கலைஞர்கள் கூடியிருந்த சபையில் நட்டுவைப் பார்த்த மற்றவர்கள்,

"இவனெல்லாம் மாஸ்டர்னு வந்துட்டான் பார்... ஜீன்ஸ் பேண்ட்டும் கிழிஞ்ச சட்டையும்... நாமெல்லாம் பழம் தின்னு கொட்டை போட்டவா... நம்ம முன்னாடி தேறுவானா..?" என்று அவர்கள் கேலி செய்ய,

நட்டு சிறிதும் கோபப்படாமல், ஆத்திரப்படாமல், சிரித்தபடி நின்றான்.

ஜானகி ஏதோ சொல்லப் போக, அவளை நிறுத்தியவன், "வேண்டாம் ஜானு... ஒண்ணும் பேசாதே..." என்று சைகை செய்ய,

ஜானகி அவமானத்தில், "வேண்டாம் நட்டு... நான் ஆடலை. நாம் போயிடலாம்... எப்படியும் நான் ஜெயிக்க மாட்டேன்... எதுக்கு உனக்கு இந்த அவமானம்... வா கிளம்பலாம்..." என்று கூற,

நட்டு சிரித்தபடி, "அய்யோ ஜானு... வேர்ல்ட் கப் ஃபைனல் பார்த்திருக்கியா? தோனி மட்டும் நாம ஆட வேண்டாம்... எப்படியும் தோத்துடுவோம்னு நினைச்சா நமக்குக் கப் கிடைச்சிருக்குமா... சொல்லு...! நீ ஜெயிக்கணும்னு நாம கலந்துக்கலை... அப்புறம் என்ன?" என்று கூற,

ஜானகி, "இல்லை நட்டு... என்னால் முழு கவனமா இருக்க முடியலை... ஏன்னே தெரியலை... நான் ஒழுங் காத்தான் பயிற்சி செய்தேன்..." என்று விவரிக்க,

அவள் தலையில் கொட்டியவன், "ஏய் மண்டு... இப்போ நான் உன்னை ஏதாவது தப்பு சொன்னேனோ...? உன்கிட்ட திறமை இருக்கு... ஆனால் அதுக்கு மேல பயமும் கட்டுப்பெட்டித்தனமும் இருக்கு...

"அதை விட்டு வெளியே வா. இங்க இருக்கிறவங் களை விட உனக்குத் திறமை இருக்கு... எக்ஸ்பிரெ ஷன்ஸில் உன்னை அடிச்சிக்க ஆளே இல்லை... ஏதோ இருக்கப் போய் தானே இத்தனை ரவுண்ட்ஸில் தாக்குப் பிடிச்சிருக்கே..." என்று கூற,

ஜானகியின் முகத்தில் அப்போதும் தெளிவில்லை.

நட்டு, "இதைப் பாரு ஜானு... முதலில் நீ உன்னை லூஸ் பண்ணிக்கோ... இதுதான் என் வரையறைன்னு

நிறுத்திடக் கூடாது... டான்ஸ்க்கு எல்லையே இல்லைடா. ஒரு டான்சருக்கு முழுசாத் தேவை என்ன தெரியுமா?

"ஸ்பான்டேனிடி-தான். எந்தச் சூழ்நிலையிலும் பொருந்திப் போறது... அதுதான் உனக்குத் தேவை.... ஒழுங்காப் போய் கலந்துக்கோ... நான் சொன்னதை ஞாபகம் வைச்சிக்கோ. போதும்..." என்று கூற,

ஜானகியின் முகத்தில் இப்போது உறுதி வந்தது. சுற்று ஆரம்பிக்கப் போகும் நேரத்தில்தான் தலைமை யாளர்கள் அந்த அறிவிப்பை அளித்தனர்.

"இந்த இறுதிச் சுற்றில் ஒரு மாற்றம் செய்யவிருக் கிறோம்... கலைஞர்கள் அனைவரும் தாங்கள் பயின்ற பாடல்களுக்கு ஆடாமல் நாங்கள் தேர்வு செய்யும் பாட்டிற்குத் தான் ஆடவேண்டும்... வழக்கத்திற்கு மாறாக, இறுதிச் சுற்றுக்கு நிறையப் பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்ப தால் இந்த ஏற்பாடு... ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிடங்கள் தரப்படும்... அதற்குள் அந்தப் பாட்டை பயின்று அதற் கேற்ப ஆட வேண்டும்..." என்று அறிவிப்பு வர,

அனைவரும் கூச்சலிட்டு மறித்தனர். பலர் அதிர்ச்சியில் கிளம்பி விட்டனர்.

ஏகப்பட்ட குழப்பங்களுக்கிடையே தலைமையாளர் அசோக் என்பவர், "நடனம் என்பது சொல்லிக் கொடுத்து வருவது அல்ல... அது பிறவியிலேயே வருவது... அதைத் தேர்ந்தெடுக்கத்தான் இந்தப் போட்டி... இதில் எங்கள் தீர்ப்புதான் இறுதி..." என்று ஒரே போடாகப் போட,

அதற்கு மேல் தாமதம் இல்லாமல் போட்டி துவங்கியது. ஆனால் நட்டு, தன் புன்னகை முகம்

மாறாமல் ஜானகியிடம் கூறியது... "மறந்துடாதே, ஜானு... 'ஸ்பான்டேனிடி' என்ற ஒரே வார்த்தைதான்.

அனைவரும் சொதப்பிக் கொண்டிருந்தனர். சட்டென்று மாறியதில் அவர்களால் தங்கள் முழுக் கவனத்தை அளிக்க இயலவில்லை.

ஜானுவின் முறையும் வந்தது.

அந்தப் பாட்டைக் கேட்டதும் அவளுள் ஏதோ குறுகுறுப்பு... திடீரென்று நானியின் நினைப்பு... நட்டுவின் அறிவுரை அனைத்தும் அவளை மூழ்கடிக்க... ஜானகி நடன மயூரியாக மாறினாள்.

அவளுள் இருந்த திறமையோ, சீத்தம்மாவின் ஜீன்களோ... ஏதோ ஒன்று அவளுள் இருந்த நடனத்தை எடுத்து வந்தது.

பாட்டு ஆரம்பித்தது.

சினிமா பாடல் என்பதால் சிறிது நட்டுவிடம் கற்றுக் கொண்ட ஃப்ரீ ஸ்டைலையும் சேர்க்க... நடனம் அழகிய வானவில்லாய் ஆரம்பித்தது.

கண்ணுக்குள் பொத்தி வைப்பேன்
என் செல்லக் கண்ணனே வா!
த்தித்தி தத்தை ஜதிக்குள்
என்னோடு ஆட வா வா!

அடிக்கடி உன்னைப் பிடிக்க நான் மன்றாடிட
இடப் புறம் விரல் மடக்கி நீ டு காட்டிட
என் கண்ணனே வாடா வா!
விஷமக் கண்ணனே வாடா வா!

இப்படியாக ஆரம்பிக்கும் பாடலை அவள் ஆடத் துவங்கினாள். எதைப் பற்றியும் கவலை இல்லை.

தன் நானியைக் கண்ணனாக நிறுத்தினாள்... முகத்தில் உணர்ச்சிகள் அலையெனப் பொங்க, அவள் சிலையென ஆட... அங்கிருந்த அனைவருமே அசந்து போயினர்.

அதுவும் பரதத்தையும் சிறிது நவநாகரிகமாக அவள் ஆடியது ,அங்கிருந்த பார்வையாளர்களான இளைஞர் களையும் ஈர்க்க... உடனே அவள் நடனத்தை வீடியோ எடுத்து ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப், இன்ஸ்டாகிராம், யூடியூப் என்று பகிர்ந்து கொள்ள...

அது ஒரு புதிய பரிமாணத்தையே தந்தது. நட்டுவின் கண்களே ஒரு நிமிடம் கலங்கிப் போனது.

தான் ஜெயித்து விட்டோம் என்ற மகிழ்ச்சியும், தன்னை ஜெயிக்க வைத்து விட்டாள் என்ற நன்றியும் பொங்க... கிட்டத்தட்ட மூர்ச்சையாகினான் அவன்.

ஆனால் இவை ஒன்றுமே ஜானகி அறியவில்லை... அவள் மனதில் நின்றதெல்லாம் பாட்டும் நானியும் தான்... முழு மனதுடன் அவள் ஆடி முடிக்க அந்தப் பத்து நிமிடங்கள் அவள் அளித்த விருந்து அனைவரையும் மயக்கியிருக்க... ஜானகி புரியாமல் பார்க்க ...சில வினாடிகள் மௌனம் கழிந்து, அந்த அவையே கரகோஷத்தில் கொப்பளித்தது.

ஜானகி புரியாமல் நட்டுவைப் பார்க்க, அவன் கண்ணீருடன் கட்டை விரலை உயர்த்திக் காட்ட...

தலைமையாளர்கள் நின்றுகொண்டு அவளுக்குக் கைதட்டினர்.

ஆம், ஜானகி ஜெயித்து விட்டாள்.

"And the winner is none other than Ms. Janaki... a new face yet hope face to our dance community..." என்று நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கூற, கிட்டத்தட்ட மயக்கமுறும் நிலைக்கே சென்றாள் ஜானகி.

நட்டுவின் காதில் ரகசியமாக, "நட்டு, நிஜமாவே என்னைத்தான் சொல்றாங்களா...?" என்று கேட்க,

நட்டு சிரிப்புடன், அவளைப் பிடித்துத் தள்ளிவிட... கால்கள் பின்னிக் கொள்ள, ஒருவழியாக மேடைக்குச் செல்ல, அவளைக் கௌரவப்படுத்திய அசோக்,

"இங்கே அமர்ந்திருக்கும் அனைவருக்குமே ஒரு இன்ப அதிர்ச்சிதான்... முதல் இரண்டு போட்டிகளில் தடுமாறிய ஜானகி அவர்களின் இறுதி நடனம்... இல்லை இல்லை, இதுதான் அவரின் முதல் நடனம் மெய்சிலிர்க்க வைத்தது. அந்தக் கண்ணனே எழுந்து வந்து விடுவான், இந்த ராதைக்காக..." என்று கூற, அவள் கன்னம் நிஜமாகவே வெட்கத்தில் சிவந்தது.

அசோக் மேலும், "இத்தனை வருடங்களில் இந்தத் தடவைதான் நான் ஒரு தலைமையாளராக இருக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்... அதனால்தான் இந்த அற்புத நடனத்தைக் காண முடிந்தது..." என்று அவளை உச்சி குளிர வைத்துப் பின் பரிசை அளிக்க...

ஜானகி, "சார்... இந்தப் பரிசை எனக்கில்லை... நட்டு... சாரி சாரி, என் மாஸ்டர் நட்ராஜ் கிட்டதான் கொடுக்கணும்னு ஆசைப்படுகிறேன்..." என்று கூற, அங்கே கரகோஷம் இன்னும் அதிர்ந்தது.

நட்டு, "வேண்டாம் ஜானு..." என்று மறுக்க மறுக்க... அவனை மேடையில் இழுத்து வந்தவள், "இவர்தான் என் மாஸ்டர். என் குரு... என் உயிர்த்தோழன்... எல்லாமே. அந்த அர்ஜுனனுக்குச் சாரதியா கிருஷ்ணர் இருந்த மாதிரி எனக்கு இவன்தான்... இவன் இல்லன்னா எனக்கு இது எல்லாமே கனவுதான்..." என்று கூறிவிட்டுத் தழுதழுக்க,

அசோக், "வெல்டன் மை பாய்... உன்னை மாதிரி எனெர்ஜிடிக்கான இளைஞர்கள்தான் எனக்குத் தேவை..." என்றவர் பரிசை அளித்து விட்டு, அவனிடம், "நான் ஒரு டான்ஸ் ஸ்கூல் ஆரம்பிக்கணும்னு இருக்கேன்... இன்டர்நேஷனல் லெவலில் சென்னையில் நீங்களும் ஜானகியும் அதில் மாஸ்டர்ஸா சேர்ந்துக்க முடியுமா..?" என்று கேட்க, இருவருக்கும் மயக்கம் போட்டு விழாத குறைதான்.

அசோக் சிரித்தபடி, "ஓ.கே... நீங்க உடனே முடிவெடுக்க வேண்டாம்... எவ்ளோ டைம் வேணுமோ எடுத்துக்கோங்க... இந்தாங்க என் கார்ட்..." என்று அளித்தார்.

ஜானகிக்குப் பரிசு மட்டுமன்றி, 'நாட்டியக் கல்யாணி' என்ற விருதும் அளிக்கப்பட, இருவரும் திக்குமுக்காடிப் போயினர். இப்படியாக, ஜானகி - நட்டு என்ற இரு தோத்தாங் குளிகளின் வாழ்க்கை வெற்றியை நோக்கி ஏறுமுகமாகப் பயணித்தது.

பரிசளிப்பு விழா முடிந்ததும்... சிறு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

விமானம் மாலைதான் என்பதால் சிறிது சாவகாச மாகவே இருந்தனர் இருவரும்.

நட்டு, "ஜானு... நீ இதை எல்லாம் செய்யணுமா...? நான் உனக்கு என்ன செஞ்சிட்டேன்...." என்று முணு முணுக்க...

ஜானு, "வாயை மூடுடா... சும்மா அதையே பேசாதே..." என்று அதட்ட,

"நட்டு ராசா..." என்று கல்பனாவின் குரல் கேட்டது.

நட்டு பதறிப் போய்த் திரும்ப...

அங்கே கல்பனா, மாணிக்கம், ஆகாஷ் மூவரும் கண்ணீருடன் நிற்க...

நட்டு அதிர்ச்சியுடன் ஜானகியைப் பார்க்க,

"என்ன பார்க்கிற... காலையிலேயே போன் பண்ணி வரச் சொல்லிட்டேன்... போதும், உன் வனவாசம்... இனிமேலாவது அப்பா பி.பி. ஏத்தாமல் இரு..." என்று சிரிப்புடன் கூறி விட்டு நகர,

நட்டு ஓடிச் சென்று கல்பனாவைக் கட்டியணைத் தான்.

"அம்மா... நான் ஜெயிச்சிட்டேம்மா... எனக்குப் பெரிய வாய்ப்புக் கிடைச்சிருக்கு... சென்னையில் வேலை... டான்ஸ் ஸ்கூலில்..." என்று கூற,

அவனை அணைத்துக் கொண்டார் கல்பனா.

ஆகாஷ், "என்னைக் கூட மறந்துட்டியேடா... அம்மாவை மட்டும் பார்த்திருக்கே... நான் என்னடா தப்பு செய்தேன்..." என்று பாவமாகக் கேட்க,

நட்டு கண்ணீருடன், "இல்லண்ணா... எவ்ளோ நாள்தான் உன் சம்பாத்தியத்தில் வாழுறது... எனக்கே அசிங்கமா இருந்தது... அதான்..," என்று தயங்க,

அவனைச் செல்லமாகக் கொட்டியவன், "நீ என் தம்பிடா... உனக்குச் செய்யறது தப்பா..." என்று அதட்ட, தன் அண்ணனையும் அணைத்தான் அவன்.

இறுதியாக மாணிக்கத்திடம் சென்ற நட்டு, "அப்பா... உங்களுக்குப் பிடிக்காததைச் செஞ்சதுக்கு மன்னிச்சுடுங் கப்பா... இப்போ நான் சாதிச்சிட்டேன்ப்பா... நான் ஜெயிக் கிறதை விட என்னால் ஒருத்தர் ஜெயிச்சா, அதில் வர்ற சந்தோஷமே தனிதான்ப்பா. இப்போ சொல்லுங்கப்பா.... நீங்க எந்த வேலைக்குச் சொன்னாலும் போறேன்..." என்று அவர் கையைப் பிடிக்க,

மாணிக்கம், "ஏன்டா... நான்தான் புத்திகெட்டுப் போய்ச் சொன்னால், அதுக்கு அப்படியே போயிடு வியாடா... உங்களுக்கெல்லாம் அப்பான்னா வில்லனாவே பார்த்துப் பழகிடுச்சு இல்ல... நான் தினமும் இன்னைக்கு வந்துடுவே, நாளைக்கு வந்துடுவேனு பட்ட பாடு... எனக்குத்தான் தெரியும். நீ ஜெயிச்சா என்ன... இல்லாட்டி என்ன... என் பிள்ளைடா! உனக்குப் பிடிச்சதைச் செய். ஆனா வீட்டில் இருந்தே செய்..." என்று கூற,

இத்தனை நாளாய் அவன் பார்த்த தந்தையில் இருந்து மாறியிருந்த இந்தத் தந்தையை அப்படியே கட்டிக் கொண்டான் அவன்.

இப்படியாக அந்த அழகிய குடும்பம் பல இன்னல் களுக்குப் பின் ஓவியமாக ஒன்று சேர்ந்தது.

"அம்மாடி... அப்படியே சத்யஜித் ரே படம் பார்த்த மாதிரி இருந்ததுடா..." என்று ஜானகி நட்டுவின் காலை வார,

நட்டு அவளை முறைத்து, "என்ன கிண்டலா... கொன்னுடுவேன்..." என்று மிரட்ட,

ஜானகி, "அடடா... கோபத்தைப் பாரு... மகனே சுகன்யா மேட்டர் இருக்கு... அதுக்கு நீ இன்னொரு தடவை வீட்டை விட்டு வெளியே அனுப்பப் படுவாய்..." என்று கூற,

"எந்த சுகன்யா... யாருன்னு நான் தெரிஞ்சுக்க லாமா...? என்றபடி வந்து சேர்ந்தார் அசோக்.

நட்டு, "சார்... அதெல்லாம் ஒண்ணுமில்லை..." என்று மறைக்க,

ஜானகி விளையாட்டாக, "அவனோட தேவதை சார்... அடிக்கிற தேவதை..." என்று ஆரம்பிக்க,

நட்டு, "ஏய் வாயை மூடிட்டு இருக்க மாட்டே..." என்று அதட்டினான்.

ஜானகி, "இல்லை இல்லை... நான் சொல்வேன். சார் தப்பா நினைச்சுக்க மாட்டார். இல்ல சார்... நான் அவன் கதையைச் சொல்றேன்..." என்றபடி அவன் காதல் கதையை அவிழ்த்துவிட,

அசோக்கின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்தன.

நட்டுவும் ஜானகியும் ஒருவரை ஒருவர் பார்த்து, "சார்... என்னாச்சு சார்..?" என்று பதற,

அசோக், "ஓஹ்... அந்த 4612 நீங்கதானா..?" என்று முணுமுணுக்க,

நட்டு, "என் வண்டி நம்பர் உங்களுக்கு எப்படித் தெரியும்...?" என்று புரியாமல் கேட்டான்.

அசோக், "உங்க வண்டி நம்பர் என்ன...? உங்க சுகன்யாவையே தெரியும்..." என்றபடி, கூட்டத்தில் திரும்பி நின்ற பெண்ணை, "சுகி... சுகி... இங்கே வா..." என்று அழைக்க,

அவள் பெயரை அழைத்ததும் திரும்பிப் பார்க்க... நட்டுவிற்கு அதிர்ச்சியில் வியர்க்க ஆரம்பித்தது.

"சுகன்யா..." என்று அவன் முணுமுணுக்க,

அவளோ, "4612" என்று முணுமுணுக்க...

"ஹலோ, அவளோட அப்பாதான் நான்..." என்று அசோக் முணுமுணுக்க,

"அட கடவுளே..." என்று ஜானகி முணுமுணுத்தாள்.

"**ஹா**ஹா...ஹா..." என்று அறையே சிரிப்பலையில் மூழ்கியது.

"இதில் என்ன காமெடின்னா... என் பொண்ணும் உங்க பையனை அடிச்சிட்டு வந்துட்டு... இரண்டு மூணு வருஷமா என் உயிரை எடுக்கிறா... அம்மா இல்லாத பொண்ணு... எனக்கும் அவளுக்கும் ஒளிவு மறைவே கிடையாது. அவளுக்கு வயது வந்ததும் உங்க பையனை எப்படியாவது கண்டுபிடிச்சு வந்து மாப்பிள்ளை கேட்கணும்னு இருந்தேன்," என்று கூற... அனைவருக்கும் திருப்தி.

மாணிக்கத்தின் முகம் நிறைவுற்றிருந்தாலும், "அவனுக்கு 23 தான் ஆச்சு... அதான் யோசிக்கிறேன்..." என்று தயங்க,

அசோக், "இல்லை இல்லை. இப்போவே நான் சொல்லலை... அவளும் பி.இ. படிக்கிறா... இன்னும் படிப்பு முடியலை... இரண்டு வருஷம் கழிச்சே வைச்சிக் கலாம்..." என்று கூற, நட்டு நெஞ்சைப் பிடித்துக் கொண் டான்.

"அடப் பாவிகளா...! இப்படி என் தலையில் மண்ணைப் போட்டுட்டீங்களே...?" என்று புலம்ப, எதிரில் நின்ற ஜானகி சிரிப்பை அடக்கப் படாத பாடு பட,

சுகன்யா நட்டுவின் காதில், "என்ன அதிர்ச்சி... இப்போ என்ன அவசரம்...? எனக்கு உன் பேர் கூடத் தெரியாது... கொஞ்ச நாள் லவ் பண்ணிட்டுத்தான் கல்யாணம் பண்ணிப்போமே..." என்று கூற,

நட்டு அவளை எதிர்த்துப் பேச எத்தனித்துப் பின் கன்னத்தைத் தடவி... "வேண்டாம்னு சொல்லி அடி வாங்க முடியாது. தங்கள் சித்தம் என் பாக்கியம்!" என்று கூற,

சுகன்யா சிரித்து, "ஹாய் ஐ அம் சுகன்யா..." என்று கை நீட்ட, நட்டு பதிலுக்கு, "ஹாய் ஐ அம் நடராஜ் அலைஸ் நட்டு அலைஸ் 4612" என்று கூறிவிட்டு கண்ணடிக்க, சுகன்யா அவனைக் காதலாய்ப் பார்த்துச் சிரித்தாள்.

ஒருவழியாக, அனைத்துச் சந்திப்புகளும் முடிந்து சென்னை வந்து சேர்ந்தனர், ஜானுவும் நட்டுவும்.

நட்டுவிடம், “நான் போய்க்கிறேன் நட்டு... ஒண்ணும் பிரச்சனை இல்லை. நீ போ...” என்று கூறி விட்டு, டாக்ஸி பிடித்து வீட்டிற்கு வந்து, தன் வழக்கம்போல் ஜன்னல் வழியாக ஏறி வர... இரவானதால் யாரும் பார்க்க வில்லை.

வெற்றிக் கனியைப் பறித்து வந்திருந்த ஜானகியை உச்சிமுகர்ந்த ரேணுகா அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

“என் கண்ணே... உன்னைக் குத்தம் சொன்னவா கண்ணெல்லாம் பொசுங்கிப் போகட்டும்...” என்று அவரும், “பெரிய நாட்டியப் பேரொளி ஆகிட்டீங்க... எங்களை மறந்துடாதீங்க...” என்று திவ்யாவும் பாராட்ட...

ஜானகி, “நான் நாட்டியப் பேரொளி இல்லை... நாட்டியக் கல்யாணியாம்... இங்கே பார்...” என்று விருதை நீட்ட,

அதில் பதிக்கப்பட்டிருந்த பெண்மணியின் முகத்தைப் பார்த்து ரேணுகா அதிர்ந்தார்.

“ஜானு... இது... இது...” என்று திணற,

ஜானகி, “என்னம்மா... என்ன ஆச்சு...?” என்று கேட்க,

ரேணுகா, “ஜானு... இது இது... உன் பாட்டிம்மா... சீத்தம்மா... அவங்க உண்மையான பேர் கல்யாணிதான்... கூப்பிடுறது சீத்தம்மா. அவங்களோட விருதா உனக்குக் கிடைச்சிருக்கு...!” என்று கூற,

திவ்யா, "என்னம்மா சொல்றே... பாட்டி பரதம் கத்துக்கிட்டாங்க. ஆனா டான்சரா...?" என்று கேட்க,

ரேணுகா, "ஆமா... நீங்க உங்க பாட்டியைப் பார்த்ததில்லையே... அவாளோட ஃபோட்டோ கூட இல்லை... ஆனால் எனக்குத் தெரியும்... இது அவா தான்..." என்று கூற,

திவ்யா நெட்டில் கல்யாணி என்னும் டான்சரைப் பற்றித் தேட, சந்தேகமே இல்லாமல் சீத்தம்மா தான் அது என்று தெரிந்தது. தன் 30வது வயதில் பரதம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தவர், பல மேடை நிகழ்ச்சிகளிலும் அரங்கங்களையும் பார்த்து, அதற்கென்றே தன் வாழ்வை அர்ப்பணித்துத் தன் 70வது வயதில் இயற்கை எய்தினார் என்று இருந்தது. இன்றும் கூட பலர் அவர்களின் உயரத்தை எட்ட முடியவில்லை என்றும் இருந்தது.

அங்கிருந்த மூவருமே பேச்சற்றுப் போயினர்.

'பொயட்டிக் ஜஸ்டிஸ்' என்றால் இதுதானோ...? யாரைக் குமரகுரு விஷமென வெறுத்தாரோ, அவரையே மகளாகப் பிறக்க வைத்து, இப்போது அவளுக்கு அவரே விருதாகி வந்திருப்பது... நிஜம் சில நேரம் கற்பனையின் வீரியத்தையே மிஞ்சி விடுகிறது.

அனைத்து உண்மைகளையும் தனக்குள் புதைத்தபடி, ஜானகியின் கைகளில் இருந்த விருது அழகாகப் புன்னகைத்தது.

அதனுள் இருந்த அக்காலப் பெண்ணியவாதி சீத்தம்மாவும் சிரித்தார்.

## 26

அன்றைய நாள் உணர்ச்சிகளின் குவியலாக முடிவடைந்து இதமான தூக்கம் அனைவரையும் தழுவியது.

ஜானகி தன் பக்கத்தில் அமர்ந்திருந்த ரேணுவிடம், "அம்மா... ரொம்ப நாள் கழிச்சு நான் நிம்மதியாத் தூங்கப் போறேன்ம்மா... அதுக்குக் காரணம் நீதான்ம்மா... எல்லாப் பொண்ணுங்களுக்கும் அப்பா தான் துணையா இருப்பார். ஆனா, எனக்கு அந்தப் பாக்கியம் இல்லை... அப்பாவுக்கு அப்பாவா, அம்மாவுக்கு அம்மாவா நீதானேம்மா எனக்கு எல்லாம் கடைசிவரை... நீ... நீ மட்டும் எனக்குப் போதும்மா. வேற யாரும் வேண்டாம்..." என்று குரல் தழுதழுக்கக் கூற, அவளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்ட ரேணுகா அதற்கு மேல் எதுவுமே பேசவில்லை.

அங்கே வார்த்தைகளுக்கு வேலை வைக்காமல் உணர்வுகள் குதியாட்டம் போட, நானியின் தலைமறைவு ஏற்படுத்திய வலியை... வெற்றியின் இளஞ்சூடு ஒத்தடமாய் வருடிக் கொடுக்க... எல்லாவற்றையும் மறந்து மூன்று மணி நேரம் நன்றாகத் தூங்கினாள் ஜானகி.

திருமண வீடு அல்லவா... உறக்கத்தைத் தியாகம் செய்துதானே ஆகவேண்டும்.

பன்னிரண்டு மணிக்குக் கண்ணயர்ந்த தாயையும் மகளையும் டாண் என்று மூன்று மணிக்குக் குமரகுருவின் வருகை கலைத்தது... அனைத்துத் திருமண வேலை களையும் ரவியும் சேகரும் முன்னின்று முடித்திருக்க... நிம்மதியாகத் திருப்பதி சென்று, தன் நேர்த்திக்கடனை முடித்து விட்டு வந்திருந்தார் குமரகுரு.

அவர் வந்ததுமே கட்டளைகள் காற்றாய்ப் பறந்து, அனைவரையும் எழுப்ப... அதிகாரம் சுப்ரபாதமாய் இசைக்கக் குடும்பத்தினர் பதறியடித்து எழுந்தனர்.

“என்ன இது, கல்யாண வீடு மாதிரியா இருக்கு... ரேணு டி... ரேணு... முதல்ல காபியைப் போட்டு வந்திருக்கிறவாளுக்குக் கொடு... எல்லாரும் முழிக்கட்டும்... மசமசன்னுட்டு...” என்று ஆரம்பிக்க... அதன் பிறகு சூரியவிலாஸ் அமைதி காக்குமா என்ன...?

ஒருவழியாகத் திவ்யாவின் திருமண நாள் தடபுடலாக ஆரம்பித்தது.

இப்படியாக ஆரம்பித்த நாள்... அன்று சந்திக்கப் போகும் திருப்பங்களை அறிந்த பகலவன் மெதுவாக அதைக் காணப் புலர்ந்தான்.

“**நா**ன் சொல்றதைக் கேளு, ஜானு... நீ பண்றது கொஞ்சம் கூட நல்லா இல்லை. சொல்லிட்டேன்... இன்னும் எதுக்கு வீல்சேர்... உன்னை நீயே தாழ்த்திண்டா என்ன அர்த்தம்...? சொல்றதைக் கேளு. ஒழுங்கா நடந்து வா. உன் அப்பாவுக்கு அப்போதான் உன் அருமை புரியும்...” என்று ரேணுகா ஐம்பதாவது தடவையாகக் கூற, அதை மெல்லிய புன்னகையுடன் மறுத்தாள் ஜானகி.

நடந்தது இதுதான்... எந்த உற்றார் உறவினர் முன் ஜானகியைக் குமரகுரு அவமானப்படுத்தினாரோ அதே உறவினர் முன்னால் அவள் நடக்க வேண்டும் என்பது ரேணுகாவின் விருப்பம்...

ஆனால் ஜானகி கூறியதோ, “அம்மா... கொஞ்சம் யோசிம்மா... இப்போ திடீர்னு போய் நின்னா எல்லாரும்

அதிர்ச்சியாகிடுவா... அப்புறம் தேவையில்லாமல் கல்யாண வீட்டில் குழப்பம்தான் மிஞ்சும். பொறுமையா இரும்மா... நடக்குறது நடந்துதான் தீரும்... அதை நாமே வலியப் போய் நடத்த வேண்டாமே... கொஞ்சம் புரிஞ்சுக்கோ!" என்று மெதுவாகச் சமாதானப்படுத்த, ரேணுகாவும் அதில் உள்ள நியாயத்தை உணர்ந்து அமைதியானார்.

குளித்து விட்டு வந்த ஜானகியைத் திருமணமாகப் போகும் திவ்யாவை விட, கூடுதல் சிரத்தை எடுத்து அலங்கரித்தார் ரேணுகா... அழகான லாவண்டர் நிறப் பட்டுப் புடவையில் தன் நகைகளில் பாதியை அவளுக்கு இட்டு, கூடுதலாகக் கூந்தலில் மல்லிகைச் சரத்தையும் வைத்து நிமிர... அவராலேயே அவர் கண்களை நம்ப முடியவில்லை.

அடர் நிறத்தில் எலும்பும் தோலுமாக இருந்த தன் பெண்ணா இவள்?

தேகத்தில் சற்றே சதை போட்டு மினுமினுப்புடன்... கண்களில் ஒருவித தேஜஸுடன் கிட்டத்தட்ட அந்த வித்யாதேவியைப் போல் காட்சியளித்த தன் பெண்ணை வழித்தெடுத்துத் திருஷ்டி கழித்தவர்,

"ஜானு... அப்படியே அம்மன் சிலை மாதிரி இருக்கேடி... என் கண்ணே பட்டுடுத்து. இன்னைக்கு உன் அக்காவை விட உன்னைப் பத்திதான் எல்லாரும் பேசப் போறா... பாரேன்..." என்று கூற,

ஜானகி சங்கடமாகப் புன்னகைத்து, "அம்மா... போதுமே... காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு..." என்று கிண்டலடிக்க,

முன்பு ஒரு நாள் தானும் இதே போல் கூறியதை நினைவுகூர்ந்தவர்,

"நான்தான்டி காக்கை... ஆனால் நீ இந்தக் காக்கையோட குஞ்சு இல்லை... சீத்தம்மாங்கிற அன்னப் பறவையோட குஞ்சு..." என்று நெகிழ்ச்சியுடன் கூறிக் கொண்டிருக்கும் போதே,

"அம்மா... இங்கே கொஞ்சம் வாயேன்... இந்த நெக்லஸ் கழண்டு விழறது. ஊக்கு குத்தி விடு..." என்று திவ்யாவின் கத்தல் கேட்க,

சிரித்தபடி ரேணுகாவைப் பார்த்த ஜானகி, "போம்மா... அக்கா கூப்பிடுறா பாரு. திட்டப் போறா...?" என்று கூற,

அவளைப் பார்த்துச் சிரித்த ரேணுகா, "மூணு நாளா உன் அக்கா இந்த அட்டகாசம்தான் செய்றா... அது சரியில்லை, இது சரியில்லைன்னு ஒரே களேபரம்தான். அவ சொன்னாப்பல... அவ இதில் கெட்டிக்காரிதான். எல்லார் கவனமும் அவ பக்கமே இருந்ததே ஒழிய உன்னைப் பத்தி எந்தச் சந்தேகமும் வரலை..." என்று கூறிச் சிரிக்க...

ஜானகியும் சிரித்து, "அம்மா, நானும் வரேன்... எனக்கும் அக்காவைக் கல்யாண அலங்காரத்தில் பார்க்கணும்னு ஆசையா இருக்கு..." என்று கூற,

ரேணுகா அவளைப் பார்த்து, "இதென்னடி அனுமதி கேட்டுண்டு... வாயேன். உன்னை யார் என்ன பண்ணிடுவா...?" என்றபடி அவள் விருப்பப்படியே அவளைச் சக்கர நாற்காலியில் தள்ளிக் கொண்டு சென்றார்.

அங்கே சென்றதும் அவளைப் பார்த்த திவ்யா, இன்ப அதிர்ச்சியில்... "ஜானு... வந்துட்டியா? வா... வா... உன்னைத் தான் கூப்பிட்டு விடலாம்னு நினைச்சுண்டே இருந்தேன்..." என்றவள்,

அவள் சக்கர நாற்காலியில் இருப்பதைப் பார்த்து வினாவுடன் ரேணுகாவைப் பார்க்க...

அவர், "என்னைப் பார்க்காதே. உன் தங்கைதான்..." என்பது போல் ஜானகியைக் கை காட்ட, திவ்யாவின் பார்வை இப்போது ஜானுவிடம் திரும்ப, அவளோ குளிர்ச்சியாகப் புன்னகைத்துப் பேச்சை மாற்றி, "என்னக்கா இது... ஐ ஷேடோ மேட்ச் ஆகலை... அதைக் கொடு. நான் போட்டு விடுறேன்..." என்று வாங்க,

அங்கே ஏற்கெனவே இருந்த அவள் அண்ணிகள் வைஜுவும் ராதாவும் கேள்வியுடன் ஜானகியைப் பார்க்க...

அவளோ அவர்களை அடிக்கண்ணால் பார்த்தபடி, "என்ன மன்னி... என்னைத் தெரியுதா? நான்தான் ஜானகி. உங்க நாத்தனார்... மாடி ரூமில் இருந்தேனே... ஞாபகம் இருக்கோண்ணோ?" என்றவளின் கேள்வியில் கிண்டல் கூத்தாட,

உண்மையிலேயே வைஜுவிற்கும் ராதாவிற்கும் அவளைச் சில நிமிடங்கள் அடையாளம் தெரியவில்லை தான். அவர்கள் திருமணமாகி வந்த புதிதில் பார்த்த ஜானகி அல்லவே அவள்.

ஓமக்குச்சி உடலுடன் மருண்ட விழிகளுடன் இருந்த ஜானகி எங்கே... இப்போது கம்பீரமும் கிண்டலும் கொஞ்சி விளையாடும் ஜானகி எங்கே?

ஜானகி கேட்ட கேள்வியில் ரேணுகாவும் திவ்யாவும் சிரிக்க... அங்கே நிற்க முடியாமல் வெளியே வந்த வைஜூவும் ராதாவும் ரகசிய ஆலோசனைக்குக் கூடினர்.

"ஏன்டி ராதா, இது ஜானகிதானே...? இல்லை, நான்தான் மறந்துட்டேனோ...?" என்று புரியாமல் கேட்க,

"அய்யோ அக்கா... நேக்கும் புரியலை. நொண்டிக்குக் கொழுப்பு வந்துடுத்து, பாருங்களேன்..." என்று நாடியைத் தன் தோள்பட்டையில் இடிக்க,

வைஜு, "விடுடி... அவ கிடக்குறா...! அவளெல்லாம் ஒரு ஆளுன்னு அவளைப் பத்திப் பேசிண்டு... வா, நம்ம வேலையைப் பார்ப்போம். நாம அவகிட்ட பேசினது தெரிஞ்சு, நம்ம ஆத்துக்காராளும் அவா அப்பாவும் நம்மளை பிலுபிலுன்னு பிச்சு எடுத்துருவா..." என்று கூற,

ராதா, "அதுவும் சரிதான். ஆமாக்கா... இந்த திவ்யாவுக்கு என்னாயிடுத்து... தங்கை மேல பாசத்தைக் கொட்டுறா... இதில் என்னவோ இடிக்கிறதே...?" என்று வைஜூவின் மேல் சாய,

வைஜு, "அடச்சே...! நீ முதலில் இடிக்காதேடி... கல்யாணம் பண்ணிண்டு அமெரிக்கா போகப் போறாளோன்னோ அதான்... லேசா ஞானோதயம் வந்திருக்கும். போதாக்குறைக்கு நம்ம மாமியார் இருக்காளே... அட்வைஸ் மழை பொழிஞ்சிருப்பா... அதானா இருக்கும். சரி விடு... ஊருப்பட்ட வேலை கிடக்கு, வா... நாம் போய் மேக்-அப்புக்கு ரெடியாகலாம்..." என்று மிக பொறுப்பான வேலைக்குச் சென்றனர், அவ்வீட்டு மருமகள்கள் இருவரும்.

குமரகுரு விடியும் முன்னரே திருமண மண்டபத் திற்குச் சென்றிருக்க...

அடுத்த ஒரு மணி நேரத்தில் திவ்யா உட்பட வீட்டின் பெண்கள் அனைவரும் திருமண மண்டபத்திற்குக் கிளம்பினர்.

ரவியும் சேகரும் அங்கே இங்கே என்று ஆட்களை ஏவிக் கொண்டிருக்க... திருமண மண்டபமும் களைகட்டி இருந்தது.

மணப்பெண்ணைப் பிரத்யேக அறைக்கு அழைத்து வந்து, சொச்ச அலங்காரமும் செய்யப்பட்டுக் கொண் டிருக்க... அப்போதுதான் திவ்யாவின் கைபேசி சிணுங்க ஆரம்பித்தது.

அங்கே திவ்யாவைக் கிண்டல் செய்து கன்னத்தைச் சிவக்க வைக்கும் வேலையில் ஜானகி இருக்க... இப்போது கைபேசி அழைத்தவுடன், அதைப் பிடுங்கி யாரெனப் பார்த்த ஜானகிக்கு 'அதில்... 'அபி' என்ற பெயரைப் பார்த்ததும் சிரிப்புதான் வந்தது. அபிநந்தன் தான் அழைத்திருந்தான்.

“அக்கா... அய்யோ... இதெல்லாம் ஓவர்க்கா... இன்னும் இரண்டு மணி நேரத்தில் கல்யாணம். அது வரைக்கும் கூட அத்தானால பொறுமையா இருக்க முடியாதா..? இதெல்லாம் டூ டூ டூ மச்...” என்று கலாய்க்க,

திவ்யா, “ஏய்... சும்மா கிண்டல் பண்ணாதேடி... அவர் கொஞ்சுறதுக்கு ஒண்ணும் கூப்பிட மாட்டார். ஏதாவது முக்கியமான விஷயமா இருந்தாத் தான் கூப்பிடுவார்...” என்று கூறி, ஃபோனைப் பிடுங்கிக் கொள்ள...

ஜானகி கலகலவெனச் சிரித்து, "ஆமாமா... ஆறு மாசமும் ரொம்ப முக்கியமான விஷயத்தைப் பத்தித் தான் பேசிண்டிருந்தேள், இரண்டு பேரும். அப்படியென்ன... இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்திட்டேள்..." என்று கூற,

திவ்யா கையெடுத்துக் கும்பிட்டு, "தாயே... என்னை விட்டுருடி... தெரியாமல் சொல்லிட்டேன்... தயவுசெய்து என் ஆம்படையான் கிட்ட பேச விடு..." என்று பாவம் போல் கூற,

ஜானகி அவளைக் கெத்தாகப் பார்த்து, "சரி சரி... பொழைச்சுப் போ!" என்று விட,

திவ்யாவும் ஃபோனை தன் காதிற்கு வைத்தாள்.

தன் தமக்கையின் வெட்கமும் அவளின் பூரிப்பும் அவளுக்கு ஒருவித ஏக்கத்தைத் தர... நானியை ஆயிரமாவது தடவையாகக் கண்களால் அக்கூட்டத்தில் துழாவினாள்.

வந்ததில் இருந்து அவளும் நானியை ரகசியமாகத் தேடிக் கொண்டுதான் இருக்கிறாள்... அவன் கண்ணில் அகப்பட்டால் தானே...? என்றும் இல்லாமல் இன்று அவள் சிறிது சிரத்தை எடுத்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டதன் காரணமே... 'அவன் தன் அண்ணனின் திருமணத்திற்குக் கண்டிப்பாக வருவான் என்ற ஆசையில் தான். ஆனால் அவன்தான் அங்கே மாட்டியபாடில்லை...' என்று அலுப்பாக நினைத்தவள், தன் அக்காவின் மெல்லிய தேம்பல் ஒலியில் சுயநினைவிற்கு வந்தாள்.

பார்த்தால் சந்தேகமே இன்றி திவ்யாதான் அழுது கொண்டிருந்தாள்.

"என்னக்கா சொல்றே... அத்தான் கல்யாணம் வேண்டாம்னு சொல்றாரா...?" என்று கேட்க,

திவ்யா கண்களில் நீர் மல்கத் தலையாட்டினாள்.

அதைக் கண்ட ரேணுகா, "என்னடி இப்படி குண்டைத் தூக்கிப் போடுறேள், இரண்டு பேரும்... என்னதான் பிரச்சனை...?" என்று பதற,

திவ்யா, "அவர் சொல்றதும் நியாயம் தானேம்மா... அவர் தம்பி இல்லாமல் அவர் எப்படி என்னைக் கல்யாணம் செய்துப்பார்? அவர் ஒண்ணும் கல்யாணமே வேண்டாம்னு சொல்லலை... இப்போதைக்கு வேண்டாம்... நானியைப் பத்தித் தெரியட்டும். அப்புறம் வைச்சிக்க லாம்னு சொல்றார்..." என்று மெல்லிய குரலில் கூற,

ஜானகிக்குக் கோபம் கொப்பளித்தது.

"என்னக்கா இது... இப்போதான் அவன் இல்லன்னு தெரிஞ்சுதாம்மா... கல்யாணத்தன்னைக்குக் காலையில் வந்து இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம். அவனே அது பத்தி கவலைப்படாமல் தான் வராமல் இருக்கான்... இதில் உங்க தப்பு என்ன..?" என்று கூற,

திவ்யாவால் ஒன்றும் பேச முடியவில்லை... அதிர்ச்சியிலும் வேதனையிலும் அவள் ஊமையாகி இருக்க, ரேணுகாவும் என்ன செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைய...

ஜானகி திவ்யாவிடம், "அக்கா... இது பத்தி அத்திம்பேர் ஒண்ணும் அப்பாகிட்ட பேசலையே...?" என்று கேட்க,

திவ்யா, "இல்ல ஜானு... அங்கே ஏதோ பெரிய சண்டை நடந்துண்டு இருக்கு, மாமாவுக்கும் அவருக்கும். இன்னும் அப்பாகிட்ட சொல்லலைன்னு தான் நினைக் கிறேன்..." என்று கூற,

ஜானகி ரேணுகாவிடம், "அம்மா... என்னை அத்திம்பேர் ரூமுக்குக் கூட்டிண்டு போறியா? நான் அவராண்ட பேசுறேன். ப்ளீஸ்ம்மா..." என்று கெஞ்ச,

ரேணுகா, "எனக்கென்னமோ இதெல்லாம் நடக்கும்னு தோணலைடி..." என்று மாய்ந்து போக...

ஜானகி, "எல்லாம் நடக்கும்மா... என்னைக் கூட்டிண்டு போ..." என்று கட்டளையிட, அவளை அழைத்துக் கொண்டு யாருக்கும் சந்தேகம் வராத வண்ணம் அபியின் அறைக்கு அழைத்துச் சென்றார் ரேணுகா.

அங்கே அபிநந்தன் தலை குனிந்தபடி அமர்ந் திருக்க... குணா அவனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

"டேய் அபி... உன்னாண்ட நானி இருக்கிற இடம் தெரிஞ்சுடுத்து... அவன் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துடுவான்னு சொல்லி ஏமாத்தினது தப்புதான்டா... அதுக்காகக் கோவிச்சுண்டு கல்யாணத்தை நிறுத்தாதேடா.

"அந்தப் பொண்ணோட வாழ்க்கையை நினைச்சுப் பாரு. அவ எவ்ளோ ஆசையோட ஆறு மாசத்தை... இந்த

நாளுக்காகக் கனவு கண்டிருப்பா... அவளைக் குமைய வைக்காதே..." என்று கெஞ்சிக் கொண்டிருக்க,

அபி தலையைச் சற்றே நிமிர்த்தி, மென்மையாக... "நான் கோபப்பட்டோ, ஆத்திரப்பட்டோ இந்த முடிவு எடுக்கலைப்பா. இதில் எனக்கு மட்டும் வருத்தமில்லையா என்ன?

"நான்... நீங்க சொன்னதை நம்பி, நானி கண்டிப்பா வருவான்கிற ஆசையில்தான் மண்டபம் வரைக்கும் வந்தேன்... ஆனா அவன் என் ஒரே தம்பிப்பா... அவனில்லாமல் நான் எப்படி?

"நாளைக்கு அவனுக்குக் கல்யாணம் நடந்தா... என்னைக் கூப்பிடலைன்னா உங்களுக்குக் கோபம் வராதா? அப்படி என்னைக் கூப்பிடாமலும் அவன் செய்ய மாட்டான்... எனக்கு என் தம்பியைப் பத்தித் தெரியும். நான் மட்டும் எப்படி, என் வாழ்க்கைதான் முக்கியம்னு சுயநலமா இருக்க முடியும்..." என்று கூற, அவன் கூறியதில் இருந்த நியாயம் குணாவை மௌனமாக வைத்தது.

"என்ன ஆனாலும் சரிப்பா... அவன் வரட்டும் நான் கல்யாணம் செய்துக்கிறேன்... அதுவரைக்கும் கல்யா ணத்தை நிறுத்தி வைய்யுங்கோ... நானி வந்துட்டப்புறம் தான் கல்யாணம்.." என்ற ஒரேயடியாக கூற,

'தட்... தட்... தட்...' என்று கை தட்டும் சத்தம் கேட்க,

அபியும் குணாவும் திரும்பிப் பார்க்க... அங்கே ஜானகி நாற்காலியிலும், ரேணுகா அவளைத் தள்ளிய

படியும் வந்துகொண்டிருந்தனர். ஜானகிதான் கையைத் தட்டிக் கொண்டிருந்தாள்.

குணா பதறி, "ஜானு நீ எங்கே இங்கே...? ஏன் இப்படி வீல்சேரில்?" என்று இரு வேறு கேள்விகளை எழுப்ப,

அபியும் கண்களாலேயே அந்த வினாவை எழுப்பினான்.

ஜானகி, "இரண்டாவது கேள்விக்குப் பதில் சொல்ல நான் விரும்பலை... அதுக்கு அவசியமும் இல்லை மாமா... நான் இங்கே வந்திருக்கிறது என் அக்காவுக் காகத்தான்..." என்று கூற,

அபி, "ப்ளீஸ் ஜானு... இதைப் பத்தி எதுவும் பேசாதே... என் மனசுக்குச் சரின்னு பட்டதை நான் செஞ் சேன்..." என்று கூற...

ஜானகி, "ஓஹ்... நீங்க கொஞ்சமாவது உங்க தம்பியை மாதிரி இல்லாமல் இருப்பீங்கன்னு நினைச் சேன்... ஆனால் நீங்களும் உங்க தம்பி மாதிரிதான் என்று தெரிஞ்சுடுத்து, அத்திம்பேர்!" என்று கூற,

அபி, "ஜானு..." ஏதோ சொல்ல வர...

அவனைக் கையமர்த்திய ஜானகி, "அவன் ஒருத்தன்தான் சுயநலம் பிடிச்சவுன்னு நினைச்சேன். இப்போ நீங்களும் அப்படித்தான்னு சொல்லிட்டேள்..." என்று தடாலடியாகக் கூற, அனைவரும் பேச்சிழந்தனர்.

பின், "ஏன் அத்திம்பேர்... தம்பி தம்பின்னு நீங்க உசுரை விடுறேள்... அதை நான் தப்புன்னு சொல்

லலை... அதை என் அக்காவோட வாழ்க்கையையும் பாதிக்கப் படாமல் செய்யுங்கோ.

"நீங்க இன்னைக்குச் செய்யறது பேர் பைத்தியக் காரத்தனம் அத்திம்பேர்... தியாகம் இல்லை. ஏன் நானிக்குத் தெரியாதா? உங்களுக்கு இன்னைக்குக் கல்யாணம்னுட்டு... அவனா வர வேண்டியதுதானே...!

"என் அண்ணன் நான் போகாமல் தாலியை எடுத்துக் கட்ட மாட்டாருன்னு சொல்லிண்டு வர வேண்டியதுதானே... அவன் ஏன் வரலை... அவன் வரவும் மாட்டான்... அவன் ஒரு பாறை. கல் மனசு... அவனுக்காக என் அக்கா வாழ்க்கை பாழாப் போகுறதை என்னால் ஏத்துக்க முடியாது..." என்று கண்ணீருடன் உறுதியாகக் கூற...

அபி வாயடைத்துப் போனாலும், "இல்லை ஜானு... நீ சொல்றது சரிதான். ஆனால் என்னால் முடியலை..." என்று நூலிழை போல் இருந்த தயக்கத்தில் கூற,

ஜானகி கண்ணீரைத் துடைத்து விரக்தியாகப் புன்னகைத்தபடி, "நானி உங்களுக்குத் தம்பின்னா... எனக்கு... எனக்கு அவன் ஆம்படையான்... அத்திம்பேர்..." என்று திக்கித் திணறிக் கூற,

குணா, ரேணுகா, அபி மூவரும் ஆச்சரியத்துடன் அவளைப் பார்க்க...

அவளோ, "கவலைப்படாதீங்கோ... அவனை அப்படித்தான் நான் நினைச்சுண்டு இருக்கேன்... ஆனா அவன் இப்ப யார் மடியில் படுத்துண்டு இருக்கானோ

நேக்குத் தெரியாது... அவனை அப்படி ஏத்துண்டு இருக்கிற நானே இந்தக் கல்யாணம் நடக்கணும்னு சொல்றேன். புருஷன் வராத எந்தக் கல்யாணத்துக்காவது பொண்டாட்டி வருவாளா...? நான் வந்திருக்கேன், அத்திம்பேர். அது போதாதா...? தயவுசெய்து இந்தக் கல்யாணத்தை நிறுத்தாதீங்கோ... உங்களைக் கை யெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கிறேன்..." என்று தழுதழுப் பாகக் கூற,

அதற்கு மேலும் கரையாமல் அவனால் இருக்க முடியவில்லை.

குணாவிடம் திரும்பி, "அப்பா... கல்யாணத்தை நிறுத்தாதீங்கோ... நடக்கட்டும். அவன் வந்ததும் வேணா இன்னொரு தடவை கல்யாணத்தை வைச்சிக்கலாம். என் கொழுந்தியாள் கல்யாணத்தோட சேர்த்து..." என்று சற்றே குறும்புடன் கண்ணடித்துக் கூற,

ஜானகி வெடகத்தால் தர்மசங்கடத்துடன் தலை குனிய... குணாவிற்கும் ரேணுகாவிற்கும் இப்போது இரட்டை சந்தோஷம்... பின்னே ஜானகியின் மனமும் தெரிந்துவிட்டதே...!

"ஜானு... நான் உனக்கு என்னடி செய்தேன்...? என்னைக் கூனிக் குறுக வைக்காதேடி... எனக்கு எதுக்கு உதவி செய்தே...?" என்று புலம்பிக் கொண்டிருந்த திவ்யாவின் கண்ணீரைத் துடைத்த ஜானகி,

"என்னக்கா.. நீ... ஷ்ஷ்ஷ்... நீ எனக்கு அக்கா... அது போதாதா? உடன் பிறந்தவ நான் இது கூடச்

செய்யலைன்னா எப்படி? இது ஒண்ணும் உதவி இல்லக்கா... கைம்மாறு. அன்னிக்கு நீ உன் உயிரைப் பத்திக் கூட கவலைப்படாமல் மாடியில் இருந்து விழுந்தியா...? அதை நீ செஞ்சிருக்க வேண்டிய அவசியமே இல்லையே... அதே மாதிரிதான் இதுவும்.... இதுக்கு மேல் எதுவும் பேசாமல் போ... போய் மாப்பிள்ளையைச் சைட் அடிக்கிற வேலையைப் பாரு..." என்று அவளைக் கிண்டலடித்து விட்டு மணவறைக்கு அவளுடன் செல்ல...

அப்போது வரை நடந்த நிழல் யுத்தம், களேபரம் ஒன்றையும் அறியாத குமரகுரு அவர்கள் இருவரும் சேர்ந்து இருப்பதைப் பார்த்த எரிச்சலில்...

"சே... இவ கூட என்ன பேச்சு திவ்யா நோக்கு... போ. மணவறையில் போய் உட்காரு..." என்று திட்ட,

ஜானகியோ சிரிப்பு மாறாமல் அவளைப் பார்த்து, "போ..." என்பது போல் தலையாட்ட,

திவ்யா குமரகுருவை முறைத்தபடி சென்று அமர்ந்தாள்.

"கெட்டிமேளம்... கெட்டிமேளம்..." என்ற ஐயரின் கட்டளையுடன் வாத்தியங்கள் முழங்க... திவ்யாவின் கழுத்தில் தாலி கட்டி தன் மனையாளாக்கிக் கொண்டான் அபிநந்தன்.

முதலில் இரு வேறு துருவங்களாகி இருந்த அந்த ஜோடி இப்போது ஜாடிக்கேற்ற மூடியாகி மாற... சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டது.

அன்பும் அறனும் அணிகலன்களாகப் பெற்று அவர்கள் வாழ்வாங்கு வாழ்வர் என்பதில் சந்தேகமே இல்லை.

சிறிது நேரத்தில் வாழ்த்துப் படலம் துவங்க... மண்டபத்தில் சிறு சலனமும் உண்டானது.

அதற்குக் காரணம் அங்கே மணவறையில் ஓரமாகத் தன் நாற்காலியில் அமர்ந்திருந்த ஜானகி.

திருமணத்திற்கு வந்திருந்த இளைஞர்களின் பட்டாளம்...

"டேய் அங்கே பாரு... அது நேத்து அந்த டெல்லி டான்ஸ் மேளாவில் ஜெயிச்ச ஜானகிதானே..." என்று ஆரம்பிக்க,

"ஆமாடா... அவங்களேதான்... என்கிட்ட கூட வீடியோ இருக்கே..." என்று பார்க்க,

"எனக்குக் கூட வாட்ஸ் அப் வந்ததே... இதோ இவங்கதானே! சே... என்ன கிரேஸ் மச்சி... எத்தனை தடவை அந்த வீடியோவைப் பார்த்தேன்னு எனக்கே தெரியலை..." என்று பரவ,

அவர்கள் பெற்றோரிடம் ஜானகியைப் பற்றி விசாரிக்க...

அன்றைய நாளின் அடுத்த கண்டம் ஆரம்பித்தது.

**கொ**ஞ்சம் கொஞ்சமாக அந்தச் செய்தி பரவி... இறுதியில் குமரகுரு காதிற்கே எட்டியது.

"என்ன குமரா? உன் பொண்ணை பெரிய டான்சர் ஆக்கிட்டியேப்பா... அப்பான்னா உன்னை மாதிரி இருக்கணும். நடக்க முடியாத பெண்ணை ஆடவே வைச்சிட்டியே... இனி உன் பொண்ணுக்கு நல்ல நேரம் தான்..." என்று கூற, அவருக்கு முதலில் ஒன்றும் புரிய வில்லை...

பின்னர் அவர்கள் காட்டிய வீடியோவைப் பார்த்த பின் அவரால் மூச்சுக் கூட விட முடியவில்லை... அதைப் பார்த்த ரவி, சேகர், வைஜு, ராதா அனைவருமே ஆடிப் போக அவர்களின் அதிர்ச்சியில் இருந்தே ஜானகிக்கு ஏதோ புரிந்தது.

எனவே அவள் ரேணுகாவிடம், "அம்மா... அப்பா வுக்குத் தெரிஞ்சுடுத்தா?" என்று சற்றே பயத்துடன் கேட்க,

இப்போது ரேணுகாவின் முகத்தில் புன்னகை வந்தது.

அவளைப் பார்த்து வெற்றிப் பெருமிதத்துடன், "இதுக்காகத் தானே காத்துட்டு இருந்தேன்..." என்று கூற,

"காலையில் இருந்தா?" என்று ஜானகி புரியாமல் கேட்க,

"இல்லை... 23 வருஷமா..." என்று கூறி மர்மமாகப் புன்னகைத்தார் ரேணுகா.

பிறந்தது முதல் தன் தாயின் அப்படி ஒரு புன்னகையை அன்றுதான் பார்த்த ஜானகிக்கு ஏதோ ஒன்று புரிந்து மெய் சிலிர்த்தது.

எல்லாவற்றையும் அறிந்து அதிர்ந்த குமரகுரு, தனியாக அறைக்குள் நுழைந்து கொண்டு நாற்காலியில் தொப்பென்று அமர்ந்து மூச்சை இழுத்து விட்டார்... போதாக்குறைக்கு அவரின் மகன்களும் மருமகள்களும் அவரை இன்னும் உசுப்பேத்தி விட்டுக் கொண்டிருந்தனர்.

"பார்த்தேளா மாமா... எவ்ளோ பெரிய காரியம் செய்துண்டு வந்து பச்சைப் புள்ளையாட்டம் உட்கார்ந் திருக்கானு... இந்த ஜானகி லேசுப்பட்டவ இல்லை..." என்று வைஜு கூற,

ராதா, "அதான் நான் காலையிலேயே சொன்னே னேக்கா... அவ முன்ன மாதிரி இல்லைன்னுட்டு... ஆனால் அவ தனியா இப்படிச் செய்திருக்க முடியா துக்கா... அத்தை சப்போர்ட் இருந்தால்தான்... வாக்கிங் போறேன், வாக்கிங் போறேன்னு நம்ம தலையில் மிளகா அரைச்சுட்டா..." என்று ஏற்றிவிட,

ரவி, "ஆமாப்பா... அம்மாவும் இதில் உடந்தை.. பாருங்கோ. என்ன கெத்தா நடந்து வர்றான்னுட்டு..." என்று ஊத,

குமரகுரு திரும்பிப் பார்க்க... அங்கே ரேணுகா நாற்காலியைத் தள்ளிக் கொண்டு வர, அதில் ஜானகி மருண்ட விழிகளுடன் வந்தாள்.

என்னதான் தன் காலில் நிற்கும் நிலை வந்தாலும், அவளால் இன்னும் தன் தந்தையின் மீதுள்ள பயத்தைக் களைய முடியவில்லை... அவள் பட்ட துன்பம் அப்படி... இப்போதும் அவரைப் பார்த்ததும் உடல் சில்லிடத்

துவங்க... ரேணுகாதான் தைரியத்துடன் அவளை இங்கே அழைத்து வந்தார்.

அவளைப் பார்த்ததும் வந்த ஆத்திரத்தில் ஓடிச் சென்று, "ஏன்டி ஓடுகாலிக் கழுதை... என்ன தைரியமிருந்தா என்னை ஏமாத்திருப்ப..." என்று கத்தியபடி ஓடிச் சென்று அறையப் போன குமரகுருவின் கை அப்படியே அந்தரத்தில் நின்றது.

அதைப் பார்த்த அனைவரும் அதிர்ச்சியில் வாயைப் பிளக்க... ஏன் குமரகுருவே அதிர்ந்து போக... அவர் கையைத் தடுத்துத் தாங்கியிருந்தார் ரேணுகா.

அவர் வெகுண்டு, "ஏய் என்னடி, துளிர் விட்டுப் போயிடுத்தா? கையை விடுடி... எல்லாம் நீ கொடுத்த தைரியம்தானே... என்ன எனக்கு எதிரா ஆள் சேர்க்கிறியா..?" என்று கன்னா பின்னாவென்று கத்த...

அவரைத் தன் அசராத புன்னகையில் வாயடைக்க வைத்த ரேணுகா, "அவளை உங்களுக்கு எதிரா திருப்பலைண்ணா... நான்தான் அவளை வைச்சு உங்ககிட்ட யுத்தம் நடத்தினேன்..." என்று கூற,

குமரகுரு அதிர்ந்தார்...

ரேணுகா, "என்னண்ணா... அதிர்ச்சியா இருக்கா? முப்பது வருஷமா உங்களாண்ட குடும்பம் நடத்தியிருக் கேன்... என்னை ஒரு பொருட்டா மதிச்சிருப்பேளா...? இப்போ உங்களுக்கே சவால் விட்டு ஜெயிச்சு காட்டிட் டேன் பார்த்தேளா... என்னையும் என் பொண்ணையும் நீங்க எந்தளவு துச்சமா மதிச்சேள்... இப்போ பாருங்கோ...

எல்லாரும் ஜானகிக்கு அப்பாவாத்தான் உங்களைப் பார்க்கிறா...

"இவ்வளவு நாள் உங்களைச் சகிச்சுண்டு உங்க கூடவே இருந்தேனே... அது எதுக்காக? இதுக்காகத் தான்... இன்னும் என் பொண்ணு ஜெயிப்பாண்ணா... பொறுத்துக்கோங்கோ. கூடிய சீக்கிரம் அந்த நாள் வரும்," என்று கண்களில் உறுதியுடன் கூற, அவர் கிட்டத்தட்ட மூர்ச்சையானார்.

"நீங்க செய்ததுக்கு எல்லாம் மத்த பொம்மனாட்டியா இருந்திருந்தா தானும் தற்கொலை செய்துண்டு தன் பொண்ணுக்கும் விஷம் கொடுத்துக் கொன்னிருப்பா... இல்லை குறைஞ்சபட்சம் பொண்ணைக் கூட்டிண்டு பிரிஞ் சிருப்பா... ஆனால் எனக்கு ஜானகி மட்டுமில்லையே, கூட மூணு பேர் இருக்காளோன்னோ... இப்போ என் பையன்களும் பொண்ணும் ஷேமமா இருக்கா. இதுதானே எனக்குச் சரியான சந்தர்ப்பம். என்ன பார்க்குறேள்... நம்ப முடியலையா? நான் ரேணுகா தாண்ணா..." என்று சிரித்த அவரை... ஜானகியே ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"இப்போ நான் ஜெயிச்சுட்டேண்ணா... ஜெயிச்சுட் டேன்... யாரை மாதிரி இருக்கானு என் பொண்ணை நீங்க வாட்டி வதைச்சேளோ... அவாளோட ஆசிர்வாதமே என் பொண்ணுக்குக் கிடைச்சிருக்கு. அது போதும்ணா... என்ன புரியலையா? இதைப் பாருங்கோ... உங்களுக்குப் பிடிக்காத உங்க அம்மா சீத்தம்மா... என் மகளுக்கு விருதாகி வந்திருக்கா..." என்று கூறி விட்டுத் தன் சேலைத்

தலைப்பில் மறைத்து வைத்திருந்த அந்த விருதை எடுத்து அவர் முன் வைத்தாள்.

"உங்களுக்குப் பிடிக்காத நீங்க உங்க ஆணாதிக்கத்தால் ஒதுக்கி வைச்ச உங்கம்மாவும் சரி... உங்க பொண்ணும் சரி எல்லாரும் ஜெயிச்சுட்டா... நீங்கதாண்ணா தோத்துப் போயிட்டேள்... கேவலமா தோத்துப் போயிட்டேள்..." என்று கர்ஜிக்க,

அங்கிருந்த அனைவரும் கண்ணைக் கூட சிமிட்டவில்லை.

குமரகுரு ஆங்காரத்தில், "என்னடி... இத்தனை நாள் ஊமை மாதிரி இருந்துண்டு இப்போ வாயடிக்கிற... என்னதான் இருந்தாலும் இவ ஒருத்தனோட கூடிக் குலாவினவா தானே. அதுக்குத் தானே தண்டனை கொடுத்தேன்... என்னமோ அவ தப்பே பண்ணாதவ மாதிரிப் பேசுற... அப்படின்னா அதை நிரூபிக்கச் சொல்லு..." என்று இன்னும் தன் ஆணாதிக்கத்தை விட்டுக் கொடுக்காமல் கத்த...

ஜானகி அவரை அதிர்ச்சியுடன் பார்க்க... ரேணுகா அவளைக் கையமர்த்தி, "இல்லை ஜானு... இதில் நீ எதுவுமே பேசாதே... இது முழுக்க முழுக்க எனக்கும் உங்கப்பாவுக்கு உள்ள கணக்கு... நீ எதுவும் பேசக் கூடாது..." என்றபடி குமரகுருவைப் பார்த்து,

"என்ன கேட்டேள்... திருப்பிச் சொல்லுங்கோ... சீதை தான் பத்தினின்னு ராமன்கிட்ட தான்னா நிரூபிச்சா... ஜனகர் கிட்ட இல்லை... அப்படியே ராமன்கிட்ட நிரூபிச்சா

கூட என்னைப் பொருத்தவரை குத்தம்தான்... இந்தக் காலத்தில் ஒவ்வொரு தடவையும் பொம்பளைகளால் பத்தினின்னு நிரூபிச்சுண்டு இருக்க முடியாதுண்ணா... அதுக்கான அவசியமில்லை. நீங்க நம்பலைன்னா விடுங்கோ. அதுக்காக உங்களாண்ட நிரூபிச்சா அது எங்களுக்குத்தான் அசிங்கம்..." என்று அழுத்தமாகக் கூற,

குமரகுருவிற்குத் தன்னை யாரோ சாட்டையால் அடித்தது போல் இருந்தது. அந்தக் கணம் ஜானகி பேசியிருந்தால் கூட அவர் இந்தளவிற்குப் பாதிக்கப் பட்டிருப்பாரோ என்னவோ... ஆனால் ரேணுகா பேசியது அவரை ஈட்டியாகக் குத்தியது.

அவர் மட்டுமில்லை... ரவியும், சேகரும் "அம்மா நீ செய்றது..." என்று ஏதோ கூற வர,

ரேணுகா, "வேண்டாம்டா... எதுவும் பேசாதீங்கோ... நான் உங்க மனசைக் கஷ்டப்படுத்திடக் கூடாதுன்னுதான் பேசாமல் இருக்கேன்... என் வயித்தில் பிறந்தவாளுக்கு நானே சாபம் கொடுத்த மாதிரி ஆகிடும் பாரு.. ஆனால் ஒண்ணுடா... உங்களைப் பெத்த வயித்தில் அவளைப் போல் ஒரு பாவத்தையும் பெத்தது என் தப்புதான்..." என்று ஒரே வார்த்தையில் அவர்களை நொறுக்க...

தன் கணவன்மார்களின் தோல்வியைப் பார்த்த வைஜூவும், ராதாவும்... "அத்தை..." என்று அடுத்ததாக வர,

அவர்களைப் படுகேவலமாக ஒரே பார்வையில் அடக்கினார், ரேணுகா என்னும் வீராங்கனை.

இப்படியாகப் போருக்கு வந்தவர்கள் அனைவரையும் திறன்படத் தாக்கிய அந்த வீராங்கனை குமரகுருவிடம் வந்து, "உங்களுக்கு எல்லாம் தெரிஞ்ச பிறகும் அவளை ஏன் வீல்சேரில் தள்ளிண்டு வந்தேன் தெரியுமா? உங்களுக்குக் கொஞ்சமாவது அவள் மேல் பாசம் இருந்தால் அவள் நடக்கிறதைப் பார்க்க... வீல்சேரில் இருந்து எழுன்னு நீங்க சொல்ல மாட்டேளான்னு சின்ன நப்பாசைதான். ஆனால் போயிடுத்துண்ணா.. கடைசி வரை அவ நடக்கிறதைப் பார்க்கணும்னு நீங்க ஆசைப் படவே இல்லை. இதில் இருந்தே தெரிறயதுண்ணா, அவ மேல் உங்களுக்குப் பாசமே வராதுன்னு...

"இனிமேலும் உங்களாண்ட அவளை விட்டு வைச்சா அது நான் அவிசாரின்னு அர்த்தம்... பணத்துக்காகத்தான் உங்ககூடப் படுத்துப் பிள்ளையை வாங்கிண்டேன்னு அர்த்தம். வேண்டாண்ணா... நான் போறேன்... என் பொண்ணுகூட கால்வயித்துக் கஞ்சி குடிச்சாவது நான் வாழ்க்கையை நடத்திக்குறேன். எனக்கு யார் மேலயும் கோபம் இல்லைண்ணா... வருத்தம்தான்.

"இவ்வளவு நாள் நான் உங்ககூட வாழ்ந்ததும் என் பிள்ளைகளுக்காகத்தான். இப்போ நான் போறதும் என் குழந்தைக்காகத்தான். ஒரு அம்மாவா நான் ஜெயிச்சா, அது போதும். இதுதான் என் வாழ்க்கை. அதுக்காக யாரை விட்டும் நான் ஒதுங்கியிருக்கப் போறதில்லை... யார் வேணாலும் வரலாம். என்னைப் பார்க்கலாம். ஆனால் எனக்குன்னு ஒரு இடத்தை உண்டாக்கிக்கப் போறேன். அவ்ளோதான்!" என்று கூறி விட்டு,

ஜானகியிடம், "ஜானு... எழுந்து நடந்து வா.. அந்த நாற்காலியை அவங்களே நம்ம ஞாபகார்த்தமா வைச்சிருக்கட்டும்," என்றபடி, குணாவிடமும்... அபி, திவ்யாவிடமும் விஷயத்தைக் கூற,

திவ்யா கண்ணீருடன், "அம்மா. எங்கேம்மா போறே... எங்க கூட வாம்மா... தனியா எங்கே போய் தங்குவே...?" என்று கண்ணீர் விட,

ஜானகிக்கும் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

அவள் தாயை நினைத்து முதன் முறையாகப் பாசத்தை விட பிரம்மிப்பாக இருந்தது... 'தன் தாயா இவள்... இல்லை, எனக்காகக் கடவுள் அனுப்பிய தேவதையா..? இவள் கிடைக்கத் தான் என்ன தவம் செய்தேனோ!' என்று பலவாறு எண்ணியபடி, இனி தாய் போகும் வழியிலேயே செல்லத் துணிந்தாள் அவள்.

திவ்யா, "அம்மா... நீ செஞ்சது தப்பே இல்லம்மா... நாங்க எல்லோருமே உன்னை எவ்ளோ உறிஞ்ச முடியுமோ அவ்ளோ உறிஞ்சுட்டோம். போதும்மா. இனி நீ ஜானகிக்காக வாழு... அவ பாவம். ஆனால் என்கூட வந்து இரும்மா..." என்று கெஞ்ச,

ரேணுகா, "இல்லடா... அது நல்லா இருக்காது. எனக்குன்னு ஒரு வெளி வேணும், எனக்குப் பிடிச்சதை செய்ய... யாரைப் பத்தியும் கவலைப்படாமல், யாரும் என்னைப் பத்திக் கவலைப்படாமல் இருக்க ஒரு இடம். நாளைக்கு ஜானுக்குக் கல்யாணம் ஆனதுக்கப்புறமும்

எனக்கான இடம் வேணும். அதுக்குத்தான் நான் போறேன்..." என்று கூற,

குணாதான் கணநேரத்தில் முடிவெடுத்தார்.

"அக்கா, நீ சொல்றது புரியுது... நானும் ஒரு முடிவெடுத்துட்டேன். எனக்கும் வெளிநாடு வாசம் பிடிக்கலை... இந்த ஆறு மாசம் இங்கே இருந்த சுகம் என்னை விடலை... என் வீட்டுக்கு மேல் போர்ஷன் காலிதான்... நீ ஏன் அங்கே வரக்கூடாது. நானும் வேலையை ரிசைன் பண்ணிடுறேன். ஒருத்தருக் கொருத்தர் துணை... அவாளுக்கும் கவலை இருக்காது. தனியா இருக்கோமேன்னு... என்ன சொல்ற?" என்று கேட்க,

ரேணுகாவிற்கும் மற்ற அனைவருக்கும் அந்த யோசனை பிடித்திருக்க... அதை ஆமோதிக்க... தன் பெண்ணின் திருமணச் சடங்குகள் அனைத்தையும் முடித்து விட்டுத் தன் வீட்டை விட்டு வெளியேறினார் ரேணுகா.

"ரவி... சேகர்... குழந்தைகளைப் பத்திரமாப் பார்த்துக்கோங்கடா... ஹரிஷுக்கு டெய்லி ராத்திரி நெஞ்சில் கதகதப்பா விக்ஸ் தடவி விடு... குழந்தைக்கு பனிக் காலம் ஆகாது.

"ப்ரீத்திக்குச் சீக்கிரம் காது குத்தி மொட்டை அடிக்கணும். கண்டிப்பா சொல்லி விடு. நான் வந்து எல்லா வேலையையும் பார்த்துக்குறேன்."

வைஜுவிடமும் ராதாவிடமும் சாவிக் கொத்தைக் கொடுத்து, "எல்லாரையும் நல்லாப் பார்த்துக்கோங்கோ...

உங்க மாமாவையும்தான்.. அவருக்கு நினைச்சாப்ல எல்லாம் கையில் வாங்கியே பழகிட்டார்... கொஞ்சம் அனுசரிச்சுப் போங்கோ... இல்லையா, அவருக்குச் சொல்லிப் புரிய வைய்யுங்கோ...

"கீரைக்காரிகிட்ட பசலைக் கீரை வாங்கி வைச்சிருக் கேன்... தினமும் சமையலில் சேர்த்துக்கோங்கோ..." என்று கூறி விட்டுத் தன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்க...

குமரகுரு அப்படியே ஆணியடித்தாற் போல் அமர்ந்திருந்தார்.

அவரிடம் வந்த ஜானகி, "அப்பா... என்கிட்ட பேச உங்களுக்குப் பிடிக்காதுதான்... ஆனால் நான் என் அக்கா கல்யாணத்துக்கு ஓடியாடி வேலை செய்யணும்னு நினைச்சேன்... அதை நடக்கச் செய்ததுக்கு நன்றிப்பா..." என்று கூறிவிட்டுச் செல்ல,

அவரிடம் எந்த உணர்வும் இல்லை... அவர் காலைத் தொட்டுக் கும்பிட்ட ரேணுகா, "நான் போயிட்டு வரேண்ணா... பயப்படாதீங்கோ... பேச்சுக்குச் சொன் னேன்... வர மாட்டேன்... உடம்பைப் பார்த்துக்கோங்கோ..." என்று கூறி விட்டு, குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டுத் தன் மகளுடன் கம்பீரமாக வெளியேறினார் ரேணுகா என்னும் சாதனைப் பெண்மணி.

யார் மனதையும் புண்படுத்தாமல் யார் வாழ்க்கை யையும் குலைக்காமல் தனக்குத் தேவையான மரியாதையைக் காலங்கள் கடந்த பின்னும் பெற்று, தனக்கான சுதந்திர வாழ்வில் அடியெடுத்து வைத்த அந்த

ரேணுகாவும் சீத்தம்மாவைப் போல் ஒரு பெண்ணியவாதி தான்.

ஒரு வருடத்திற்குப் பிறகு...

'கலாலயா இன்டர்நேஷனல் டான்ஸ் ஸ்கூல்.'

'1...2...3...4 ஸாங்.'

"ஆர்த்தி, தலை கொஞ்சம் கீழே... அனிதா, கையை நேரா....

"அஜித் அனிதாவை சைட் அடிக்காதே. ப்ரவீன் கம் குளோசர்...." என்று இருந்த இடத்தில் இருந்தே தவறுகளைக் கண்டு பிடித்து ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தாள் அந்த நடனப் பள்ளியில் அனை வருக்கும் பிடித்த திறமை வாய்ந்த ஆசிரியர் ஜானகி.

ஆசிரியர் மட்டுமில்லை அதன் பங்குதாரரும்தான்.

அங்கே வந்த நட்டு ஃபோனில், "இல்லை சுகி... நோ பேபிம்மா... பிலீவ் மீ டா டார்லிங்... நான் அந்த டைரக்டரோட பார்ட்டிக்குப் போனேன்தான். ஆனா குடிக்கலை... உன் கையால் அடி வாங்கின அன்னை யோட நிறுத்தினதுதான்... இன்னும் தொடலைடா..." என்று கெஞ்சிக் கொண்டிருக்க... அவனைப் பார்த்துச் சிரித்தாள் ஜானகி.

ஃபோனை வைத்தவன், "பேசாமல் இந்தச் சினிமாவுக்கு கோரியோகிராஃப் பண்றதை விட்டுடப் போறேன்... டெய்லி ஃபோன் பண்ணி அந்தப் பார்ட்டிக்குப் போனியா? இதுக்குப் போனியான்னு...?" என்று சலித்துக்

கொண்டவன்... இப்போது நடன இயக்குநர், தமிழ், தெலுங்கு, இந்தி திரைப்படத் துறைகளில்... லட்சங்களில் சம்பளம்.

அவன் கூறியதைக் கேட்ட ஜானகி, "நீ எங்கே போனாலும் அவ உன்னைச் சந்தேகப்பட்டுக்கிட்டுத் தான் இருப்பா... ஏன்னா உங்க ஃபர்ஸ்ட் மீட்டிங் அப்படி..." என்று கூறி விட்டுத் தன் மாணவர்களிடம், "இல்லையா ஸ்டூடண்ட்ஸ்..." என்று கேட்க,

"ஆமா... 4612..." என்று அந்த ஐம்பது பேரும் கோரஸாகக் கத்த,

தலையில் கை வைத்த நட்டு, "போச்சுடா... இவங்க வரைக்கும் தெரிஞ்சு போச்சா... ஜானு, உனக்கு இருக்கு... நீ வா..." என்று கருவ,

ஜானகி, "அடுத்த வருஷம் நடக்கப் போற உன் கல்யாணத்துக்குக் கெட்டிமேளத்திற்குப் பதில் எல்லாரும் 4612ன்னு கத்தப் போறதா இருக்கோம்..." என்று குறும்புடன் கூற, அவள் காதைத் திருகிய நட்டு கலகலவெனச் சிரித்து,

"சரி. அடுத்த வாரம் கோவா தமிழ்ச் சங்கத்தில் ஒரு பெர்ஃபார்மன்ஸ் இருக்கு... ப்ராக்டிஸ் பண்ணிட்டியா...?" என்று ஆசானாகக் கேட்க,

ஜானகி, "அதான் சி.டி. அனுப்பியிருந்தியே... எல்லாம் ரெடி. அஞ்சு லட்சம் அட்வான்ஸ் வாங்கியாச்சே... அதுகூடச் செய்யலைன்னா எப்படி...? ஆனால் இவ்வளவு

பணம் ஏன் கொடுத்தாங்கன்னே தெரியலை..." என்று புலம்ப,

நட்டு சிரித்தபடி, "உன் திறமைக்கு இதுவே குறைவுதான் ஜானு... நீயெல்லாம் சினிமாவில் வந்தா வேற லெவல்... ஆனா வேண்டாம். நீ இப்படியே இரு. அதான் உனக்கும் உன் திறமைக்கும் அழகு..." என்று பாராட்ட, ஜானகி அழகாகச் சிரித்தாள்.

பின், "ஆமா, நீ சும்மா இங்க வரமாட்டியே... என்ன விஷயம்?" என்று கூர்மையான பார்வையுடன் கேட்க,

நட்டு, "இதென்ன கேள்வி... உன்னைப் பார்க்கணும் போல இருந்தது, அதான்... அது மட்டுமில்லை... இந்த ஸ்கூலில் நானும் டீச்சர் தானே..." என்று கேட்க,

ஜானகி தன் காதைக் காட்டி, "பார்த்தியா... என் காதை ஏற்கனவே குத்தியாச்சு... அம்மா ஏதாவது அறிவுரை சொல்லச் சொன்னாங்களா?" என்று கேட்க,

நட்டு சிரித்து, "அவங்க சொல்றதையும் யோசி ஜானு. எவ்ளோ நாள் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவ... அவங்க சொல்றதிலேயும் நியாயம் இருக்கு... நானி சார் இனிமேலும் வருவார்னு எனக்குத் தோணலை..." என்று கூற,

ஜானகி, "ப்ளீஸ், நட்டு... வேண்டாம். என்னை இப்படியே விட்டுரு...." என்று முகம் சுருங்கக் கூறி விட்டு நடக்க... தளர்ந்த நடையுடன் செல்லும் தன் தோழியையே இரக்கத்துடன் பார்த்தான் நட்டு.

கடந்த ஆறு மாதமாக நடப்பதுதான். திருமணத்தைப் பற்றிப் பேசினாலே பட்டு கத்தரித்தாற் போலதான் பேச்சு. இனி என்ன செய்வதென்று தெரியாமல் நட்டு குழம்பிப் போனான்.

அன்று மாலை வீட்டிற்கு வந்த ஜானகி... ரேணுகா ஏதோ எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்து, "என்னம்மா... கட்டுரை ரெடியாயிடுத்தா.?" என்று கேட்க,

"ஆமாடி... ரிஷிகேஷ் மட்டும் பாக்கி... அது மட்டும் முடிச்சிட்டாக் கொடுத்திடலாம்," என்று கூற... ஜானகிக்குப் பெருமையாக இருந்தது.

ஆம்... பத்திரிகைகளுக்கு ஆன்மிகக் கட்டுரை எழுதிக் கொடுக்கின்றார் ரேணுகா. அவரின் எழுத்து நடையும், தமிழும் அனைவருக்கும் பிடிக்க... இப்போது அவரின் எழுத்துக்கள் லேசாகப் பிரபலமானது. சாதிக்க வயது ஒரு தடையில்லை என்பதற்கு ரேணுகா நல்ல உதாரணம்.

அவருக்குத் தேவையான வெளி அவருக்குக் கிடைத்து விட்டது. இப்போதும் அவர் வீட்டுடன் தொடர்பில்தான் இருக்கிறார். ஆனால் குமரகுரு மட்டும் பேசுவதில்லை. ஹரிஷையும் ப்ரீத்தியையும் பார்த்து விட்டுக் கொஞ்சிக் கொண்டு ஏதாவது உதவி என்றால் செய்து விட்டு வருவார்.

ஜானகி ஆயாசமாகச் சோபாவில் சாய, அவள் முன் வந்த ரேணுகா தயங்கி நிற்க, அவர் முகத்தில் இருந்தே விஷயத்தை அறிந்த ஜானகி,

“அம்மா, தயவு செய்து இந்த விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டாம்... எனக்குச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சு... இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் வேண் டாம்,” என்று கத்த...

ரேணுகா, “அப்புறம் எப்போதான் வேணும்... இதைப் பாரு, ஜானு... சும்மா நானும் உன்னை அப் படியே விட்டுருவேன்னு நினைக்காதே... இன்னும் ஒரு வாரத்தில் உன் முடிவைச் சொல்ற... குணா நிறைய வரன் பார்த்துண்டுதான் இருக்கான். அதில் ஏதாவது ஒண்ணு முடிவாகணும். அவ்ளோதான்...” என்று அழுத்தம் திருத்தமாகக் கூறும் தாயை அதிர்ச்சியுடன் பார்த்தாள் மகள்.

அடுத்த நாள் பிற்பகல்... மாணவர்கள் சென்று விட, ஜானகி அயர்ச்சியுடன் தங்கள் பள்ளியின் பக்கத்தில் இருந்த தோட்டத்தில் இருந்த பெஞ்சில் அமர்ந்தாள்.

மூளைக்குள் பிரச்சனைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் படையெடுத்தது.

நானியைப் பற்றி இதுவரை ஒரு தகவல் இல்லை. குணாவே அவன் வரமாட்டான் என்று கூறி அவளுக்கு வரன் பார்க்க ஆரம்பித்து விட்டார்.

ரேணுகாவிடமும் கேட்க முடியவில்லை... இவ்வா றாக அனைத்தும் சுழன்று அடிக்க,

“எங்கேடா போனே...? உயிரோட இருக்கியா இல்லையா...? நீ இல்லாத வாழ்க்கையில் நான்

உயிரோட இருக்கேன். அவ்ளோதான்... மத்தபடி வேற எந்த உயிர்ப்பும் இல்லை, நானி... நான்தான் என் காதலைச் சொல்லி உன்னை நோகடிச்சிட்டேனா...? என்னைப் பிடிக்காமல் தான் போயிட்டியா...?" என்று கண்ணீர் விட்டாள் ஜானகி...

பின் ஒரு முடிவுக்கு வந்தவளாய், "எனக்கு வேற வழியில்லை நானி. என்னால் உன்னை மறக்க முடியாது. உன்னை மனசில் வைச்சிட்டு வேற யாருக்கும் மனைவியாக முடியாது... என் அம்மாவையும் மீறி என்னால் எதுவும் செய்ய முடியாது... இது எனக்குப் பழகின விஷயம்தான். முன்னாடி, நீ என் வாழ்க்கையில் வந்துடுவியோன்னு பயந்து சாகத் துணிஞ்சேன். இப்போ நீ கிடைக்கலைன்னு சாகறேன்...

"நான் எவ்ளோ கோழைன்னு எனக்கே இப்போதான் தெரிஞ்சது, நானி. அப்போ நீ காப்பாத்தினே... இப்போ என்னை யாரும் காப்பாத்த மாட்டாங்கன்னு தைரியத்தில் சாகிறேன்... உனக்கு ஞாபகம் இருக்கா... போன வருஷம் நீ என்னைக் காப்பாத்தின, அதே நாள் இன்னைக்கு... இன்னைக்கு வருவியா நானி, வருவியா...?" என்று கூறிக் கொண்டே கதறி அழுதபடி, தன் கையில் வைத்திருந்த பாட்டிலை எடுத்துத் தூக்க மாத்திரையைக் கையில் தட்டியவள் கண்ணை மூடிக் கொண்டு,

"எனக்கு நீ வேணும், நானி... உனக்காக நான் என்ன வேணாலும் செய்வேன். இப்போவாவது என்னைப் புரிஞ்சுக்கோ. நீ உயிரோட இருந்தால்... இல்லன்னா

சொர்க்கத்தில் சந்திக்கலாம்..." என்று கூறி விட்டுத் தூக்க மாத்திரையை வாயில் போடப் போனவளைப் பின்னாடி இருந்து யாரோ வாயைப் பொத்தியிருந்தார்கள்.

"ஆ...ஆ..." என்று கத்தக்கூட முடியாமல் அவள் திணற,

அவள் திமிறுவதைப் பொருட்படுத்தாமல் அவனின் கரங்கள் வலுவாக அவளை வளைக்க... வாயைப் பொத்தியிருந்தவன் கையில் இருந்த மயக்க மருத்து வேலையைக் காட்ட கணநேரத்தில் மயக்கமானாள் ஜானகி.

இளங்காலை அலங்காரமாகத் துவங்க... பறவைகள் கூச்சல் காதுகளைச் சங்கீதமாக நிறைக்க...

முகத்தில் சிறு புன்னகையுடனே சோம்பலை முறித்தவாறு எழுந்தாள் ஜானகி.

"அம்மா... அம்மா..." என்றபடியே எழுந்தவளுக்கு அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக நேற்றைய நினைவு வர,

"அய்யோ... நான்... எங்கே இருக்கேன்...? டேய் டேய்... யாருடா நீ? டேய்..." என்று கத்தியவள்

பின் அங்கும் இங்கும் நோட்டம் விட்டாள்.

அழகான கிராமியப் பாங்கில் கட்டப்பட்ட வீடு அது... மூங்கில் கீத்துகள் வேயப்பட்டிருக்க... இதமான இயற்கை அலங்காரத்துடன் அழகாக இருந்தது அந்த வீடு.

"ஹ்ம்... நல்ல டேஸ்ட்டுள்ள பொறுக்கிதான் போல..." என்று நினைத்தவள் தலையை உலுக்கி எழுந்து முன்னறைக்கு வந்தவள் வாசலை அடைந்தாள்.

முன்னறையைப் பார்த்தவளுக்கு அவள் கைபேசி, கைப்பை அனைத்தும் இருப்பது தெரிய சிறு குழப்பம் உண்டானது.

'கடத்தினவனா இருந்தால் இதை ஏன் இங்கே வைக்கப் போறான்... யாராவது விளையாடுறாங்களா..? நட்டுவா இருக்குமோ...?' என்று நினைத்தவளின் முன் வந்து நின்ற நடுத்தர வயதுப் பெண்மணி ஒருத்தி சிரிப்புடன்,

"முழிச்சிட்டீங்களாம்மா... பல்லு தேய்ச்சுட்டு வாங்க... உங்களுக்கு ஐயா காபி போட்டுக் கொடுக்கச் சொன்னாரு... குடிச்சிட்டு ஆப்பமும் தேங்காப்பாலும் செய்திருக்கேன்... சாப்பிடுங்க..." என்று குழைந்தபடி கூற,

ஜானகிக்கு ஒன்றும் புரியவில்லை... "யாரு உங்க ஐயா...? என்னை ஏன் இங்க கடத்திட்டு வந்திருக்கார்? சொல்றீங்களா... இல்லை போலீசைக் கூப்பிடவா? இதென்ன சினிமாவா... கடத்தி வைச்சுக் கண்ணாமூச்சி ஆடுறதுக்கு... இதெல்லாம் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை..." என்று காச்மூச்சென்று கத்த... அவர் விழித்தார்.

"என்னம்மா சொல்றீங்க..? கடத்தி வந்தாரா! ஐயா ரொம்ப நல்லவங்கம்மா. அப்படியெல்லாம் செய்ய

மாட்டாப்ல... நீங்க வாங்கம்மா. காபி குடிக்கலாம்..." என்று அவள் கூறியதைச் சற்றும் காதில் வாங்காமல்...

தன் எஜமானரின் விசுவாசம் பாடும் அந்தப் பெண்ணை எதிர்த்துப் பேசத் தெம்பில்லாமல், அவள் கூறியபடியே வேறு வழியில்லாமல் எல்லாமே செய்தாள்.

ஏனோ அவளுக்கு நல்லது நடக்கப் போவதாக அறிகுறி கூற... கைப்பையில் இருந்த கைபேசியை எடுத்துப் பார்க்க அது சார்ஜ் இல்லாமல் உயிரை விட்டிருந்தது.

அதற்கு மின்சாரம் ஏற்றுவதற்குள்... "வாங்கம்மா... ஐயா சாப்பிட்டதும் உங்களை கூட்டி வரச் சொன்னாங்க..." என்று கூறி விட்டுப் பக்கத்தில் இருந்த குடிலுக்கு அழைத்துப் போனாள்.

அந்தக் குடிலில், 'அனைவருக்கும் மருத்துவம்' என்ற பெயர்ப்பலகை மாட்டியிருக்க...

அங்கே பல முதியவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் வரிசையில் காத்திருந்தனர்.

அந்தப் பெயரைப் பார்த்ததுமே அவளுள் மணி யடிக்க... அந்தப் பெண்ணிடம், "இந்த ஊர் பேர் என்ன?" என்று கேட்க,

அவரோ, "வள்ளிமலைங்கம்மா..." என்று கூற, அவளுக்குள் இன்னொரு ஒளி.

அவளைக் கொண்டு விட்ட பெண்மணி, "கொஞ்சம் இருங்கம்மா... ஐயா பக்கத்து அறையில்தான் இருக்கார். வந்துருவார்..." என்று கூறிவிட்டுச் செல்ல,

ஜானகிக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது.

'யாருடா அந்த ஐயா? அந்த மூஞ்சியை நான் பார்த்தே ஆகணும்...' என்றபடி ஆர்வம் தாங்காமல் அவள் பக்கத்து அறையில் நுழைய,

அங்கே இருந்த அறையில் கம்பீரமாக வெள்ளைக் கோட்டுடன் ஒரு முதியவரைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான் டாக்டர் நானி.

அதைப் பார்த்த ஜானகிக்கு அதிர்ச்சியில்லை... ஆச்சரியமில்லை...

மாறாகக் கண்ணீருடன் சேர்ந்த புன்னகைதான் தோன்றியது.

இவ்வளவு தூரம் தன்னை அதிகாரமாக இழுத்து வந்து பாதுகாக்க... நானியைத் தவிர வேறு யாருக்குத் தைரியம் வரும் என்று அவள் நினைக்கவில்லை என்றால் அவள் அவனின் ஜானகியில்லையே...

"**தி**ருடா... பொறுக்கி... நினைச்சேன்டா... நேக்கு தெரியும்... நீதான்னு... நான் சாகப் போனாலே மூக்கு வேர்த்துடுமே?" என்று செல்லமாய்த் திட்டிக் கொண் டிருந்தாள் அவனின் காதலி.

ஆனால் நானியோ, அவளைப் பார்க்காமல் முதியவரைப் பரிசோதித்துக் கொண்டிருக்க... அவனைக் கண்களால் அளவெடுத்தவளுக்குத் தன் ஹிப்பி ஸ்டைல் எல்லாம் மாற்றி, இப்போது நேர்த்தியான உடையுடன்

மரியாதையுடனான தோற்றத்துடன் . மென்மையான புன்னகையுடன் அமர்ந்திருக்கும் நானி அவளை மிகவும் சோதித்தான்.

“என்னடா நானி... நீ இவ்ளோ அழகாயிட்ட... அய்யோ! என் பழைய நானி இவனில்லையே?” என்று முனக,

அவன் அந்த முதியவரிடம், “தாத்தா... வயிறு வலி எவ்ளோ நாளா இருக்கு...” என்று மென்மையாகக் கேட்க,

அவரோ, “ஒரு வாரமாவே இருக்கு தம்பி... ரொம்ப வலிக்குது... தாங்க முடியலை...” என்று நொந்து போய்க் கூற,

நானி, “எங்கே வேலை பார்க்குறீங்க?” என்று கேட்க,

முதியவர், “எனக்கென்ன தம்பி... விவசாயம்தான்... கால்வயிறு நிரம்புது... அது போதும்,” என்று கூற,

இப்போது நானி சட்டென்று நிமிர்ந்து, “ஓஹ்... அது கால்வயிறு நிரம்புதுன்னு மீதியைச் சாராயத்தால் நிரப்புறியாக்கும்...” என்று கூர்மையாகக் கேட்க,

அவர், “த... த... தம்பி...” என்று திணற,

ஜானகிக்கு ஏக குஷி. “அப்படிப் போடுடா என் செல்லம்... நீ இன்னும் மாறலைடா... என் கண்ணு...” என்று குதூகலித்துக் கொண்டிருக்கும் போதே,

அவன், “மாமு... இப்படி ஊத்திக்கிட்டே இருந்தேனு வை... பூட்டகேஸ் தான்... ஜாக்கிரதை...” என்று பயமுறுத்தி

விட்டு அதற்குரிய மாத்திரைகளை எழுதிக் கொடுத்து அனுப்பி வைக்க...

அவரும் பவ்யமாக வாங்கிக் கொண்டு சென்றார்.

அவர்களுக்குத் தெரியாது டாக்டர் நானி இப்படித் தான். கைராசியானவர், இனிமையாகப் பழகுபவர், கோபம் வந்தால் பாய்பவர். இந்த ஒரு வருடமாக அந்தப் பகுதிக்கு மருந்து கொடுக்கும் தெய்வம்தான்... அவர்களைப் பொறுத்தவரை. இதனால் நானியின் மயக்கம் அந்தப் பகுதி மக்களுக்கு அதிகமாகவே உண்டு.

ஜானகி அவன் முன் போய் நின்று, "ஐயா... என் புருஷன் பேர் நானிங்க... அவரும் உங்களை மாதிரி டாக்டர் தானுங்க... உங்களுக்கு அவரைப் பத்தி தெரியுமா?" என்று கண்களில் கேலியுடன் கேட்க,

அவளை அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்த நானியின் கண்களில் சீற்றம் தெரிந்தது.

அதைக் கண்டுகொள்ளாதவளாய் ஒரு பார்வையில் அடக்கினாள் அவள்.

"இதுக்குப் பேர் தூக்க மாத்திரையா...? சொல்லு, இதுக்குப் பேர் தூக்க மாத்திரையா...? என்ன ஸ்கீம் பண்ணி என்னை வரவழைக்கலாம்னு பார்த்தியா?" என்று காட்டுக் கத்தல் கத்திக்கொண்டிருந்தான் நானி.

ஆனால் ஜானுவோ, அதைப் பத்தி கவலைப் படாமல் அங்கிருந்த மாமரம் ஒன்றிலிருந்து மாங்காய் பறித்துக் கொண்டிருந்தாள்.

அவனின் சீற்றத்திற்குக் காரணம்... ஜானகி சாப்பிடப் போனது தூக்க மாத்திரை இல்லை... விட்டமின் ஏ மாத்திரைகள்.

"ஒரு மனுஷன் பதறிப் போனது அவனுக்குத்தான் தெரியும். நான் உனக்கு என்னடி செஞ்சேன்...? ஏன், என் நிம்மதியைக் குலைக்கிற... உன் தொல்லை வேண்டாம்னு தானே நான் கண்ணுல படாமல் வாழறேன்..." என்று குமுற,

அவனை முறைத்த ஜானகி, "நான் தற்கொலை செய்துக்கப் போனா உனக்கென்ன...? சரி அப்படியே இருந்தாலும் அது தூக்க மாத்திரை இல்லைன்னு தெரிஞ்சதும்... என்னை அப்படியே விட்டுட்டு வர வேண்டியது தானே... எதுக்கு ஏதோ புதுசாக் கல்யாணம் செய்தவன் மறுவீடுக்குக் கூட்டிட்டு வர்ற மாதிரி உன் வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தே...? அதெப்படி... கரெக்டா நான் மாத்திரையை சாப்பிடப் போற நேரம் வந்தே...? சொல்லு, இதுக்கெல்லாம் பதில் சொல்லு..." என்று கூற,

நானியால் ஒன்றும் கூற முடியவில்லை... அவன் மௌனமாக இருக்க, ஜானகி தொடர்ந்தாள்.

"நான் சொல்லவா...? ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீ என்னை வந்து பார்த்துக்கிட்டுதான் இருக்க... இந்த ஒரு வருஷமா? நான் என்ன பிரஷ் வாங்குறேங்கிறதில் இருந்து காலுக்குக் கொலுசு வாங்குறது வரை உனக்கு எல்லாமே தெரியும். ஏன்... அதுக்கு முன்னாடி நான் டெல்லி போறதுக்கு ஏர்போர்ட் வந்தேனே... அப்போ நீயும்

வந்து என்னைப் பார்த்தே... என்ன கரெக்டா?" என்று அடுக்க... அவன் வாயடைத்துப் போனான்.

ஜானகி குறும்பாக, "இன்னும் சொல்லவா...? அந்த 'அனைவருக்கும் மருத்துவம்'ங்கிற அமைப்பு இப்போ பத்து கிராமத்தில் நடந்துட்டு இருக்கு. மொத்தம் 50 டாக்டர்கள் இருக்காங்க... ஆன்டர்சன் சாரோட டிரஸ்ட் வழியாக நோயாளிகளுக்கு இலவச மருத்துவம் தர்றது உங்க வேலை. அது மட்டுமில்லாமல் நீ அவரோட சேர்ந்து மெடிக்கல் டூரிசம் பத்தின மாநாடுகளில் கலந்துக்கிறதும் இரண்டு மருத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபடுறதும் எனக்குத் தெரியும்.

"உன் பேரைக் கூட பத்மஸ்ரீ விருதுக்குப் பரிந்துரைக்கிறதா இருந்தாங்க. ஆனால் நீ வேண்டாம்னு சொல்லிட்டே... என்ன இது போதுமா? இன்னும் வேணுமா?" என்று கண்ணடித்துக் கேட்க,

அவனின் கடந்த ஒரு வருட வாழ்க்கையையும் பிட்டுப் பிட்டு வைத்தவளை ஆச்சரியமாகப் பார்த்தான்.

அன்று வீட்டை விட்டு வெளியே வந்தவன் முதலில் அழைத்தது, ஆன்டர்சனைத் தான்... அடுத்த இரண்டு நாட்களில் அவனைக் காண வந்தவர் முதலில் செய்த வேலை அவனைப் பளாரென அறைந்ததுதான்.

"உன்னை நான் ஏன் மேன் காப்பாத்தினேன்... இப்படிக் கெட்டழிஞ்சு போறதுக்கா... உன்னை மாதிரி ஒரு டாக்டரை இந்த உலகம் இழந்துடக் கூடாதுன்னுதானே

காப்பாத்தினேன். உனக்காக உன்னைக் காப்பாத்தலை... நோயாளிகளுக்காகத் தான் உன்னை ஜெயிலுக்குப் போகாமல் தடுத்தேன். ஒரு நாள் உன் நிம்மதிக்காகக் கொடுத்த போதை மருந்தை வைச்சு உன் வாழ்க்கையை வீணடிச்சுட்டு... டிஸ்கஸ்டிங்..." என்று கடிந்து கொண்ட அவரை அப்படியே அணைத்துக் கொண்ட நானி கூறியது, ஒரே ஒரு வாக்கியம்தான்.

"எனக்கு ஹெல்ப் பண்ணுங்க சார்... நான் மறுபடியும் டாக்டராகணும்..." என்பதுதான்.

அன்றிலிருந்து அல்லும் பகலும் மருத்துவத்திற்காக அர்ப்பணித்தான் அவன். ஆண்டர்சன் அவனுக்கு முழு ஒத்துழைப்பு தர, தன் பணியிலிருந்து ஓய்வு பெற்று இங்கே வந்து இந்த 'அனைவருக்கும் மருத்துவம்' அமைப்பை ஆரம்பித்தார். பின் ஜானகி சொன்னது எல்லாமே நடந்தது, நல்ல உள்ளம் படைத்தவர்களால்...

தன் நினைவுகளில் இருந்து வெளியே வந்த நானி, "உனக்கெப்படி இதெல்லாம்..." என்று புரியாமல் கேட்க,

"எல்லாம் தெரியும். டி.வி.யில் இதைப் பத்தி ஒரு நியூஸ் பார்த்தேன்... நீ பேட்டி கொடுக்க விருப்ப மில்லைன்னு சொன்னாலும் சின்ன கிளிப்பிங்கில் உன் முகம் தெரிஞ்சுது. அதை வைச்சு விசாரிச்சேன்..." என்று கூறியவளின் குரலிலும் உணர்ச்சிக் கொந்தளிப்பு.

"ஆனா ஏன் நடிச்ச...?" என்று நானி கேட்க,

"எனக்கு வேற வழியில்லை நானி... நான் என்ன செய்யறது..? உனக்கு வேணா வாரத்தில் ஒரு நாள்

என்னைப் பார்க்கிறது பெரிசா இருக்கலாம்... ஆனால் எனக்கு என் வாழ்க்கை முழுக்க நீ வேணும்...” என்று உறுதியுடன் கூறி விட்டுச் செல்ல எத்தனிக்க...

அவள் கையைப் பிடித்துத் தடுத்த நானி, “இல்லை ஜான்... நீ நினைக்கிறது நடக்காது... உன்னைப் பார்த்ததும் ஏதோ ஒரு உந்துதலில் உன்னைக் கூட்டிட்டு வந்துட்டேன்.

“ஆனா அன்னைக்கு நீ சொன்ன பாரு... என்னை ஒரு கால்கேர்ளா நினைச்சிக்கோன்னு... அன்னைக்கே நான் செத்துட்டேன். இனி நான் உன்னைத் தொடும் போதெல்லாம் எனக்கு நீ சொன்னது தானேடி ஞாபகம் வரும்... அன்னைக்கு எனக்கு வலிச்ச வலியைக் கூட அனுபவிச்சிருக்க மாட்டே...” என்று நடுங்கும் குரலில் கூற,

ஜானகி அதிர்ந்தாள். “நானி...” என்று அவள் அதிர,

நானி, “நீ மட்டுமாடி என்னைக் காதலிச்ச... நானும்தான் உன்னைக் காதலிச்சேன்... எங்கப்பா, அண்ணாகிட்ட கூட சொல்லாத என் கடந்த காலத்தை உன்கிட்ட சொன்னனே... அப்பகூட உனக்கு என்னைப் பத்திப் புரியலை. என் அம்மாவுக்கு அடுத்தபடியா உன் மேலதான் அதிகமாப் பாசம் வைச்சிருந்தேன்... ரெண்டு பேருமே என்னைப் புரிஞ்சிக்கலை... என்னை மாதிரி என் காதலும் அழுக்காகத்தான் இருக்கும்னு நீ நினைச்சிட்டே இல்லை.

“உனக்கு ஞாபகம் இருக்கா..? முதன் முதலில் உன் கையைப் பிடிச்சேனே... அப்ப அந்தக் கடலை மாவு

வாசம்... என்னால் இன்னும் அதை மறக்க முடியலை... இப்பவும் உன் கை என் கைக்குள்ள வராதானு இருக்கு..." என்று ஏக்கத்துடன் கண்ணீருடன் கூற,

அவனைப் பார்த்த ஜானகியின் கண்களிலும் கண்ணீர்... அவன் கை தன் கையைப் பிடித்திருப்பதைப் பார்த்த ஜானகி, சிறு புன்னகையுடன், "இன்னும் என் கை உன் கைக்குள்ளதான் நானி இருக்கு..." என்று மெல்லிய குரலில் கூற,

நானி அப்போதுதான் அதை உணர்ந்தான்...

அவன் மூளை உதறச் சொல்ல... மனம் சபலப்பட, தன்னையும் மீறி அவளின் மணிக்கட்டைத் தன் நாசிக்குள் வைத்து முகர, மீண்டும் தாய் மடி சேர்ந்த குழந்தையைப் போன்ற அவன் செயலில் நெகிழ்ந்து அவனைச் சடாரென்று அணைத்துக் கொண்டாள் ஜானகி.

"என்னை மன்னிச்சுடு, நானி... என்னை மன்னிச்சுடு... உன் காதலை நான் புரிஞ்சிக்கவே இல்லை... என்னை மன்னிச்சுடுடா..." என்று அவள் கதற,

தன் மனதைக் கட்டுப் போட்டு அவளை விலக்கி நிறுத்திய நானி, "வேண்டாம்... ஜான்... வேண்டாம்... நான் இப்படியே இருந்துக்கிறேன்... என்னால் நீ சொன்ன வார்த்தையை மறக்க முடியலை..." என்று அதிலயே நிற்க,

ஜானகியின் முகம் மாறியது... திரும்பிச் சென்ற அவனின் முதுகைத் திருப்பித் தன் முன் நிற்க வைத்த ஜானகி, "ஏன்டா... அதான் தெரியாமல் சொல்லிட்டேன்னு சொல்றேன் இல்லை... சும்மா என்ன சீன் போட்டுக்கிட்டு

இருக்க... சரி, நீ என்னைக் காதலிச்ச தானே... ஐ லவ் யூன்னு எப்போவாவது சொல்லிருக்கியாடா...? சரி, அப்போ வேண்டாம். இப்போ சொல்லு... ஐ லவ் யூன்னு சொல்லு..." என்று அவனுக்குக் கட்டளையிட,

நானி அதிர்ந்தான். அவனால் அதைக் கூற முடியவில்லை... இதுவரை அவன் யாரிடமும் ஏன் ரெஜினாவிடமுமே ஐ லவ் யூ என்றெல்லாம் கூற வில்லை... அது காதலும் இல்லை. ஆனால் இது உண்மை... அவன் உயிர்... அப்போதும் அவனால் கூற இயலவில்லை.

அவன் தடுமாற்றத்தைப் பார்த்த ஜானகி, "என்ன திணறுறே... நான் சொல்றேன்... ஆயிரம் வாட்டி சொல்றேன்... ஐ லவ் யூ... ஐ லவ் யூ... ஐ லவ் யூ... சொல்லு நீ சொல்லு..." என்று கூற,

ம்ஹூம்... நானி என்ன முயற்சி செய்தும் அவனால் இயலவில்லை... அவள் கண்ணைப் பார்த்து அவனால் சுத்தமாக முடியவில்லை...

அதைப் பார்த்த ஜானகி எரிச்சலில், "என்னைப் பார்த்து உன் காதலைக் கூட சொல்ல முடியலை இல்லை... அவ்ளோ தூரம் நான் உனக்கு இளக்காரமாப் போயிட்டேன்... உன் காதல் உண்மையில்லை, நானி. இனிமே என்னைக் குத்தம் சொல்லாதே... இனி என்னைத் தேடியும் வராதே... உன்னைப் பார்த்ததையே நான் மறக்க விரும்புறேன்... குட் பை..." என்று கூறி விட்டுச் செல்பவளையே கண்ணிமைக்காமல் பார்த்தான் நானி.

அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் வேக வேக எட்டுக்களுடன் அவனை விட்டுப் பிரிந்து சென்றாள், அவனின் உயிர் ஜானகி.

அடுத்த வருடம். அதே நாள்...

அன்றைய நாள் இன்னும் இளமையாக அவன் கண் முன் தோன்ற...

அதை மறைத்தபடி கண்ணீரும் தோன்றியது...

அன்று மட்டும், நான் ஐ லவ் யூ என்று ஒரு வார்த்தை சு றியிருந்தால்... என்று நானி நினைக்கை யிலேயே...

"ஏன்னா... இந்தக் கார்பெட் பாருங்கோ... நான் அன்னைக்கே உன்னை வாஷிங் மெஷின்ல போட்டு எடுக்கச் சொன்னேன்... கொஞ்சமாவது கேக்குறேளா?

"அய்யோ எனக்குத்தான் சாம்பார் வாசமே பிடிக்கிற தில்லையே... அப்புறம் ஏன் அதையே செய்யறேள்... குமட்டிண்டு வர்றது...

"ஏன்னா... என் கல்யாணப் புடவை பாருங்கோ... சே... எப்படிக் கசங்கிப் போய்? அன்னைக்கே உங்களைப் போய் அயர்ன் பண்ணிட்டு வரச்சொன்னேனே... இல்லை... இதையும் மறந்துட்டேளா? ஆமா... என்னையே மறந்துருவேள்... இதில் எங்கே இதெல்லாம் ஞாபகம் இருக்கும்...

"கல்யாணமாகி இத்தனை வருஷத்தில் ஒரு ஐ லவ் யூ சொல்ல மனசில்லை, மனுஷனுக்கு... இதில் இவரைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி ஊரே சப்போர்ட்... நீ

இல்லாட்டா என் பையன் வாடிப் போயிடுவான்னு இவர் அப்பா... என் தம்பிக்கு உன்னை விட்டா ஆளில்லைன்னு இவர் அண்ணன்... போதாக் குறைக்கு என் ஆசை அம்மா வேற, ஆயிரம்தான் இருந்தாலும் என் தம்பி பையனுட்டு... எல்லாம் சேர்ந்து என் வாழ்க்கையைக் கெடுத்ததுதான் மிச்சம்..." என்று தன் நிறைமாத வயிற்றைத் தள்ளிக் கொண்டு நடக்க முடியாமல் அப்படியே அமர,

நானி கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"சே... இனிமே வெங்காயத்தைக் கட் பண்ணா கண்களில் கண்ணாடி போட்டுண்டு தான் செய்யணும்... மெகா சீரியல் ஹீரோயின் மாதிரி கண்ணீர் விட வேண்டியதா இருக்கு..." என்று சலித்துக் கொண்டு,

"அய்யோ... என்ன டார்லிங் சத்தம் நின்னுருச்சு... ஜான் மேரி ஜான்..." என்று புன்னகையுடன் அவளை நோக்கி வர,

அவனை முடிந்த மட்டும் முறைத்தாள் ஜானகி.

நானி தன் வழக்கமான சிரிப்புடன், "என்ன ஜான்....? கால் வலிக்குதா...? பிடிச்சு விடவா..?" என்று அக்கறையாக அவள் கால்களை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு பதமாக அழுத்தி விட,

கணநேரத்தில் மயங்கித்தான் போனாள் ஜானகி. எங்கே... எப்படி அவளைக் கவிழ்க்க வேண்டுமென்று அந்தக் கண்ணனுக்குத் தெரியாதா என்ன...? இல்லாமலா வயிற்றில் அவன் குழந்தையைச் சுமந்து கொண்டிருக் கிறாள்.

அவன் மசாஜில் மயங்கி அவனை இழுத்து, "ஐ லவ் யூ நானி..." என்று காதலுடன் கூற,

நானி பதிலுக்கு அழகாய்ச் சிரித்தான்... கண்ணிறைந்த கணவன்தான். உழைப்பால் உயர்ந்து புகழின் உச்சிக்குச் சென்று விட்டவன் தான்... காதலைக் கிலோ கணக்கில் பொழிபவன்தான்... இருந்தாலும் அவளுக்கு இருக்கும் ஒரே குறை... அவள் கண் பார்த்துக் காதலைக் கூறவேண்டும் என்பதுதான்.

இப்போதும் அவள் கூறும் போது... அவன் சிரிக்க

"ஆமா... சிரியுங்கோ... பதில் வராதே... எல்லாம் நான் வாங்கி வந்த வரம்..." என்று சலித்துக் கொள்ள... நானி அதற்கும் சிரித்தான்.

"என்னை மன்னிச்சுடு, ஜானகி... இதைக் கேட்கக் கூட எனக்குத் தகுதியில்லைதான்... ரத்தம் சுண்டிப் போன வயசில்தான் நேக்கு ஞானோதயம் வந்திருக்கு..." என்று மெல்லிய குரலில் குமரகுரு கேட்க,

ஜானகி புன்னகைத்து, "அப்பா... நீங்க எப்பவுமே நேக்கு அப்பாதான்... எனக்கு உங்க மேல வருத்தம் தானே தவிர, கோபமில்லை... உங்க மேல் மட்டுமில்லை. அண்ணா, அண்ணி, அக்கா யார் மேலயும் இல்லை..." என்று புன்னகையுடன் கூற, குமரகுருவிற்கு இன்னும் வலித்தது.

ஜானகி அதைப் புரிந்து, "அப்பா... எனக்கு நீங்க செஞ்சதை நான் எப்பவோ மறந்துட்டேன்... ஆனால் உங்களால் அம்மாவோட இப்போதுள்ள வாழ்க்கை மாறுவதை நினைச்சுத்தான்..." என்று தயங்க,

குமரகுருவின் முகத்தில் விரக்திப் புன்னகை பூத்தது.

"வேண்டாம், ஜானு... நான் கெட்டவன் தான்... அவ்ளோ கெட்டவன் இல்லை... என்னைக்கு உங்கம்மா நீ வாங்கின விருதை என் கண்ணுக்கு முன்னாடி வைச்சாளோ... என்னைக்கு எங்கம்மாவை நான் பார்த்தேனோ, அப்பவே கொஞ்சம் கொஞ்சமா நான் செத்துட்டேன். போதும், நான் எல்லாரையும் அதிகாரம் செஞ்சது. எனக்குத் தனிமை தேவைதான். எங்கம்மாவுக்கு ஒரு நல்ல மகனா நான் செய்ய முடியாததை உனக்கு நல்ல அப்பாவா... உன் அம்மாவுக்கு நல்ல கணவனா செய்யறேன்.

"உங்களுக்கான இடத்தைக் கொடுக்கிறேன்... உங்கம்மா எப்பவும் போல் இருக்கட்டும்... நான் தொந்தரவு செய்யலை... இப்போ நான் எதிர்பார்க்கிறது அவ துணையைத்தான். அவ இஷ்டம்தான் என் இஷ்டம்..." என்று கூற,

முதன் முறையாகத் தன் தந்தையை வாஞ்சையாகப் பார்த்தாள் ஜானகி.

இவ்வாறு கூறிய தன் கணவரை ஆச்சரியமாகப் பார்த்த ரேணுகா, அவர் கையை மெலிதாக வருட... வெகு நாட்களுக்கு பிறகு குமரகுரு உயிர்த்தார்.

அந்தப் பாசக் கூடலைப் பார்த்த நானி தன் மனைவியிடம், "நீ அவரை இவ்ளோ சீக்கிரம் மன்னிப் பேனு நான் நினைக்கலை ஜான்?" என்று கேட்க,

"ஏன் அவர் மேல் கோபப்படணும்ணா..? அவர் எனக்கு நல்லதுதான் செய்துருக்கார்... அவரால்தான் என்

அம்மா பாசம் நேக்குக் கிடைச்சது... நீங்க கிடைச்சேள். அப்புறம் எப்படி நான் கோபப்பட..?" என்று கேட்க,

நானி அவள் தலையைக் கோதி வருடிக் கொடுக்க,

அவள் விருப்பப்படியே, அந்த வருடம்தான் அவளுக்குப் பிடித்த நவராத்திரி களை கட்டியது.

சொந்தம் கூடியிருக்க... அப்போதுதான் திருமணம் ஆன புது ஜோடி நட்டு - சுகன்யா மற்றும் அபி - திவ்யா தங்கள் குழந்தையுடன் வந்திருக்க, சந்தோஷப் பூரிப்பில் மகிழ்ந்திருந்தாள் ஜானகி.

பின் குணா வந்து நானியிடம், "நான் உங்ககிட்ட ஏற்கனவே கேட்டது தான்டா நானி... என்னை மன்னிச் சுடுடா... நீயும் ஜானகியும் எங்களை மன்னிச்சே தண்டிக் கிறீங்கடா... உனக்கு அப்பாவாத்தான் இருந்தேன்... அம்மாவா இருக்கத் தவறிட்டேன்..." என்று தளுதளுக்க,

நானியும் அவ்ரை, "அப்பா... நான் இதோட நூறு வாட்டி சொல்லிட்டேன்... வேண்டாம்பா, மறந்துடுங்க... நானும் உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்... அதுக்கு என்னையும் மன்னிச்சிடுங்க..." என்று மன்னிப்பு வேண்ட, அவனை அணைத்துக் கொண்டார் குணா.

இப்படி அனைத்துப் பக்கங்களிலும் அன்பாகத் தெரிய... ஜானகிக்கு, போட்டு வாட்டி எடுத்தாலும் கண்டு கொள்ளாமல் அதைக் காதலால் மறைக்கும் கணவன்... அன்பிற்கு அம்மா... அறிவிற்கு நண்பன்... தாங்கிக் கொள்ளக் குடும்பம்... இதெல்லாமே அவள் பெற்று விட்டாள்.

அவளது நடனப் பள்ளியில் இருந்து வந்த மாணவர்கள் அனைவரும் கூடிக் குதூகலித்து அவள் முதன் முறையாக மேடையேறிய பாடலுக்கு ஆடினர்.

கண்ணுக்குள் பொத்தி வைப்பேன்
என் செல்லக் கண்ணனே வா!
த்தித்தி தத்தை ஜதிக்குள்
என்னோடு ஆட வா வா!
அடிக்கடி உன்னைப் பிடிக்க நான் மன்றாடிட
இடப் புறம் விரல் மடக்கி நீ டு காட்டிட
என் கண்ணனே வாடா வா!
விஷமக் கண்ணனே வாடா வா!

உயிர் எதையோ தேடும்
மனம் அதையே நாடும்
தனித்தனியே ரெண்டும்
ஒரு வழியில் ஓடும்.

எது எதற்கோ பொய்கள்
எதிர் எதிராய் மெய்கள்
எது எதுவாய் ஆகும்
விடை கடந்தே போகும்!

கண்ணாடி முனை போல்
எண்ணங்கள் கூராய்,
முன் இல்லாததைப் போல்
எல்லாமே வேறாய்,
உன்னாலே... பூரிக்கிறேன்...

உன் சிரிப்பு சரத்தில்
மகிழ மரத்தில்
பூ தைக்கிறேன்!

அதைக் கேட்டதும் நானியைக் கண்களால் ரசித்த படி அவள் மகிழ...

அவனோ அவளை குறும்புக் கண்ணனாய்ப் படுத்திக் கொண்டிருந்தான்.

அவனின் ஸ்பரிஸங்களும் முத்தங்களும் அவளை வழக்கம் போல் மெய்மறக்கச் செய்ய... உள்ளிருந்த அவளின் மகவு தன் தாயைக் கவனிக்கக் கூறி எட்டி உதைக்க ஆரம்பித்தான்.

தன் கைவளைவில் நின்ற ஜானகியிடம், விலகலைப் பார்த்த நானி, அவளை நிமிர்ந்து பார்க்க...

“ஆஆ... ஏன்னா... இடுப்பு வலிக்கிறது...” என்று துடிக்க ஆரம்பித்தாள் ஜானகி.

“ஐ ஹேட் யூ... ஐ ஹேட் யூ... இப்போ கூட ஐ லவ் யூ சொல்ல மாட்டேங்கற நீ... ஐ ஹேட் யூ...” என்று கத்திக் கொண்டே இருந்த ஜானகியைச் சமாதானப்படுத்த முடியாமல் தவித்தான் நானி.

“அதான் வரலையேடி... ஏன்டி என்னைப் படுத்துறே... உன்னால் வலி தாங்கமுடியாது. சர்ஜரி செய்யணும். இல்லை பெரிய பிரச்சனை ஆகிடும். என்னைப் புரிஞ்சுக்கோடா...” என்று கெஞ்ச,

அவனை எரிச்சலாகப் பார்த்தபடி, "நீ என்னை லவ் பண்ணவே இல்லை... அதான் உனக்கு வரலை... சீ... போ... என் முன்னால் நிற்காதே..." என்று படுத்த,

நானி தவித்தான். அவனால் அங்கேயே நிற்கவும் முடியாது. இப்போது அவள் வேறு படுத்த... தலைமை மருத்துவரே விரைந்து வந்தார்.

"என்ன சார்... என்கிட்ட சொல்லிருக்கலாமில்ல... நான் பார்த்துக்கிறேன் சார். நீங்க போங்க..." என்று அவனை அனுப்பி வைக்க,

வெளியில் நின்று இருக்கும் தெய்வங்கள் அனைத்திடமும் விண்ணப்பம் வைத்தான் அந்தக் கணவன்... கணவனாகத்தான் மருத்துவனாக அல்ல!

அதற்குள் குமரகுரு, ரேணுகா, அபி, குணா, நட்டு, சுகன்யா அனைவரும் வர, இன்னும் அவனுக்குப் பதற்றம் அதிகரித்தது.

சில மணிகள் அவனைக் காக்க வைத்த பிறகு...

உள்ளிருந்து வந்த மருத்துவர், "கங்கிராட்ஸ் சார்... பெண் குழந்தை பிறந்திருக்கு..." என்று கூறி விட்டு வாழ்த்த,

அனைவரின் முகத்திலும் புன்னகை கீற்று...

தரதரவென்று உள்ளே நுழைந்த நானியைச் சோர்ந்த விழிகளுடன் பார்த்த அந்த மன்னையாளின் கண்களில் தான் என்னவொரு காதல்...

அருகிலேயே பொக்கிஷம் போல் கைகால் உதைத்துக் கொண்டு படுத்திருந்த தன் மனைவியின் ஜெராக்ஸைப் பார்த்தவனுக்கு அன்பு ஊற்றாய்ப் பெருக... அவளின் கன்னத்தில் தன் முதல் முத்தத்தை வைத்துப் பின் கண்களை மூடிப் படுத்திருக்கும் தன் மனைவியின் அருகில் சென்று, அந்த வார்த்தைகளைக் கூறினான் அவன்...

அவள் கேட்கத் துடித்த வார்த்தைகளை இதுநாள் வரை அவளிடம் கூற தைரியம் வராத வார்த்தைகளை... "ஜானு... ஐ லவ் யூ..." என்று.

சட்டென்று கண்ணைத் திறந்து பார்த்த ஜானகியின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்து... பின் அவனை இழுத் தணைத்து அவன் இதழ்களைச் சிறை செய்தாள் அவள்...

இதுநாள்வரை தன் கைகளுக்குள் பொத்தி வைத்த அவளை இன்று கண்களிலும் பொத்தி வைத்தான் அந்தக் காதலன்...


கண்ணுக்குள்
பொத்தி வைப்பேன்.
சக்தி திருமலை